பிரமலை சீர்திருத்தன்.

1926

பிரமலை சீர்திருத்தன்

1926

TL
Y59:24.Pm311,N2
N22.5
214391.

செப்பனிடுபவர் பெயர் K. [illegible]
செப்பனிடுவதற்காக எடுத்துக் கொள்ளப்பட்ட நாள் [illegible]
[illegible] ஆராய்ச்சி உதவியாளர்
கையொப்பம் கையொப்பம்
15/4/97 16/4/97

307

16 JAN 1926 OFFICE OF THE RE[GISTRAR] MADRAS

மாதாந்தரப்பதிப்பு]   [விலை ◌

# The Piramalai Reformer.

## பிரமலை சீர்திருத்தன்.

நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தை ஆதாயப்படுத்திக்கொள்ளுங்கள்.

Vol. V.]   ஜனுவரிமீ, 1926.   [இலக்கம் 9

### பத்திராதிபர் குறிப்புகள்.

நமது பத்திரிகையை நேசித்து வாசித்து ஆதரித்துவரும் கணம்பொருந்திய சகல நண்பருக்கும் இப்புதுவருஷ வாழ்த்துதல் கூறுகின்றோம். இப்புதுவருஷ சஞ்சிகையில் சங்கைபொருந்திய கலெக்டர் துரையவர்களும், நமது நாட்டின் நன்மைக்கென்றுவிடா முயற்சியோடு உழைத்துவரும் மூன்றுமிஷன்களிலுள்ள துரைமார்களும் தங்கள் புது வருஷ செய்தி அனுப்பியிருக்கிறார்கள். அவர்களுக்கு அதிக பணிவுடன் நன்றிபாராட்டுகிறோம். கடந்த வருஷத்தில் பத்திரிகையை ஆதரித்துவந்த கனதனவான்களுக்கும் விஷயதானம் புரிந்தவர்களுக்கும் மற்ற நண்பருக்கும் எமது நன்றி செலுத்துகிறோம்.

வருகிற வருஷத்தில் முந்தின வருஷத்தைக்காட்டிலும் சகல நற்காரியங்களில் பெருகவும் நமது பத்திரிகையைப் படித்து அறியத்தக்கதாகவும் பல பிரயோஜனமான விஷயங்களை எழுதுவதிலும் பிரயாசமெடுப்போம்.

நவ வருஷம் சம்பூரண பாக்கியம் பொருந்திய வருஷமாயிருக்க கடவுள் கிருபைபுரிவாராக.

---

### நமது பத்திரிகையின் மானேஜரான சங்கை R. A. டட்லி துரை அவர்கள் அனுப்பும் புதுவருஷ செய்தி.

பிரமலைத் தேவமாரே!

கடந்த 6 வருஷ காலங்களில் சர்க்காரால் உங்களுக்கு மூன்று முக்கிய சிலாக்கியங்கள் கிடைத்திருக்கிறது.

1. கல்வி :— உங்களுடைய பையன்களும் பெண்களும் இக்காலங்களில் வெகு சீக்கிரத்துக்குள் கல்வி கற்றுக்கொள்ளக்கூடியவர்களாய் இருக்கிறார்கள். சில வருஷங்களுக்குள் மதுரை ஜில்லாவிலுள்ள பல வகுப்பாரைக் காட்டிலும் படிப்பில் நீங்கள் முதன்மையானவர்களாய் இருப்பீர்கள். இந்தக் கல்வி முன்னேற்றம் உங்களைப் பல வகைகளில் மேன்மையடைய உதவிபுரியும்.

2. பஞ்சாயத்து:—பஞ்சாயத்து மூலமாய் உங்கள் கைகளில் அதிகமான சுய ஆளுகை கொடுக்கப்பட்டிருக்கிறது. உங்களுக்குக் கொடுக்கப்பட்ட இந்த அதிகாரத்தை நியாயமான வழிகளில் ஞானத்தோடு உபயோகித்தால் நீங்கள் பலவித கட்டுகளினால் கஷ்டத்திற்குட்படாமல் உங்கள் சமுசாரித்தனத்தை ஒழுங்காகச் செய்யத்தக்க நிலைமைக்குவருவீர்கள்.

3. கடன்:—உங்களுக்கு சர்க்காரால் கொடுக்கப்பட்டுவரும் பணத்தை ஞானத்தோடும் விவேகத்தோடும் செலவுசெய்தால் அந்தப்பணத்தால் உங்கள் வயல்களைச்சீர் திருத்தவும், பசிபட்டினி இல்லாமல் உங்கள் பணக்கஷ்டங்களை நீக்கிக்கொள்ளவும், உங்கள் பிழைப்புக்குவேண்டிய பல சௌகரியங்களை உண்டுபண்ணிக்கொள்ளவும் ஏதுவுண்டாகும்.

இந்த 1926-வருஷத்தில் நான் உங்களில் அதிகமாய் வற்புறுத்த விரும்புகிற செய்தி என்னவென்றால், நீங்கள் ஒவ்வொருவரும் மேலே சொல்லிய சர்க்காரால் கொடுக்கப்பட்ட ஒவ்வொரு சிலாக்கியத்தையும் பிரயோஜனப்படுத்திக்கொள்ள முன்வரவேண்டுமென்பதே. அப்படிச் செய்வீர்களானால்தான் சர்க்கார் உங்களுக்கு உதவிசெய்யும் விஷயத்தில் சித்தி அடைவார்கள். கடந்த வருஷங்களில் நீங்கள் இந்த சிலாக்கியங்களை சரியாக உபயோகித்து வந்ததைக் குறித்து சந்தோஷப்படுகிறேன். இந்த 1926 ம் வருஷத்திலும் நீங்கள் இன்னும் அதிகமாய்ச் செய்வீர்களென்று நம்புகிறேன். கடவுள் உங்களை ஆசீர்வதிப்பாராக.

(Sd.) R. A. டட்லி.

---

### ஜில்லா கலெக்டர் சங்கை ர். எல்லிஸ் துரையவர்கள் லை தேவமாருக்கு அனுப் ம் புதுவருஷ செய்தி.

தேவமாரே !

ராகிய உங்களுக்கு புதுவரு ாழ்த்துதல் அனுப்புவது எனக்கு மைத்த பிரீதி.

2. நான் நம்பிக்கையும் தைரியத்தையும் தரக்கூடிய செய்தியையே உங்களுக்கு அனுப்புகிறேன். இதுவரை நீங்கள் அதிகம் முன்னேற்றமடைந்திருக்கிறீர்கள். விடாமுயற்சியோடு பிரயாசப்பட்டால் இன்னும் அதிகம் மேம்பாடடையலாம். நீங்கள் அறிய வேண்டியது காலம் மாறிவருகிறது, மனிதர் மேலான நோக்கத்தைக் கையாடி முன்னேறிவருகிறார்கள், கள்ளர் நாட்டிலும் மற்ற உலகத்தின் பல தேசங்களிலும் சாமர்த்திய திருடனும், கெட்டிக்கார வழிப்பறி கொள்ளைக்காரனும், பெரிய கெட்டிக்காரன் என்று புகழ்ந்து பேசும் காலம் போய்விட்டது. நிசமே. நீங்கள் வெகு சீக்கிரம் தும் மேலானதுமான நோக்கமுடையவர்களாக வரப்பிரயாசப்படவேண்டும். இதுவரை நீங்கள் எவ்வளவு முன்னேற்றமடையக்கூடியவர்களென்று காண்பித்திருக்கிறீர்கள். நீங்கள் விடாமுயற்சியுள்ளவர்களாயிருப்பீர்களானால் வெகு சீக்கிரம் உங்கள் அயலகத்தாரால் மதிக்கப்படுவதுடன் நீங்கள் தேவமார் என்ற பெயர் பூண்டிருப்பதைப்பற்றி வெட்கமடையாமல் பெருமையடைவீர்கள்.

3. இப்புது வருஷத்தில் பெரியவர் சிறியவர் அனைவருக்கும் சகல சம்பத்தும் பெருகவும், போதிய மழையும், செழிப்பான வெள்ளாண்மையும், நல்ல சுகமும் உங்கள் பாக்கியமாயிருக்க வேண்டுமென்று உங்களை வாழ்த்துகிறேன்.

R. H. எல்லிஸ்,
கலெக்டர்.

### சங்கை L. L. லார்பியர் துரையவர்கள் அனுப்பும் புது வருஷ செய்தி.

பிரமலை சிநேகிதரே !

புதுவருஷம் துவங்கியிருக்கிறது. இந்த வருஷம், சுகமும், வளர்ச்சியும், சமாதானமும் கள்ளர் நாட்டிற்கு உண்டாவதாக.

சுத்தமே சுகத்திற்கு அஸ்திபாரம். நம்முடைய தேகத்தையும் மனதையும் சுத்தமாகவைக்க முயலுவோமாக.

ஜெபமே முன்னேற்றத்திற்கு திறவுகோல். ஜெபமென்பது கடவுளோடு படிப்பது. முன்னேற்றமடைய விருப்பமில்லாமல் அவரோடு படிக்கமுடியாது.

மன்னிக்கிற குணமே சமாதானத்திற்கு திறவுகோல். இதுவரை நம்மைக் கெடுத்துவந்த கொடிய சண்டைகளுக்குக் காரணம்: யாரோ ஒருவன் அற்பக் காரியங்களை மன்னித்து மறந்துவிடக்கூடிய பெருந்தன்மையில்லாததால்தான். அதோடு யாரோ ஒருவர் வசவுக்குப்பதில் பட்சமான மறுமொழி கொடுத்ததினால் பெரிய சண்டைகள் அமர்ந்தன.

இந்த 1926-ம் வருஷத்தில் நாம் சுத்தமுள்ளவர்களாகவும், கடவுளுடைய உதவியால் முன்னேறி தீமையை நன்மையினால் வெல்ல முயலுவோமாக. இதுவே உங்களுடைய சிநேகிதனாகிய என்னுடைய விருப்பம்.

L. L. லார்பியர்,
பசுமலை.

---

### உசிலம்பட்டி லுத்தரன் மிஷன் சங்கை J. ஹிம்மல்ஸ்ற்றிரான்டு துரையவர்கள் அனுப்பும் புதுவருஷ வாழ்த்துதல்.

இன்னும் ஒரு வருஷம் நமக்கு அருளப்பட்டது. நாம் என்ன சொல்லுவோம்? நமது நடுவே செய்யப்பட்ட முயற்சிகளுக்கெல்லாம் போர்ந்த பலனைக் கண்டோமா? பிரமலையாராகிய நாமே மனதார முயற்சித்தோமா? கருணை ராஜாங்கத்தாரும், மற்ற பலபேரும் உழைக்கும்போது நாம் நின்றுகொண்டு செய்கிறதைச்செய்யட்டும் என்று இருந்தோமோ?

கடவுள் கருணையால் நாம் இப்போதாகிலும் நமது நாட்டிலே சம்பவிக்கிற இந்த புதிய காரியங்கள் எல்லாம் மனுஷரால் அல்ல கடவுளால்தான் செய்யப்படுகின்றன என்று நாம் அறிந்து அனுமானித்தல் நியாயம்.

இத்தனை பேராலே இத்தனை ஏற்பாடுகளும், இத்தனை பெரும் பிரயாசையோடு இத்தனை செலவுகளும் இன்னும் செய்யப்பட்டுக்கொண்டுவருகிறதே! இது கடவுள் செயலாகாதா? காலம் மாறுகிறதோடு நமது விதி மாறுதா? நமது ஜாதியின் முன்னேற்றத்திற்கு இதுவல்லவோ ஒரு வழியாயிருக்கவேண்டும் என்று நாம் தெய்வ வல்லமைக்கு துதிசெய்து நம்மை நம்பிக்கையாய் அவருடைய நடத்துதலுக்குத் தத்தம்பண்ணிவருவது நமது கடனே என்று சொல்லி நாம் சோர்ந்து போகாமல் துன்பங்களைச் சகித்து அவரது நல்லீவுகளை உத்தரவாதத்தோடு பெற்றுக்கொண்டு தீவிரமாய் முன்னேறிப்போகக்கடவோம்.

உலகத்திலுள்ள சகல ஜாதிகளும் இக்காலத்தில் பலவிதமாய் அசையுண்டு முன்னேறிச் செல்லும்போது நாம் மட்டும் அசையாமல் இருப்போமோ? இல்லை, இல்லை. கல்விகற்க, தொழில் பயிற்சிபெற, உத்தியோகம் வகிக்க பல பல இடங்களுக்குப்போன நம்முடைய அருமை மக்கள் எப்படி இந்த புதுக் காலத்தின் காக்ஷிகளைக்கண்டு புது உணர்வோடு திரும்பிவருகிறார்களோ. அதுபோல நாம் நமது சிந்தனைகளிலும் நமது ஆலோசனைகளிலும் மாறுமல் கிராமம் கிராமமாய் புதியவைகளைப் பின்பற்றுமலிருப்பது எப்படி? கடவுள் செயலாய் நமது கதி மாறியேபோகட்டும் என்றல்லவோ சொல்லுவோம். ஆகையால் துன்பமும் கடமையும் கட்டாயமும் மாத்திரம் நம்மை ஏவிவிடாமல் ஒரு புது வைராக்கியமும் ஊக்கமும் நம்மைப் பிடித்து, பூர்வகாலத்து கள்ளருக்கு ஏற்ற வண்ணமாய் நம்மை பழைய துற்பழக்கங்களோடு போர் செய்யக் கிளப்பிவிடக்கடவது.

நாம் களைத்துப்போனாலும் கடவுள் களைக்காமலிருக்கையில் நாம் அவர் சத்துவத்தால் ஏகுவோமாக. வறண்டுபோன நமது நாட்டிலேயும் அவர் வலிமையால் பெரிய மழைகள் வெண்மையாய்ச் சொரிந்துவந்து எப்படி நமக்கு முக்கால்வாசி உயிர்கொடுத்திருக்கிறதோ அதுபோல் கடவுள் பொழியப் பண்ண விரும்புகின்ற அருள் மழையை நாம் பெற்றுக்கொள்ளக்கூடியதாயிருந்தால் பரிபூரண வாழ்வு கிட்டுமே.

"எங்கும்தான் ஈசன் நின்றான் ஆகில்,
எல்லாம் அவரை காணவேண்டும் தானெனில்,
எங்கும்தான் அந்தகருக்கு இரவி இருளாகும்."

ஈசன் அருட்கண்ணில்லார்க்கு ஒளியே இருள் ஆம். இதுபோல் எங்கும் வியாபகமாயுள்ள கடவுள் நமக்கு தென்படாமல் அவர் அருட்குருவாகி வந்து நம்மை தமது அளவற்ற நீதியினாலும் அன்பினாலும் பிரகாசித்து நம்மிடத்தில் காணப்படுகிற பொய், அநீதம், மாயம், பெருமை, அகங்காரம் முதலிய குணங்களை ஒழித்து ஞானம், நீதி, சன்மார்க்கம், சமூக வாழ்க்கையில் சகல நன்முயற்சிகள் ஓங்கிட, காலஞ்சென்ற பின் உன்னத ஈடேற்றம் கிட்டிவர கருணையளிப்பாராக.

இங்ஙனம்,
உங்கள் அன்புள்ள நண்பன்,
J. ஹிம்மல்ஸ்ற்றிரான்ட்.

ஸி. எஸ். யம்.
உசிலம்பட்டி,
4—12—25.



## விளம்பரம்.

தலைமறைவாய் ஒளிந்து திரியும் சி. டி. கள்ளர்களின் தொடர்ச்சி ஜாப்தா.

இதனடியில் கண்ட நபர்களை அந்தந்த சம்பந்தப்பட்ட கிராம பஞ்சாயத்தார்கள் அதிசீக்கிரம், தேடிக்கண்டுபிடித்து சமீபத்திலுள்ள போலீஸ் ஸ்டேஷனில் கொண்டுபோய் ஆஜர்படுத்தவேண்டும். கூடியசீக்கிரம் தேடி ஆஜர்செய்பவர்களுக்குத் தகுந்த வெகுமதியளிக்கப்படும்.

### சின்னமனூர் ஸ்டேஷன்.

29. விஸ்வநாதபுரம்-பெத்தனத்தேவன் மகன் சி. டி. நிர். 16711 நாகப்பத்தேவன் 6—9—25 முதல் பராரி.

30. வெள்ளையம்மாபுரம்-கோ. விருமாண்டித்தேவன் மகன் சி.டி. நிர். 16491 ஆங்கத்தேவன் 13—10—25 முதல் பராரி.

### வீரபாண்டி ஸ்டேஷன்.

31. கோட்டூர்--பெருமாள்தேவன் மகன் சி. டி. நிர். 28990 ஐயருத்தேவன் 13—8—25 முதல் பராரி. வயது 22, சிவப்பு நிறம், உயரம் 5 அடி 4 அங், சாதாரண தீரேகம், பந்துக்கள் அண்ணன் கருத்திவீரத்தேவன், ஆண்டித்தேவன். டொம்புசேரியில் அக்காள் வெள்ளையம்மாள்.

(Sd.) கே. பி. ஜனார்தனருவ்,
கள்ளர் ஸ்பெஷல்
சூப்பரின்டெண்டு.

---

ரோமான் கத்தோலிக் கள்ளர் பாடசாலைகளின் கனம்தங்கிய சூப்பிரின்டென்று சுவாமியாரவர்கள் பிரமலைத் தேவமார்களுக்குக் கூறும் புதுவருஷத்துக்கான நல்மொழிகள் :—

*தேவமாரே, வருஷத்துக்குப்பின் வருஷம் அணி அணியாக புரண்டு ஓடிக்கொண்டிருக்கின்றன. கடந்துபோகிற காலையாவது, வருஷத்தை யென்கிலும் நிறுத்துவது, மனுஷன் வல்லமையிலல்ல நமக்குக் கொடுத்திருக்கும் காலத்தை மேன்மைப்படுத்தி, நற்கிரியைகளைச் செய்கிறவர்களாயிருப்பதே, நாம் தேடவேண்டிய முயற்சி. இதோ ஒருவருஷம் கடந்து மறுபுதுவருஷம் துவக்குகிறது. இப்புது வருஷம், தேவமார்களே, உங்களுக்கும், உங்கள் குடும்பத்துக்கும், உங்கள் நாட்டுக்கும் உங்கள் நாட்டு வெள்ளாமைக்கும், உங்கள் தொழில் முயற்சிகளுக்கும், எல்லாத்துக்கும் சகலநன்மையும் கொடுக்கக்கூடிய வருஷமாயிருக்கக்கடவதாக வாழுங்கள்! நற்சீவியத்தோடும் சிறப்போடும் இவ்வருஷத்தில் வாழ்வீர்களாக. நல்லமழை நல்லகாற்று வீசி உங்கள் நாட்டுக்குத் தானியமும் திரவியமுமுண்டாவதாக.*

*உங்கள் நன்மையை முன்னிட்டு, காருண்ய கவர்ண்மென்றார் ஏற்படுத்திய ஸ்பெசல் ஆபீசர் வழியாக உங்கள் குலத்தாருக்குப் பொழியப்படும் நன்மைகளை நன்குணர்வீர்களாக! "கல்வியே செல்வம்" என்றாப்போல, பாலர்களுக்குப் படிப்பை ஊட்டியே, தேவமார் குலத்தை செழித்தோங்கச் செய்யவேணுமென்ற கருத்தோடு பள்ளிக்கூடங்களை உங்கள் நாட்டின் எப்பக்கமும் பாவி வீசியிருக்கிறார்கள். அந்தப் பள்ளிக்கூடங்களிலிருந்து வரும் செலவை ஒரு பொருட்டாய் எண்ணாமல், "அனுப்புங்கள். உங்கள் பிள்ளைகளை யெல்லாம் பள்ளிக்கூடத்துக் கனுப்புங்களென்று" விரும்பி அழைக்கிறார்கள்.*

*உங்கள் மக்களெல்லோரையும் பள்ளிக்கூடத்திற்கு அனுப்புகிறீர்களா? எத்தனையோ பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளின் கல்வியைப்பற்றி கவலையில்லாமல், பக்கத்திலிருக்கும் பள்ளிக்கூடத்தின் நன்மையை உணராமலிருக்கிறார்கள் சொற்பக்கூலியை முன்னிட்டோ, மாடுமேய்க்கும் லாபத்தைத் தேடியோ, பிற்காலம் செல்வபாக்கியம் தரக்கூடிய கல்வியை இகழ்ந்து அவமதிக்கிறார்களே, இது சரியா?*

*இப்புது வருஷத்தில் இப்பேர்ப்பட்ட பாரிக்குறையை நிவிர்த்தி செய்து நடக்கவேணுமல்லவா? பின்வரும்நன்மையை முன் யோசித்து வாழவேணுமல்லவா?*

*ஆண்மக்களோடு பெண்மக்களையும் படிக்கவைத்து நாகரீகமும் மேன்மையுங்கற்றுக்கொள்ளச் செய்யுங்கள். கல்விகற்று நிற்கும் பெண்மக்களை உங்கள் கண்ணாலே பார்த்திருக்கிறீர்களே. இவர்கள் உடைநடை பாவனை யெல்லாம் எவ்வளவோ சந்தோஷத்தைக் கொடுக்கவில்லையா? மேலும்,*

இவர்கள் படித்தால், உபாத்திமை பரீக்ஷை தேறினால், இவர்களும் மாதம் 15 ரூபாய் சம்பாதிக்கக் கூடிய உபாத்திமார்களாவார்களல்லவா? பிள்ளைகளையும் மேன்மையாகவளர்க்கும் சக்தி உள்ளவர்களாவார்களல்லவா? கல்வியே செல்வம் என்று கல்வியை மதித்துக் கொண்டாடுவீர்களாக. பழைய பழக்கங்களையெல்லாம் தவிர்த்து உங்கள் மக்களை கல்வியின் வெளிச்சத்தில் வளர்ப்பீர்களாக. உங்கள் ஆசிரியர்களை உபகாரிகளாகப் பாவித்து அவர்களை ஆதரியுங்கள்.

துரைத்தனத்தார் கல்வியோடு இன்னும் எவ்வளவோ நன்மைகளை உங்களுக்குச் செய்யும்படி பிரயாசை யெடுக்கிறார்கள். உங்கள் மத்தியில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் ஐக்கியசங்கங்கள், தொழிற்சாலைகள், பஞ்சாயத்துகள், பரிசுகள் இப்பேர்ப்பட்ட சாதனங்களெல்லாம் எவ்வளவோ உம்குலத்தாரைமேன்மைப்படுத்தக்கூடியதல்லவா? கடந்தகாலத்தில் இதுகள் மட்டில் உங்களுக்கு மெய்யான ஆவலிருந்ததா? கிணறு நிறைய ஜலம் இருந்து என்ன பிரயோஜனம். அந்த ஜலத்தை எடுத்து உபயோகித்தாலல்லோ நமக்குப் பிரயோஜனம். மரத்தின் கனி பழுத்துத்தொங்கினாலென்ன, அப்பழத்தைப் பறித்துச் சாப்பிட்டாலல்லோ சுகமடையலாம். ஐக்கியசங்கம், தொழிற்சாலை, பஞ்சாயத்து இப்பேர்ப்பட்ட கனிகளை நீங்கள் பறித்துப் புசிக்கிறீர்களா?

இப்புது வருஷத்தில், புது மனிதர்களாக, புதுப்புது நற்கனிகளையெல்லாம் சாப்பிடுகிறவர்களாக, உங்கள் மத்தியில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் சாதனங்களை உபயோகியுங்கள். இந்தப் பத்திரிகை உங்கள் நடுவில் உற்பத்தியாக, உங்கள் கண்களைத் திறக்கும்படி எவ்வளவோ முயற்சி எடுக்கிறது. சகல சமாச்சாரங்களையும், துரைத்தனத்தாருடைய முயற்சிகளையும் அறிவித்து உங்களை நாகரீகப்படுத்தத் தேடுகிறது. ஆனால் இப்புது வருஷத்தில் பின்காலத்தைப்போல் அசமந்தமாயிராமல், இப்பத்திரிகையை வாசிக்கவும், வாசிக்கத் தெரியாதவர்களுக்கு வாசித்துக் காட்டவும் முயற்சி செய்யுங்கள்.

போனதுபோகட்டும். இனியாகிலும் நீடித்த நன்மையைக் கொடுக்கும் வாழ்வை நீங்கள் தேடுவீர்களாக. எது எப்படி ஆனாலும், பரமகர்த்தருடைய அருள் நம்மிடம் வீசுமேயாகில் ஒரு குறை வரா. அந்த பரமதேவனைத் தேடி, பயத்துடன் பக்தியுடனும் நடப்பீர்களாக. தர்மகிரியைகளைத் தேடுங்கள். உங்கள் குலநாமத்துக்குத் தக்கபடி மேன்மையாக தேவனுடைய மக்களாக நடந்துகொள்ளுங்கள். கடந்த வருஷத்தில் மழை தண்ணீரில்லாமல் பட்ட கஷ்டங்கள் நீங்கவேண்டுமானால், தர்ம செயல்களுடையவர்களாக ஆகவேண்டும். நல்லவர்கள் புண்ணியத்தை முன்னிட்டு கர்த்தர் மழையை வருஷித்து பூமி செழிக்கச்செய்வார்.

காருண்ய துரைத்தனத்தார் மட்டில் நன்றியுள்ளவர்களாய் உங்களுக்கு எவ்வளவோ நன்மைகளைத் துவக்கிச் செய்து போயிருக்கிற ராவ் பகதூர் ராஜம் ஐயரவர்களுக்கும், தற்காலமிருந்து நன்மைபுரியும் கனவான், கே. பி. ஜனார்தனராவ் அவர்களுக்கும், உங்கள் வந்தனத்தைச் செலுத்துங்கள். இப்புது வருஷ மங்களங்களை அவர்களுக்குக் கூறுங்கள். உங்களைச்சுற்றியிருக்கிறவர்கள் மட்டிலும் தர்ம சிந்தனை உள்ளவர்களாயிருப்பீர்களாக. பரம கடவுள் பிரமலை தேவமார் குலத்தை பூரணமாக ஆசீர்வதிக்கும்படி பிரார்த்திக்கிறோம். புதுவருஷத்தின் மங்களம் உங்களெல்லோருக்கும் கூறுகிறோம்.

Rev. பிரின்ஸ் சாமியார்,
கொடைக்கானல்.

---

## கல்வியின் பெருமை.

இந்திரகுலாதிபரான, எனதன்புள்ள நேயர்காள்: கடந்த 5 வருட காலமாக கருணைக் கடலாகிய கவர்மெண்டார் நமக்கு செய்து வருகிற உபகாரத்திற்கு நன்றி செலுத்துவோமாக. இந்திரகுலாதிபர்களே, நம்முடைய ஜாதியாருக்கு விவசாயம் செய்ய மாடு வாங்கவும், கிணறு வெட்டவும், வியாபாரம் செய்யவும், நம் ஜாதியாருக்காக ஸ்பெஷலாக மேலன தாசில்தார் அவர்களும் அதற்கு கீழ்ப்பட்ட உத்தியோகஸ்தரும் வைத்து சொற்ப வட்டிக்கு பணம் கொடுத்து உதவிசெய்கிறார்கள்.

இன்னும் நம்முடைய ஒவ்வொரு கிராமங்களிலும் பாடசாலை வைத்து ஆண்களும், பெண்களும் கட்டாயம் படிக்கும்படியாயும் நம்முடைய ஜாதியார்கள் முன்னேற்றத்திற்காகவும் மகா-ா-ா-ஸ்ரீ சூப்பிரண்டெண்டு துரையவர்களும் கனம் மானேஜர் அவர்களும் உழைத்து வருகிறார்கள். இதையெல்லாம் நம் ஜாதியார்கள் அறியாமல் இன்னும் சொற்ப பேர் இருக்கிறார்கள். தாங்கள் பிள்ளைகளை பள்ளிக்கூடத்திற்கு அனுப்பினால் தங்களுக்கு நஷ்டம்வருமென்று நினைத்திருக்கிறார்கள். ஆடுமாடு மேய்க்கவும் பிள்ளைகள் தூக்கவும் வேண்டும் என்று வீட்டில் வைத்துக் கொள்ளுகிறார்கள். அதினால் நம்முடைய ஜாதியார் இன்னும் அறியாமல் இருக்கிறார்கள். முன்காலத்தில் நம்முடைய பெரியோர்கள் படிப்பதற்கு முயற்சி யெடுத்திருக்கிறார்கள் என்று ஒருவாறு தெரிகிறது. அயல் கிராமங்களில் தினந்தோறும் 4, 5 மைல் தூரம் போய் ஓலை சுவடியில் படித்திருக்கிறார்கள். உபாத்தியாயரை தங்கள் வீட்டில் வைத்து அவருக்கு சாப்பாடு வஸ்திரம் கொடுத்து படித்தும் இருக்கிறார்கள். இன்னும் சிலர் பால்மாடு ஆடு கிடாய் கொடுத்தும் படித்து இருக்கிறார்கள் என்பது இதினால் தெரிகிறது.

தற்சமயம் காருண்ய கவர்மெண்டார் நமக்கு இலவசமாகவும் பணஉதவியும் செய்து படிக்கவைக்கிறார்கள். "காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்" என்னும் பழமொழியை மறந்துபோகாதீர்கள். "கரும்பு தின்ன கூலியா"

கண்ணுடையரென்பர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையா கல்லாதவர்

என்று திருவள்ளுவ நாயனார் எழுதியுள்ளார்.

ஒருவன் புத்தியை விருத்திபண்ணுவதற்கு கல்வியே பிரதானமாம். அவ்விதம் அறிவைப் பெறுவதற்கு பெரியவர்களால் சொல்லப்பட்ட நீதிசாஸ்திரங்களையும் ஞானநூல்களையும் வாசித்து அவற்றிலிருந்து நல்ல பொருள்களையும் அறிந்துகொள்ளவேண்டும். எப்படியெனில்: அன்னப்பட்சியானது நீரைப் பிரித்து பாலைமட்டும் அருந்துவதுபோல அதே பிரகாரம் கல்வி அறிவு இருந்தால் உலக காரியங்களில் இது நல்லது, இது கெட்டது, என்று பகுத்தறிந்து எடுத்துக்கொள்ளக்கூடும். இதற்கு மாறாக நம்முடைய தாய்மார்கள் தங்கள் பிள்ளைகளை மதுரை, உசிலம்பட்டி, பசுமலை இப்படிப்பட்ட இடங்களில்படிக்க அனுப்பிவிட்டு நான் எப்படி தனியாய் இருப்பேன், படிப்பு இல்லாவிட்டாலும் பரவாயில்லை என்றும் என் பிள்ளை பக்கத்திலிருந்தால் போதும் என்றும் சொல்லுகிறார்கள். நம் நாடுகளெல்லாம் நாளுக்குநாள் நாகரீகம் பெற்று வருகையில் தாழ்வான நிலையிலிருப்பதற்கு தாய்மார்களே முக்கிய காரணம்.

[illegible] அவர்கள் குழந்தைகளுக்கு முத்தம்கொடுத்து அவர்கள் படிப்பை கெடுத்துவிடுகிறார்கள். கஷ்டம் ஏதாவது கொஞ்சம் செல்வம் இருந்தால் என் பிள்ளைகள் அதை வைத்து காணி ஆண்டால் போதும் என்கிறார்கள். நிலையற்று அழிந்துபோகும் பொருளை பெரிதாக பாராட்டலாகாது. அதை சீக்கிரம அறிந்துபோம். செல்வம் நிலையற்றது. செல்வம் என்ற பதத்திற்கு செல்வோம் என்பது பொருளெனலாமே. இதை பற்றியே ஒரு கவிராயரும்

அள்ளக் குறையுமே அக்கினியால் வேகுமே
கள்ளர் கவர்வர் கடும்பகைவர்—துள்ளலொடுக்
கேக முடியாதே—எப்போதுமேபயம் நான்
போக வழியும் பொருள்.

கல்விப்பொருளோ இப்படிப்பட்டதல்ல. எப்பொழுதும் நிலைநிற்பது. குறைவுபடாது. இதைப்பற்றியே மூன்றொரு கவியும் உண்டு. ஒருவனுக்கு அழியாத செல்வம் கல்வி.

அறம் பொருள் இன்பமும் வீடும் பயக்கும்
புறங்கடை நல்லிசையும் நாட்டும்—உறுங்
கவலொன்
றுற்றுழியுங் கைகொடுக்கும் கல்வியினூங்
கில்லை
சிற்றுயிர்க்குற்ற துணை

என்று மூதறிவோர் பகர்ந்துரைத்தனர். கல்வியினும் சிறந்ததொரு செல்வம் உயிர்க்கு யாண்டுமில்லை என்பது எல்லாரும் நன்கு அறிவர். மேலும்

வெள்ளத்தாற் போகாது வெந்தழலால்
வேகாது வேந்தராலும்
கொள்ளத்தான் முடியாது கொடுத்தாலும்
நிறைவொழியக் குறைபடாது



கள்ளர்க்கோ மிகவரிது காவலோ
மிகவெளிது கல்வி யென்னும்
உள்ளத்தே பொருளிருக்க வுலகெலாம்
பொருள்தேடி யுழல்வதேனோ?

இதை சிலர் வாசித்தும் கேட்டும் இருப்பார்கள்.

குன்றத்தனை யிருநிதியைப் படைத்தோர்
அன்றைப் பகலே அழியினும் அழிவர்

என்றபடி மனிதர் அளவில்லாத செல்வத்தை பெற்ற போதிலும்அதனால் ஒரு பயனும் அடையாமல் அப்பொழுதே அதனைவிட்டு மடியினும் மடிவர். இதை யோசித்தால் பொருளால் நிலைத்த பயன் ஒன்றுமில்லை என விளங்கும். கல்வியோ இப்படிப்பட்டதல்ல, அவன் இறந்துவிட்டாலும் எப்பொழுதும் அவன் பெயரை நிலை செய்துகொண்டிருக்கும். (உதாரணமாக) காலஞ் சென்ற திவான் பகதூர் யல். டி. சாமிக்கண்ணு பிள்ளையவர்கள் தென்னிந்தியாவில் மேலான பதவிக்கு உயர்த்தப்பட்டவர். 12 பாஷைகள் கற்றறிந்தவர். மத விஷயத்திலும் சர்க்கார் வேலையிலும் ரொம்ப முயற்சியுடையவர். தென்னிந்தியாவில் ஒரு திலகம்போல் விளங்கிக்கொண்டிருந்தார். இவர் ஜீவிய சரித்திரத்தை அறியாதார் சொற்பப்பேரே இருக்கலாம். இவர் நம் மாகாணத்தில் நன்மைவிளைவிக்கக்கூடிய ஒரு நவமணியை இழந்தோம் என்று பரிதவிக்கிறார்கள். இந்திரகுலாதிபர்களே இவருடைய பெயர் செல்வத்தினால் உலகம் போற்றிப் புகழவில்லை. கல்வியினாலேயும் நற்குணத்தினாலும் இவரை உயர்த்தி இறந்த பிறகும் அவருடைய நற்குணங்களை எடுத்துப் பேசுகிறார்கள். ஆகையால் நம் ஜாதியார் ஊக்கத்துடன் சிறுவர் சிறுமிகள் ஒவ்வொருவரையும் கட்டாயம் படிக்கவைத்து மேன்மையடைவோம் என்று நம்புகிறேன்.

இப்படிக்கு,
A. S. Mariasusay Thevar,
R. C. Training School,
Trichinopoly.

---

## பிரமலை சீர்திருத்தனுக்கு எழுதிய திருமுகமும், அதன் குறை நிசயங்களும்.

எனதாருயிர் நண்ப:—

கைமாறு கருதாமல் கார்மேகத்தைப் போல் அநேக புதுமதிகளையும, சீர்திருத்தங்களையும தனக்கு ஆபரணமாக அணிந்து மாதந்தோறும் வெளிவந்துலாவா, கண்ணுக்கினியவனா, பிறர் நன்மையை நாடியே தனது ஜீவியத்தை நடத்தும் இந்திரகுல தாசனுக்கு, உன்னை அநேகதரம் கண்டு, உன்னோடு பேசி, சகல சம்பாஷணைகளைச் செய்து, உன் பக்ஷத்தைக் கொண்டுகொண்டிருக்கும் நண்பன் வரைவதாவது:—

இதுகாலபரியந்தம் உன்னால் நான் அறிந்த விஷயங்களை எடுத்துரைக்கமுடியாது. நீ உன் செய்யுலமாய பிரமலையாராகிய எங்களுக்கு, சகல நற்குணங்கள் நிறைந்த போதனைகளையும, புத்திமதிகளையும, சீர்திருத்தங்களையும் தெளிவுற நன்றாய் உணர்ந்தறியும்பொருட்டு மாதந்தோறும வெளிவந்துலாவுகிறாய். இவைகளை எல்லாம் நீ கைமாறு கருதாமல் செய்வதால் உன்னைக் கார்மேகம என்று அழைக்கலானேன். எப்படி மேகமானது மழையைச் சொரிந்து உலகத்துக்கு சகல பலனை அளிக்க, அதற்கு உலகம் திரும்ப யாதொரு நன்மையும் செய்யாதது போல், நாங்களும உனக்கு பிரதி உபகாரம் செய்கிறதில்லை. இவைகளை எதிர்பாராதவனாய், இன்னும நீ பேரருள் கொண்ட கருணைக் கடவுளின் வலிமையால் கட்டுண்டவனாய உன போ கற்பகத்தார் விருக்ஷம்போல் செழித்து, கிளைகளுடன் இலங்கி, பரிமளிக்கும மலர்களின் வாசனையினும் மிக, புகழும பேரும் படைத்து இப்பிரபஞ்சத்தில உன் வாழ்நாட்களை பின்னிட, உன நன்மையையு, பெரும் புகழையும் விரும்புகிறேன்.

ராஜு வேதமணி,
உதவி உபாத்தியாயர்,
கவண்டன்பட்டி.

(72-ம் பக்கம் பார்க்க.)

---

## கீழக்குடி பஞ்சாயத்தாரின் தீர்மானம்

மகா-ா-ா-ஸ்ரீ கள்ளர் ஸ்பெஷல் சூப்பிரண்டு துரையவர்கள் சமூகத்திற்கு, கீழக்குடி மகா-ா-ா-ஸ்ரீ சப்இன்ஸ்பெக்டர் எஜமான் அவர்களும் பாங்கிஇன்ஸ்பெக்டர் எஜமான் மகா-ா-ா-ஸ்ரீ ராமச்சந்திர அய்யர் அவர்கள் முன்னிலையில் இன்று 15—11—25ல ஞாயிற்றுக் கிழமைதினம் கீழக்குடிக் கிராமம் மகா சபையோர்களும் பஞ்சாயத்தார்களும் கூட்டம் கூடி பள்ளிக்கூடத்து முன்னிலையில் மீட்டிங்கு பேசி அடியில் கண்டபடி தீர்மானஞ் செய்யபட்டிருக்கிறது.

தீர்மானத்தின் விபரம்

கள்ளர் பொது நிதி—சு. வ. மூக்க விருமத்தேவரால்:

1. பாங்கியில் கடன் வாங்கி வாயிதாச் சென்ற கடன்காரர்கள் பூராவும் தருவித்து கடன் கூடிய சீக்கிரத்தில் தீர்க்கும்படி தீர்மானிக்கப்பட்டது.

2 பள்ளிக்கூடத்துச் சம்பளப் பாக்கியை கட்டும்படி வீட்டுக்கு எட்டணா வீதம் வரியேற்படுத்தி ஒவ்வொரு தெரு வீதம் வசூல் செய்து ஒருவாரம் வாயிதாவில் கட்டும்படி தீர்மானிக்கப்பட்டது.

3. பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளை லிஸ்ட்டில் கண்டபடி தகப்பன் தாய் பள்ளிக்கூடத்துக்குச் சரிவர அனுப்பவேண்டியது. அப்படி அனுப்பாதவர்களிடம் பிள்ளை 1-க்கு ரூ 1-0-0 வீதம் அபராதம் விதிக்கப்படுமென்று தீர்மானிக்கப்பட்டது.

4. பெண்பாட்சாலைக்கு பிள்ளைகளை சரிவர அனுப்பவேண்டியது. அப்படி வராத பிள்ளையின் தகப்பனுக்கு எட்டணா அபராதம் விதிக்கப்படுமென்று தீர்மானிக்கப்பட்டது.

5. பாதை ரோட்டு மார்க்கங்களில் சப்பாத்து கத்தாளை போட்டிருக்கிற நபர்கள் ஒரு வார வாயிதாவில் எடுத்துக் காலிசெய்து போடவேண்டியது. அப்படிச் செய்யத்தவறினால் இனம் 1க்கு அபராதம் ரூ 2-0-0 விதிக்கப்படுமென்று தீர்மானிக்கப்பட்டது.

6. புஞ்சைக் காடுகளில் பருத்தி காலங்களில் மாட்டைக்கொண்டுபோய் பயிர்களை அழிப்பவர்களை யார் கண்டு பிடித்து வந்தாலும் மாடு 1-க்கு எட்டணா வீதமும் நபர் 1-க்கு ரூ. 1-0-0 அபராதமும் விதிக்கப்படுமென்று தீர்மானிக்கப்பட்டது.

7. மணிக்கு ஆசர்கொடுத்துப் பராரியாய்ப் போனவர்களை சாதிக் கட்டுப்படிக்கு சாதியை விட்டு நீக்கி மற்ற நபர்கள் பேச்சு வார்த்தை உண்பன-தின்பனவுகள் புளக்கம் செய்யக்கூடதென்று தீர்மானிக்கப்பட்டது.

8. சாதிஒப்பந்தத்தை மீறி திருட்டுக்குப் போகக்கூடாது. அப்படி மீறி திருட்டுக்குப் போய்வந்ததாக தெரியும் நபர்களை சர்க்காரில் பிடித்து ஒப்பித்தும் டை யானையும் சாதியை விட்டு நீக்கும்படி தீர்மானிக்கப்பட்டது.

மற்ற சபையோர்களாலும் பஞ்சாயத்தார்களாலும் அங்கீகரிக்கப்பட்டது.

பஞ்சாயத்தார்கள்.:

அ. மு. சுக்குருத்தேவன்.
சு. வ. மூக்கவிருமத்தேவன்.
16--11—25
பே. விருமத்தேவன்.
கீரல்—பசுமவிருமத்தேவன்.
கீரல்—செவத்தா விருமத்தேவன்.
க. விருமாண்டி.
16—11—25

---

"நீதிமான்களுக்கென்று மெய்ஞ்ஞானத்தை வைத்துவைத்திருக்கிறார். உத்தமமாய் நடக்கிறவர்களுக்கு அவர் கேடகமாயிருக்கிறார்."

24—11—25 பிற்பகல் 1½ மணிக்கு கோம்பையில் டீ பாஸ்டரேட் ராஜகுமாரத்திகளின் கூட்டமும் கிறிஸ்தவ எண்டவர் சங்கமும் 4 மணி வரை நடந்தது. கனம் ஜேம்ஸ் அவர்கள் ஜெபஞ்செய்தார். கோம்பை ஸ்கூல் மாணவர்களால் கடவுள் வாழ்த்துப் பாடப்பட்டது. கோம்பை பைபிள் உமன் அம்மாளவர்கள் ராஜ குமாரத்திகளுக்குள் நடக்கும் வேலையையும் அவர்கள் கல்வியிலும் நாகரீகத்திலும் உற்சாகமாய் உயர்ந்து வருவதோடும் தர்மபண்டு பணம் சேர்ப்பதிலும் செப்டெம்பரில் கிறிஸ்தவ கான்பரென்ஸ் கூட்டங்கள் முதலியவைகளை இவ்வருஷத்

போய்ப்பார்த்து தாங்களும் தேவ ஊழியம் செய்ய திடப்பட்டதையும் விவரித்து ரிப்போர்ட் வாசிக்கப்பட்டது. நமது இந்திய நாட்டு ஸ்திரீகளுக்குள் இவ்வித முயற்சி செய்துவரும் பெண்மணிகள் உண்டானது கடவுள் நமக்குக் கொடுத்த சிலாக்கியம். இப்படியே எவ்வளவோ பெண்மணிகள் வேலை பார்த்துவருகிறார்கள். என்றாலும் போதாது. ஆண்களைப் பார்க்கிலும் பெண்மணிகள் ஊழியம் வெகு விலையும் மிகுந்தபிரயோசனமுமுள்ளது. ஏனெனில் குடும்பத்தை நடத்தும் மிஷன் பெண்மணிகள் அல்லவா? அப்படியே சிறுவர் சங்கங்கள் நடந்துவந்த ரிப்போர்ட்டை டிஷ ஊர் சிறுவர் சங்கத்தின் காரியதரிசி A. டேவிட் அவர்கள் வாசித்தார். சிறு பிராயமாயிருந்தும் 12 வயதுக்குள்ப்பட்ட பிள்ளைகளை நடத்தி வந்திருக்கிறதும் அச்சிறுவர்கள் தங்கள் கல்வி பயிற்சியோடு நமது நாடும் ஜாதிகளும் முன்னேறும் விதத்தைக் குறித்து கவலையுற்று பொருள் சேர்க்கும் வழியும் ஞானமாய் ஒற்றுமைக்கும் வகைகளும் தர்மம் செய்ய உற்சாகமாய் பொருள் சேர்த்து அவ்வித மேலான காரியங்களில் பழக்கப்பட்டு வருவது எவ்வளவு நமது தாய் நாட்டுக்கு உபகாரமாயும் லாபமாயும் சமாதானமாயும் இருக்கிறதென்று நன்றாய் கவனித்தால் நமக்குத் தெரியவரும். அப்படியே தேவாரம், பண்ணைபுரம் பெண்மணிகளும் சிறுவர்களும், பாட்டு சம்பாஷணை, அபிநயங்களினால் தங்கள் மேலான வேலைகளோடு காண்பித்தது தெய்வம் இவ்வுலகத்தவர்களுக்கு கொடுத்த ஈவு அல்லவா?

தேவமார் சகோதர சகோதரிகளே, இவைகளை நம்மவர்களுக்கு நேரில் ஒவ்வொருவர்களிடத்திலும் வற்புறுத்திச் சொல்வதோடும் நாலும் இவ்வித வகைவழிகள் போன்ற வேலைகள் செய்யத் துணிகிறேன். நீங்கள் ஒவ்வொருவரும் நாலும் இந்த வேலையைச் செய்யக் கடமைப்பட்டவர்களென்று நினைவுகூருகிறீர்களா? அப்படியானால் ஏறக்குறைய வெகு சீக்கிரத்தில் நமது ஜாதிகளுக்குள் உள்ள கேட்டின்வழி, கலகக்குணம், தாங்களும் வாழாமல் மற்றவர்களையும் வாழவிடாமல் தடுத்துக்கொண்டிருக்கிற நாமென்ற பிசாசின் தந்திரம், காமம், கள், கஞ்சா, பொய்ச்சாட்சி, தாய் தகப்பனை நிந்தித்தல், உத்தியோகஸ்தர்களைக்கண்டால் கைகட்டி வாய் பதைத்து, சொல்வதொன்று செய்வதொன்றாய் இருக்கும் பேதைக்குணம் இன்னவர்களை விட்டு ஓடிப்போகும் என்பதற்குச் சந்தேகமா?

ஒருவேளை நீங்கள் நினைக்கலாம்-எத்தனை விதமாக நமக்கு கைத்தொழில்சாலை ஏற்படுத்தப்படப்பட்டிருக்கிறது. எலிமெண்டரி ஸ்கூல்கள் இருக்கிறது. திருமங்கலம், உசிலம்பட்டி முதலிய இடங்களில் வருஷாந்தரம் ஸ்போர்ட்ஸ்கள் நடக்கிறது. ஏபெஷல் உத்தியோகஸ்தர்கள் அதிகம் பேர்கள் இருக்கிறார்கள். பஞ்சாயம் நமக்குள் கொடுத்திருக்கிறார்களென்று ரொம்பவும் பெருமைகொண்டிருக்கலாம். ஐயோ! அந்த எண்ணம் பரிதாபம். எத்தனைபேர் சொந்த கைத்தொழில் நெசவு, தச்சுவேலை முதலிய தொழிற்சாலை ஏற்படுத்தி பணம் சம்பாதிக்கிறார்கள். எத்தனை பேர் அன்னிய நாடுகள் போய் வியாபார முதலிய பணம் சம்பாதிக்கும் திறமையுடையவர்களாய் இருக்கிறார்கள். எத்தனை பேர் உத்தியோகம் மெம்பர் ஸ்தானங்களுக்கு ஏற்ற திறமையுடையவர்களாய் இருக்கிறார்கள் என்பதைக் கணக்கிட்டுப் பார்த்தால் நமது ஜாதிகளுடைய நிலைமைகள் பயங்கரமானவைகளாய் இருக்கிறது என்பது நன்றாய் அறியலாம். நன்றாய் யோசிக்கப்போனால், பஞ்சாயம் என்றால் என்ன அதை நடத்தும் வழி எப்படி, ஸ்கூல் என்றால் என்ன, அதைக் கவனிக்கும் விதம் எப்படி, குழந்தைகளுக்கு ஸ்கூல் என்னுமிடத்தில் என்ன லாபம் இருக்கிறது. பிறர்க்குத் தீமைசெய்வதால் உண்டாகும் நஷ்டமும், தெய்வதண்டனையும் பின் ஆத்தும ஆதாயம் அடையவேண்டிய நம்பிக்கை இருப்பதாக எண்ண, அதிகம் பேரும் இல்லை என்றே சொல்லத்தகும். நான் பெரியகுளம் தாலுகாவிலும் திருமங்கலம் தாலுகாவிலும் சில கிராமங்களைச்சுற்றி நமது ஜாதிகள் மத்தியில் சம்பாஷணை செய்தும் அவர்களுக்குள் ஒருவர்க்கொருவர் கக்ஷிபிரிந்து விவகாரம் செய்வதையும் பார்க்க எனக்கே பயங்கரமும் பரிதாபமுமாய் இருக்கிறது. அப்படியானால் எத்தனைபேர் நினைத்தாலும் முன்னேறும் விதம் எப்படி? அதிலும் ஒவ்வொரு ஊர்களில் கொஞ்சம் தெரிந்துகொண்ட மனிதர்கள் செய்யும் ஆபாசமான தொழில்கள், அவ்வூர் கிராம முனிசீப் அல்லது அடுத்த போலீஸ் ஸ்டேஷனில் உள்ளவர்களுக்கு நல்லவனைப்போல் தன்னைக் காண்பித்துக் கொண்டு அறியாத அநேகர்களை தொந்தரிக்கவும், தேவமார் வாலிபர்களைச் சேர்த்துக் கொண்டு துர் ஆலோசனையிலும் நடத்தி ஜாதிகளுக்குள் நஷ்டத்தையும் தரித்திரத்தையும் உண்டாக்குகிறார்கள். அவர்களுக்கு ஐயோ, அவர்கள் தலையில் அக்கினி குவியும் ஆனால் தற்போது மனுஷீகமுறை விசாரிக்கத்தக்கவை, மூடர்கள் ஞானத்தை அசட்டை பண்ணுகிறார்கள் நீதிமொழி) ஞானவான்கள் கனத்தைச் சுதந்தரிப்பார்கள், மதிகேடர்களோ கனவீனத்தை அடைவார்கள் நீதிமான்களுடைய பாதைகடிப்பகல் வரைக்கும் அதிகமதிகமாய்ப் பிரகாசிக்கிற சூரியப்பிரகாசம்போலிருக்கும்; துன்மார்க்கருடைய பாதையோ காரிருளைப் போலிருக்கும்; தாங்கள் இடறுவது இன்னதில் என்று அறியார்கள். ஆகையால் சகோதரர்களே, கட்டாயம் நன்மையைக் குறித்துத்தான் நமது சிந்தனையும் செய்கையும் இருக்க வேண்டியது. ஒருவர் நமக்குச் செய்யும் தீமைக்குத் தீமைசெய்யாமல் நன்மைசெய்வேனென்ற விரதம் உங்கள் மனதில் பிடித்துக் கொண்டால், அன்றே நமது முன்னேற்றத்தின் வழியில் புகுந்துவிட்டோம். அல்லாவிடில் அபாயமான வழிகள் தான். (கதையல்ல கருத்தை யுணருங்கள்)

V. K. சுவார்ட் தேவர், சங்கராபுரம்.

நத்தைபோன்ற அற்பப் பிராணிகளிடத்து மாணாக்கர் படித்துக்கொள்ளும் படிப்பினை:—

இடைவிடாது ஆரவாரித்துக்கொண்டிருக்கும் அலைகளின் ஓசையையும் இளந்தென்றலின் இனிமையையும், கதிரவன் செம்பீரமாய்த் தனது கிரணங்களை உலகெங்கும் பரப்பிப் பொன்மேனியனாய் உதயமாவதையும், பார்த்துப் பார்த்து கடவுளின் மகிமையை நினைத்துநினைத்து ஆனந்தமடைந்து கொண்டிருந்த கனம் ஜி. வேதமுத்து என்னும் நாமதேயங்கொண்ட மகா மகோபாத்தியாயரொருவர் தன் ஆப்த நண்பராகிய கனம் ராஜராவ் என்னும் பிரபல தமிழ் பண்டிதரோடு உல்லாசமாயுலாவிக்கொண்டிருக்கும்போது, ஓர் ஆங்கில புஸ்தகத்தை இடகரத்தால் பற்றிவலகரத்தால்சுமார்ஐந்து அல்லது ஆறு முழமென்று மதிக்கத்தக்க ஓர் அங்க வஸ்திரத்தை இடைவிடாமல் அழுதுகொண்டு அத்துண்டால் துடைத்துகொண்டதால் தண்ணீரில் தோய்த்தெடுத்தாற்போல நனைந்து சொட்டுச்சொட்டென்று தண்ணீர் விழுந்துகொண்டிருப்பதையறியாமல் ரோட்டில் வந்துகொண்டிருந்த பதினெட்டு அல்லது பத்தொன்பது வயதுள்ள ஜான்மனோகரன் என்னும் வாலிபனைக் கண்ணுற்று, தன்கைக்குட்டையால் கண்ணீரைத் துடைத்து, தோள்மேல் கை வைத்து, அப்பா அழாதே, உன் பேர் என்ன? ஏன் அழுதுகொண்டு வருகிறாய் என்று கேட்டார்,......அன்புடன் கேட்கும் அவ்வுபாத்தியாயருக்கு (Good morning) காலை வந்தனம்செய்து, "ஐயா என் பேர் ஜான் மனோகரன். நன்மாயர்பட் என்னும் கலாசாலையில் படிக்கிறேன். என் உபாத்தியாயர் பேர் கனம் K. வியாசராவ். நான் பெரிய பையனாயிருந்தும் பாடம் சரியாய் ஒப்பிக்கிறதில்லை. ஆகையால் உபாத்தியாயர் வெகு அன்புள்ளவராயிருந்தாலும் பிள்ளைகளெல்லாரும் நகைக்கின்றனர். நன்றாய்ப் படித்துக்கொண்டுவரும் பையனுக்கு சுமார் மூன்றுரூபாய் மதிப்புள்ள ஓர் சாமான் பரிசளிப்பதாய்ச் சொல்லியிருக்கிறார். இன்று ஆறு அடியுள்ள ஓர் ஆங்கில செய்யுளைப் படித்துக்கொண்டு போகவேண்டும். என்றால் படிக்கமுடியவில்லை" என்று தேம்பித்தேம்பிச் சொன்னான். உபாத்தியாயர் அவனைப் பார்த்து, "என் பிரியமுள்ள பையனே, நீ அதற்கு கவலைப்படாமல் நான் சொல்வதைக் கேள். சுவற்றின்மேல் நகர்ந்துகொண்டிருக்கும் ஓர் நத்தையைப் பார்க்கிறாயல்லவா? அது எவ்வளவு மெதுவாய்ப் போகிறது. மெல்ல மெல்லப்போய் சுவற்றினுச்சியில் சேர்ந்துவிடுகிறது. அதுபோல பாடம்பாடமாகப்போது அங்குமிங்கும் புத்தியைச் சிதறவிடாமல் சில சில வார்த்தைகள் படித்தால் தேர்ச்சியடைந்து சித்திபெறலாம். சுவரில் மெல்ல மெல்லப்போகும் நத்தை நினைத்துக்கொள்" என்று சொல்லி அனுப்பிவிட்டார்.



நத்தை மெல்ல மெல்லப்போய் சுவற்றினுச்சி கிட்டுமுன் தானும் படித்து முடித்துவிடுவதாய்த் தீர்மானித்தான்.

கடைசியாக பரிசளிக்கும் நாள் வந்தது. உபாத்தியாயர் ஒவ்வொரு பையனையும் அச்செய்யுளைச் சொல்லும்படி கேட்டார். எல்லோரும் சொன்னார்கள். பின் ஜான் மனோகரனைக்கேட்டார். அவன் எழுந்து நின்றவுடன் பையன்களெல்லாரும் வழக்கம்போல் கொல்லென்று நகைத்தனர். அவனோ ஒரு தப்பிதமுமின்றி வெகு தெளிவாய்ச் சொன்னான். எல்லாரும் சொல்லி முடிந்தவுடன், ஜான்மனோகரன்தான் எல்லாரைப் பார்க்கிலும் நன்றாய் சொன்னான். ஆகையால் அவனுக்குத்தான் இந்த மூன்று ரூபாயுள்ள பவுண்டன் பேனாவைக்கொடுக்கிறேன் என்று சொல்லிக் கொடுத்தார். அன்று அவனுக்கிருந்த சந்தோஷம் இவ்வளவென்றல்ல.

பின் உபாத்தியாயர் அவனைப்பார்த்து: மிகவும் நன்றாய்ச் சொல்லும்படி நீ எப்படிப்படித்தாய் என்று கேட்டார். அதற்கு அவன் சுவரின் மேலிருந்த நத்தை எனக்குப் போதித்தது என்று சொன்னான். யாவரும் சத்தமிட்டுச் சிரித்தனர். உபாத்தியாயர் அவர்களைப் பார்த்து: ஏன் நகைக்கின்றீர்கள். நத்தைபோன்ற அற்பப்பிராணிகளிடத்தினின்றுங்கூட நாம் அனேக சத்தியங்களைப் படித்துக்கொள்ளலாம் என்று சொல்லி நத்தை உனக்கு எப்படிக் கற்பித்தது என்று கேட்டார். "ஐயா அந்த நத்தை சுவரில் மெல்ல மெல்ல ஊர்ந்து அது நிற்காமலும் அங்குமிங்கும் திரும்பாமலும் மேலும் மேலும் போனது. அதுபோல நானும் சித்திபெற்று முடியுமளவும் பாட்டைப்படித்துவிடலாமென்று நினைத்தேன். கொஞ்சங்கொஞ்சமாய்ப் படித்து முடித்தேன். அதே சமயத்தில் நத்தையும் சுவரினுச்சியையடைந்தது. அது சுவரில் ஏறுவதற்கும் நான் பாடம் படித்துமுடிப்பதற்கும் சரியாயிருந்தது" என்றான். உபாத்தியாயர் அவன் புத்திக்கூர்மையை வியந்தார்.

"வருந்தினால் வாராதொன்றில்லை" "முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்" "சிறுகத்தின்றால் இருமலையையும் தின்னலாம்". பாடம் படிக்கும்போது உன் கைக்கு நேரிடுவதை உன் முழுபலத்தோடும் செய் என்றதுபோல் முழுஎண்ணத்தோடும் படிக்கவேண்டும். ஒவ்வொருநாளும் படிக்கவேண்டிய பாடத்தை அன்றன்றே முடித்தால்தான் லேசாயிருக்கும் ஒவ்வொரு குச்சியாய் எடுத்து ஒடித்தால் ஒடியுமேயொழிய ஒரு கட்டுவிறகோடு ஒடிக்கமுடியாது என்பது யாவருக்கும் விளங்கக்கூடாத திருஷ்டாந்தமல்ல. ஒருவரிடம் கேட்டுத்தெரிந்துகொள்ளவேண்டிய அவசியமில்லை. ஆகையால் நா[illegible]டிப்படிக்கவேண்டும் என்பதை பே[illegible]கூறிய கதை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் [illegible]ங்குமென்பதற்கையமில்லை.

இப்படிக்கு,
கண்பன் ஜி. வி. செல்லத்துரை,
காமல் ஸ்கூல்—பசுமலை.

## கடன்படல்.

தெய்வேந்திரகுலாதிபர்களாகிய எனது பந்துக்களுக்குத் தெரிவிப்பது யாதெனில்: நாம் சகலமான ஜாதியாரோடு நாமும் ஓர் வகுப்பினராய் கடவுளால் சிருஷ்டிக்கப்பட்டு இப்பூமியின்கண் வாழ்ந்து வருகின்றோம். ஆனால் மற்ற ஏனைய ஜாதியாரெல்லோரிலும் நம்மவர்களில் பெரும்பான்மையோர் தங்கள் தங்கள் குடும்பவிஷயமாய் நடத்துக்கொள்வதில் அதிகக்குறைவு உண்டு. கனவான்களே, அதில் அதிமுக்கியமாம் அதிகக்கெடுதியை வருவிக்கக்கூடியதுமான ஓர் குறை யாதெனில், நமது நாட்டில கடன் வாங்குவதே. ஒருவனிடத்தில் பணம் வாங்குதற்கு அவனிடத்தில் பலதடவைபோய் அவனுக்குத் தனக்கிருக்கும் ஆஸ்திமுதலியவற்றை இவ்வளவு என எடுத்துரைத்து, அவனுடைய மனதைத் தீயிலிட்ட மெழுகுபோல் உருகும்படி செய்து ஆசாரவுபசாரவார்த்தை பேசிஅதன்பின் ஓர் பத்திரமும் எழுதிக் கொடுத்துக கடைசியாய்ப் பணத்தைப் பெற்றுக்கொண்டு அதிக சந்தோஷத்தோடு தன் வீடிற்குப் போய், இவன் தான வட்டிக்கு வாங்கின பணம் மீண்டும் நாம அவனுக்குச் சம்பாதித்துக் கொடுக்கவேண்டும் என்று யோசியாது, புதயமெடுத்த தனமென்றெண்ணி அப்பணத்தை, உடனே தன் பெண்சாதி பிள்ளை குடும்பத்தார் என்ன கேட்டாலும் அவற்றையெல்லாம் ஒன்றும் தடைசொல்லாது வாங்கிக் கொடுப்பான்.

இன்னும் ஒரு காரியம்:—அதாவது, ஆஸ்தியநதனாயிருக்கும் ஓர் குடும்பத்திலுள்ளவர்கள் கட்டியிருப்பதுபோல் பட்டுப்புடவை, ஆபரணம் முதலியவை அணிந்து கொள்ளவிரும்புகிறது பெண்களுக்கு விருப்பயாதலால் பெண்கள் கேட்கும்போதெல்லாம் தடையில்லாமல் செய்வார்கள். இப்படிச்செய்வது மகாதப்பிதம். ஆதலால் இவற்றை எல்லாம் முற்றும் நீக்கி,

"ஆனமுதலில்அதிகம் செலவானால்
மானம அழிந்து மதிகெட்டுப் போனதிசை
எல்லார்க்குமகள்ளனாய் ஏழ்பிறப்புந்தீயனாய்
நல்லார்க்கும பொல்லனாம் நாடு"

என்றவாறு நாம் நம்முடைய வருமானம் (அல்லது) கைபிருப்புக்குத் தகுந்த வண்ணம் கொஞ்சம் செட்டாய் நடக்கப் பிரயாசப்படக்கடவோம். பெண்சாதி பிள்ளை எதாயினும் தங்கள் அந்தஸ்திற்குத் தகாத பொருளையாவது வேறு எந்தக் காரியமாயினும் செய்யவேண்டும என்று உன்னிடத்தில் கேட்கும்போது நீ "இல்லை" என்று சொல்வதை முக்கியமாய் உபயோகிக்கக் கற்றுக்கொள்.

## பின் கடன் அடைக்கும் வகை.

கடன் கொடுத்தவனுக்கு இன்ன தேதியில பணம் கொடுப்பேன் என்று சொல்லுகிறார்கள். ஆனால் அத்தேதியில் பணம கிடைக்காமல் போகும். [illegible] பணம கொடுத்தவன் கேட்கும்போது மற்றொருநாளில் கொடுப்பதாகச் சொல்லுதும், மறுபடியும் பணம் கிடையாமல் போகவும், கடைசியாய் கடன்காரன் வரும் சமயம் மறைந்துகொள்வதும் ஓயாடியாக அதைக் கேவலமும் கஷ்டமும்பட்டு கடன்காரனைக் கண்டால் [illegible]போல்

தீக்கட்புலிதொடரச்செல்லும் சிறுமான
ஆக்கைதளர அமலர்த்து—போக்கற்றுச்
சீறு விழித்தான் சிலைவேடன் அவ்வளவில்
நீராய் விழுந்தான் நிலத்து

என்றவாறு தெய்வேந்திர குலாதிபர்களாகிய நம் குலத்தோர் கடன்காரனைக்கண்டு புலியைக்கண்ட மான்போல பயந்து ஓடிக்கொண்டும் திரிவது அதிக அருவருப்பான காரியமாயிருப்பதால ஒவ்வொருவரும தாம் அதிகமாய்ச் செலவு செய்வதை ஒழித்து நமது வருமானம் எவ்வளவு என்று யோசித்து அதன் மதிப்பின் பிரகாரம்

உண்பது நாழி உடுப்பது நான்கு முழம்
எண்பது கோடி நினைந்தெண்ணுவன—
கண்புதைக்கு
மாந்தர்குடிவாழ்க்கை மண்ணின் கலம்போல
சாந்தனையும் சஞ்சலமேதான்

என்றவாறு உள்ளவைக்கொண்டு திருப்தியடைந்து கடனற்ற வாழ்வே குறைவற்ற செல்வம என்று ஒவ்வொருவரும், அதைத் தவிர்த்து விட்டுவிடக்கடவோம்.

ஆற்றங்கரையின் மரமும அரசறிய
வீற்றிருந்த வாழ்வும் விழுமன்றே-ஏற்றம்
உழுதுண்டு வாழ்வதற்கொப்பில்லை கண்டீர்
பழுதுண்டு வேறோர் பணிக்கு

என்ற முறைமையின் பிரகாரம் நமது முன்னோர்கள் செய்துவந்ததும் இப்போது நாம நடத்திவருவதுமாகிய விவசாயத் தொழிலைக் கவர்ந்து எந்தெந்த வேலையை எந்தெந்தக் காலத்தில் செய்துமுடிக்கவேண்டுமோ அந்தந்த வேலையை அவ்வப்போதே செய்து முடித்துவருவோமாகில் கடவுள் நமது உழைப்புக்கேற்றவாறு இரக்கங்காண்பிப்பார் என்று அறியக்கடவோம்.

பூசாரி தவசிதேவர் குமாரன்
பெரியமாயன், செல்லம்பட்டி.

பஞ்சாங்கம் 1926-ஸ்ரு ஜனுவரிமீ

● அமாவாசை ○ பௌர்ணமி * கிருத்திகை.

| வாரம் | தேதீ | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஞாயிறு | 31 | 3 | 10 | 17 | 24 | ... |
| திங்கள் | ... | 4 | 11 | 18 | 25 | ... |
| செவ் | ... | 5 | 12 | 19 | 26 | ... |
| புதன் | ... | 6 | 13 | 20 | 27 | ... |
| வியா | ... | 7 | ●14 | 21 | ○28 | ... |
| வெள் | 1 | 8 | 15 | 22 | 29 | ... |
| சனி | 2 | 9 | 16 | *23 | 30 | ... |

| வாரம் | குரோதந ஸ்ரு மார்கழி 18உ—தை 18உ | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஞாயிறு | 18 | 20 | 27 | 4 | 11 | ... |
| திங்கள் | ... | 21 | 28 | 5 | 12 | ... |
| செவ் | ... | 22 | 29 | 6 | 13 | ... |
| புதன் | ... | 23 | 30 | 7 | 14 | ... |
| வியா | ... | 24 | ●1 | 8 | ○15 | ... |
| வெள் | 18 | 25 | 2 | 9 | 16 | ... |
| சனி | 19 | 26 | 3 | *10 | 17 | ... |

"யாத்தாடப்பாரதேனே" என்ற மெட்டு

கருணாய் மலரும் சனகேசா
அருவாய் உலவாசா.

1 எனணில்லா வர்த்தமானம் கண்ணியமாய் துலங்கும்
மனையாலே உன்ன காரியம மாசெயதிப்பால துலங்கும்— திரு

2 கைமாறு கருதாத கார்மேகம் போன்ற தாதா
உய்யாறு யாவிடர்க்கு உவழுக்கும் கருணை காதா— திரு

3 அருமையான பொருள்கள் அன்ற கண்டேனே உன்னிலே
பெருமையான குணங்கள் பிடித்து வாழா எனணிலே— திரு

4 பிரமலையின் பிள்ளைகள் பிறந்து வளர்ந்தாற்போல
பெருமை சீர்திருத்தத்தை உரிமையாய் கொண்டு சால— திரு

5 நீடுழியாய் நிலைத்து நீணிலத்தில வேர் ஊன்ற
நின தாசருக்கடங்கி நெறியை மறவேனென்ற— திரு

6 கல்வி அறிவும் ஓங்க கள்ளத்தனங்கள் நீங்க
கலைத புதுமது உவந்தாய் நல்பொருள் தாக்க— திரு

7 மல்லிகை, முல்லை, ரோஜா, வாடா மணமருவே
வில்லி, சண்பகம், பிச்சி, ஆன மனு உருவே— திரு

8 சத்திய சீர்திருத்தனை நித்த நித்தமும் வாழி
உத்த பிரமலையார் அதன சித்தத்தால வாழி— திரு

ராஜ் வேதமணி
உதவி உபாத்தியாயர்,
கவண்டன்பட்டி.

---

## பிரமலை சீர்திருத்தனின் கையொப்பக்காரர்கள்.

தொடர்ச்சி.

1352 காமாயி சிவஞண்டி மகன் கா. சிவன்காளை தேங்கிலிபட்டி 1
1353 பெரியகருப்பத்தேவன் மகன் மலையாளத்தேவன் ,, 1
1354 மச்சித்தேவன் மகன் ஆண்டித்தேவன் ,, 1
1355 கேசத்தேவன் மகன் பழனியாண்டித்தேவன் கிண்ணிமங்கலம் 1
1356 கன்னித்தேவன் மகன் பேயாண்டித்தேவன் தேங்கிலிபட்டி 1
1357 கா. சிவஞண்டிதேவன் மகன் மாயாண்டிதேவன் கீழசெம்பட்டி 1
1358 உத்திவிருமத்தேவன் மகன் உச்சிநாகத்தேவன் புளிச்சாம்பட்டி 1
குளம் 1
1359 மாயாண்டித்தேவன் மகன் அய்யருத்தேவன் கேச்செட்டி
1360 வீரணத்தேவன் மகன் சிவஞண்டிதேவன் கழுதைப்பாரப்பட்டி 1
1361 அய்யருத்தேவன் மகன் பெரியகருப்பன் கேச்செட்டிகுளம் 1
1362 விருமாண்டிதேவன் மகன் கலுவத்தேவன் கழுதைப்பாரபட்டி 1
1363 சிவஞண்டித்தேவன் மகன் சக்கரை சிவஞண்டி ,, 1
1364 குமாரண்டித்தேவன் மகன் கிருஷ்ணத்தேவன் ,, 1
1365 குமாரண்டித்தேவன் மகன் சிவஞண்டித்தேவன் ,, 1
1366 சிவஞண்டித்தேவன் மகன் அம்மையன்சாமித்தேவன் ,, 1
1367 ஒச்சாத்தேவன் மகன் கருப்பத்தேவன் கொடிக்குளம் ,, 1
1368 மாயத்தேவன் மகன் சின்னத்தேவன் கொடிக்குளம் 1
1369 கருப்பணத்தேவன் மகன் நாகத்தேவன் கொடிக்குளம் 1
1370 கருப்பணத்தேவன் மகன் சின்னக்கருப்பத்தேவன் கொடிக்குளம் 1
1371 மாயத்தேவன் மகன் மாயத்தேவன் கொடிக்குளம் 1
1372 பெரியகருப்பத்தேவன் மகன் தவசித்தேவன் மாயன்கரும்பன்பட்டி 1
1373 கருப்பணத்தேவன் மகன் கலுவத்தேவன் விக்கிரமங்கலம் 1
1374 சிவங்காளைத்தேவன் மகன் பெரியசாமித்தேவன் வாகைக்குளம் 1
1375 சிவங்காளைத்தேவன் மகன் கருப்பத்தேவன் ,, 1
1376 சின்னக்கருப்பத்தேவன் மகன் பெரியகருப்பத்தேவன் ,, 1
1377 சின்னச்சிவஞண்டித்தேவன் மகன் சந்தனத்தேவன் ,, 1
1378 சிவங்காளைத்தேவன் மகன் பேயாண்டித்தேவன் ,, 1
1379 சந்திரசேகர முதலியார் ,, 1
1380 சந்தனத்தேவன் ,, 1
1381 காராமணி கலியாணித்தேவன் மகள் அழகம்மாள் ,, 1
1382 பெரியகருப்பத்தேவன் மகன் உலகத்தேவன் சின்னவாகைக்குளம் 1
1383 நல்லாண்டித்தேவன் மகன் ந. மாயத்தேவன் ,, 1
1384 அம்மையாண்டித்தேவன் மகன் பெரியசாமித்தேவன் பெரியவாகைக்குளம் 1
1385 கொ. பெரியகருப்பத்தேவன் மகன் ராமத்தேவன் ,, 1
1386 பூ சிவஞண்டித்தேவன் மகன் பூ. சி. சிவஞண்டித்தேவன் பெரியவாகைக்குளம் 1
1387 ராமசாமித்தேவன் மகன் சிவலிங்கத்தேவன் ,, 1
1388 உடையத்தேவன் மகன் உ. ஆண்டித்தேவன் ,, 1
1389 சிவஞண்டித்தேவன் மகன் தேவசிவஞண்டித்தேவன் சின்னவாகைக்குளம் 1
1390 சொ. பேயாண்டித்தேவன் மகன் நல்லாண்டித்தேவன் சின்னவாகைக்குளம் 1
1391 சுப்பத்தேவன் மகன் சு. சிவலிங்கத்தேவன் பெரியவாகைக்குளம் 1
1392 சிவஞண்டித்தேவன் மகன் கோ. சி. மாயாண்டித்தேவன் தேங்கிலிபட்டி 1
1393 முத்துமாயத்தேவன் மகன் மு. பெருமாத்தேவன், வெயிலைபிச்சாம்பட்டி—திண்டுக்கல் போஸ்டு. 1
1394 சின்னத்தேவன் மகன் பெரியகருப்பன், வெயிலைபிச்சாம்பட்டி—திண்டுக்கல் போஸ்டு. 1
1395 கருப்பத்தேவன மகன் மொக்கயத்தேவன் திருமங்கலபுரம்—திண்டுக்கல் போஸ்ட் 1

---

Patron.—M.R.Ry. Rao Sahib,
A. J. Vethanayaga Thevar Avl.,
Usilampatti.
Editor.—Rev. George J. Athishtam,
Usilampatti.
Manager.—Rev. R. A. Dudley,
Tirumangalam.

Subscription—Single copy 8 annas a year (excluding charges for delivery) payable in advance.

All orders to be sent to the *Manager*.

Articles for insertion should be sent, not later than 15th of each month to the *Editor*.

சம்ரக்ஷகர்.—மகா-ள-ள-ஸ்ரீ ராவ் சாஹெப் வேதநாயகத் தேவரவர்கள், உசிலம்பட்டி.

பத்திராதிபர்.—கனம் ஜார்ஜ் அதிஷ்டம் ஐயரவர்கள், உசிலம்பட்டி.
மானேஜர்.—கனம் ஆர். ஏ. டட்லி துரையவர்கள், திருமங்கலம்.

தனிப்பிரதி:—8-பை. வருஷ சந்தா 8-அணா. தபாற்கூலி பிரத்தியேகம். ஒரு வருஷ கையொப்பம் முன்னதாகவே அனுப்ப வேண்டும்.

பத்திரிகை வேண்டுவோர் மானேஜரவர்களுக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

சமாச்சாரக்குறிப்பு முதலியவை அனுப்ப விரும்புவோர் அந்த மாதம் 15-ம் தேதிக்குள் சுருக்கமாக எழுதி பத்திராதிபருக்கு அனுப்பவேண்டும்.

பசுமலை அமெரிக்கன் மிஷன் "லினுக்ஸ்" அச்சயந்திரசாலையில் பிரசுரிக்கப்பட்டது.

824

No. 5

THE REGISTRAR OF BOOKS 13 FEB 1926

மாதாந்தரப்பதிப்பு] [விலை 8 பைசு.

# The Piramalai Reformer.

## பிரமலை சீர்திருத்தன்.

"வஞ்சனையால் தேடின பொருள் குறைந்துபோம்; கைப்பாடாய்ச் சேர்க்கிறவனே விருத்தியடைவான்."

Vol. V.] பெப்ருவரிமீ, 1926. [இலக்கம் 10

### கல்வியே கற்புக்கரசி.

பார்த்தால் ஒரு சிறு வாக்கியம், சொன்னால் வாய்க்கு ஒரு சிறு வசனம்; நினைத்தால் நினைவுக்கு ஒரு பழமொழி, மதித்தால் மனதுக்கு ஒரு முதுமொழி. நாகரீகமான இக்காலத்திலும் பெற்றோர்களிலனேகர் தங்கள் பெண் குழந்தைகளைப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்புகிறதில்லை என்ற சிற்சில இடங்களிலிருக்கும் உபாத்திமார்கள் சொல்வது வ சனிக்கத் தக்கதே. கற்று வல்ல பெரியோரும் பெண்கள் கல்வி என்ற வார்த்தைதானும் காதில்பட்டால் அவர்கள் படும் பாடு கொஞ்சமல்ல. ஐயா உங்கள் மக்களைப் பள்ளிக்கனுப்புங்களென்றுசாவினால் "எண்ணறவெண்ணி எழுத்தறவாசித்தாலும் பெண் புத்தி பின் புத்தி" என்றும், இவர்கள்தானா சுண்டிச்சுண்டி சம்பளம் வாங்கப்போகிறார்களென்றும் பெரிய பிரசங்கம் செய்யத் துவங்கிவிடுவார்கள். பெரிய சம்பளம் வாங்குவார்களென்னும் நோக்கத்தோடு அல்ல, கல்வியின் மூலமாய் சகல நல்லொழுக்கங்களையும் கற்பின் மகிமையையும் அறிந்துகொள்ளவேண்டுமென்பதேயாம். அரிய பெரிய போர்வீரர்களாகிய Alexander the Great, Robert Clive, என்பவர்களின் கதைகளை வாசித்த மாணவர் பலர் அவ்வீரர்களைப்போலாகவே வேண்டுமென்ற அவாக்கொள்ளுகின்றனர். அதுபோல், கற்பில் ரத்னங்களாய் விளங்கிய சீதை, ருக்மணி, சாவித்திரி, தமயந்தி, சகுந்தலை முதலியவர்களது கதைகளை வாசித்து தாங்களும் அவர்களைப்போல் நடக்கவேண்டும் என்ற ஆவல் மேலிடும். ஒருவரைப் பார்த்து ஒருவர் செய்வது உலகவியல்பே.

தற்காலத்தில் இத்தேச ஸ்திரீகள் தாழ்மையான நிலைமையையும் மிகவும் அற்பமான விஷயங்களில் மனசுபற்றியிருப்பதையும் உத்தேசிக்கையில் மேலேசொல்லப்பட்டவர்களது சரிதைகளைக் காதால் கேட்டிருக்கமாட்டார்களென்றே சொல்லலாம். படித்தாலல்லவா அவர்களைப்போல் தாங்களும் கற்புக்கரசிகளாயிருக்க முடியும்.

இத்தேசத்தில் பத்தினியாகவும், மாதாவாகவும், ஒரு சிறிய கிராமத்துக்குச்சமானமாகிய குடும்பத்தை ஆளவேண்டியவளாயும் ஏற்படக்கூடிய ஸ்திரிக்கு, சுகாதாரவிதிகளையும், ஆகாரபதார்த்த குணங்களையும் தெரிந்துகொள்வதும், வியாதியுண்டானால் சுலபமான ஔஷதங்களைப் பிரயோகிக்கவும், ஆபத்துக்காலத்தில் அதற்கேற்ற சிகித்ஸையைச் செய்துகொள்ளவும், நாகரீகமாய்ச் சமையல் செய்யவும், திருக்கிருத்திய விசாரணைசெய்து வரவு செலவு கணக்குவைக்கவும் தெரிந்துகொள்ள வேண்டியதவசியம். அந்தந்த கிரஹத்தில் தேகசௌக்கியத்தைக் கவனித்து நடக்க வேண்டிய முறையையும், நல்ல காற்று, வெளிச்சம், சுத்தமாயிருத்தல் முதலியவைகளின் பிரயோஜனத்தையும் கற்றுக்கொள்ள வேண்டியது மிகவும் அவசியமே. வைத்தியனை அபேக்ஷிக்காமல் சாதாரண ஔஷதங்களைத் தங்கள் சிசுக்களுக்கு அவசியமானபோது உபயோகிக்கவும், சொற்ப காயங்களுக்குப் பரிகாரம் செய்யவும், கொடுங்காயம் நேர்ந்தால் வைத்தியன் வரும்வரையில் உயிர்ச்சேதமின்றி பாதுகாக்கவும் அறிந்துகொள்வதுமன்றி வியாதியஸ்தர்களை உபசரிக்கவும், வைத்தியன் சொல்லும் முறைகளைச் சரியாயனுசரித்துக் காலக்கிரமமாக ஆகாரம் ஔஷதம் முதலியவைகளைக் கொடுக்கவும் அறிந்துகொள்ளலாம். சுண்டிச்சுண்டிச் சம்பளம்வாங்காதவர் செய்யும் கிருத்தியங்களைக் கவனித்தீர்களா? அப்படிக் கவனித்தீர்களானால் இன்றே உங்கள் பெண்மக்களைப் பிரியமுடன் பள்ளிக்கனுப்புங்கள்.— G. V. செல்லத்துரை,

நார்மல் ஸ்கூல், பசுமலை.

### தேவமாரின் அறியாமை.

அதாவது இன்னாட்டின், சில குக்கிராமங்களில், யாராவது ஒருவன் திருட்டுக்குற்றம் செய்தால் அக்குற்றத்துக்குத்தக்கதாகக் கவர்ண்மெண்டார். 6 மாசமோ, அல்லது 1 வருஷமோ காவலிலிருக்கும்படி உத்தரவு செய்கிறார்கள்.

அப்படியே ஷை குற்றவாளி காவலிலிருந்து விட்டு, வீட்டுக்குவருகிறான். வந்ததின்பேரில் ஷை குற்றவாளிக்கு அவனது மாமன், மைத்துனன் இன்னும் அவனது இனஜனபந்துக்கள் எல்லாரும் ஆடு, கோழி, எண்ணை இத்துடன் கிராமங்களிலிருந்து வந்து ஷை நாம் முன்சொன்ன குற்றவாளிக்கு சாதம் சமைத்து ருசியுடன் போடுகிறார்கள்.

இப்படி 2, 3 மாதம் சாப்பிட்டபின் பழைய பலமும், வீரமும் தைரியமும் உண்டாகி, மூர்க்கமும் உண்டாகி, முன் செய்த தொழிலை விட்டுவிடாது மறுபடியும் செய்ய எத்தனிக்கிறான். இவனது கெட்டதொழிலுக்கு இவனது ஜாதியாரும் பெற்றோருமே காரணம் எனத்தெரியப்படுகிறது.

இப்படிப்பட்ட விருந்துதொழிலை இனிமேல் ஷை ஜாதியார் செய்யாதபடி, எல்லாக் கிராம பஞ்சாயத்தார்களும், கவனித்துச்சீர்திருத்திக்கொள்ளவும். மேலும் நமது கவர்ண்மெண்டார் நாம் நம்மைச் சீர்திருத்திக்கொள்ளவேண்டும் என்று பள்ளிக்கூடங்களும், கிராம பஞ்சாயத்துக்களும் ஏற்படுத்தி இருக்கும்போது, இதை விட்டுவிடுவது இலேசான காரியமல்லவா? இதை அடியோடு ஒழிக்க கடவுள் துணைபுரிவாராக.

மைக்கேல் பொன்னையா தேவர்.
பட்டிவீரம்பட்டி.

## கல்வி.

இவ்வுலகத்தின் கண் வசிக்கும் மானிட ஜாதிகளுக்கு கல்வியே இன்றியமையாதது. என்பது யாவராலும் ஒப்புக்கொள்ளக்கூடிய விஷயமே.

கல்வியை எப்போது கற்கவேண்டுமென்பதை யோசித்தால், சிறுவயதில்தான் கற்கவேண்டும். பெரியோரின் வார்த்தைகளையும் கவனிக்கப்புகின் அவர்களும் "இளமையிற்கல்" என்று இயம்பியுளர். வேறனேரால் "இளமையிற் கல்வி சிலையிலெழுத்து" என்றும் கூறியிருக்கிறபடியால இளமையிலேயே கற்கவேண்டும். அக்காலமே சிறுவர்கள் உலகக்கவலை அதிகமின்றி தங்கள் முழு எண்ணத்தையும் கல்வியிற் செலுத்தும் காலம்.

கல்வியை இளமையிற் கற்பதோடுகூட அதனை எம்மாதிரி கற்றால் நலம் என்று அறிதல் உத்தமம். கல்வியை ஒரு நல்ல ஆசிரியரையடைந்து கற்கவேண்டும். தானே படித்தால அது அதிகப் பயன்படாது. "தொட்டுகாட்டாத வித்தை சுட்டுப்போட்டாலும் வராது" என்று ஒரு பழமொழியுமிருக்கிறபடி ஆசிரியனாற் கற்பிக்கப்படாவிட்டால், மாணாக்கனுக்கு சந்தேகம் நேர்ந்தவிடத்தில், அச்சந்தேகத்தை மாறாக நினைத்து அதனால் அதிக தீமைசெய்யப்புகுவான். :கிரமமாய் அவருக்கு கீழ்ப்படிந்து ஒழுகுதலே உசிதம்.

எதைக் கற்றாலும் அறக்கற்கவேண்டும். கற்றதை ஞாபகத்தில் வைக்கப்பிரயாசப்படவேண்டும். ஆனால் மறந்துவிட்டு இன்னும் படிக்க அவாகொண்டால் அது பிரயோஜனப்படாது. தான் சிரமப்பட்டுப் படித்த காரியத்தைப் பாதுகாவாமல மறந்துவிட்டு இன்னும் கற்க தொடங்குதல் எப்படிப்போலென்றால், கையிலிருந்த பொருளை எறிந்துவிட்டு அரிப்பரித்து பொருள் சேர்ப்பதுபோலாகும்.

கற்றும் பிறருக்குக் கற்பிக்கும் வல்லமை இலலாவிட்டால அது பயனில்லை. அது நாற்றமில்லாத பொன்மலர்போலாம். ஆனால் கற்பிக்கும வல்லமை உண்டானால பொன்மலர் வாசனை பெற்றதுபோலாகும்.

கற்றவன் அடக்கமுள்ளவனாயிருத்தல் தகுதி. தன்னை எண்ணவேண்டியதற்கு மிஞ்சி எண்ணுதல் சுத்தத் தப்பு. தன்னை புகழாதிருத்தலே தனக்கு அதிகக் கீர்த்தியை உண்டுபண்ணும். கல்விக்கடலின் ஆழத்தை அறிந்தவர் ஒருவருமில்லை. ஆகையால் ஒருவனும் "முற்றுமுணர்ந்தவனில்லை." ஆதலால் அதிக "கற்றனம் என்று களியற்க." "கற்றது கைமண்ணளவு கல்லாதது உலகளவு," என்று ஔவையார் கூறியுளர். ஆதலால அடக்கம் அவசியம்.

கல்வி கற்பதனாலாய பயன் எவையென்று சற்று பார்க்கப்புகின் அவை பல உள. அவைகளில் ஒன்று அழகு. கல்வியே மானிடருக்கு அழகு. ஒருவனின் சரீரத்தின் அழகை கண்ணாடிக்கண்டு களிப்பதைப்பார்க்கிலும் ஒரு கல்விமானின் கல்வி விஷயங்களை நன்றாகச் சுவைபட சொல்வதை பிறர் கேட்பரேயானால் கேட்கிறயாவரும் நினைத்து நினைத்து மகிழ இவன கற்ற கல்வியே சிறப்புச் செய்யும். அதனால் "கல்வி நலனே நலன்," என்றார்.

"குஞ்சியழகுங் கொடுந்தானைக் கோட்டழகு
மஞ்சளழகு மழகல்ல—நெஞ்சத்து
நலம் யாமென்னு நடுவு நிலைமையாற்
கல்வியழகே அழகு."

"உயிர்வனப்புங் கண்வருமார்பின் வனைப்பும்
உகிர்வனப்புங் காதின் வனப்பும்—செயித்திர்கத
பல்லின் வனப்பும் வனப்பல்ல
நூற்கடக்க சொலலின் வனப்பே வனப்பு"

என்பதால கல்வியழகே சிறந்தது எனக்காண்க.

கல்வி மனிதரை மேன்மைப்படுத்தும். ஒரு செல்வன தன் ஊரில் மேன்மைபபடுவான். ஆனல் "கற்றோருக்கு சென்றவிடமெல்லாம் சிறப்பு." "எக்குடிப் பிறப்பினும் யாவரேயாயினும், அக்குடியிற் கற்றோரை மேல வருகென்ப."

---

## கீழ்ப்படிதல்.

கீழ்ப்படிதல் என்பது வணங்கி நடத்தல் என்றர்த்தமாம். மானிடராய்ப்பிறந்த ஒவ்வொருவரும் அனுசரிக்கவேண்டிய குணங்களில் இன்றியமையாததொன்று. அதிலும் சிறுவர்கள் மிகவும் அவசியமாய்க் கொள்ளத்தக்கது. இக்குணமில்லாவிடத்து உலக வாழ்விற்குரிய சாதகங்கள் பெறுவது கஷ்டம். எவன் கர்வத்தையடைகிறனே அவனிடத்தில் இந்தக்கீழ்ப்படிதல் என்னும் உத்தமகுணம் பிரகாசியாது. கர்வமானது மானபங்கத்தையுண்டாக்கும். கீழ்ப்படிதல் உலகத்தில் பெரும் கீர்த்தியைத்தரும் எவனுக்கு கீழ்ப்படியுங்குணமில்லையோ அவன் நாசமடைவான். கீழ்ப்படிதல் என்னும் குணமுள்ளவனே சுகம்பெறுவான்.

நம்மைச் சிருஷ்டித்த தேவன், பத்துமாதம் சுமந்திருந்து கஷ்டங்களைச்சகித்திருந்து பெற்று வளர்ந்த தாய், ஆதரித்த தந்தை, கல்வி போதித்த ஆசான், உலகம்புரக்கும் மன்னன் ஆகிய இவர்களுக்குக்கீழ்ப்படிந்து நடக்கவேண்டியது அவசியமாகும்.

கடவுளின் திருவருளாலே நாம் சுகம் பெறுகிறோம். அவனன்றி ஓரணுவுமசையாது. ஆகையால் அந்தப் புவனகர்த்தாவுக்குக் கீழ்ப்படிந்து நடத்தல் மிகவும் அவசியம்.

2\. பெற்றோர்:—இவர்களுக்கு ஒவ்வொருவரும் கீழ்ப்படிவதவசியம். "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்று நமது ஔவைப்பிராட்டியார் திருவாய் மலர்ந்தருளியிருக்கின்றனர். தாயானவள் உதரத்திலிருந்து வந்தநாள் முதல் சிறிதும் வெறுப்பின்றிக்கருணையோடு நம்மைப் பாதுகாத்துவருகிறாள். பிதாவும் நம் ஜனன காலமுதல் தன் ஆருயிராகப்பாவித்து வளர்த்துவந்து கல்வி பயிலுமபடி செய்விக்கிறார். பிதாவுக்கு நம் மீது சிறிதும் வெறுப்புண்டாவதில்லை. இருவரிடத்திலும் கருணையே மிகுந்திருக்கிறது. ஆகையால் இவர்களுக்குக் கீழ்ப்படிதல் இரண்டாவது கடமையாகும்.

3\. கல்வியறிவூட்டும் ஆசான்:—"கண்ணுடையரென்பர் கற்றோர்" என்பதற்கேற்ப நமக்குக் கல்வியறிவுண்டாக்குவதால் உலகத்தில் நாம் நல்வழிப்பற்றிச்செல்லக் கல்வியாகிய கண்ணைக் கொடுத்தவராகிறார். அக்கல்வியே நமக்கு நன்மை தீமை விளக்குவது. நம்மை அஞ்ஞானமாகிய அந்தகாரத்தினின்றும் ஈடேற்றுவது. தந்தை நமக்குத் தேடிவைக்கும் செல்வத்தைக்காட்டிலும் கல்விப்பொருளே சிலாக்கியமானது. அது நம்மைவிட்டு நீங்காது. பிறருக்குக் கொடுக்குந்தோறும் வளர்ந்துகொண்டேயிருக்கும். ஆகையால் இத்தகைய கல்வி என்னும் அரும்பெருஞ்செல்வத்தை நமக்கூட்டும் ஆசானுக்குக் கீழ்ப்படியவேண்டுவதவசியமென்பதைச் சொல்லவும் வேண்டுமோ?

4\. அரசன்:—அரசனுக்குக் கீழ்ப்படியவேண்டியதவசியம், அவர் நம்மைப்பரிபாலிப்பவராகையாலும், அரசனில்லாவிடில் குடிகளின் நிலைமை சீர்குலையுமாதலாலும், அவரிடம் நாம் அனந்தனந்த நன்மைகளைப் பெற்றுவருவதாலும் அவருக்குக் கீழ்ப்படிதல் அவசியம்.

இன்னும் பெரியோர், தலைமையன், கல்விமான் இவர்களுக்கும் கீழ்ப்படிந்து நடக்கவேண்டும்.

தம்பி, அகங்கார குணத்தையோ, கீழ்ப்படிதல் என்னும் உத்தம குணத்தையோ எதை விரும்புகிறாய்? கீழ்ப்படி அப்பொழுது கிருபை பெறுவாய்.

G. V. செல்லத்துரை,
நார்மல் ஸ்கூல், பசுமலை.

---

## கள்ளர் ஐக்கியநாணயசங்கங்கள்
### ஓர் சம்பாஷணை

வலப்பாரப்பட்டி கிராமத்தில் ஒரு புலத்தில் இரண்டு கொழுத்த எருதுகளும் பயிரிடும் கள்ளர் சின்னத்தேவரும்:—

மத்தளம்பட்டி மாயாண்டித்தேவர் வருகிறார்.

மாயாண்டித்தேவர். என்ன அண்ணே சின்னத்தேவரே, உன் பயிர்கள் மிகவும் நன்றாயிருக்கின்றனவே. மாடுகள் கொழுத்து வளர்ந்திருக்கின்றனவே, அதன் காரணம் என்ன?

சின்னத்தேவர். நமது மகா கனம் ஸ்பெஷல் சூபிரண்டு துரையவர்களின் உத்தரவின்பேரில் நம்போன்ற கள்ளர்களுக்கு விவசாயத்தை அதிகப்படுத்தும்பொருட்டு பண சம்பந்தமான பல உதவிகள் செய்யும்பொருட்டு ஒரு ஐக்கிய நாணய சங்கம் எங்கள் கிராமத்தில் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதில் நான் ஒரு மெம்பர். அதன் அனுகூலத்தினால்தான்.

மாயாண்டித்தேவர். அண்ணே, ஐக்கிய நாணய சங்கமென்பது என்ன?



சின்னத்தேவர். நம்போன்ற பிரமலை தேவமார்களுக்கு விவசாயத்தை விருத்திசெய்து தொழில் முயற்சி செய்யும்பொருட்டு நமக்கு வேண்டும்போது சாசமான வட்டிக்கு கடன்கள் கொடுத்து உதவிபுரியவும், அந்தக் கடன்களை மகசூல் காலத்தில் நம் வரும்படியிலிருந்து திரும்பி வாங்கிக்கொள்ள ஏற்பாடு செய்திருப்பதுதான் ஐக்கிய நாணய சங்கம் என்று பெயர்.

மாயாண்டி. அப்போர்க்கொத்த கடன்கள் என்ன ஆதாவின்பேரில் கொடுக்கிறார்கள்?

சின்னத்தேவன். நமது நாணயத்தையும் சொத்துக்களையும் கவனித்து மகா சூபிரண்டு துரையவர்களே நேரில் விசாரித்து நபர் ஜாமினிலே கடன்கள் கொடுக்கிறார்கள்.

மாயாண்டி. அப்படியானல் பத்திரம் ஸ்டாம்பு முதலிய செலவுகள் அதிகமாகப் போய்விடுமே.

சின்னத்தேவன். தம்பி, அல்ல, அல்ல. நாம் ஐக்கிய நாணய சங்கத்துக்கு எழுதிக்கொடுக்கும் பத்திரங்களுக்கெல்லாம் பத்திரத்துக்காவது ரிஜிஸ்டரேஷன் செலவாவது கிடையாது. இவ்வித செலவுகள் மாட்சிமை தங்கிய கவர்ன்மெண்டாரால் வஜா செய்யப்பட்டிருக்கின்றன.

மாயாண்டி. ஆகா, அப்படியா? நம் எதிரியோடு ராமசாமி கவண்டர் மாதம் ஒன்றுக்கு ரூ. 100-க்கு 2 ரூபாய் வட்டிக்கு கடன் கொடுக்கிறரே. இந்தக் கடனகளுக்கு வட்டி என்ன?

சின்னத்தேவன். ஐக்கிய நாணய சங்கத்திலிருந்து கொடுக்கும் கடன்களுக்கு மாதம் ஒன்றுக்கு 100 ரூபாய்க்கு வட்டி ரூ. 0-12-6 தான்.

மாயாண்டி. ஆகா, அப்படியா? என்ன ஆச்சரியம். இவ்வளவு சலிசான வட்டிக்கு பணம் கிடைக்குமானல் நமது விவசாயத்துக்கு வேண்டிய எரு விதை முதலியவைகள் சலிசாக வாங்கி உபயோகப்படுத்தி நம் மகசூலிலிருந்து நல்ல லாபம் அடையலாமே, அல்லாது ஒவ்வொரு வருஷமும் உழைத்து உழைத்து ராமசாமிக்கவண்டர் வட்டி கட்டுவதிலேயே என் வரும்படியெல்லாம் போய்விடுகின்றனவே. போன வருஷத்தில்தான் அதிக வட்டி கட்டமுடியாமல் 2 குழி நிலத்தை அவருக்கே ஒத்திக்கு விட்டுவிட்டேன்.

சின்னத்தேவன். நண்பனே கேள். இது மாத்திரம் அல்ல. ஐக்கிய நாணய சங்கத்தால் நமக்கு ஏராளமான அனுகூலங்கள் இருக்கின்றன.

1\. நமது விவசாயமட்டுமல்ல, மற்ற உபயோகமான காரியங்களுக்கெல்லாம் வேண்டும்போது சொற்ப வட்டிக்குக் கடன்கள் கொடுக்கிறார்கள்.

2\. உயர்தரமான கலப்பைகள் வாங்கி வைத்துக்கொண்டு வேண்டும்போது வாடகைக்கு கொடுக்கிறார்கள்.

3\. விவசாயத்துக்கு வேண்டிய மண் உரம் கொளிஞ்சி முதலிய எருக்களை மொத்தமாகவும் சலிசாகவும் அவசியமானல் தருவித்துக்கொடுப்பார்கள்.

4 நமக்கு கொடுக்கும் கடன்களுக்கெல்லாம் பத்திரத்துக்காவது பதிவுக்காவது செலவில்லை.

5\. இதர சவுக்கார்களைப்போல் கடன்களுக்கு வட்டிக்கு வட்டிகளை சுமத்தி அவைகளினல் நேரிடும் கோர்டு செலவுகளினலும் குடிகளின் ஜீவனத்தையே கெடுத்து வறுமையையே மென்மேலும் அதிகப்படுத்துகின்ற கொடுமையை நீக்க ஏற்படுத்தப்பட்ட ஒரு கல்பக விருக்ஷமென்றே சொல்லலாம்.

6\. இதர சவுக்கார்கள் மாதிரி அல்லாது நாம் வாங்கின கடன்களையும் சௌகரியமாக சிலாசிலாவாக திரும்பி வாங்கிக்கொண்டு அதற்கும் வட்டி தள்ளுபடி செய்கிறார்கள்.

7\. நமது மகசூல்களை மொத்தமாக சேர்த்து நல்ல லாபத்துக்கு விற்றுக் கொடுக்க வேண்டிய ஏற்பாடுகள் செய்கிறார்கள்.

8\. நாம் மறைத்துவைக்கும் பணங்களையெல்லாம் ஒரு அணு முதற்கொண்டு வாங்கிக்கொண்டு டிபாசிட்டாக வைத்து வட்டி கொடுக்கிறார்கள்.

9\. ஆகவே நம் லாப சகாயத்தை அதிகப்படுத்தி நம் முன்னேற்றத்திற்கு வேண்டிய சௌகரியங்கள் செய்யப்படுகின்றன.

10\. கிராமத்தில் அடிக்கடி கூட்டம்போட்டு பேசுவதால் ஒற்றுமையும் சுய உதவியும் அதிகப்படுகிறது—பஞ்சாயத்தும் விருத்தியடைகிறது.

மாயாண்டி—ஆகா அப்படியா, இம்மாதிரி ஐக்கிய நாணய சங்கம் வேண்டுமானல் என்ன செய்யவேண்டும்?

சின்னத்தேவர்—நமது கனம் மகா கள்ளர் ஸ்பெஷல் சூபிரண்டு துரையவர்களுக்கு மனுசெய்துகொண்டால் அவர் இன்ஸ்பெக்டர் மூலம் விசாரித்து ஒரு சங்கம் ஏற்படுத்துவார்.

(இன்னும் வரும்.)

### கள்ளர் பஞ்சாய மெம்பர்களுக்கும் கிராமத்தார்களுக்கும் ஏற்பட்ட சம்பாஷணை :—

பஞ்சாயத்தார் சொல்வது—பஞ்சாயத்தில் கட்டுப்பட்ட நபர்களாகிய நீங்கள் எல்லாம் கண்டிப்பாய் இராக்காலங்களில் எங்களிடம் ஆஜர் கொடுக்கவேண்டும். இல்லாவிட்டால் மகாா—ா—ஸ்ரீ ஸ்பெஷல் துரைக்கு எழுதி பதிக்கைக்கு ஏற்படுத்துவோம். அது நிச்சயம்.

கிராமத்தார்களில் ஒருவனுகிய மாயாண்டி சொல்வது—ஆ, ஆ, நீ செய்தது கொஞ்சமா? போடாபோ பயித்தியம்பிடித்தவனே. அப்படித்தான் செய்தால் தூக்கிப்போடமாட்டார்களே. சொன்னல் 3 மாதம் சொல்வார்கள். அதைவிட என்ன செய்வான். அடே கருப்பத்தேவா அக்காப்பட்டிக்கு 4 நாளைக்கு விருந்தாடிப்போகிறோம் என்று சொல்லி சீட்டு வாங்கிக்கொண்டுவா. நாம் போய், ஒரு இடத்தில் 2 காளை இருக்கிறது, அதைப்பிடித்துக்கொண்டு வருவோம், ஒரு 100 வாங்கலாம். அது நிச்சயம்.

கருப்பத்தேவன் சொல்வது—அது சரி, நாலு நாள் மூன்று நாள் திரிந்து அதன் பிறகு கையெழுத்து எங்கே வாங்குவது?

மாயாண்டி—அக்காப்பட்டி பஞ்சாயத்து ஆண்டித்தேவன் என்னுடைய நல்லப்பனல்லவா? நாம் எங்கும்கூட 10 நாளைக்கு திரிந்துவிட்டு அதன் பிறகு போனாலும் கையெழுத்து வாங்கிக்கொள்ளலாம். இது தானு பெரிது. சீட்டுவாங்கு போவோம்.

கருப்பத்தேவன்—ஐயா பஞ்சாயத்தாரே நானும் கிழக்கு வீட்டு மாயாண்டியும் அக்காப்பட்டிக்கு விருந்தாடிப்போகின்றோம். 4 நாள் லீவுடன் சீட்டுக்கொடு.

ப. விருமாண்டி—அடே பஞ்சாயத்து ராமசாமி, சீட்டுக் கேட்கிறார்களே கொடுக்கலாமா?

ப. ராமசாமி—சீட்டுக் கேட்பது யார்?

ப. விருமாண்டி—உன் மைத்துனன் கருப்பத்தேவன் தான்.

ப. ராமசாமி—கொடு, கொடு, சீட்டுக் கேட்டால் கொடுக்கத்தானே வேணும்.

ப. விருமாண்டி—இவர்கள் இரண்டுபேரும் போக்கிரிப்பயல்கள். இவர்களுக்கு இந்த இருட்டுக்காலத்தில் சீட்டுக்கொடுக்கக் கூடாது.

ப. ராமசாமி—ஓ, ஓ, பின்னே யாருக்குக் கொடுக்கலாம்? உன்னுடைய நல்லத்தா பெரியத்தா மக்களுக்குக்கொடுக்கலாமா? அடே கருப்பத்தேவா சீட்டைக்கொண்டு போய் உபாத்தியாயரிடம் எழுதிக்கொண்டுவா. நான் கையெழுத்துப்போடுகிறேன். இது நிற்க.

இருளாண்டித்தேவன் என்ற ஒருவன் வந்து சொல்வது—ஐயா பஞ்சாயத்து ராமசாமி, நான் வாங்கிக்கொண்டுபோன சீட்டுக்கு 5 நாள் கையெழுத்து இல்லையே, அதற்கு எப்படி?

ப. ராமசாமி—9—10—25உ வரை கையெழுத்து இருக்கிறது. இன்றைக்குத் தேதி 13—10—25உ யாகிறது. அதற்கென்ன? 10—10—25உ வந்துவிட்டதாக வரவுவைத்து ஓட்டிவிட்டால் சரி. இதுக்கென்ன? ஆனால் நேற்று இரவு ஸ்பெஷல் இன்ஸ்பெக்டர் வந்து செக்பண்ணினார். அப்படிச் செய்தால் நீ அன்றைக்கு இருந்திருக்கவேண்டும் அல்லவா? இப்படிச் செய்வது சரியல்ல.

இருளாண்டி—இதென்ன பெரிய பிரமாதமா? நான் போய் கோவிலன்பட்டி பஞ்சாயத்து வீரத்தேவன் எனக்கு வேண்டியவன் அவனிடம் போய் கையெழுத்து வாங்கிக் கொண்டுவருகிறேன்.

ப. ராமசாமி—அது சரி, நீ சீட்டு வாங்கின ஊர் வேறே, இப்பொழுது வேறு ஒரு ஊரில் சில தேதிக்கு கையெழுத்து வாங்குவது சரியல்ல. இருந்தாலும் இருக்கட்டும், அதைப்பற்றி குற்றமில்லை. எத்தனையோ சீட்டு அப்படி கையெழுத்து வாங்கிக்கொண்டுவந்து ஒட்டியிருக்கிறது. எத்தனையோ அதிகாரிகள் வந்து அது குற்றம் என்று சொல்லவில்லை. அதுதான் சரி, அப்படியே செய்.

இருளாண்டி—நான் போய் வருகிறேன். ஐயா வீரத்தேவா, இந்த மூன்று நாளைக்கும் இங்கு இருந்ததாக கையெழுத்துப்போடு.

கோவிலன்பட்டி ப. வீரத்தேவன்—அது சரி, போட்டாலென்ன; அதைப்பற்றி ஒன்றுமில்லை. இந்த 3 நாளைக்குள்பட உத்தியோகஸ்தர்கள் யாராவது உன்னை செக் பண்ணினார்களா?

இருளாண்டி—அது ஒருவரும் செக்பண்ணவில்லை. இங்கும் இந்த மூன்று நாளைக்குள்பட ஒருவரும் வரவில்லையே?

ப. வீரத்தேவன்—வரவில்லை.

இருளாண்டி—பின்னே என்ன, கையெழுத்துப்போடு. அதோடு தற்குறி மொட்டையப்பன் கையெழுத்தையும் போடு.

ப. வீரத்தேவன்—சரி அப்படியே போட்டுத்தருகிறேன் கொண்டுபோ.

இருளாண்டி—அதுதான் சரி.

ப. வீரத்தேவன்—இந்தா கையெழுத்துப் போட்டாச்சுது, கொண்டுபோ.

இருளாண்டி—பின்னே இரப்பா நான் போய்வருகிறேன். ஆனால் ஒரு காரியம் இந்த சீட்டு ஏற்பட்டதிலிருந்து கள்ளர்களுக்கு பயமில்லாமல் போய்விட்டது. தந்திரமாய் திருடினால் எப்பொழுதும் ஆபத்து நேரிடாது. போலீஸ் ஸ்டேஷனில் போய் கையெழுத்து வாங்காமல் வேறு எங்கேயும் கையெழுத்து வாங்கக்கூடாதென்று திட்டம் செய்திருந்தால் நமது பிழைப்பு அந்தரம்.

ப. வீரத்தேவன்—அதுவும் உண்மைதான். அதுவுமன்னியில் கி. மு. இடம் கையெழுத்து வாங்கச்சொன்னாலும் கஷ்டம் தான்.

இருளாண்டி—இது என்ன கஷ்டம், நான் இந்த இரண்டு மாதத்திற்குமுன் மேற்கே பொள்ளாச்சிப்பக்கம்போய் 1 மாதம்வரை திரிந்துவிட்டு, பின்னால் வந்து, சின்னாக்கவுண்டன்பட்டி கி. மு. இடம் கையெழுத்து போடுங்கள் என்று சொன்னேன். அவரும் கொஞ்சம் யோசனை பண்ணினார். பிறகு நான் போக்கிரி என்பது அவருக்குத் தெரியும். நமது வண்டியாட்டைப் பிடித்தாலும் பிடிப்பான் என்று யோசனைசெய்துகொண்டு உடனே கையெழுத்துப்போட்டார். அப்படி எத்தனையோ பேர் போடுகிறார்கள். அது ஒரு பெரிய கஷ்டம் அல்ல. போலீஸ் ஸ்டேஷனில் கையெழுத்துப்போடும்படி வைத்தாலதான பெருங்கஷ்டம். ஆனால் கடவுள் அப்படி வைக்கவில்லை. பின்னே இரு, நான போய்வருகிறேன்.

V. Chinnachamy Thevan,
Kallar school teacher.
Othayur.

---

டெப்புட்டேஷன் துரைமார் கவண்டன்பட்டி சந்திப்பின் குதூலகம்:—அளவிடாச் செல்வத்தாலும், பற்பல தேசங்களோடு செய்யும் புகழ் பெறும் வியாபாரத்தாலும், நாகரீகத்திலும் நற்குணங்களிலும் பிறர் நன்மையை நாடித்தன் ஜீவியத்தை நடத்திவரா நின்ற அமெரிக்கா தேசமானது தேவாவியினால் அனல் மூட்டப்பட்டு இந்தியாவையும் அதன் ஜாதிக்காரரையும் கருணைக்கடலாகிய பிதாவின் பாதத்தண்டை சேர்க்க பணத்தினாலும் ஜெபத்தினாலும், பொருளுதவியினாலும் அன்பாய் ஆதரித்துவருகிற சீமை தாய்ச்சபைதான் இந்தியாவில் செய்யும் வேலையைப்பார்த்து அறிந்துவர சில ஸ்தானாபதிகளை இந்தியாவிற்கு அனுப்பினர். அவர்கள் யாரெனில்: Dr. பாட்டர் ஹார்மன் பண்டிதர், Dr. & Mrs ஸ்ட்ருங் (Strong), Miss. வெல்சர், Mrs. டிக்கட்டர் என்பவர்களே. அவர்கள் இந்தியாவில் அநேக இடங்களைச் சந்தித்து வந்தனர். அவைகளில் சிறியதும் நாட்டுப்புறமானதும் நமது கவண்டன்பட்டி ஒன்றே.

1926ஆ ஜனுவரிமீ 23உ சனிக்கிழமை அங்கு வருவார்களென்று நோட்டீஸ்மூலமாய் தெரியப்படுத்தினபோது கம்பவுண்டு சுத்தம் செய்து கனம் ஜார்ஜ் அதிஷ்டம் போதகர் அவர்களின் வீட்டின் மேல்மெத்தையில் இரண்டு அறைகள் தென்னங்கீற்றினால் வேய்ந்து ஜன்னல்கள் அமைத்து கொடைக்கானல் போலிருந்தது என்று அதிக குதூகலத்துடன் சொல்லத்தக்கதாக ஒரு கொட்டகையும் அதனோடு சேர்த்து ஒரு பெரிய பந்தலும் அமைக்கப்பெற்று, நாணல், சம்பை இவை போன்ற இன்னும் பற்பலவிதமான பச்சை இலைகளினாலும், தோரணங்களினாலும், பூமாலைகளினாலும் மிகவும் பிரமிக்கத்தக்கதாக விமரிசையாய் அலங்கரித்து அமைக்கப்பட்டு பந்தலின்கீழ் மணல்போட்டு கிரப்பப்பட்டு ஜில் என்ற குளர்ச்சி தரத்தக்கதாகத் தண்ணீர் சலார் சலார் என்று தெளிக்கப்பெற்று எங்கு பார்த்தாலும் கண்ணுக்குக் குளிர்ச்சியாய் இருக்கும்படி செய்திருந்தது. வரும் உத்தியோகஸ்தர்களும் பெரிய அந்தஸ்துக்குரியவர்களும் அமரும்படியாக நாற்காலிகளும் பெஞ்சுகளும போடப்பட்டிருந்தது. 23உ சனிக்கிழமை காலை 8மணிக்கு உசிலம்பட்டி பாஸ்டரேட்டில் வேலைசெய்கிற சகல கிறிஸ்தவ உபாத்திமார்களும், உபதேசிமார்களும், சபையாரும் இன்னும் பற்பல தொழில் செய்கிற மற்ற கிறிஸ்தவர்களும், பள்ளிமாணவர்களும் இன்னும் புறமத சிநேகிதரும் டெப்புட்டேஷன் துரைமார் வரவை எதிர்பார்த்திருந்தனர். பின்பு உசிலம்பட்டியில் டெப்புடேஷன் துரைமாருக்கு மாலைகள்சூடி பாட்டுகளுடனும் மேளவாத்தியங்களுடனும் அன்பாய் வரவேற்றனர். இது கவண்டன்பட்டிக்கு அறிவிக்கப்பட்டவுடன் அங்குகூடிவந்திருந்த சகலரும் துரைமாருக்கு மாலைகள் அணிந்து உபாத்திமார்களும் இன்னும் மற்றவர்களும் சூழ்ந்துவர கம்பவுண்டுக்கு கொஞ்சதூரத்தில் போய் அன்பாய் வரவேற்றி பள்ளிமாணவர் கோலாட்டங்களுடனும் பஜனைக் கச்சேரிகளும் எதிர்கொண்டு அழைத்தனர். அப்பொழுது அங்கு வீற்றிருந்த சகலருக்கும் சூரியனைக்கண்ட பனிபோலும், தாயைக்கண்ட சேய் போலும், மழையை நோக்கும் பயிர்போலும் இருந்தவர்களுக்கு மேலசம்பீங்கி சந்தோஷத்தால் நிறைந்து அன்பார்ந்த வர்தனம்செய்ய அவர்களும் மிக்க அகமகிழ்ச்சிகொண்டு பிரமித்ததற்கு இங்கு இருந்தவர்கள் சாட்சி.

சற்றுநேரத்தில் அவர்கள் தங்களுக்கு கொடைக்கானலைப் பார்க்கிலும் மனரம்மியமாக இடவசதிகள் செய்திருந்த மேல்வீட்டில் சற்று இளைப்பாறினார்கள். பிறகு சுமார் 1½ மணிக்கு எல்லோரும் பந்தலில் அமர டெப்புட்டேஷன் துரைமாரும், கனம் டட்லி துரை அவர்களும் கனம் டாக்டர் ஜோன்ஸ் துரையவர்களும் கனம் உல்ஸ்டெட் துரை அவர்களும், ஓத்தூர் மிஷன் குரு கனம் ஹிம்மல்ஸ்ட்ருண்ட் துரையவர்களும், கனம் ராவ் சாகிப் வேதநாயகத்தேவர் அவர்களும், ஏனைய உத்தியோகஸ்தர்களும் வீற்றிருந்தனர். சுமார் 1½ மணிக்கு உசிலம்பட்டி பாஸ்டரேட் பக்திமுயற்சி சங்க மாணவர் 'இந்திரகுல தேவமாரின் முன்னேற்றம்' என்பதை பயாஸ்கோப் அசையும் காட்சியாக அதிவிமரிசையாய் நடித்துக்காட்டினர். இதைக் கண்ணுற்ற சகலரும் சித்திரப்புதுமையை ஒத்திருந்தனர்.

முடிவில் கனம் ஹார்மன் பண்டிதரும், மிஸ். வெல்சர் அம்மாளும், கனம் டாக்டர் ஜோன்ஸ் பண்டிதரும் சிற்சில காரியங்களைக் குறித்தும், இந்தியாவிற்கு வந்து அடைந்த மகிமையையும்பற்றி அதிவிமரிசையாய் பேசினார்கள். பின்பு மாணவர்களும் பெண்பிள்ளைகளும் டெப்புட்டேஷன் துரைமார்கள் மேல் பாடல்களுடன் 'கம்' என்ற வாசனையுடன்கூடிய 'ஜிம்' என்ற மலர்களுடன் மலர் தெளிக்க அவர்கள் அடைந்த சந்தோஷத்தை என்னவென்று சொல்வது. ஹா! ஹா! கடைசியாக எல்லோராலும் வாழி பாடல் பாடப்பட்டு கூட்டம் முடிவுபெற்றது. பக்திமுயற்சிமாணவர் நடத்திய பயாஸ்கோப்பானது யாவராலும் வியந்து மெச்சிப்புகழ்ந்து பேசப்பட்டதை அறியும்போது அதை நடத்திய தலைவரின் அறிவும் முயற்சியும் எவ்வளவு விசேஷமுள்ளது என்று உள்ளங்கை நெல்லிக்கனிபோல் எளிதில் உணரக்கூடும். அவர்களுக்கென்று அமைக்கப்பட்ட பாட்டும் தேவையைத் தெரிவிக்கும் விஷயக்கருத்துடன் அடங்கிய பயாஸ்கோப் விளையாட்டையும் நினைக்கையில் ஆஹா! என்ன அறிவுடன் செய்திருக்கிறார்களென்பது தெரியவருகிறது. கடைசியாக அவர்கள் வந்தனோபசாரம் சொல்லி மோட்டாரில் ஏற எல்லோருங் கரகோஷம்செய்ய மோட்டார் புறப்பட்டது. விண்ணுலகம்போன எலியாவைப் பார்த்துக் கொண்டிருந்த எலிசாவைப்போல் எங்கள் கண்கள் அவர்கள் பார்வைக்கு மறையும்வரை நிமிட்டா நின்றது என்பது ஒரு பெரும் விந்தையே.

ராஜ்வேதமணி உபாத்தியாயர்,
கவண்டன்பட்டி.

---



## வீண்புகழ்ச்சி கூடாது.

ஒரு அரசனுக்கும் அவன் பிரதானிகளாகிய ராஜு சுந்தரம் என்பவர்களுக்கும் நடந்த சம்பாஷணை:—

**அரசன்.**—நான் எல்லா அரசர்களிலும் சிறப்புபெற்றவன்; இராஜாதி ராஜன் என்று நீங்கள் பலமுறையும் உரைத்திருக்கிறீர்களே, உண்மைதானோ! என் பிரதானிகளே?

**ராஜு.**—எம் பெருமானே, உண்மைதான், அரசரெல்லாரிலும் தேவரீர் அதிக ஆற்றலுடையவரே.

**சுந்தரம்.**—நாங்கள் அனைவரும் தேவரீருடைய அடிமைகள், தேவரீர் திருவடியே தஞ்சமாக இருக்கின்றோம.

**ராஜு.**—நாங்கள் மாத்திரமோ! பஞ்ச மகா பூதங்களும் தங்களுக்கு அடிமை பூண்டிருக்கின்றன. இக்கரை முதல் அக்கரைவரையில் இந்தப் பிரபஞ்சமுழுவதும் தேவரீருடைய ஆணைவழிப்பட்டு நடக்கின்றது.

**அரசன்.**—இந்தக் கடலும் என் ஆணைவழியில் அமைந்து நடக்குமா?

**ராஜு.**—அதற்கென்ன சந்தேகம்? உங்கள் பகைவரைக் கண்டால்மாத்திரம் அந்த கடல் அலட்சியமாகவிருக்கும். உங்களைக் கண்டால் ஒடுங்கியிருக்கும்.

**அரசன்.**—இப்பொழுது கடல்நீர் பெருக்கெடுக்கிற தருணமல்லவா?

**சுந்தரம்.**—ஆம், ஆம், அதோ அது மேற் பொங்கிவருகிறது.

**அரசன்.**—அப்படியானால் ஒரு நாற்காலி கொண்டுவந்து இதோ இங்கே மணலின் மேற் போடுங்கள்.

**ராஜு.**—நீர் பெருகிவருகின்ற இந்த இடத்திலா மகா பிரபுவே?

**அரசன்.**—ஆம், இதோ இவ்விடத்திற்றான்.

**சுந்தரம்.**—(இரகசியமாய்) அவன் என்ன பித்தனென்று பார்த்தாயோ! நாம் சொல்லுகிறதெல்லாம் அவன் மெய்யென நம்புகிறானென்று நினைக்கிறாயோ!

**அரசன்.**—ஓ! மகா சமுத்திரமே! நீ எனக்கு ஐக்கியமல்லவா? அப்படியென்று என் பிரதானிகள் என்னிடத்தில் இயம்புகின்றனர். ஆதலால் இராஜாதி இராஜனாகிய எனக்கு அடைந்து நடப்பது உன் கடமை. நல்லது, என் காலிற்பட்டு அதை நனைக்காதபடி உன்னுடைய அலைகளை அப்பால் உருட்டிக்கொண்டு போய்விடு, பார்க்கலாம்.

**சுந்தரம்.**—(இரகசியமாய்) இராஜன் கட்டளையைக் கடல கேட்டு நடக்குமா?

**ராஜு.**—கடல்நீர் எவ்வளவு விரைவாகப் பெருகெடுக்கிறது, பார்.

**சுந்தரம்.**—அந்தோ அலை அவன் காலண்டை வந்துவிட்டது. இனி இங்கே நின்றால் உடம்பெல்லாம் உவர்நீராய்விடும்.

**அரசன்.**—கடல் என் ஆக்கினைக்கு அடங்குகிறதா? அது எங்ஙனம் பெருக்கெடுத்து நுரைகளை என்மீது தள்ளி அலைகளை மோதியடிக்கிறது பாருங்கள். இழிவுள்ள இச்சகர்களே, இழிவான பொய் வார்த்தைகளால் என்னை ஏய்க்கப் பார்க்கிறீர்களா? இழிவான உங்கள் இச்சக வார்த்தைகளை நான் நம்பியிருக்கிறேனென்று நினைக்கிறீர்களா? கடவுள் ஒருவருக்குத்தான் இந்தக் கடல் அமைந்து கிடக்கும். என்னைக் காட்டிலும் ஏனைய அரசர்கள் அமைதியும் அடக்கமும் உள்ளவர்களாக, உங்களுடைய அவமானத்தைக் கண்டேனும் மற்றப் பிரயாணிகள் முகஸ்துதியை விட்டு உய்யக் கடவர்.

வீணபுகழ்ச்சியில் விருப்பமற்ற இவ்வரசன்றோ விவேக சிகாமணி!

ஒருவனிடத்து இல்லாக் குணங்களை உள்ளனபோலமைத்துப் புகழுவதை விட அவனை நேரில் வைதலே நன்று. இக்கூடா ஒழுக்கத்தை விவேகிகள் வெறுப்பார்கள். இது ஜகதீசருக்கு அதிக அருவருப்பைத் தரும்.

வே. பால் ஆனந்தம்,
ஓ. பழனிச்சாமி,
ஏழாம் வகுப்பு,
மாடல் ஸ்கூல், பசுமலை.

### பட்டிவீரம்பட்டி

“கள்ளர்” பாடசாலை

நமது பட்டிவீரம்பட்டி கள்ளர்பாடசாலை சிறு மாணாக்கர்களால், எங்களூரில் 16-1-26, சனிக்கிழமை இரவு 9 மணிக்கு, “லாபத்தில் பாதிதா ?” அல்லது “லஞ்சம் கேட்ட கதை”யை அதிக விமரிசையாகப் பாட்டுடன் நடத்தப்பட்டன.

பஞ்சாயத்து மெம்பர்களும் ஷை கதையை பார்க்க ஏராளமான ஜனங்களும் வந்தார்கள். முடிவில் மகா-ா-ா கள்ளர் ஸ்பெஷல் சூப்பிரண்டு துரையவர்கள் செய்துவருகிற நன்மைகள் அடங்கிய பாடல்களும் படித்து, இராஜவாழ்த்துதல் இங்கிலீஷிலேயும் படித்து முடிவுபெற்றன.

இங்ஙனம்,
பெ. அய்யருத்தேவன்
க. வீரணத்தேவர்
பட்டிவீரம்பட்டி கள்ளர் பஞ்சாயத்தார்கள்.

---

## கோவிற்பட்டி பண்ணையில் நடத்திய விவசாய விஷயமான சோதனைகளால் அறிந்துகொண்ட உபயோகமுள்ளவிஷயங்கள்:—

### தோட்ட நிலங்கள்.

இவைகள் அற்பமண்கண்டமுள்ள கடைசித்தரமான செவ்வல்தரையை உரமும் ஏராளமான காம்பை (குளத்துமண்டல்) அடித்துத் திருத்தியனவாயிருக்கின்றன. ஐந்து வருஷகாலமாய் கேப்பையை (ராகியை) (மழை) காலத்தில் பார்போட்டு பாரின் இருபக்கத்திலும் நட்டுபார்களுக்கு ஊடே (மத்தியில்) இருக்கும் வாய்க்கால்களில் தண்ணீர் பாய்ச்சிவந்ததில் சாதாரணமாய் பாத்தியில் நட்டு சாகுபடி செய்வதைக்காட்டிலும் குறைந்த தண்ணீர செல்லுவதோடு விளைவும் அதிகமாய் கண்டுவருகிறது.

பெரிய அகன்ற நாட்டுக்கலப்பையைவைத்து முழத்துக்கு ஒரு சாலடித்து திரும்பவும் சாலை ஒட்டியே மடக்கி பார்போட்டுவிடலாம். இவைகளை மண்வெட்டியைவைத்துத் திருத்திக்கொண்டு குறுக்கே 20 அடிக்கு ஒரு பொழி தண்டுகளும் வாய்க்கால்களும், போட்டுக்கொள்ளலாம். இப்படிக்கில்லாமல் அதிக நீளமாய்ப் போனால் தண்ணீர் செவ்வையாய் ஏறிப்பாயாது.

பாத்திகளில் நடுவதைக்காட்டிலும் பார்மேல் நட்டால் வெங்காயம் மிகவும் நன்றாய் உண்டாகிறது. வெங்காயம் நட தரை இறுகியிருக்கும்படி தண்ணீர் விட்டு நடுமுன் பாரின் உச்சியை செவ்வையாய் அமுக்கிவிடவேண்டும். வெங்காயம் நன்றாய் கிழங்கு வைக்கவேண்டுமானால் தாராளமாய் வேரடிக்கவிடக்கூடாது. இதற்கு பாரின் உச்சியில் மிதித்துவிடலாம். ஒவ்வொரு பாரிலும் வெங்காயம் மூன்றுவரிசை நடலாம்! கிழங்கு

நட்டு உண்டாக்குவதைவிட விதை போட்டு உண்டாக்கும் வெங்காயம் திறமையான கிழங்காயிருப்பதோடுகூட கிட்டத்தட்ட இரட்டிப்பு மாசூலும் கிடைக்கும். திருநெல்வேலி ஜில்லாவில் இந்தப்படி இதுவரை யாரும் செய்யாதபோனாலும் இவ்விராஜதானியில் மற்றப்பிராந்தியங்களில் சாதாரணமாய் இது வழக்கத்திலிருக்கிறது.

### கரிசல் நிலம்.

கோடையில் நிலம் செவ்வையாய் காய்ந்திருக்கும் சமயத்தில் கரிசல்கலப்பை (cotton soil plough) என்னும் பெரிய இரும்பு கலப்பையால் ஆழ உழுதுவிட்டால் கடப்பாரைவைத்து அருகு பேர்த்தெடுப்பதைப்போலவே அருகை ஒழித்துவிடலாம் (கலப்பைக்கு எட்டாதபடி) ஆழத்தில் அருகும் சில புன்செய்களுக்கு மட்டும் இந்த கலப்பை உதவாது. நாட்டுக்கலப்பையால் உழுத நிலங்களில் அருங்கோடையில் பயிர்கள் தீய்ந்துபோகும் போதும் ஆழ உழுத நிலத்திலுள்ள பயிர்கள் காய்ச்சலைத்தாங்கிக்கொண்டு நல்ல மாசூலும் தரும். இந்தக்கலப்பைக்கு நாலேர்மாடு பூட்டி உழுதால் நாளொன்றுக்கு அரை ஏக்கர் உழலாம். விதைக்கலப்பையைக்கொண்டு சால் சாலாய் விதைத்தால் விதைப்புக்காலத்தில் வெகு சீக்கிரம் வேலையாவதோடுகூட பின்னிட்டு பயிரும் ஒரேசீரானமாய் இருக்கும். பின்பு நிலத்தை மாட்டுக் களைவெட்டியால் கொத்திக்கொடுக்கலாம். இதனால் ஈரம் காய்ந்து போகாமல் பயிர்கள் காய்ச்சலையும் தாங்கிக் கொள்ளும். நெருங்கிய பயிரையும் செடிகள் ஒவ்வொன்றும் தக்கப்படி உண்டாகும்படி இடம்விட்டு வேண்டியபடி இலகுவாய்க் களைத்து விட்டுவிடலாம்.

கம்பையும் இதேமாதிரியாய் (சால்) விதைக்கலப்பையால் விதைத்து பின்னிட்டு நாட்டுக்கலப்பையால் பயிரடிப்பதற்குப் பதிலாக மாட்டுக் களைவெட்டியால் பயிரடித்துவிடலாம்.

---

## வர்த்தமானம்.

கள்ளர் சீர்திருத்த சபை:—1926ஞு ஜனுவரி மீ 17உ ஞாயிற்றுக்கிழமை சாயங்கிரம் கள்ளர்சீர்திருத்த விஷயமாயும், முன்னேற்ற விஷயமாயும் கூடி யோசிக்க உசிலம்பட்டியை அடுத்த வலையபட்டி நாலுகரை தோப்பில் ஒரு மகாசபை கூடினது. அச்சபைக்குப் பல பிரபல நாட்டுத்தேவமார்கள் வந்து கூடினர். அச்சபைக்கு மகா-ள-ள-ஸ்ரீ ராவ் சாகிப் வேதநாயகத்தேவர் அவர்கள் அக்கிராசனம் வகித்தார். அச்சமயம் டிப்டி கலெக்டர் அவர்களும் ஹிம்மல்ஸ்ற்றிரண்டு துரையவர்களும் மற்றும் பல கனதனவான்களும் கூடினர்.

அமெரிக்கன் மிஷன் டெப்புட்டேஷன் கவுண்டன்பட்டி சந்திப்பு:—ஜனுவரி மீ 23 தேதி கவுண்டன்பட்டி சந்தித்து கள்ளர்பாடசாலை மாணுக்கர்களால் கள்ளநாட்டு முன்னேற்றத்தைப்பற்றி நடத்தப்பட்ட பயாஸ்கோப் காட்சியைக் கண்ணுற்று ஆனந்தித்தனர். கூடிவந்த பெருங்கூட்டத்திற்கு தைரியமடையக்கூடிய அநேக நல்ல வார்த்தைகளைக்கூறி திரும்பினர்.

---

## உலக வர்த்தமானம்.

துருக்கி தேசத்தில் பெயர் பெற்ற புஸ்தகசாலைகள்:—துருக்கி ராஜ்ஜியத்தின் தலைநகரான கான்ஸ்டான்டிநோபிள் நகரத்தில் இருந்த புத்தகசாலைகள் உலகத்தில் பெயர்பெற்றவைகளாயிருந்தும் அவைகள் அத்தேசத்து 'உலமக்'களான மகமதிய குருமார்களுக்கு மாத்திரம் இது பரியந்தம் தெரிந்திருந்ததேயொழிய மற்ற யாவர்க்கும் தெரியாமலிருந்தது. பூர்விக துருக்கியர்கள் கல்வியில் சமர்த்தர். செய்யுட்கவிகளால் தர்க்கமாடுவார். 1703, 1730-ல் வசித்த சுல்தான் அஹமத் என்பவர் அநேக புஸ்தகசாலைகள் ஸ்தாபித்தார்- 1780ஞு அவ்விடமுள்ள 807 மசூதிகளுக்கும் 35 லைபிரரிகள் அமைந்திருந்தன. அவைகளில் நான்கு ஸ்திரீகளால் ஸ்தாபிக்கப்பட்டவைகள். 'எனினும் ஸ்திரீகள் கூந்தலில் நிறைவும் அறிவில் குறைவும்' ஆனவர்களென்னும் ஓர் பழமொழி துருக்கியர்களுள் வழங்கிவருவது தகாதது.

துருக்கி தேச மாறுதல்:—யுத்தகாலமுதல் அநேக தேசங்கள் மாறி வருகிறதைப்பார்க்கிறோம். அநேக சிம்மாசனங்கள் காலியாயின. இந்த துருக்கி தேச மாறுதல் அதிக விசேஷம் துருக்கி சுல்தானை அனுப்பிவிட்டார்கள். குடியரசாகி ஒரு வருஷமாயிற்று. தேசத்தை ஆள்பவர் முஸ்டாபாகிமல் பாஷா. தன்மனைவி லத்திபாவை கடந்தமாதம் தள்ளிவிட்டார். தேசத்து ஜனங்கள் யாவரும் மேற்கத்திய உடுப்பும் தொப்பியும்போட ஆக்ஞாபித்துவிட்டார். குடியரசான முதலாம வருஷத்தைக் கொண்டாடின நாளில் துருக்கி ஸ்திரீகள் நடனமாடினபோது தங்கள் முக்காடுகளை நீக்கிவிட உத்தரவு செய்தார். உடனே கீழ்ப்படிந்தார்கள். இன்னும் மசூதிகளில் அல்லாவை தொழுவதில் என்னென்ன மாறுதல் செய்வாரோ? கொரான் என்ற பேச்சு அவரிடம் செல்லவில்லை போலும். அவர் வைத்தது தான் சட்டம். மந்திரிமார்களும் அவர் சொல்லுக்கிணங்க நடக்கிறார்கள். இது நிற்க தள்ளப்பட்ட மனைவி தன்புருஷனை செப்போலியன் என்று பேசிவருகிறார்களாம்.

லண்டன்நகரில் இந்தியர்கள் ஹோட்டல்:- மத்திய இந்தியாவிலிருந்து அப்துல்லா என்பவனும், சென்னபட்டணத்திலிருந்து வீராசாமி என்பவனும் லண்டனில் சாப்பாட்டுக்கடை வைத்து இந்திய பக்ஷணங்களை விற்று பெயர் பிரக்யாதியாகி வருவதாக பத்திரிகைகள் கூறுகின்றன.

போபால்தேசத்திய மகமதிய மஹாராணி:- இவர்கள் கடந்த மாதம் இங்கிலாந்திற்குப் போயிருந்தபோது தன் பேட்டியைக் காண வந்தவர்களை நோக்கி, 'புருஷர்கள் செய்கிற வேலையை ஸ்திரீகள் செயவது எனக்குப்பிரியமில்லை. ஒரு ஸ்திரீ தன் வீட்டிற்குரிய காரியங்களை நடத்துவதில் போதுமான சமர்த்தைக்காட்டலாம். நான் அரசியாய் இருந்தாலும் என் வேலைகளையெல்லாம் நானே செய்துகொள்ளுகிறேன். என்னுடைய பேத்திகளும் சர்வகலாசாலைகளில் படித்துப் பட்டம் பெறுவதை நாடாமல் சமையல் வேலையிலும் வீட்டை நடத்துவதிலும் தையல்வேலைகளும் கற்பிக்கப்படவேண்டும்' என்று தன் அபிப்பிராயத்தைத் தெரிவித்தார்கள்.

மிஸ்டர் மாயடு:—இவர் ஸ்ரீமதி ஸரோஜினி நாயுடு அம்மாளின் மகன். இவர் முஸ்லிம்மார்க்கத்தில் சேர்ந்துவிட்டதாக முஸ்லீம் பத்திரிகையும் கல்கத்தா இங்கிலீஷ் பத்திரிகையும் கூறுகின்றன. தாயார் அதை மறுக்கிறார்கள். மகன் அதைப்பற்றி இன்னும் ஒன்றும் வெளிப்படுத்தவில்லை.

(சத்திய தூதன்.)

---

## பஞ்சாங்கம்.

1926ஞு—பெப்ருவரி மீ

● அமாவாசை ○ பௌர்ணமி * கிருத்திகை

| வாரம் | தேதி | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஞாயிறு | ... | 7 | 14 | 21 | 28 | ... |
| திங்கள் | 1 | 8 | 15 | 22 | ... | ... |
| செவ் | 2 | 9 | 16 | 23 | ... | ... |
| புதன் | 3 | 10 | 17 | 24 | ... | ... |
| வியா | 4 | 11 | 18 | 25 | ... | ... |
| வெள் | 5 | ●12 | *19 | 26 | ... | ... |
| சனி | 6 | 13 | 20 | ○27 | ... | ... |

| வாரம் | குரோதனஞு மாசி 17உ—தை 19உ | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஞாயிறு | ... | 25 | 3 | 10 | 17 | ... |
| திங்கள் | 19 | 26 | 4 | 11 | ... | ... |
| செவ் | 20 | 27 | 5 | 12 | ... | ... |
| புதன் | 21 | 28 | 6 | 13 | ... | ... |
| வியா | 22 | 29 | 7 | 14 | ... | ... |
| வெள் | 23 | ●1 | *8 | 15 | ... | ... |
| சனி | 24 | 2 | 9 | ○16 | ... | ... |



அடியில்கண்ட கள்ளர் ஸ்கூல் உபாத்தியாயர்கள் ஒவ்வொரு மாதமும் அடியில்கண்ட இடங்களில் குறிப்பிட்ட தேதியிலும நேரத்திலும் ஸ்டாக்புக், ஸ்டாக் அட்டை, அட்டென்டன்ஸ், விசிட் புக், இன்ஸ்பெக்ஷன் புக் முதலியவைகளுடன் கள்ளர் ஸ்கூல் சூப்ரவைசர் முன்னிலையில் ஆஜராகவேண்டும்.

N.B.—மேற்படி தேதிகளில் சப்பரக்கூட்டம் இருந்தாலும், ஞாயிற்றுக்கிழமையாய் இருந்து கோயிலுக்குப்போகவேண்டி இருந்தாலும் அவர்கள்மட்டும் அந்த தேதிகளுக்கு அடுத்த மறுநாள் ஆஜராகலாம். சரியான முகாந்தரமில்லாமல் ஒருவரும் ஆஜராகாமல் இருக்கக்கூடாதென்பதை கண்டிப்பாய் அறிந்துகொள்ளவேண்டும். ஜனுவரிமாதம் மீட்டிங் கிடையாது.

| கிர. | ஸ்கூல் கிராமம். | இடம். | தேதி. | நேரம். |
|---|---|---|---|---|
| | செக்கானூரணி ஸ்டேஷனைச் சேர்ந்த எல்லா பள்ளிக்கூட உபாத்தியாயர்களும் | செக்கானூரணி சென்டர் | ஒவ்வொரு மாதம் முதல் தேதி | 10மணி |
| 178 | காலாக்கூர் | வாலாந்தூர் R.C. பள்ளிக்கூடம் | இரண்டு தேதி | 2 மணி |
| 173 | சக்கிலியங்குளம் | | | |
| 168 | நாட்டாமங்கலம் | | | |
| 161 | கொடிக்குளம் | | | |
| 172 | பிரவியம்பட்டி | | | |
| 166 | மூண்டுவேலம்பட்டி | | | |
| 176 | வலங்காகுளம் | | | |
| 159 | அம்பட்டயம்பட்டி | | | |
| 208 | மம்பட்டிபட்டி | | | |
| 177 | விண்ணிகுடி | சிந்துபட்டி சென்டர் | 3-ம் தேதி | 10மணி |
| 160 | ஈச்சம்பட்டி | | | |
| 162 | சட்டதேவன் பட்டி | | | |
| 163 | கரிசப்பட்டி | | | |
| 164 | பி. கன்னியம்பட்டி | | | |
| 165 | மேலசெம்பட்டி | | | |
| 169 | சக்கலக்கோட்டை | | | |
| 170 | பள்ளிச்சண்டு | | | |
| 171 | பி. மேட்டுபட்டி | | | |
| 174 | தும்பக்குண்டு | | | |
| 179 | பெருங்காமநல்லூர் | | | |
| 180 | குமரம்பட்டி | | | |
| 182 | உடையாம்பட்டி | | | |
| 286 | கீளசெம்பட்டி | | | |
| 167 | மதிப்பனூர் | சேடப்பட்டி | 4-ம் தேதி | 10மணி |
| 181 | தப்பல்நத்தம் | | | |
| 152 | கோடிநாயக்கனபட்டி | | | |
| 154 | மேலதிருமாணிக்கம் | | | |
| 155 | பெரியகட்டளை | | | |
| 156 | சாணார்பட்டி | | | |
| 157 | தாடயம்பட்டி | | | |
| 158 | கண்டாரி | | | |
| 271 | கேஜனார்பட்டி | | | |

N.B.—மகா-ள-ள-ஸ்ரீ ஸெப்பஷல் சூபரிரணல் துரையவர்களால் அங்கீகரிக்கப்பட்டது.

AHMAD HUSSAIN M.
Supervisor, Kallar Schools,
Checkanoorani.

## பிரமலை சீர்திருத்தன் வாங்குவோர்.

1396 குரும்பத்தேவன் மகன் ஐயருத்தேவன்,
திருமங்கலபுரம்—திண்டுக்கல் போஸ்ட்.
1397 தவசித்தேவன் மகன் மாயாண்டித்தேவன்,
திருமங்கலபுரம்—திண்டுக்கல்போஸ்டு
1398 அழகப்பத்தேவன் மகன் பெருமாத்தேவன்,
கோத்து ஆனம்பட்டி—திண்டுக்கல் போஸ்டு.
1399 சின்னவயிரத்தேவன் மகன் கலியாணித்தேவன்,
கோத்து ஆனம்பட்டி—திண்டுக்கல் போஸ்ட்.
1400 கருப்பணத்தேவன் மகன் பெரியகருப்பத்தேவன் என்ற மொக்கையன், கருமாத்தூர் ஒத்தப்பட்டி,—சிந்துபட்டி போஸ்ட்.
1401 கு. சின்னத்தேவன் மகன் கீரிமாயத்தேவன்,
கருமாத்தூர் ஒத்தப்பட்டி—சிந்துபட்டி போஸ்ட்.
1402 நாகப்பத்தேவன் மகன் தவசித்தேவன்,
செட்டிகுளம்—சிந்துபட்டிபோஸ்ட்.
1403 ஆங்கத்தேவன் மகன் முத்துக்கருப்பத்தேவர்,
செட்டிகுளம்—சிந்துபட்டிபோஸ்ட்.
1404 சங்கிலித்தேவர் மகன் ச. பெரிய கருப்பத்தேவர்,
செட்டிகுளம்— சிந்துபட்டிபோஸ்ட்.
1405 ஐயருத்தேவர் மகன் ஐயருத்தேவர்,
செட்டிகுளம்—சிந்துபட்டிபோஸ்ட்.
1406 ஒச்சாத்தேவர் மகன் ஐயருத்தேவர்
செட்டிகுளம்—சிந்துபட்டிபோஸ்ட்.
1407 ஆண்டியப்பத்தேவர் மகன் மாயாண்டித்தேவர்,
வடிவேல்கரை—பசுமலைபோஸ்ட்.
1408 சி. கலுவத்தேவன் மகன் விருமாண்டித்தேவன்,
வடிவேல்கரை—பசுமலைபோஸ்ட்.
1409 கண்ணித்தேவன் மகன் குமாருத்தேவன்,
வடிவேல்கரை—பசுமலைபோஸ்ட்.
1410 பெரிய கலுவன் மகன் மூத்துக்கலுவன்
வடிவேல்கரை—பசுமலைபோஸ்ட்
1411 முத்தாத்தேவர் மகன் சொக்கர்தேவர்,
வடிவேல்கரை—பசுமலைபோஸ்ட்.
1412 வீரணத்தேவர் மகன் பேயாண்டித்தேவர்,
வடிவேல்கரை—பசுமலைபோஸ்ட்.
1413 குரும்பத்தேவர், பூதிப்புரம்—உசிலம்பட்டி போஸ்ட்.
1414 ம. இளயபெருமாள் தேவர், பூதிப்புறம்-உசிலபட்டி போஸ்ட்
1415 கா. சங்கிலித்தேவர், பூதிப்புறம்—உசிலம்பட்டிபோஸ்ட்.
1416 கு. பெரியகருப்பத்தேவர், பூதிப்புறம்—உசிலம்பட்டி போஸ்ட்
1417 பூச்சி பெரியகருப்பத்தேவர், பூதிப்புறம்-உசிலம்பட்டி போஸ்ட்
1418 சல்லாரி பெரிய கருப்பத்தேவன, பூதிப்புரம்—உசிலம்பட்டி
1419 ஒச்சாத்தேவர், பூதிப்புறம்—உசிலம்பட்டி போஸ்ட்.
1420 சோ மு சங்கிலித்தேவர், பூதிப்புறம்—உசிலம்பட்டிபோஸ்ட்.
1421 சுளியன் வீரணத்தேவர், பூதிப்புறம்—உசிலம்பட்டிபோஸட்.
1422 ம. சங்கிலித்தேவர், பூதிப்புறம்-உசிலம்பட்டிபோஸ்ட்.
1423 பூ. வீ பெருமாள்தேவர், அளகிரெட்டிபட்டி-சிந்துபட்டிபோஸ்
1424 ரா. சிவனாண்டித்தேவர், ஒறைபட்டி, பெருங்காமநல்லூர் கிராமம்—சிந்துபட்டிபோஸ்ட்.
1425 க. மாயத்தேவர், ஒறைப்படி—சிந்துபட்டிபோஸ்ட். ஸ்ட்]
1426 பெ. முத்கணத்தேவன், அழகிரெட்டிபட்டி-சிந்துபட்டி போ
1427 நா முத்தத்தேவர், பூதிப்புறம்-உசிலம்பட்டி போஸ்ட்.
1428 க பெரியமாயத்தேவர், பூதிப்புரம்—உசிலம்பட்டிபோஸ்ட்.
1429 பூசாரி இருளாண்டித்தேவர், பூதிப்புரம்-உசிலம்பட்டிபோஸ்ட்
1430 முத்தையத்தேவர் மகன் முத்தையத்தேவர்,
அளகிரெட்டிபட்டி, சிந்துபட்டிபோஸ்ட்.
1431 ரா. வீரணத்தேவன், ஒறைபட்டி—சிந்துபட்டிபோஸ்ட்
1432 ரா பெரியமாயத்தேவன், ஒறைபட்டி-சிந்துபட்டிபோஸ்ட்.
1433 சி. சின்னத்தேவன, ஒறைபட்டி, சிந்துபட்டிபோஸ்ட்.
1434 வெய்யருத்தேவன் மகன் த. வெ. வெள்ளையத்தேவன்,
தேங்கிலிப்பட்டி செக்கானூரணி, சோளவந்தான்.

1435 சேசத்தேவன் மகன் ம. க. பழனியாண்டித்தேவன்,
கிண்ணிமங்கலம், செக்கானூரணி (Via) சோழவந்தான்.

1436 முத்தையாத்தேவர் மகன் சொக்கலிங்கத்தேவர்,
அம்பட்டன்பட்டி சிந்துபட்டி போஸ்ட்—திருமங்கலம் தாலுகா]

1437 க. ராமத்தேவன் மகன் பூ. ஒய்யாத்தேவன்,
அம்பட்டையன்பட்டி—சிந்துபட்டி போஸ்ட்.

1438 க. ராமத்தேவன் மகன் கா. ர. பெரியபெருமாள்
அம்பட்டையன்பட்டி—சிந்துபட்டி போஸ்ட்.

1439 க. முத்தணத்தேவன் மகன இளையபெருமாள் தேவர்,
அம்பட்டையன்பட்டி சிந்துபட்டி போஸ்ட்.

1440 மு. பெருமாள்தேவன் மகன் மா. மு. இளையபெருமாள்தேவன்
அம்பட்டையன்பட்டி—சிந்துபட்டி போஸ்ட்.

1441 காமாயி சிவனாண்டித்தேவர் மகன் கா. சிவன்காளைத்தேவர்
தேங்கிலிப்பட்டி செக்கானூரணி போஸ்ட் (Via) சோழவந்தான்

1442 பெரியகருப்பத்தேவன் மகன் பெ. மலையாளத்தேவன்,
தேங்கில்ப்பட்டி செக்கானூரணி.

1443 மாச்சித்தேவன் மகன் மா. ஆண்டித்தேவன்,
தேங்கிலிப்பட்டி செக்கானூரணி போஸ்ட்.

1444 சேசத்தேவன் மகன் ம. க. பழனியாண்டித்தேவன்,
கிண்ணிமங்கலம் செக்கானூரணி போஸ்ட்.

1445 கண்ணித்தேவன் மகன் க. பேயாண்டித்தேவன்
தேங்கிலிப்பட்டி (Via) சோழவந்தான்.

1446 கா. சிவனாண்டித்தேவன் மகன் மாயாண்டித்தேவன்,
கீழச்செம்பட்டி, சிந்துபட்டி போஸ்ட்.

1447 உத்தவீரமத்தேவன் மகன் உச்சிநாகத்தேவன்,
கள்புளிச்சாம்பட்டி—சோழவந்தான் போஸ்ட்.

1448 மாயாண்டித்தேவன் மகன் பூ. மா. ஐயாருத்தேவன்,
க. செட்டிகுளம்-செக்கானூரணி போஸ்ட் (Via) சோழவந்தான்]

1449 வீரணத்தேவன் மகன் கடைக்கார சிவனாண்டித்தேவன்,
கழுதைப்பாரப்பட்டி-செக்கானூரணி.

1450 அய்யாருத்தேவன் மகன பு. பெரியகருப்பன,
க. செட்டிகுளம்-செக்கானூரணி போஸ்ட்.

1451 விருமாண்டித்தேவன் மகன் சறுவத்தேவன்,
கழுதைப்பாரைப்பட்டி செக்கானூரணி போஸ்ட்.

1452 மூக்கன் சிவனாண்டித்தேவன் மகன் சக்கரை சிவனாண்டித்தேவன், கழுதைப்பாரைப்பட்டி-செக்கானூரணி போஸ்ட்.

1453 குமராண்டித்தேவர் மகன் கு. கிருஷ்ணத்தேவர்,
கழுதைப்பாரைப்பட்டி-செக்கானூரணி போஸ்ட்.

1454 குமாராண்டித்தேவர் மகன் ப. கு. சிவனாண்டித்தேவன்,
கழுதைப்பாரப்பட்டி, செக்கானூரணி போஸ்டு.

1455 பொ சிவனாண்டித்தேவன் மகன் வெள்ளையன் என்ற அம்மையன் சாமித்தேவன், கழுதைப்பாரப்பட்டி, செக்கானூரணி.

1456 பு. ஒச்சாத்தேவன் மகன் மங்கான் கருப்பத்தேவன்,
கொடிக்குளம், சிந்துபட்டி போஸ்டு.

1457 மாயத்தேவன் மகன் பூ. மா. சின்னத்தேவன்,
கொடிக்குளம், சிந்துபட்டி போஸ்டு.

1458 ரொ. கருப்பணத்தேவன் மகன் நாகத்தேவன்,
கொடிக்குளம், சிந்துபட்டி போஸ்டு.

1459 மா. மூ. கருப்பத்தேவன் மகன் சின்னக்கருப்பத்தேவன்,
கொடிக்குளம், சிந்துபட்டி போஸ்டு.

1460 மாயத்தேவன் மகன் பூ. மா. மாயத்தேவன்,
கொடிக்குளம் சிந்துபட்டி போஸ்டு.

1461 பெரியகருப்பத்தேவன் மகன் இ. தவசித்தேவன்
மாயன்குரும்பன்பட்டி கருமாத்தூர் உள்கடை சிந்துபட்டி போஸ்டு,
திருமங்கலம் தாலுகா.

1462 கருப்பணத்தேவன் மகன் சி. கலுவத்தேவன்,
விக்கிரமங்கலம், சோழவந்தான் போஸ்டு.

1463 பெரியசாமித்தேவன் மகன் சிவன்காளைத்தேவன்,
சொசைட்டி நிர். 6 வாகைக்குளம், சிந்துபட்டி போஸ்டு.
திருமங்கலம் தாலுகா.

1464 கருப்பத்தேவன் மகன் சிவன்காளைத்தேவன், சொசைட்டி நிர். 10 வாகைக்குளம், சிந்துபட்டி போஸ்டு.

1465 பெரியகருப்பத்தேவன் மகன் சின்னக்கருப்பத்தேவன்
சொசைட்டி மெம்பர் நிர். 26 வாகைக்குளம், சிந்துபட்டி போஸ்டு.

1466 சந்தணத்தேவன் மகன் சின்ன சிவனாண்டித்தேவன்,
சொசைட்டி பிரசிடெண்டு, வாகைக்குளம் சிந்துபட்டி போஸ்டு.

467 பேயாண்டித்தேவன் மகன் சாய்பிடிக்கி சிவன்காளைத்தேவன்,
சொசைட்டி மெம்பர் நிர். 218, வாகைக்குளம் சிந்துபட்டி போஸ்டு.

1468 சந்திரசேகர முதலியார் கர்ணம்,
வாகைக்குளம், சிந்துபட்டி போஸ்டு

1469 சந்தணத்தேவன் கி. மூ. வாகைக்குளம் சிந்துபட்டி போஸ்டு.

1470 காராமணி கல்யாணித்தேவன் மகள் முத்துச்சாம் என்ற அழகம்மாள், வாகைக்குளம், சிந்துபட்டி போஸ்டு.

1471 இ. பெரியகருப்பத்தேவன் மகன் உலகத்தேவன்,
சின்னவாகைக்குளம், சிந்துபட்டி போஸ்டு.

1472 நல்லாண்டித்தேவன் மகன் ந. மாயத்தேவன்,
சின்னவாகைக்குளம், சிந்துபட்டி போஸ்டு.

1473 அர்மயாண்டித்தேவன் மகன் பெரியசாமித்தேவன்,
பெரியவாகைக்குளம், சிந்துபட்டி போஸ்டு.

1474 கொ. பெரியகருப்பத்தேவன் மகன் கோ. பெ. ராமத்தேவன்,
பெரியவாகைக்குளம் சிந்துபட்டி போஸ்டு.

1475 பூ. சிவனாண்டித்தேவன் மகன் பூ. சி. சிவனாண்டித்தேவன்,
பெரியவாகைக்குளம் சிந்துபட்டி போஸ்டு.

1476 ராமசாமித்தேவன் மகன் சிவலிங்கத்தேவன்,
பெரியவாகைக்குளம், சிந்துபட்டி போஸ்டு.

1477 உடையத்தேவன் மகன் ஆண்டித்தேவன்,
பெரியவாகைக்குளம, சிந்துபட்டி போஸ்டு.

1478 தேவபெரியசிவனாண்டித்தேவர் மகன் தேவசிவனாண்டித்தேவன்,
சின்னவாகைக்குளம், சிந்துபட்டி போஸ்டு.

*Parton.* M.R.Ry. Rao Sahib,
A. J. Vethanayaga Thevar Avl.,
Usilampatti.

*Editor.*—Rev. George J. Athishtam,
Usilampatti.

*Manager.*—Rev. R. A. Dudley,
Tirumangalam.

Subscription—Single copy 8 annas a year (excluding charges for delivery) payable in advance.

All orders to be sent to the *Manager*.

Articles for insertion should be sent, not later than 15th of each month to the *Editor*.

சம்ரக்ஷகர்.—மகா-ா-ா-ஸ்ரீ ராவ் சாஹெப் வேதநாயகத் தேவரவர்கள், உசிலம்பட்டி.

பத்திராதிபர்.—கனம் ஜார்ஜ் அதிஷ்டம் ஐயரவர்கள், உசிலம்பட்டி.
மானேஜர்.—கனம் ஆர். ஏ. டட்லி துரையவர்கள், திருமங்கலம்.

தனிப்பிரதி:—8-பை. வருஷ சந்தா 8-அணா. தபாற்கூலி பிரத்தியேகம். ஒரு வருஷ கையொப்பம் முன்னதாகவே அனுப்ப வேண்டும்.

பத்திரிகை வேண்டுவோர் மானேஜரவர்களுக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

சமாச்சாரக்குறிப்பு முதலியவை அனுப்ப விரும்புவோர் அந்த மாதம் 15-ம் தேதிக்குள் சுருக்கமாக எழுதி பத்திராதிபருக்கு அனுப்பவேண்டும்.

பசுமலை அமெரிக்கன் மிஷன் "விளுக்ஸ் அச்சுயந்திரசாலையில் பிரசுரிக்கப்பட்டது."

1247

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
11 MAR 1926
MADRAS

மாதாந்திரப்பதிப்பு] [விலை 8 பைசு.

# The Piramalai Reformer.

## பிரமலை சீர்திருத்தன்.

" பகை விரோதங்களை எழுப்பும்; அன்போ சகல பாவங்களையும் மூடும்."

Vol. V.] மார்ச்சுமீ, 1926. [இலக்கம் 11

(Tagore Memorial Reading Hall, Kavandanpatti.)

### "தகோர்" ரீடிங்ஹால் கவண்டன்பட்டி.

இவ்வுலகின்கண் ஜீவித்துவரும் சகல மனிதருக்கும் துன்பத்திலும் இன்பத்திலும் கை கொடுப்பது கல்வியே. சிற்றுயிர்க்குற்ற துணையாகிய இந்தக் கல்வியை சமஸ்தரும் அறிந்திருப்பார்களானால் அவரவர் வெகு சீக்கிரத்தில் நாகரீகத்திலும் அறிவிலும் மேம்பாடு அடைவார்களென்பதற்கு ஐயமில்லை.

இதைக்கண்ணுற்ற நமது கவண்டன்பட்டியிலிருக்கும் பெரிய மனிதர்களும், கிறிஸ்தவர்களும, சில உபாத்திமார்களும் நாம் அறிவை விருத்திபண்ணும் பொருட்டும் ஒருவர் செய்திகளை ஒருவர் எளிதில் அறிந்துகொள்ளவும், உலகத்தில் நடக்கும் பற்பல காரியங்களை அறிய சமயமும் இடமும் கிடைக்கவில்லையே என்றும, இதற்கான ஒரு ஸ்தலத்தை ஆயத்தம்செய்யவேண்டுமென்றும் யோசனைசெய்துகொண்டார்கள். இதுமாத்திரமல்ல நமது ஊரில் எத்தனைபேர் படிப்பில்ஆசையிருந்தும் சமயமும் இடமும் அதற்கேற்ற ஆசிரியமும் இல்லையே என்றும் விசனப்பட்டார்கள். சிலகாள் சென்றபிறகு நாம் ஏற்படுத்தப்போகும் வாசிப்பு சாலையின் நோக்கம் பலர் ஒன்றுகூடி சேர்வதினால் ஐக்கியமும் உலகத்தில் நாளுவிடங்களில் நடக்கிற சகல செய்திகளையும எளிதில் அறிகிறஅறிவும் விசேஷமாய் படிக்கத் தெரியாதவர்களுக்கு படிப்பையும விருத்திசெய்யும் நோக்கமாய இந்த வாசிப்புசாலையை ஏற்படுத்தலாம என்று சமமதித்தார்கள்.

இதன்பிறகு இந்த வாசிப்பு சாலைக்குத் தக்க இடம் ஒன்று பார்க்கவேண்டுமென்று யோசித்துக்கொண்டிருக்கையில் நமது பிரமலை சீர்திருத்தனுக்கு பத்திராதிபரானவர் தமது பள்ளிக்கூடத்தில் ஒரு பகுதியை இதற்கென்று கொடுத்தார். இதைகளுக்கெல்லாம் க இவ்வருஷம் பெப்ருவரிமீ 8உ அன்று இரவு 8 மணிக்கு ஒரு மகாசபை கூடிற்று. அந்தக் கூட்டத்திற்கு அநேக உபாத்திமார்களும், பெரியமனிதர்களும் வந்திருந்தனர். கனம் பால் வீரணன் அவர்கள் அக்கிராசனம் வகித்தார். எல்லோராலும் கடவுள் வாழ்த்துப்பாடி பஜனையுடன் கூட்டம் துவங்கிற்று. கனம் பால்வீரணன் அவர்கள் பிரசிடெண்டாக இருந்து சிற்சில குறிப்புகள் சொன்னார். அதில் முக்கியமானது சுயதாபரிப்பு.

இப்போது நாம் ஏற்படுத்தியிருக்கும் வாசிப்பு சாலைக்கு சகல விதமான பேப்பர்கள் வரவழைக்கவும், எண்ணெய் விளக்கு முதலியவைகளுக்கு பணம் தேவையாய் இருக்கிறபடியால அதற்கென்செய்வது என்று கூடியிருந்த மகா சபையைக்கேட்க அவர்கள் இந்த வாசிப்புசாலை சுயதாபரிப்பாக இருக்கவேண்டும். ஆகையால் இந்த வாசிப்புசாலைக்கு சேர்ந்த சகல அங்கத்தினரும் சந்தா செலுத்தி மேலே சொன்னவைகளுக்கு செலவழிக்கலாம் என்று ஏகசம்மதமாக ஒப்புக்கொண்டார்கள்.

இந்த வாசிப்புசாலைக்கு என்னபேர் வைக்கிறதென்று யோசித்தபோது அதற்கு "தகோர்" வாசிப்புசாலை என்றுவைக்க ஏகசம்மதமாய்த் தீர்மானித்தார்கள். பேர் வைத்ததின் காரணம் இந்தியாவில் தகோர் என்ற பெரிய சாஸ்திரி இருக்கிறார். அவர் உலகத்திலுள்ள சமஸ்த ஜாதிக்காரராலும் பெரிய கல்விமானென்று கொண்டாடப்படுகிறார். அந்த கல்விமானுடைய பேர் நமது பத்திராதிபரின் இளையகுமாரனுக்கு இடப்பட்டிருந்தது. இந்தக கூட்டம் கூடின வாரத்திலேயே அந்தப் பையனும் இறந்துபோனதால் மேற்சொல்லிய இருவருடைய நாமம் நினைவுகூரப்படும்படிக்கு "தகோர்" வாசிப்புசாலை என்றே பேர் கொடுத்தார்கள்.

இந்த வாசிப்புசாலைக்குவரும் இங்லீஷ் பேப்பர்களாவன:—இந்து, டேலி, கிறிஸ்டியன் ஹெரல்டு, கிறிஸ்தியான் மேக்கேஜின். தமிழ் பேப்பர்களாவன:—வேதியர் விளக்கு, மாதர்போதினி, சுதேசமித்திரன், ஐக்கிய சபைத்தூதிகை, பொக்கிஷபாணி, பிரமலை சீர்திருத்தன், சத்தியதூதன், சுதேசமிஷனெரி தீபிகை.

தினந்தோறும் அநேகர் வந்து வாசித்து போகிறார்கள்.

இந்த வாசிப்புசாலையின் உத்தியோகஸ்தர்.

| | | |
|---|---|---|
| பிரசிடெண்டு | கனம் | பால் வீரணன் அவர்கள். |
| வைஸ்பிரசிடெண்டு | ,, | டேவிட் அன்பையா அவர்கள். |
| செக்ரெட்டேரி | ,, | ராஜ்வேதமணி உபாத்தியாயர். |
| கமிற்றி மெம்பர்கள் | ,, | N. டேவிட் அவர்கள் |
| | ,, | டேவிட் பொன்னுசாமி அவர்கள். |

மேற் சொல்லிய கமிட்டிமார்களே இந்த வாசிப்புசாலைக்கு பொறுப்புள்ளவர்களாயிருந்து இந்த வாசிப்புசாலையை நடத்துகிறார்கள்.

இது மாதிரியான ரீடிங்ஹால் ஒவ்வொரு கிராமத்திலும் இருக்குமானால் நமது பிரமலைநாடு கல்வியில் அதிக பாண்டித்தியம் அடையும் என்பதற்கையமில்லை.

சுபம்! சுபம்!! சுபம்!!!

ராஜ்வேதமணி,
செக்ரெட்டெரி.

## கடமை.

சூரியன் காலையில் உதித்து மாலையில் மலைவாயில் விழுகிறான். அவன் ஆகாயத்தில் சஞ்சரிக்கும் வேளை பகல் வேளையே. அதுவும் முப்பது நாழிகையே. அதனை வேறுபடுத்த ஒருவராலும் முடியாது. அங்ஙனம் சந்திரன் தானுதிக்கவேண்டிய வேளையில் உதித்து, மறையவேண்டியவேளையில் மறைகிறான். நக்ஷத்திரங்கள் ஆகாயத்தில் இரவில் பளீர் பளீரென்று மின்னுகிறது. காற்று தான் வீசவேண்டிய பருவத்தில் வீசுகின்றது; வீசவேண்டிய அளவு வீசுகிறது. மழையும் பெய்யவேண்டிய பருவத்தில் அவ்விதமே. இங்ஙனமே எல்லாப் பொருள்களும் செய்யும் செயலும் அதன் அளவு முதலியனவும் கடவுளால் அவற்றிற்கு நியமிக்கப்பட்டுள்ள அதற்குத்தான் கடமை என்றபெயர். அக்கடமையிலிருந்து அவைகள் தவறுவதேயில்லை. அங்ஙனம் தவறுமாயின் இவ்வுலகம் தன் நிலைமையில் நில்லாது. உயிர்பிராணிகள் வாழ்வது அரிதாய்விடும். அதுபோலவே மனிதர்களுக்கும் மற்ற பிராணிகளுக்கும் தனித்தனி ஒரு கடமைக்குட்படக் கடவுளால் படைக்கப்பட்டுள்ளார்கள். அந்தக்கடமையை அவர்கள் தவறுமல் செய்யவேண்டும். கடமையை செய்யாது போவதும் கடமையல்லாதவற்றை மேற்கொண்டு செய்வதும் குற்றமாம்.

இங்ஙனமே யாவருக்கும் ஒவ்வொரு கடமையுண்டு. அக்கடமையை அவர்கள் செய்து நிறைவேற்றினால்தான் அவர்களுக்கு இன்பமுண்டு. செய்யாவிடத்துத் துன்பமாம். தங்கள் தங்கள் கடமையைத் தவறுமல் செய்தால் யாவருக்கும் நன்மையும் இன்பமுமுண்டாகும்.

இ. பழனிச்சாமி,
மாடல்ஸ்கூல், பசுமலை.

---

## நோய்க்கிடங்கொடேல்.

சகோதரர்களே! நோய் என்றாலென்ன? அவ்வார்த்தையைக்கேட்ட மாத்திரத்திலேயே உங்கள் உடம்பு நடுங்கவில்லையா? நம்மை நொய்யச்செய்வது நோய், நையச்செய்வது நோய், துன்பப்படுத்துவது நோய். சரியான ஆகாரம் எடுத்துக்கொண்டு நம்மைச் சௌக்கியமாயிருக்கச் செய்யாமல் தேகத்தின் பலவித உறுப்புகளிலும் புகுந்துகொண்டு வருத்தப்படுத்தி நம்மை மரப்பாவைபோல் ஆடச்செய்வதும் நோய்.

இந்நோய்க்கு ராஜாவென்றும், மந்திரியென்றும், கலெக்டரென்றும், தாசில்தாரென்றும், தலைமை உபாத்தியாயரென்றும், ஆணென்றும் பெண்ணென்றுமில்லை. ஐயோ! இது யாருக்குத்தான் பயந்து யாரைத்தான் வருத்தாதிருக்கிறது. எப்படிப்பட்டவர் வீடென்றும் பாராது. எவ்வளவு பந்தோபஸ்து வைப்பினும் அதை ஒரு பொருட்டென்றெண்ணாது யாதொரு லைசென்ஸும் வாங்காமலே பிரவேசித்து விடுகிறது அந்தோ! இதன் ஸதரியம். யாதொரு இரக்கமுமின்றி எடுத்தேக எமனிடத்தில் சிபார்சும் செய்துவிடும். அசுத்தமுள்ள அன்பரது வீட்டைக்கண்டாலோ ஆனந்தமடைந்து ஆசனம்போட்டுவிடும். மேற்சொன்ன பெரிய உத்தியோகஸ்தர்களையே ஒரு கை பார்க்க ஆயத்தமாயிருந்தால், அசுத்தமுள்ள அன்னுச்சிகளை என்ன செய்யுமென்று சொல்லவும்வேண்டுமோ?

"கல்லெல்லாம் காற்றில் பறக்கும்போது
புல்லெல்லா மென்செய்யும்."

நாம் இவ்வுலகில் இல்லறம் நடத்திக்கொண்டிருக்கிறோம். நாம் வாழ்கிற காலத்திற்படும் கஷ்டங்களென்ன? என்னே, உடல் நடுங்குகிறது. அம்மம்ம! வியாதி என்றால் மனம் பதறுகிறதே. வியாதி நம்மை அணுகாதபடியிருக்கிறதா? பத்துவருஷம் இருபதுவருஷம் வியாதியில் கஷ்டப்படும் மனிதர்களை நாம் கண்கூடாகக் காண்கிறோமல்லவா? ஐயோ, என்ன செய்யலாம்? அப்படிப்பட்டவர்களைக் கண்டால் கண்ணீர் கண்களில் தாரைதாரையாய்ச் சொரிகிறது.

நம் தேகம் ஒரு யந்திரம்போலிருக்கிறது. அது வேலை செய்துகொண்டிருக்கும்போது வேலை மத்தியில் ஏதாவதொரு அசுத்தமான பொருள் அகப்பட்டுவிட்டால் ஒருகுடம் பாலில் ஒரு துளி மோரைத் தெளித்தது போலாய்விடும். சகலவித பிணிகளுக்கும் [illegible]. புகைவண்டி போய்க்கொண்டிருக்கிறது. இருப்புப்பாதை ஒழுங்காயிராமல் சிறிதுகோணியிருந்தால் அவ்வழியில் போகும் வண்டிகள் என்னபாடுபடும்? வண்டிகளிலுள்ள மனிதர் என்னபாடுபடுவார்கள்? எல்லாம் சேதம். அதுபோலவே நம்முடைய உறுப்புகளெல்லாம் சரியான நிலைமைகளிலிருக்கவேண்டும். நாம் உண்ணும் உணவு, உடுக்கும் உடை, வசிக்குமிடம், அருந்தும் நீர் இவைகள் சுத்தமாயிருக்கவேண்டும்.

நோய் ஒன்றிருந்துவிட்டால் மனிதனுக்கு வேறென்ன விருந்தும், உபகாரமாகாது. ஒரு கோடீஸ்வரப்பிரபுவுக்கு என்ன செல்வமிருந்தாலும், அவன் வியாதியால் பீடிக்கப்பட்டிருந்தால் அவனுக்கு எவ்வளவு சுகம் இருக்கும் என்பதை நீங்களே உணர்ந்து கொள்ளுங்கள்.

எல்லாவற்றையும் யோசித்துப்பார்க்குமளவில் ஒருவித வியாதியுமின்றித் திருப்தியுடன் வாழ்தலே குறைவற்ற செல்வத்தையுமுடையவராய் விளங்குதலாகும். நோய்க்கிடங்கொடேல் என்று சொல்லிப்போந்தார் நமது மதுரமொழி ஔவைப் பிராட்டியாரும்.

ஆகலின் நாமெல்லோரும் நோயற்ற வாழ்வைத்தேட முயல்வோமாக. இவ்விஷயத்தில் எல்லாம் வல்ல கடவுள் நமக்குதவி புரிந்து நம்மைக் காத்தருள்வாராக.

"கற்றதனாலாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாடொழா அரெனின்."

ஜி. வி. செல்லத்துரை,
நார்மல் ஸ்கூல்—பசுமலை.

---

## தற்பெருமை தனக்கடன் தனக்கேதிரி

நம் பெருமான் நம்மை இதுகாறும் நல்வழிகளில் நடத்தி நற்காரியங்களை நமக்கு கொடுத்து நற்ஜீவியம் செய்ய நாள் கொடுத்திருக்கிறார். நம் குலத்தாரில் சிலர் மகா-ா-ா [illegible] சூப்ரெண்டு துரையவர்கள் ஜனங்களின் நன்மைக்காக கொடுத்த வியாபாரம், மாடு வாங்க, பால்மாடு வாங்க, கிணறு வெட்ட, முதலிய நற்காரியஞ்செய்து பணத்தை விருத்தி செய்து மற்றுஞ் செட்டிமார் முதலிய பணக்காரரிடம் பணம் வாங்கிவட்டிக்குவட்டி அதிகமாய் செலுத்தி கஷ்டப்படாதபடி நம் பெருமான் அருள்கூர்ந்து வருகிறார். அதையறியாது நம் ஜனங்கள் முற்குறித்த காரியங்களுக்குப் பணம் வாங்கி அதிக தமாஷாக உற்சவத்திற்கு வஸ்திரங்களும் கலியாண காரியங்களிலும் ஆபரணங்கள் செய்து கைக்குப் பவுன் காப்பும், விரல்களுக்கு மோதிரங்களும், கழுத்திற்கு காய் வெண்டை—யம்போல் பகவும் என்றும் அநாவசியமாய் பணத்தை செலவு செய்கிறார்கள்.

நம் குலச்சிறுவர் சிலர், பெரிய கவர்ண்மெண்டின் அரிய உதவியால் பற்பல இடங்களுக்குச் சென்று அங்கிருக்கும் பள்ளிகளில் கற்று வருகின்றனர். அதின் நோக்கமென்ன? ஏதோ நான் கொஞ்சம் உயர்தரக்கல்வி கற்றுவிட்டேன் என்றும், எனக்கு நிகரானவர்கள் யார், எனைப்போல இங்கெவருமுளரோ! என்றும் என்னை இனதனபந்தர் எவர் வந்தபோதிலும் அவர்களை ஒருவாறும் அட்டை— செய்யாதிருந்தலோ, ரஜாகாலங்களில் தங்களின ஊர்களுக்குச் சென்று, தான் படித்தவனென்று காட்டத்தக்கதாக வெள்ளை வேஷ்டியும் சட்டையும் அங்கவஸ்திரமும் குடையும் பிடித்து [illegible]ராய்ச் சென்றுதிரிவதோ! பலாப்பழத்தில் ஈ ஒட்டவேணுமானால் [illegible]யைக் கொண்டு போய் விடவேண்டுமா? வேண்டுவதில்லை. பலாப்பழம் ஓரிடத்திலிருக்க அதனுடைய வாசத்தைத் தானே பறந்து வருகிறது. அதுபோல படித்தவனொருவன் தன் ஊரிலேயே இருந்து தனதரிய வாசனையாகிய கல்வியைக் காட்டக்கூடாதா? கூடும்! இதையறியாது பணச்செலவு செய்கிறார்கள்.

கல்வி கற்கக் கற்க கசடற்ற ஜீவியம் செய்யலாமென்பது போக, கடன்வாங்கிச் செலவு செய்து, கடனைக் கழிக்கமாட்டாது இன்னொரு விதத்திலும் கடன் வாங்கவே கஷ்டப்படுகின்றனர். "தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்" என்பது போல சிறுவயது முதல் கடன் வாங்கிய பழக்கத்தை தொழிலை விடமுடியாதிருக்கிறார்கள். சிலர் யோசியாது முதலாவது கடன் வாங்கப் போகும்போது அங்காலையில் சூரியனின் உஷ்ணம் பெறாதிருக்கும் செந்தாமரையானது எவ்விதம் ஆதவனை வெயில் கண்டவுடன் தனதினியமலரை விரிக்கிறதோ, அதேவிதம் ஆவலோடெடுத்து வாங்கி கடனை எவ்விதம் கழிப்போம் என்று யோசனையில்லாது பேய்த் தன்மை வாய்ந்து ஏய்த்து பணத்தைவாங்கி செலவு செய்தோ அல்லது முந்தின கடனை கழித்தோ, பீத்தி வாங்கினதை கொடுத்தவனை இஷ்டமாயிருந்த சிநேகிதத்தையும் பிரித்துவிடுகிறது. பணத்திற்காக சிநேகம் மாறுகிறது. போனது போகட்டும் இனியாவது புத்திமாய் வாழ தயவாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன்.

M. [illegible] விருமாண்டித்தேவர்,
கீழக்குயில்குடி.

---



## மாடுகளுக்கு உண்டாகும் சில சாதாரணமான வியாதிகள்.

விவசாய விஷயமாயும் மற்றும் சமூசாரிகளுக்குப் பிரயோஜனமாக இப்பத்திரிகையில் எழுதப்படும் காரியங்களை கருத்தாய் வாசிப்பதோடு அவைகளைப் பத்திரப்படுத்தி அவசியம் நேரிடும்போது தாங்களும் மற்றவர்களும் பிரயோஜனமடையும்படி செய்யவேண்டும்.

முகவுரை.—இதன்பின் விவரிக்கப்படும் வியாதிகளில் ஏதாவது தங்கள் மாடுகளுக்குண்டான சமயங்களில் தேர்ந்த வைத்தியர்களின் உதவி சுலபமாகப் பெறமுடியாமலிருக்கிற குடியானவர்களுக்கும் மாடுகள் வைத்திருக்கும் மற்றவர்களுக்கும் உதவியாகச் சில குறிப்புகள் எழுதவேண்டுமென்று பல ஜில்லா உத்தியோகஸ்தர்கள் குறிப்பித்தபடி, இதனடியிற்கண்ட குறிப்புகள் எழுதப்பட்டிருக்கின்றன. இதைத் துண்டுப்பத்திரிகையில், மூன்று வியாதிகள் மட்டும் விவரிக்கப்படும். ஆயினும் இது உபயோகமாக இருப்பதாகத் தெரிந்தால் இதேமாதிரிப் பத்திரிகைகள் தயார் செய்யப்படும். வியாதிகளையும் அவைகளின் சிகிச்சைகளையும் இதில் எழுதியிருப்பது பூரணமானதல்ல; ஆயினும் சில சமயங்களில் வியாதியைக் குணமாக்கவும் வேறு சில சமயங்களில், தேர்ச்சியுள்ள வயித்தியர்களின் உதவி கிடைக்கும்வரை, வியாதியை மட்டுக்கு மிஞ்சாமலிருக்கச்செய்யவும் இதில் எழுதியிருப்பது போதுமானதாயிருக்கும். மதாஸ் பிரசிடென்ஸியில் இக்காலத்தில் கால்நடை வைத்திய விஷயமான உதவியை யாவரும் பெற்றுக்கொள்ளக்கூடுமென்று இங்கே சொல்லலாம். அவர்கள் அப்படிப்பட்ட உதவி வேண்டுமென்று தங்கள் தாசில்தாருக்காவது வேறு ரெவினியு உத்தியோகஸ்தருக்காவது எழுதினால் அந்த உத்தியோகஸ்தர் அந்தத் தாலூகாவுக்குரிய வெற்றெறிநெறி அஸிஸ்டணடுக்குத் தெரிவிப்பார். வாஸ்தவமாகவே விவசாய வேலைசெய்யும் மாடுகளுக்கு இலவசமாக வயித்தியஞ்செய்யப்படும். மற்ற மாடுகளின் வயித்தியத்துக்குச் சொந்தக்காரர் வெற்றெறிநெறி அஸிஸ்டண்டின் சவாரிச்செலவும் சொற்ப பீசும் கொடுக்கவேண்டியிருக்கும்.

1. புண்கள்:—புண்கள் பலவகைப்பட்டவைகளாகவும் பல அளவுகளைகளாகவும் இருக்கின்றன. அவைகளெப்படியிருந்தாலும் அவைகளுக்கு வயித்தியஞ்செய்கிறதில் உள்ள முக்கிய அம்சம் ஒன்றுகவேயிருக்கிறது. அதாவது:—அவைகளைச் சுத்தமாகவைக்கவேண்டும். பீனைல் (Phenyle) போன்ற சுத்திகரிக்கும் மருந்து கலந்த ஜலத்தினாலாவது அப்படிப்பட்ட மருந்து கிடைக்க வில்லையானால் கொதிக்க ஆறிய சாதாரண சுத்த ஜலத்தினாலாவது புண்ணைக் கழுவுவது முதலிற் செய்யவேண்டியது.

இதனால் புண்ணுக்குள் போய்ச்சேர்ந்திருந்த அழுக்கு நீங்கும். அதனால் அப்புண்ணுக்குள் (முள், கல போன்ற) அந்நிய வஸ்துக்கள் ஏதாவதிருந்தால் அதைக் கண்டுபிடிக்கக்கூடும். அப்படிப்பட்ட அந்நிய வஸ்துக்களை வெளியே எடுத்துவிடவேண்டும்.

புண் வயிற்றில் உள்ளதாயிருந்தால் அதன் வழியாகக் குடல் வெளிப்பட்டுக்கொண்டிருக்கலாம். அப்படியிருந்தால் அதை சுத்தமாகக்கழுவி முன்போல் உள்ளே வைத்துப் புண்ணின் வாயைத் தைத்துப் பொருத்தவேண்டும். சில சமயங்களில் இரத்த நரம்புகள் வெட்டுப்பட்டிருக்கலாம். அப்படி வெட்டுப்பட்டிருப்பது மிகுந்த இரத்தம் வடிவதனால் தெரியலாம். இரத்தம் வடிவதை நிறுத்துவதற்குப் புண்ணின் பொந்துக்குள் சுத்தமான சணப்பநார் என்ற சடப்பு அல்லது மென்மையான துணியைத் திணித்து அதை மூடும்படியாகப் புண்ணின் வாயைச்சேர்த்துத் தைத்துவிடவேண்டும். (தைத்த மூன்றும்நாள தையலை அவிழ்த்து நார் அல்லது துணியை எடுத்துவிடலாம். தைத்த மூன்று நாளுக்குள் இரத்தம் வடிதல் நின்றுவிடும் பின்பு அந்தப் புண்ணுக்கு, மற்ற சாதாரண புண்களுக்குச் செய்யும் வயித்தியம் செய்யவேண்டும்).

கால்கள்போன்ற தேகத்தின் பாகங்களில் மேலே சொல்லியபடி தைத்த புண்ணுக்குமேல் அழுத்தும்படியாகத் துணிப்பாளத்தை இறுக்கமாகச் சுற்றிக் கட்டக்கூடும் அப்படிக்கட்டுவதும் இரத்தம் வடிவதை நிறுத்துவதற்கு உதவியாயிருக்கும்.

அநேகமாகப் புண்களுக்குத் தைக்கவேண்டிய அவசியமிராது. தைத்த புண்கள் எவ்வளவு சீக்கிரமாக ஆறுமோ, அவ்வளவு சீக்கிரமாகத் தையாத புண்களும் சுத்தமாக வைத்திருந்தால் ஆறிவிடும். புண்களைச் சுற்றியுள்ள மயிரைக் கத்தரிக்கவாவது சிரைத்துவிடவாவது செய்தால், அவைகள் அதிக சீக்கிரமாக ஆறும். தினந்தோறும் ஒருதரமாவது புண்களைச் சுத்திகரிக்கும் மருந்து கலந்த ஜலத்தினாலாவது கொதிக்கவைத்த சுத்த ஜலத்தினாலாவது கழுவிச் சுத்தஞ்செய்யவேண்டும். பின்பு திரும்பச் சுத்தம் செய்யும்வரை புண்ணின்மேல் ஈக்கள் அணுகாமலும் அழுக்குப்படியாமலும் இருக்கும்படி, கூடுமானால் புண்ணை மூடும்படி துணிப்பாளத்தை இறுக்கமில்லாமல் சுற்றிக்கட்டவேண்டும்.

இப்படிச் செய்ய முடியவில்லையானால், புண்கள்மேல் கொஞ்சம் வேப்பெண்ணெயை இறகினால் தடவினால் ஈ அணுகாது.

சரியாகப் பாராமல் அசட்டையாக விட்டுவிடப்பட்ட புண்களில் புழுக்கள் உண்டாகியிருக்கலாம். தவிர அதில் துர்மாமிசம் வளர்ந்திருக்கலாம். அப்படியிருந்தால் மேலே விவரித்திருக்கிறபடி புண்ணைச் சுத்தம்பண்ணி அதற்குள் இருக்கிற புழுக்களைத் தட்டார் வைத்திருக்கும் சாமணத்தை(pincers) வாங்கி அதைக்கொண்டு வெளியே எடுத்துவிடவேண்டும். பின்பு கற்பூர தயிலத்தையாவது, கொஞ்சம் நல்லெண்ணெய் அல்லது தேங்காயெண்ணெயில் எவ்வளவு கற்பூரம் கரையுமோ, அவ்வளவையும் கரைத்து அந்த எண்ணெயையாவது அந்தப் புண்ணுக்குள் விடவேண்டும். இதனால் வெளியே எடுக்கப்படாமல் தப்பியிருக்கிற புழுக்கள் செத்துப்போம். இப்படிப் புழுக்களையெல்லாம் நீக்கியபின்பு அந்தப்புண்ணைக் கொஞ்சம் உப்பை ஜலத்திலகரைத்து அந்த ஜலத்தினால் கழுவி (ஈரத்தைத்துடைத்து உலர்த்தி) வேப்பெண்ணெய்தடவவேண்டும். துர்மாமிசம் வளர்ந்திருந்தால் அது கரைந்து போகும்வரை தினந்தோறும் அதை மயில்துத்தத்தினால் தேய்த்துவரவேண்டும். பின்பு அந்தப் புண்ணுக்குமேலே விவரித்திருக்கிறபடி வயித்தியஞ்செய்யலாம்.

2. கழுத்துப்புண்.— தங்களுடைய வேலை செய்யும் மாடுகளுக்கு இந்த வியாதி மற்றெல்லாவியாதிகளிலும் அதிகச் சாதாரணமாக உண்டாவதாகக் குடியானவர்களுக்கு அநேகமாகத் தெரியவரும்.

கழுத்துப்புண் வெகு லகுவாக உண்டாவதனால், அது சாதாரணமாகக் காணப்படுகிறது. ஆயினும் அடியிற்சொல்லப்படும் வயித்திய முறையை அநுசரித்தால, அதினால் அதிகக்கெடுதி நேரிடாமல் தடுப்பது அதிக சுலபமென்பதை ஞாபகத்தில் வைக்கவேண்டும்.

தோல் கொஞ்சம் நைவுறுவதனாலாவது உரைந்து போவதனாலாவது தோலுக்குள் நுகத்தடியால அழுக்கு தாக்கப்பட்டு உள்ளே செலுத்தப்படுகலினாலாவது கழுத்துப்புண் எப்போதும் முதல் முதல் ஆரம்பமாகிறது.

ஆகையால் கழுத்தில் உரைந்து புண்ணுண்டாகாதபடி பாரத்தை வண்டியில் சமனுகவிருக்கும்படி ஜாக்கிரதையாக ஏற்றி நுகத்தடியையும் கழுத்தையும் அழுக்கடையாமல் சுத்தியாகவைத்தால், கழுத்துப்புண்கள் இப்போது காணப்படுவதுபோல மிகுதியாக யில்லாமல் குறைந்துவிடும். எவ்வளவு ஜாக்கிரதையாயிருந்தாலும் கழுத்துப்புண்கள் சிலவேளை உண்டாகலாம். அப்படிக் கழுத்துப்புண் உண்டானபோது, அது என்னகாரணத்தினால் உண்டானாலும் சரி, மிக முக்கியமாகச் செய்யவேண்டியதென்னவென்றால், அந்தப்புண்ணுள்ள மாட்டைப் பூரணமாக வேலையில்லாமல் இளைப்பாறச்செய்யவேண்டும். அல்லது பிணையலடிப்பதுபோன்ற கழுத்தில் நுகத்தடிவைக்கவேண்டாத வேலைமட்டும் செய்யும்படி செய்யவேண்டும். நுகத்தடிவைத்துக்கொண்டிருக்குமட்டும் கழுத்துக்குணமடைவது அசாத்தியமாகும். குணமடைய

வில்லையானால் வாவரப்புண் அதிகப்பட்டுக் கடைசியாக மாட்டை வேலையே செய்யவொட்டாமல் தடுக்கும்படியாக அவ்வளவு கொடியதாய்விடும்.

கழுத்தில் நுகத்தடி தகும்பாகத்தில் அழற்சியும் நோவும் உள்ள தடிப்பைக் காண்பதனாலும் அதோடு அந்த இடத்தில் உரோமம் உதிர்ந்திருப்பதனாலும் கழுத்துப்புண்ணை அது ஆரம்பிக்கும்போது கண்டுபிடிக்கலாம். அப்படிக்கண்டுபிடித்த உடனே மாட்டை வேலையில்லாமலிருக்கச் செய்யவேண்டும். நோயுள்ள பாகத்தைக் கழுவிச் சுத்தப்படுத்திக் குளிர்ந்தஜலம் விடுவதைத்தவிர வேறொன்றும் செய்யவேண்டியதில்லை. நித்தம் இரண்டுவேளை நோவுள்ளபாகத்தில் குளிர்ந்த ஜலத்தைத்தொடர்ச்சியாக ஒருமணி நேரம்வரை விடவேண்டும். அந்தப்பாகம் ஈரமில்லாமல் உலர்ந்த உடனே நல்லெண்ணெய் அல்லது தேங்காயெண்ணெயில் கற்பூரத்தைக் கரைத்து அந்த எண்ணெயைத்தடவவேண்டும். நோவு நீங்கி உரோமம்முளைக்கும்வரை இந்தப்படி செய்துவரவேண்டும். மாட்டை வேலைசெய்யச்செய்தால் கழுத்திலுள்ள தடிப்பு அதிகமாகி மிருதுவும் மிகுந்தநோவும் உள்ளவீக்கமாகும். மாட்டைத்தொடுத்து வேலைசெய்யச்செய்தால் அந்தத்தடிப்பு அதிகப்படும். இப்படி அதிகப்பட்டபோது உள்ளநோவினால் மாடுபடுகிற கஷ்டத்தைப்பார்த்து அநேக சொந்தக்காரர் வேலைவாங்குவதை நிறுத்தி வைத்தியஞ்செய்யவிரும்புவார்கள். இந்த நிலைமையில் மூன்றுபங்கு கடுகுத்தூளும் ஒருபங்கு மிளகாய்த்தூளும் தண்ணீரில்சேர்த்து பசைபோலச்செய்த கொப்புளமருந்தை வீக்கத்திற்பூசவேண்டும். வீக்கத்துக்குள் சீ இருந்தால் அது மேற்படி கொப்புள மருந்தினால் உடைந்து வெளிப்படும். சீ இல்லையானால் வீக்கம் வற்றிப்போம். வீக்கம் உடைந்தால், அதனால் உண்டாகிய புண்ணுக்கு, சாதாரணமான புண்ணுக்கு வயித்தியம்செய்வது போல வயித்தியம் செய்யவேண்டும். இந்தப்புண் ஆறுவதற்கு நெடுங்காலம் செல்லும். வெடியாமல் வீக்கம் வற்றிவிட்டால் கடினமான சிறுகட்டி பெரும்பாலும் மிஞ்சியிருக்கும். இது மிகுந்த தொந்தரவுகொடுமானது. இது, திரும்ப வேலையாரம்பித்தவுடனே நுகத்தடியினால் நசுங்கி மறுபடியும் வீங்க ஆரம்பிக்கும். இந்தமாதிரி பலதடவை வீங்கினால், கட்டி வரவரப் பெரியதாகிக் கடைசியாக நுகத்தடியே வைக்கமுடியாதபடியாய்விடும். அப்படியாய்விட்டால் தேர்ந்த வைத்தியரைக்கொண்டு கட்டியை அறுத்து அப்புறப்படுத்துவதுதான் செய்யக்கூடியது. அப்படி அறுத்ததினால் உண்டான புண் ஆற நெடுங்காலம்பிடிக்கும். ஆகையால் கழுத்துப்புண்ணுக்கு ஆரம்பத்திலேயே சரியான வைத்தியஞ்செய்யவேண்டியது அவசியமென்பது தெளிவானது.

கொம்பு முறிவு:—கொம்பு (a) கழலுவதனாலாவது (b) முறிந்து போவதனாலாவது கொம்புகளுக்குகெடுதி நேரலாம்.

காரணங்கள்:—இந்தக்கெடுதி நுகத்தடியிற் கொம்பு சாடுவதனால் உண்டாகிறது. அப்படி உண்டாவது வண்டி, சமபாரம் வைக்கப்படாமல், சாய்வான பாதையில் வேகமாய்ப்போகும்போது விசேஷமாக நேரிடுகிறது.

கொம்பு முறிவு இப்படி உண்டாவதல்லாமல் மாடுகள் ஒன்றோடொன்று சண்டைபோடும்போதும் உண்டாகிறது. இந்தக் கெடுதி கொம்பு கழன்றதனால்மட்டும் உண்டாயிருந்தால், உள்ளே இருக்கிற கொம்புக் குருத்து முறிபடாமல் சிவந்த நிறமுடையதாயிருக்கும்.

கொம்பு கழன்றிருந்தால் செய்யவேண்டிய சிகிச்சை:—வெளியாகத்தெரிகிற கொம்புக்குருத்தை பீனைல் (Phenyle) கலந்த ஜலத்தினாலாவது கொதித்தாறவைத்த சுத்த ஜலத்தினாலாவது தினந்தோறும் வேதனைகிடமில்லாமல் மெதுவாகக்கழுவி உலர்ந்தபின்பு தார் எண்ணெய் பூசவேண்டும். கொம்பு திரும்ப வளர்ந்துவிடும்வரையும் மாட்டின் கழுத்தில் நுகத்தடிவைக்கக் கூடாது.

கொம்பு பூர்ணமாகமுறிந்தால், அது உள்ளேயிருக்கிற குருத்தோடு முறிந்திருக்குமாதலால், அதிக அபாயமானது. இந்த அபாயத்தின் தன்மை கொம்பின் எந்தப்பாகம் முறிந்திருக்கிற தென்பதைப் பொறுத்திருக்கிறது. மேற்படி முழுமுறிவு கொம்பில் எவ்வளவுக்குக் கீழே இருக்கிறதோ அவ்வளவுக்கு மண்டைக்குள் உள்ள துவாரங்களில் இரத்தம் முதலியவைகள் தப்பிப் பிரவேசிக்கக்கூடியதாய், அதிக அபாயகரமானதாயிருக்கும்.

கொம்பு முழுமுறிவுக்குச் சிகிச்சை.—முறிவு கொம்பின் அடிப்பாகத்துக்கு அருகாக நேராமலும் கொம்புமுழுதும் துண்டாக முறியாமலும் இருந்தால முறிந்த பாகங்களைப் பொருத்த முயற்சி செய்வது உசிதமானது. அப்படிப் பொருத்துவதில் சித்தியடைவதற்கு முறிவு நேரிட்டபின் கூடிய சீக்கிரமாக முறிபட்டபாகங்களின் விளிம்புகளை அவைகள் இயல்பாக இருக்கும் இடத்தில் இருக்கும்படி ஒன்றாக உறுதியாகச் சேர்க்கவேண்டும். முறிபட்ட பாகங்களின் விளிம்புகளை ஒன்றாக சேர்க்குமுன் பீனைல் (Phenyle) கலந்த ஜலத்தினாலாவது கொதிக்கவைத்தாற்றிய குளிர்ந்த ஜலத்தினாலாவது காயத்தை ஜாக்கிரதையாகக்கழுவவேண்டும். அதன்பின் விளிம்புகளை அவைகள் இருக்கும் ஸ்தானத்தில் இருக்கும்படி மெதுவாகவும் கவனமாகவும் உறுதியாகப் பொருத்தவேண்டும். முறிந்தபாகங்கள் விலகாமல் பொருந்தியிருக்கும்படி கொம்பைச் சுற்றித் துணிப்பாளத்தால் சுமாராக இறுக்கமாகக்கட்டவேண்டும். இந்தக் கட்டின்மேல் இன்னும் ஒரு இறுக்கமான துணிப்பாளக்கட்டுச் சுற்றிக்கட்டி அதன்மேல் தார் எண்ணெய் பூசவேண்டும். உத்தேசமாக மூன்றுவாரக்காலம் கட்டுகட்டினபடியே இருக்கவேண்டும். இதன் மத்தியில் கழுத்தில் நுகத்தடிவைக்கக்கூடாது.

கொம்புமுழுதும் சமூலமாக முறிந்துபோய் (குருத்தல்லாத) வெளிக்கொம்போடு தொங்கிக்கொண்டிருந்தால், அப்படித் தொங்கிக் கொண்டிருப்பதைக் குணமாக்க முயல்வதில் பிரயோஜனமில்லை. தொங்கிக்கொண்டிருக்கிற துண்டைக் கூர்மையான கத்தியினால் அறுத்துவிடவேண்டும். அறுத்தபாகத்திலிருந்து மிகுதியாக இரத்தம் வடியும். அதை நிறுத்துவதற்குக் குளிர்ந்த ஜலத்தில் முக்கிய துணிப்பாளத்தால் பலதடவை சுற்றிச்சுற்றிக்கட்டவேண்டும். பின்பு செய்யவேண்டிய சிகிச்சை மற்றச் சாதாரண புண்களுக்குச் செய்யும் சிகிச்சையே. புண்ணின் உட்பாகத்தைச் சுத்தமாய் வைப்பதற்கு விசேஷகவனம் செலுத்தவேண்டும். மருந்துபோட்டபின்பு புண்ணுள்ள கொம்புமுளையைச் சரியாக மூடத்தக்க தோல் குல்லாவினால் மூடிவைப்பது நல்ல உபாயம்.

## விவசாய கலாசாலை, கோயமுத்தூர்.

விவசாயத்திற்கு முக்கியமாய் வேண்டியது அநுபோகமாதலால், குடியானவர்களும், மிராசுதார்களும் விவசாயத்திற்காகக் கற்றுக்கொடுக்க ஒரு கலாசாலையால் என்ன உபயோகம் என்று அடிக்கடி கேட்கிறார்கள். விவசாயம் தலைமுறை தலைமுறையாய் வெகுகாலப் பழக்கத்திலிருந்து கற்றுக்கொள்ளப்படுகிறது. இந்தப் பழக்கத்தினால் வரும் அறிவானது புஸ்தகப்படிப்பினால் சம்பாதிக்கக் கூடுமென்பது அவர்களுக்கு சிரிப்புக்குக் காரணமாகிறது. ஆனதுபற்றியே அவர்கள் தங்களுடைய பையன்களை விவசாய கலாசாலைக்கு அனுப்புவதில்லை.

நிலத்தில் விவசாயம் இன்னதென்று தெரியாத வேறு சில படிப்பில் விசேஷ பற்றுள்ளவர்களாய் புஸ்தகம் வாசிப்பதினாலும் உடன்பிரசங்கம் கேட்பதினாலும் பயிர்த்தொழிலில் மிகவும் தேர்ச்சியடையலாம் என்று எண்ணுகிறார்கள். இவ்விருவித அபிப்பிராயங்களில் இது சரி இது தப்பு என்று சொல்லமுடியாது "எட்டுச்சுரைக்காய் கறிக்காகாது" என்பது தெரிந்த விஷயமே. ஆனால் அநுபவமாத்திரமே போதுமென்று சொல்லத்தக்கதுமல்ல. விவசாயத்தை நன்றாய் போதிக்கவேண்டுமென்றால் அநுபவமும் விவசாய நூல் படிப்பும் கலந்தேயிருக்கவேண்டும். சாதாரணமாய் குடியானவர்களுக்கு அநுபவத்தினால் அநேக விஷயங்கள் தெரியும். ஆனால் அவர்களுடைய அறிவு பரம்பரையாய் பழக்கத்தினால் வந்ததே. இன்ன காரணத்தையொட்டி இன்ன முறை கையாடப்படுகிறதென்பது அவர்களுக்குத் தெரிகிறதில்லை. எந்த விஷயமானாலும் சரி, நன்றாய் காரணங்களுடன் அறிந்து செய்வது காரணமறியாது மாமூலாய் செய்வதைப்பார்க்கிலும் மேலானது. ஆகையால் விவசாய நற்பழக்கங்களின் காரணங்களை நன்றாய் தெரிந்துபுகட்டுவது விவசாயப் படிப்பின் முக்கியமான பாகம். இதன்றி குடியானவர்கள் தெரிந்துகொள்ளவேண்டிய மிகவும் உப-



யோகமான விசேஷ சாஸ்திர ஞானங்கள் எவ்வளவோ இருக்கின்றன. இவைகள் சாதாரண அநுபோகத்தினால் கிட்டாது. உதாரணமாக ரஸாயன விஷயங்களைப்பற்றியும், பயிர்களின் நோய் கொடிகள் புழுப் பூச்சிகள் விஷயமாயும், தண்ணீர் இறைக்க இஞ்ஜின், பம்பு, இவைகளின் விஷயமாயும் தெரியவேண்டிய சங்கதிகள் குடியானவர்கள் கற்றுக்கொள்ளவேண்டியதே.

ஆகவே கோயமுத்தூர் விவசாய காலேஜ் என்பது என்ன, அதில் நடைபெறும் வேலைகள் என்ன என்பதை சற்று கவனிப்போம். கோயமுத்தூருக்கு மேற்கே சுமார் 3 மைல் தூரத்தில் நேர்த்தியான கட்டடம் ஒன்று அமைக்கப்பெற்று காலேஜ் நடந்தேறி வருகிறது. தற்போது இந்தக் கட்டடத்தில் விவசாயக் கல்வி கற்பிக்கும் உபாத்தியாயர்களும் மாணாக்கர்களும் ஒரு புறமாகவும், கமதொழில் சம்பந்தமான விஷயங்களை ஆராய்ச்சி செய்தும் பலவித பயிர் இனங்களை விருத்திசெய்தும் வருகிற அநேகவித கிருஷி சாஸ்திர உத்தியோகஸ்தர்கள் மற்றொரு புறமும் இருந்து வேலை செய்து வருகிறார்கள்.

உபாத்தியாயர்களுக்கும் மாணாக்கர்களுக்கும் மட்டும் பிரத்தியேகமாக ஒரு கட்டடம் நூதனமாய்க் கட்டப்பட்டு வருகிறது. இன்னும் ஒரு வருஷத்தில் தயாராய்விடும். இந்த கலாசாலையை அடுத்து சுற்று நாலா பக்கங்களிலும் சுமார் 500 ஏக்கர் பூமியிருக்கிறது. இந்த பூமி கரிசல், செவ்வல், நஞ்சை புஞ்சை, தோட்டங்களுடன் கூடியது. இந்தப் பண்ணையில் இப்படி அநேகவித பூமிகளிருப்பதால் எக்காலத்திலும் ஏராளமான பயிர் தினுசுகள் இருந்துகொண்டேயிருக்கும். தற்கால இயந்திர உதவிகளை வைத்து, பாலிலிருந்து வெண்ணெய் முதலிய வஸ்துக்களை எடுக்கும்பொருட்டு அமைக்கப்பட்ட ஒரு கட்டிடமும், பாலுக்காகத் தேவையான பசுமாடுகளும் இருக்கின்றன.

வேண்டிய கருவிகள் செய்கிறதற்கு கொல்லர் தச்சர்ப்பட்டறைகளும், அநேகவிதமான உழவு கருவிகளும் இயந்திரங்களும், இந்தப் பண்ணையில் பார்க்கலாம். மேலும் பண்ணையைச் சேர்ந்த கால்நடைகளுக்கும் குடியானவர்களுடைய மாடுகளுக்கும் வைத்தியம் செய்ய மாட்டு ஆஸ்பத்திரி இங்கே ஒன்று உண்டு. ஆகவே குடித்தனத்திற்கு வேண்டிய எல்லா விஷயங்களையும் தெரிந்துகொள்வதற்குப் போதுமான சாதனங்கள் யாவற்றும் இந்தக் கலாசாலையில் அமைக்கப்பட்டிருக்கிறதென்பது மேல் விவரிக்கப்பட்டவைகளால் நன்கு விளங்கும். கற்றுவரும் மாணாக்கர்களுக்கு அவர்கள் கற்க வேண்டியவை யாவும் கற்பித்தும் காண்பிக்கப்பட்டும் வருகின்றன. பண்ணையிலும், பாடசாலையிலும், கால்நடைசாலையிலும், ஆஸ்பத்திரியிலும், பட்டறைகளிலும், நேரில் தாங்களே வேலை செய்கிறதினாலே ஒவ்வொரு விஷயத்தையும் நன்றாய்த் தெளிவுறத் தெரிந்துகொள்ளுகிறார்கள்.

பூமிகளை பண்படுத்த விவசாய அபிவிருத்தி செய்து லாபமடைய நோக்கங்கொண்டிருக்கிற குடியானவர்களும் பெரிய மிராசுதார்களும் இந்தக் கலாசாலைக்குத் தங்கள் பையன்களைப் படிக்க அனுப்புவதைப்பார்க்கிலும் உசிதமானதொன்றுமில்லை. இதன்றியும் இந்த காலேஜ் கல்விகற்று பரீக்ஷையில் மேன்மையாய்த் தேர்ந்த மாணாக்கர்களுக்கு விவசாய டிபார்ட்மெண்டில் எப்பொழுதும் உத்தியோகம் கிடைக்கும். நாளாவர்த்தியில் விர்த்தியடைந்துவரும் டிபார்ட்மெண்ட் இது. இதில் பிரவேசிக்கும் மனிதர்களுக்கு நல்ல நிலைமை ஏற்படக் காரணம் உண்டு. ஒவ்வொரு வருஷமும் சுமார் 50 பையன்கள் சேர்த்துக்கொள்ளப்படுகிறார்கள். மொத்தத்தில் 120 பையன்கள் பிரதிவருஷமும் படித்துவருகிறார்கள். அவர்கள் பல ஜில்லாக்களிலிருந்தும், பல வகுப்பினராகவும், தெரிந்தெடுக்கப்படுகிறார்கள்.

பூஸ்திதியுள்ளவர்கள், குடித்தனம் செய்கிறவர்கள் இவர்களுடைய பையன்கள் இந்தக் காலேஜில் படிக்க மற்றவர்களைக்காட்டிலும் தகுந்தவர்களென்று கருதப்படுகிறார்கள்.

படிப்புக்காகவும் காலேஜில் இருந்து வசிக்கிறதற்காகவும் பையன்களுக்கு செலவு ஒன்றுமில்லை. உபாத்தியாயர்களே எல்லா விஷயங்களையும் சொல்லிக்காண்பித்துவருகிறதினால் விசேஷமாய் புஸ்தகங்கள் வாங்கவேண்டிவராது.

இந்தக் காலேஜில் இரண்டு தரப்படிப்புகள் நடந்து வருகின்றன:—

ஒன்று.—இரண்டு வருஷப்படிப்பு. இதில் சேர விரும்புகிறவர்கள் தேகவன்மையுள்ளவர்களாயும் சொல்லும் விஷயங்களை கிரஹிக்கிறதற்குப் போதுமான இங்கிலீஷ் தெரிந்தவர்களாயுமிருக்கவேண்டும். ஸ்கூல் பைனல் பரீக்ஷை கொடுத்தவர்களாயிருப்பது நலம். இந்தப் படிப்பில் முக்கியமாய் பிள்ளைகளே எல்லா வேலைகளையும் செய்து பழக்கத்தில் தேர்ச்சியடைகிறார்கள். சாஸ்திர விஷயங்கள் அவ்வளவாகக் கற்றுக்கொடுப்பதில்லை. இந்த இரண்டு வருஷப்படிப்பின் முடிவில் பரீக்ஷைதேறும் பிள்ளைகளுக்கு "விவசாய அநுபவத்தேர்ச்சி" ஸர்டிபிகேட் ஒன்று கொடுக்கப்படுகிறது.

மற்றொன்று.—மூன்று வருஷப்படிப்பு. இதற்கு மதராஸ் யூனிவர்ஸிட்டி என்ற சர்வ கலாசாலை இண்டர்மீடியேட் பரீக்ஷையில், ஒன்று இரண்டு வகுப்புகளில் தேறினவர்கள் சேர்க்கப்படுகிறார்கள். இதில் விவசாய சம்பந்தமான பலவேறு சாஸ்திரங்களில் பயிற்சியும் மாணாக்கர்கள் பெற்றுவருகிறார்கள். இந்த மூன்று வருஷப்படிப்பின் கடைசியில நடைபெறும் பரீக்ஷையில் தேறுகிறவர்களுக்கு மதராஸ் யூனிவர்ஸிட்டியார் "பி. எஸ், ஸி." என்ற பட்டத்தை அளிக்கிறார்கள். இந்தத் தரத்தில் சேரும் பையன்களுக்கு உபகாரமாக மாதம் ஒன்றுக்கு சில உதவிச் சம்பளங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

காலேஜில் சேர உத்தேசிப்பவர்கள் முதல்தரப் படிப்பிற்கு மே மாதம் 15-ம் தேதிக்குள்ளும், இரண்டாந்தரமாகிய (பி. எஸ். ஸி.) படிப்பிற்கு ஜூன் மாதம் 15-ம் தேதிக்குள்ளும் மனுசெய்துகொள்ளவேண்டும்.

மனுபாரங்களும் மற்றும் விஷயங்களும் கோயமுத்தூர் விவசாய காலேஜ் பிரின்ஸிபாலிடமிருந்து மார்ச்சு மாதம் 1-ம் தேதிக்குமேல் எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

## பொது வர்த்தமானம்.

### டமாஸ்கஸில் கொள்ளை.

150 கொள்ளைக்காரர்கள் டமாஸ்கஸ் நகருக்குள் புகுந்து கொள்ளை அடிக்க ஆரம்பித்தனர். கவசந்தரித்த பிரெஞ்சு பீரங்கி மோட்டார்கள் அவர்களைத் தாக்கியதில் 10 பேர் இறந்துபோனார்கள். 15 பேர் காயப்பட்டனர். பிரெஞ்சுக்காரர்களில் எவரும் காயப்படவில்லை.

8-ம் தேதியன்று நடைபெறும் ஜெர்மன் மந்திரி சபைக்கூட்டத்தில் ஜெர்மனி சர்வதேச சங்கத்தில் சேர்ந்துகொள்வதற்குரிய நகலைத் தயாரிக்கும்.

சென்ற வருஷம் யுனைடெட் ஸ்டேட்ஸில் 4593000 மேல் பருத்தியை சப்ளை செய்தது. இவ்வருஷம் 51;9000 மேல் சப்ளை செய்திருக்கிறதாகத் தெரிகிறது.

### மதுரை முனிசிபாலிட்டி.

சென்னை கவர்ன்மெண்டார் மதுரை நகரின் சென்ற வருஷ நிர்வாகத்தைப்பற்றி பிறப்பித்துள்ள உத்தரவில் குறிப்பிடுவதாவது:—

நிர்வாகம் மொத்தத்தில் திருப்திகரமாயிருந்தது. ஆனால் வரிவசூல்வேலை திருப்தியாயில்லை. வரிவசூல் ஒரு முக்கியமான கடமை. 100-க்கு 88 அல்லது 90 வீதமே வரிவசூலாகிறது. ஒரு லட்சத்துக்கதிகமான தொகை வசூலாகவில்லை. வரி அதிகரித்திருப்பதால் பலர் கொடுக்க மறுத்ததாகத்தெரிகிறது. ஆயினும் பாக்கியை வசூலிக்க திடமான நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டு வருகின்றது. மரண விகிதம் 10 ஆயிரத்துக்கு 324-லிருந்து 359-க்கு உயர்ந்துவிட்டது. காலராவினால் 396 பேரும் பிளேக்கினால் 41 பேரும் மாண்டனர். யாத்ரீகர்மீது வரிவிதித்ததின் மூலமாக 65 ஆயிரத்து சொச்சம் ரூபாய் நகருக்கு வரும்படி கிடைத்தது. முனிசிபல் கவுன்சில் கூட்டங்களில் ஆஜர் விகிதம் சராசரி 100-க்கு 48 தான் இருக்கிறது. அதிக சிரத்தை காட்டவேண்டும். பள்ளிக்கூடத்துக்குப்போக வயதான பிள்ளைகளில் 100-க்கு 28 பேரும் பெண்களில் 100-க்கு 62 பேரும் பள்ளிக்கூடத்துக்கு இன்னும் போகவில்லை. 1924 ஏப்ரல் 1 தேதி கட்டாய கல்வி அமுலுக்கு வந்தது.

### கோத்தமங்கலம் கொலை கேஸ்.

சென்ற மாதம் 21 தேதி காணுகோத்தானுக்கும் கொத்தமங்கலத்திற்கும் மத்தியில் ஒரு தபால்காரனை சிலர் தாக்கி அவ

லைக் கொலைசெய்துபோட்டு சுமார் 1000 ரூபாயை அடித்துக்கொண்டு போய்விட்ட விஷயம் தெரிந்ததாகும். இப்பொழுது அந்தக் கொலையில் சம்பந்தப்பட்டவர்களென சந்தேகப்பட்டு சிலர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்களில் முக்கியமாக ஒரு வல்லயனும், ஒரு செட்டிப்பிள்ளையும் சம்பந்தப்பட்டிருக்கிறார்களாம். போலீஸாரும், தபால் இலாகா அதிகாரிகளும் விசாரணை செய்து வருகிறார்கள். நேற்று முன்தினம் அந்தத் தபால்காரனைக் கொல்லுவதற்கு உபயோகப்படுத்தப்பட்ட அரிவாள் ரத்தம் அடையாளத்தோடு சென்னைக்கு அனுப்பப்பட்டிருக்கிறதாகத் தெரிகிறது. இதிலிருந்தேனும் காருகோத்தான ஸப் ஆபீசோடு பிணைக்காமல் கொத்தமங்கலத்திற்கு தனியாக ஒரு ஸப்போஸ்டாபீசை தபால் அதிகாரிகள் ஏற்படுத்துவார்களாக. ஏற்கனவே பலதடவை முறையிடப்பட்டிருக்கிறது. போஸ்டல் ஸுப்பரிண்டெண்ட் ஸ்ரீமான் நாராயண அய்யர் அவர்கள் கொத்தமங்கலத்தில் ஒரு தனி ஸப் ஆபீஸ் ஏற்படுத்துவதோடு காருகோத்தான் ஆபிஸில் வேலைகள் அதிகமாய் இருப்பதாலும், மணியார்டர் இன்ஷியூரென்ஸ்கள் முதலியவைகள் அதிகமாயிருப்பதாலும் சப் ஆபீசுக்கு இன்னுமொரு குமஸ்தா நியமிக்கவேண்டியது நியாயமும் அவசியமுமாகும். போஸ்டல் வேலைகளுக்கே இரண்டு ஆசாமிகள் வேண்டியிருக்கும்பொழுது தந்தியாபீசும் [illegible]திருப்பதால் அவசியம் மற்றொரு குமாஸ்தா வேண்டுவது முக்கியமென்று மகா ஜனங்கள் அதிகாரிகளுக்கு மனுசெய்து கொண்டிருப்பதாகவும் தெரிகிறதென்று நமது விசேஷ நிருபர் எழுதுகிறார்.

## சென்னையில் மோட்டார் விபத்து.

நேற்று இரவு சென்னை பூக்கடை போலீஸ் ஸ்டேசனுக்கருகில் ஒரு மோட்டார் விபத்து நேர்ந்தது. டில்லியைச்சேர்ந்த டாக்டர் கவ்ரவ்சிங் குஷ்டரோக நிவாரண சங்கக் காரியதரிசியுடன் ரிக்ஷாவில் சென்றுகொண்டிருக்கையில் ஐரோப்பிய ஸ்திரீ ஒருத்தியால் ஓட்டப்பட்ட மோட்டார் வண்டி அதிகவேகமாக வந்து பின்பக்கமாக மோதி அவரைத் தூக்கி எறிந்துவிட்டது. அவருக்குப் பலமான காயங்களேற்பட்டன. வலதுகால் எலும்பு ஒடிந்துவிட்டது. உடனே ஜெனரல் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டார். அவர் நேற்றிரவு டில்லிக்குப்புறப்படுவதாக இருந்தார். இன்று விசாரித்ததில் ஆஸ்பத்திரியில் குணமடைந்து வருவதாகத் தெரிகிறது.

## ஒரு ஜில்லா போர்டு மெம்பரின் தற்கொலை.

நரசபுரம் காசியும் தாலுகா ஜில்லா போர்டின் அங்கத்தினரும் பெரிய தனவந்தருமான, 35 வயதுள்ளவருமான ஸ்ரீமான் குமாரசாமிக் கவுண்டர் தம்மைத் தாமே சுட்டுக்கொண்டு தற்கொலை புரிந்துகொண்டதாக செய்திகிடைத்திருக்கிறது. இவர் சென்னை சட்டசபை அங்கத்தினரான ஸ்ரீமான் வெள்ளியங்கிரிக் கவுண்டரின் மைத்துனர். இச்சம்பவம் நேற்றைத்தினம் காலையில் செம்மேட்டில் நடைபெற்றது. வைத்திய உத்தியோகஸ்தரான டாக்டர் சால்மர்ஸ் அவசரமாக அவ்விடம் சென்றார். ஆனால் அவர்போய் சேருமுன்பு ஸ்ரீமான் குமாரசாமிக் கவுண்டர் இறந்துவிட்டார். தற்கொலையின் காரணம் தெரியவில்லை. சென்னை சட்டசபைக்கூட்டத்திற்கு போயிருந்த ஸ்ரீமான் வெள்ளியங்கிரிகவுண்டர் இன்று காலை இங்கு வந்து சேர்ந்தார் என நமது நிருபர் தந்திமூலம் அறிவிக்கிறார்.

## பைத்தியம்பிடித்த போலீஸ் சேவகன்.

சிட்டகாங் மலைப்பிரதேசத்திலிருந்து பின்கண்ட செய்தி கிடைத்திருக்கிறது. ஒரு ஆயுதபாணியான போலீஸ் சேவகன் மற்றொரு சேவகனை சுட்டுக் கொன்றுவிட்டு நான்கு மாணவர்களைக் காயப்படுத்திவிட்டான். பிறகு அவன் சப்டிவிஷனல் ஆபீசர் சுரேந்திர ராவையும், டெபுடி கமிஷனர் மிஸ்டர் ஸ்டீபன்ஸையும் தாக்கினான். பின்னவருக்குப் பலமான காயம் ஏற்பட்டிருக்கின்றது. பிறகு அவன் காளி கோவிலுக்குச்சென்று பூசாரியையும் காயப்படுத்திவிட்டான். கடைசியாக அவன் அங்கு கைது செய்யப்பட்டுவிட்டான்.

## ஸப்இன்ஸ்பெக்டர்மீது வழக்கு.

இன்று தண்டு கௌரவ மாஜிஸ்திரேட்டு முன்பாக ஒரு முக்கியவழக்கு விசாரணை நடந்தது. சென்ற ஜனுவரி 20 தேதி சப் இன்ஸ்பெக்டர் மாலி என்பவர் ஒரு சோதனை வாரண்டை எடுத்துக்கொண்டு ஹாஜிலால் என்பவருடைய சைகிள் கடைக்குள் புகுந்து பம்பாய் குதிரைப் பந்தயத்திற்கு அவர் ரகஸ்யமாகப் பந்தயம் பெறுகிறாரா என்று பார்க்கமுயன்றார். கடையில் ஒரு அறையில் திரை தொங்கவிடப்பட்டிருந்தது. ஹாஜிலாலின் மனைவி அந்தத்திரைக்கு அப்பால் இருந்தாள். சப்இன்ஸ்பெக்டருடன் அதிகமான போலீசார் வந்திருந்தால் ஹாஜிலால் தன மனைவி படுத்திருக்கும் இடத்திற்கு அவர்கள் செல்லக்கூடாதென ஆக்ஷேபித்தார். தம்மைத்தடுத்தால் துப்பாக்கியால் சுட்டுவிடுவதாக சப்இன்ஸ்பெக்டர் பயமுறுத்தினாராம். இதனால மனைவிக்கு அதிக பீதியேற்பட்டுவிட்டது. போலீசாரின் எதிரிலேயே அவளுக்கு அவசரப் பிரசவம் ஏற்பட்டு குழந்தை இறந்துபோய் விட்டது. வாதி ஒரு ஐரோப்பிய ஸ்திரீ வைத்தியரை வரவழைத்துத் தமது மனைவிக்கு சிகிட்சை செய்தார். மாஜிஸ்திரேட் இன்று வாதியின் வாக்குமூலத்தைக்கேட்டுக் கொண்டு சப்இன்ஸ்பெக்டர் மாலிக்குச் சமன் பிறப்பித்தார். பாரிஸ்டர் காஸ்வாலா வாதிக்காக ஆஜரானார். சப்இன்ஸ்பெக்டருக்கு கவர்ன்மெண்ட் வக்கீல ஆஜரானார்.

## ஒரு ஸ்திரீயின் கொலை.

ராமபதிராய் என்பவர்மீது கொலைக்குற்றம், உத்தேசமின்றி கொலை செய்த குற்றம், பலமான காயம உண்டுபண்ணின குற்றம ஆகிய மூன்றும் கூறப்பட்டுள்ளன. வழக்கு இன்றுஹைகோர்ட்டு செஷனில் ஜஸ்டிஸ் பக்லண்டு முன்பாக விசாரணைக்கு வந்தது. விசேஷ ஜூரார்களைக்கொண்டு விசாரணை நடந்து வருகிறது. எதிரி பம்பாயில ஸ்டாண்டர்ட் மில்லில் எலக்டிரிகல் இன்சினீயராக இருப்பவர். சென்ற அக்டோபர்மீ அவர் கல்குத்தாவிற்கு ரஜாவில் வந்ததில் ஒரு ஸ்திரியோடு நட்புக்கொள்ள ஏற்பட்டது. நவம்பர் 5௳ ராமபதி தமது மூன்று நண்பர்களுடன் அந்த ஸ்திரீயின் வீட்டுக்குள் சென்றார். ஆனால் அவளுடைய அறையில் இன்னும் இரண்டு மனிதர்கள் இருந்தனர். ராமபதியின் நண்பர்கள் வாசற்படியில் காத்திருந்தனர். ராமபதி உள்ளே சென்றதும் ஸிதிரீக்கும் அவருக்கும் சண்டை யேற்பட்டது. அவர் போய்விட்டு சீக்கிரம் திரும்பிவந்தார். மீண்டும் சண்டை ஏற்பட்டது. அப்பொழுது ராமபதி துப்பாக்கியால் அந்த ஸ்திரீயை நான்கு தடவை சுட்டதாக கூறப்படுகின்றது. சிறிது நேரத்திற்கெல்லாம அவள இறந்துவிட்டாள். தயக்குப்போட்டியாக இருப்பவரென்று அவர்கருதிய லக்ஷ்மிநாராயணன் என்பவரை அடுத்தபடியாக சுட்டார். ராமபதியின் இரண்டு நண்பர்களும் உள்ளேவந்து அவரைக்கண்டித்தவுடன் அவர்களுள் ஒருவரையும் சுட்டார். கடைசியாக ராமபதி தம்மையே சுட்டுக்கொண்டார். போலீசார் இதற்குள்ளாக ஸ்தலத்திற்கு வந்து காயம்பட்டவர்களை ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவிட்டு ராமபதியின் துப்பாக்கியை கைப்பற்றிக்கொண்டனர் என்று பிராஸிக்யூஷன் தரப்பில் வழக்கை எடுத்துரைக்கப்பட்டது.

வ. மி.

## பஞ்சாங்கம்.

### 1926௵—மார்ச்சுமீ

● அமாவாசை ○ பௌர்ணமி *கிருத்திகை.

| வாரம் | தேதி | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஞாயிறு | ... | 7 | ●14 | 21 | 28 | ... |
| திங்கள் | 1 | 8 | 15 | 22 | ○29 | ... |
| செவ் | 2 | 9 | 16 | 23 | 30 | ... |
| புதன் | 3 | 10 | 17 | 24 | 31 | ... |
| வியா | 4 | 11 | *18 | 25 | ... | ... |
| வெள் | 5 | 12 | 19 | 26 | ... | ... |
| சனி | 6 | 13 | 20 | 27 | ... | ... |

| வாரம் | துரோதன ௵ மாசி 18௳—பங்குனி 18௳ | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஞாயிறு | ... | 24 | ●1 | 8 | 15 | ... |
| திங்கள் | 18 | 25 | 2 | 9 | ○16 | ... |
| செவ் | 19 | 26 | 3 | 10 | 17 | ... |
| புதன் | 20 | 27 | 4 | 11 | 18 | ... |
| வியா | 21 | 28 | *5 | 12 | ... | ... |
| வெள் | 22 | 29 | 6 | 13 | ... | ... |
| சனி | 23 | 30 | 7 | 14 | ... | ... |



## வரப்போகும் வைசிராய்.

மேன்மைதங்கிய லார்ட் ரீடிங் பிரபுவுக்கு பிறகு இந்தியாவின் கவர்னர்-ஜெனரலாக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் லார்ட் ஆனரபில் இ. எப். எல். உட் என்பவருக்கு சம்மன்னர் பிரான் 'Baron Irwin of Kiorley-under-Dale in the country of York, என்னும பட்டத்தை அளித்தாராம்.

## ஓர் வக்கீலின் ஒழுங்கீனம்.

அலகபாத் ஹைக்கோர்ட்டு வக்கீல்களில் ஒருவரான 'ரகுபீர் பிரசாத' என்பவர் தாம் நடத்திய ஓர் வழக்கில் பொய்ச் சாட்சியம் கற்பித்தும, பொய் தஸ்தவேஜுக்களை ஏற்படுத்தியும வழக்கை ஜெயிக்க முயன்றதாக குற்றம் சாட்டப்பட்டு அலகபாத் ஹைகோர்ட்டு ஜட்ஜிகளான சீப் ஜஸ்டிஸ் and மிஸ்டர் ஜஸ்டிஸ் விண்ட்ஸே அவர்கள்முன் விசாரணைக்குவந்து எதிரி குற்றவாளி என்று ஏற்பட்டு வக்கீல் 'ரகுபீர் பிரசாத்' என்பவருக்கு ஐந்துவருடம் கடுங்காவல் தண்டனை விதித்தார்களென்று அறிகிறோம்.

## சீனக்கப்பலில் கொள்ளை.

சீனதேசத்து வர்த்தகக் கப்பலான 'டார்க்ரோ' என்னும் கப்பல் 'ஷங்கை' துறைமுகத்திலிருந்து புறப்பட்டு 'டின்டசின்' துறைமுகத்திற்குப் பிரயாணம் செய்கையில, அதில் சாதாரண பிரயாணிகளைப்போல் வேஷம் தரித்திருந்த சில கடற்கொள்ளைக்காரர்கள் திடீரென்று கிளம்பி கடற்கொள்ளைக்குப்பேர்போன இடமான 'பிஸ்மே' என்னும் குடாக்கடலுக்கு கப்பலைத்திருப்பிச் சென்று சாமான்களை யெல்லாம கொள்ளைகொண்டதுமல்லாமல் கப்பற்றலைவனை துப்பாக்கியால் சுட்டுக் காயப்படுத்திச் சென்றார்களாம். ஆனால் பிரயாணிகளைமாத்திரம் ஒன்றும்செய்யவில்லையென்று தெரிகிறது.

## நம்முடைய மறதி.

நாம் ரெயில்வண்டிகளில் பிரயாணம் செய்யும்போது அநேகசாமான்களை மறதியாக விட்டுவிடுகிறோம். கடந்த வருஷம் லண்டன ரெயில்வண்டிகளில் மறதியாய் விடப்பட்ட சாமான்களின் தொகை 173,000. ஒரோரளில் 623 குடைகள் வண்டிகளில் விடப்பட்டிருந்தனவாம். நம்முடைய ஞாபகசக்தி எப்படி!

## சிசுவைக்காக்க உயிர்துறந்த ஜீவ காருண்யன்,

சென்னை தேவராம் பேட்டைக்கருகே மோட்டார்வண்டியில் அகப்பட்டுமாள இருந்த ஓர் சிசுவை தவிச்சக்காவண்டியில எதிர்சென்ற ஓர் மனிதன் கண்டு தன் வாகனத்தைவிட்டுக் குதித்துப் பிள்ளையைத் தூக்கிக்கொண்டான். ஐயோ, பாவம் மோட்டார்வண்டி அந்த ஜீவகாருண்யன் மேல் ஏறிவிட்டது. ஏறிவே கையிலிருந்த சிசுவை அப்புறம் எறிந்து உயிர் துறந்தான்.

(சத்திய தூதன்.)

## பிரமலே கள்ளர் பொது நிதி கமிட்டியாரின் தீர்மானங்கள்

1926-ம் வருஷம் ஜனுவரி மாதம் 23 தேதி மாலை 3 மணிக்கு மதுரை கள்ளர் ஸ்பெஷல் ஆபீஸில நடந்த மீட்டிங்கின் தீர்மானங்கள்:—

ஆஜர்:—

1. மகா-ள-ள-ஸ்ரீ கே. பி. ஜெனார்தன ராவ் அவர்கள், B. A. பிரஸிடெண்ட்
2. ,, எம். அனந்தாசாரியர் அவர்கள், B. A. வைஸ் பிரஸிடெண்ட்
3. ,, பி. எஸ். ஜெம்புராமசாமி அய்யர் அவர்கள், காரியதரிசி
4. ,, கெ. ஆர். சிவராம அய்யர் அவர்கள், கனூரன்ஜி [மெம்பர்.]
5. ,, கருப்பத்தேவர் அவர்கள் சின்னுப்பட்டி,
6. ,, ராமசாமித்தேவர் அவர்கள் உத்தமபுரம்.
7. ,, மூக்கவிருமத்தேவர் அவர்கள் கீளக்குடி.
8. ,, பெரியசாமித்தேவர் அவர்கள் மங்களபுரம்.
9. ,, கினிமுத்துத்தேவர் அவர்கள் கிருஷ்ணாபுரம்
10. ,, பொன்னுசாமித்தேவர் அவர்கள் மேலக்கோட்டார்பட்டி
11. ,, காராமணி கல்லியாணித் தேவர் அவர்கள் கீழ உறப்பனூர்

1. 15—10—25ம் தேதிநடந்த மீட்டிங்கின் தீர்மானங்கள் படித்து ரிகார்டு செய்யப்பட்டது.

2. 15—10—25ம தேதி முதல் 25—1—26ம் தேதி வரை கொடுக்கப்பட்டிருக்கும் 11 கடன்களையும் (மொத்தம் ரூ 940) சரியென ஒப்புக்கொள்ளப்பட்டது.

3. உசிலம்பட்டி கைத்தொழிற்சாலையில் நெசவுவேலை கற்றுக்கொண்ட லிலையபட்டி கள்ளர்கள் 10 பேருக்கும் தறி முதலானவை வாங்கிக்கொள்வதற்காக கடனாக ஒவ்வொருவருக்கும் ரூ 40 கொடுத்திருப்பதை ஒப்புக்கொளளப்பட்டது.

4. பொது நிதியிலிருந்து கொடுக்கப்பட்ட அடியிற்கண்ட அட்வான்ஸ்கள் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது:—

| | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|
| (1) கள்ளர் ஸ்கவுட்களுக்கு சட்டைமுதலானவை வாங்குவதற்காக | 72 | 10 | 6 |
| (2) பெரியாத்தில வேலை செய்யும் கூலிகளுக்காக உத்தயபாளையம ஸ்பெஷல் சப் இன்ஸ்பெக்டர் வசம் | 150 | 0 | 0 |
| (3) கள்ளர் பெணபிள்ளைகளுக்கு உபயோகமான பேபர் ஒன்று தாவளிப்பதற்காக | 2 | 0 | 0 |
| (4) சொக்கநாடு எஸ்டேட்டுக்கு சில ஜவுளிகள் வாங்கி அனுப்புவதற்காக | 28 | 2 | 0 |

5. பிரஸிடெண்டு துரையவர்களால் கொடுக்கப்பட்ட அடியிற் குறிப்பிட்ட இனுங்கள் ஒப்புக்கொள்ளப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| (1) கீளக்குடி பொன்னியம்மாளுக்கு ரூ | 10 | 0 | 0 |
| (2) மதிபனூர் அய்யம்மைக்கு ,, | 5 | 0 | 0 |
| (3) அனுப்பபட்டி பெருமாயிக்கு ,, | 25 | 0 | 0 |

6. உசிலம்பட்டி கைகை அடகு பாதுகாக்க சிறியபடிக்கல்கள் வாங்கியவிஷயத்தில்செலவான அணாலும்ஒப்புக்கொள்ளப்பட்டது.

7. வில்லிங்டன் ரோட்டை ரிப்பேர் செய்வதற்காக அவ் ரோடின் டோல் கேட்டில் வரும் வரும்படியிலிருந்து ரூ 250 செலவழிக்கலாம் என்று தீர்மானிக்கப்பட்டது.

8. வில்லிங்டன் டோல் கேட்டை 21—11—25 முதல் ஆறு மாதத்திற்கு மாதமொன்றுக்கு ரூ 23-க்கு ஏலத்தில் குத்தகைக்கு விட்டதை ஒப்புக்கொள்ளப்பட்டது.

9. ரூ 1,500 கடன் வேண்டுமென்று, போடியை சேர்ந்த மீனாக்ஷிபுரத்திலிருக்கும் பெரிய மாயத்தேவரால் கொடுக்கப்பட்ட மனு படிக்கப்பட்டது.

பொதுநிதியில் இத்தக்கடன் கொடுப்பதற்கு பணம் இல்லாததால் கடன் கொடுக்கப்பட முடியாதென்று தீர்மானிக்கப்பட்டது.

10. லேபர் கமிஷனர் துரையவர்கள் உத்தரவின்படி மாதா மாதம் பொது நிதியிலிருந்து கொடுக்கப்படும் கடன் சம்பந்தமான கணக்குகளை அனுப்பவேண்டியது சரிதான் என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

11. மகா-ள-ள-ஸ்ரீ கீழ உறப்பனூர் காராமணி கல்லியாணித்தேவரையும் உத்தமபுரம் ராமசாமித்தேவரையும் 1925-ம் வருஷத்திய கணக்குகளை பரிசோதனைசெய்வதற்காக நியமிக்கப்பட்டது.

12. 31-12-25 முடிய கணக்குகள் வாசித்து ஆமோதிக்கப்பட்டது.

13. திருமங்கலம் தாலுகாவில் காட்டுப் பஞ்சாயத்து ஏற்படுத்தவேண்டிய விஷயத்தைப்பற்றி ரிபோர்ட்டு செய்யவேண்டும் என்று மகா-ள-ள-ஸ்ரீ காராமணி கல்லியாணித்தேவரையும் மூக்கவிருமத்தேவரையும் கேட்டுக்கொள்ளப்பட்டது.

14. சர்க்கார் விவசாயப் பண்ணையின் பிரயோசனத்தை அறிவதற்காக உசிலம்பட்டிக்கருகில் ஒரு நிலத்தில் பரிசோதனைக்காக சாகுபடி செய்து அதன அனுகூலத்தை மற்றப் பிரமலை தேவமார்களுக்குப் புகட்டுவதற்காக காமன் பண்டிலிருந்து ரூ 200-க்கு மேல் ரூ 500 வரை வட்டியின்றியில் அட்வான்சாக செலவழிக்கலாம் என்று மகா-ள-ள-ஸ்ரீ காராமணிக் கல்லியாணித் தேவரால் பிரேரேபிக்கப்பட்டு மகா-ள-ள-ஸ்ரீ ராமசாமித் தேவரால் ஆமோதிக்கப்பட்டு எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்டது.

(Sd.) கே. பி. ஜெனார்தன ராவ், பிரஸிடெண்டு.

## பிரமலை கள்ளர்கள் பொது நிதி கமிட்டி.

31—12—25 வரவு செலவு கணக்கு.

| வரவு. | ரூ. | அ | பை | செலவு. | ரூ. | அ | பை |
|---|---|---|---|---|---|---|---|
| கள்ளர் பஞ்சாயத்தார்களால் பொது பண்டுக்கு அனுப்பப்பட்டபணம் மொத்தம் .. | 13411 | 8 | 4 | கள்ளர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கும் பணம் .. | 7447 | 12 | 8 |
| பாங்கில் போட்ட பணத்தின் பேரில் வட்டி லாபம் .. | 131 | 12 | 10 | கள்ளர் ஐக்கியநாணய சங்கங்களுக்கு கடன்கள் கொடுக்கப்பட்டிருக்கும் பணம் .. .. .. .. | 355 | 0 | 0 |
| கடன்களின்மூலம் வட்டி லாபம் | 683 | 3 | 3 | அட்வான்சுகள்:— | | | |
| இதர பணங்கள் .. . | 136 | 12 | 3 | உசிலம்பட்டி நகை அடகு பாங்கிக்கு .. .. | 1264 | 15 | 6 |
| நல்ல நடத்தைக்காக கள்ளர்களால் கொடுக்கப்பட்ட பணம் .. | 75 | 0 | 0 | கீளக்குடி டிை .. .. | 367 | 7 | 11 |
| வில்லிங்டன் டோல்கேட் வசூல் | 235 | 4 | 7 | உத்தமபாளையம் ஸ்பெஷல் சப் இன்ஸ்பெக்டருக்கு கூலிகளுக்காக .. .. .. .. | 21 | 3 | 0 |
| | | | | பெரியகுளம் ஸ்பெஷல் சப் இன்ஸ்பெக்டருக்கு கூலிகளுக்காக .. .. .. .. | 838 | 0 | 3 |
| | | | | சொக்கநாடு எஸ்டேட்டுக்கு ஜவுளி வாங்க அனுப்ப .. | 28 | 2 | 0 |
| | | | | பெண்பிள்ளைகளுக்கு உபயோகமான பேப்பர் வாங்கிய விஷயத்தில் .. .. .. .. | 2 | 0 | 0 |
| | | | | திருமங்கலம் சப் இன்ஸ்பெக்டருக்கு கடன் கொடுப்பதற்காக .. .. .. .. | 24 | 11 | 0 |
| | | | | ஸ்கவுட்களுக்கு சட்டை முதலானவை வாங்குவதற்கு .. | 70 | 0 | 0 |
| | | | | ஐக்கியநாணய சங்கங்களுக்குவேண்டிய ரசீது புஸ்தகம் அச்சிட்டதில் வரவேண்டியது .. .. .. | 173 | 0 | 0 |
| | | | | பித்தளை பாத்திரமாக இருப்பது .. .. .. | 90 | 10 | 9 |
| | | | | தபால் செலவுகள் .. .. .. .. | 10 | 6 | 0 |
| | | | | பிரயாணச் செலவுகள் .. .. | 88 | 9 | 0 |
| | | | | பொதுப்பண்டிலிருந்து கொடுக்கப்பட்ட இனுங்கள் .. | 120 | 6 | 0 |
| | | | | கணக்கு புஸ்தகங்கள் முதலானவை வாங்கிய கூ .. | 36 | 15 | 3 |
| | | | | அச்சுக்கூலி .. .. .. .. | 24 | 10 | 0 |
| | | | | பொதுபண்டை ரிஜிஸ்தர் செய்ய கொடுக்கப்பட்ட பீஸ் | 50 | 0 | 0 |
| | | | | குமாஸ்தாவின் சம்பளம் .. .. | 303 | 5 | 0 |
| | | | | கள்ளர்களுக்கு பள்ளிக்கூடம் முதலானவை கட்ட இனாமாக கொடுக்கப்பட்ட பணம் .. .. .. | 177 | 10 | 0 |
| | | | | இம்பீரியல் பாங்கில் போட்டிருக்கப்பட்ட பணம் .. | 100 | 0 | 0 |
| | | | | இந்தியன் பாங்கில் போட்டிருக்கப்பட்ட பணம் .. | 3006 | 0 | 0 |
| | | | | கையிருப்பு மொத்தம் .. .. .. | 78 | 12 | 0 |
| மொத்தம். | 14673 | 9 | 3 | மொத்தம். | 14673 | 9 | 3 |

பி. எஸ். ஜெம்புராமசாமி அய்யர்,—காரியதரிசி.

*Patron.*—M.R.Ry. Rao Sahib,
A. J. Vethanayaga Thevar Avl.,
Usilampatti.
*Editor.*—Rev. George J. Athishtam,
Usilampatti.
*Manager.*—Rev. R. A. Dudley,
Tirumangalam.

Subscription—Single copy 8 annas a year (excluding charges for delivery) payable in advance.

All orders to be sent to the *Manager*.

Articles for insertion should be sent, not later than 15th of each month to the *Editor*.

சம்ரக்ஷகர்.—மகா-ள-ள-ஸ்ரீ ராவ் சாஹெப் வேதநாயகத் தேவரவர்கள், உசிலம்பட்டி.

பத்திராதிபர்.—கனம் ஜார்ஜ் அதிஷ்டம் ஐயரவர்கள், உசிலம்பட்டி.
மானேஜர்.—கனம் ஆர். ஏ. டட்லி துரையவர்கள், திருமங்கலம்.

தனிப்பிரதி:—8-பை. வருஷ சந்தா 8-அணா. தபாற்கூலி பிரத்தியேகம். ஒரு வருஷ கையொப்பம் முன்னதாகவே அனுப்ப வேண்டும்.

பத்திரிகை வேண்டுவோர் மானேஜரவர்களுக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

சமாச்சாரக்குறிப்பு முதலியவை அனுப்ப விரும்புவோர் அந்த மாதம் 15-ம் தேதிக்குள் சுருக்கமாக எழுதி பத்திராதிபருக்கு அனுப்பவேண்டும்.

368 R
20 A

மாதாந்தரப்பதிப்பு] [விலை 8 பைசு.

# The Piramalai Reformer.

## பிரமலை சீர்திருத்தன்.

"கடவுள் அவனவனுடைய கிரியைகளுக்குத் தக்கதாய் அவனவனுக்குப் பலனளிப்பார்."

Vol. V.] ஏப்ரல்மீ, 1926. [இலக்கம் 12

### உசிலம்பட்டியில் ஒரு நூதன திரச்செயல்.

உசிலம்பட்டி மத்தியில் ஐந்து லாந்தர் வைத்திருக்குமிடத்தில் ஒரு இழிவான சாமர்த்திய [illegible] நாடோறும் வெகு சாதாரணமாய் நடந்துவருகிறது. யாராவது தங்களுக்கு விரோதியாயிருந்தால் அவர்கள் அந்த இடத்திற்கு வரும்போது செருப்பாலும் விளக்குமாற்றாலும் அடிக்கிறதுதான். சில வாரங்களாக இது ஒரு விளையாட்டுக் காரியமாக நடந்து வருகிறது. ஆட்களின் அந்தஸ்தும், மதிப்பும், மரியாதையும் கவனிக்கிறதாகத் தெரியவில்லை. ஏனப்பா காரணமில்லாமல் என்னை அடிக்கிறாய் என்று அடிபட்டவன் கேட்க—ஒருவன்—அவன் ஐந்து ரூபாய் கொடுத்தான் உன்னை அடிக்க—நீ பத்து ரூபாய் கொடு—நான் அடுத்த சந்தை அவனை அடிக்கிறேன் என்றானும். காரியம் இவ்விதமாயிருக்கிறது. இப்படி இடங்கொடுத்தால் அதிகாரிகளும் மரியாதையுள்ளவர்களும் தனிமையாக அந்த மார்க்கமாகப் போக பயப்படவேண்டி வரும்போலிருக்கிறது. மகா-ள-ள-ஸ்ரீ துரைசாமி நாயுடு காரு சப்-மேஜிஸ்திரேட்டாய் உசிலம்பட்டியிலிருக்கையில் ஐந்து லாந்தர் இருக்குமிடம் சோம்பேறிகள் கூடுமிடமாயிருக்கிறதென்று அதை சுத்தப்படுத்தி ஒரு [illegible] போட்டு மகிமைப்படுத்த அந்த இடம் இப்போது இவ்விதக் கேவலமான சாமர்த்தியத்தைக் காட்டுமிடமானது இந்தப் பட்டணத்திற்கே பெருங்கேவலம். எத்தனையோ பெரிய அதிகாரிகளிருக்கிறார்கள். டெப்புடிக் கலெக்டரென்றும், டெப்புட்டி சூப்பரண்டெண்டு என்றும், டெப்புட்டி ஸ்கூல் இன்ஸ்பெக்டர் என்றும், தாலுகா போர்ட் பிரசிடெண்டு என்றும், சப்ரிஜிஸ்திரார், யூனியன்போர்ட் பிரசிடெண்டு என்றும், சப இன்ஸ்பெக்டர்கள், போலீஸ்காரர் முதலியவர்களெல்லாமிருந்தும் இக்காரியம் நின்றபாடில்லை. ஒவ்வொருநாளும் உசிலம்பட்டியிலும் பட்டணத்தில் [illegible] கேள்வி—"இன்றைக்கு யாருக்குச் செருப்படி" என்றுதான். இந்தக் காரியங்கள் அதிகாரிகளுக்குத் தெரியுமோ, தெரியாதோ? தெரிந்தால் இதை நிறுத்த மனமில்லையோ? அல்லது நிறுத்த சக்தியில்லையோ? ஒன்றும் தெரியவில்லை. எத்தனையோ அடங்காத சாதிகளையும் மனிதரையும் சீர்திருத்திவரும் இந்தக்காலத்தில் இதை இந்தப் பெரிய இடத்தில் நிறுத்தாவிட்டால் பெருங் கேவலமே. சந்தைகளிலும் மற்ற இடங்களிலும் திருடரையும் மற்ற அநாசப்படிகளை வைத்திருக்கிறவர்களையும் சாமர்த்தியமாகப் பிடித்துக் கொண்டுவரும் போலீஸ்காரர் இந்த சாமர்த்தியசாலிகளைப் பிடித்து அடக்கமுடியாதா? உசிலம்பட்டியிலுள்ள பெரிய மனிதரின் பெயரைக் காப்பாற்றவாவது இந்த அக்கிரமச் செயலை நிறுத்த இனியாவது அதிகாரிகள் முயற்சியெடுப்பார்களென்று சகலரும் எதிர்பார்த்திருக்கிறார்கள்.

### உசிலம்பட்டி பாஸ்டரேட் கன்வென்ஷன் ராலிக்கூட்டங்கள்.

தேதி: 1926ஹூ ஜூன்மீ 25, 26, 27
இடம்: கவண்டன்பட்டி.
ராலிகூட்டப்பொருள்கள் (வெகுமதிக்காக)

1. ஞானமிர்த விடுவிடை—கேள்வி 91 முதல் கேள்விகள் முடிய. ரத்னசுருக்க வசனங்கள் 1—50.
2. பாட்டு.
3. நடித்துக்காட்டல்.
   (1) ஸ்தேவானின் மரணம்.—கவண்டன்பட்டி சர்க்கிள்.
   (2) அப்போஸ்தலர் சிறைச்சாலையில் அடைபட்டது.—வாகைக்குளம் சர்க்கிள்.
   (3) பவுலின் குணப்படுதல்.—பிரவியம்பட்டி சர்க்கிள்.
4. [illegible] சபை.

1. ஆராதனை ஒழுங்கு—பாட்டும் வசனமும், விசேஷித்த பாட்டும்.
2. சாட்சிசொல்லுதல்—வேதவாசிப்பு, தனித்தாளவேலை, ஆராதனை [illegible]
3. எந்தக் கிராமத்திலிருந்து அதிகம் சபையார் வருகிறார்களோ அந்த சபை விசேஷித்த விதமாய் சந்தோஷப்படுத்தப்படும். இவைகளுக்காக ஏற்கனவே ஆயத்தம் செய்து வரும்படி அன்பாகக் கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

(Sd.) S. H. Billings,
காரியதரிசி,
உசிலம்பட்டி பாஸ்டரேட் கமிட்டி.

### உசிலம்பட்டி ஸ்டேஷன் வலையபட்டி கைத்தொழிற்சாலையின் அபிவிர்த்தி.—

சுமார் 5 வருஷங்களுக்கு முன் உசிலம்பட்டி கைத்தொழில் பயிற்சி சாலையில் வலையபட்டியிலிருந்து உசிலம்பட்டிக்கு மாயாண்டித் தேவர் மகன் கருப்பத்தேவன் தனியாகப் போய் 2 வருஷகாலம் வரை தனியாகவே வேலை செய்துவந்தான். மா. கருப்பத்தேவனை தனியாக வேலை செய்துகொண்டு வந்ததைப் பார்த்துக்கொண்டிருந்த சப்இன்ஸ்பெக்டர் ஏனப்பா நீ தனியாக வந்து தரிவேலை செய்கிறாயே, உன்னுடைய ஊரில் உன்னுடன்

சேர்ந்து வேலை செய்கிறவன் ஒருவனும் இல்லையாவென்று கேட்டார். அவர் சொன்னவுடனே மா. கருப்பத்தேவனும் ஒரு கான்ஸ்டேபிளும் வலையபட்டிக்கு வந்து பஞ்சாயத்தார்களைச்சந்தித்து தரி விஷயத்தைப்பற்றி அவர்களிடம் பேசினதில் 5 பிள்ளைகள் கட்டாயமாக நாங்களும் பஞ்சாயத்தாரும் சேர்ந்தோம். அதற்குப்பின்னால் அவர்கள் தரிவேலை ஒழுங்காக செய்கிறதைப்பார்த்து அதன் பின்பு 6 பிள்ளைகள் வந்தார்கள். அதற்குப்பின்னால் 10 பையன்களைச் சேர்த்தோம். அவர்களுக்கு வேண்டிய வேலையாட்கள் டப்பாப் போடுகிறவர்கள் பாவலையை ஆல்போடுகிறவர்களுமாய் அதிலும் சிலபேர் வந்துசேர்ந்தார்கள். ஆக மொத்தம் 22 பேர் சேர்ந்தார்கள். உசிலம்பட்டித்தரியில் 8 பேர் வேலைசெய்கிறார்கள். இதில் கண்டிருக்கும் 30 பையன்களும் உசிலம்பட்டியில் வேலை செய்துகொண்டு வந்தார்கள். இப்படிப்பையன்கள் அதிகரித்தபோது மா. கருப்பத்தேவன் உசிலம்பட்டிஸ்டேஷன் சப்இன்ஸ்பெக்டரிடம் நேரில் போய்ப் பேசி நாங்கள் பையன் அதிகரித்துவிட்டபடியால் எங்கள் சொந்த ஊரிலேயே தரிப்போட வேண்டுமென்று கேட்க அதற்கிசைந்து எஜமானவர்கள் கிருபையால் 1½ மாசத்திற்குள் தரிவந்துவிட்டது. அதற்கு அருமுயற்சி செய்த சப்இன்ஸ்பெக்டர் கனம் பத்மனாராவ் அவர்களும், சப்இன்ஸ்பெக்டர் கனம் கலுவத்தேவர் அவர்களும் வலையபட்டி ஊர் பொதுச்சாவடியில் பஞ்சாயத்தார்களைக் கேட்டு அதை வாங்கி அதில் தரி அதிக விமரிசையாய் 2½ வருஷகாலம் நடைபெற்றது.

பிப்ரவரி௴ எங்களூரில் ஒருபெண்பிள்ளை சமையல் செய்யும்போது அடுப்பிலிருந்த நெருப்பு தற்செயலாய் பக்கத்திலிருந்த தட்டையின்மேல்பற்றிக்கொண்டது. பகல் 5மணிநேரமாகையால் ஜனங்களெல்லாம் உஜாராயிருந்து தரியிலுள்ள பாவுகளையும் அதிலுள்ள கட்டைகளையும் ஜனங்கள்ஏகமாய்வந்து பேருக்கு ஒவ்வொன்றாக சேதமில்லாமல் எடுத்துவிட்டார்கள். அதில் ஒன்றும் சேதமில்லாமல்போய்விட்டது. கொட்டகை மாத்திரம் வெந்துவிட்டது. அதிலிருந்து எங்களுக்கு பயம்ஆரம்பித்து மகா-ா-ா-ஸ்ரீ சங்கை சுப்பிரண்டு துரையவர்களைக் கேட்டதில் உங்களுக்கு தற்காலத்திற்கு மண் சுவர்வைத்து கூரை மேய்ச்சலாய் மேய்ந்துகொள்ளும்படி 170 ரூ. தாம்எஜமானவாகள் எங்களுக்கு சாங்ஷன்செய்திருக்கிறார்கள். அதற்கு முன்னால் கொட்டகை ரிப்பேருக்கு 50 ரூ கொடுத்திருக்கிறார்கள். எங்களுக்குவேண்டிய உதவிசெய்து கடைசியில் ஊருக்குமேல்புறத்தில் ஒருநிலம் வாங்கி அதில் தரி அமைந்திருக்கிறது. ஷெ கூரை மேய்ச்சல் மேய்ந்து முடிந்துவிட்டது. இப்போது தற்சமயத்தில் 20 தரி அதிக உற்சாகமாயும் அதிக விமரிசையாயும் நடந்துகொண்டு வருகிறது. அந்தத் தரிவேலை செய்ததிலிருந்து எங்களுடைய குடும்பங்கள் கஷ்டமில்லாமல் இருக்கிறார்கள். மேம்பாடான நல்லொழுக்கங்களை உணர்ந்து ஒற்றுழைக்கிறோம். அதுவும் அன்னியில் எங்களூரில் சங்கை டட்லி துரையவர்கள் கிருபையால் வலையபட்டியில் ராப்பள்ளிக்கூடம் 8 மணி முதல் 10 மணி வரையில் தரிவேலை செய்கின்ற 40 பையன்களும் "ஊக்கமது கைவிடேல்" என்ற பழமொழிப்படி நாங்கள் இராப்பகலாய் வீண் காலம் கழியாமல் நாங்கள் ஒற்றுழைத்து வருகிறோம்.

M. Karuppathevan,
Valayapatti Teacher.

## இந்தியன் ஆர்மை சர்வேஸ் கோர்ப்ஸ் ரிஷர்வெஸ்ட் மோட்டர் டிரைவர்

நமது ஜில்லாவில் ரிஷர்வ் போலீஸ் என்ற ஒருவகை டிபார்ட்மெண்ட் இருக்கிறது அநேகருக்குத் தெரியும். அதுபோல வகையில் மிலிட்டேரி டிபார்ட்மெண்டிலும் ஏற்படுத்தியிருக்கிறார்கள். பலபட்டாளங்களிலும் அநேக சிப்பாய்ஸ் இருக்கலாம். 1924ஞு நவம்பர்௴ மேலே காண்பித்திருக்கிற கோரில் 700 மோட்டார் டிரைவர்கள் ஏற்படுத்தும்படி காருண்ய கவர்ன்மெண்டார் ஆலோசித்து கெஜட்டிலும் பேர்ப்பர்களிலும் பிரசுரம் செய்திருந்தார்கள். அதன்மேல் முன்னமே ஆக்டிவ் சர்வேஸ் செய்துவிட்டுவந்த உத்தியோகஸ்தர்கள் மறுபடியும் ரிஷர்வ் மோட்டார் டிரைவர் என்ற உத்தியோகத்திற்கு 4 வருஷம் எக்ரிமெண்ட் செய்துவந்திருக்கிறார்கள். தற்சமயம் இந்த 16-ம்கிர். கம்பேனியில் 131 டிரைவர்கள் சேர்ந்திருக்கிறார்கள். இவர்கள் பல இடங்களிலுள்ள பல பாஷைக்காரர்கள். தென்இந்தியாவில், மதுரைஜில்லாவிலிருந்து 1-வர், திருச்சி 1வர், வடக்கு மலபார் 2பேர், பெங்களூரிலிருந்து 4பேர், தவிரமற்றவர்கள் பஞ்சாப், பெங்கால், பெஜாவார் முதலிய தேசவாசிகள். இவாகளுக்கு பட்டாளம்சிப்பாய்கள் எப்படியோ அப்படியே வேலை தெரிந்திருக்க வேண்டியது. வருஷம் 1க்கு 1மாதம் பட்டாளத்தில் வந்து அவரவர்களுக்கு ஏற்பட்ட உத்தியோகத்தை செய்யவேண்டியது. இதற்காக சம்பளம் ௴ 1க்கு ரூ. 7-ஆகவே 11 மாதத்திற்கு 77 ரூ. பட்டாளத்தில் வந்து உத்தியோகம் செய்கிற 1 மாதத்திற்கு 16-8-0 சம்பளம். நாள் 1க்கு பேட்டா 1வது கிரேடு டிரைவர்க்கு ரூ. 1-0-0. 2-வது கிரேடு டிரைவர்க்கு 0—10—0. 3வது கிரேடு டிரைவர்க்கு 0—6—0. சாப்பாடு இனும். குடியிருப்பு வீடு, லாம்பு, எண்ணை முதலியதும், கீழ்கண்ட உடுப்புகளும் கொடுத்திருக்கிறார்கள். காக்கி கோட்டு 1, பிளானல் கமீஸ் 2, கம்பளி பனியன் 1, காக்கி அரைக் கால் சட்டை 1, பூட்ஸ் ஜோடி 1, மேல்ஜோடு கம்பளியில் ஜோடி 2 கிரேட், கோட் 1, மழைக்கோட்டு1, கிளவ்ஸ் ஜோடி 1, குல்லா 1, தலை உருமால், காக்கி 1, மூக்குக் கண்ணாடி 1, துவாலை பெல்ட் 1, பட்டீஸ் ஜோடி 1, துண்டு 1, சமுக்காளம் 1, கம்பளி 1, புரூஸ் 1, பாலீஸ் டப்பி 1, கொசுவலை 1. இன்னும் சில சமான்களும் இருப்பு வசதியுமுண்டு.

போகவர ரெயில் சார்ஜ் இனும். மோட்டார் சார்ஜும் கொடுப்பதாக எழுதிப்போயிருக்கிறது. வேலை விபரம் காலை 7½ மணி முதல் 8½ மணிவரை விஷிக்கல் டிரில். 9½ மணி முதல் 12 வரை மோட்டார் டிரைவிங். சாயந்தரம் 1 மணி முதல் 1½ வரை மோட்டார்கார் சரிபார்த்தல் 5 மணி முதல் 6 மணி வரை புட்பால், ஆக்கி முதலியபலவகைவிளையாட்டுகள்.

இவ்வித உத்தியோகங்களில் தேவர் குல வாலிபர்கள் பிரவேசித்தால் வெகு பிரயோஜனமாயிருக்கும்.

V. K. சவார்ட் தேவர்,
16, I.M.T. Coy. I.A.S.C. ராஜ்கோட்.

## வியாசம்.

### அங்கிலேய அரசாட்சியால் நாம் அடைந்த நன்மைகள்.

1. உடன்கட்டை ஏறுதல், தீக்குழி பாய்தல், நரபலி செலுத்துதல் முதலிய கொலைபாதகங்களை ராஜாங்கத்தார் தடுத்து ஆதரவற்ற ஏழைகளுக்கு ஆதாரமாக அன்னையர்களைத் தற்காத்து வைத்திருக்கிறார்கள். அதாவது புருஷன் இறந்தவுடன் அவன் மனைவியையும் அவனோடுகூட தகனித்துப்போடுகிற கெட்ட வழக்கம் நம் தேசத்திலிருந்தது. அதைத் தடுத்தார்கள்.

நரபலிக்கு ஒரு திருஷ்டாந்தம். வங்காள நாட்டில் ஒரு தாயின கைக்குழந்தை கருவியாதியாயிருந்த தருணத்தில் இந்தக் குழந்தைக்கு நல்ல சுகம் கிடைத்தால் தன் வயிற்றிலிருக்கும் குழந்தை பிறந்தவுடன் அதைக் கங்காதேவிக்கு பலிசெலுத்துவதாக நேர்ந்துகொண்டாள். கைக்குழந்தைக்கு சுகமடைந்தது. வயிற்றிலிருந்த குழந்தையும் பிறந்தது. அது அழகுள்ள ஆண்குழந்தையாகயிருந்தது. அதை ஆற்றில் போட்டுவிட தாய் தகப்பனுக்குஇஷ்டமில்லாமல் இரண்டு மூன்று மாதம கடத்திவைத்தார்கள். ஆகிலும் பூசாசாரி தொந்தரித்து கட்டாயப்படுத்தினதினால் கங்கை நதியில் எறிந்துவிட உடனே நதியிலிருந்த முதலை பிள்ளையின் தலையை வெடுக்கென்று கடித்துவிட இரத்தம் தண்ணீரில் பீறிட்டு ஓடினது என்ற பயங்கர சரித்திரத்தை வாசித்தேன். அதையும் ராஜாங்கத்தார் தடுத்தார்கள்.

2. இன்னமும் ஜனக்கணிதியெடுத்து ஜனப்பெருக்கம் குறைவு முதலிய காரியங்களைக்கணித்து, ஜனம்குறைந்தால் காரணம் என்ன என்று அறிந்து அந்தக் குறைவை நிவர்த்தி செய்யப் பிரயாசப்படுகிறார்கள்.

3. யூனியன் முனிஸிபால்டி முதலிய காரியங்களை ஏற்படுத்தி ஜனங்களுடைய சுகத்தைப் பாதுகாப்பதற்கு முயற்சிசெய்வதோடு, தண்ணீர் குழாய்கள் வைத்து



பட்டணங்களிலுள்ள ஜனங்களுக்கு தண்ணீர் வசதிகளும் செய்திருக்கிறார்கள். இன்னும் நமது மதுரை நாட்டை செழிப்பாக்க பெரியாறும் திருப்பப்பட்டிருக்கிறது.

4. கடிதப்போக்குவரவுகளுக்கு தபால்களும் தூரதேச சங்கதிகளை சுலுவில் அறிந்துகொள்ள தந்திகளையும் பார்சல்களும் மணியார்டர்களும் பெற்றுக்கொள்ளும் வசதிகளுஞ் செய்திருக்கிறார்கள்.

5. ஜனங்களுடைய போக்குவரவு முதலிய பிரயாணங்களுக்கு வசதியாக ரஸ்தாக்களும் அணைகளும் பாலங்களும் உண்டாக்கி இருப்புப்பாதை வாகனங்களாகிய புகைக்கப்பல்களும், புகைரதங்களும், மோட்டார்க்கார்களும், பைசிகில்களும் உண்டாக்கியிருக்கிறார்கள்.

6. இன்னும் கீராவிகளைக்கொண்டு பஞ்சாபீஸ்களும நூலாபீஸ்களும் மற்றும் யந்திரசாலைகளும நடத்திவைக்கிறார்கள. அச்சடிக்கும் வித்தைகளையும் கண்டுகொடுத்தார்கள்.

7. மலைகளில் சோலைகளை விருத்திபண்ண பாரஸ்டு டிப்பார்ட்மெண்டுகளும்,

8. திருட்டு உப்பையும சாராயம் முதலிய ஆபிரி வஸ்துக்களையும் கண்காணிக்க சால்ட் டிப்பார்ட்டுமெண்டுகளும,

9. ஜனங்களுடைய நோயைத் தீர்க்க ஆஸ்பத்திரி வைத்து தருமமாக மருந்துகொடுத்து பாதுகாப்பதுடன் தொத்துவியாதிகளாகிய வைசூரி, விஷக்காய்ச்சல், விஷபேதி முதலிய கொள்ளைநோய்களைத் தடுக்கும் சாதனங்களையும் கையாடிவருகிறார்கள்.

10. நமது நாட்டில் கொலை, களவு, கலகம், கொள்ளை முதலிய தொந்தரவுகள் உள்நாட்டாராலும, அயல் நாட்டாராலும் உண்டாகாவண்ணம் காக்க போலீஸ் டிப்பார்ட்டுமெண்டுகளும், பட்டாளங்களும நிறுத்தப்பட்டிருக்கிறது.

11. நியாயவிசாரணைசெய்து ஜனங்களுக்கு இலேசாய் நீதிசெலுத்த நம தேசத்தை இராஜதானிகளாகவும், ஜில்லாக்களாகவும், தாலுகாக்களாகவும், பிர்க்காக்களாகவும, கிராமங்களாகவும் பிரித்து சுலுவில் ஆளுகை செய்வதுடன் கிரிமினல் கோடுகளும், சிவில் கோடுகளும், முனிசீப் கோடுகளும் ஏற்படுத்தி வசதிசெய்திருக்கிறார்கள். உயர்பதவிகளும், சுயஆட்சிகளும் தந்திருக்கிறார்கள்.

12. கல்வி இலாகா. ஜனங்களுடைய சரீர விருத்திக்கும் அறிவு விருத்திக்கும் அனுகூலமாக ஆண்களும் பெண்களும் படிக்க பாடசாலைகளும் ஏற்படுத்தியிருக்கிறார்கள். சாஸ்திரப் பாடசாலைகளாகிய கலாசாலைகளும், ஹைஸ்கூலும், பிறைமெரிப் பாடசாலைகளும் உண்டாக்கியிருக்கிறார்கள. வைத்திய சாஸ்திரம் சிற்பசாஸ்திரங்களும் சட்டப்பரீட்சைகளும் உபாத்திமைப் பரீட்சைகளும் கைத்தொழில் பாடசாலைகளும் ஏற்படுத்தி விருத்திசெய்கிறார்கள். நமது நாட்டுப்புறத்தாருக்காகவும் கட்டாயப்படிப்புகளும் கைத்தொழில்களாகிய கொல், தச்சு, நெசவுசாலைகளும், ஐக்கியநாணய சங்கங்களும் ஏற்படுத்தியிருக்கிறார்கள். விவசாயத்திற்கும வியாபாரத்துக்கும் லோன் பணம் கொடுத்து உதவி செய்கிறார்கள்.

13. மார்க்க சுயாதீனமும் கொடுத்திருக்கிறார்கள். யார் யார் எது சத்தியமார்க்கமென்று அறிகிறார்களோ அதை அனுசரிக்கத் தடைகிடையாது.

நமது அங்கிலேய அரசாட்சி நீடூழிகாலம் வாழ்ந்திருக்க கடவுளை நோக்கி பிரார்த்திப்போமாக. A. முத்து உபாத்தியாயர்,
மானூத்து.

## கட்டாயப்படிப்பும், உபாத்திமைத் தொழிலும்.

இவ்வுலகின்கண் மானிடராய்ப் பிறந்த எவரும் சிநேகிதரில்லாமலிருக்கமாட்டார் என்பது உலகறிந்த விஷயம் ஆயினும் சிநேகிதரெல்லாரும் ஒரே ஊரில் வசிக்க சாத்தியப்படாமல் சிலர் தூரமான இடங்களில் வசிப்பதினாலும், சிலர் கலாசாலைகளில் வித்தை கற்கப் போய்விடுவதினாலும், சிலர் வயோதிபமாகி ஞாபகம் குறைந்துபோவதினாலும், அவர்களை அடிக்கடி நினைப்பதும், அவர்களுடன் சம்பாஷிப்பதும் அரிதாகும். ஆனால் எப்பொழுதும் மாறாதவரும், நம்முடனே இருக்கிறவருமான சிநேகிதர்கள் இவ்வுலகிலநேகருண்டு. அவர்கள் கோபதாபமற்றவர்களாயும், பசி, துன்பம், துக்கமற்றவர்களாயும் இருக்கின்றனர். அவர்கள் யாரெனில் புஸ்தகங்களாகிய நூல்களே.

இம்மித்திரரின் மாட்சிமை யாதெனின்: சூரியன் தன் கிரணத்தால் இருளை நீக்குவதுபோல இம்மித்திரர் தங்களுக்குள்ள கிரணத்தால் மானிடரின் மனதிலுள்ள அக்ஞானமாகிய இருளை நீக்கி, தச்சன் எற்றால் கொண்டு மரத்தின் கோணலையகற்றுவதுபோல் தாம் கற்பித்த உபதேசத்தால் மானிடரின் தாறுமாறான செய்கைகளை நீக்கி சீராக்கி, அவர்களை நன்னெறியில் நடாத்துகின்றன. நல்லதென்றால் கட்டாயம் கெட்டதொன்றிருக்க வேண்டுமென்ற ஐதீகத்திற்கிணங்க, கெட்ட சிநேகிதர்களுமுண்டு. அவர்கள் முதலில் இன்பத்தை யூட்டி கடைசியாக மயக்கத்தையும மரணத்தையும் உண்டுபண்ண வல்லவராகின்றனர். இப்படிப்பட்ட துரோகிகளுடன்வசிக்க எவருக்கும் வெறுப்புண்டாகுமல்லவா? இவர்கள் நம்மைக் கெடுத்து நமது சுகவாழ்வை அழிப்பவராகையால், இவர்களை நாம் அதிக தூரத்தில் வைக்கவேண்டும். திருடர்கைக்குட் புகுந்து அவர்களைத் தங்கள் நண்பராக்கிக்கொள்ள யாராவது விரும்புவார்களா? திருடர்களில்லாத திசைகளில்லாதது போல துன்மார்க்கத்திற்கு வழிகாட்டும் நூல்களில்லாத திசைகளுமில்லை. ஆகையால் அப்படிப்பட்ட நூல்களை நம்மித்திரராக்கிக் கொள்ளாமல் "தீங்கினர் தங்கண்ணில் தெரியாத தூரத்து நீங்குவதே நல்லநெறி" என்றபடி தள்ளுவது நன்று.

இம்மித்திரர்களாகிய நன்னூல்கள் கொடுக்கக் கொடுக்கக் குன்றாத கற்பகவிருட்சம்போல் நாம் விரும்பும் யாவையும் கொடுக்கக்கூடியவை எத்தேசத்திலுமுள்ள நாகரீகமும், நீதியும், ஒழுங்கு, செல்வமும் இவைகளாலே நாம் அடையக்கூடும். பஞ்சபூதங்கள், வானத்திலுலாவுஞ் சந்திரசூரிய நட்சத்திராதிகள், பூமியிலுள்ள விருட்சங்கள், பர்வதங்கள், சமுத்திரங்கள், நாநாபேத ஜீவகோடிகள் யாவற்றையும் பற்றிய ஞானத்தைத் தெள்ளிதிலறிவிக்கின்றவர்கள், இந்நூல்களாகிய இம்மித்திரர்களே.

இம்மித்திரர்களை நாம் அடைந்துகொள்ளும விதம் எங்ஙனம், மற்றவர்கள் அவைகளை அடைந்துகொள்ளும் விதமெங்ஙனம், அவைகளை யடைந்துகொள்வதின் பிரயோஜனம் யாது என ஆராயப்புகுவோமாயின், உலகமெலாம் வியாபித்து நிற்கும் கல்வியென்னும் செல்வப்பொருளையுடைத்தவர்களாயிருப்பதே.

"இருவிழிகள் வாண்முகத்தில் இருந்தாலும்
வானிரவி எழுந்தாலன்றிக்
கருது நிலப்பல்பொருளுங் காண்டல் அரிதாம் உலகில்; கண்போல யாரும்
பெருகிய செல்வமும் அறிவும்பெற்றாலும்
நூற்கேள்வி பெறவார்க்கன்றித்
திருவளர் புண்ணிய பாவம் இம்மை மறுமையும் வீடுந்தெரியாவன்றே"

நமது முகத்தில் இரண்டு விழிகளிருப்பினும், சந்திரனெழும்பாவிடின் உலகத்தின் பொருட்களை நாம் எவ்வாறு காணமுடியாதோ அதுபோல நாம திரண்ட செல்வமும் அறிவும் பெற்றிருந்தபோதிலும் நூல்களினாராய்ச்சி இல்லாவிடில், இம்மை மறுமை, புண்ணியம், பாவம், மோட்சம் முதலியவைகளைக் காணமுடியா.

"அவனவன் தனக்கானவைகளையல்ல பிறருக்கானவைகளையே நோக்குவானாக" என்ற சத்தியத்திற்கிணங்க, புண்ணியம், பாவம், இம்மை, மறுமை முதலியவைகளைத் தான் அடைகிறதுமல்லாமல் மற்றவர்களும் அடையும்படி தூண்டி யெழுப்பிவிடுவது உபாத்திமார்களின் கடமையேயாம். தேசசீர்திருத்தத்திற்கும், உன்னத பதவியை அடைவதற்கும, காலத்தைப் போக்குவதற்கும கல்வி அத்யாவசியமானது என, நம் ஒவ்வொருவருக்கும் தெரிந்த விஷயம்.

இவைகளையறிய உயர்ந்த பாஷாபிமானமும், ஆங்கிலமும் வேண்டுமென்பதவசியமில்லை. ஆரம்பகல்வியே போதுமானவை. ஊராரின் வாழ்வை எதிர்பார்க்க கடமைப்பட்டிருக்கும் நாம், நமதூரிலுள்ள ஒவ்வொரு குழந்தைகளும கட்டாயம படிக்கவேண்டுமென, அன்பிலும், ஆதரவிலும் புத்தியைப் புகட்டவேண்டும், கல்வியின் பிரயோஜனத்தை எடுத்துரைக்கவேண்டும். நம்மிடத்தில் சுமார் 5-வருஷமாகப் பிள்ளைகள் பழகலாம. சிலர் 4-வருஷத்திற்குள்ளே ஆரம்பக்கல்வியை முடிக்கக்கூடியவர்களாயிருக்கின்றனர். அப்படிப்பட்ட சொற்பகாலங்களிலே அவர்களுக்குப் போதுமான

அறிவையூட்ட ஆசிக்கவேண்டும். மனச்சாட்சிக்கு விரோதமன்னியில் தனக்கும் தன் அயலாருக்கும் தான் செலுத்தவேண்டிய கடமைகளைச் சரிவர நடத்தும் தேசவாசிகளாய் அவர்களைப் பழக்கவேண்டும். குழந்தைகளின் வாழ்வுக்கும் தாழ்வுக்கும் நம்போன்ற உபாத்திமார்களே உத்தரவாதமென்னும் பிரமாணத்தை மனதில் பதித்தவர்களாக அவர்களை சகல சீர்திருத்தத்திலும் பழக்கவேண்டும். தனித்தனியாகவோ அல்லது நமது சங்கத்தைப் பொறுத்தோ கட்டாயப் படிப்பு என்னும் விஷயத்தில் அதி சிரத்தையுடையவர்களாய் அதற்கென்று பல சட்டதிட்டங்களை யேற்படுத்தி அதைச் சரிவர நடத்த முனைவாரவேண்டும். ஒவ்வொரு ஆண்களும் பெண்களும் கட்டாயமாய் 5-வகுப்புகள் முடிய கல்வி கற்கவேண்டுமென்னும் விஷயத்தை ஊர்ஜிதப்படுத்தியும், ஷை விஷயங்களைக் குறித்தும் பல அதிகாரிகளை நேரில் கண்டுபேசியும் ஒழுங்குசெய்யவேண்டும்.

"முயற்சிதன் மெய்வருந்தக் கூலிதரும்" என்னு முதுமொழிக்கிணங்க முயற்சியுடன் பாடுபவித்துப் பலனையடையவேண்டும். நம்போன்ற உபாத்திமார்கள் எவ்வித கண்ணியமும், மதிப்பும், அந்தஸ்தும், இராஜாக்களின் ஆலோசனை மந்திரியாகவும், அவர்களது ஆசனத்திலுட்காரக்கூடிய தன்மையுடையவர்களாயுமிருந்திருக்கிறார்கள் என்று தெரியவரும். முகாந்தரம் யாதெனின்: அவர்களது தெய்வபக்தியும், தன்னயமற்ற ஜீவியமும, உபகார சிந்தையும், முயற்சியும ஜீவ காருண்யமுமே. அவ்வித நாமத்தையுடையவர்களாகிய நாமும் அவர்களைப்போன்ற ஜீவியமுடையவர்களாய் ஜீவித்து தம் தொழிலை முயற்சியுடன் நடத்தி உலகசீர்திருத்தத்தின் பொருட்டும், குழந்தைகளின் நல் வாழ்வுக்கென்றும் பாடுபவித்து, குழந்தைகள் யாவரும் கட்டாயம் கல்வி பயிலத்தக்கதான வழிகளைத் தேடியுய்யும்படி எல்லாம வல்ல ஜெகதீசனருள்புரிவாராக.

சினையா,
தலைமை உபாத்தியாயர், தேவாரம்.

---

## "தேவமாரின் விவாகம்"

எனதரிய நண்பீர்,

இப்பொருளின்பேரில் அநேகர் எனக்கு முன் எழுதியிருந்தபோதிலும், என மனதுக்கு, மிக்க அவசியமும் முக்கியமானதுமாய் தெரிந்தபடியால் நான் இதை எழுதலானேன்.

நம் குலத்திற்குக் கேடளிப்பது நமக்கடாத விவாகமே! நமக்குள்ளே நடந்தேறிவருகின்ற விவாகங்களை நாம் சற்று ஆழ்ந்த கருத்துடன் உற்றுநோக்கி ஆலோசிக்குங்கால் இவ்விஷயம் தெளிவாகும்.

"கானமயிலாடக்கண்டிருந்த வான்கோழி தானுமதுவாகப் பாவித்துத் தானும் தன் பொல்லாச்சிறகை விரித்தாடினற்போலுமே கல்லாதான் கற்றகவி" என்பதற்கொத்து, சுற்றியிருக்கும் கிராமங்களிலும், தங்களூர்களிலும் உள்ள பெரும் பணக்காரர்கள், விவாகம் புரியும்போதும், கருமாதிகள் நடத்தும்போதும், இன்னுமற்ற உற்சவங்கள் நடத்தும்போதும் "சாகத்துணிந்தவனுக்குச் சமுத்திரம் முழங்கால் மட்டும்" என்றாற்போல, தங்களுக்குண்டான திரவியத்தால் எவ்வளவு செலவுவந்தபோதிலும் கைகூசாது பணத்தை இறைக்கின்றனர். அதைப் பார்த்து எவ்வளவு பணமிருந்தபோதிலும் வறியவர்களான நம் குலத்தினர்களும், அவர்களைப்போலவே, டம்பீரமாகச் செலவுசெய்து விவாகத்தைத் துவக்குகிறார்கள். இல்லாவிட்டால் பார்ப்பவர்கள் ஏசுவார்களாம். கலியாணத்துக்குப் பணமில்லாது தனவான்களிடம் கடன் வாங்கி விவாகத்தை நடத்துகின்றனர்.

விவாகம்புரியும் பத்தாவுக்கு இல்வாழ்க்கையில் நுழைவதற்கு முன்னமே தரித்திரம் (கடன்) வந்துவிடுகிறது. பெண்வீட்டாரும் இம்மாதிரியே ஏற்பாடுசெய்து, ஒரு வேளை விருந்துண்டு நித்திரையடைந்து, மாப்பிள்ளையும் தாலிகட்ட வருபவர்களும் இந்நேரத்தில் இந்த இடத்துக்கு வந்திருப்பார்களென்று நித்திரைமயக்கத்திலே சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்.

மாப்பிள்ளை வீட்டார் சாயந்தர விருந்துண்டு பின் மாப்பிள்ளைக்குச் செய்யவேண்டிய சடங்குகள்செய்து முடித்து பட்டணப் பிரவசம் (ஊர்வலம்) வருவதற்கான ஏற்பாடுகள் செய்து வீட்டைவிட்டு வெளியேறின பின் குதிரையேறி கொள்ளிவைத்த முகத்தைப்போல, இளைஞனுக்கு அழகைக்கொடுக்கக்கூடிய மீசையை வழிக்கச் செய்து அவலக்ஷண முகமாக்கி, திவர்த்திகளுடனும், கூடிய கூட்டத்துடனும் ஊர்கோலம் செல்ல மாப்பிள்ளையின் தாய்மார் அழத்தொடங்குகின்றனர். இதுவரையிலும் தனக்குச் சம்பாதித்துப்போட்டு, இனி மனைவியுடன் சேர்ந்து தன்னைக் கவனியாதுபோய்விடுவானே என்ற துக்கமோ! தெரியவில்லை.

ஊர்கோலம் முடிந்தபிற்பாடு 30 அல்லது 40 இளைஞர் இளைஞிகளைச் சேர்த்து, தாலிகட்டுக்கூடைகளுடனும் கொட்டுக்காரர்களுடனும் இராப்பிரயாணப்பட்டு தாலிகட்டச் செல்லுகின்றனர். பெண்ணின ஊர் சேர்ந்து விடியற்காலம் $4\frac{1}{2}$ மணிபோல ஊர்கோலம்வர பெண்ணும் பெண்ணின் வீட்டாரும் ஆயத்தத்துடனிருந்து மாப்பிள்ளைக்குச் செய்யவேண்டிய காரியாதிகள் யாவையும் செய்துமுடிக்க இளைப்பாறச் சென்று காலைக்கடன்கள் யாவையும்செய்துஸ்நானம் புரிந்து பெண்வீட்டுக்குவர, விருந்துநடக்கிறது.

காலை 9 மணிக்கு வெயிலதிகரிக்க மாப்பிள்ளையும் பெண்ணும் கூடவிருப்பவர்களும் பின்சென்று மாப்பிள்ளையின் ஊருக்குச் செல்ல, பெண் வீட்டுத் தலைவாயிலில் நின்று ஒப்பாரிவைத்து அழுதுதுவங்குகிறாள். தாய்மார் அதை நிறுத்தாத பிரகாரம் இவர்களும் கூடச்சேர்ந்து ஒப்பாரி வைத்து அழுகிறார்கள். பெண்ணினழுகையாவது:—"இதுவரை நான் என் பெற்றோரிடத்தில் செல்லப்பிள்ளையைப்போல் சுதி விளையாடி, அன்புபாராட்டி அச்சமின்றி அழகிய ஆபரணங்களால் என்னை அலங்கரித்துத்திரிந்தேனே, இனி அப்படித்திரிய முடியாதே, இந்த மனுஷன் எப்படிப்பட்டவரோ! என் மாமி மாமனார் எப்படிப்பட்டவர்களோ! என் பெற்றோரிடத்தில் நான் செல்லமாய் செழுமையுமாயிருந்ததுபோல இருக்கவிடுவார்களோ, இல்லையோ! இதுமுதல் அடிமையாகத்தானே ஒப்புக்கொள்ளப்பட்டேன்" என்னும் துக்கமோ, தேறே. பெண்ணும், மாப்பிள்ளையும் ஊருக்கு வருவதற்குள்ளாக வெயிலதிகரிக்கிறது. புதுப் பெண்ணைப்பார்க்கவேண்டுமென்று வருபவர்கள் சிலர், பசியதிகமாகிறது, பெண்ணும் மாப்பிள்ளையும் வீடுவந்துசேர்ந்த பிற்பாடுதானே விருந்துவைப்பார்கள் என்று சொல்லிக்கொண்டுபோர்க்கப்போகுபவர்கள் சிலர். மாப்பிள்ளையும் பெண்ணும் வந்து ஊர்கோலம்வர விருந்திடுகிறார்கள். கலியாணம் முடிகிறது.

புதுமாப்பிள்ளை பெண்ணென்று இரண்டொரு மாதங்களுக்கு வேலைசெய்யாது இருந்துவிடுகிறார்கள். பெற்றோர்க்குக் கொஞ்சம் மனஸ்தாபமுண்டாகிறது. "சிறுதுளி பெருவெள்ளம்" என்றாற்போல மனவருத்தமதிகப்பட்டு வேறே விட்டுவிடுகிறார்கள். இருவருக்கும் சாப்பாட்டுத் திண்டாட்டமுண்டாகிறது. கலியாணத்திற்கு வாங்கின கடன் பேச்சு ஊடே ஊசாடுகிறது. நகைகளைவாங்கி அடகுபோடத் துவங்கும்பொழுது இருவருக்கும் சண்டையுண்டாகிறது. பெண் படித்தவளாயிருப்பாளாகின் கணவனுக்கு காலத்துக்கு ஏற்ற நல் ஆலோசனை கூறுவாள். படியாதவளாயிருந்தால், தகப்பன் வீட்டுப்போய்ச் சேர்ந்து ஒன்றிரண்டாகப் புரட்டைச்சொல்லித் தீர்த்துவிடுகிறார்கள். ஏன்? யாதொரு கட்டுப்பாடுமில்லாததால்தான். அப்பொழுது புதுமாப்பிள்ளை பணமும் பெண்ணுமிழந்து வறியனாகிறான்.

ஆகையால் தயைசெய்து முன்கூறிய காரியங்களையுணர்ந்து, ஆணும் பெண்ணும் கல்விகற்கவும், செலவு அதனதுக்குத்தக்க சுருக்கமாகும்படி ஒரே இடத்தில் விவாகம் நடத்தவும், இருவருக்கும் சதாவாய் ஒற்றுமையிருக்க இருவரின் சம்மதத்தைக் கேட்கவும், பின்பு மணம் புரிவிக்கவும், மீசை எடுத்தலை நிறுத்தவும், பெண்ணின் அழுகையை நிறுத்தவும் மன்றாடிக்கேட்டுக்கொள்ளுகிறேன்.

டி. சாமுவேல் கந்தசாமி,
9-ம் வகுப்பு, பசுமலை.



## வர்த்தமானம்.

### உலகசமாதானம்.

உலகத்தில் சமாதானத்தைக் காக்க முஸ்லீம் ராஜ்ஜியங்களில் கிறிஸ்தவமார்க்க சத்தியங்களை பரவச்செய்ய வேண்டுமென்று லண்டன் மிஷனெரி கவுன்சில் தீர்மானித்திருக்கிறார்கள். கடவுள் அவர்கள் பிரயத்தனத்தில் துணைபுரிவாராக.

### சமுத்திரத்திற்குள் மலைகள்.

தென் ஆப்பிரிக்காவின் தென்சமுத்திரத்தில் 1000மைலுக்கப்பால் 1500அடி ஆழத்தில் 40 மைல் நீளமும் 1200 அடி உயரமுமான மலை இருக்கிறதாகக் கண்டுபிடித்திருக்கிறார்கள். சமுத்திரத்திற்குள்ளிருக்கிறதாக பழைய பூலோகபடங்களில் காட்டின டிஸ்க்லேஜ் பாங்க் என்ற இன்னொன்று மறைந்துவிட்டதாகச் சொல்லுகிறார்கள்.

### கோவில் பிரவேசம்.

திருப்பதிக்கடுத்த திருச்சானூர் கோயிலுக்குள் புகுந்த இரண்டு ஆதித்திராவிடருக்கு திருப்பதி மாஜிஸ்டிரேட் 75 ரூ. அபராதம் விதித்தார். ஷை ஆதித்திராவிடர் மேலுக்கு அப்பீல் செய்ததால் சித்தூர் கோர்ட்டில் ஜெயமடைந்தார்கள். ஆதித்திராவிடர் சார்பாகப் பேசின வக்கீல் ஸ்ரீமான் சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார். இவர் ஷை ஆதித்திராவிடர் கோயிலுக்குள் பிரவேசித்தது தோஷமில்லை என்று ரூபகாரப்படுத்தினாரோ அல்லது பரிசுத்த ஸ்தலத்தில் கால வைக்கவே இல்லை என்று போராடினாரோ தெரியவில்லை.

### அமெரிக்கா விசேஷம்.

மதுபானம் முதலிய லாகிரி வஸ்துக்கள் தேசசட்டத்தால் முற்றும் விலக்கப்பட்டது முதல் அத்தேசம் எல்லா விஷயத்திலும் க்ஷேமமடைந்துவருவதாகத் தெரியவருகிறது. கடந்த வருஷத்தில்மாத்திரம் பாங்கிகளில் 2000கோடி டாலர்கள் சேர்ந்ததாம். அமெரிக்கர் இதனால் உண்டான சந்தோஷத்தை அடக்க முடியாமல் ஜெயக்குரல் போட்டு ஸ்தோத்திரக் கீதம் பாடுகிறார்கள். நம் இந்திய தேசம் எப்போது அந்த நிலைமைக்கு வருமோ? கள்ளு, சாராயம் என்றைக்கு ஒழியுமோ? தொழிலாளிகள் தாழ் வகுப்பினர் கண்கள் எப்போது திறக்கப்படுமோ?

### ஓர் விசேஷம்.

உலகத்திலுள்ள கோடீஸ்வரர்களில் விசேஷித்தவர் ஜான் ராகபெலர். அவருடைய பேரன் ஜான் ராக்பெலர் பிரான்டிஸ் என்பவருக்கு அமெரிக்கா ஏல காலாசாலையின் ஸ்காலர்ஷிப் அதாவது படித்துத் தேற பணஉதவி கிடைத்தது. அவர் அதை அடைந்த விதம் ஆச்சரியப்படத்தக்கது. நம்முடைய தேசத்தில் சில மகாராஜ பிள்ளைகள் மேலதிகாரிகளின் தயவைப் பிடித்துத் தந்திரமாய் அடைகிற விதமல்ல, கைத்தொழில் செய்து பிறகு ஆஸ்பத்திரியில் டெலிபோன் ஆபீஸில் உழைத்து இதைகளினால் அப்போதப்போது ஜீவனார்த்தம் பெற்று முறையே கல்வியினால் தேர்ந்து அதினால் உரிமை பெற்றார்.

### எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள்.

தேசபந்து கிராம நிர்மாணக் கமிட்டியார் இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியில் கல்வி அபிவிர்த்தி அடைந்துவரும் அளவை ஆராய்ச்சி செய்து பின்வருமாறு வெளிப்படுத்தியிருக்கிறார்.

| மாகாணம் | 1891 | 1911 | 1921 |
|---|---|---|---|
| | | (1000பேருக்கு) | |
| வங்காளம் | 55 | 75 | 97 |
| பம்பாய் | 52 | 67 | 92 |
| சென்னை | 62 | 75 | 95 |
| ஐக்கியமாகாணம் | 28 | 33 | 41 |
| ஆஸாம் | 31 | 47 | 72 |
| பஞ்சாப் | 31 | 34 | 42 |
| பீஹார் | 32 | 41 | 51 |

(சத்தியதூதன்).

### இந்தியா மந்திரி சபை.

ஸர் பி. ராஜகோபாலாச்சாரியார் இந்தியா மந்திரி சபையில் தாம் வகித்துவந்த பதவியை ராஜீனமா செய்துவிட்டதால் அப்பதவியை ஏற்கும்படி சியான் சுரேந்திரநாதமலலிக் கேட்கப்பட்டிருக்கிறார். மே மாதத்தில் அவர் சபைக்கு வந்து சேரவேண்டியிருக்கும்.

### திருச்சியில் ரயில்கள் மோதிக் கொண்டன.

இன்றையத்தினம் மாலையில் 4-50மணிக்கு திருச்சி ஜங்ஷனில் 313-ம் நம்பர் (ஆபீஸ் குமஸ்தாக்களுக்கு திருச்சி ஜங்ஷனிலிருந்து முதன்முதலாக விடப்படும்) பாசஞ்சர்வண்டி, ஷண்டிங் ஆகிக்கொண்டிருந்த ஒரு சாமான் வண்டியுடன் மோதியது. டிரைவர் அப்பாசாமி பிரேக்போட்டிராவிட்டால் தற்பொழுது ஏற்பட்டிருப்பதை விட அதிகமான சேதம் விளைந்திருக்கும். கூட்ஸ் வண்டியிலிருந்த ஒரு காலி வாகன் கீழே விழுந்துவிட்டது. மரமேற்றும் டிரக் ஒன்று சாமான் ஏற்றியிருந்த மூட்டைவண்டி ஒன்றில் மோதி அதற்குள் ஊடுருவிப் பாய்ந்து ரெயில்வே ஆபீசுகளைச் சேர்ந்த 10 குமஸ்தாக்களுக்கு சொற்பக் காயமேற்பட்டிருக்கிறது. அவர்களில் 2 பேருக்கு நெற்றியில் பலத்த காயமேற்பட்டிருக்கின்றன.

### இரகஸ்ய போலீசரின் புதிய தந்திரங்கள்.

அமெரிக்கா இரகஸ்ய போலீஸ் அதிகாரியான மேஜர் ஸி. இ. நஸல் உளவு வேலை பார்ப்பதற்கு ஒரு புதிய முறை கையாடப்படுவதை ஒளிக்காமல் சொல்லியிருக்கிறார். அதாவது யாரை உளவுபார்க்க வேண்டுமோ அவர் ஆணாய் இருந்தால் ஒரு பெண்ணை ஏவி அப்புருஷனோடு சம்பந்தம் வைத்துக்கொள்ளும்படி ஏவப்படுகிறது. அதன் மூலமாய் அந்த ஆசாமியின் நடமாட்டங்களை அப்பெண் அறிந்து போலீசாருக்குத் தெரிவித்து விடுகிறாள். அதேமாதிரி சத்துருவின் தரப்பில் ஓர் ஆணும் பெண்ணும் வேலைசெய்தால் அவர்களுக்குள் சண்டை ஏற்படும்படிசெய்து உண்மையை கறந்துவிடுகிறார்களாம் என்று பார்வர்டு பத்திரிகை கூறுகிறது.

### கைகுலுக்கியதற்காக 10ரூ அபராதம்

அஸ்ஸாம் கவர்னராகிய ஸர் ஜான் கர்டு ரா என்ற விடத்திற்குப் போகையில் ஜெமீந்தார் கச்சேரி அருகே செல்ல நேர்ந்தது. அங்கு கூடியிருந்த கூட்டத்திலிருந்து ஒரு முகமதிய டப்தரி திடீரென்று முன் வந்து கவர்னரோடு கைகுலுக்கிவிட்டு கூட்டத்தில் புகுந்துகொண்டாராம். கவர்னர் போன பிறகு அந்த டப்தரி கைது செய்யப்பட்டு உள்ளூர் ஆஸ்பத்திரிக்கு 10 ரூ. கொடுக்கும்படி தீர்ப்பளிக்கப்பட்டார் என்று 'கிராளிகில்' பத்திரிகையில் ஒரு செய்தி காணப்படுகிறது.

### சென்னை கவர்னரின் அலுவல்கள்.

எப்ரல்மீ 2உ அன்று மே. த. கவர்னர் அவர்கள் தம் பரிவாரங்களுடன் உதகமண்டலத்துக்குச் செல்வார். எப்ரல்மீ 24உயன்று லேடி கோஷனும் அவரதுமக்களும் பம்பாயிலிருந்து இங்கிலாந்திற்கு கப்பலேறுவார்கள். நாளது மார்ச்சுமீ 7உ அன்று மே. த. கவர்னர் செங்கல்பட்டிலிருக்கும் ரிபார்மேடரி பாடசாலையின் வருஷாந்தரப் பரிசுகளைக் கொடுப்பார்.

### திருடியதற்குத் தண்டனை.

பஞ்சாப் நகரத்தைச்சேர்ந்த குலாபாலி என்பவன் சென்றமீ 5உ இரவு கன்னியம்மாள் என்ற ஸ்திரீயின் கழுத்திலிருந்த தாலியைத் திருடியதாகக் குற்றம் சாட்டப்பட்ட வழக்கில் மாஜிஸ்டிரேட் எதிரிக்கு 3மீ கடுங்காவல் விதித்தார். வாதி கந்தசாமி கோவிலுக்கு அன்றிரவு சென்று வீட்டுக்குத் திரும்புகையில் எதிரி இக்குற்றத்தை செய்தானென்று சாக்ஷியம் ஏற்பட்டது.

### கடலூரில் ரயில் விபத்து.

கடலூர் பழைய நகரத்திற்கும் காபர்க்குவாரிக்கும் மத்தியில் உள்ள ரெயில்வே கேட்டின் காவலாளி கதவைத்திறந்து வைத்துவிட்டு நன்றாகத் தூங்கியதால் இன்று காலை 4 மணிக்கு ஒரு ரெயில் விபத்து நேரிட்டது. ரெயில்வே கேட்டைக்கடந்து அப்பால் செல்லவிருந்த சமயத்தில் எம். பி. டி மண்வண்டி ஒன்று வேகமாக வந்தது. இரட்டைவண்டியின் பின்புறத்தில் மோதியது. இரட்டை மாட்டு வண்டி குடை கவிழ்ந்தது. வண்டி ஓட்டியும் மற்றொருவரும் காயம்படாது தப்பினர். மற்ற 3 பிரயாணிகளுக்கு பலத்தகாயம். சூளை ஆறுமுகம் முதலியார் என்பவர் கவர்மெண்ட் ஆஸ்பத்திரியில் மிக்க அபாயகரமான நிலைமையில் இருக்கிறார். போலீசாரும் ரெயில்வே அதிகாரியும் விசாரணை நடத்தி வருவதாக நமது நிருபர் எழுதுகிறார்.

## படகு கவிழ்ந்ததால் உயிர் சேதம்.

19 பிரயாணிகள் ஏறியிருந்த நாட்டுப் படகு ஒன்று ஹூக்ளி நதியில் ராமகிருஷ்ணப்பூர் துறையிலிருந்து சாண்ட்பால துறைக்குச் செல்லுகையில் நடு ஆற்றில் ஒரு நீராவிப்படகுடன் மோதி மூழ்கிப்போயிற்று. 10 பிரயாணிகளும் படகின் மூன்று சேட் தொழிலாளர்களும் காப்பாற்றப்பட்டனர். மற்றவர்கள் அகப்படவில்லை.

## அந்தமான் தீவுகள்.

அந்தமான் தீவுகளைக் குற்றவாளிகளைச் சேர்த்துவைக்கும் பிரதேசமாக வைத்திருப்பதை நிறுத்திவிடுவதாக இந்தியா கவர்மென்டார் ஓர் விரிவான தீர்மானம் வெளியிட்டிருக்கிறார்கள். அதன் சாரமாவது:—அந்தமான் தீவுகளை ஒன்று விட்டுவிடவேண்டும் அல்லது குற்றவாளிகள் வசிக்குமிடமாக இல்லாமல் செய்துவிடவேண்டும். என்ற இரண்டு வழிகள்தான் கவர்மெண்டுக்கு இருந்தன. தீவை பூருவாக விட்டுவிடுவதென்றால் அந்தத் தீவிலேயே பிறந்து வளர்ந்தவர்களுக்கு அது பெரிய கஷ்டமாகிவிடும். தவிர கடற்படையின் நிலைமையிலிருந்து அந்தத் தீவு இந்தியாவிற்கு ஒரு முக்கியமான உதவியாக இருக்குமென்பதும் கவனிக்கப்பட்டது. அதில் காலநிலைக்கருவிகளும், கம்பியில்லாத தந்தி வசதிகளுமிருப்பதால் கப்பல்களுக்கு அதிக உதவியாய் இருக்கிறது. தவிர அந்த தீவில் விவசாய மூலமாகவும் காடுகள் மூலமாகவும் அதிக செல்வம் பெற இடம் இருக்கிறது. இவ்வித காரணங்களையெல்லாம் உத்தேசித்துத்தான் 1921ஸு முதல் கவர்மெண்டார் அந்தத் தீவில் தங்களைத் தாங்களே காப்பாற்றிக் கொள்ளக்கூடிய குடும்பங்களை அபிவிருத்தி செய்துவந்திருக்கிறார்கள். இதே முறையில் இன்னும் அபிவிருத்தி செய்ய உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் இவ்வருஷமும் அடுத்த வருஷமுமாக அந்த தீவில் 4½லக்ஷம் ரூ. செலவழித்து ஜனங்கள் குடியேறி இருக்கும் பிரதேசங்களுக்கருகில் உள்ள சதுப்பு நிலங்களை சீர்படுத்த உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. கூடியசீக்கிரத்தில் அங்கு விவசாயம் செய்பவர்களுக்கு நிலம் கொடுப்பது சம்பந்தமான புதிய முறை ஒன்று அனுஷ்டானத்திற்கு கொண்டுவரப்படும். விவசாய அபிவிருத்தியை உத்தேசித்து அதன்படி 60 வருஷம்வரையில் நிலபாத்தியத்தைக் கொடுக்கப்படலாம் சிறிய பாகங்களை உடையவர்கள் சுலபமான நிபந்தனைகளின்பேரில் அனுபவ உரிமை பெறலாம். நிபுணருடைய ஆலோசனை கிடைத்த விவசாய உத்தியோகஸ்தரை நியமிக்க கவர்மெண்டார் அனுமதித்து விட்டனர். தகுதியான உத்தியோகஸ்தர் பொறுக்கப்பட்டு வருகிறார்.

## பம்பாய் கவர்னரின் விருந்து.

பம்பாய் பெப்ரவரி 24:—பம்பாய் கவர்னரும் லேடி வில்ஸனும் கவர்ன்மெண்டு மாளிகையில் ஒரு தோட்டவிருந்து நடத்தினார்கள். பல பிரபலஸ்தர்கள், உத்தியோகஸ்தர்கள் உள்பட மொத்தம் 1500 பேர்கள் வந்திருந்தனர்.

## அரசியல் திருத்தங்களால் தாங்க முடியாத செலவு.

எதிர்பார்க்கப்படும் வருமானம் 16 கோடி 34லட்சத்து 20ஆயிரம்.
,, ,, செலவு 17 கோடி 10லக்ஷத்து 66ஆயிரம்.

செலவுக்குப்போதாமல் துண்டுவிழும் தொகை 76 லட்சத்து 66 ஆயிரம். மாகாணக் கப்ப வஜாமூலம் கிடைக்கும் 57 லட்சத்தையும விழுங்கிய பிறகும், 19½லட்சம் கடன் வாங்கும்படியான ஸ்திதியில் சென்னை கவர்மெண்டு இருக்கிறது.

## கதர் உற்பத்தியும் விற்பனையும்.

"யௌவன இந்தியா" பத்திரிகையில் பின்வரும் விபரம் வெளியாகிறது:— 1925 வருஷத்திய கடைசி 3 மாதத்தில் தமிழ்நாட்டில் 231601 ரூ. மதிப்புள்ள கதர் உற்பத்தியாயிருக்கிறது; விற்பனையின் மதிப்பு 285720 ரூ; ஆந்தராவில் உற்பத்தி 56585 ரூ; விற்பனை 89047ரூ; கூர்ஜரத்தில் உற்பத்தி 131525ரூ; விற்பனை 23036ரூ; வங்காளத்தில் உற்பத்தி 110764ரூ, விற்பனை 73006, பம்பாயில்விற்பனைமட்டும் 379329, பர்மாவில் விற்பனை 6003ரூ; மொத்தம் எல்லா மாகாணங்களிலும் உற்பத்தி மதிப்பு 543951 ரூ; விற்பனை 744959ரூ.

## ராஜாங்க கைதிகளின் தொகை.

வங்காள சட்டசபையில் ஒரு கேள்விக்கு ஸர் ஹியூ ஸ்டீபென் பதில் கூறுகையில், மூன்றுவது ரெகுலேஷன்படி 16பேர்களும் வங்காள அவசர சட்டத்தின்படி 96 பேர்களும் காவலில் இருப்பதாக அறிவித்தார்.

## குழந்தைகளைக் கொன்ற தகப்பன்.

### உலக வாழ்வில் வெறுப்பு.

கல்கத்தா பெப்ரவரி 23:—மிகவும் அசாதாரணமாக ஒரு சம்பவம் நேற்று கல்கத்தாவின் வடபாகத்தில் நடந்தது. பிரவாஸ சந்திரஸின்ஹா என்ற ஒரு நிலச்சுவாந்தார், தமது ஏழு வயதுள்ள சங்கரன் என்ற பிள்ளையையும் ஐந்து வயதுள்ள சாயா என்ற பெண்ணையும் பாலில் விஷங்கலந்து தமது கையாலே கொடுத்து கொன்றுவிட்டுத் தாமும் விஷமுண்டு இறந்துவிட்டார். ஆவி என்ற மூன்றுவது குழந்தை விஷமுண்டபோதிலும் ஆஸ்பத்திரியில் கவலைக்கிடமான நிலைமையில் இருக்கிறது. ஸ்ரீமான் ஸின்ஹா தீவிரசுவராஜியவதி என்னும் ரஸாயன சாஸ்திரத்தில் ஊக்கமுடையவரென்றும் ஒற்றுமையாமை காலத்தில் சிறைக்குச் சென்றதாயும கூறப்படுகிறது. அவர் தாமே ஒரு கடிதம் எழுதி வைத்திருக்கிறார். இதற்கு முதல் நாள் அவர் தமது மனைவியை அவளுடைய பெற்றோர் வீட்டிற்கு அனுப்பிவிட்டதிலிருந்து இது முன்னேற்பாட்டோடு செய்யப்பட்டது என்று ஏற்படுகிறது.

## லைசென்ஸ் இல்லாமை துப்பாக்கி வைத்திருந்தவருக்குத் தண்டனை.

காலரஹிமான் என்றவர் லைசன்ஸில்லாமல் ஆறு குண்டுபோடக்கூடிய ஒரு துப்பாக்கி வைத்திருக்கிறதாகச் சீப் பிரசிடென்ஸி மாஜிஸ்திரேட்டால் ஒரு வருஷக் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டார்.

## சையாம் அரசர் முடி சூடும் வைபவம்.

இன்றையத்தினம் காலையில் இராஜகுமாரர்கள், அந்நியநாட்டுத் தூதர்கள், உயர்தர உத்தியோகஸ்தர் இவர்கள் முன்னிலையில் சையாம் அரசர் முடிசூட்டிக்கொண்டார். காலையில் மங்கள ஸ்தானமான பிறகு அரசர் தமக்குரிய இருபத்தொரு(21) சின்னங்களையும் எட்டு ஆயுதங்களையும் அவர் ஏற்றுக்கொண்டார். பிற்பகலில் இராஜகுடும்பத்தினரும் உத்தியோகஸ்தர்களும் அவருக்கு மரியாதை செய்தனர். பிறகு அவர் தமது மனைவியை பட்டம் கெஷியாக்கி அவளைத் தமது சிம்மாசனத்தில் உட்கார வைத்துக்கொண்டார். பிறகு அரசர் புத்த பகவானின் மகத கோயிலுக்கு பவனிசென்று அங்கு தாம் 'பவுத்தமத ரட்சகர்' என்று அறிவித்துக் கொண்டார்.

## இந்தியாவுக்குப் போப்பின் பிரதிநிதி.

ரோமாபுரி மார்ச்சு6 :—1924 ஸு முதல் இந்தியாவிற்குப் போப்பின் பிரதிநிதியாக இருந்துகொண்டிருக்கும் லெபிஹியர் பாதிரியார் இங்கு வந்து சேர்ந்தார். அவரைப் பல பாதிரிகள் எதிர்கொண்டனர்.

## உபவாச நிபுணர்.

ஜெர்மனி தேசத்தில் கெர்ஹான்ஸ் என்றதுரை 31 நாள் உபவாசம் இருந்தாரென்றும், அந்த உபவாசம் இருந்த காலத்தில் ஒரு கண்ணாடி சவப்பெட்டியில் அடைக்கப்பெற்று சுரங்கத் தண்ணீரைச் சாப்பிட்டு சிக்ரெட்டுகள் குடித்து வருவாராம் என்று ஜெர்மனி பேப்பர்கள் பெருமையாகப் பேசின. அதைக்கேட்ட நம் தேசத்தார் ஜெர்மனியனைக் காட்டிலும் நமது தேசத்திலுள்ள ஜெயின சாதுக்கள் 60 நாளைக்குமேலாக உபவாசித்ததாகவும் அந்த உபவாச காலங்களில் கொதித்த தண்ணீரைமாத்திரம் சாப்பிடுகிறார்கள் என்றும் பெருமைபாராட்டினர்.

வேறொரு ஜைனசாது கட்டோபாரில் வெறும் கொதி தண்ணீரைமாத்திரம் சாப்பிட்டு 81 நாள் உபவாசம் இருந்தார்.

## வளையக்கூடிய கண்ணாடி.

இரண்டு ஆஸ்திரேலியா சாஸ்திரிகள் கண்ணாடியைப்போன்ற ஒரு உலோகம் கண்டுபிடித்திருக்கிறார்கள். கண்ணாடியைப்போல தோற்றத்திலும் குணத்திலும் இருந்தாலும் அது உடையாததாயும் வளையக்கூடியதாயும் இருக்கும். குளிர்ச்சி உஷ்ணம் அதைத் தாக்காது. ஊடுருவிப் பார்க்கக்கூடியது.



## 48 தடவை கலியாணம் செய்தவர்.

அமெரிக்காவில் ஒரு பிரபு 48 தடவை கலியாணம் செய்திருக்கிறார். இதன் மூலமாய் 2 லக்ஷம பவுன் சம்பாதித்தார். இவரே "உத்தியோக புருஷன்."

## நீண்ட மீசை உடையவர்.

லண்டன் பட்டணத்தில் ஜார்ஜ் லாக்கர் என்ற ஒரு கடை வியாபாரிக்கு ஒரு மூலையிலிருந்து மறுமூலைக்கும் உள்ள ஒரு மீசையின் நீளம் 20 அங்குலம். இவர் தன்னுடைய மீசையே உலகத்தில் நீளமானது என்று பெருமை பாராட்டுகிறார்.

## புறக்கள் செய்தி கொண்டுபோகுதல்.

கலிபோர்னியா நாட்டில் தலைமை ஆபீசிலிருந்து சிப்பந்தி ஆபீசுக்கு உத்தரவு கொண்டுபோக புறக்களை உபயோகிக்கிறார்களாம்.

## 7மைல் நீள கம்பிக்கயிறு.

கம்பிக்கயிறு செய்யும் ஒரு தொழிற்சாலையில் 7மைல் நீளமுள்ள ஒருஉருக்கு இரும்புக்கயிறு செய்யப்பட்டிருக்கிறது. அதன் கனம் 56 டன்.

## புதிய வைசிராய் (ராஜபிரதிநிதி).

புதிய கவர்னர் ஜெனரல் லாட் ஆனாவில் லார்ட் இர்வின் ஏப்ரல்மீ முதல்தேதி பம்பாயில் வந்து இறங்குவாரென்று, அவரை வரவேற்கச் செய்யவேண்டிய சகல மரியாதைகளும் செய்யப்பட்டு வருகின்றன.

## பம்பாய்.

கவர்னர் துரைசானி சுகவீனத்தினிமித்தம் சீமைக்குப் போவதாகச் செய்தி வந்திருக்கிறது. பம்பாய் ராஜதானியில் பல அரியவேலைகளைச் செய்துவந்திருக்கிறாரென்று பத்திரிகைகள் கூறுகின்றன.

---

## பரீசை நெருங்கிவிட்டது

## பகலும் லீவு ராத்திரியிலும் லீவு.

சிலமாதங்களுக்கு முன் பிரமலை சீர்திருத்தன் K.S.O. துரையவர்களின் மானேஜ்மெண்டில் கீழுள்ள உபாத்திமார்களைப்பற்றி அநேகமாய்க் குறைகூறிக்கொண்டு நின்று இப்போது ஆறுதலடைந்துவிட்டது காருண்ய கடவுளின் வல்லமையன்றோ!

2. உபாத்தியாயர்கள் மேல் உத்தியோகஸ்தர்களின் அனுமதிக்கிணங்கி எங்கள் இந்திரகுலாதிபர் வீட்டில் சென்று லீவ் காலத்திலும் இரவுகளிலும் சாவகாசப்பட்ட தேதிகளிலும் ஆண் பெண் கல்வியைப்பற்றி போதித்தும் காதுக்கு விழுகாத ஒரு குற்றமே தவிர மற்றவெவ்வித இதமானவார்த்தை செய்கைகளினாலும் அன்புகாட்டி வருகின்றனர். அது யாவும் சூரியனைக் கண்ட பனியாகி விடுகின்றன.

3. இதற்கு முன் இந்திரகுலத்தாருக்கு ஆப்சண்டு என்றால் ஒரு வேங்கைப்புலி எதிரே வந்ததை ஒக்கும். தற்சமயம் ஸ்கூல் பையன்களை லீவ் சொல்லிவிட்டு வேலைக்கு அழைத்துச்செல்வது மிட்டாய் சாப்பிட்டது மாதிரியிருக்கிறது.

1 ஐயா யாரையா உபாத்தியாயரே—
வாரும் தேவரே
2. ஐயா இன்றைக்கு ஒரு நாளைக்கு—
என்ன ஒரு நாளைக்கு?
3. நம் பையனுக்கு—உங்க பையனுக்கு
என்ன ?

4. மாடு 2 நாளாய் கட்டி பட்டினியாயிருக்கிறது—உமக்கு என்ன ஜோலி

5. அதெல்லாம் இருக்கட்டும் பையன் வருமட்டும் லீவு போடும் ஆப்சண்டு மட்டும் எங்கமேலே கொஞ்சம் தயவு— வருஷமெல்லாம் லீவ் போட்டால் மேலதிகாரிகளுக்கு நாங்கள் என்ன சொல்லுகிறது

6. நீங்கள் ஒன்றும் சொல்லவேண்டாம். மற்ற பையன்களுக்கிருக்கும் படிப்பு எங்கே என்று கேட்டால் என்ன சொல்லுகிறது தேவரே.

7. அதுதான் சனியன்—தேவரே கழுதைக்குட்டிக்கு காந்தல் வரும்போது மொசக்குட்டிக்கு மூச்சுக்குத்து பிடித்ததுபோலாகிறது, ஜாக்கிரதை பரீசை நெருங்கிவிட்டது, பத்திரம்.

8. ஆமையா படிச்சிபடிச்சி ஒன்றும் காணோம் ஆட்டுக்குட்டிக்குக்கூட முதலைக் காணோம்.

9. இவ்வருஷம் உங்கள் பையன் எத்தனை நாள் பள்ளிக்கூடம் வந்தான்— புஸ்தகத்தில்தான் பதிந்திருக்கிறதல்லவா.

10. புஸ்தகத்தில் பெயர் பதிந்துவிட்டால் போதுமா—புஸ்தகத்தில் பெயர் இருந்தால் என்றைக்காவது ஒரு நாளைக்குப் படித்துக் கொள்வான் ஐயா.

11. இனி நாங்கள் கேட்கும் கேள்வியெல்லாம் கேட்டும் சொல்லியும் ஆய்விட்டது இனி மேலதிகாரிகள்தான் லீவ் பிள்ளைகளையும் சீக் எழுதியிருக்கும் பிள்ளைகளையும் விசாரிப்பார்கள். அப்போது நீங்கள் ஜவாப்பு சொல்லுங்கள், அவர்கள்பாடு, உங்கள்பாடு, நாங்கள் வந்த பிள்ளைகளுக்கு படித்துக்கொடுப்பதுடன் காலை மாலை வீடுதவறாமல் பிள்ளைகளைக் கூப்பிடுவோம் வந்தாலாச்சி அனுப்பாதபக்ஷம் சர்க்கார்பாடு உங்கள்பாடு ஐயா தேவமாரே.

12. அப்படிச் சொல்லிவிட்டு உம்முடைய வேலை போய்விடாமல் மட்டும் காப்பாற்றிக் கொள்ளும். எங்க பிள்ளைகள் படிக்காட்டி இந்த வாத்தியாருக்குத்தான் (பெருங்கடுப்பு)

13. ஐயா தேவரே இனி உபாத்தியாயர்களுக்கு கடுப்பு ஒன்றுமில்லை. (இனி பனிகாலத்து கடுப்பு) உங்களுக்கும் பள்ளிக்கூடத்துப்பிள்ளைகளை அனுப்பாதவர்களுக்குந்தான் (பெருங்கடுப்பு)

ஆனால் காருண்ய கவர்ன்மெண்டார் ஒவ்வொரு கிராமங்களிலும் வராத பிள்ளைகளை கூட்டி பள்ளிக்கு அனுப்பவும் வராதபிள்ளைகளுக்கு அபராதம் ஏற்படுத்தி பள்ளிக்கூடத்துக்கு கூட்டிக்கொண்டுவந்து சேர்க்கிறவனே அந்த அபராதப்பணத்தை சம்பளமாதிரியாக எடுத்துக்கொள்வானேயாகில் ரொம்பவும் அக்கரையோடு பிள்ளைகளைக் கொண்டுவந்து சேர்ப்பார்கள்.

உபாத்திமார்களின் கருத்து குழந்தைகள் சரியாய் படித்து உத்தியோகஸ்தர்கள் முன் குழந்தைகள் சம்பாஷித்தால் அதில் கிடைக்கும் நல்ல வார்த்தை உபாத்திமார்களுக்கன்றோ.

சுமார் 20, 30 பிள்ளைகளையோ வைத்துப் படித்துக்கொடுக்கும் உபாத்தியாயருக்கு 5,6 பிள்ளைகள் ஸ்கூலுக்கு ஆஜரானால் உபாத்தியாயருக்கு துக்கம் வருமா வராதா.

ஆனால் எங்களைப்போலுள்ள எல்லா உபாத்யாயர்களுக்கும் சுறுசுறுப்பு உண்டாக்கி கொடுப்பது காருண்யகவர்ன்மெண்டுதான்.

உபாத்திமார்களை வீண்பழி சுமத்துவது தகாது.

N. சுப்புசாமி உபாத்தியாயர்,
சோலமநாயக்கன்பட்டி.

---

## பஞ்சாங்கம்.

### 1926ஸு—ஏப்ரல்மீ

● அமாவாசை ○ பௌர்ணமி *கிருத்திகை

| வாரம் | தேதி | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஞாயிறு | ... | 4 | 11 | 18 | 25 | ... |
| திங்கள் | ... | 5 | ●12 | 19 | 26 | ... |
| செவ் | ... | 6 | 13 | 20 | ○27 | ... |
| புதன் | ... | 7 | 14 | 21 | 28 | ... |
| வியா | 1 | 8 | *15 | 22 | 29 | ... |
| வெள் | 2 | 9 | 16 | 23 | 30 | ... |
| சனி | 3 | 10 | 17 | 24 | ... | ... |

| வாரம் | குரோதனஸு பங்குனி 19உ—சித்திரை 18உ | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஞாயிறு | ... | 22 | 29 | 6 | 13 | ... |
| திங்கள் | ... | 23 | ●30 | 7 | 14 | ... |
| செவ் | ... | 24 | 1 | 8 | ○15 | ... |
| புதன் | ... | 25 | 2 | 9 | 16 | ... |
| வியா | 19 | 26 | *3 | 10 | 17 | ... |
| வெள் | 20 | 27 | 4 | 11 | 18 | ... |
| சனி | 21 | 28 | 5 | 12 | ... | ... |

## உசிலம்பட்டி ரேஞ்சு உபாத்திமை சங்கங்களின் பெயர்களும் அவைகள் மாதந்தோறும் மீட்டிங் கூடும் தேதிகளும் மற்றைய குறிப்புகளும் அடங்கிய நமூனா 1926-27.

மாதந்தோறும் மீட்டிங் கூடும் தேதி.

| நம்பர் | மாதம் | | உசிலம்பட்டி முதல் புதன் | கவண்டன்பட்டி முதல் சனி | இ. யல். எம். உசிலம்பட்டி கடைசி புதன் | வாலாந்தூர் 2-ம் வியாழன் | எழுமலை 3-வது சனி | இந்துபட்டி கடைசி திங்கள் | சேடபட்டி கடைசி சனி | மாதிரி பாடம். | விஷயம். |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | எப்ரல் | 1926 | 7 | 3 | 28 | 8 | 17 | 26 | 24 | வாசகம் 3-வது வகுப்பு | வருஷாந்திர கணக்குகளைத் தயாரித்தல். |
| 2 | மே | ,, | 5 | 1 | 26 | 13 | 15 | 31 | 29 | செய்யுள் 4-வது வகுப்பு | போஸ்டல் இலாகா |
| 3 | ஜூன் | ,, | 2 | 5 | 30 | 10 | 19 | 28 | 26 | கணக்கு (பின்னம்) 4-வது வகுப்பு | தூக்கமும் பசியும் |
| 4 | ஜூலை | ,, | 7 | 3 | 28 | 8 | 17 | 26 | 31 | கதை சொல்லல் 2-ம் வகுப்பு | மனிதன் உடலில் தோல் அமைப்பு |
| 5 | ஆகஸ்டு | ,, | 4 | 7 | 25 | 12 | 21 | 30 | 28 | பெரியகுளம் தாலூகா பூகோளம் 4-ம் வகுப்பு | இரும்பு |
| 6 | செப்டெம்பர் | ,, | 1 | 4 | 29 | 9 | 18 | 27 | 25 | மாஜிஸ்ட்ரேட்களின் அலுவல்கள் 4-வது வகுப்பு | தென்னையின் விருட்சங்கள் |
| 7 | அக்டோபர் | ,, | 6 | 2 | 27 | 14 | 16 | 25 | 30 | இலைகளின்வடிவம் 4-வது வகுப்பு | சுத்தம் |
| 8 | நவம்பர் | ,, | 3 | 6 | 24 | 11 | 20 | 29 | 27 | செய்யுள் 4-வது வகுப்பு | மலைகளின் அமைப்பும் உபயோகமும் |
| 9 | டிசம்பர் | ,, | 1 | 4 | 29 | 9 | 18 | 27 | 25 | உடலின் எலும்பு அமைப்பு 4-ம் ,, | கொசுவு |
| 10 | ஜனுவரி | 1927 | 5 | 1 | 26 | 13 | 15 | 31 | 29 | வாசகம் 4-வது வகுப்பு | வேளாண்மை |
| 11 | பெப்ருவரி | ,, | 2 | 5 | 23 | 10 | 19 | 28 | 26 | கணக்கு நீட்டலளவை 4-ம் ,, | நீர்வாழ்வன |
| 12 | மார்ச்சு | ,, | 2 | 5 | 30 | 10 | 19 | 28 | 26 | லோகல் போர்டுகள் 4-வது வகுப்பு | வாயுக்களின் குணங்கள் |

குறிப்பு:—ஒவ்வொரு உபாத்தியாயரும் பாடக்குறிப்புகளை தயார்செய்து கொண்டுவரவேண்டும். அவர்களில் யாரையாகிலும் பாடத்தை நடத்த அக்ராசனர் கூப்பிடலாம். ஒவ்வொரு உபாத்தியாயரும் தம்மால் கூடியமட்டும் வியாசத்தை பூர்த்தியாகவும் திருத்தமாகவும் தயார்செய்துகொண்டு வரவேண்டியது. மெம்பர்களில் ஆறுபேர் அக்கிராசனம் வகிப்பவரால் கூப்பிடப்பட்டு வியாசத்தை வாசிக்க வேண்டியிருக்கும்.

(Sd.) C. S. Ramaswami Ayyar, B.A., L.T.,
Deputy Inspector of Schools
Usilampatti Range.

—o:O:o—

*Patron.*—M.R.Ry. Rao Sahib,
A. J. Vethanayaga Thevar Avl.,
Usilampatti.
*Editor.*—Rev. George J. Athishtam,
Usilampatti.
*Manager.*—Rev. R. A. Dudley,
Tirumangalam.

Subscription—Single copy 8 annas a year (excluding charges for delivery) payable in advance.

All orders to be sent to the *Manager*.

Articles for insertion should be sent, not later than 15th of each month to the *Editor*.

சம்ரக்ஷகர்.—மகா-௱-௱-ஸ்ரீ ராவ் சாஹெப் வேதநாயகத் தேவரவர்கள், உசிலம்பட்டி.

பத்திராதிபர்.—கனம் ஜார்ஜ் அதிஷ்டம் ஐயரவர்கள், உசிலம்பட்டி.
மானேஜர்.—கனம் ஆர். ஏ. டட்லி துரையவர்கள், திருமங்கலம்.

தனிப்பிரதி:—8-பை. வருஷ சந்தா 8-அணா. தபாற்கூலி பிரத்தியேகம். ஒரு வருஷ கையொப்பம் முன்னதாகவே அனுப்பவேண்டும்.

பத்திரிகை வேண்டுவோர் மானேஜரவர்களுக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

சமாச்சாரக்குறிப்பு முதலியவை அனுப்ப விரும்புவோர் அந்த மாதம் 15-ம் தேதிக்குள் சுருக்கமாக எழுதி பத்திராதிபருக்கு அனுப்பவேண்டும்.

பசுமலை அமெரிக்கன் மிஷன் "லினுக்ஸ்" அச்சுயந்திரசாலையில் பிரசுரிக்கப்பட்டது.

மாதாந்தரப்பத்திப்பு] [விலை 8 பைசு.

# The Piramalai Reformer.

## பிரமலை சீர்திருத்தன்.

"கடவுளை ஒருவரும் ஒருபோதும் கண்டதில்லை;
நாம் ஒருவரிடத்தில் ஒருவர் அன்புகூர்ந்தால் கடவுள் நமக்குள் நிலைத்திருக்கிறார்."

THE REGISTRAR
70 JUN 1926

Vol. VI.] மேமீ, 1926. [இலக்கம் 1.

### விளம்பரம்.

தலைமறைவாய் ஒளிந்துதிரியும் சி. டி. கள்ளர்களின் தொடர்ச்சி ஜாப்தா:—

இதனடியில் கண்ட நபர்களை அந்தந்த சம்பந்தப்பட்ட கிராம பஞ்சாயத்தார்கள் அதிசீக்கிரம் தேடிக் கண்டுபிடித்து சமீபத்திலுள்ள போலீஸ் ஸ்டேஷனில் கொண்டுபோய் ஆஜர்படுத்தவேண்டும். கூடிய சீக்கிரம் தேடி ஆஜர்செய்பவர்களுக்குத் தகுந்த வெகுமதியளிக்கப்படும்.

வீரபாண்டி ஸ்டேஷன்

32. பாலார்பட்டி:—கருப்பத்தேவன் மகன் சி. டி. கெ. 4328 கருப்பத்தேவன். 1925-ஆ பெப்ரவரிமீ முதல் பாரி.

33. பாலார்பட்டி:—கருப்பத்தேவன் மகன் சி. டி. கெ. 2887 அய்யருத்தேவன். 1925ஆ பெப்ரவரிமீ முதல் பாரி.

பெரியகுளம் ஸ்டேஷன்

34. காமக்காபட்டி:—சுப்பத்தேவன் மகன் ஒச்சாத்தேவன். இவன் 1—8—25உ முதல் பாரி. போன இடம் தெரியவில்லை

வடமதுரை ஸ்டேஷன்.

35. இலப்பார்பட்டி:— அணைஞ்சித்தேவன் மகன் பெரியகருப்பத்தேவன் மகன்.

36. மாயாண்டித்தேவன் மகன் வெள்ளை மாயாண்டித்தேவன்.

37. குருநாதத்தேவன் மகன் மாயத்தேவன்

இந்த மூன்று நபர்களும் 14—0—25 முதல் இரவு இலப்பார்பட்டியைவிட்டு தங்கள் குடும்ப சகிதமாய் பிறருக்குப்போய் விட்டதாய் தெரியவந்தது. விஜாரித்ததில் அவர்கள் அந்த இடங்களில் இருப்பதாகத் தெரியவில்லை.

(Sd.) கே. பி. ஜனார்த்தனராவ்.

---

கள்ளர் ஸ்கூல் உபாத்தியாயர்களுக்கு அறிவிப்பு.

5—9—25 தேதியில் பிறந்த G. O. 1559 Misc உத்தரவுப்படி எல்லா பள்ளிக்கூடங்களிலும் ஒவ்வொரு சனிக்கிழமையும் ரஜா நாளாகக் கருதப்படலாம்.

மகா-௱-௱-ஸ்ரீ கனம் ஸ்பெஷல் சூப்பிரண்டெண்டு துரையவர்களால் அங்கீகரிக்கப்பட்டது.

---

### கால் நடைகளின் சில சாதாரண வியாதிகள்.

தொடர்ச்சி.

4. மலச்சிக்கல்.—மலச்சிக்கலானது கால்நடைகளி... ணவு உல... றது.

தேக சுகத்தைக் குறைக்கும் சகல ஏதுக்களும் மலச்சிக்கலுக்குக் காரணமாக இருக்கிறது.

காரணங்கள்.—மேற் சொல்லியபடி இரைப்பையில் உணவு உலர்ந்து திரண்டு கட்டிப்பட்டு விடுதலும், கால் நடைகள் ஆவலோடு தின்ன விரும்பும் உணவுகளை மிதமிஞ்சித் தின்னவாய்த்தலும், சத்தில்லாத நார்பிராடி முதிர்ந்த தட்டைகளைத் தின்னுதலும், வேண்டிய அளவு தண்ணீர் குடியாதிருத்தலுமே மலச்சிக்கலுக்குக் காரணங்களாக இருக்கின்றன.

குறிகள்.—வெளிப்படையாகத் தோன்றுங்குறிகளாவன.—கால் நடைகள் சாணம் போடும்போது முக்குகிறது. சாணம் குறைவாயும் புழுக்கையாயுமிருக்கும். சில சமயங்களில் தீனி தின்னாமலும் அசைப்போடாமலும் சோம்பலாய நிற்கிறது. சில போது வயிற்றில் மிகுந்த வலி இருப்பதாய்க் காணப்படுகிறது.

பரிகாரம்.—கறி உப்பு-1 அல்லது $1\frac{1}{2}$ மவுன் அதாவது 7 அல்லது $10\frac{1}{2}$ பலம், சுக்குத்தூள—2 அல்லது $2\frac{1}{2}$ தோலா அதாவது 2 அல்லது $2\frac{1}{2}$ ரூபாயிடை, சுடு தண்ணீர்—2 பயிண்டு (40 அவுன்சு) அதாவது சுமார் முக்கால் படி, இவைகளைக் கலந்துபோட வேண்டியது. குடிக்க ஏராளமான தண்ணீர் கொடுக்கவேண்டும்.

மருந்துகொடுத்து 8, 12, 16 மணி நேரத்திற்குள் அதாவது 20 முதல் 40 நாழிகைக்குள் சாணம் நெகிழ்ச்சியாய்ப்போட ஆரம்பிக்கும்.

வயிற்றில் வலி இருக்கிற சமயங்களில் மிள... 2 தோலா அதாவது 2 ரூபா... மருந்தோடு ...36 மணிவ... இபோ

காயிருந்தால் விளக்கெண்ணெய் 10 அவுன்சில் அதாவது $1\frac{1}{4}$ ஆழாக்கு நேர்வாளத் தைலம் அல்லது எண்ணெ (Croton oil) 30 சொட்டு விட்டு கொடுக்கவேண்டும். நேர்வாளக்கொட்டையைப்பொடித்து எண்ணெயில் போட்டு கொடுக்கவேண்டும். மருந்து கொடுக்கும் காலங்களில் வைக்கோலாவது தானியமாவது கொடுப்பது உசிதமல்ல. கொஞ்சம் பச்சைப்புல் கொடுக்கலாம். தவிட்டை சுடுவெந்நீர்விட்டு அவித்து ஆறிய பின் கொடுக்கவேண்டும்.

இதற்குப்பின் ஒருவாரம் வரையிலும் சுக்குத்தூள் $1\frac{1}{4}$ தோலா அதாவது $1\frac{1}{4}$ ரூபா இடை, மிளகுத்தூள் $1\frac{1}{4}$ தோலா அதாவது $1\frac{1}{4}$ ரூபா இடை, எட்டி விரைத்தூள் $\frac{1}{2}$ தோலா அதாவது $\frac{1}{2}$ ரூபா இடை இவைகளைக்கலந்து தீனியில் கொடுக்கவேண்டும்.

எட்டி விரையை அவித்தாவது வறுத்தாவதுதான் பொடிபண்ண முடியும். கன்றுகளுக்கு மலச்சிக்கிருந்தால் இரண்டுமுதல் நாலு அவுன்சு அதாவது அரை மாகாணிபடியிலிருந்து மாகாணிபடி விளக்கெண்ணெ கொடுத்தால் நிவிர்த்தியாகும்.

5. வயிற்றுப்போக்கு அல்லது சாதாரண கழிச்சல்.—சரியாய்ச் சொல்லப் புகுந்தால் வயிற்றுப்போக்கு ஒருவியாதியல்ல. வியாதிகளின் குறியாகவே இருக்கிற ... பிரமாந்தரங்களில் கவனமாக கால்நடைகளுக்குத் தீனி போடாததால் அவைகளுக்கு வயிற்றுப்போக்கு சாதாரணமாக இருந்துகொண்டிருக்கிறது. இது சாதாரண வயிற்றுப்போக்கு.

இதன் காரணங்கள்.—தின்னுமுணவு நல்லதாகயில்லாததாலும், தண்ணீர் அகப்படாத கோடைகளில் அசுத்தமான தண்ணீரை குடித்தலாலும் அரைவயிற்றுத் தீனியோடு இதர வஸ்துக்களையும், காரபூண்டுகளையும் தின்பதாலும், மழைகாலத்தில் முதலில் தழைத்த இளம்புல்லை மேய்வதாலுமுண்டாகிறது.

அன்றியும் குடலில் பூச்சி உண்டாயிருப்பதாலும் வெகுகை யென்ற தொத்துவியாதிகளின் நிமித்தமாயும் உண்டாகிறது.

குறிகள்.—அடிக்கடி தளர்ச்சியான சாணம் போடுகிறது. வாலிலும் பின்னங்கால்களிலும் கழிந்த சாணம்பட்டிருக்கும். மாடு மெலிகிறது. முதலில் சரியாய்த் தெரிகிறதில்லை. ஆனால் கழிச்சல் சில நாளைக்கு நீடித்தால் தின்ற தீனி உடம்பில் சேர்கிறதில்லை. மாடு இளைக்கிறது. வயிறு ஒட்டிப்போய்விடுகிறது. மயிர் சிலிர்க்கிறது. கழியும்போது கொஞ்சம் முக்குகிறது.

பரிகாரம் கால்நடைகளின் தகுதியை அறிந்து 10 முதல் 20 அவுன்சு அதாவது $1\frac{1}{4}$ ஆழாக்கிலிருந்து $2\frac{1}{2}$ ஆழாக்கு விளக்கெண்ணெய் முதல் கொடுக்கவேண்டும். இதனால் குடலில் சரியாத உறுத்திக்கொண்டிருந்த தீனிகள் வெளியே வந்துவிடும்.

அதே
போது
வம் பே

காசுக்கட்டி—$\frac{1}{2}$ அல்லது 1 தோலா அதாவது $\frac{1}{2}$ அல்லது 1 ரூபா இடை; சீமைச்சுண்ணாம்பு—$1\frac{1}{2}$ அல்லது 2 தோலா அதாவது $1\frac{1}{2}$ அல்லது 2 ரூபா இடை; சுக்கு—1 தோலா அல்லது 1 ரூபாய் இடை இவைகளைப் பொடித்து 20 அவுன்சு அதாவது $2\frac{1}{2}$ ஆழாக்கு அரிசிக் கஞ்சியில் நன்றாய்க் கலந்து கொடுக்கவும்.

ஆகாரம்—கஞ்சியாவது கொதிக்கிற வெந்நீரில் போதுமபி ஆறிய தவிடாவது கொடுக்கவேண்டும். குடிப்பதற்கு சுத்தமான தண்ணீரைக் கொடுக்கவேண்டும்.

வெகுகை அல்லது மற்ற தொத்து வியாதிகளாகத் தெரிந்தால் தாலூகா தாசில்தாருக்காவது தெரியப்படுத்தவேண்டும்.

6. வயிற்றுப்பொருமல்.—இந்த வியாதியில் வயிறு கெட்டகாற்றால் விம்மிவிடுகிறது. இந்த வியாதி கால்நடைகளுக்குச் சாதாரணமாய் வருவதுண்டு. மேற்சொல்லிய கெட்டகாற்று செரியாத உணவிலிருந்து உண்டாகிறது.

காரணங்கள் :—நனைந்த புல்லையாவது பச்சைப்புல்லையாவது அதிகமாக மேய்தல், வழக்கமில்லாத தீனியை தின்னல், கோடைகாலத்தில் சரியாய்த் தீனிகிடையாதிருந்து முதல் மழை பெய்தவுடன் முளைத்த செழுமையான இளம் புல்லை மிதமிஞ்சி மேய்வதனாலும் இந்த வியாதி உண்டாகிறது.

கால்நடைகளின் வயிற்றிலே இந்தக் கெட்ட காற்று உண்டாகிறது. வயிற்றில் காற்று அதிகமாய்விட்டால் பொறுக்க முடியாத அபாயமான குறிகள் தோன்றுகின்றன.

குறிகள்.—முதல் முதல் இடது பக்கத்தில் வயிற்றிலுள்ள பள்ளம காற்றால் மேடிருப்பதைப் பார்க்கலாம். அதைக்கொட்டினால் மத்தளம் போடும். வலி பொறுக்க முடியாமல் படுத்தும் எழுந்துகொண்டுமிருக்கும். கெச்சிதமாக இருக்கும்போது விடாது அசைப்போடுகிற மாடு இந்த வியாதி கண்டதும் வாயை அசைக்கிறதில்லை. வியாதியின் ஆரம்பத்திலேயே தக்க சிகிச்சை செய்யாது போனால் ஒவ்வொரு விநாடியுங் காற்று அதிகரித்து வயிறு மிகுதியாய்ப் புடைத்து மாடு மூச்சுமுட்டிக் கீழே விழுந்து இறக்கிறது.

பரிகாரம்.—கர்ப்பூரத்தைலம் (turpentine)—2 அவுன்சு அதாவது $\frac{1}{2}$ மாகாணிபடி; விளக்கெண்ணெய்—20 அவுன்சு அதாவது $2\frac{1}{2}$ ஆழாக்கு—இவை நன்றாய்க் கலந்து கொடுக்க வேண்டும்.

கர்ப்பூரத்தைலம் கிடையாதுபோனால் அரைத்தோலா அதாவது $\frac{1}{2}$ ரூபா இடைகர்ப்பூரத்தையும் அரைத்தோலா அதாவது $\frac{1}{2}$ ரூபா இடை பெருங்காயத்தையும்நன்றாய்ப பொடித்து எண்ணெயில் போட்டுக் கொடுக்கவும்.

... க்கொடுக் ... வு நடு ... மாடுக ... ந்து மரு ...ந்தைக் குறைக்கவேண்டும். ஒரு சமயம் இந்த மருந்தில் மாடு $1\frac{1}{2}$ மணி நேரத்தில் அதாவது $1\frac{1}{4}$ நாழிகைக்குள் சௌக்கியப்படாவிட்டால் திரும்ப ஒரு அவுன்சு அதாவது கால் மாகாணிபடி கர்ப்பூரத்தைலமும் 10 அவுன்சு அதாவது $1\frac{1}{4}$ ஆழாக்கு விளக்கெண்ணெயுமாவது அல்லது சுக்குத்தூள் 2 அல்லது $2\frac{1}{2}$ தோலா அதாவது 2 அல்லது $2\frac{1}{2}$ ரூபா இடை நாட்டுச்சாராயம் 4 அல்லது 5 அவுன்சம் மாகாணிபடி அல்லது 20 அவுன்சு அதாவது $2\frac{1}{2}$ ஆழாக்கு தண்ணீரில் கலந்து கொடுக்கலாம். வியாதியின் குறிகள் மாறினபின் சில தினங்களுக்கு மாடுகளுக்கு வழக்கமான தீனியை கொடுக்கக்கூடாது. 12 முதல் 24 மணி நேரத்திற்குப்பின் 30 முதல் 60 நாழிகைக்குப்பின் இலேசாகச் செரிக்கும் ஆகாரம் அதாவது அரிசிக்கஞ்சி கொடுப்பது உசிதம். பின் இரண்டு அல்லது மூன்று நாளைக்கு இரண்டு தோலா அதாவது இரண்டு ரூபா இடை சுக்குத்தூளும் நாலு தோலா அதாவது நாலு ரூபா இடை சோடா உப்பும் தீனியில் கலந்து கொடுக்கலாம். அல்லது தண்ணீரில் கலக்கிபோட்டிவிடலாம் அல்லது நாலைந்து நாளைக்குள் சுக்குத்தூள் 2 தோலா அதாவது 2 ரூபாய் இடை கிலவேப்புதூள் 2 தோலா அதாவது 2 ரூபா இடை எட்டி விரைத்தூள் $\frac{3}{4}$ அல்லது 1 தோலா அதாவது $\frac{3}{4}$ அல்லது 1 ரூபா இடை இவைகளைக்கலந்து கொடுக்கலாம். மேல் சொல்லிய சிகிச்சைகளில் சரிப்படாது பயங்கரமான குறிகள் காட்டிக்கொண்டிருந்து கால்நடை வைத்தியர் கிடைக்காத சமயத்தில் அதிகமாகப் புடைத்திருக்கிற இடதுபக்கத்தில் கடைசி நெஞ்செலும்பிற்கும், பின்னங்கால் சப்பை மேட்டிற்கும் மத்தியில் ஒரு சுத்தமான கத்தியைகொண்டு ஆழமாகக்குத்தி காற்றைப்போக்கலாம். கத்தி சுத்தமாக இருந்தால் புண் அனேகமாய் ஆறிவிடும்.

7. ஈன்ற கால்நடைகளுக்குக் கொடிவிழாதிருத்தல்.—சில சமயங்களில் பசுக்கள் கன்றுபோட்டு 24 மணி அல்லது 60 நாழிகை அல்லது அதற்கு மேற்பட்ட காலம் வரை கொடி வயிற்றில் தங்கி துற்குறிகள் காட்டாதிருந்தபோதிலும் 24 மணி நேரத்திற்கு அதாவது 60 நாழிகை மேல் கொடிவிழாது போனால அதைப்பற்றி நாம் கவனிக்கவேண்டியது அவசரம்.

காரணங்கள.—காலத்திற்கு முந்திப் பிரசவிக்கும்போதும், அதிகநேரம் வரைப்பட்டுப் பிரசவிக்கும்போதும் கொடி இலேசாய் விழுகிறதில்லை. இது கிழட்டுப்பசுக்களில் சகசம். வயது முதிர முதிர தேகத்தில் பலங்குறைந்து கொடியை வெளிப்படுத்த சக்தி இல்லாது போய்விடுகிறது.

நம் நாட்டில் கொடி விழாத சமயங்களில் 24 மணி அதாவது 60 நாழிகை நேரமளவு கையிடாது பொறுத்திருக்கலாம் அதற்குமேலும் விழாதிருப்பதைக்கவனிக்காவிட்டால் மிகுந்த அசம்பாவிதங்கள் நேரி



குறிகள்.—கொடியின்ஒருபாகம் கடையிலிருந்து தொங்கிக் கொண்டிருக்கும். மாடு அடிக்கடி பாதத்தைப் பூமியில் மோதிக்கொண்டிருக்கும். மாடு அடிக்கடி பாதத்தைப் பூமியில் மோதிக்கொண்டும், வாலை சுழற்றிக்கொண்டுமிருக்கும். கொடியை வெளியேதள்ள அடிக்கடி முக்கிப்பார்த்துங் கொடிவிழுகிறதில்லை.

பரிகாரம்.—மாடு எய்பாயுங்களைப்பாயுமிருந்தால் நாட்டுச்சாராயம 10 அவுன்சு அதாவது $1\frac{1}{4}$ ஆழாக்கு சமம் தண்ணீர் சேர்த்துக்கொடுக்கவும்.

ஒருபடி கப்புமாவைப் புட்டவியலாக அவித்து அத்தோடு 2 பலம் அதாவது 14 பலம் பனை வெல்லஞ்சேர்த்துக் கொடுக்கவும். அல்லது (Okra Capsules) (வெண்டைக்காய்) 15 அல்லது 20 தோலா அதாவது 15 அல்லது 20 ரூபா இடையும் 10 தோலா அதாவது 10 ரூபா இடை எள்ளும் 10 தோலா அதாவது 10 ரூபா இடை பனை வெல்லமும் நன்றாய் இடித்து 1 படி கஞ்சியில் கலக்கிக்கொடுக்கலாம். இது நக்க பிரயோசனத்தை கொடுக்கும். தவறினால் இலேசாய் இழுத்து வெளிப்படுத்து மேற்பாடுகள் செய்யவேண்டும். இது தொழில் தெரிந்தவர்கள் செய்வது உசிதம். அவர்கள் கிடையாதுபோனால் கீழே விவரித்திருக்கிறபடி செய்யவேண்டும். ஒரு அடிநீளமுள்ள இரண்டு கட்டையான குச்சிகள் எடுத்து வெளியே தொங்குகிற கொடியின் நுனியை இரண்டு குச்சிகளுக்குமிடையில் வைத்து குச்சிகள் ஒன்றின மேல் ஒன்றாயிருக்க இரண்டு பக்கத்து நுனிகளையும் இரண்டு கைகளால் இறுகப்பிடித்து மேலநோக்கி கொடியைக் குச்சிகளின்மேல் சுற்றவேண்டும். இப்படி இழுப்பதில் கொடி வராதிருந்தால் அப்படியே விட்டுவிட்டு மறுநாள் முயலவேண்டும். எந்தகாரணத்தாலும் கொடியைப் பலமாக இழுக்கக்கூடாது. கொடி வந்தபின் மாட்டின் யோனியத்தை கஞ்சி முதலியன கொடுத்துப்பலப்படுத்துவதைத்தவிர வேறு விசேஷமாய்ச் செய்வதொன்று மில்லை. 2, 3 நாளைக்குபின் எப்போதுங்கொடுக்கிற தீனி கொடுக்கலாம்.

8. கால் தாங்குதல்.—யாதொரு காலிலும் வலியில்லாத ஒரு மாட்டை ஓட்டினால், அது கால்களை நன்றாய் ஊனிவைத்து நடப்பதையும், தன்பாரத்தை எல்லா கால்களிலும் சமமாகப் போடுவதையும் பார்க்கலாம்.

ஏதாவது வலியிருந்தால், அந்தக்காலில் நிற்கும்போதாவது, நடக்கும்போதாவது, அல்லது ஓடும்போதாவது, அல்லது எப்போதுமேயாவது குறைந்த பாரத்தை போட எத்தனிக்கும். அப்போது கால் அல்லது கால்கள் நொண்டி என்று சொல்லப்படும்.

கால் தாங்கும்போது முக்கியமாய் கவனிக்கவேண்டிய விஷயம் என்னவென்றால், கால் சரியாகும் வரைக்கும் யாதொரு வேலையும் கொடுக்காமலிருக்கவேண்டும். இல்லாவிட்டால் தாங்கல் அநேகமாய் அதிகரிக்கும். ஆகையால் மாட்டை தொழுவில் கட்டிவைத்து தீனிபோடவேண்டும்.

கால் தாங்குதலை கண்டுபிடித்து வைத்தியம் பண்ணுவதற்கு, மாடு சாதாரணமாய் நின்றுகொண்டிருக்கும்பொழுது கவனித்து பார்க்கவேண்டும். அப்படி நிற்கையில், ஏதாவது ஒருகாலை முன்னாடி நீட்டிக் கொண்டாவது, அல்லது அதிக வலியினால் பூமியில் படாமல் காலை தூக்கிக்கொண்டாவது இருக்கிறதா என்று பார்க்கவேண்டும். அதுமாதிரி ஒன்றுமில்லாமல் போனால், சமமான கெட்டித்தரையில் திருப்பித்திருப்பி மாட்டை நடத்தியும் ஓட்டியும் பார்க்கவும். அப்போது நமமிடமிருந்து போகும்போது பின்கால்களையும் நம்மை நோக்கிவரும் போது முன்கால்களையும் கவனித்துப்பார்க்கவும்.

அப்படி நோக்குகையில் எந்தக் காலை ஜாஸ்தி அழுத்தி ஊன்றசெய்யப்பார்க்கிறது என்று கவனிக்கவும்.

அது தெரிந்தவுடன், அழுத்தி ஊன்றுகிற கால் நொண்டியில்லை யென்றும், அதற்கு அடுத்த கால் தாங்கல் என்றும் தீர்மானிக்கவும். அதாவது, உதாரணமாக, இடது பின்காலில் அதிக கனம் போட்டால் வலதுபின்கால் தாங்கல் என்றும், இடது முன்காலில் ஜாஸ்திகனம் போட்டால் வலது முன்கால் தாங்கல் என்றும் அறியவும். ... பாரத்தை எந்தக்கால் கீழே ஊனும்போது போடுகிறதோ அந்தக்கால் வலியில்லை என்றும், எந்தக்கால் கீழே வைக்கும்போது தலையை உயரத் தூக்குகிறதோ அந்தக்கால் வலியுள்ளது என்றும் தெரியவும்.

இரண்டு முன்கால்கள் அல்லது இரண்டு பின்கால்கள் ஒரே காலத்தில் தாங்குமானால் அந்த இரண்டு கால்களிலும் சமமாக பாரத்தைப் போடுவதுடன், இழுத்தாப்போல் குறுகிக்குறுகி நடக்கும். தாங்குகிற காலை தெரிந்துகொண்டபிறகு, தாங்கும் காரணம் அறியும்பொருட்டு காலை மேலிருந்து கீழ்வரையில் ஒவ்வொருபாகமாக பரீக்ஷிக்கவேண்டும்.

கால் தாங்குவதற்குள்ள காரணங்களில் சிலவற்றை இனிமேல் கவனிப்போம்.

குளம்பு.—வேலைசெய்யும் மாடுகள் கால் தாங்குவதற்கு காரணம் பெரும்பாலும் குளம்பிலிருப்பதால, அதை முதலில பரிசோதிக்கவேண்டும்.

மாட்டின் குளம்பின் பிளப்பில் கல் அல்லது வேறு வஸ்துக்களிருக்கிறதாவென்று பரிசோதித்து பார்க்கவும். அப்படி ஏதாவது இருந்து அதை எடுத்துவிட்டால கால் தாங்குதல அநேகமாய் நின்றுவிடும். அதுமாதிரி ஒன்றுமில்லாமலிருந்தும் கால் தாங்கினால், குளம்பில் எங்கேயாவது வலியிருக்கிறதா என்று பார்க்க ஒரு சுத்தியினால் மெதுவாய சுற்றிலும் தட்டியாவது, அல்லது ஒரு குறட்டினால் குளம்பை இடுக்கியாவது பார்க்கவும். அப்போது வலியிருந்தால் உடனே காலை இழுத்துக்கொள்ளும்.

அப்படி காலை தூக்கினால், ஏதாவது லாடமிருந்தால் அதைக் கழற்றி, பிறகு தவிட்டில் கொதிக்கிற தண்ணீரைவிட்டுக்கலந்து சூட்டோடு தினமொருதரம் கால் தாங்குதல் நிற்கும்வரையில் கோணியைப்போட்டு கட்டவும்.

லாடமடித்து முதல் அல்லது இரண்டாவது நாள் நொண்டினால், லாடக்காரன் குளம்பை அதிகமாக சீவியாவது, அல்லது குறுத்தினருகில போகும்படியாக லாடத்தின் ஆணியை அடித்தாவதிருக்கலாம்.

லாடமடிக்காத மாடு குளம்பு வலியினால் நொண்டினால், அது அநேகமாய் மாட்டை கப்பிரோட்டில் கடினமான வேலைகொடுத்து, குளம்பு தேய்ந்து, அதனால் நொண்டலாம். இதுமாதிரி குளம்பு தேய்ந்திருக்கிற விஷயத்தில், குளம்பு மறுபடியும் வளர்ந்து கெட்டியாகும்வரையில், மாட்டை வேலை கொடுக்காமல் நிறுத்தி, அதற்குப்பிறகு லாடம்போட்டு வேலைசெய்யவேண்டும.

சுளுக்கு.—மிருகங்களின் கால்பூட்டு ஒவ்வொன்றும், இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட எலும்புகள் தசையினால் சேர்க்கப்பட்டு அமைக்கப்பட்டிருக்கின்றது. இத்தசை, மாடு சருக்கியாவது, குண்டுகுழியில் கால்வைத்தாவது, அல்லது அதிகவேகமாய் ஓடியாவது அல்லது கனமையான பாரத்தை இழுக்கும்போது ... இழுபட்டும், அறுபட்டும்போகும் அதுதான் சுளுக்கு என்றுபெயர்.

மாடுகளுக்கு சாதாரணமாய் சுளுக்காகக் கூடிய இடங்கள், கணைக்கால், முன்சப்பை, பின்சப்பை, இவைகள் சுளுக்கியிருப்பது, வீக்கத்தினாலும், அவ்விடம் சூடாயிருப்பதனாலும், கையை வைத்தால் வலிப்பதனாலும தெரியவரும். அப்படியிருக்கிற பூட்டை, காலை மாலை இரண்டு நேரம் கொதிக்கிற தண்ணீரைக்கொண்டு அரைமணிநேரம் ஒத்தடம் கொடுத்து, பிறகு நன்றாக துடைத்துவிட்டு, கற்பூர எண்ணெய்போட்டுத் தேய்க்கவும். கற்பூர எண்ணெய் செய்யும் விதம்: ஒரு தோலா கற்பூரத்தை ஒரு ஆழாக்கு தேங்காய் எண்ணெய் அல்லது நல்லெண்ணெய்யில் கரைக்கவும். இந்த கற்பூர எண்ணெய்யில் அரைகால் ஆழாக்கு டர்பண்டயின் (கற்பூர தைலம்) சேர்க்கலாம். இப்படி 2 வாரம வரையில் தேய்த்தும் நொண்டி இருந்தால், பிறகு 3 பாகம் கடுகு பொடியையும் ஒரு பாகம் மிளகாய் பொடியையும் தண்ணீரைவிட்டு பசைபோல் அரைத்து, அந்த இடத்திலபோட்டு 5 நிமிஷம தேய்க்கவும். இருந்தாலும் கால்நடை டாக்டரை அழைப்பது நலம். எக்காரணத்தாலும், நொண்டுகிற மாட்டுக்கு யாதொரு விதமான வேலையும் கொடுக்கக் கூடாது.

எலும்புமுறிதல்—காலின் பெரிய எலும்புகளில் ஏதாகிலும் ஒன்று சுத்தமாக முறிந்துவிட்டால், அதற்குக்கீழிருக்கிறபாகம் சக்தியற்றதாய்த் தொங்கும். அந்தக் காலில் ம... போடமுடியா ...லாமல் எலும்பு

மாத்திரம் முறிந்திருந்தால், முறிந்த எலும்பின் முனைகளை நன்றாய் ஒன்று சேர்த்து, அப்படியே இருக்கும்படியாக சிம்புவைத்து, துணியினால் இறுகச் சுற்றிக்கட்டவும்.

சிம்புகள் தயார்பண்ணும் விதம்:—மூங்கிலை மாட்டின் கால்திறத்திற்குத் தகுந்தபடி 1 அல்லது 2 அங்குலம் அகலமாகச்சீவி, ஒடிந்த இடத்திற்கு கீழும்மேலும் 6 அங்குலம் நீளமுள்ளதாக வெட்டி தயார் பண்ணிக்கொள்ளவும்.

ஏதாகிலும் வெளிக்காயமிருந்தால், சிம்பு வைத்து கட்டுமுன், அக்காயத்தை இந்த டிப்பார்ட்மெண்ட் 1-ம் திர். விளம்பரத்தில் சொல்லியபடி, சொஸ்தம் பண்ணியாவது, அல்லது சிம்பையும் துணியையும் சுற்றுமுன், காயத்திற்கு மருந்துபோட இடம் வைத்தாவது கட்டவும்.

சிம்புகள் வைத்து கட்டுமுன், தோலை வழுமுட்டாமலிருக்கும் பொருட்டு, மெதுவான துணிகளை காலில்சுற்றி, அதன்பேரில் சிம்பைவைத்துக்கட்டவும். இப்படிக் கட்டினதை 5, 6 வாரம் வரைக்கும் அவிழ்க்கக்கூடாது.

மேல்சொல்லியபடி சிகிச்சை செய்தால், இளமாடுகளில் சப்பைகளுக்குக் கீழிருக்கி ... கூடிப்போகும். ஆனால் முன்கால் அல்லது பின்கால் சப்பை எலும்புகள் முறிந்திருந்தாலும், அல்லது மாடு வயசாயிருந்தாலும், மறுபடி வேலைசெய்யும்படி கால் கூடுவது கடினமானகாரியம். ஆகையால் வந்தவிலைக்கு மாட்டை அடிமாட்டுக்கு விற்றுவிடவும்.

முன்சப்பை உருண்டை சருகுதல்:—இது கிராமத்திலுள்ள மாடுகளுக்கு சாதாரணமாக நேரிடக்கூடியது. இது மேட்டிலிருந்து பள்ளத்தில் மாடு குதிக்கையிலாவது, குண்டுகுழியில் காலை வைக்கையிலாவது, அல்லது சறுக்கி விழும்போதாவது சம்பவிக்கும். மாடு அந்தக் காலின் கனம்போட முடியாமல் மூன்று காலில் நடக்கும்.

கையை வைத்துப்பார்த்தால் சருகிப்போயிருக்கிற எலும்பு உருண்டை சப்பை மூட்டில இல்லாமல் நழுவி வெளியே யிருப்பது தெரியவரும்.

எவ்வளவுக்கெவ்வளவு சீக்கிரம் அதைகண்டுபிடித்து உருண்டையை சரியான இடத்திலதள்ளுகிறோமோ, அவ்வளவுக்கவ்வளவு சொஸ்தமாகக்கூடிய ஏதுக்கள் அதிகமாக உண்டு.

ஆழமான குளம் அல்லது வாய்க்கால் அருகிலிருந்தால், அதில் மாட்டை நீச்சடிக்கலாம். இது ஒரு சமயம் உருண்டையை சரியான விடத்திற்கு கொண்டுவரக்கூடும். இதில் சரிப்படாமல் போனால், உருண்டைகழுவின பக்கம் மேலிருக்கும்படி மாட்டை கீழேதள்ளி, அந்த காலின் முனைக் காலுக்கு மேல ஒரு கயிற்றைக்கட்டி, அந்தக்கயிற்றை ஒரு ஆசு... உடல் மு...

உருண்டையின்பேரில் உள்ளங்கையை வைத்து, சரியான விடத்தில் போகும்படி அதைத்தள்ளவும்.

அப்படி சரியான விடத்தில் போகையில் "டக்" என்று சத்தம் கேட்கும்.

இதர காரணங்கள் :—மேல் சொல்லியவைகள் மாடு கால் தாங்குவதற்குள்ள காரணங்கள் எல்லாம் ஆகமாட்டா. மாடுக்காரர்க்கு தெரிண்டின காரணத்தை கண்டுபிடிக்க முடியாமல்போனால், கூடிய சீக்கிரத்தில் கால்நடை டாக்டரின் உதவியைத் தேடவும்.

9. பால்கட்டுசுரம் அல்லது மடிவீக்கம்: இதை சாதாரணமாய் கறவை மாடுகளில் கன்று போட்டவுடன் பார்க்கலாம்.

இது பால் வெகு அதிகமாக சொரப்பதினால் உண்டாகலாம். அல்லது கறக்கும்போது கொஞ்சம் பாலை மடியிலேயேவிட்டுவிடுவதினால் அது திரிந்து கெட்டுப்போவதினாலும் உண்டாகலாம்.

பால் கட்டியிருக்கும் பாகம் சூடாயும் சிவந்த நிறமாயும் இருப்பதுடன், விம்மியும் வலியுள்ளதாயுமிருக்கும். மடியில் வலியிருப்பது, மாடு பின்கால் ஒன்றை அடிக்கடி அதனிடம் கொண்டுபோவதினால் தெரியவரும். அதிலிருந்து திரிந்தபாலும், சில சமயம் ... முள்ள நீரும் வரும்.

சாதாரணமாக மாடு தீனிதின்காமலும் அசைபோடாமலும் இருப்பதோடுகூட சாருணமுமிருக்கும்.

சிகிச்சை செய்யும் முறை என்னவென்றால், 1½ படி சுடுகிற தண்ணீரில், 1, 1¼ பவுண்டு உப்பையும் 2, 2½ தோலா சுக்குப் பொடியையும் கரைத்து பேதிக்குக்கொடுக்கவும்.

இதற்குப் பிறகு தினம் இருமுறை ஒரு தோலா வெடியுப்பு தீனியில் கலந்து கொடுக்கலாம். மாட்டிற்குத் தீனி கஞ்சியும, சுடுதண்ணீர்விட்டுப் பிசிர்ந்த தவிடும தான்.

பால் கட்டியிருக்கிற பாகத்திற்கு, காலை மாலை இரண்டுவேளை ஊமத்தம் இலைபோட்டு கொதிக்கவைத்த சுடுதண்ணீர் ஒத்தடம் கொடுக்கவேண்டும். பிறகு ஒரு ஆழாக்கு தேங்காய்எண்ணெய் அல்லது நல்லெண்ணெயில் ஒரு தோலா கற்பூரத்தைக்கரைத்து, அந்த எண்ணெயை நன்றாகத் தேய்க்கவும்.

இருந்தாலும், இந்த வியாதிக்கு சிகிச்சை செய்வதில் முக்கியமாய் கவனிக்கவேண்டியது என்னவென்றால், வீங்கியிருக்கிற மடியிலுள்ள அர்நீரெல்லாம் வெளிவரும்படி ஒரு நாளைக்கு 3, 4 தரம் கூடியவரையில் மடியை கையாடி பீச்சவேண்டும். இது செய்யும் முறை, முலைக்காம்புக்கு மேலிருக்கிற மடியை முதலில் நன்றாய் கையால் தேய்த்து பிறகு முலைக்காம்பை பீச்சவும்.

10 விஷமிடுதல் :—கால் நடைகள் தற் ...மிட்டுப்

தற்செயலாய் விஷமிடப்படுகிறவைகள் அடிக்கடி நேரிடுகின்றன. ஆனாலும் இதற்குக்காரணம் அநேகவிதவஸ்துக்கள் இருப்பதினால், இந்தச்சிறு வியாசத்தில் அவைகளைப்பற்றி பூரணமாய்ச் சொல்வது சாத்தியமல்ல.

ஆகையால் இந்த இராஜதானியில் குற்றம் சாட்டப்படும்படியான விஷமிடுதலில் (criminal poisoning) சாதாரணமாக உபயோகிக்கக்கூடியவஸ்துக்களில் சிலவற்றைப் பற்றி சொல்லுவோம்.

சென்னை ராஜதானியில் தோலுக்கிருக்கும் கிராக்கியினாலும், கிராமங்களிலிருந்து மாடுகள் மேயப்போகும் இடங்களில் பழிக்கஞ்சாதவர்களுக்கு விஷமிடுவதற்கு சமயம் வாய்ப்பதினாலும், இச்செய்கை வெகு சாதாரணமாக இருக்கலாம். இருந்தாலும் குற்றவாளிகளைக் கண்டுபிடித்து தண்டனை விதிப்பது இது வரையில் முடியாமல் போயிருக்கிறது.

சாதாரணமாக மாடுகள் மேயப்போகும்போது சொந்தக்காரரும் கூடவே போகமுடியாமல் இருப்பதால், அச்சமயங்களில் நேரிடக்கூடிய குற்றங்களைத் தடுப்பது வெகு அசாத்தியமான காரியம். ஆனால் மாட்டுக்காரர் சொந்த வரியிலேயே இச்செய்கை நேரிட்டுக்கொண்டிருக்கின்றது. அவைகளை ... இச்செய்கை அநேகமாய் நின்றுவிடும். தோலுக்காக சக்கிலியாகள் விஷமிடுவதோடுகூட, விரோதிகள் துவேஷத்தினாலும் செய்வது உண்டு.

குற்றம் சாட்டக்கூடிய விஷமிடுதல் (criminal poisoning) நேர்ந்திருக்கிறது என்று சந்தேகித்தவுடன், போலீசாருக்கு சொல்லியனுப்பவேண்டும். அவர் அந்த செத்த மாட்டில் விஷ சம்பந்தமான வஸ்துக்கள் இருக்கிறதா என்று பரிசோதிக்க, சமீபத்திலுள்ள கால்நடை டாக்டருக்கு, நேராகவாவது, தாசில்தார் மூலமாகவாவது எழுதி, வேண்டிய ஏற்பாடுசெய்வார். குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதற்கு, மாட்டுச்சொந்தக்காரர் போலீசுக்கு உடனே சொல்லியனுப்புவதுடன், அம்மாட்டின் மலஜலமுதலியவைகளை ஜாக்கிரதையாய் வைத்திருந்து கொடுத்து, பரிசோதிக்கும் டாக்டருக்கு மாடு சாகுமுன் காண்பித்த குணங்களை கூடுமானவரையில் நன்றாய் விவரித்துச் சொல்லவேண்டும்.

இந்த இராஜதானியில் விஷமிடுவதற்கு சாதாரணமாக உபயோகிக்கக்கூடிய மூன்று வஸ்துக்களைப்பற்றிய சில விவரங்களை கீழே சொல்லுவோம்.

வெள்ளைப் பாஷாணம் :—இது சாதாரணமாக கடைகளில் அகப்படக்கூடியது. இதை வெல்லத்துடனாவது அல்லது வாழைப்பழத்திலாவது கலந்து உள்ளுக்கு செலுத்திவிடலாம். அல்லது வேறு வஸ்துக்களுடன் சேர்த்து அரைத்து, அந்தப் பசையை ஒரு மூங்கிலைகொண்டு ஆசனவாய்போன்ற துவாரங்களின் வழியாய் உள்ளே செலுத்திவிடலாம். மருந்தை வாய் வழியாய் செலுத்தியிருந்தால், இரை, நாக்கு முதலிய



மற்றபாகங்கள் வெந்திருக்கும். வாயிலிருந்து அதிகமாக எச்சல் (சள்) ஒழுகும். மாடு வாந்திபண்ண எத்தனிக்கும். சீக்கிரத்தில், அடிக்கடி படுத்துப்படுத்து எழுந்திருப்பதினால் வயிற்றுவலி இருக்கிறது என்பதைக் காண்பிக்கும். வயிறு ஊதிப்போகலாம். கொஞ்சம் கழித்து, துர்நாற்றமுள்ள கழிச்சலெடுக்கும். இக்கழிச்சலில் சில சமயம் இரத்தக் கலப்புமிருக்கும். ஆசனதுவாரம் வழியாய் மருந்தை செலுத்தியிருந்தால் மாடு அடிக்கடி முக்கும். ஆசனவாய் சிவந்தும், வெந்துமிருக்கும். கடைசியில் முகக்குறி மாறி, கண்மூழி குத்தட்டு, மூச்சுமுட்டி, கால்தடுமாறி, திமிர்வாதம் மேலிட்டு கீழே விழுந்து இறக்கும்.

கடைசி வரையில் மாட்டைப் பார்க்காமலிருந்தால் சிகிச்சை யொன்றும் பிரயோஜனமில்லை. முன்னாடியே பார்த்துக் கண்டுபிடித்தால், ஒரு தோலா அன்னபேதியை ¾ படி தண்ணீரில் கரைத்து கொடுக்கவும். அப்படி கொடுத்தவுடன்: 15, 20 கோழி முட்டையின் வெள்ளைக்கருவை மாத்திரம் எடுத்து கஞ்சியிலாவது, பாலிலாவது 3, 4-மணிக்கு ஒருதரம உள்ளுக்குக்கொடுக்கவும்.

பச்சை அலரி;—பச்சை அலரி விஷம கொடுக்கும் விதம், செடியின் விதைகளை மாலைபோல்தொடுத்து மாடுகள் தின்னும்படி போட்டுவிடலாம், அல்லது அச்செடியின் ... கலந்து விடலாம்.

இவ்விஷத்தினால் தீண்டப்பட்ட பிராணி தீனிதின்காமலிருப்பதோடுகூட, வாந்தியெடுப்பதற்கு எத்தனம்பண்ணும. வயிற்றுவலியின் குணங்களைக் காண்பிக்கும். அசாத்திய கழிச்சலோடு வெகு அதிகமாக மூத்திரம் பேயும்.

முதலில, மாடு வெறிகுணம் காட்டலாம; பிறகு மயங்கி, கால் தள்ளாடி, நடுக்கலெடுத்து, இழுப்பு வலிவந்து திமிர்வாதம் முட்டி சாகும்.

மாட்டுக்குக் கிளர்ச்சியுண்டாகும் பொருட்டு கொஞ்சம் சாராயம கொடுத்துப் பார்க்கலாம. ஆனாலும் சிகிச்சை யொனறும் பலன் கொடுக்கமாட்டாது.

குண்டுமணி :—இவ்விஷத்தை சாதாரணமாக கொடுக்கும் விதம் என்னவென்றால் கடையில் அகப்படும் குண்டுமணியைக் கொண்டுவந்து: நன்றாக தண்ணீரைவிட்டுப் பசைபோல அரைத்து, ஒருஅங்குலநீளமுள்ள கூர்மையான ஆணிபோல திரட்டி, கெட்டியாகும் வரையில் வெய்யலில் உலர்த்தி, அதனபிறகு அதை ஒரு மரப்பிடியில் சொருகி மாட்டின் கழுத்துபோன்ற சௌகரியமான விடத்தில தோலுக்குள்பாய்ச்சிவிடலாம். அப்படி விஷம் குத்தப்பட்ட இடம் அதிகமாக வீங்கி மாடு இரண்டு நாளில் சாகும்.

மருந்து குத்தின கொஞ்ச நாழிக்குள் அதை எடுத்து விடுவது தவிர, வேறு சிகிச்சையொன்றும் பிரயோஜனப்படாது.

---

## கல்வி கற்பின் நோக்கமேன்?

முற்காலத்தில் நம்முன்னோர்கள் எவ்வித நிலைமையிலிருந்தார்களென்று நாமறிந்திலோம. சற்று ஆழ்ந்த கருத்துக்கொண்டு யோசிக்குங்கால் நாம் நன்கறிவோம். தமிழ்ச் சங்க நூல்களை எடுத்துப்பார்ப்போமானால் 6-ம் 7-ம் நூற்றாண்டுகளிலிருந்த நம் ஜாதியார் கவி ராயர்களாகவும், கல்வியில் தேர்ந்தவர்களாகவும் இன்னும் பெரிய உத்தியோகஸ்தர்களாகவும், இராஜக்களாகவுமிருந்து வந்திருந்தார்களென்பது தெற்றெனப்புலப்படும். இவர்களோடு அக்காலத்திலிருந்த இதர ஜாதியார் சம்பந்த மூலமாய்க் கலந்துகொண்டார்களென்பதும் வெளிப்படும்.

அவ்வித உயர்நிலைமையிலிருந்த நம் ஜாதியார் இவ்விதக் கீழ் நிலைமையடைந்ததற்குக் காரணமேன்? இவர்களுக்குண்டாயிருந்த பேதன்மையும் பெருமையும் கவலையில்லா நிலைமையுமாகத்தானிருந்திருக்கவேண்டுமென்பதாக வெனது புலமறிவிற்குப் புலப்படுகின்றது. இவ்வித நிலைமையிலிருந்த ஜாதியார் பார்ப்பவர்கள் இகழத்தக்க கீழ் நிலைமையடைந்தார்களென்று ஆண்டவன் நம்மில் பரிதபித்து நம்மைப் பலவித துன்பங்களிலிருந்து ஈடேற்றும் அனபார்ந்த சர்க்காரை நம்மிலருளிச்செய் ... யதருகிறார். பெருமானின் பேருதவியால், முற்சுறிகுறியாக நம்மிலனேகர் கிராமங்களிலும் உயர்தரக்கலாசாலைகளிலும் கல்வி பயின்று வருகின்றனர்.

கற்கும் நோக்கமென்ன? படித்துப் பெரிய உத்தியோகம் பெற்று அதிகச்சம்பளம வாங்கி சோகாதண்டு சுகித்திருக்கலாமென்னும் நினைவோ? அல்லது கற்றவுடனே உத்தியோகம பெறலாமென்பது நிச்சயமா? தான்படித்ததை மற்றொருவருக்கு முறைக்குங்காலறிந்து விடுவார்களென்று சொல்லாது அடக்கி வைப்பதற்கா? இல்லை, இல்லை. நாமிருந்த நிலைமையை யுணர்ந்து நமக்கருளப்பட்டதை நாமும் பிறருக்குப்போதித்து, நாகரீகத்தைப் பரவச்செய்து கல்வியே கணக்கடங்காத செல்வமென்று கற்று முன்னேறவும் அநாகரீகரென்றழைக்கப்படுவோர் நாகரீகரென்று அழைக்கப்படுமாறு செய்தருளல்வேண்டும். கற்பதோடு ஏதாவது தொழிற் கற்கவேண்டும.

படிக்கவும் நிலம், மாடு முதலியவை வாங்கவும் கடை வைத்து வியாபாரம்பண்ணவும் கடன் வாங்குகிறோமாகில் வாங்கிய கடனை உபயோகிக்கவேண்டிய முறையோடு உபயோகித்து சொன்ன சொற்றவறாது, கொடுத்தவர்கள் சம்மதத்தக்கதாக நடந்துகொள்ளவேண்டும. அப்படியில்லாது காலாகாலங்களின் கடமைகளைச் செய்யாது, துன்பம் வருங்காலங்களில பணம் வைத்திருக்கப்பட்டவர்களை விசாரிக்கப்போய் நமக்கூடிய நலவார்த்தைகளைகூறி பேய்த் தனமை வாய்ந்த ... வாங்கி வருகிற கடனுக்கும் தன் செலவுக்கும் போதுமானதாகிறது. பணம் கட்டவேண்டிய தினத்தன்று செலுத்தாது செலவுசெய்து கடன்காரன வரும்பொழுது பூனையைக்கண்ட எலிபோல ஓடி ஒளிந்துகொள்ளுகின்றனர். கடன்காரன்முறையே இரண்டுமூன்று தரம் அலைந்து சலிப்புற்று, கடன்வாங்கிய உயிருக்குயிராகிய சிநேகிதர்களை வெறுத்து, பெரிய சபையிலிருந்தபோதிலும் சினத்தின் கோரத்தால் வாய்க்கு வராத வார்த்தைகளால் தூஷிப்பதை நாம் கண்ணாரக்கண்டும் காதாரகேட்டுமிருக்கிறோம். அச்சபையிலிருந்த யாவரும் ஆச்சரியப்பட்டு இவர்களும் கடன் வாங்கினார்களாவென்றெண்ணி பொய்வேஷத்தைக் கண்டு அதுமுதல் அவர்களை நம்பாது செய்கின்றனர். அங்கேயே பஞ்சாயத்தில் வைத்துக் கேவலப்படுத்தி ஏதாவது நியாயம் கிடைக்கச் செய்கின்றனர். நிலத்தை யெல்லாம் தன் கடனுக்காக எழுதி வாங்குகின்றனர். குடும்பம அடியோடு கெடுவதற்கு காரணமாகி விடுகின்றன. பெரிய கடன்களாயிருக்கும்பட்சத்தில் கோர்ட்டில் தீர்ப்புச்செய்து வாங்குகின்றனர். "கடனில்லாச்சோறு கால் வயிறு" கடனை ஏராளமாய் வாங்கி திருப்திகரமாக ஜீவிப்பதைப் பார்க்கிலும், கடனில்லாது தன்னாற் சம்பாதித்ததில் பிற்காலத்திற்குக் கொஞ்சமெடுத்துவைத்து மீதியைக் கொண்டு பாதி திருப்திகரமாயிருப்பது போதுமானது. ஆகையால் தயை செய்து கடன் வாங்காதிருக்கவும், படிக்கவும், படித்ததைப் பிறருக்குப் போதிக்கவும், படித்தது போதுமின்றிராது ஏதாவது தொழிற் கற்கவுமாக வேண்டிக்கொள்ளுகிறேன்.

D. சாமுவேல் கந்தசாமி.

---

## வெள்ளையம்மாள்புரம்.

பிரமலைத் தேவர்களுக்கும் மற்றுமுள்ள பஞ்சாயத்தார்களுக்கும ஓர் வேண்டுகோள்

இப்பொழுது சுமார் 5 வருஷகாலமாக பிரமலைதேவர்களுக்கு நாகரீகத்தையும் சௌகரியத்தையும் முன்னிட்டு காருண்ணியகவர்ன்மெண்டார் எவ்வளவோ இடங்களில் பள்ளிக்கூடத்தை புதிதாகக்கட்டி அப்பள்ளிக்கூடங்களுக்கு உபாத்தியாயர்களை நியமித்து அவர்களுக்கு சம்பளம் மாசா மாசம் கொடுத்து அந்த உபாத்தியாயர்கள் சரியானபடி பாடம் கற்பிக்கிறதை மேல்பார்வையிட கனம சூப்பர்வைசர் அவர்களையும் நியமித்திருக்கிறார்கள்.

நீங்கள் சொந்தத்தில் பள்ளிக்கூடங்கள் கட்டி உபாத்தியாயர்களை நியமித்து அவர்களுக்கு சம்பளம கொடுக்கமுடியுமா? ஒவ்வொருவரும் அவர்கள்வீட்டிலுள்ள பெண், பையன்களை ஏன் அனுப்ப அஞ்சுகிறீர்கள். கையிலிருக்கும் வெண்ணெயை விட்டு நெய்க்கு அலைவதுபோல் நீங்கள் செய்வது நன்றன். ...ாற்றிக்கொள் ...நீங்கள்

ஒவ்வொருவரும் வீட்டிலுள்ள சிறுவர், சிறுமிகளைப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்ப முயலுங்கள். படிப்பு இல்லாவிட்டால் ஒருவன் மேன்மையடையமாட்டான். "கற்கையில கல்வி கசப்பு, கற்றபின் அதுவே இனிப்பு." ஒருவனுக்கு முதலில் படிப்பது வெறுப்பாக இருந்தபோதிலும் பிற்பாடு அது மேன்மையுடையதாக தெரியும். "அகத்தின் அழகு முகத்தில் தெரியும்" என்பதுபோல் படித்தவன் பேசும்வார்த்தையின் சுத்தமும் அவன முகத்தினுடைய சாஸ்வதியினகளையும் நாம் எளிதில் படித்தவரென்றும், படியாதவரென்றும் தெரிந்துகொள்ளலாம். இனிமேலாகிலும் நீங்கள் சிரத்தையெடுத்துக்கொள்வீர்களென்று நம்புகிறேன்.

பஞ்சாயத்தார்களுக்கு ஓர்வேண்டுகோள் நீங்கள் கிராமங்களில நடக்கும் களவு முதலிய குற்றங்களை சரிவர விசாரிக்காமல் நீங்களே களவுசெய்தவனை நாங்கள்விசாரித்தால் ஒருவேளை நமக்கே அவன் கெடுதல் உண்டுபண்ணுவானென்று பயந்து அதை சரிவர விசாரித்து மேல் அதிகாரிகளுக்கு தெரியப்படுத்திவிடாமல்விட்டுவிடுவது முற்றிலும் பிசகு.

உங்களை கிராமங்களுக்கு பஞ்சாயத்தார்களாக என் நியமித்தது? அப்படி நீங்கள் ஓ[illegible] டுவிட்டால் அவர்கள் அதிக தைரியத்தோடு "[illegible]" என்பதுபோல் உங்களுக்கே கெடுதல் செய்வாரென்று உறுதியாய் நம்புங்கள்.

துஷ்டர்களை தண்டிப்பதும் நல்லவர்களை பரிபாலனம் செய்வதும் அரசர்களின் கடமை. அதுபோல் நீங்கள் மேல் அதிகாரிகளுக்கு ரிப்போர்டுசெய்து அதிலிருந்து குற்றவாளிகளை தண்மைக்குக் கொண்டுவரும் சாவியை வைத்துக்கொண்டு சும்மா இருப்பதுவும் விசையே.

எஸ். ராமராவ்,
வெள்ளையம்மாபுரம்.

---

## தொத்துவியாதிகள்.

மிலிட்டின் முனிசிபாலிட்டியார் தொத்துவியாதியால் அவஸ்தைபடுபவருடைய அறைக்குள் அவருடைய தாயாரையாவது அல்லது அவருக்கு சிகிட்சை செய்துவருபவரையாவது தவிர வேறு ஒருவரும் பிரவேசிக்கலாகாதென அவர்களுடைய அறைக்கு வெளியில் ஒரு விளம்பரத்தை தொங்கவிட்டு வருவதுடன் அடியில்கண்ட அறிக்கையையும் வெளியிட்டிருக்கின்றனர்.

1. பிணியாளியை மற்றவர்களிடமிருந்து பிரித்துவிடுவதுடன் சௌகரியப்படின் வீட்டுமேல்மாடியறையில் அவரைவிட்டுவைத்து அவரை சிகிட்சை செய்துவரவேண்டும்.

2. படுக்கைகள் முதலிய தொங்கும் சியமான பண்டங்களையும் அந்த அறையை விட்டு அப்புறப்படுத்திவிடவேண்டும்.

3. அந்த அறையானது நல்ல காற்றோட்டமுள்ளதாக இருக்கவேண்டும். ஜன்னல்கள் சுமாராகத் திறந்துவைக்கப்பட்டிருக்க வேண்டும். தினந்தோறும் தரையில் நச்சுக்காற்றை அகற்றும் மருந்தைத் தெளித்துச் சுத்தம் செய்யவேண்டும். ஈரவஸ்திரத்தினால் தரையைத் துடைக்கவேண்டும்.

4. அறையின் வாயிலை மூடிவைத்திருக்கவேண்டும். நச்சுக்காற்றகற்று மருந்தில் நனைத்த ஈரப்படுதாவை வாயில் தொங்கவிட்டுவைக்கவேண்டும்.

5. பிணியாளியின் எச்சில், வாந்தி, மூத்திரம், மலம், இவைகளை நச்சுக்காற்றகற்று மருந்துள்ள பாத்திரத்தில் ஏந்தி மேலும் அம்மருந்தைவிட்டு பிறகு அப்புறப்படுத்தவேண்டும். மிஞ்சிய ஆகாரப் பதார்த்தங்களையும், குப்பை கூளங்களையும் கொளுத்திவிடவேண்டும். அந்த ஆகாரத்தை எந்தக்காரணம்பற்றியும் வேறெவரும் உபயோகிக்கலாகாது.

6. மூக்கிலிருந்தாவது வாயிலிருந்தாவது வழிவதைத் துடைப்பதற்காக வைத்துக்கொண்டிருக்கும் கந்தைகளை அட்போதைக்கப்போது கொளுத்திவிடவேண்டும்.

7. பிணியாளியின் அறையிலுள்ள பாத்திரங்களை [illegible] நச்சுக்காற்றகற்று மருந்துள்ள பாத்திரத்தில் போட்டு வைத்து பிறகு வெளியே கொண்டுபோய் வெந்நீரில் சுத்தம் செய்யவேண்டும்.

8. படுக்கை, வஸ்திரம் முதலியவைகளை வெளியே எடுத்துப்போகுமுன் நச்சுக்காற்றகற்று மருந்தில் நனைத்துக்கொண்டுபோகவேண்டும்.

9. பிணியாளிகளின் சரீரமும் படுக்கைகையும் சுத்தமாகவைத்திருக்கப்படவேண்டும். வியாதியிருந்துவரும் காலத்தில் தேகத்தில் தேம்பல் ஏற்பட்டால் உள்ளங்கால் முதல் உச்சந்தலைவரை யூகளிப்ட்ஸ் எண்ணெயைத்தடவி தேய்த்துவிடவேண்டும்.

10 பிணியாளிக்கு சம்ரக்ஷணம் செய்துவருபவர் சலவை செய்யக்கூடிய ஆடையைத்தரிக்கவேண்டும். பிணியாளியைத்தொட்டு சிகிட்சை செய்யும் ஒவ்வொரு தடவையும் நச்சுக்காற்றகற்று மருந்தால் கைகளை சுத்தம் செய்துகொள்ளவேண்டும். பிணியாளியிடும் காற்றை சுவாசிக்கக்கூடாது. ஏனையோர்களுடன் நெருங்கிப்பழகக்கூடாது.

11. பிணியாளி வசிக்கும் வீட்டிற்குள்ளாவது, அவரது அறைக்குள்ளாவது வெளியிலிருந்து வரும் ஜனங்களை விடக்கூடாது.

12. அவர் வசிக்கும் வீடானது காற்றோட்டமுள்ளதாக இருப்பதுடன் சுத்தமாகவும் வைத்திருக்கப்படவேண்டும். சாக்கடைகள் தண்ணீர்த்தொட்டிகள் முதலியவைகளைச்சுத் [illegible] டம் அவை [illegible] த் தெளிக்கவேண்டும். குப்பைத் தொட்டிகளிலுள்ள அசுத்தங்களை அப்போதைக்கப்போது அகற்றிக்கொளுத்திவிடவேண்டும்.

13. வீட்டிலுள்ளவர்கள் பிறர் வீடுகளுக்குப்போகாமல் நச்சுக்காற்றகற்று மருந்து உபயோகிக்கவேண்டும்.

மா. போ.

---

## கயிறு திரிக்கிறவன்.

கயிறு திரிக்கும் பூச்சி ஒரு பெரிய குடும்பத்தைச் சேர்ந்ததென்றும் பூர்வமுதல் உள்ளதென்றும் சத்திய வேதத்தில் சொல்லியிருக்கிறது. அது நூற்கும் நூலே அதன் வீடு. கயிறாகத்திரிக்கப்படும் நூலை நூற்கும் கருவி அதின் தேகத்திலேயே உண்டு. இது நல்லது. ஏனெனில் அதின் சத்துராதிகள் அழகான அதின் கூண்டை அடிக்கடி நாசம் செய்கின்றன. யுக்தியுள்ள அந்தச் சிறு பிராணி பச்சை, கறுப்பு, சிவப்பு நிறங்களால் நேர்த்தியாய் போர்வையிடப்பட்டு அழகாயிருந்தாலும் அதற்குச்சரியான மதிப்பு இல்லை என்று அறிந்துகொள்.

அவைகளில் சில கொடுக்கினால் கொட்டும் அந்தக் காயத்தினால் உபத்திரவமும் மரணமும் கூடநேரிடும். ஆனால் எல்லாம் அப்படி [illegible] பார்த்தால் நீ [illegible] து ஓடவேண்டாம். அந்தப் பூச்சியைவிட நீ பெரியவனும் பலமுள்ளவனுமாயிருக்கிறாய். நீ அதை லேசாய் பாதுகாத்து உனக்குக் கெடுதி செய்யக்கூடாத இடத்தில் வைக்கலாம்.

அதன் சிறு பட்டுநூல்களை உள்ளும் புறம்பும் அது நூற்கும்போது நீ அமைதலாய் நின்று அதைக் கவனி. நீ கண் சிமிட்டுமுன் அது மேலே தாவிக் கயிற்றைத் தொடுத்து வெகு சீக்கிரத்தில் வேறொரு கயிற்றோடு கீழே குதிக்கிறது. மறுபடியும் அது மேலே குதித்து எல்லாவற்றையும் சரிப்படுத்தும் வரையில் சுற்றிச்சுற்றி ஓடிவரும். இவ்விதமாய் புயலைத்தடுக்கவும் விழுகிற மழைத்துளிகளைப் பற்றிக்கொள்ளவும் தக்கதான ஒரு சிறு வீட்டைக் கட்டுகிறது. பிறகு சூரியன் பிரகாசிக்கையில் அதன் கூண்டின்மேல் பட்டு நிற்கும் மழைத்துளிகள் வயிரங்களைப்போல மிகவும் நேர்த்தியாய்ப் பிரகாசிக்கும்.

அதின் வீடு சிறு ஈக்களைப் பிடிக்கும் கண்ணியாய்மட்டும் இருப்பதால் அந்த ஆச்சரியமுள்ள ஜெந்துவின்பெயரை நீ அனுமானித்து அது பொல்லாததும் வஞ்சனையுமுள்ள பூச்சியென்று சொல்லுகிறாய். அந்தச் சிலந்திப்பூச்சியைக்குறைசொல்லாதே. தன் இட்டதை அறிவின்படி ஈக்களைப்பிடித்துத் தன் பசியை ஆற்றிக்கொள்ளுகிறது.

சிறிய நூல் நூற்கும் யந்திரத்தைப்பற்றி நான் அறிந்தமட்டும் இப்பொழுது உனக்குச் சொல்லுகிறேன். சிலந்திப்பூச்சியின் அடி வயிற்றில் குண்டூசியின் கூர் அவ்வளவு பருமனுள்ள நாலு அல்லது ஆறு கூர்கள் உண்டு. அந்த இடங்களிலிருந்துதான் பட்டு சேகரமாகிறது. சிலந்திப்பூச்சி நூல்நூற்க விரும்பும்போதெல்லாம் தன் கால்கள் ஒன்றால் அந்தக் கூர்களை அழுத்தும். அப்போது ஒன்றல்ல, ஆயிரக்கணக்கான நேர்த்தியான நூல் அவைகளிலிருந்து புறப்படும் அவைகள் எல்லாம் ஒன்றாய் இணைத்தால்மட்டும் நமது கண்ணுக்குத் தெரியும். இப்படியாக சிலந்திப் பூச்சியின் ஒரு சிறு கயிறு ஐந்து அல்லது ஆறாயிரம் பட்டுநூல்கள் சேர்ந்தானது.

சிலந்திப் பூச்சி அந்த இழைகளை ஒன்றாய் சேர்த்து எப்படித் திரிக்கிறது? ஒவ்வொன்றிலும் மூன்று நகங்கள் உள்ள அதன் இரண்டு பின்னங்கால்களால்தான் அந்த நகங்களைக் கைகளைப்போல உபயோகித்து கணக்கற்ற அதின் இழைகளை ஆச்சரியப்படும்படி அது வெகு துரிதமாய்த்திரிக்கிறது.

மா. போ.

---

## வகுரணி.

இந்திரகுலாதிபர்களே, கடவுள் அருளி [illegible] மைதங்கிய ஐந்தாம் ஜார்ஜ் [illegible] வர்களின் கிருபையால் மகா-ள-ள-ஸ்ரீ கள்ளர் ஸ்பெஷல் ஆபீசர் அவர்கள் ஏற்படுத்திய பள்ளிக்கூடங்கள் தற்காலம் நன்றாய் நடத்தப்பட்டு வருகின்றன. ஆனால் ஏட்டில் சுரக்காய் என்று எழுதி வைத்திருப்பதுபோல் நாம இந்திரகுலாதிபர் என்ற பெரும் பேயரமட்டும் வைத்துக்கொண்டிருப்பது அழகல்ல. மூன் சொல்லிய நாமதேயத்துக்குத் தகுந்தபடி கல்வியை நன்றாய் கற்று நமது இந்திய சகோதரர்களைப்போல நம்மவர்களும் உத்தியோகங்களிலும் சங்கீத விஷயங்களிலும் தெய்வபக்தியிலும சிறந்தவர்களாய் விளங்கவேண்டுமென்பது மாட்சிமைதங்கிய கவர்ன்மெண்டார் நோக்கம். இன்னும் சில கிராமங்களில் பாடசாலைக்கு பையன்களை அனுப்பும்படி பெற்றோர்களிடமும பஞ்சாயத்தார்களிடமும் (உபாத்தியாயர்) தெரிவித்தால "பள்ளிக்கூடத்திற்கு அதிகாரிகள் வருகிற தினத்தைத் தெரிவித்தால் அன்றமட்டும் மாணவர்களை அனுப்புகிறோம்" என்று பதிலகூறுகிறார்கள. நமது பெரியோர்களும பஞ்சாயத்தார்களும் கல்வி என்பது ஒரு விஷயம் என்று நினைத்துக்கொள்கிறார்கள். இவ்வாறு செய்வதால் நாம் எப்படி கடைத்தேறுவது. பெரியோர்கள் தாங்கள் திருடினதையும், சல்லிகட்டு மாடு பிடிப்பதையும், சாமர்த்தியமாகப்பேசிக்கொள்கிறார்களே ஒழிய மற்றஜாதியார்களைப்போல் கல்வியைப்பற்றிக் கொஞ்சமேனும் கவலைஎடுத்துக்கொள்வதில்லை என்பது பலபேரும் விசனிக்கத்தக்கது.

வங்களூரில் சுமார் 10 வருஷகாலமாக பள்ளிக்கூடம நடந்தேவருகிறது. தற்சமயம் பகலில் 40 ஆண்பிள்ளைகளும் 7 பெண்பிள்ளைகளும் ஒழுங்காய் வாசித்து வருகிறார்கள். இரவில வாசிக்கும் மாணவர்கள் 20. இந்த இருபதுபேர்களில் ஒருவன் யாதொரு கேள்வியுமில்லாமலிருந்துவிட்டால் மாணவர் பஞ்சாயத்துச்சட்டம் ஒரு அணு பயின் போட்டு இதில்கிடைக்கும் அணுவை மாணவர் பொது பண்டுக்கு வைத்துக்கொள்கிறோம். எல்லா கிராமங்களிலும் இரவும் பகலுமாக படித்து வந்தால் விருத்தியடைவதற்கு யாதொரு சந்தேகமிலலை.

வி. ஒச்சாத்தேவர்,
கள்ளர் ஸ்கூல், உபாத்தியாயர்.

---

## உலக வர்த்தமானம்.

### விதவா விவாகம்.

லாகோர் விதவா விவாகசகாயசங்கத்தார் வெளியிட்ட வருஷாந்த பத்திரத்தின்படி 1923௵த்தில் 1,603 விதவைகளுக்கு மறுவிவாகம் நடந்ததாகத் தெரியவருகிறது. இதற்கு முந்தின வருஷங்களில் நடந்தேறியவையோடு இதை ஒப்பிட்டுப்பார்க்கையில் மெச்சிக்கொள்ளத் தகுந்ததே.

| | | | |
|---|---|---|---|
| 1915-ம் வருஷத்தில் | | 12 | விதவைகளும் |
| 1916 | ... | 13 | ... |
| 1017 | ... | 01 | ... |
| 1018 | ... | 40 | ... |
| 1919 | ... | 90 | ... |
| 1920 | ... | 220 | ... |
| 1921 | ... | 317 | ... |
| 1922 | ... | 453 | ... |
| 1928 | ... | 892 | ... |

விவாகம் நடந்தேறியதாகத் தெரியவருகிறது. ஷை 1,603 விதவா விவாகங்கள் எந்தெந்த மாகாணங்களில் நடந்தேறினவென்பதை பின்வரும் ஜாபிதாவில் காணலாம்.

| | | |
|---|---|---|
| பஞ்சாப், டெல்லி, வடமேற்கு மாகாணங்களில் | 8,77,107 | 1137 |
| ஐக்கிய மாகாணங்களில் ... | 32,71,984 | 286 |
| பிகார், ஒரிசா ... | 36,43,890 | 6 |
| வங்காளம், ஆசாம் ... | 28,16,374 | 51 |
| இராஜபுதனம் ... | 7,52,205 | 11 |
| பம்பாய் ராஜதானி ... | 19,58,319 | 26 |
| மத்திய மாகாணங்கள் ... | 10,85,990 | 10 |
| சென்னை ராஜதானி ... | 39,53,971 | [illegible] |

இவைகளில் நடந்தேறியுள்ள பிராமண விதவா விவாகங்கள் 338. பிராமண விதவைகள் இதர ஜாதியாரை மணம் புரிந்தது 42, 17 பிராமண புருஷர்கள் இதர ஜாதி விதவைகளை விவாகம் புரிந்துளளார். இஃதன்றி இவ்வித விவாகங்களுக்குள்ளே வடமதுரையிலும, ஹரித்வாரிலும் இரண்டு ஆசிரமங்கள் ஏற்பட்டுள்ளன. காசி, தர்க்கேஸ்வரம் முதலிய இடங்களிலும் இத்தகைய ஆ[illegible] தில்லை.

குழந்தை தூக்கி தண்டிக்கப்பட்டான் — கும்பகோணம் பெரிய தெருவில் திருநெல்வேலி முத்துக்குமாரசாமி முதலி என்பவன் ஸ்ரீமான் பாலசுப்பிரமணியம் செட்டியாருடைய குழந்தையை ரூ 70 பெறுமான நகையுடன் திருட்டுத்தனமாக தூக்கிக்கொண்டு ஓடிவிட்டான். உடனே போலீசாரிடம் ஜனங்கள் பிடித்து ஒப்புவித்தார்கள். ஷையான் பேரில் திருநெல்வேலி ரெயில்வே போலீசாரால் கொண்டுவரப்பட்ட கேசில் 379ஐ பி.சி. சம்பந்தப்பட்டு நோயுற்று வைத்திய சிகிட்சையிலிருந்து தப்பி ஓடிவந்து தலைமறைவாக வசித்துவந்தான் என்று தெரியவருகிறது. ஷை கேசில் விசாரணை நடந்தது. கும்பகோணம் சப்டிவிஷனல் மாஜிஸ்டிரேட்டால் திருவிடைமருதூர் மூகாமில் இ. பி. கோ. 369 செக்ஷன்படி எதிரிக்கு ஒரு வருஷ கடினகாவல் விதிக்கப்பட்டது.

ராஜப்பிரதிநிதியின் தேக அசௌக்கியம்.- ராஜப்பிரதிநிதி ஜுரமாக இருப்பதால் சுலீமாங்கால்வாய் திறப்பிற்கும் லாகூருக்கும் விஜயம் செய்யமுடியாமற்போனதற்கு மிகவும் வருந்துவதாக செய்தியனுப்பியிருக்கிறார். கால்வாய் திறப்பு தாமதம்செய்யப்படாமல் தமக்குப்பதிலாக கவர்னரால் நடத்தப்படுமென்றும், அடுத்த மாரிகாலத்தில் நிச்சயமாகவே லாகூருக்கும், பஞ்சாபுக்கும் விஜயம் செய்வதாகவும், தம்மை உத்தேசித்து ஏற்பாடுசெய்தவர்களுக்குண்டாகும் அசௌகரியத்துக்கு மிகவும் வருந்துவதாயும், தோட்டக்கச்சேரிக்கும் சட்டசபை மெம்பர்களின் விருந்துக்கும் வரமுடியாததற்கு அதிகமாக வருந்துவதாயும் அவர் கூறியிருக்கிறார்.

## பஞ்சாங்கம்.

### 1926௵—மேமீ

● அமாவாசை ○ பௌர்ணமி *கிருத்திகை

| வாரம் | தேதி | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஞாயிறு | ... | 2 | 9 | 16 | 23 | 30 |
| திங்கள் | ... | 3 | 10 | 17 | 24 | 31 |
| செவ் | ... | 4 | ●11 | 18 | 25 | ... |
| புதன் | ... | 5 | *12 | 19 | 26 | ... |
| வியா | ... | 6 | 13 | 20 | ○27 | ... |
| வெள் | ... | 7 | 14 | 21 | 28 | ... |
| சனி | 1 | 8 | 15 | 22 | 29 | ... |

| வாரம் | அக்ஷய-௵ சித்திரை 19உ வைகாசி 18உ | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஞாயிறு | ... | 20 | 27 | 3 | 10 | 17 |
| திங்கள் | ... | 21 | 28 | 4 | 11 | 18 |
| செவ் | ... | 22 | ●29 | 5 | 12 | ... |
| புதன் | ... | 23 | *30 | 6 | 13 | ... |
| வியா | ... | 24 | 1 | 7 | ○14 | ... |
| வெள் | | 25 | [illegible] | 8 | 15 | ... |
| சனி | | | | | 16 | ... |

கையோப்பக்காரர்களின் தொடர்ச்சி.

1479 சொ. பேயாண்டித்தேவர் மகன் நல்லாண்டித்தேவன், சின்னவாகைக்குளம், சிந்துபட்டி போஸ்டு.
1480 சுப்பாத்தேவன் மகன் சு. சிவலிங்கத்தேவன், பெரியவாகைக்குளம், சிந்துபட்டி போஸ்டு.
1481 சிவனாண்டித்தேவர் மகன் கோ. சி. மாயாண்டித்தேவன், தேங்கிலிப்பட்டி, செக்காணூரணி.
1482 ஒச்சாத்தேவன் மகன் பெரியமொக்கையன் என்ற ஒச்சாத்தேவன், சொக்கலிங்கபுறம், ஆத்தூர்போஸ்டு, திண்டுக்கல் தாலூகா.
1483 சின்னமாயத்தேவன் மகன் சின்னக்கருப்பத்தேவன், சொக்கலிங்கபுறம், ஆத்தூர் போஸ்டு, திண்டுக்கல் தாலுகா.
1484 ஒச்சாத்தேவன் மகன் கருப்பத்தேவன் என்ற சின்னமொக்கயன், சொக்கலிங்கபுறம், ஆத்தூர் போஸ்டு, திண்டுக்கல் தாலுகா.
1485 சிவனாண்டித்தேவன் மகன் பெரியகருப்பத்தேவன், சொக்கலிங்கபுறம், ஆத்தூர் போஸ்டு, திண்டுக்கல் தாலுகா
1486 மாயாத்தேவன் மகன் பாமாத்தேவன், வெயிலெரிச்சான்பட்டி, திண்டுக்கல் போஸ்டு.
1487 வயிரத்தேவன் மகள் கருப்பாயி, வெயிலெரிச்சான்பட்டி, திண்டுக்கல்போஸடு
1488 சொக்கத்தேவன் மகன் வயிரத்தேவன், குட்டத்துஆவரம்பட்டி, திண்டுக்கல் போஸ்டு
1489 நல்லகருப்பத்தேவன் மகன் குள்ளிபெருமாள்தேவன், குட்டத்துஆவரம்பட்டி, திண்டுக்கல் போஸ்டு.
1490 கலலகருப்பத்தேவன் மகன் வயிரத்தேவன, வெயிலெரிச்சான்பட்டி, திண்டுக்கல் போஸ்டு.
1491 [illegible] மகன் கருப்பத்தேவன், வெயிலெரிச்சான்பட்டி, திண்டுக்கல் போஸ்டு.
1492 சடமாயாண்டித்தேவர் மகன் கருப்பத்தேவன், மாத்தானம்பட்டி, எரியோடு போஸ்டு, திண்டுக்கல் தாலுகா
1493 சடமாயத்தேவன் மகன் மாயாண்டி என்ற கருங்கண்ணன், மாத்தானம்பட்டி, எரியோடு போஸ்டு, திண்டுக்கல் தாலுகா.
1494 M. S. Ramanathan, Ramesvaram
1495 முத்துமாயத்தேவன் மகன் பெருமாள்த்தேவன், கமக்காபட்டி, கங்குவார்பட்டி போஸ்டு பெரியகுளம் தாலுகா
1496 கருப்பத்தேவன மகன் மேஸ்திரி முத்துக்கருவத்தேவன், கமக்காபட்டி, கங்குவார்பட்டி போஸ்டு, பெரியகுளம் தாலுகா
1497 பெரியகருப்பத்தேவன் மகன ஐயருத்தேவன், கமக்காபட்டி, கங்குவார்பட்டி போஸ்டு, பெரியகுளம் தாலுகா
1498 கருப்பத்தேவன் மகன் மெ. பெருமாத்தேவன், கமக்காபட்டி, கங்குவார்பட்டி போஸ்டு, பெரியகுளம் தாலுகா
1499 மாயாண்டித்தேவன மகன் மாயாண்டித்தேவன், மாயாண்டிபட்டி, செக்காணூருணி போஸ்டு (via) சோளவந்தான்
1500 வீரணத்தேவர் மகன ச. வீ. மாயாண்டித்தேவன், மாயாண்டிபட்டி, செக்காணூருணி போஸ்டு, (via) சோளவந்தான்
1501 முத்துமாயத்தேவர் மகன அழகருத்தேவர், மாயாண்டிபட்டி, செக்காணூருணி போஸ்டு (via) சோளவந்தான்
1502 ஒச்சாத்தேவன், பஞ்சாயத்து மெம்பர், ஒத்தவீடு என்ற கருப்பத்தேவன்பட்டி, உடயம்பட்டி பக்கம், சிந்துபட்டி போஸ்டு திருமங்கலம் தாலுகா
1503 பெருமாள் தேவன், பஞ்சாயத்து மெம்பர், ஒத்தைவீடு என்ற கருப்பத்தேவன பட்டி, சிந்துபட்டி போஸ்டு திருமங்கலம தாலுகா
1504 தலையாரி ஆண்டித்தேவன், பஞ்சாயத்து மெம்பர், அம்மாபட்டி, சாத்தன்குடி போஸ்டு, திருமங்கலம் தாலுகா
1505 சின்னவயிரத்தேவர் மகன் சக்கரை சிவனாண்டித் தேவர், கழுதைப்பாரப்பட்டி, செக்காணூருணி போஸ்டு (via) சோளவந்தான்
1506 சங்கிலிதேவர் மகள் குமராயி, கழுதைப்பாரப்பட்டி, செக்காணூருணி போஸ்டு (via) சோளவந்தான்
1507 சந்தரத் தேவர் மகன் காட்டாமை சிவனாண்டித்தேவர், கழுதைப்பாரப்பட்டி, செக்காணூருணி போஸ்டு (via) சோளவந்தான்
1508 கணபதித்தேவன் மகன் அழகத்தேவர், மாயாண்டிபட்டி, செக்காணூருணி போஸ்டு (via) சோளவந்தான்
1509 பூசாரிசிவனாண்டித்தேவர் மகன க. பெரியசாமித்தேவர் மாயாண்டிபட்டி, செக்காணூருணிபோஸ்டு (via) சோளவந்தான்
1510 அழகத்தேவன் மகன அ. கருத்தமாயத் தேவன், பொன்னிமாந்துறை திண்டுக்கல்போஸ்டு
1511 பெரியசாமித்தேவன் மகன் மாயாண்டித்தேவன், பொன்னிமாந்துறை திண்டுக்கல் போஸ்டு
1512 பூச்சிகருப்பதேவர் மகன் பூ. பெரியகருப்பதேவர், இலப்பட்டி அம்பாத்துறை போஸ்டு திண்டுக்கல் தாலுகா
1513 குட்பு வீரணத்தேவன் மகன் கருப்பணதேவன், நரசிங்கபுரம் ஆத்தூர் போஸ்டு திண்டுக்கல தாலுகா
1514 [illegible] ஆத்தூர் போஸ்டு திண்டுக்கல்தாலுகா
1515 பின்னத்தேவன் மகன் முனியாண்டித்தேவன், கோடாங்கிபட்டி ஆத்தூர் போஸ்டு திண்டுக்கல்தாலுகா
1516 நல்லபெருமாத்தேவன மகன் வீரணத்தேவன, நரசிங்கபுரம் ஆத்தூர் போஸ்டு திண்டுக்கல்தாலுகா
1517 நல்ல பெருமாத்தேவன் மகன கருத்தவீரத்தேவன், நரசிங்கபுரம் ஆத்தூர் போஸ்டு திண்டுக்கல்தாலுகா
1518 காதப்பதேவன் மகன K சருப்பத்தேவன், சின்னுபட்டி ஆத்தூர் போஸ்டு திண்டுக்கல்தாலுகா
1519 ஒச்சாதேவன மகன் ஒ. பெரியகருப்பதேவன், இலப்பட்டி அம்பாத்துறை போஸ்டு திண்டுக்கல்தாலுகா
1520 ஆங்கத்தேவன் மகன் ஆ. கருப்பத்தேவன், இலைப்பட்டி அம்பாத்துறை போஸ்டு திண்டுக்கல்தாலுகா
1521 பெரியாண்டிதேவன் மகன பெரியகருப்பதேவன், கோடாங்கிபட்டி, ஆத்தூர் போஸ்டு திண்டுக்கல்தாலுகா
1522 சிவனாண்டித்தேவன் மகன் பண்டாரத்தேவன், கோடாங்கிபட்டி ஆத்தூர் போஸ்டு திண்டுக்கல் தாலுகா
1523 ஒச்சாத்தேவன மகன் மாயாண்டிதேவர் இலப்பட்டி அம்பாத்துறை போஸ்டு திண்டுக்கல தாலுகா

*Patron.* M.R.Ry. Rao Sahib,
A. J. Vethanayaga Thevar Avl.,
Usilampatti.
*Editor.*—Rev. George J. Athishtam,
Usilampatti.
*Manager.*—Rev. R. A. Dudley,
Tirumangalam.
Subscription—Single copy 8 annas a year (excluding charges for delivery) payable in advance.
All orders to be sent to the *Manager.*

சம்ரக்ஷகர்.—மகா-ள-ள-ஸ்ரீ ராவ் சாஹெப் வேதநாயகத் தேவரவர்கள், உசிலம்பட்டி.

பத்திராதிபர்.—கனம் ஜார்ஜ் அதிஷ்டம் ஐயரவர்கள், உசிலம்பட்டி
மானேஜர்.—கனம் ஆர். ஏ. டட்லி துரையவர்கள், திருமங்கலம்.

தனிப்பிரதி:—8-பை. வருஷ சந்தா 8-அணா. தபாற்கூலி பிரத்தியேகம். ஒரு வருஷ கையொப்பம் முன்னதாகவே அனுப்ப வேண்டும்.

பத்திரிகை வேண்டுவோர் மானேஜரவர்களுக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

குறிப்பு முதலியவை அனுப்ப விரும்புவோர் அந்தந்த அனுபவத்திற்குள் சுருக்கமாக எழுதி பத்திராதிபருக்கு அனுப்ப

1178

21

மாதாந்தரப்பத்திப்பு] 7 0 JUN 1926 REG. NO. M. 2146. [விலை 8 பைசு.

# The Piramalai Reformer.

## பிரமலை சீர்திருத்தன்.

"தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான்;
அவைகளை அறிக்கைசெய்து விட்டுவிடுகிறவனோ இரக்கம் பெறுவான்."

Vol. VI.] ஜூன்மீ, 1926. [இலக்கம் 2

### கொக்கிப்புழு நோய்.

இவ்வியாதி நமது தேசத்தில் அதிகச் சாதாரணமானதும் கொடியதுமான ஓர் வியாதி. இதைப்பற்றிச் சில இடங்களில் படங்கள் மூலமாய் அவ்வியாதியின் கொடூரத்தை காணபித்தனர். இக்கொடிய வியாதியைச் சுகப்படுத்த நமது காருண்ய கவர்ன்மெண்டார் அதிகப் பணச்செலவுசெய்து எப்படியாவது நாட்டைவிட்டு அகற்றிவிட முயற்சிக்கிறார்கள். பல இடங்களில இவ்வேலை ஆரம்பித்து வருகிறார்கள். இவ்வியாதியைப்பற்றி அடுத்த சஞ்சிகையில் தெளிவாக எழுதப்படும்.

கூடிய சீக்கிரம் உசிலம்பட்டியை ஓர் மையஸ்தானமாக வைத்துக்கொண்டு இவ்வியாதியுள்ளவர்களுக்கு வைத்தியம்செய்ய ஆலோசித்திருப்பதாக சங்கை பொருந்திய டிஸ்டிரிக்ட் போர்ட் பிரெசிடென்ட் அவர்கள் மூலமாய் அறிகிறோம். அப்படிப்பட்ட பெரிய உதவி வரும்போது நமது நாட்டிலுள்ள பலர் தாராளமாய்ப்போய் இவ்வியாதி நீங்கத்தக்க முயற்சி எடுப்பார்களென்று நம்புகிறோம். அநேகர் இவ்வைத்தியத்தினால் நன்மையடைந்திருக்கிறார்கள்.

### தேவமார் பஞ்சாயத்தார்களுக்கு.

சில கிராமங்களில் பள்ளிக்கூடத்திற்குள் இராவில் பல தேவமார் வந்து படுப்பதோடுகூட அசுத்தம் செய்வதாயும் பள்ளிக்கூட சாமான்களை மனம்போன போக்கெல்லாம் எடுத்துப்போட்டு கெடுத்துவிடுவதாகவும் வெளியாகிறது. இனிஒருவரும் பள்ளிக்கூடத்தில் படுக்கக்கூடாதென்பதையும் அசுத்தம் செய்யக்கூடாதென்பதையும்பள்ளிக்கூட சாமான்களை ஜாக்கிரதையாய் வைத்திருக்கவேண்டுமென்பதையும் அறிந்துகொள்ளுங்கள். உங்களுடைய [illegible] உங்களிடம ரசது பெற்றுக்கொண்டு சாமான்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்பதை மறந்துவிடாதீர்கள். அச்சாமான்களுக்கு நஷ்டம் ஏற்பட்டால் நீங்களே பிணைப்படக்கடவீர்.

2. சில கிராமங்களில் பள்ளிக்கூட உபாத்தியாயர்கள் பள்ளிக்கூடம் நடத்தாமல் பல நாள் லீவ் என்றும் சம்பளக்கூட்டம் என்றும் சூப்ரவைசரிடம் போவதாகவும் சொல்லிவிட்டு பஞ்சாயத்து புஸ்தகத்தை தம் பெட்டியில் வைத்து பூட்டிக்கொண்டு கிராமங்களைவிட்டு செல்லுவதாக தெரிகிறது. இனி நீங்கள் உங்கள் பஞ்சாயத்து புஸ்தகங்களை நீங்களே வைத்திருப்பதுடன் சனிக்கிழமை ஞாயிற்றுக்கிழமை தவிர எந்த நாளிலாவது உபாத்தியாயர்கள் பள்ளிக்கூடம் நடத்தாமல் ஊரைவிட்டு வெளியேறினால் உடனே பஞ்சாயத்து ரிப்போர்ட் கிரமமாக அனுப்பிவிடவேண்டும். உபாத்தியாயர்கள் சரியானகாரணத்தோடு போனாலும்சரி நீங்கள் ரிப்போர்ட் அனுப்ப தவறக்கூடாது. நியாயமாய்ப் போயிருந்தால் உங்கள் ரிபபோர்ட்டை விசாரித்து ஒப்புக்கொள்ளவும் வேறு விதமாக சென்றிருந்தால் கண்டிக்கவும் மேல் உத்தியோகஸ்தர்களும் மானேஜர்களும் தயாராய் இருப்பார்கள். நீங்கள் நெற்றிவேர்வை வடிய சம்பாதித்து கட்டிவரும் பள்ளிக்கூட வரி 3—12—0 வீண் போகாமலும் சர்க்காரில்செலவழிக்கும் ஏராளமான தொகை பிரயோசனமில்லாமல் போகாதபடியும் கவனித்துக்கொள்ளுங்கள்.

Ahmad Hussain M.
Supervisor of Kallar Schools,
Checkanoorni.

### பரோபகாரம்.

பர+உபகாரம்=பரோபகாரம். தேடிச் சம்பாதிக்கத்தக்க சக்தியில்லாத கூன், குருடு, சப்பாணி முதலியவர்களுக்கு அன்னவஸ்திரம் கொடுத்து ஆதரிப்பதே பரோபகாரம். துன்பம் அடைகிறவர்களுக்கு உதவி செய்வதுதான பரோபகாரமென்பது நன்றாய் விளங்கும். உபகாரமென்பது பொருள் முதலிய சாதனங்களால் மாத்திரம் செய்யப்படுவதன்று. அவையில்லாதவர்களும் பரோபகாரம் செய்யலாம். காக்கையும், ஆமையும், எலியும், மானும் ஒன்றையொன்று காப்பாற்றி வந்தன என்று சுகிர்லாபமென்னும் பகுதியில் வாசிக்கிறோம். கேவலம் பகுத்தறிவில்லாத ஜந்துக்களே இவ்வாறு செய்யக்கூடுமானால், பகுத்தறிவுள்ள மனிதர்கள் தங்களுடைய புத்தியினால் [illegible] வளவு செய்யக்கூடுமென்பதைச் [illegible]?

வாயால் உபகரிப்பதாகிய சக்தி சிலருக்குண்டு. தம் கையில் பொருளில்லாவிட்டாலும் பிறருக்கு உபகரிக்கத்தக்க சரீரபலமில்லாமற்போனாலும் அவ்விருவகைச் சக்தியும் உடையாரிடம்கூறி உபகரிக்கச்செய்யலாம். இது அநேகமாய் எல்லாராலும் செய்யக்கூடியதே: பிறர் துன்பங்கண்டபொழுது மனத்தில் இரக்கங்கொண்டு அதனை நீக்கமுயலுதலே மனத்தால் செய்யப்படும் உபகாரம். பிற ஜீவனுக்குண்டான துன்பத்தைக் கண்டபொழுது தன் சரீரபலங்கொண்டு அதனை நீக்குதலே காயத்தால் செய்யப்படும் உபகாரமாம். இதனால் மனோவாக்குக்காயங்களாலும் பொருளாலும் பரோபகாரஞ் செய்யப்படலாம். ஒவ்வொருவரும் தமக்கு எந்த வகையால் பரோபகாரஞ் செய்யக்கூடுமோ அந்த வகை செய்யலாம்.

பரோபகாரமென்பது எல்லாராலுஞ்செய்யத்தக்கதாதலால் யாவரும் தத்தஞ்சக்திக்கேற்றபடி பரோபகாரத்தொழிலைச்செய்துவரவேண்டும். சகல ஜீவன்களுக்குமுதவிபுரிந்து அவற்றின் துன்பங்களை நீக்குவதே நன்று. மனிதனாய்ப்பிறந்த ஒருவன் தன் சுகத்தை மாத்திரம் பெரிதென்று நினைத்திருப்பது கூடாது. அது பகுத்தறிவில்லாத மிருக பக்ஷிகளின் இயல்பு. பகுத்தறிவுள்ள மனிதனே தன்னைப்போலவே எல்லா ஜீவன்களுக்கும் இன்ப துன்ப உணர்ச்சி உண்டென்றுகொண்டு வெற்றிற்கு தன் பழுண்டாசாரதபடி நடந்து உபகாரம் புரியத்தகுந்தவனாகவே சிரேஷ்டிக்கப்பட்டிருக்கிறான். ஆதலால் தன் கைத்தொழிலையும் கருதிப்பாராமல் பரோபகாரம் புரிவதையே மேலாக எண்ணவேண்டும். பிறருக்கு உபகாரஞ்செய்ய மனமில்லாத மனிதன் மற்றவர் தனக்கு உதவிசெய்யவில்லையென்று குறைகூறுவது மாலசனமாம்.

"நன்றியொருவருக்குச்செய்தக்கா லந்நன்றி என்று தருங்கொலெனவேண்டாம்"

என்றபடி தனக்கு பிரதியுபகாரத்தை எதிர்பாராமல் செய்யப்படும் உபகாரமே பரோபகாரமெனப்படும்.

(இன்னும் வரும்)

G. V. செல்லத்துரை,
[illegible] ஸ்கூல்-பசுமலை.

---

மகா-ள-ள-ஸ்ரீ மதுரை, ராமநாதபுரம் ஜில்லா கள்ளர் ஸ்பெஷல் சூப்பரின்டெண்ட் துரையவர்கள் திவ்விய சமுகத்திற்கு:—

சேதுநாராணியில் கூடிய அடியிற்கண்ட பஞ்சாயத்தார்கள் எழுதி மிகவும் அதிக வணக்கமாய் எழுதிக்கொண்ட விண்ணப்பம் என்னவென்றால்:—

க. பாறைப்பட்டியிலிருக்கும் சவ்வலிங்கத்தேவர் மகன் மொக்காண்டித்தேவன் என்பவனை மேல்கண்ட பஞ்சாயத்தார்கள் மகா-ள-ள-ஸ்ரீ கனம் தங்கள் சூப்பரின்டெண்ட் துரையவர்கள் [illegible] செய்தபடியால் [illegible] படாமல் மீதிடமே [illegible] க்கப்பட்டிருப்பது கொத்தன் வேலைக்கு பேர்கள் வேலை செய்யக்கூடாதென்றும், தண்ணீர்த்துறை நீத்துறை வழக்க பழக்கமில்லையென்றும், நன்மைதீமையாதொன்றும் கூடாதென்றும், எங்கள் ஜாதி சம்பந்தமுள்ள யாதொன்றும் கூடாதென்றும் மேற்கண்ட மொக்காண்டித்தேவன் ஒருவனும், மற்ற பிரமலைத் தேவமார்கள் அனைவரும் ஒன்றாகவும் சேர்ந்து ஷெ மொக்காண்டித்தேவனை எங்கள் ஜாதிமுறைக்கட்டுப்படி விலக்கியிருக்கிறோமென்பதை இதின்மூலமாய் சமூகம் துரையவர்களுக்கு வணக்கமாய்த் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

இப்படிக்கு,
கீழ்ப்படிந்துள்ள,
பஞ்சாயத்து ஊழியர்கள்.

(கையொப்பம்)

1. தா. சிவனாண்டித்தேவன் ஆக்காச்சுளம்.
2. ஆ. விருமாண்டித்தேவன் பன்னியான்
3. கீரல் மு. பெரியமாயத்தேவர் கொங்கர் புளியங்குளம்.
4. கிண்ணிமங்கலம் M. R. பழனியாண்டித்தேவர்.
5. கொ. விருமத்தேவன் கீழச்சுடி கிராமம்
6. கா. மாயாண்டித்தேவன் தேங்கல்பட்டி
7. பூசாரி பன்னைத்தேவர் கட்டபிள்ளை ஒத்தப்பட்டி.

வெ. மா. மாயனைத்தேவர் பாயாண்டிபட்டி.
கு. கிருஷ்ணதேவர் க. பாறைப்பட்டி.
ப. வி. சுலுத்தேவர் க. பாறைப்பட்டி.
நா. சுந்தரதேவர் ஆ. கொக்குளம்.
கொ. ராமத்தேவர் மகன் விருமாண்டித்தேவர் பன்னியான்.
நாட்டாண்மை சிவனாண்டித்தேவர்
கா. சுந்தத்தேவர் க. பாறைப்பட்டி.
ஆ. கொக்குளம் பஞ்சாயத்துகோர்ட் மெம்பர் சக்கரை சிவனாண்டித்தேவர்.
மாயாண்டித்தேவன்
முத்துச்சாமி
தற்குறி கட்டழகு வீரணத்தேவன க. பாறைப்பட்டி.
க. பாறைப்பட்டி மூ. சக்கரை சிவனாண்டித்தேவர்

---

## புதிய ராஜப்பிரதிநிதி அவர்கள் விவசாய அபிவிர்த்தியின் சிரத்தையைப்பற்றி பம்பாயில்செய்த பிரசங்கம்.—

இந்தியாவில் விவசாயந்தான் பிரதானமான தொழில். விவசாயிகளில் மிகுந்த பேர்கள் வேறு உயர்ந்த நோக்கம் இருக்க முடியாது. விவசாய அபிவிர்த்திக்கு (என்னுடைய அனுபவத்தில்) நிதானப்பட்டை யெதுவும் இல்லை. பொறுமையாய் பல வருஷகாலம் உழைக்கவேண்டும், ஆராய்ச்சிசெய்யவேண்டும், பரிட்சார்த்தமான வேலைகள் நடத்திப்பார்க்கவேண்டும். விதைகள் வினியோகம் செய்தல் முதலிய ஒவ்வொரு காரியமும் துரிதமாக நடக்கக்கூடிய காரியமல்ல. விவசாய அபிவிர்த்தியென்றால் விவசாய கருவிகளை அல்லது பயிர்களை விர்த்திசெய்வது என்பது மாத்திரமல்ல. அபிவிர்த்திக்கு அநேக வழிகளுண்டு. கூட்டுறவு முறையில் கடன் கொடுத்தல் ஒரு முக்கியமான சாதனமாகும். உங்களுடைய விவசாய ஊழியர்கள் எத்தனையோ பல காரியங்கள் செய்திருக்கிறார்கள். அவர்களுடைய வேலை என் மனதைக் கவர்ந்ததுபோல வேறெதுவும் கவரவில்லை. லார்டு கர்ஸன் 20 வருஷங்களுக்குமுன் விவசாய இலாகாவை சிருஷ்டித்ததற்குப் பிறகு கோதுமை, பருத்தி, கரும்பு, சணல் முதலிய பயிர்கள் விஷயத்தில் விசேஷபலன் ஏற்பட்டிருக்கிறது. செல்வம் விசேஷமாய் விர்த்தியாயிருக்கின்றது. இன்னும் எவ்வளவோ வேலைசெய்யவேண்டும். இப்போதிருக்கிற நிலைமையை விவசாயக்கமிஷன் பரிசீலனை செய்வதோடு நவீன சாஸ்திர முறைகளையும் நிர்வாக முறைகளையும் விவசாயத் தேவைகளுக்கு எப்படி உபயோகித்துக்கொள்ளலாம் என்று ஆராய்வது கமிஷனுடைய கடமையாயிருக்குமென்று நினைக்கிறேன். திறமையாக ஆராய்ச்சிவேலை நடத்தவேண்டியதைப்பற்றியும் பயிற்சி ஊழியர்களை தயார் செய்வதைப்பற்றியும் விவசாயிகளுக்கு அனுபவபூர்வமாகப் பலன் தெரியும்படி செய்யவேண்டியதுபற்றியும் சுத்தமான விதைகள் வைத்திருக்கவேண்டியதுபற்றியும் பிரத்தியேகமான நிதிகளை இதற்கென்று ஏற்பாடு செய்யவும் தடுக்கவும் யோசிக்கவேண்டும். இந்தியாவிலுள்ள பற்பல கவர்மெண்டுகளுக்குள்ளும் ஒற்றுமையாக வேலை நடக்கும்படி செய்யவேண்டியதாகும் இந்த விவசாய நிர்வாகத்தில் புதிதாக மாகாணங்களுக்குக் கிடைத்துள்ள ஸ்வாதீனத்திற்கு ஹானிவராமலும் பார்த்துக்கொள்ளவேண்டும். மிகக் கஷ்டமான வேலையைக் கமிஷன் மேற்போட்டுக்கொண்டிருக்கிறது. ஆயினும் தற்கால முறைகளைக் கையாண்டு விவசாய அபிவிர்த்தி ஏற்படுவதின் மூலமாக விவசாயிகள் மாத்திரமின்றி தேசத்தின் சுபிட்சம் அதிகரிக்கவும் தகுதியான யோசனை சொல்லக்கூடுமென்று நினைக்கிற எல்லாருடைய ஆதரவும் கமிஷனுக்குக் கிடைக்கக்கூடும். நான் இந்தியாவை விட்டுப்போகும் காலத்திற்குள்ளேயே கமிஷன் சிபார்சு செய்துவிடும். கிராமவாசிகளின் நிலைமையை விர்த்திசெய்ய நான் உதவியாயிருக்க முடியுமானால் அதை அதிர்ஷ்டமாகவே எண்ணுவேன். வியாபாரம், வரவுசெலவு, நிலைமை, வசிவிஷயம் ஆகியவைகளும் என்னுடைய கவனத்தைப் பெறுமென்று நீங்கள் நம்பலாம். கவர்னர் லெஸ்லி வில்ஸன் இங்கு இல்லாதது எனக்கு வருத்தமாயிருக்கிறது. அவருடைய மனைவிக்கும் உடம்பு சீக்கிரத்தில் சொஸ்தமாகி விடுமென்று நம்புகிறேன். இன்னும் விரிவாக நான் எல்லா விஷயங்களையும் ஆராய்ந்து தெரிந்துகொள்ளும்போது வியாபார அபிவிர்த்திக்கும் இங்கர்ன் சுபிட்சத்துக்கும் என்னாலானதைச் செய்வேன். இராஜ்யாவசியமும் எல்லா வகுப்பு ஜனங்களுக்கும் நன்மைகளாகக் கூடியதைச் செய்ய எனக்குச் சந்தர்ப்பம் ஏற்பட்டாலும் அந்த சந்தர்ப்பத்தைக் கைவிடமாட்டோம். மீண்டும் வந்தனம்.

---

## ஜார்ஜ்டவுன் போலீஸ்கோர்ட்டு (கான்சாகீப் லோடிகான் சாகீப் முன்பாக)

### தங்கச்சங்கிலியைத் திருடியதற்கு தண்டனை.

துரைச்சாமி என்பவன் சென்ற 24-ம்டை ஒரு சிறு பெண்ணின் கழுத்திலிருந்து ஒரு தங்கச் சங்கிலியைத் திருடியதாகக் குற்றஞ்சாட்டப்பட்ட வழக்கில், மாஜிஸ்திரேட் எதிரிக்கு ஆறுமாதம் கடுங்காவல் விதித்தார். இவ்வழக்கின் விவரம் ஏற்கனவே வெளியாகிறது



## ஓர் தாதிக்குத் தண்டனை நோயாளிகளுக்கு விஷங்கொடுத்துக் கொன்றதாக.

பிரான்ஸ் தேசத்தைச்சார்ந்த நைம்ஸ் என்ற ஊரில் அண்டாயினட்டிவியேரி என்ற தாதியொருத்தி 6 நோயாளிகளுக்கு விஷங்கொடுத்துக் கொன்றுவிட்டாள். அவளுக்கு வயது 40. அக்கொலைபாதகி எவ்விதமான கெட்ட எண்ணமுமில்லாமல் நோயாளிக்கு விஷங்கொடுத்ததுதான் ஆச்சரியமான விஷயம். அவளுக்கு மரணதண்டனை விதித்தபோது, எவ்விதமான படபடப்பும் அவளுடைய முகத்தில் காணப்படவில்லை

### போலிச்சாமியார்.

சென்னை தண்டையார்பேட்டை வாசியும் சில அச்சுக்கூடங்களில் கம்பாசிட்டராயிருந்தவருமான சுமார் இருபத்தேழு வயதுள்ள சாம்பசிவ முதலியார் இமயமலையில் இருபது வருஷகாலம் தவம்புரிந்து வந்திருப்பதாகச் சொல்லி ராஜரிஷிகள் பால சந்நியாசி சுவாமிகள் என்ற பெரும்பெயரை வைத்துக்கொண்டு சென்னையிலும் மற்ற இடங்களிலும் வசித்துவருகிறார்கள். அவர் பெரிய யோகி என்றும், சித்தர் என்றும் நினைத்துக்கொண்டு பலர் அவருக்கு உபசாரஞ்செய்து வருவதுடன், அவருடைய எச்சிலையும் தின்றுவருகிறார்கள். அவரை நம்பி மோசம்போகலாகாதென்று சென்னைவாசி ஒருவர் எழுதுகிறார்.

### கள்ளநோட்டு வழக்கு.

10 ரூபாய் நோட்டுகள் 50ரூபாய்க்கு மாற்றப்படுகின்றன:—பயோனீர் பத்திரிகையின் கோரக்பூர் நிருபர் அங்கு கள்ளநோட்டு தயாரிக்கும் கோஷ்டி யொன்றைப் போலீஸார் கைதுசெய்து விட்டதாக அறிவிக்கிறார். அவர்கள் பின்வருமாறு வேலைசெய்தனராம்:—பழைய பத்துரூபாய் நோட்டுகள் பலவற்றின் எண்ணைமாற்றி 50ரூபாய் நோட்டுகளாக செய்தனர். மத்தியில் உள்ள 10ஐ 50ஆக திருத்த முயற்சிக்கப்பட்டது. நீரெழுத்தில் 1 என்றிருப்பதின்மீது மை ஊற்றப்பட்டது. இந்த நோட்டுகள் தகுந்தபடி திருத்தப்பட்டபின் அந்த மனிதர் தமது 2 சகாக்களிடம் அவற்றைக்கொடுத்தார். அவர்கள் அதை வெளியில் செல்லவைத்துவிட்டு நோட்டு ஒன்றுக்கு 5ரூபாய் வீதம் கமிஷன்பெற்றனர். அவர்கள் எங்காவது உள்ள கிராமக்கடைகளில் சில ரூபாய்க்கு ஜாமான் வாங்கிக்கொண்டு 50 ரூ. நோட்டைக்கொடுத்து மாற்றுவார்கள். வியாபாரி அதிகமாக விஷயங்களை அறியாததால் நோட்டில் எண் சரியாக இருப்பதை மாத்திரம் பார்த்துக்கொண்டு சில்லறை கொடுத்துவிடுவார். ஆங்கிலம் தெரியாததால் பெரிய சிகப்பு எழுத்துக்களில் 10 என்றிருப்பதை அவர்கள் தெரிந்துகொள்வதில்லை. இம்மாதிரி 17நோட்டுகள் கைப்பற்றப்பட்டிருக்கின்றன. மாற்ற செல்லுவர்களிடமிருந்து 10 நோட்டுகளும், சில்லறை கொடுத்தவர்களிடமிருந்து 7 நோட்டுகளும் கைப்பற்றப்பட்டன. இதர ஜில்லாக்களில் இந்த நோட்டு அதிகமாக செலாவணியாயிருக்குமென்று கருதப்படுகிறது.

### உத்தியோகங்களுக்கு சிபார்சு.

சென்னை கவர்மெண்டார் பினவரும் அறிக்கையை வெளியிட்டிருக்கிறார்கள்:— கவர்மெண்டு உத்தியோகங்களுக்கு மனுப்போடுகிறவர்களுள் சிலர் கவர்மெண்டு மெம்பர்களிடமிருந்து சிபார்சு பெற்று மற்றவர்களைவிட இன்னும் அதிக சௌகரியமடையப் பார்ப்பது நியாயமல்லவென்று கவர்மெண்டார் கருதுகின்றனர். ஆகையால் அம்மாதிரியான சிபார்சுக்கடிதங்கள் கேட்டுச் சங்கட நிலைமையை உண்டுபண்ணாமல் செய்வதற்காக உத்தியோகத்திலுள்ள கவர்மெண்டு மெம்பர்கள் (நிர்வாகசபை மெம்பர்களும் மந்திரிகளும் உள்பட) ஒருவரும் கவர்மெண்டு வேலைக்கு மனுச்செய்துகொள்ளும் எவருக்கும் சிபார்சுக்கடிதமாவது, சர்ட்டிபிகேட்டாவது வேறுவிதமான கடிதமாவது கொடுக்கக்கூடாதென்று கவர்மெண்டார் கருதுகிறார்கள். ஆபேக்ஷகர்களாவது, அவர்களுடைய நண்பர்களாவது இனிமேல், சிபார்சுக்கடிதமாவது, சர்ட்டிபிகேட்டாவது பெற முயலுவது கவர்மெண்டு வேலைக்கு அவரை லாயக்கில்லாமற் செய்துவிடும்

### பெற்றோர் ஆசிரியர் மகாநாடு.

அலகபாத் ஆசிரியர் சங்கத்தின் ஆதரவில் பெற்றோர், ஆசிரியர் மகாநாடு ஒன்று மூன்ஷி ஈச்வரச்சாரணின் தலைமையின் கீழ் நடக்கிறது. குழந்தைகளின் விஷயத்தில் பெற்றோர்களும், ஆசிரியர்களும் ஒத்துழைப்பது சாத்தியமாகும்படி செய்வது இதன் நோக்கமாகும். பெற்றோர், ஆசிரியர் சங்கமொன்று ஏற்படுத்துவதென்று தீர்மானிக்கப்பட்டது. மாணவர்களின் தேக நிலைமையைப்பற்றி கட்டாயம் விசாரிக்கவேண்டும். பள்ளிக்கூடங்களில் சங்கீதம் போதிக்கவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது

### மதுரை ஸ்டேஷனில் ஒரு விபத்து.

2-ம் நம்பர் ஸிலோன் போட்மெயில் 2-ம் உ. மத்தியானம் மதுரை பிளாட்பாரத்துக்குள் வந்துகொண்டிருக்கையில் குருசாமி என்ற ஒரு போர்ட்டர் வழக்கம்போல மெயில் வண்டியைப் பிடித்துக்கொண்டு ஓடுகையில் கால் வழுக்கி வண்டிக்கடியில் அகப்பட்டுக்கொள்ள அவன் இரண்டு கால்களும் துண்டிக்கப்பட்டன. உடனே அவன் ஹெட்குவார்ட்டர்ஸ் ஆஸ்பத்திரிக்குத் தூக்கிச்செல்லப்பட்டான். அவன் நிலைமை கவலைக்கிடமாயிருக்கிறதென்று நமது நிருபர் எழுதுகிறார்.

### ஒரு பெண்ணை 4 அணாவுக்கு விற்றதாக

ஸிந்துஜில்லா ஐதராபாத்தில் ஒரு மார்வாரி ரஜபுத்திரர் 6 மாத பெண்குழந்தை ஒன்றை அணா நாலுக்கு ஒரு மார்வாரி ஸ்திரீயிடம் விற்றுக்கொண்டிருக்கும்போது கைதுசெய்யப்பட்டதாகவும், ஒரு முஸ்லீம் அது குழந்தை என்றும் முஸபாக்கானாவில் தகப்பன் தூங்கிக்கொண்டிருக்கும்போது அப்பெண்ணை இந்த மார்வாரி எடுத்துவிட்டுவந்ததாகத் தெரிகிறதென்றும் "முஸ்லீம் அவுட்லுக்" கூறுகிறது.

### சென்னை கவர்னர் ரஜாவில் போகவில்லை.

லார்டு கோஷன் இவ்வருஷம் ரஜாவில் போவதாக உத்தேசிப்பதாக சில பத்திரிகைகளில் வெளியான செய்திக்குச்சிறிதும் ஆதாரமில்லை என்று மறுக்குமாறு அஸோசியேடெட் பிரஸிற்கு அறிவிக்கப்படுகிறது.

சென்னை சட்டசபையின் கூட்டம் ஜூன் 20உ உதகமண்டலத்தில் நடக்காது, ஜூலை 10உ சென்னையிலேயே நடைபெறும். தேர்தல்கள் அக்டோபர் மாதத்திற்கு ஒத்திவைக்கப்பட்டுவிட்டதால்தான் இவ்வாறு செய்யப்பட்டிருக்கிறது. மலையாளக் குடிவார மசோதா, நிர்பாசன மசோதா, நகரக்குடிகள் பாதுகாப்பு மசோதா முதலியவையும் இன்னும் இரண்டு மசோதாக்களும் அந்த கூட்டத்தில் யோசனைக்கு வரும். சட்டசபை கலைக்கப்படுமுன் இதுவே கடைசிக்கூட்டமாகவிருக்கும்.

### ஜப்பானியக் கப்பல் விபத்து 230 பேரைக் காணோம்

காஹோடேட் என்றவிடத்திலிருந்து வந்த செய்தி கூறுவதாவது:—

'சிசிபூமாரு' என்ற ஜப்பானியக் கப்பல் சமீபத்தில் அடித்த புயலில் ஹோரி ஹஷீரோகுரைஸ் தீவுகளுக்கருகில் கரைதட்டிப் போயிற்று அதிலிருந்தவர்களில் 230 பேர்களைக் காணோம்.

### திருடனிடமிருந்து திருடினர்களாம்.

திருட்டுக் குற்றத்திற்காக சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்ட ஒரு வேலைக்காரனிடம் அகப்பட்ட பணத்தில் ஒரு பாகத்தை ஒளித்துவிட்டதாக இரண்டு போலீஸ் சேவகர்கள் கைதுசெய்யப்பட்டிருக்கிறார்கள். எதிரி கூறிய தகவலைக்கொண்டு சேவகர்கள் சோதனை செய்யப்பட்டனர். ஒருவனுடைய குல்லாவில் 100 ரூ. நோட்டு ஒன்று இருந்தது.

### பஞ்சாபில் பிளேக் கொடுமை. அளவற்ற மரணம்.

பஞ்சாபில் பிளேக் மிகவும் ஜாஸ்தியாகப் பரவிவிட்டது. எப்ரல் 10-ந் தேதியோடு முடிந்தமாதத்திய கணக்குவிவரம் இப்போது கிடைத்திருக்கிறது. மொத்தம் 7,236 பேர்களுக்குப் பிளேக்கண்டு 5,379பேர்கள் இறந்துபோயினர். பஞ்சாபில் அநேகமாக ஒவ்வொரு ஜில்லாவிலும் ஒரு பாகமாவது பிளேக் பரவாமலில்லை, ரோட்டாக் ஜில்லாக்களில்தான் மரணம் அதிகமாக இருக்கிறது.

சு. மி.

## கல்விகற்பதுடன், தொழில் கற்கவும்

### கற்றதைப் பிறருக்குக் கற்பிக்கவும்.

எனது குலத்திலுதித்த சகோதர, சகோதரிகளே! நமது குலமிருந்த ஸ்திதியும், நம் குலத்தாரிருக்கும் இருப்பும், நன்கு தெரிவீர். துரவிஷயத்திலும், அநாகரீகத்திலும் மூழ்கிப் பேர்ப்பிரஸ்தாபம் பெற்றிருந்த நாம் நம் பெருமானின் பெரிதான இரக்கத்தால் சர்க்காரின் கையிலகப்படுத்தித் தற்காலத்தில் இவ்வித நன்னடக்கையை அடைந்திருக்கின்றோம். நம்மில் எவ்வளவோ துர்க்காரியங்களடங்கியிருந்தபோதிலும், சிலர் கற்றுத் தேர்ந்திருந்தனர், தேர்ந்துமிருக்கின்றனர்.

நம் ஜாதியாரிருந்த நிலைமையைக்கண்ட முன்னவன் (கடவுள்) நம்மில் சர்க்காரையருளி நற்புத்தி கற்பிக்குமாறு செய்திருக்கின்றனர். நம் குலத்தாரின் சிறுவர் சிலர் உயர்தரப் பள்ளிக்குச் சென்று கற்றுவருகின்றனர். நமது சிறுவர் படிக்கும் நோக்கம் யாது? படித்து ஏதோர் பெரிய உத்தியோகத்திலிருந்து அதிகச் சம்பளம் பெற்று நோகாது உண்டு சுகித்திருக்கவேண்டுமென்பதோ? அல்ல! அல்ல!! பெரிய உத்தியோகத்தில் நம் குலத்தார் ஒருவரிருந்து உயர்தரச் சம்பளம் பெற்று நல்வாழ்வடைவது நமக்குச் சந்தோஷம்தான். ஆனால் உத்தியோகம் போனவுடனே கிடைக்குமென்பது உறுதியா? கிடைத்தபோதிலும் அதிககாலம் இது நீடித்திருக்குமென்பது நிச்சயமா?

நாம் எவ்வித உத்தியோகத்திலிருந்தபோதிலும்கூட மற்றொருவன் வார்த்தைக்குக் கீழ்ப்பட்டு அடிமையாகவே வாழவேண்டும். தனக்கு மேலான அதிகாரியொருவர் வரும்பொழுது அவருக்குப் பயந்து நடக்கவேண்டியது ஒவ்வொரு உத்தியோகஸ்தரின் கடமை.

நாம் கற்றிருப்பதுடன் யாதாமொரு கைத்தொழிலைப் படித்திருப்போமாயின் யாருக்கும் உண்மையான வழிக்கு அஞ்சவேண்டியதில்லை.

1. "உழுதுண்டு வாழ்வரே வாழ்வர்—
மற்றெல்லாம் தொழுதுண்டு பின்
செல்பவர்"
2. "ஓதுவான் எல்லாம் உழுவான் தலைக்
கடையில்"

முன்கூறிய பாடலைப்போல விபசாயத் தொழிலை தெரிந்தெடுப்பது நன்று. காலங்களில் தக்கவாறு விபசாயம் செய்வோமாயின் அதற்கு மேலான தொன்றுமில்லை. நாம் கற்றபின் நாம்தான் பெரியவர், தனக்கு மேலானொருவருமில்லையென்றும் தான் கற்றதைத் தானே வைத்துக்கொண்டு பிறர்க்குச் சொன்னால் மற்றவர்களும் தெரிந்துகொள்வார்களென்பது அநேகருடைய அபிப்பிராயம்.

1. "இறைதத கிணறு ஊறும்."
2. "தோண்டும் மணற்கேணி நீர்வூறும்."
3. "உடுக்கை யிழந்தவன் கைபோல
ஆங்கே—இடுக்கண் களைவதாம் நட்பு."

4. நமது குலத்தை நாம் முன்னேற்ற வேண்டுமானால் மூன்றாவது பாடலைப்போல் ஆத்திரத்துடன் சென்று நற்குறி யென்று பேர் வாங்க தவண்ணம் கற்பிக்கவும். கற்றவைகளைப் பிறருக்குக் கற்பிப்போமானால் முதல் இரண்டு பாடலைப்போலாகும்.

நம் பெரியோரில் சிலர் ஏதோ தாங்கள் கற்றுக்கொண்ட வைத்தியங்களையும், பலவிதமான வித்தைகளையும் பிறர்க்குச் சொன்னால் மற்றவர்களும் கற்றுக்கொள்வார்களென்று நினைப்பது என்ன விபரீதம்!

ஆங்கிலேய வைத்தியர் அப்படியல்ல. தான் கற்றதைப் பிறர்க்குக் கற்பிக்குமாறு வைத்திய சாலைகள் ஏற்படுத்தி அதன் மூலமாய் மற்றவர்களும் லகுவாய்க் கற்றுத்தேறுகின்றனா.

நம்குலம்முன்னேற்றப்படவேண்டுமானால் சிறியனாகிய நான் முற்கூறியதை அனுஷ்டிக்குமாறு கேட்டுக்கொள்ளுகின்றேன்.

ம. பெ. சிவனாண்டித்தேவன்.

---

## பயிர்களுக்கு நஷ்டத்தை உண்டு பண்ணும் பூச்சிகளைப்பற்றி:—

எல்லாவித பயிர்களும் பூச்சிகளால் பீடிக்கப்படக்கூடியவைகள். அப்பூச்சிகள் உருவத்தில் சிறியவைகளாயிருந்தாலும் எண்ணிக்கையில் ஜாஸ்தியாயிருந்து பயிர்களுக்கு அதிக நஷ்டத்தை உண்டுபண்ணுகின்றன. மழையின் ஒரு துளி சிறியதேயாயினும், அநேக மழைத்துளிகள் சேர்ந்து பூமியில் விழும்போது வெள்ளம் தோன்றி அதிக நஷ்டத்தையும் உண்டுபண்ணும் பூச்சிகள் தோன்றும் போது அதுபோலவே நேரிடுகிறது. ஒரு பூச்சியானது அதின் ஆயுள் முழுவதும் சில இலைகளைத்தான் தின்னும். ஆனால் ஒரு பயிரில ஏராளமான பூச்சிகள் விழுமானால், பயிரின ஒவ்வொரு இலையையும் தின்று மகசூலை நஷ்டமடையச் செய்யும். ஒவ்வொரு குடியானவனும் தன்னுடைய பயிர் பூச்சிகளினால் பீடிக்கப்பட்டு தான் நஷ்டமடைந்து போவதை அறிந்திருப்பான். அவ்வித நஷ்டத்தை எவ்விதமாய் தடுப்பது என்பதை அறியவும் பலமுறை விரும்பியிருப்பான். பூச்சிகளில் எல்லாவிதங்களைப்பற்றியும், முக்கியமாய் பயிர்களுக்கு கெடுதலையுண்டுபண்ணும் பூச்சிகளைப்பற்றியும், செவ்வையாய் ஆராய்ந்து பரிசோதனை செய்வதற்காக கவர்ன்மென்டார் ஒரு உத்தியோகஸ்தரை நியமித்திருக்கிறார்கள். எந்த நிலச்சுவான்கள் அல்லது குடியானவர்களுடைய பயிர்கள் பூச்சிகளால் பீடிக்கப்படக்கூடிய நிலைமையில் அல்லது நஷ்டப்படுத்தப்பட்டாவது இருக்குமானால் அப்போது அவர்கள் இந்த ஆபீசுக்கு எழுதி அவருடைய ஆலோசனையைக் கோரவேண்டும். ஒவ்வொருவிதப் பூச்சியையும் நிவர்த்திக்க முறைகள் சொல்லுவது இப்போது சாத்தியமில்லையென்றாலும், பூச்சிகளில் அநேகத்தை நிவர்த்திக்க மார்க்கங்கள் சொல்லக்கூடும். பயிர் ஜாஸ்தியாய் பீடிக்கப்பட்டிருந்தால், அந்த சந்தர்ப்பத்தில் பயிரையும் சாகுபடி முதலியவற்றையும் நேரில் பார்வையிடவும், அதன் பிறகு பூச்சியின் பாதையை நிவர்த்தி செய்யும் பொருட்டு விஷயந்தெரிந்த ஒரு ஆபீசரை அனுப்பி உதவிசெய்யக்கூடும். நஷ்டத்தை உண்டுபண்ணும் பூச்சிகளை நேரில் பார்வையிடாமல் பொதுவாய் ஆலோசனை சொல்லுவது அசாத்தியம். "என்னுடைய நெல்பயிர் பூச்சிகளால் சேதப்படுத்தப்பட்டிருக்கிறது. தயவுசெய்து அதை நிவர்த்திக்க முறைகள் தெரியப்படுத்தப்படவேண்டும்" என்று எழுதுவது உபயோகமில்லை. ஏனெனில் நெல் பயிரை சேதப்படுத்தக் கூடிய பூச்சிகள் குறைந்தபட்சம் 12 தினுசுகள் இருப்பதாலும், அவைகளில் இன்னதுதான் இந்த சந்தர்ப்பத்தில் நஷ்டத்தை உண்டு பண்ணுகிறதென்பது தெரியாது. பூச்சியின்னதென்பதை அறியாமல் ஆலோசனை கூறுவதும் அசாத்தியம்.

நஷ்டத்தை உண்டுபண்ணிக்கொண்டிருக்கிற அல்லது உண்டுபண்ணுவதாகத் தோன்றுகிற பூச்சிகளில் சிலவற்றை அனுப்பவேண்டும். அப்போது எந்தப் பூச்சி நஷ்டத்தை உண்டுபண்ணுகிறதென்பதைக் கண்டுபிடித்து அதை நிவர்த்திப்பதற்கேற்ற முறைகள் சொல்லக்கூடும். அப்பூச்சிகளை உயிரோடிருக்கும்படி ஒரு தகரம் அல்லது மரப்பெட்டியில் கசக்கப்பட்ட காகிதம் அல்லது இலைச்சருகு முதலியவற்றோடும், ஆபீசரிடம் வந்து சேரும்வரையில் வழியில் ஆகாரமாக உபயோகப்படும்படி அது தின்னக்கூடிய பச்சைத்தட்டை அல்லது தழையையும் கொஞ்சம்போட்டு (unregistered) அன்ரிஜிஸ்டர்ட் தபால் பார்சல் மார்க்கம் அனுப்பவேண்டும். தகரப்பெட்டி கிடைக்காவிட்டால் ஒருபுறம் கணுவுள்ள மூங்கில் குழாய் ஒன்றை தக்கை அல்லது மரத்தால் செய்யப்பட்ட ஆப்பினால் மூடி பூச்சிகளை உயிரோடு அனுப்பலாம். ஆனால் மூடி பலமாகப் போடப்பட்டிருக்கவேண்டும். அவ்விதம் அனுப்பப்படும் எல்லா பார்சல்களில் அனுப்புகிறவர்களுடைய பேரும் முழுவிலாசமும் செவ்வையாய் எழுதப்பட்டிருப்பதுடன், எந்தப் பூச்சியைப்பற்றி ஆலோசனை கோரப்படுகிறதோ, அதைப்பற்றி முழுவிபரங்களடங்கிய ஒரு கடிதமும் இருக்கவேண்டும். அதாவது பீடிக்கப்பட்ட பயிர் நஷ்டத்தின் தன்மையையும் அளவையும், எ. போது முதல் தோன்றியதென்பதையும், முந்தின வருஷங்களில் அவ்விதமான பூச்சி தோன்றியிருக்கிறதா என்பதைப்பற்றியும் எழுதவேண்டும்.

பூச்சிகளைப்பற்றிய எல்லா பார்சல்களும் கடிதங்களும் கீழே குறிக்கப்பட்டிருக்கிற விலாசத்திற்கு அனுப்பவேண்டும்:—

கவர்ன்மெண்ட் என்டமாலோஜிஸ்ட்,
விவசாய காலேஜ்,
கோயம்புத்தூர்.



## நேர்மையே உத்தம உபாயம்.

சில வருஷங்களுக்கு முன்னே இங்கிலாந்து தேசத்தில் அமங்கிலியான ஒரு துரைசானியும் அவள் குமாரத்தியும் துறைமுகப்பட்டணங்கள் ஒன்றிலிருந்து லண்டன் நகரிக்குப் பயணம்போனார்கள். போகும் மார்க்கத்தில் அவர்கள் முதல்நாள் இரவில் தாமதிக்கக் குறித்திருந்த இடம் வந்து சேர்ந்தபொழுது விலையேறப்பெற்ற சில நகைநட்டுகளும் தாங்கள் பயணம்பண்ணின காரியத்துக்கடுத்த தஸ்தாவேசுகளும் இருந்த ஒரு கைப்பெட்டி காணமற்போயிற்று. அது காணமற்போன வயணமென்னவென்று வேலைக்காரரிடத்தில் விசாரித்ததிலும் ஒன்றும் துலங்கவில்லை. அதன்பேரில் அந்த துரைசானிகள் மிகுதியும் விசனமுற்று காணமற்போன பெட்டகத்தைக் கண்டுபிடிப்பதற்கு என்னவென்ன பிரயத்தனங்கள் செய்யவேண்டுமோ அவைகளை எல்லாம் உடனே செய்தார்கள் மேற்படி விபரங்கண்ட பத்திரிகைகள் அச்சடிப்பித்து அந்தப் பட்டணமெங்கும் கொடுத்துப் பிரசித்தம் பண்ணினார்கள். மறுநாள் அந்தப்பட்டணத்திலே சந்தை கூடுகிற நாள். அன்று அதிகாலையில் ஒரு ஏழை மனிதன் சந்தைக்கு வந்த பொழுது அந்த பத்திரிகையைக் கண்டு அதை வாசிக்கத்தெரியாதபடியால் பக்கத்தில் நின்றவர்களிடத்தில் அதின் பொருளென்னவென்று விசாரித்தான். அதற்கு அவர்கள்: இன்ன சாமான் காணமற்போயிருக்கிறது அதைக் கண்டுபிடித்துக் கொண்டுவந்து கொடுக்கிறவனுக்கு இன்னின்ன வெகுமதி கிடைக்கும் என்றார்கள்.

இப்பொழுது முந்தின இரவில் நடந்த காரியத்தைக்கேளுங்கள். அந்த ஏழை மனிதன் பகல் முழுவதும் வேலைசெய்துவிட்டு பொழுது அடைந்தபின் வீடுவந்து சேர்ந்தவுடனே வீட்டிலிருந்த இரண்டே துட்டை மாத்திரம் அவன் மனைவி எடுத்துக்கொண்டுவந்து அவனிடத்திற் கொடுத்து நாளைக்கு உமக்கு வேண்டிய உடுப்பைச் சற்று பழுதுபார்த்து வைக்கவேண்டியிருக்கிறது. நீர் ரஸ்தாவைத் தாண்டிப்போய் ஒரு மெழுகுவர்த்தி வாங்கிக் கொண்டுவாரும் என்று சொன்னாள். அவனோ பெண்சாதியைப் பார்த்து, வஸ்திரம் பழுதுபார்க்கிறது இருக்கட்டும், பிள்ளைக்கு ஆகாரமில்லையே. ஆகையால் அதற்கு ரொட்டி வாங்கவேண்டும் என்று எவ்வளவோ தடுத்துச்சொல்லியும் அவள் கேட்கவில்லை. அதினாலே அந்த மனிதன் மனவருத்தத்தோடும் விசாரத்தோடும் அந்தத் துட்டை யெடுத்துக்கொண்டு மெழுகுவர்த்தி வாங்கப்புறப்பட்டுப் போனான். ஆனாலும் தேவனுடைய பராமரிப்பின் செயலைப் பாருங்கள். அந்த மனிதன் ரஸ்தாவைக் கடக்கும்பொழுது ஏதோ ஒன்று வழியிற்கிடந்து அவன் காலிற்பட்டு இடறிவிழுந்தான். காணமற்போய் அந்தத் துரைசானிகளுக்கு அவ்வளவு விசனத்தையும் வியாகுலத்தையும் உண்டுபண்ணின பெட்டகமே அது. அந்த மனிதன் பெட்டகத்தைக் கையிலெடுத்துக்கொண்டு வர்த்தியும் வாங்கிக்கொண்டு வீடு வந்துசேரவே புருஷன் கையிலிருக்கிற பெட்டியை மனைவி கண்டு திடுக்கிட்டு அதிர்ந்து புருஷன் தன் வறுமையினாலே எந்தப் பிரயாணியிடத்திலாவது வழிப்பறி செய்யத் தூண்டிவிடப்பட்டிருப்பானோ என்று நினைத்து நடுங்கினாள். என்றாலும் நடந்த சங்கதிகளை அவன் விபரித்துச் சொன்னதின்பேரில் சந்தேகமோ பயமோ எல்லாந்தெளிந்து, மறுநாள் அதிகாலையில் சந்தை கூடுகிற அந்தப் பட்டணத்தில் அதைக் குறித்து விசாரிக்கவேண்டுமென்று தீர்மானித்துக்கொண்டு உண்மையும் நேர்மையுமுள்ள அவ்விருவரும் முழங்காலில் நின்று தங்கள் கையில் அகப்பட்டிருக்கிற பொக்கிஷத்தைத் திருடி அபகரித்துக்கொள்ளாதபடிக்கு கிருபையருளவேண்டுமென்று கர்த்தரை நோக்கி ஆவலாய்ப் பிரார்த்தித்த பின்பு தங்கள் கேவலமான படுக்கையிற் படுத்து சமாதானத்தோடும் நல்மனச்சாட்சியோடும் நித்திரைசெய்து விழித்தார்கள்.

இதற்காகவே அந்த ஏழை மனிதன் மறுநாள் அதிகாலையில் சந்தைக்குப்போய் மேற்படி பத்திரிகையின் தாற்பரியத்தை விசாரித்து அறிந்தவுடனே வீட்டுக்கு ஓடிப்போய் அந்தப் பெட்டகத்தை எடுத்துக்கொண்டுவந்து துரைசானி கையிற்கொடுக்க அன்றிரவில் தான் வீட்டில் காணமற்போன பெட்டகம் அகப்பட்டுக்கொண்டதனிமித்தம் துரைசானிக்கு உண்டான சந்தோஷம் இவ்வளவென்றில்லை. வாக்குச் சொல்லியிருந்த வெகுமதியை மிகுந்த சந்தோஷமாய்க் கொடுத்ததின்பின் துரைசானி அம்மனிதனுடைய வீட்டுச் சீர்கிர்வாகங்களை விசாரித்தாள். விசாரித்து அவர்கள் வருத்தப்படுகிறவர்கள் என்று அறிந்தபொழுது இரண்டு மைல் தூரத்திலிருந்த அவன் வீட்டுக்குப்போய் தன் பெண்சாதியையும் பிள்ளைகளையும் கூட்டிக்கொண்டு வரும்படி அனுப்பினாள். அவர்கள் அன்று பகல் முழுதும் ஒன்றுஞ் சாப்பிடாமல் பட்டினியாய் இருந்தார்கள் அவ்விடம் வந்துசேர்ந்தவுடனே துரைசானி உத்தரவுப்பிரகாரம் அவர்களுக்கு ஆயத்தப்பண்ணப்பட்டிருந்த நேர்த்தியான போஜன பதார்த்தங்களைச் சாப்பிட்டுத் திருப்தியடைந்தார்கள். அதன்பின் அவர்கள் எல்லாருக்கும் நல்ல வஸ்திரங்களும் அந்தத் துரைசானி வாங்கிக்கொடுத்து அந்தக் குடும்பத்தாரெல்லாரையும் சந்தோஷிப்பித்தாள் இவ்வாறு காணமற்போன அந்தப் பெட்டகம் இந்த ஏழை ஜனங்களுக்கு எவ்வளவோ பெரிய ஆசீர்வாதமாயிற்று. இவர்கள் வறுமையையும் தரித்திரத்தையும் பார்க்க பாவத்திற்குப் பயப்பட்டவர்கள் பசியையும் பட்டினியையும் பார்க்க தேவனுடைய தயவே பெரிதென்று நினைத்து நடந்தவர்கள். இவர்கள் எவ்வளவு சந்தோஷமாயும் சமாதானத்தோடும் தங்கள் வீட்டுக்குத் திரும்பியிருப்பார்கள்! இந்தச் சரித்திரத்தை எத்தனைவிசையோ தங்கள் பிள்ளைகளுக்குச் சொல்லிக்காண்பித்து நேர்மையாயும் உண்மையாயும் நடந்து ஜீவனம்பண்ணவேண்டுமென்றும், முதலாவது தேவனுடைய இராஜ்ஜியத்தையும அவருடைய நீதியையுந்தேடிக்கொண்டு அப்புறம் அவர்கள் அன்றாடம் வேண்டிய நன்மைகளுக்காக அவரை நம்பி நடக்கவேண்டுமென்றும புத்திசொல்லி வந்திருப்பார்களென்றும் நினைக்கத்தக்கது.

இதை வாசிக்கிறவர்களே, நேர்மையே உத்தம உபாயம் என்பது மெய்யா, பொய்யா, இப்பொழுது சொல்லுங்கள். நம்முடையவர்களுக்குள் ஒரு பெரிய தப்பிதமிருக்கிறது. அது என்னவென்றால், எங்கேயாவது ஒரு பொருளைக்கண்டெடுத்தால் அதைச் சொந்தக்காரருக்குக் கொடுக்கவேண்டியதில்லை, தாங்களே வைத்துக்கொள்வது நியாயம் என்று நினைப்பதுதான். இது மகா கொடிய தவறு. பெரிய நீதிக்கேடு. நம்முடைய பொருள் ஒன்று காணமற்போனதை இன்னொருவன் கண்டெடுததால், அதை நமக்குத் தந்துவிடாமல் அவன் தான் எடுத்துக்கொள்ளுகிறது நியாயமென்று நினைப்போமா? சொல்லுவோமா? நினைக்கவும் மாட்டோம், சொல்லவுமாட்டோமே. ஆகையால் பிரியமானவர்களே, நாம் எங்கேயாவது எந்த அற்பப்பொருளையெங்கிலும் கண்டெடுத்தால் அதை நமக்குச் சொந்தமாக வைத்துக்கொள்ளப் பார்க்காமல் சொந்தக்காரன் இன்னானென்று கரிசனையாய் விசாரித்து அவனிடத்திற் கொடுத்துவிட ஆயத்தமாயிருப்போமாக.

---

## பஞ்சாங்கம்.

### 1926ஆ—ஜூன்மீ

● அமாவாசை ○ பௌர்ணமி * கிருத்திகை

| வாரம் | தேதி | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஞாயிறு | ... | 6 | 13 | 20 | 27 | ... |
| திங்கள் | ... | 7 | 14 | 21 | 28 | ... |
| செவ் | 1 | 8 | 15 | 22 | 29 | ... |
| புதன் | 2 | *9 | 16 | 23 | 30 | ... |
| வி.. | 3 | ●10 | 17 | 24 | ... | ... |
| வெள் | 4 | 11 | 18 | ○25 | ... | ... |
| சனி | 5 | .2 | 19 | 26 | ... | ... |

| வாரம் | அக்ஷய-ஆ வைகாசி 19உ ஆனி 16உ | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஞாயிறு | ... | 24 | 31 | 6 | 13 | .. |
| திங்கள் | ... | 25 | 32 | 7 | 14 | ... |
| செவ் | 19 | 26 | 1 | 8 | 15 | ... |
| புதன் | 20 | *27 | 2 | 9 | 16 | ... |
| வியா | 21 | ●28 | 3 | 10 | ... | ... |
| வெள் | 22 | 29 | 4 | ○11 | ... | ... |
| சனி | 23 | 30 | 5 | 12 | ... | ... |

## கையொப்பக்காரரின் தொடர்ச்சி.

1524 கருப்பத்தேவன் மகன் க. சின்னத்தேவன், இலப்பட்டி அம்பாத்துரை போஸ்டு திண்டுக்கல்தாலுகா

1525 பெரியமாயத்தேவன் மகன் பித்தம்பட்டி பெரியகருப்பத்தேவன், இலப்பட்டி அம்பாத்துரை போஸ்டு திண்டுக்கல்தாலுகா

1526 மாயாண்டித்தேவன் மகன் பெரியகருப்பதேவர் என்ற நல்லுத்தேவன், தொன்னிமாதுரை திண்டுக்கல் போஸ்டு

1527 பெரியகருப்பதேவன் மகன் பெ. மாயாண்டித்தேவன் ஜோதிமாணிக்கம் சிந்துபட்டி போஸ்டு திருமங்கலம்தாலுகா

1528 ஆண்டித்தேவன் மகன் விருமாததேவன் ஜோதிமாணிக்கம் சிந்துபட்டி போஸ்டு திருமங்கலம்தாலுகா

1529 கருப்பணத்தேவர் மகன் க. கலுவுத்தேவன், பிரவியாம்பட்டி சிந்துபட்டி போஸ்டு திருமங்கலம்தாலுகா

1530 பூ. முத்தணத்தேவர் மகன் பூ. ராமத்தேவர் ஜோதிமாணிக்கம் சிந்துபட்டி போஸ்டு திருமங்கலம்தாலுகா

1531 பூ. நல்லகலுவத்தேவர் மகன் பூ. விருமத்தேவர், ஜோதிமாணிக்கம் சிந்துபட்டி போஸ்டு திருமங்கலம்தாலுகா

1532 பெருமாத்தேவர் மகன் பெரியசாமித்தேவர், பிரவியாம்பட்டி சிந்துபட்டி போஸ்டு திருமங்கலம் தாலுகா

1533 பெருமாத்தேவர் மகன் சுப்பையாத்தேவர், பிரவியாம்பட்டி சிந்துபட்டி போஸ்டு திருமங்கலம் தாலுகா

1534 கூடப்பட்டி மாயத்தேவர் மகன் யாகூப்தேவர், பிரவியாம்பட்டி சிந்துபட்டி போஸ்டு திருமங்கலம் தாலுகா

1535 ஒஞ்சித்தேவர் மகன் ஒ. கலைதம்பித்தேவர், பிரவியாம்பட்டி சிந்துபட்டி போஸ்டு திருமங்கலம்தாலுகா

1536 நல்லகலுவத்தேவர் மகன் [illegible], ஜோதிமாணிக்கம் சிந்துபட்டி போஸ்டு திருமங்கலம்தாலுகா

1537 பிரமத்தேவர் மகன் நல்லகலுவத்தேவர், ஜோதிமாணிக்கம் சிந்துபட்டி போஸ்டு திருமங்கலம்தாலுகா

1538 கலுவத்தேவர் மகன் கா. சுப்பையாத்தேவர், ஜோதிமாணிக்கம் சிந்துபட்டி போஸ்டு திருமங்கலம்தாலுகா

1539 பெரியகருப்பத்தேவர் மகன் முத்துகலுவத்தேவர் ஜோதிமாணிக்கம் சிந்துபட்டி போஸ்டு திருமங்கலம்தாலுகா

1540 பூ. கல்லகலுவத்தேவர் மகன் பூ. விருமாண்டித்தேவர், ஜோதிமாணிக்கம் சிந்துபட்டி போஸ்டு திருமங்கலம்தாலுகா

1541 ஒச்சாத்தேவன் மகன் ஒ. ஒச்சாத்தேவன், தும்மலக்குண்டு சிந்துபட்டி போஸ்டு திருமங்கலம்தாலுகா

1542 சடையத்தேவன் மகன் ஒச்சாத்தேவன், தும்மக்குண்டு சிந்துபட்டி போஸ்டு திருமங்கலம்தாலுகா

1543 பெருமாத்தேவன் மகன் வயிரத்தேவன், தும்மக்குண்டு சிந்துபட்டி போஸ்டு திருமங்கலம்தாலுகா

1544 ஆங்கத்தேவன் மகன் கருப்பத்தேவன், தும்மக்குண்டு சிந்துபட்டி போஸ்டு திருமங்கலம்தாலுகா

1545 கருப்பத்தேவன் மகன் பெரிய ஒச்சாத்தேவன், தும்மக்குண்டு சிந்துபட்டி போஸ்டு திருமங்கலம்தாலுகா

1546 கருப்பத்தேவன் மகன் சுந்தத்தேவன், தும்மக்குண்டு சிந்துபட்டி போஸ்டு திருமங்கலம்தாலுகா

1547 சுப்பத்தேவன் மகன் சுப்பத்தேவன், தும்மக்குண்டு சிந்துபட்டி போஸ்டு திருமங்கலம்தாலுகா

1548 அழகத்தேவன் மகன் சங்கிலி, தும்மக்குண்டு சிந்துபட்டி போஸ்டு திருமங்கலம்தாலுகா

1549 அழகத்தேவன் மகன் ஒச்சாத்தேவன், தும்மக்குண்டு சிந்துபட்டி போஸ்டு திருமங்கலம்தாலுகா

1550 பெரியபெருமாள்தேவன் மகன் வெ. பெருமாள்தேவன், ஈச்சம்பட்டி சிந்துபட்டி போஸ்டு திருமங்கலம்தாலுகா

1551 பெருமாள்தேவன் மகன் பெரியகருப்பன், ஈச்சம்பட்டி சிந்துபட்டி போஸ்டு திருமங்கலம்தாலுகா

1552 பெரியகருப்பத்தேவன் மகன் குப்புசாமித்தேவன், ஈச்சம்பட்டி சிந்துபட்டி போஸ்டு திருமங்கலம்தாலுகா

1553 ஒச்சப்பத்தேவன் மகன் பெரியசாமித்தேவன், ஈச்சம்பட்டி சிந்துபட்டி போஸ்டு திருமங்கலம்தாலுகா

1554 கல்லமாயத்தேவன் மகன் கலியாணித்தேவன், ஈச்சம்பட்டி சிந்துபட்டி போஸ்டு திருமங்கலம்தாலுகா

1555 கருப்பத்தேவர் மகன் பெரியவீட்டுசின்னத்தேவர், கீழப்பட்டி சிந்துபட்டி போஸ்டு திருமங்கலம்தாலுகா

1556 நாரணத்தேவர் மகன் மாயாண்டித்தேவர், குசவபட்டி சிந்துபட்டி போஸ்டு திருமங்கலம்தாலுகா

1557 பெரியகருப்பத்தேவர் மகன் அய்யாத்துரை என்ற கருப்பத்தேவர், குசவபட்டி சிந்துபட்டி போஸ்டு திருமங்கலம்தாலுகா

1558 மாயத்தேவர் மகன் ராமத்தேவர், குசவபட்டி சிந்துபட்டி போஸ்டு திருமங்கலம்தாலுகா

1559 மாயத்தேவர் மகன் பெரியகருப்பத்தேவர், கேசம்பட்டி சிந்துபட்டி போஸ்டு திருமங்கலம்தாலுகா

1560 மாயத்தேவர் மகன் மா. முக்குத்தேவர் கேசம்பட்டி, சிந்துபட்டி போஸ்டு திருமங்கலம் தாலுகா.

1561 மாயத்தேவர் மகன் கா. முத்துமாயத்தேவர் கேசம்பட்டி, சிந்துபட்டி போஸ்டு, திருமங்கலம் தாலுகா.

1562 குருமத்தேவர் மகன் கு. கு[illegible]த்தேவர், கேசம்பட்டி சிந்துபட்டி போஸ்டு திருமங்கலம்தாலுகா

1563 பெரியகருப்பத்தேவர் மகன் சாம்பல் பூசி. மாயாண்டித்தேவர், கேசம்பட்டி சிந்துபட்டி போஸ்டு திருமங்கலம்தாலுகா

1564 பெரியகருப்பத்தேவர் மகன் பெ. கலுவத்தேவன் எழுவம்பட்டி சிந்துபட்டி போஸ்டு திருமங்கலம்தாலுகா

1565 பெரியசாமித்தேவன் மகன் பெ. ஆண்டித்தேவர், எழுவம்பட்டி சிந்துபட்டி போஸ்டு திருமங்கலம்தாலுகா

1566 ஆங்கத்தேவர் மகன் முத்துக்கருப்பத்தேவர், எழுவம்பட்டி சிந்துபட்டி போஸ்டு திருமங்கலம்தாலுகா

1567 முத்துமாயத்தேவர் மகன் சின்னமாயத்தேவர், எழுவம்பட்டி சிந்துபட்டி போஸ்டு திருமங்கலம்தாலுகா

1568 கருப்பத்தேவர் மகன் சின்னத்தேவர். எழுவம்பட்டி சிந்துபட்டி போஸ்டு திருமங்கலம்தாலுகா

1569 பொ. க. வெள்ளைச்சாமித்தேவர், கீழக்குடி, பசுமலை போஸ்டு மதுரை ஜில்லா

1570 பொ. மாயாண்டித்தேவர், பஞ்சாயத்தார், கீழக்குடி, பசுமலை போஸ்டு மதுரை ஜில்லா

1571 தொ. சின்னக்கண்ணுத்தேவர் கீழக்குடி, பசுமலைபோஸ்டு மதுரை ஜில்லா

1572 கொ. விருமாத்தேவர் என்ற alias பீமன் கீழக்குடி பசுமலை போஸ்டு மதுரை ஜில்லா

1573 கலுவத்தேவன் என்ற அ. மூக்கன் கீழக்குடி பசுமலைபோஸ்டு மதுரை ஜில்லா

1574 கு. கருத்தவிருமாண்டித்தேவர் கீழக்குடி பசுமலை போஸ்டு மதுரை ஜில்லா

1575 செவத்த மாயாண்டித்தேவர் கீழக்குடி பசுமலை போஸ்டு மதுரை ஜில்லா

1576 பேக்காத்தவிருமாண்டித்தேவர் பஞ்சாயத்தார் கீழக்குடி பசுமலை போஸ்டு மதுரை ஜில்லா

1577 அ. கலுவத்தேவன் கீழக்குடி பசுமலை போஸ்டு மதுரை ஜில்லா

1578 மு. கலுவத்தேவன் கீழக்குடி பசுமலை போஸ்டு மதுரை ஜில்லா

1579 ரா. மாயாண்டித்தேவன் கீழக்குடி பசுமலை போஸ்டு மதுரை ஜில்லா

1580 சென்னத்த விருமாத்தேவன் பஞ்சாயத்தார் கீழக்குடி பசுமலை போஸ்டு மதுரைஜில்லா

1581 சிவகாளைத்தேவர் செக்ரட்டேரி N. சக்கரபேட்டை ஐக்கியநாணயசங்கம் சக்கரபேட்டை உசிலம்பட்டி போஸ்டு

1582 கடைக்கார பெரியகருப்பத்தேவன் தலைவர் சக்கரபேட்டை ஐக்கியநாணயசங்கம் N. சக்கரபேட்டை உசிலம்பட்டி போஸ்டு

1583 ஆண்டித்தேவன் தலைவர், பொருப்புமேட்டுப்பட்டி ஐக்கிய நாணயசங்கம் பொருப்புமேட்டுப்பட்டி சிந்துபட்டிபோஸ்டு

1584 வெங்கடாசலாயுடு செகரட்டேரி பொருப்புமேட்டுப்பட்டி ஐக்கிய நாணயசங்கம் பொருப்புமேட்டுப்பட்டி சிந்துபட்டி போஸ்டு

1585 ராமத்தேவன் பஞ்சாயத்தார் பொருப்புமேட்டுப்பட்டி ஐக்கிய நாணயசங்கம் பொருப்புமேட்டுப்பட்டி சிந்துபட்டி போஸ்டு

1586 சிவனாண்டித்தேவன் பஞ்சாயத்தார் பொருப்புமேட்டுப்பட்டி ஐக்கியநாணயசங்கம் பொருப்புமேட்டுப்பட்டி சிந்துபட்டி போஸ்டு



1587 பூச்சித்தேவன் பஞ்சாயத்தார் பொருப்புமேட்டுப்பட்டி ஐக்கிய நாணயசங்கம் பொருப்புமேட்டுப்பட்டி சிந்துபட்டி போஸ்டு

1588 அய்யருத்தேவர் மகன் அ. விருமாண்டித்தேவர் வடகாட்டுப்பட்டி முன்னிப்பாளையம் சோழவந்தான் போஸ்டு நிலக்கோட்டை தாலுகா

1589 சந்தனத்தேவர் மகன் ச. ஆலமரத்தான் விருமாண்டித்தேவர், வடகாட்டுப்பட்டி முன்னிப்பாளையம் சோழவந்தான் போஸ்டு நிலக்கோட்டை தாலுகா

1590 அழகத்தேவர் மகன் அ. மா. ஆண்டித்தேவர் வடகாட்டுப்பட்டி முன்னிப்பாளையம் சோழவந்தான் போஸ்டு நிலக்கோட்டை தாலுகா

1591 முத்துமாயத்தேவர் மகன் சின்னக்கருப்பத்தேவர் ஜாரிமேலேந்தல் கிராமம் திருமங்கலம்போஸ்டு

1592 சிவனாண்டித்தேவர் மகன் பின்னத்தேவர் பிள்ளநெரி மஜரா மீனாக்ஷிபட்டி சிந்துபட்டி போஸ்டு

1593 சூரியன் அய்யருத்தேவர் மகன் பெரிய கும்பத்தேவர் ஜாரிமேலேந்தல் கிராமம் திருமங்கலம் போஸ்டு

1594 சின்ன ஆங்கத்தேவர் மகன் பெரியமாயத்தேவர் ஜாரிமேலேந்தல் கிராமம் திருமங்கலம் போஸ்டு

1595 கா. முத்துமாயாண்டித்தேவர் மகன் கா. மு. பெரியபேயாண்டித்தேவர் பிள்ளநெரி கிராமம் மஜரா மீனாக்ஷிபட்டி சிந்துபட்டி போஸ்டு

1596 சடமாயத்தேவர் மகன் ஆங்கத்தேவர் ஜாரிமேலேந்தல் கிராமம் திருமங்கலம் போஸ்டு

1597 பெரியமாயத்தேவர் மகன் முத்துக்கண்ணன் என்ற பெரியகருப்பதேவன் ஜாரிமேலேந்தல் கிராமம் திருமங்கலம் போஸ்டு

1598 வெள்ளையன மாயத்தேவன் மகன் வெ. பெரியசாமித்தேவன் பிள்ளநெரி மஜரா மீனாக்ஷிபட்டி சிந்துபட்டி போஸ்டு

1599 பேச்சித்தேவர் மகன் பேயாண்டித்தேவர் பிள்ளநெரி மஜரா மீனாக்ஷிபட்டி சிந்துபட்டி போஸ்டு

1600 மலையாண்டித்தேவர் மகன் ம. பெரியசாமித்தேவர் ஆ. கொக்குளம் மஜரா சிக்கம்பட்டி கிராமம் செக்கானூரணி போஸ்டு (via) சோழவந்தான்

1601 காரமேகத்தேவர் மகன் கா. மே. சிவமாயத்தேவர் கின்னிமங்கலம் மஜரா பூவரசம்பட்டி செக்கானூரணி போஸ்டு via) சோழவந்தான்

1602 பெருமாத்தேவர் மகன் சின்னபேயாண்டித்தேவர் பிள்ளநெரி மஜரா மீனாக்ஷிபட்டி சிந்துபட்டிபோஸ்டு

1603 பின்னத்தேவர் மகன் நல்லகருப்பதேவர் பின்னநெரி மஜரா மீனாக்ஷிபட்டி சிந்துபட்டி போஸ்டு

1604 அய்யாபெருமாள் தேவர் மகன் பின்னியப்பதேவர் ஆ. கொக்குளம் கிராமம் மஜரா சிக்கம்பட்டி செக்கானூரணி போஸ்டு (via) சோழவந்தான்

1605 சின்னபேயாண்டித்தேவர் மகன் சுப்பாகுருமுத்து பேயாண்டித்தேவர் பிள்ளநெரி மஜரா மீனாக்ஷிபட்டி சிந்துபட்டி போஸ்டு

1606 கலியாணித்தேவர் மகன் நாகத்தேவர் நெல்லூர் ஐயம்பாளையம் போஸ்டு

1607 பெரியமாயத்தேவர் நெல்லூர் ஐயம்பாளையம் போஸ்டு

1608 கூழாத்தேவன் மகன் மாயாண்டித்தேவன் நெல்லூர் ஐயம்பாளையம் போஸ்டு

1609 மாயத்தேவன் மகன் பாளிகூடத்தேவன் என்ற மாயாண்டித்தேவன் நெல்லூர் ஐயம்பாளையம் போஸ்டு

1610 மாயத்தேவன் மகன் வீரணத்தேவன் நெல்லூர் ஐயம்பாளையம் போஸ்டு

1611 மாயத்தேவன் மகன் பகவத்தேவன் நெல்லூர் ஐயம்பாளையம் போஸ்டு

1612 பூ. மாயத்தேவன் மகன் குப்பக்கருப்பத்தேவன் நெல்லூர் ஐயம்பாளையம் போஸ்டு

1613 வீரணத்தேவர் மகன் பெரியமாயத்தேவன் நெல்லூர் ஐயம்பாளையம் போஸ்டு

1614 சின்னக்கருப்பத்தேவன் மகன் முத்துக்கண்ணன் alias பழனியாண்டி நெல்லூர் ஐயம்பாளையம் போஸ்டு

1615 சின்னத்தேவர் மகன் ஆங்கத்தேவர் நெல்லூர் ஐயம்பாளையம்

1616 சுப்பத்தேவர் மகன் மாயாண்டித்தேவர் நெல்லூர் ஐயம்பாளையம் போஸ்டு

1617 சின்னத்தேவர் மகன் ஒச்சாத்தேவர் நெல்லூர் ஐயம்பாளையம் போஸ்டு

1618 V. ஒச்சாத்தேவன் No. l.c. 150 of நெல்லூர் [illegible]சையட்டி நெல்லூர் ஐயம்பாளையம் போஸ்டு

1619 சின்னத்தேவன் மகன் பகவத்தேவன் நெல்லூர் ஐயம்பாளையம் போஸ்டு

1620 சுப்பிரமணியத்தேவன் மகன் பழனிபாண்டித்தேவன் நெல்லூர் ஐயம்பாளையம் போஸ்டு

1621 வீரணத்தேவன் மகன் ஒச்சாத்தேவன், பசுக்காரம்பட்டி, உசிலம்பட்டி போஸ்டு

1622 உலகத்தேவன் மகன் முத்துக்கருப்பத்தேவன், பசுக்காரம்பட்டி, உசிலம்பட்டி போஸ்டு

1623 நல்லுத்தேவன் மகன் ஒச்சாத்தேவன், பசுக்காரம்பட்டி, உசிலம்பட்டி போஸ்டு

1624 சொக்கருத்தேவன் மகன் பெரியகருப்பதேவன், பசுக்காரம்பட்டி, உசிலம்பட்டி போஸ்டு

1625 மா. தவசித்தேவன் மகன் ஒச்சாத்தேவன், பசுக்காரன்பட்டி, உசிலம்பட்டி போஸ்டு

1626 முத்துச்சோணையா பிள்ளை மகன் ஷண்முகம் பிள்ளை, விண்ணக்குடி உசிலம்பட்டி, திருமங்கலம் தாலுகா

1627 சுப்பத்தேவன் மகன் கருப்பதேவன், விண்ணக்குடி, உசிலம்பட்டி போஸ்டு, திருமங்கலம் தாலுகா

1628 சுப்பத்தேவன் மகன் வெள்ளைச்சாமித்தேவன், விண்ணக்குடி, உசிலம்பட்டி போஸ்டு, திருமங்கலம் தாலுகா

1629 சொக்கத்தேவன் மகன் கல்லகருப்பத்தேவன், விண்ணக்குடி, உசிலம்பட்டி போஸ்டு, திருமங்கலம் தாலுகா

1630 கருப்பத்தேவன் மகன் ஆங்கத்தேவன், விண்ணக்குடி உசிலம்பட்டி போஸ்டு திருமங்கலம் தாலுகா

1631 மாயாண்டித்தேவன் மகன் ஒச்சாத்தேவன், விண்ணக்குடி உசிலம்பட்டி போஸ்டு திருமங்கலம் தாலுகா

1632 சிதம்பரத்தேவன் மகன் வெள்ளையாண்டித்தேவன், விண்ணக்குடி, உசிலம்பட்டி போஸ்டு திருமங்கலம் தாலுகா

1633 வீரதேவன் மகன் கா. வீரத்தேவன், சக்கிலியன்குளம். உசிலம்பட்டி போஸ்டு திருமங்கலம் தாலுகா

1634 நல்லுத்தேவன் மகன் பா. மூ. வீரணத்தேவன், சக்கிலியன்குளம், வாலாந்தூர், உசிலம்பட்டி போஸ்டு திருமங்கலம் தாலுகா,

1635 வெள்ளையத்தேவன் மகன் ஆண்டித்தேவன், சித்தர்களநத்தம், கருப்பட்டிபோஸ்டு நிலக்கோட்டை தாலுகா,

1636 படிபதேவர் மகன் பெருமாத்தேவர், சித்தர்களநத்தம் கருப்பட்டிபோஸ்டு, நிலக்கோட்டைதாலுகா,

1637 ஆண்டித்தேவன் மகன் பெரியகருப்பத்தேவன் சித்தர்களநத்தம் கருப்பட்டி போஸ்டு நிலக்கோட்டை தாலுகா

1638 மாயாண்டித்தேவன் மகன் ஒச்சாத்தேவன் சித்தர்களநத்தம், கருப்பட்டி போஸ்டு நிலக்கோட்டை தாலுகா .

1639 கருப்பத்தேவன், மகன் பூச்சிதேவன் கோட்டார்பட்டி, தேவதானப்பட்டி பெரியகுளம் தாலுகா

1640 வெள்ளையதேவன் மகன் அழகப்பதேவன் கோட்டார்பட்டி, தேவதானப்பட்டி, பெரியகுளம் தாலுகா

1641 பெருமாத்தேவர் மகன், வீரணத்தேவன் கோட்டார்பட்டி, தேவதானப்பட்டிபோஸ்டு பெரியகுளம் தாலுகா

1642 முத்தாதேவன் மகன் பேயாண்டித்தேவன் கோட்டார்பட்டி, தேவதானப்பட்டிபோஸ்டு, பெரியகுளம் தாலுகா

1643 அழகுமால் தேவர், மகன் அ. கருப்பதேவர் கோட்டார்பட்டி, தேவதானப்பட்டி, பெரியகுளம் தாலுகா

1644 Mr M. Jesudason Teacher, Training School Reading Room, Tirumangalam

1645 மு. மாயாண்டித்தேவன் மகன் கலைமாயத்தேவன் தொண்டமநாயக்கன்பட்டி, திண்டுக்கல் போஸ்டு

1646 மாயாண்டித்தேவன் மகன் பெருமாத்தேவன் தொண்டமநாயக்கன்பட்டி, திண்டுக்கல் போஸ்டு

1647 முத்துமாயத்தேவன் மகன் கருப்பதேவன்
இடைப்பாரப்பட்டி, வடமதுரைபோஸ்டு, திண்டுக்கல் தாலுகா
1648 முத்துமாயத்தேவன், மகன் சடயத்தேவன்
இடைப்பாரப்பட்டி, வடமதுரைபோஸ்டு திண்டுக்கல் தாலுகா
1649 பெருமாத்தேவன் மகன் மண்டயன் பெருமாள்தேவன்
கொண்டமநாயக்கன்பட்டி, திண்டுக்கல் போஸ்டு.
1650 காமணத்தேவர் மகன் கா. காமணத்தேவர்
விக்கிரமங்கலம், சோளவந்தான் போஸ்டு
1651 சொக்கதேவர் மகன் சொக்கயன் என்ற விருமாண்டிதேவர்
விக்கிரமங்கலம் சோளவந்தான் போஸ்டு
1652 வ. கு. பெரியமாயதேவர் மகன் குரும்பதேவன்
கருமாத்தூர் வடக்கம்பட்டி சிந்துபட்டிபோஸ்டு, திருமங்கலம் தாலுகா
1653 வீரதேவர் மகன் முத்துகண்ணுதேவர்
விக்கிரமங்கலம், சோளவந்தான் போஸ்டு
1654 கலுவத்தேவர் மகன் வாத்தியார்கலுவத்தேவன்
கன்புளுச்சான்பட்டி, சோளவந்தான போஸ்டு
1655 செ. கி. தவசித்தேவர் மகன் பெரியமாயத்தேவர்
கருமாத்தூர் வடக்கம்பட்டி சிந்துபட்டிபோஸ்டு
1656 பூசாரி பெரியமாயத்தேவர் மகன் பூ. ராமசாமிதேவர்
கருமாத்தூர் வடக்கம்பட்டி, சிந்துபட்டிபோஸ்டு திருமங்கலம் தாலுகா
1657 பூ. க. கருத்தகுரும்பத்தேவர் மகன் பெரியகருப்பத்தேவர், கருமாத்தூர் வடக்கம்பட்டி, சிந்துபட்டி போஸ்டு.
1658 வீரகுட்டி ஆங்கத்தேவர் மகன் சடமாயத்தேவர், கருமாத்தூர் வடக்கம்பட்டி சிந்துபட்டி போஸ்டு, திருமங்கலம் தாலுகா.
1659 பு. கு. கருத்தகுரும்பத்தேவர், கருமாத்தூர் வடக்கம்பட்டி சிந்துபட்டி போஸ்டு.
1660 கருத்தகுரும்பதேவர் மகன் நா. மாயத்தேவர், கருமாத்தூர் வடக்கம்பட்டி சிந்துபட்டி போஸ்டு.
1661 கருப்பதேவன் மகன் பேயாண்டித்தேவன், உச்சபட்டிகிராமம் வத்தலக்குண்டு போஸ்டு, பெரியகுளம் தாலுகா.
1662 பழனியாண்டித்தேவன் மகன் பெரியகருப்பத்தேவன், உச்சபட்டிகிராமம் வத்தலக்குண்டு போஸ்டு, பெரியகுளம் தாலுகா.
1663 கலுவத்தேவன் மகன் முத்தணதேவன், உச்சபட்டிகிராமம் வத்தலக்குண்டு போஸ்டு, பெரியகுளம் தாலுகா.
1664 வெள்ளையாண்டித்தேவன் மகன் முத்துகலுவத்தேவன், உச்சபட்டிகிராமம் வத்தலக்குண்டு போஸ்டு, பெரியகுளம் தாலுகா.
1665 பெரியகருப்பத்தேவன் மகன் பழனியாண்டித்தேவன், உச்சபட்டிகிராமம் வத்தலக்குண்டு போஸ்டு, பெரியகுளம் தாலுகா.
1666 சடயத்தேவன் மகன் ஆங்கதேவன், சொக்குபிள்ளைபட்டி கருப்பட்டி போஸ்டு, மதுரை ஜில்லா.
1667 முத்துமாயத்தேவர் மகன் கருப்பதேவன், சொக்குபிள்ளைபட்டி கருப்பட்டி போஸ்டு, மதுரை ஜில்லா.
1668 விருமாண்டித்தேவன் மகன் முத்துகலுவத்தேவன், சொக்குபிள்ளைபட்டி கருப்பட்டி போஸ்டு மதுரை ஜில்லா.
1669 The President, A 739 Sadayandipatty Coop. Society, Usilampatti Post.
1670 The President, Senimettupatty Coop. Society, Usilampatty Post.
1671 பஞ்சாயத்தார், துரைச்சாமிபுரம், புதூர் C. S. உசிலம்பட்டி போஸ்டு.
1672 வெள்ளையாண்டித்தேவன் மகன் கருப்பத்தேவன், உச்சபட்டி கிராமம், வத்தலக்குண்டு, பெரியகுளம் தாலுகா.
1673 மாயத்தேவன் மகன் மாயத்தேவன், நக்கலக்கோட்டை, சிந்துபட்டி போஸ்டு, திருமங்கலம் தாலுகா.
1674 ஒச்சாததேவன் மகன் சின்னத்தேவன், நக்கலக்கோட்டை சிந்துபட்டி போஸ்டு, திருமங்கலம் தாலுகா.
1675 ஒச்சாத்தேவன் மகன் மாயாண்டித்தேவன், நக்கலக்கோட்டை, சிந்துபட்டி போஸ்டு, திருமங்கலம் தாலுகா.
1676 கலகருப்பததேவன் மகன் வீரதேவன், நக்கலக்கோட்டை, சிந்துபட்டி போஸ்டு, திருமங்கலம் தாலுகா.
1677 முத்துக்கருப்பத்தேவன் மகன் பெரியகருப்பத்தேவன், முண்டுவேலாம்பட்டி, சிந்துபட்டி போஸ்டு திருமங்கலம் தாலுகா.
1678 து. குரும்பத்தேவன் மகன் புலிக்குட்டி அய்யர்தேவன், முண்டுவேலாம்பட்டி, சிந்துபட்டி போஸ்டு, திருமங்கலம் தாலுகா.
1679 பீமன் என்ற பெரியகருப்பத்தேவன், முண்டுவேலாம்பட்டி, சிந்துபட்டி போஸ்டு, திருமங்கலம் தாலுகா.
1680 பூசாரி மாயத்தேவன் மகன் ப. பு பெரியகருப்பத்தேவன், முண்டுவேலாம்பட்டி, சிந்துபட்டி போஸ்டு, திருமங்கலம் தாலுகா.
1681 தவசித்தேவன் மகன் க. த. அய்யர் தேவன், முண்டுவேலாம்பட்டி, சிந்துபட்டி போஸ்டு, திருமங்கலம் தாலுகா.
1682 சி. குரும்பத்தேவன் மகன் சிலிலிபெரியகருப்பத்தேவன் முண்டுவேலாம்பட்டி, சிந்துபட்டி போஸ்டு, திருமங்கலம் தாலுகா.
1683 கருப்பத்தேவன் மகன் ஒச்சாத்தேவன், நக்கலக்கோட்டை, சிந்துபட்டி போஸ்டு, திருமங்கலம் தாலுகா.
1684 கீதரிபெரிசோலை குரும்பத்தேவன், முண்டுவேலாம்பட்டி, சிந்துபட்டி போஸ்டு, திருமங்கலம் தாலுகா.
1685 மொக்கையத்தேவன் மகன் கந்தசாமித்தேவன், கரிசல்பட்டி, சிந்துபட்டி போஸ்டு, திருமங்கலம் தாலுகா.
1686 ஒச்சாத்தேவன் மகன் சடமாயத்தேவன், கரிசல்பட்டி, சிந்துபட்டி போஸ்டு, திருமங்கலம் தாலுகா.
1687 சின்னத்தேவன் மகன் ஒச்சாத்தேவன், கரிசல்பட்டி, சிந்துபட்டி போஸ்டு, திருமங்கலம் தாலுகா.
1688 ஆங்கத்தேவன் மகன் சின்னக்கருப்பத்தேவன், கரிசல்பட்டி, சிந்துபட்டி போஸ்டு, திருமங்கலம் தாலுகா.
1689 அம்பக்கான் தம்பி வீரணன், பெருங்காமநல்லூர், சிந்துபட்டி போஸ்டு, திருமங்கலம் தாலுகா.
1690 காரணபூச்சித்தேவன் மகன் பூச்சி சிவனாண்டி, பெருங்காமநல்லூர், சிந்துபட்டி போஸ்டு, திருமங்கலம் தாலுகா.
1691 நாகத்தேவன் மகன் பூசாரி முத்துமாயன், பெருங்காமநல்லூர், சிந்துபட்டி போஸ்டு, திருமங்கலம் தாலுகா.
1692 பெரியசாமித்தேவன் மகன் அரியத்தேவன், பெருங்காமநல்லூர், சிந்துபட்டி போஸ்டு, திருமங்கலம் தாலுகா.
1693 வண்ணாங்குளம் பெருமாத்தேவன் மகன் பின்னத்தேவன், பெருங்காமநல்லூர், சிந்துபட்டி போஸ்டு, திருமங்கலம் தாலுகா.
1694 பொன்னுசாமி என்ற பெரியகருப்பன், பெருங்காமநல்லூர், சிந்துபட்டி போஸ்டு, திருமங்கலம் தாலுகா.

*Patron.* M.R.Ry. Rao Sahib,
A. J. Vethanayaga Thevar Avl.,
Usilampatti.
*Editor.*—Rev. George J. Athishtam,
Usilampatti.
*Manager.*—Rev. R. A. Dudley,
Tirumangalam.

Subscription—Single copy 8 annas a year (excluding charges for delivery) payable in advance.

All orders to be sent to the *Manager*.

Articles for insertion should be sent, not later than 15th of each month to the *Editor*.

சம்ரக்ஷகர்.—மகா-ா-ா-ஸ்ரீ ராவ் சாஹெப் வேதநாயகத் தேவரவர்கள், உசிலம்பட்டி.

பத்திராதிபர்.—கனம் ஜார்ஜ் அதிஷ்டம் ஐயரவர்கள், உசிலம்பட்டி.
மானேஜர்.—கனம் ஆர். ஏ. டட்லி துரையவர்கள், திருமங்கலம்.

தனிப்பிரதி:—8-பை. வருஷ சந்தா 8-அணா. தபால்கூலி பிரத்தியேகம். ஒரு வருஷ கையொப்பம் முன்னதாகவே அனுப்பவேண்டும்.

பத்திரிகை வேண்டுவோர் மானேஜரவர்களுக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

சமாச்சாரக்குறிப்பு முதலியவை அனுப்ப விரும்புவோர் அந்த மாதம் 15-ம் தேதிக்குள் சுருக்கமாக எழுதி பத்திராதிபருக்கு அனுப்பவேண்டும்.



340

REG. NO. M. 2146.
மாதாந்தரப்பதிப்பு] [விலை 8 பைசு.

# The Piramalai Reformer.

## பிரமலை சீர்திருத்தன்.

"அநியாயமாய் வந்த அதிக வருமானத்திலும், நியாயமாய் வந்த கொஞ்ச வருமானமே உத்தமம்."

OFFICE OF THE REGISTRAR OF ... 20 JUL 1926

Vol. VI.] ஜூலை, 1926 [இலக்கம் 3

**உசிலம்பட்டிக்கு சங்கை பொருந்திய மதுரை ஜில்லா கலெக்டர் துரை, துரைசானி அவர்களின் சந்திப்பு.—**

ஜூன் மீ 9-ம் தேதி புதன்கிழமை சங்கை எக்லிஸ் கலெக்டர் துரையும் கலெக்டர் துரைசானியும் உசிலம்பட்டிக்கு விஜயம் செய்து தேவமார் பெண்பிள்ளைகளுக்கென்று புதிதாக அமைக்கப்பட்ட கட்டடத்தைத் திறப்பதற்கு வந்திருந்தனர். போர்ட் ஸ்கூல் காம்பவுண்ட் அழகாக ஜோடிக்கப்பட்டிருந்தது. பல பெரிய போலீஸ் உத்தியோகஸ்தரும், டிஸ்டிரிக்ட் தாலுகா போர்ட் பிரசிடெண்ட், டெப்டி கலெக்டர், தாசில்தார் முதலிய பெரியோர்களும் வந்திருந்தனர். ஸ்கௌட் மாணவராலும் பெண்பிள்ளைகளாலும் அருமையான அப்பியாசங்கள் செய்யப்பட்டன. பிற்பாடு தலைமை உபாத்தியாயரவர்களால் உபசார வார்த்தைகள் சொல்லப்பட்டபின் எல்லோரும் எழுந்து புதிதாகக் கட்டப்பட்ட கட்டடத்திற்குச் சென்று நிற்க சங்கை கலெக்டர் துரைசானியவர்கள் கட்டடத்தைத் திறந்து பிள்ளைகளோடு உட்சென்று பிள்ளைகளுக்கு அருமையான புத்திமதிகள் சொல்லியிருந்தனர். இரவில் போர்டிங் மாணவரால் ஒரு நாடகம் நடத்தப்பட்டது.

---

**மாட்சிமை தங்கிய சென்னை கவர்னர் துரையவர்களின் விஜயம்.—**

சென்னை கவர்னர்துரை ஜூலை மாதக் கடைசிவாரத்தில் மதுரைக்கு வரும்போது உசிலம்பட்டிக்கும் 2, 3 மணி நேரம் வந்து கள்ளர் நாட்டில் நடக்கும் வேலைகளைப்பார்த்துப்போக உத்தேசித்திருப்பதாக அறிகிறோம். அதற்காகப் பற்பல ஆயத்தங்கள் செய்யப்பட்டு வருகின்றன. சில உபசாரப்பத்திரங்கள் வாசிக்கப்படும். பிரமலை நாட்டாரின் முன்னேற்றத்தை எத்தனை உயர்தர பதவி வாய்ந்தவர்கள் ஆவலோடு கவனித்துவர ஆசையுற்றிருக்கிறார்கள் என்று ... முன்னேற்றத்திற்கென்று எடுத்துக் கொள்ளப்படும் சகல முயற்சிகளையும் மதித்து நமது நாட்டார் நடப்பார்களானால் பாக்கியம்பெற்றவர்களே.

---

கள்ளர் சூப்பிரண்டெண்ட்,
ஆபீஸ்,
மதுரை, 4—6—1926.

**விளம்பரம்.**

தலைமறைவாய் ஒளிந்துதிரியும் சி. டி. கள்ளர்களின் தொடர்ச்சி ஜாப்தா:—

இதனடியிலகண்ட நபர்களை அந்தந்த சம்பந்தப்பட்ட கிராம பஞ்சாயத்தார்கள் அதிசீக்கிரம் தேடி கண்டுபிடித்து சமீபத்திலுள்ள போலீஸ் ஸ்டேஷனில் கொண்டுபோய ஆஜர்படுத்தவேண்டும். கூடிய சீக்கிரம் தேடி ஆஜர் செய்பவர்களுக்குத் தகுந்த வெகுமதியளிக்கப்படும்.

**மதுரை தாலூகா ஸ்டேஷன்**

38. சி. டி. ஆர். சீர். 1316 குரக்கலுவன். இவன் 15—10—25 தேதி முதல் பராரி. போன இடம் தெரியவில்லை. இவன் தகப்பன்பெயர் சங்கரன் பேயாண்டி. சொந்த ஊர் ஆரப்பாளையம். உயரம் 5 அடி 6 அங்குலம், வயது சுமார் 50.

(Sd). கே. பி. ஜனார்தனராவ்.

C 1854
———25
C.T.

---

**கள்ளர் பொதுநிதியின் விதிகள்.**

5-வது விதியின் C. பிரிவு.—

1860 வருஷத்து 21-வது ஆக்ட்படிக்கும் இந்த விதிகளின்படிக்கும் ஷை நிதியின் மெம்பர்களுக்கு ஜாரிசெய்யவேண்டிய அறிக்கைகளை கள்ளர் நாட்டில் விளங்கிவரும் பத்திரிகைகளில் பிரசுரிப்பதாலும், கமிட்டி மெம்பர்களுக்கு தபால்மூலமாய் அனுப்புவதாலும், ஷை அறிக்கைகள் விதிப்படிக்கு ஜாரி செய்யப்பட்டதாக கருதப்படும்.

1926 வருஷம் ஏப்ரல் மாதம் 30 தேதி நடந்த மீட்டிங்கில் அமுலுக்குக் கொண்டுவந்த உபவிதிகள்:—

1. பிரமலை கள்ளர்களுக்கு ஜங்கமசொத்தின் அடமானத்தின்பேரில் கடன கொடுப்பதற்கு இந்த கமிட்டியாருக்கு அதிகாரமுண்டு.

2. ஷை ஜங்கம அடமான சொத்தின் பேரில் கடன்கள் கொடுப்பதற்காக பொதுசபையிலிருந்து 3 மெம்பர்களை பிரசிடெண்டு, காரியதரிசியுடன் சேர்ந்த சப்கமிட்டிக்கு ஷை பொதுநிதி கமிட்டியார் நியமனம் செய்யவேண்டியது.

3. இந்த சப்கமிட்டி உசிலம்பட்டியில் மாதம் ஒருமுறை கூடும். ஷை கமிட்டி மெம்பர்களே ஓர் காரியதரிசியை நியமனம் செய்யவேண்டியது.

4 ஜங்கம சொத்தின் அடமானத்தின் பேரில கடன்கள் விவசாயத்திற்கும, வீடு கட்டுவதற்கும், இன்னும் ஷை கமிட்டியாருக்குத் தோன்றும் மற்ற உபயோகமான காரியங்களுக்குமட்டும் கொடுக்கப்படும.

5. கடன்கள் கொடுப்பது ஷை கமிட்டியாருடைய யுக்தத்திற்குட்பட்டது. ஷை யாருடைய தீர்மானம் முடிவானது. ஷை யார்கள் செய்யும் தீர்மானத்திற்கு யாதொரு

காரணமும் குறிப்பிடவேண்டியதவசியமில்லை.

6. கடனுக்கு அபேக்ஷிக்கிறவர்கள் அடமானம் வைக்க உத்தேசித்திருக்கும் ஜங்கம சொத்துக்களுடன் அதற்காக ஏற்பட்ட அச்சுபாரத்தில் காரியதரிசி அவர்களுக்கு எழுதியனுப்பவேண்டியது.

7. ஈடாகக்காட்டும் சொத்து அல்லது சாமான்களை கவனித்துதான் கமிட்டியார் எவ்வளவு கடன் கொடுப்பதென்பதை தீர்மானிப்பார்கள்.

8. ஷை கமிட்டியார் கடன் கொடுக்கலாமென்று தீர்மானித்தவுடன் காரியதரிசி அவர்கள் கடன் கேட்கும் தொகைக்கு ரூ. 10-க்கு அணா 1 வீதம் மூன்று நாட்களுக்குள் மனுதாரரை மதிப்புத் தொகையாக கட்டச் சொல்வார்கள்.

9. ஷை உத்தரவு பிரகாரம் குறிப்பிட்ட தேதியில் ஷை மதிப்புத்தொகையைக் கட்டத்தவறினால் அந்த மனு தள்ளுபடிசெய்யப்படும்.

10. ஷை மதிப்புத்தொகை கட்டியபின் காரியதரிசி அவர்கள் ஷை அடமான சொத்து அல்லது சாமான்களை இந்த கமிட்டியாரால் நியமுகம் செய்யப்பட்டிருக்கும் கண்ணுவிக்கு அதின் சொந்தமான தொகையை அறியும்பொருட்டு அனுப்பப்படும்.

11. காரியதரிசி அவர்கள் ஷை கண்ணுவியின் ரிப்போர்ட்டையும், தன்னுடைய ரிப்போர்ட்டையும் இந்த கமிட்டிக்கு அனுப்புவார். அதன்மேல் ஷை கமிட்டியார் அடமானம் வைத்திருக்கும் சொத்தின் மதிப்பிற்கு 100-க்கு 75 ரூபாய் வீதம் மேல்போகாமலும், கண்ணுவியின் மதிப்புத் தொகைக்கு ஒத்திருக்கும்படிக்கும், சுமார் 12 மாதம் அதாவது 1 வருஷத்திற்கு மேல்போகாமலும் கடன் தரலாம்.

12. கடன்வாங்கினவர்கள் ஷை தொகையை குறிப்பிட்ட காலத்திற்குள் செலுத்தத் தவறி அதற்கு தகுந்த முகாந்தரங்கள் குறிப்பிட்டால், மானேஜிங் கமிட்டியாரின் ஆதரவின்பேரில் ஷையாருக்கு கூட 6 மாதம் தவணை, காரியதரிசி தரலாம்.

13. ஷை நிதியிலிருந்து கடன் தொகை வாங்குவதற்கு முன்னால் அதற்கேற்பட்ட பிராமிசரி நோட் ஒன்றை ஷை கடன் வாங்குபவர்கள் எழுதித்தரவேண்டியது.

14. ஷை நிதியிலிருந்து ஒரு மெம்பருக்கு ஒரு தடவையில் ரூ 250-க்குமேல் கடன் நிலுவை வைக்கப்படமாட்டாது. அவசர நிமித்தம் ஏதாவது ஜாஸ்தி தொகை வேண்டியதிருந்தால், தக்க முகாந்தரங்களை எழுதிக்கொண்டு இந்த கமிட்டியார் விசேஷித்து ரூ 1,000 வரையிலும் கடன் தரலாம்.

15. ஜங்கமசொத்துக்களின் அடமானத்தின்பேரில மாதம் 1-க்கு ரூ 1-க்கு பைசா 1½ வட்டி வீதம் இந்த கமிட்டியாரால கடன் கொடுக்கப்படும். கடன் வாங்குகிறவர்கள் ஒரு மாதத்தில் 15 தேதிக்கு மேல்பட்டு கடன் வாங்கினாலும் அல்லது வாபஸ் செய்தாலும் வட்டிக்கணக்கிற்காக அவைகள் ஒரு மாதமாக பாவிக்கப்படும். ஒரு மாதத்தில் 15 நாட்களுக்கு குறையும் பக்ஷத்தில் அவைகளை ½ மாதமாக பாவிக்கப்படும்.

(ஒரு மாதம் என்பது இங்கிலீஷ் கியாலண்டர் மாதம்.)

16. கடன்கொடுத்த தொகையையும் அதற்குண்டான வட்டியையும் வசூலிப்பதற்கும் ஈடு அல்லது அடமானம் வைத்திருக்கும் சொத்துக்களை காத்து உத்தரவாதம் செய்வதினால் ஏற்படும் சகல செலவுகளை வசூலிப்பதற்கும் ஷை ஈடு அல்லது அடமானம் வைக்கப்பட்டிருக்கும் சொத்துக்களை ஷை கமிட்டியாரே வைத்துக்கொள்வார்கள்.

17. அடமானம் வைக்கப்படும் சொத்துக்களினால் ஏற்படும் சகல செலவுகளையும் ஷை கமிட்டியார் வசூலிக்க அதிகாரமுண்டு. கடன் வாங்கியவர்களும கட்டாயம் கொடுத்துத்தீரவேண்டியது.

18. கடன்வாங்கினவர்கள் தமது கடன்களை மொத்தமாகவாவது அல்லது பலதடவைகளிலாவது குறிப்பிட்ட வாயிதாவிற்குள் செலுத்திவிடலாம். அப்படி செலுத்துவதால் ஏற்படும் வட்டியும் சகாயமாகும். ஷை பணத்தை ஒரு மாதத்தில் 15 தேதிக்கு [illegible] அவை மறுமாதத்திய முதல் தேதியிலிருந்து தான் கணக்கு வைக்கப்படும். ஷை பணம் ஒரு மாதத்தில் 15 தேதிக்குள்ளாக செலுத்தப்பட்டால அவைகள் அந்த 15-ஆம் தேதியிலிருந்து கணக்குவைக்கப்படும்.

19. கடன் வாங்குபவர்கள் ஷை கடன் தொகையை சரியான காலத்தில் கட்டத்தவறினால் ஷை தொகைக்கு மாதம் 1-க்கு ரூ. 1-க்கு பைசா ½ வீதம் அபராத வட்டி வசூலிக்கப்படும்.

20. கடன்வாங்குபவர் ஷை கடன் தொகையை குறிப்பிட்ட காலத்திற்குள்ளாவது அல்லது கமிட்டியாரால் அதிக வாயிதா கொடுக்கப்பட்டிருக்கும காலத்திற்குள்ளாவது செலுத்தத் தவறினால் ஷை கமிட்டியார் கடன் தொகைக்கும அல்லது அவர்களுக்குச் செல்லவேண்டிய தொகைக்கும், கடன் வாங்கினவர்களின்மேல் கோர்ட்டு மூலமாக வியாஜ்யம் செய்து தொகையை வசூலிக்கவும், ஷை அடமான சொத்துக்களை அவர்களே வைத்துக்கொள்ளவும் அல்லது அடமானதாருக்கு காலாகாலத்தில் கோட்டீஸ் மூலம எச்சரிக்கைசெய்து ஷை சொத்துக்களை விற்றுவிடவும் இந்த கமிட்டியாருக்கு அதிகாரமுண்டு.

21. அடமானசொத்துக்களின் விற்பனைகளை ஷை கமிட்டியின் சாங்கிஷன்பேரில ஷை காரியதரிசி அவர்களே வைத்துக்கொள்வார்கள்.

22. ஷை அடமான சொத்துக்கள் விற்கப்படுமென்பதை கடன் வாங்குபவர் குடியிருக்கும் ஊரில் தண்டோராமூலமாக பகிரங்கப்படுத்தப்படும்.

23. ஷை சொத்துக்கள் விற்கப்படும் காலம், நேரம், தேதி முதலியவைகளைக் குறிப்பிட பிரசிடெண்டு அவர்களுக்கு அதிகாரமுண்டு.

24. ஷை சொத்துக்கள் ஜாஸ்தி தொகைக்குக் கேட்கும் ஏலதாருக்கே விற்கப்படும்.

25. ஷை ஏலகாலத்திற்குள் ஷை கடன் வாங்குபவர் ஷை கமிட்டிக்கு அசலும் வட்டியும (பூராதொகையும்) செலுத்திவிடும் பக்ஷத்தில் ஷை ஏலம் நிறுத்தப்படுவதுடன், அவைகளினால ஏற்படும் சகல செலவுகளையும் வசூலித்தபிறகு ஷை அடமானசொத்து அல்லது சாமான்கள் வாபஸ்செய்யப்படும்.

ஷை சொத்துக்களின் கிரயத்தினால் வரும் தொகை ஷை கடன் வாங்குபவர் செலுத்தவேண்டிய அசலுக்கும், மற்ற செலவுகளுக்கும் குறையும்பக்ஷத்தில் பின்னும் ஷையார்கள் செலுத்தவேண்டிய பாக்கித்தொகையை ஷை யாரிடமிருந்தே வசூலிக்கப்படும்.

26. ஷை கிரய தொகையிலிருந்து செலவாகவேண்டியதுபோக பாக்கித் தொகையிருக்கும்பக்ஷத்தில் சகல செலவுகளுக்கும் ஏற்பட்டதுபோக மீதி தொகையை ஷை பாக்கிதாருக்கே கொடுத்துவிடப்படும்.

---

## பரோபகாரம்.

பர + உபகாரம் = பரோபகாரம். தேடிச்சம்பாதிக்கத் திறமையில்லாத கூன், குருடர், சப்பாணி முதலியவர்களுக்கு அன்னவஸ்திரம் கொடுத்து ஆதரிப்பதே பரோபகாரம். துன்பம் அடைகிறவர்களுக்கு உதவி செய்வதுதான் பரோபகாரம என்பது நன்றாய் விளங்கும். உபகாரமென்பது பொருள் முதலிய சாதனங்களால் மாத்திரம் செய்யப்படுவதன்று. அவையில்லாதவர்களும் பரோபகாரஞ் செய்யலாம. சாக்கையும் ஆமையும் எலியும் மானும் ஒன்றையொன்று காப்பாற்றி வந்தன என்று சுகிர்லாபமென்னும் பகுதியில் வாசித்திருக்கிறோம். கேவலம் பகுத்தறிவில்லாத ஜந்துக்களே இவ்வாறு செய்யக்கூடுமானால் பகுத்தறிவுள்ள மனிதர்கள் தங்களுடைய புத்தியினால் எவ்வளவு செய்யக்கூடுமென்பதைச் சொல்லவும் வேண்டுமோ? வாயால உபகரிப்பதாகிய சக்தி சிலருக்கு உண்டு. தம் கையில் பொருளில்லாவிட்டாலும், பிறருக்கு உபகரிக்கத்தக்க சரீரபலமில்லாமற் போனாலும அவ்விரு வகைச் சக்தியும் உடையாரிடம் கூறி உபகரிக்கச் செய்யலாம். இது அநேகமாய் எல்லாராலுஞ் செய்யக்கூடியதே. பிறர் துன்பங்கண்டபொழுது மனத்தில் இரக்கங்கொண்டு அதனை நீக்க முயலுதலே மனத்தால் செய்யப்படுமுபகாரம். பிற ஜீவனுக்குண்டான துன்பத்தைக் கண்டபொழுது தன் சரீர பலங்கொண்டு அதனை நீக்குதலே காயத்தால் செய்யப்படும் உபகாரமாம். இதனால் மனோவாக்குக்காயங்களாலும் பொருளாலும பரோபகாரஞ்செய்யப்படலாம். ஒவ்வொருவரும் தமக்கு எந்த வகையால் பரோபகாரஞ் செய்யக்கூடுமோ அந்த வகையால் செய்யலாம்.

பரோபகாரமென்பது எல்லாராலும்செய்யத்தக்கதாதலால் யாவரும் தத்தம் சக்திக்கேற்றபடி பரோபகாரத் தொழிலைச் செய்துவரவேண்டும். சகல ஜீவன்களுக்குமுதவுபுரிந்து அவற்றின் துன்பங்களை நீக்குவதே நன்று. மனிதனாய்ப் பிறந்த ஒருவன் தன் சுகத்தை மாத்திரம பெரிதென்று நினைத்திருப்பது கூடாது. அது பகுத்தறிவில்லாத மிருக பக்ஷிகளினியல்பு. பகுத்தறிவுள்ள மனிதனே தன்னைப்போலவே எல்லாச் ஜீவன்களுக்கும் இன்பதுன்ப உணர்ச்சியுண்டென்றுகொண்டு எவற்றுக்கும் துன்பமுண்டாகாதபடி நடந்து உபகாரம்புரியத் தகுந்தவனாகவே கடவுளால சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறான். ஆகலால் தன் நலத்தையுங் கருதாமல் பரோபகாரம் புரிவதையே மேலாக எண்ணவேண்டும். பிறருக்கு உபகாரம் செய்ய மனமில்லாத மனிதன் மற்றவர் தனக்கு உதவிசெய்யவில்லை என்று குறைகூறுவது தப்பு.

"நன்றி ஒருவருக்குச் செய்தக்காலந்நன்றி என்று தருங்கொலெனவேண்டாம்."

தனக்குப் பிரதியுபகாரத்தை எதிர்பாராமல் செய்யப்படும் உபகாரமே பரோபகாரமெனப்படும். சிபிச்சக்கரவர்த்தி ஒரு புறாவைக் காப்பாற்ற நிமித்தம் தன் சரீரத்திலுள்ள சதை முழுவதையும் அறுத்துக்கொடுத்தார். சீதையை மீட்கும்பொருட்டு சடாயுவென்ற கழுகரசன் இராவணனை எதிர்த்து தன் உயிரையிழந்தான். காட்டுத்தீயில விழுந்துவேகிற சர்ப்பத்தை நளமகாராஜா விடுவித்தான் என்று சரித்திரங்களில் வாசித்திருக்கிறோம். இன்னும அளவில்லாத சரித்திரங்களுண்டு. அவற்றையெல்லாம் சொல்லப்புகின் நம் பிரமலை சீர்திருத்தனில் மற்றவர்களெழுதுவதற்கு இடமிராதென்றஞ்சி விடுத்தனன். இப்படித் தமது சுகதுக்கங்களைப்பாராட்டாமலும பிரதியுபகாரத்தை எதிர்பாராமலும் செய்யப்படுவதே பரோபகாரம்.

பிரதியுபகாரத்தை எதிர்பார்த்துச் செய்தால அது கூலிக்கு வேலை செய்வதே தவிர உபகாரமாகமாட்டாது. பரோபகாரமானது இத்தருணத்தில் எவருக்கு எதனைச்செய்தால் அவருக்குச் சுகமுண்டாகுமோ அதைத் தடைபண்ணாமல் உடனே செய்யவேண்டும். அப்படியில்லாமல் தனக்கிஷ்டம்போலச் செய்தால் அது அச்சமயம் அவருக்குப் பயன்படாவிட்டால் அதனால் என்ன பிரயோஜனம்? பசியால் வருந்திக் களைத்திருக்கும் ஒருவனுக்கு கால் வராகனைக் கொடுத்தாலும் அது அத்தருணம பயன்படாததாலால் அது உபகாரமென்று சொல்லப்படாது. வியாதியால் வருந்தும் ஒருவனுக்கு வயிறு நிரம்ப அன்னமிட்டாலும் அது உபயோகப்படமாட்டாது. சேற்றில் புதைந்துவருந்தும் ஒருபசுவுக்கு அத்தருணம் கொள்ளும் பருத்திக்கொட்டையும் வைத்தால் என்ன பயன்? எவன் எத்தருணத்தில் எதனால் வருந்துகிறானோ அதனையுணர்ந்து அதைப் போக்குவதே பரோபகாரம்.

"புழுவெளித்துப்புண்ணழுகி யோசனைநாறும்
கழிமுடை நாற்றத்தவேனும்—விழுவர்
விளிவுனனி மெய்துயிர்ப்பர் மெய்ப்பயன்
கொண்டார்
களியார் சுமை போடுதற்கு"

என்ற நீதிவசனத்தை யுணர்ந்து நிலையற்றழியும சரீரத்தை பொருள்படுத்தாமல் இம்மையிலுண்டாகும் புகழ்ச்சியையும மறுமையிலுண்டாகும் பேரின்ப வாழ்க்கையையுமே பெருமையாகப் பாராட்டி இனன ஜீவனென்றுயோசியாமல் எல்லாமசமமேனவெண்கொண்டு மனதிற்களங்கமில்லாமல் வெறுப்பின்றிச் செய்யப்படுவதே பரோபகாரமாம்.

நாம் எல்லாரும பரோபகாரச் சிந்தையுடையவர்களாயிருந்து ஈசன்திருவருளுக்குப் பாத்திரராக முயலவோமாக.

ஜி. வி. செல்லத்துரை,
நார்மல் ஸ்கூல், பசுமலை.

---

## பணத்தின் உக்கிராணம்.

மனுஷன் தன் உடைமைகளுக்கும் தனக்கும் உள்ள சம்பந்தம் என்ன என்று யோசித்துப்பார்த்தால் இவனுக்கு ஒன்றின்மேலும் சர்வசுதந்தர பாத்தியமில்லையென்றும், இவனுக்குண்டானவையெல்லாம் [illegible] களைச் சிறந்த விதமாய் உபயோகிக்கும்படி நம்பிக்கையின்பேரில் இவனுக்கு ஒப்புவிக்கப்பட்ட சொத்துக்களேயன்றி மற்றப்படியல்லவென்றும் தெரியவரும். ஜீவியத்தின் நோக்கமென்ன? பிறத்தியாருக்குப் பிரயோஜனமாகவும், கடவுளுக்கு மகிமையாகவும் பிழைப்பதே ஜீவியத்தின் நோக்கம். அப்படியானால் நமது உடைமைகளையும் கடவுளுக்கு மகிமையாகவும் பிறத்தியாருக்குப் பிரயோஜனமாகவும் உபயோகிப்பதே அவைகள நமக்குக் கொடுக்கப்பட்டதின் நோக்கமாகும்.

நமது தேகம் அந்த நோக்கத்துக்காகவே நம்மிடம் ஒப்புவிக்கப்பட்ட உடைமை. நமது புத்தி சத்துவம் யாவும் அப்படியே. இடம், பொருள், ஏவலும் அப்படியே. நமக்கு இயற்கையாய்க் கிடைத்த ஐம்புலன்களும், பிள்ளைகளும், குணங்களும அப்படியே நமது உக்கிராணத்தில் ஒப்புவிக்கப்பட்டவர்களே. அதே மாதிரி நமது ஆதீனத்தில் வரும் பணமும் ஷை இருவித நோக்கங்களுக்காக நாம உபயோகப்படுத்தும்படி நம்மிடத்தில் கடவுளால் ஒப்புவிக்கப்படும் நம்பிக்கைப் பொருளேயன்றி மற்றப்படியல்ல. பணத்தைக் குறித்து நமக்குள்ள உக்கிராணத்தை பொறுமையாய் அறியவேண்டும். ஒரு பரிசுத்தவான் கடிகாரத்தில் மணியடிக்கும்போதெல்லாம திடுக்கிட்டெழுந்து, நான் இந்த மணிநேரத்துக்குக் கணக்குக்கொடுக்க வேண்டியவனாயிருக்கிறேனென்று சொல்வாராம். அப்படியானால் நமக்குக் கிடைக்கும் ஒவ்வொரு பைசாவுக்கும் நாம் கடவுளுக்கு ஒப்புவிக்கவேண்டியவர்களாயிருக்கிறோம். மேலும் மனுஷன் நல்ல ஜீவியம செய்கிறானோ அல்லது தப்பிதமான ஜீவியம் செய்கிறானோ வென்பது அவன் கணக்கினால் விளங்கும். பணத்தைப்பற்றி அவன் கொண்டிருக்கும் அபிப்பிராயத்திலும் பணத்தைச் சேகரிப்பதிலும், அதைச் செலவழிப்பதிலும், பணம் மிச்சப்படுத்துவதிலும் அதை விர்த்திபண்ணுவதிலும், அது விஷயத்தில் கொடுக்கல் வாங்கல செய்வதிலும் ஒரு மனுஷனுடைய நடக்கைகள் நன்னடக்கையோ அல்லது தப்பிதமான நடக்கையோ வென்பது விளங்கும். மற்றநேக விஷயத்தில் அவன் நமக்கு நல்லவனாகத் தெரிவான், ஆனால் அவன் உள்ளான ஜீவியத்தை நமக்குக்காட்டும் உரைகல் பணமே. இந்தக் கல்லில் அவனைத்தேய்த்து உரைத்துப்பார்த்தால், அவன் பித்தளையோ, வெள்ளியோ, அழுக்குச் சேர்ந்த பொன்னோ அல்லது சுத்தத் தங்கமோ வென்பது இந்தப் பரீட்சையில் தெரியவரும்.

இன்னும் பணமானது மனுஷனை நல்லவனாக்கும் அல்லது அவனைப் பொல்லாதவனாக்கும். அதை அவன் ஆட்கொண்டு நல்லவழியில் உபயோகிப்படுத்தினால் அதினால அவன் நல்லவன் ஆவான். ஆனால் அவன் அதை ஆளாமல் பணம் அவனை ஆளவிட்டால் பணத்தினால் பொல்லாதவனாவான்.

ஒப்பாரும் நற்குணக்கள்... [illegible] கொலைகளவை, அப்பனாய் மேயர்கட்கும் பகை விளைக்கும் உபதேசிக்கும் சத்துருவாய் அலைத்துற்ற செப்பரிய துயர்க்கெல்லாம் மாதாவாய் தீவினைக்கோர் செவித்தாயாம், இப்பொருளை நற்பொருளென்றெப்படி நீயியம்புகின்றாய் இதயப்பேயே.

ஒப்பில்லாத நற்குணசாலிகளுக்கும் இந்தப்பணமானது குடிவெறியையும காமதுரமான நடத்தையையும் கொலையையும் களவையும் போதிக்கிற அப்பனும், சிநேகிதர்க்குள் பகையை உண்டாக்கும் சத்துருவாம், இந்த பூலோகத்தில் உள்ள சொல்லரிய துயரங்களுக்கெல்லாம் இந்தப் பணம்தான் தாயாகுமாம். தீவினைகளை ஊட்டி வளர்க்கிற ஆயாளாகும். இது இப்படிப்பட்ட பொருளென்று நீ எப்படிச் சொல்வாய் என் இருதயமாகிய பேயே, என்று புலவர் பாடினார்.

ஒருவன் பண ஆசைகொண்டு பணத்தைச் சேர்த்து பணத்தின்மேல் நம்பிக்கை வைத்து பணத்துக்கு அடிமையாகிப் பணம் பரவும் இடங்களில அதைப் பாயவிட்டால் மெய்யாகவே அந்தப்பணம் மேல்சொன்ன தீவினைகளை உண்டாக்கும். ஆனால் பொருளாசைக்கு ஆளாகாமல் சேர்ந்த பணத்தின் மேல் இருதயத்தை வைக்காமல் பணத்தை ஆட்கொண்டு நல்விஷயங்களில் அப்பணத்தைச் செலவிடுபவர்கள் ஷை பணத்தால் நல்லவர்கள் ஆவார்கள்.

ஓ சேஷ்டை செய்கிற என் மனமாகிய குரங்கே, இந்தப் பொருளானது அதை வைத்திருக்கிறவனை கண்ணிருந்தும் அவன் மனுஷரை மதிக்காதபடி அவனைக் குருடனாக்கும். காதிருந்தும் ஏழையின் சத்தம் ஏறாதபடி அவனைச் செவிடனாக்கும். குறை

வில்லாத நல்ல வாயிருந்தும் பேசக்கூடாத பெருமையையுண்டாக்கி அவனை ஊமையனாக்கிவிடும். மதியிருந்தும் மதியில்லாதவனாக்கிவிடும். வளர்ந்த கால் கைகளுமுடையவனாயிருந்தாலும் எழுந்துபோய் சகலக்காரியம் செய்யாதபடி இந்தப் பணம் அவனை முடவனாக்கும். உயிரிருந்தும் செத்தவனாக்கிவிடும். அப்படியாக்குகிற இந்தத் தனத்தை பெரிய ஆதாரமென்று நினைத்தாயே என்சொல்வேனென்பதுபற்றி இப்படி புலவர் பகைக்கிறவரும் இருதயத்தோதண்டையைச் சொல்லுகிறார்.

பணத்தினால் வரும் கெடுதியைப்பார்த்துத்தான் தரித்திரர் பாக்கியர் என்று ரக்ஷகர் சொன்னார். தரித்திரத்தில் ஐசுவரியமுண்டு. ஆகையினால் பணம் நமது சர்வசுதந்தர பாக்கியதுக்கென்று கொடுக்கப்படாமல் நியாயமாய் செலவழிக்க நம்பிக்கையின்மேல் நமது உக்கிராணப் பொறுப்பில் ஒப்புவிக்கப்பட்ட சொத்து என்பதை நாம் நினைக்கவேண்டும். தேசத்திலே ஒப்புவிக்கப்பட்ட பொருளைக் குறித்து ஒருவன் நம்பிக்கை மோசம் செய்தால் அது இந்தியன் பினல்கோடு 406-வது செக்ஷன்படி தண்டிக்கப்படக்கூடிய குற்றமாகும். எழுதப்படாத தெய்வ சட்டத்தின்படி கடவுள் நம்மிடம் ஒப்புவித்த பணத்தில் ஒரு காசுக்கா [illegible] நம்பிக்கை மோசம் செய்தால் அது கடவுள் தீர்ப்புச்செய்யும் குற்றமாகாதா? பணத்தைப்பற்றிய நமது உக்கிராணப் பொறுப்பை நிறைவேற்ற வேண்டுமானால் அடியிற்கண்ட காரியங்களைச் செய்யவேண்டும்.

(1) செலவழிக்கும் ஒவ்வொரு காசுக்கும் கணக்கெழுதி வைக்கவேண்டும். அநேகர் சோம்பலாய் கணக்கு வைக்கிறதில்லை. கணக்கு வைத்தால்தான் நமது பணநிலைமை நமக்குப் புரியும்.

(2) ஒவ்வொரு காசையும் அதினால் எவ்வளவு அதிகமான பிரயோஜனம் வரக்கூடியதோ அவ்வளவும் வரத்தக்க விதமாய்ச் செலவழிக்கவேண்டும். ஒரு ரூபாய்போட்டு அரை ரூபாய் பிரயோஜனமுள்ள பொருளை வாங்காதே. அப்படிப்பட்ட வேலைகளையும் செய்யாதே.

(3) எவ்வளவு சிறிய தொகையானாலும் அதைச் செலவிடும்போது ஜெபத்துடன் செலவுசெய்து கர்த்தருடைய மகிமையுண்டாகும்படி ஜெபம் செய்.

(4) தர்மம் செய்யும்போது பாத்திரமறிந்து தர்மம் செய்யவேண்டும். சும்மா அள்ளியெறியக்கூடாது. கோவில்கட்ட தர்மப்பணம் கேட்க நோட்டுப்புஸ்தகம் எடுத்துக்கொண்டு இரண்டுபேர் ஒரு துரையிடம் போனபோது ஒரு விளக்கைக் கொளுத்துவதற்கு காலைத் தீக்குச்சியைச் செலவழித்த தமது வேலைக்காரனை அந்த துரை அடித்ததைக்கண்டு இப்படிப்பட்ட லோபி கோவில்கட்ட என்ன கொடுக்கப்போகிறார் என்று அதைரியமாகி அவரிடம் நோட்டுப் புஸ்தகத்தைக்காட்டாமல் திரும்பிவிட்டார்கள். அவர்களிலொருவர் இந்தத் துரையைக்கேட்கவேண்டியது நமது கடமையல்லவா? என்று சொன்னதின்மேல் இருவரும் திரும்பி அந்தத் துரையிடம்போய் நோட்டுப் புஸ்தகத்தைக் காட்டினபோது அவர்கள் ஆச்சரியப்படத்தக்க விதமாய் பெரிய தொகை எழுதி அந்தத் தொகையைச் செலுத்தினாராம்.

(5) பிறருக்குபகாரமாகவும், கர்த்தருக்கு மகிமையாகவும் செலவழிக்கவேண்டிய செலவுகளிருக்க அவைகளைச் செய்யாமல் விடாதே.

(6) பணத்தை மிச்சப்படுத்தாதே. உக்கிராணக்காரன் பணம் சம்பாதித்துக்கொண்டிருக்கவும் அதைச் செலவழித்துக்கொண்டிருக்கவும் வேண்டும்.

(தொடரும்.)

V. K. சவரிட்தேவர்,

சங்கராபுரம்.

## பெண்கள் படிப்பது சம்பிரதாயமே.

பெண்கள் படிப்பது சம்பிரதாயம் அல்லவென்றும் அவர்கள் சமையல்வேலையைத் தவிர மற்றவேலைகளைச் செய்வதற்கு உரியவர்கள் அல்லவென்றும் நம்மவர்களில் முதிர்ந்த பெரியோர்கள் சொல்லுகிறார்கள். இது எதற்கு ஒக்குமென்றால், நிர்வாணப்பட்டணத்திலே சீர்ச்சீலை கட்டினவன் பயித்தியக்காரன்போலும். அங்கொருவரும் இங்கொருவருமாக அத்திபூத்ததுபோல் ஏகதேசம் சிற்சிலரே படித்திருப்பதனால் பெண்கள் படிப்பது சம்பிரதாயமல்லவென்று இவர்கள் சொல்லுகிறார்கள்போலும். ஆசியா, அமெரிக்கா, ஐரோப்பா என்னப்பட்ட இந்தப் பூமியின் பஞ்சமகா கண்டங்களிலுமுள்ள சீர்திருத்தமான ஜாதியார்களில் படியாத பெண்கள் யாரிருக்கிறார்கள்? அமெரிக்காக் கண்டத்திலே பெண்கள் கவித்துவம்செய்தும் இன்னும் மற்றதொழில் செய்தும், பெருமையோடு வாழ்கின்றார்கள். ஐரோப்பா கண்டத்திலும் அப்படியே. ஆனால் பெண்களுக்கு ஆன்மா இல்லை. அவர்கள் போகவஸ்து என்று கருதியுள்ள மகமதியர்களும் இந்துக்களில் நாகரீகமில்லாத முதுவயதுடையவர்களுமே பெண்களைப் படிப்பிப்பது கௌரவத்தாழ்வாக எண்ணுகிறார்கள். நம்மவர்களில் ராஜ ராஜாக்களும் முன்னாளில் தங்கள் பெண்களைப் படிப்பித்துவந்திருக்க நாம் பெண்களைப் படிப்பிப்பது தப்பிதம என்று எப்படிச் சொல்லலாம்? ஸமஸ்கிருதம், தமிழ், தெலுங்கு, மாராஸ்டாம், கன்னடம் முதலிய இவ்வைந்து தேசபாஷைகளில் ஒவ்வொன்றிலும் பாண்டித்தியமுடைய பெண்கள் இருந்தார்கள். இன்னுமிருக்கிறார்கள். உதாரணமாக சரோஜினியம்மாள், அனிபெஸண்டம்மை முதலியவர்கள். ஒரு பானை சோற்றிற்கு ஒரு சோறு பதம் பார்ப்பதுபோல சமஸ்கிருத பாஷாத்திறமையுடைய ஓர் இராஜபுத்திரியின் சரித்திரத்தைச் சுருக்கமாகச் சொல்லுகிறேன்.

இந்த இந்துதேசத்தில் காஞ்சனகிரிக்கு வடதிசையிலேயுள்ள பாஞ்சாலமென்னும் நாட்டிலே இலட்சுமி மந்திரமென்னும் பட்டணத்திலே மதனபிராம மகாராஜனென்னப்பட்ட ஓர் அரசனிருந்தார். இந்த ராஜன் மனைவியாகிய மந்தாரமாலையென்பவள் வயிற்றிலே யாமிகூபூரணதிலகை யென்றொரு பெண் குழந்தை பிறந்தது. அக்குழந்தைக்குச் சகல கல்விகளையும் பயிற்றுவித்து வரும்போது அந்தப் பெண் கல்வியில் மிகுந்த சாமர்த்தியமடைந்து அநேக காவியங்களையும் இயற்றி புகழ் வாய்ந்திருக்கும்போது பெண்கள் படிப்பது உசிதமல்லவென்று சொல்வது எப்படி?

அந்தக் காலத்திலே அவ்வளவு தேர்ச்சி அடைந்திருக்கும்போது இந்தக் காலத்திலே நமக்குக் காருண்யக் கவர்ன்மெண்டார் எவ்வளவோ நன்மை கல்வி விஷயமாகப் புரிந்து வரும்போது படிப்பில் பிரியமில்லாதிருப்பதேன். சாப்பிடச்சொன்னால் அது விஷம் எனக்கு வேண்டாமென்று சொல்வதையொக்கும். காற்றுள்ளபோதே தூற்றிக்கொள் என்ற பழமொழிக்கிணங்க நாமும் இந்த நல்ல காலத்திலே இந்திரகுலாதிபராகிய ஒவ்வொருவரும் ஆண் பெண் குழந்தைகளைத் தவறாது பாடசாலைக்கனுப்பிவைத்து முன்னுக்கு வருமாறு மிகவும் தாழ்மையுடன் மன்றாடிக்கேட்டுக்கொள்கிறேன். இதற்கு எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிவாராக.

இப்படிக்குத் தங்களன்புள்ள

M. தவசி தேவதாஸ் உபாத்தியாயர்

ஸி. எஸ். எம். பாடசாலை

தர்மத்துப்பட்டி.

## பழனி தாலுகா—கிருஷ்ணபுரம் புதுப்பள்ளிக்கூடப் பிரவேச கொண்டாட்டம்.

இவ்வூரில் கள்ளர் பள்ளிக்கூடம் 21-3-24 தேதி முதல் நடந்தேறி வருகிறது. நாளது தேதி வரையிலும் பள்ளிக்கூடம் வைப்பதற்கு தகுதியான இடம் இல்லாமல் இவ்வூர் கள்ளர் பஞ்சாயத்து மெம்பர் ச. பெருமாள்த் தேவரின் உதவியினால் அவருடைய வீட்டிலேயே நடந்தேறி வந்தது. இப்படியிருக்க மகா-ா-ா-ஸ்ரீ கள்ளர் ஸ்பெஷல் சூபரண்டு துரையவர்கள் சென்ற வருஷம் பழனிக்கு விஜயம் செய்தபோது, இவ்வூராரின் உற்சாகத்தை கவனித்து இவ்வூரை முன்னேற்றமாக்கி, ஊருக்கு வடபுறத்தில நத்தம புறம்போக்கு நிலத்தில் 34×16 அடியுள்ள கெட்டிக்கட்டிடம் ஒன்று கட்டும்படி உத்தரவுசெய்து அதற்காக காருண்ய கவர்ன்மெண்டாரின் உதவியைக்கொண்டு ரூ. 400 டண உதவி செய்ததிலிருந்து இவ்வூர் பஞ்சாயத்தார்களும் கள்ளர்களும் ரூ. 600 வரை செலவுசெய்து,



ஆக ரூ. 1000 பெறக்கூடிய கெட்டிக்கட்டிடம் ஒன்று கட்டி முடிக்கப்பட்டது.

இவ்வூர் கள்ளர் பஞ்சாயத்தார்களின் வேண்டுகோளின்படி, மகா-ா-ா-ஸ்ரீ கள்ளர் ஸ்பெஷல் சூப்பிரண்டெண்டு K.S. ஜனார்த்தனராவ் துரையவர்களும், திண்டுக்கல் மகா-ா-ா-ஸ்ரீ அஸிஸ்டெண்டு சூப்பிரண்டெண்டு T. பகதூர் சிங் துரையவர்களும், திண்டுக்கல் சப் கலெக்டர் துரை மகா-ா-ா-ஸ்ரீ P. N. ருமசாமி அய்யரவர்களும், திண்டுக்கல் இன்கம்டாக்ஸ் ஆபீசர் மகா-ா-ா-ஸ்ரீ ஸ்டீபனஸ் அவர்களும், பழனி தாலுகா போர்டு வைஸ் பிரஸிடெண்டு மகா-ா-ா-ஸ்ரீ முத்துச்சாமி முதலியார் அவர்களும், கள்ளர் ஸ்பெஷல் இன்ஸ்பெக்டர் மகா-ா-ா-ஸ்ரீ R. கோவிந்தய்யரவர்களும், மேற்படி வைபவத்தை சிறப்பிக்க 29-5-26 தேதி சாயந்தரம் 6 மணிக்கு பிராப்தமானார்கள்.

[illegible] கூட்டம் மகா-ா-ா-ஸ்ரீ கனம் சப் கலெக்டர் துரையவர்களின் அக்கிராசனத்தின்கீழ் நடைபெறப்பட்டது. அக்கிராசனாதிபதியவர்களுக்கும், மற்ற ஆபீஸர்களுக்கும், புஷ்பமாலை அளிக்கப்பட்டது.

இவ்வூர் கள்ளர் பாடசாலை உபாத்தியாயர் கிருஷ்ணசாமி நாயுடுவால் வரவேற்புப் பத்திரம் வாசிக்கப்பட்டது.

அக்கிராசனாதிபதியவர்களால் புதுக்கட்டிடம் திறக்கப்பட்டது.

கள்ளர் சிறுவர் சிறுமிகளால் வந்தனப் பாட்டுகள் படிக்கப்பட்டன. இரண்டு கள்ளர் சிறுமிகளால் ஒரு சிறிய சம்பாஷணை நடத்தப்பட்டது. அக்கிராசனாதிபதியவர்கள் கல்வி முன்னேற்றத்தைபற்றி ஒரு சிறு பிரசங்கம் செய்தார். அது மிகவும் உற்சாகத்தைக் கொடுத்தது. சிறுவர், சிறுமிகளுக்கு சிற்றுண்டியும், பெரியோர்களுக்கு தாம்பூலங்களும், சந்தனமும் பரிமாறப்பட்டன. மீட்டிங் 7 மணிக்கு எல்லாம் வெகு விமரிசையாக நடந்தேறி ராஜவாழ்த்துடன் முடிவேறியது.

கிருஷ்ணசாமிநாயுடு,

கிருஷ்ணபுரமகள்ளர்ஸ்கூல் உபாத்தியாயர்.

## சம்பாஷணை.

மூக்கத்தேவன்:— எது இங்கே தோரணங்கள்கட்டி தடபுடலாயிருக்கு

பள்ளிக்கூடத்து பையன் குரும்பன்:—நல்லாசொன்னையா, உங்கள் ஊரிலே பள்ளிக்கூடமிருக்கா?

மூக்:— எனக்கேதப்பா இதெல்லாம் என் வேலையைபாத்துக்கிட்டு உழுதிட்டுவந்து கஞ்சிதண்ணியைகுடிச்சிட்டு ஒரு மூலேலே முடங்கிறவன், இங்கே தடபுடலாயிருக்கின்னல்லவோ கேட்டேன்; இல்லாட்டா சும்மா போறவன்தானே நானு.

பையன்:— இது பள்ளிக்கூடமென்று உனக்குதெரியாதா, உங்கள் ஊரில் பள்ளிக்கூடம் உண்டா?

மூக்:— பள்ளிக்கூடமேதுக்கு, எங்கபிள்ளைக ஆட்டுக்குட்டியை மேச்சா போதாதா, கமலெ ஏரச்சா காணுதா?

பை:— படிக்கிறது நல்லதா? ஆட்டுக்குட்டி மேய்க்கிறது நல்லதா? சொல்லு

மூக்:— படிச்சா என்னகிடைக்குது, பொழுதெல்லாம் வாத்தியான்கிட்டே உக்காந்துக்கிட்டு வீட்டிலே சாப்பிட்டுக்கிட்டு வேலையைப்பாராமே.

பை:— நல்லது உபாத்தியாயர் கற்பிப்பதும் பையன் வீட்டில் சாப்பிடுவதும் கஷ்டமாயிருக்கிறதோ உமக்கு.

மூக்:— இல்லேடப்பா சோத்தைதிண்ணு சம்பாதிச்சுக்கிட்டல்லவாணும், சோத்தையும் திண்ணுவிட்டு அவனுக்கும் அழுதிட்டாவாரது, ஆட்டைமேச்சா பருக்கும், மெத்த விலைக்கு விக்கலாம், புளுக்கை எருவாகும், பாலை விக்கலாம், குட்டிகொழுத்தா மெத்தவிலைபோகும், இதெல்லாம் விட்டு வட்டுப்பையைத் தூக்கிக்கிட்டு போரதிலெ என்னலாபம்?

பை:— ஏன்ஐயா உமக்கு கடுதாசி எழுதத்தெரியுமா?

மூக்:—ஏன்ஐயா தெரியணுமொ? கணக்குப்பிள்ளை அல்லது நாட்டாமெக்காரங்கிட்டேச்சொன்னு எழுதிட்டுப்போருன்.

பை:— அவர் ஊரில் இல்லையானால் யார் எழுதுவார்கள்?

மூக்:— இல்லாட்டா வேறு ஊரு கணக்குப்பிள்ளைக்கிட்டே போனு எழுதித்தாரான்.

பை:—ஐயா ஒரு நோட்டு எழுதவேண்டும், அதற்கு என்னசெய்வீர்?

மூ:— அதற்கும் அந்தக்கணக்குப் பிள்ளை அல்லது நாட்டாமைக்காரன்தான்.

பை:— அவர் பொய்யாக எழுதிவிட்டால் என்ன செய்வது?

மூ:—வேறு ஆளுக்கிட்ட படிச்சுப்பாக்கச் சொல்லமாட்டனு?

பை:— அவர்களும் ஒரு கையாக இருந்தால் அப்போ?

மூ:— அப்போ போனதுதான்.

பை:—நீர் படித்திருந்தால் மோசம் போகமாட்டீரே.

மூ:—அப்போ என்னத்துக்கு மோசம்போரேன்

பை:— அப்போ படிப்பு நல்லதுதானே?

மூ:— அது யாரு இல்லெண்ணுவா? படிக்கத்தான்வேணும், படிக்காதனாலேதான் இந்தக்கதியாயிருக்கிறேன்.

பை:— என்ன உம்முடையகதி?

மூ:— 2 வருஷத்துக்கு முன்னே எங்கப்பன் எங்க நிலத்தை பட்டாபண்ணுமே விட்டுட்டான், அப்போ வித்தவனே என்னுதுங்கரான்.

பை:— பத்திரம் சிஜி தா ஆகவில்லையோ?

மூ:— ரெஸ்தரா? அதென்னடப்பாது, எது இந்தப்பையன் ரொம்பபேசுரான்.

பை:—இதெல்லாம் நாங்கள் படித்திருக்கிறோம். உம்மைப்போல் மோசம் போகமாட்டோம்.

மூ:— அப்படியின்னு படிப்பு ஒரு விசயத்துக்கு நல்லதுதான்.

பை:— எந்தவிஷயத்தில் படிப்புகெடுதி?

மூ:— இல்லேடப்பா படிச்சா பவுசுவந்துருது, ஊரைவிட்டு ஓடிப்போரான், வேலை தேடிக்கிட்டு வேலைசெய்யமாட்டான்.

பை:— அது ஏனையா எங்கள் உபாத்தியாயர் பெரியவர்களைக் கண்டால் வணங்கவும் தொழில் வேலைகளைக் கைவிடப்படாதென்றும் சொல்லுகிறார், ஊரைவிட்டு வேறு ஊரு போய் சம்பாதித்தால் நல்லதுதானே ஐயா, அதிலென்னகெடுதி வீட்டில் கஞ்சியில்லாமல் அழுகிறதைவிட "திரைகடலோடியும் திரவியந்தேடு" என்று ஔவை சொற்படி நல்ல சம்பாத்தியம் செய்தால் நல்லதுதானே.

மூ:—எதுடப்பா என்னென்னமொ சொல்லுரெ, படிப்பு நல்லதுதாண்டப்பா படிக்காதது கெட்டதுதாண்டப்பா இங்கே நடக்கிற சங்கதி என்ன சொல்லே.

பை:— இன்று நாங்கள் புதுப்பள்ளிக்கூடத்துக்கு வந்திருக்கிறோம், தோரணங்கள் கட்டியிருக்கிறார்கள், இன்ஸ்பெக்டர் கொஞ்சநேரத்தில் வருவார், ரோட்டு இன்னும் போடவில்லை, கூடியசீக்கிரம் பஞ்சாயத்து குரும்பத்தேவர் போட்டுவிடுவார்.

மூ:— ஏதப்பா ரொம்ப படித்தவன்போலிருக்கே?

பை:—எல்லாம் எங்கள் உபாத்தியாயரின் ஆசீர்வாதம்தான்.

மூ:— எத்தனை வாத்திமாருக ஒங்கபள்ளிக்கூடத்திலே இருக்கிருக?

பை:— இரண்டு உபாத்தியாயர்கள், அதில் தலைமை உபாத்தியாயர் பெரிய பாஸ்பண்ணினவர், மற்றவர் உள்ளூர் உபாத்தியாயர் முத்துவேலுப்பிள்ளை

மூ:— அந்தப்பாசு வாங்கினு எவ்வளவு வெரகு வெட்டலாமப்பா? அது எங்கே கொடுக்கிறார்?

பை:— பாஸ்பண்ணினவரென்றால் பெரியபடிப்பு வாசித்தவரென்று அர்த்தம்.

மூ:—எவ்வளவு பையன்க படிக்கிருக?

பை:— 48 பையன்களும் 2 பெண்களும் படிக்கிறார்கள்

மூ:—பொம்பிளெகூடப்படிக்கிறது எது, அச்சயவருஷகலியுகமாயிருக்குது. சட்டி சாண்டி சவளுக்கு படிப்பேதுக்குடப்பா?

பை:— படித்தால் காரியங்கள் பார்ப்பாள், குழந்தைகளை நன்றாய் வளர்ப்பாள், படிப்பு சொல்லிக்கொடுப்பாள், கணக்கில் ஏமாறமாட்டாள்.

மூ:— படிச்சவளைக் கட்டிக்கிட்டா நல்லது, நான் ஒரு கழுதையைக் கட்டிக்கிட்டல்ல அழுரென், கால்ரூபாயை கொடுத்து மூக்காத்தட்டுக்கு வெத்தலெ வாங்கிட்டு மீதி கொண்டுவாண்ணு முக்காத்துட்டுதாரா.

பை:— அப்போ பெண்படிப்பு நல்லது தானே?

மூ:— அது ஆரையா இல்லேண்ணுவா, உங்கபள்ளிக்கூடம் எப்போ கட்டுனுக?

பை: இப்போதுதான் 1 மாதமாகிறது, வேலைமுடிந்து மோட்டுத்தகரம் போடவில்லை, பஞ்சாயத்து குரும்பத்தேவன் கெடுதியால் மழை வந்தால் பள்ளிக்கூடம் விடவேண்டியிருக்கிறது.

மூ:— ஆமப்பா நீங்க அதிகாரிக்கு என் சொல்லல்லே.

பை:— நாம் என்ன செய்வது, உபாத்தியாரல்லவோ தெரியப்படுத்தவேண்டும்.

மூ:—சம்பளம் யார் கொடுப்பா?

பை:— சர்க்கார் சம்பளம். எங்களுக்கெல்லாம் இலவசப் படிப்பு. மகா-ள-ள-ஸ்ரீ கனம் கள்ளர் ஸ்பெஷல் சூப்பிரண்டு துரையவர்கள் ஆபீஸிலிருந்து மாதாமாதம் உபாத்தியாயருக்குவருகிறது.

மூ:—அப்படியானு நல்லதையா, புண்ணியவான்கள் இப்படியல்ல இருக்கணும் யாரோவர்ரா வெளியே போறேன்.

பை:— இதையெல்லாம் பார்த்து விட்டு உங்கள் ஊருக்குப் போய் நீரும் ஒரு பள்ளிக்கூடம் ஏற்படுத்தும்.

மூ:— நல்லதப்பா, சந்தோசம், அப்படியெசெய்யுறேன். நான் ஊருக்குப்போய் நாட்டாமைக்காரன் கணக்கப்பிள்ளெ கிட்டெ சொல்லி கூட்டங்கூடி கட்டாயமா ஏற்பாடு செய்யுறேன், பொயிட்டுவாரணப்பா.

பை:— நல்லது போய் வாருங்கள்.

S. Rama Rao,
Head Mas er, Kallar School,
\ Ilayammalpuram.

---

பயிர் உழவுக்கு என்று தென்னாற்காடு ஜில்லா நெலலிக்குப்பத்துக்கடுத்த பாலூர் விவசாயப்பண்ணையிலிருந்து வாங்கிக்கொண்டுபோகும் முள் பலுவின் அநுகூலத்தைப்பற்றி குடியானவர்கள் என்ன சோல்லுகிறார்கள்.

"முள்பலுவும் அதன் உபயோகங்களும்". என்னும் துண்டு பத்திரிகை சென்னை விவசாய டிபார்ட்மென்டாரால் 1909-ம்ஹு த்தில் வெளியிடப்பட்டிருக்கிறது. முள் பலுவை தென்னாற்காடு ஜில்லா நெல்லிக்குப்பத்துக்கு அடுத்த பாலூர் விவசாயப்பண்ணையிலிருந்து வாங்கி அநேக குடியானவாகள் உபயோகித்திருக்கிறார்கள் அதைப் பார்த்து பலர் தாங்களே செய்துகொண்டுமிருக்கிறார்கள் முள்பலுவின் அநுகூலங்களை மற்றவர்களும் அதை அறிய அதை உபயோகப்படுத்திய குடியானவர்களில் சிலருடைய அபிப்பிராயங்கள் கீழே விவரிக்கப்பட்டிருக்கிறது:—

I. தென்னாற்காடு ஜில்லா விழுப்புரம் தாலூகா தேட்டவலம் மிராசுதார் ம-ள-ள-ஸ்ரீ கிருஷ்ணசாமி ராஜா எழுதியது.

"(i) உழுத நிலங்களில் உள்ள அருகு முதலிய வேர்களையும், களைகளையும் ஆள்களைக்கொண்டு களைந்து நிலம் சுத்தம் செய்யும் செலவுக்கு குறைந்த செலவில் விசேஷ நிலங்கள் சீக்கிரத்தில் இந்த கருவியை உபயோகிக்க வேலை முடிகிறது.

(ii) விதைப்பு முடிந்தவுடன் தற்செயலாய் மழைபெய்து மேல்மண் இறுகி முளை வெளிவர தடைபடும் சந்தாப்பத்தில் இக் கருவியை உபயோகிக்க கம்மல் உடைக்கப்பட்டு முளை நன்றாய் வருகிறது.

(iii) புஞ்சை அல்லது மணல்பாங்கான நஞ்சை நிலங்களில் கம்பு, கேழ்வரகு, சோளம், புழுதிநெல் முதலிய பயிர்களை வெட்டுவதற்கும் உறைந்த மண்ணை நெகிழவைக்கவும் அதிக ஆள்களைக்கொண்டு வேலை செய்வதற்குப் பதிலாக இக் கருவியைக்கொண்டு மேல்கண்ட வேலைகள் சொற்பசெலவில் அதிக நிலங்கள் தருந்த காலத்தில் சீக்கிரம் திருப்திகரமாய் வேலை முடிகிறது. இவ்வூரில் அதிக மாசூல் எடுக்க செவ்வையாய் பயிர்செய்யும் சில குடிகள் அடிக்கடி கருவியை வாங்கிப்போய் உபயோகித்து அதனால் நன்மை அடைவதாய் தெரிவிக்கிறார்கள்."

II. தென்னாற்காடு ஜில்லா திருக்கோவிலூர் தாலூகா அரசங்குப்பம் கிராமம் ம-ள-ள-ஸ்ரீ ராமசாமி நயினார் எழுதியது.

"தங்களிடமிருந்து என்னால் வாங்கப்பட்ட பலுவை நான் கம்பு, தெனை, கேழ்வரகு, வரகு, சோளம், அவுரி, புழுதிநெல் இதுகளை தக்க காலத்தில் பயிர் அடித்ததில் பயிருக்கு ரொம்ப அநுகூலமாய் களைவெட்டவும் ஆள்கூலி விரயமில்லாமல் முடிகிறது. இதன் குணத்தையும் செலவு மீதியையும் கண்ட பக்க கிராமங்கள் குடிகள் பலுவை கொண்டு போய் உபயோகப்படுத்துகிறார்கள்."

III. தென்னாற்காடு ஜில்லா விழுப்புரம் தாலூகா பாக்கம் கிராமம் ம-ள-ள-ஸ்ரீ தம்புசாமி ரெட்டியார் எழுதியது.

"விவசாயப்பணணையிலிருந்து முள்பலுவு நாலு வாங்கிப்போயிருக்கிறோம். எங்கள் ஊரார இந்த பலுவினுடைய அநுகூலத்தைப் பார்த்து நாங்களே 10 பலுவு செய்திருக்கிறோம். ஒரு ஏக்காவுக்கு களையில் ரூ. 5 அநுகூலம் இருக்கிறது."

IV. தென்னார்காடு ஜில்லா விழுப்புரம் தாலூகா சொரப்பூர் கிராமம் ம-ள-ள-ஸ்ரீ இராமச்சந்திர ரெட்டியார் எழுதியது.

"முள்பலுவானது ஏக்கர் 1க்கு 40 களை வெட்டிகளால் வெட்டக்கூடிய களையை நல்ல பதத்தில் பலுவினால் இரண்டுதடவை ஓட்டிவிட்டால் 20 பேரால் வெட்டிமுடிக்கலாம் என்று தெளிவாய் தெரிகிறது."

V. வட ஆற்காடு ஜில்லா திருப்பத்தூர் C டிவிஷன் ம-ள-ள-ஸ்ரீ முனுசாமிபிள்ளை எழுதியது.

"முள்பலுவின் அநுகூலங்களினால் இவ்வருஷம் அதிக பலனை அடைந்திருக்கிறோம்."

பயிரில் அதிக குணத்தையும் செலவில் அதிக குறைவையும் தரக்கூடிய முள்பலுவின் விலை ரயில்சார்ஜ் அன்றியில் ரூ. 7 ஆகிறது. தென்னாற்காடு ஜில்லா நெல்லிகுப்பத்துக்கு அடுத்த பாலூர் விவசாயப்பண்ணை மானேஜர் அவர்களுக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம். முள்பலுவின் உபயோகங்களைப்பற்றிய பிரசுரம் வேண்டுபவர்களுக்கு இனமாக அனுப்பப்படும்.

---

## பஞ்சாங்கம்.

### 1926ஹு—ஜூலைமீ

● அமாவாசை ○ பௌர்ணமி * கிருத்திகை

| வாரம் | தேதி | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஞாயிறு | … | 4 | 11 | 18 | ○25 | … |
| திங்கள் | … | 5 | 12 | 19 | 26 | … |
| செவ் | … | *6 | 13 | 20 | 27 | … |
| புதன் | … | 7 | 14 | 21 | 28 | … |
| வியா | 1 | 8 | 15 | 22 | 29 | … |
| வெள் | 2 | ●9 | 16 | 23 | 30 | … |
| சனி | 3 | 10 | 17 | 24 | 31 | … |

| வாரம் | அக்ஷய-ஹு ஆனி 17உ ஆடி 16உ | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஞாயிறு | … | 20 | 27 | 3 | ○10 | … |
| திங்கள் | … | 21 | 28 | 4 | 11 | … |
| செவ் | … | *22 | 29 | 5 | 12 | … |
| புதன் | … | 23 | 30 | 6 | 13 | … |
| வியா | 17 | 24 | 31 | 7 | 14 | … |
| வெள்ளி | 18 | ●25 | 1 | 8 | 15 | … |
| சனி | 19 | 26 | 2 | 9 | 16 | … |



திருமங்கலம் ரேஞ்சு சூப்பர்வைசர் அவர்கள் ஆதீனத்திற்குள்ப்பட்ட கள்ளர் பள்ளிக்கூடங்கள் எல்லாம் கீழ்க்கண்டபடி ஒவ்வொரு மாதத்து 5 தேதிக்குள் மாதாந்திர கணக்கு அனுப்பும்படியாக தெரிவிக்கப்படுகிறது. தவறினால் சூப்பிரண்டுதுரை அவர்களுக்கு ரிப்போர்ட்டு செய்து கண்டிப்பான நடவடிக்கைகள் எடுக்கப்படும். இந்தக் கணக்கு ஏப்ரல்மீ முதல் தயாரித்து மேமீ 5உக்குள் ஒழுங்காய் மாதா மாதம் நமக்கு அனுப்புதல் வேண்டும்.

### RETURN No. 1.

| | Std. 1 A.B. | Std. 2 A.B. | Std. 3 A.B. | Std. 4 A.B. | Std. 5 A.B. |
|---|---|---|---|---|---|
| 1. முந்திய மாதத்தின் கடைசி தேதியிலுள்ள பிள்ளைகளின் சங்கியை | | | | | |
| 2. பின்பு சேர்க்கப்பட்டவர்களின் சங்கியை. | | | | | |
| 3. பின்பு விட்டுவிட்டவர்களின் சங்கியை. | | | | | |
| 4. நாளது மாதத்தில் கடாசி தேதியிலுள்ள பிள்ளைகளின் சங்கியை. | | | | | |
| 5. கணக்கிலுள்ளவர்களில் சராசரிசங்கியை. | | | | | |
| 6. ஆஜரான பிள்ளைகளின் சராசரிசங்கியை. | | | | | |
| 7. ஆஜராகாத பிள்ளைகளின் சராசரி சங்கியை. | | | | | |

*N.B.*—A.—கள்ள பையன்களும், பெண்களும்
B.—மற்ற ஜாதி பையன்கள்

ஷ்ருவில் ஆதி திராவிடர் எத்தனை பையன்கள் என்று குறிப்பிட வேண்டும்.

### RETURN 2. Teacher's Leave Report.

| உபாத்தியாயரின் பெயர். | இப்போது ரஜா வேண்டிய நாள். | முன் எடுத்த நாள். | பள்ளிக் கூடம் வைத்த நாள். | ஷுரு. |
|---|---|---|---|---|
| | | | | |

தலைமை உபாத்தியாயரின்
கையொப்பம்.

### RETURN 3. Progress Report.

ஒவ்வொரு வகுப்பிலும், ஒவ்வொரு மாதத்திலும், ஒவ்வொரு பாடத்திலும் எவ்வளவு நடத்தப்பட்டது என்று ரிப்போர்டு செய்யவேண்டும்.

தலைமை உபாத்தியாயரின்
கையொப்பம்.

Yours truly,
K. R. ADIVARAHAM AYENGAR,
Supervisor of Kallar Schools,
Tirumangalam Range.

*Patron.* M.R.Ry. Rao Sahib,
A. J. Vethanayaga Thevar Avl.,
Usilampatti.

*Editor.*—Rev. George J. Athishtam,
Usilampatti.

*Manager.*—Rev. R. A. Dudley,
Tirumangalam.

Subscription—Single copy 8 annas a year (excluding charges for delivery) payable in advance.

All orders to be sent to the *Manager.*

Articles for insertion should be sent, not later than 15th of each month to the *Editor.*

சம்ரக்ஷகர்.—மகா-ள-ள-ஸ்ரீ ராவ் சாஹெப் வேதநாயகத் தேவரவாகள், உசிலம்பட்டி.

பத்திராதிபர்.—கனம் ஜார்ஜ் அதிஷ்டம் ஐயரவர்கள், உசிலம்பட்டி.

மானேஜர்.—கனம் ஆர். ஏ. டட்லி துரையவர்கள், திருமங்கலம்.

தனிப்பிரதி:—8-பை. வருஷ சந்தா 8-அணா. தபாற்கூலி பிரத்தியேகம். ஒரு வருஷ கையொப்பம் முன்னதாகவே அனுப்பவேண்டும்.

பத்திரிகை வேண்டுவோர் மானேஜரவர்களுக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

சமாச்சாரக்குறிப்பு முதலியவை அனுப்ப விரும்புவோர் அந்த மாதம் 15-ம் தேதிக்குள் சுருக்கமாக எழுதி பத்திராதிபருக்கு அனுப்பவேண்டும்.

பசுமலை அமெரிக்கன் மிஷன் "லினெக்ஸ்" அச்சுயந்திரசாலையில் பிரசுரிக்கப்பட்டது.

மாதாந்தரப்பதிப்பு]

REG. NO. M. 2146

[விலை 8 பைசு.

# The Piramalai Reformer.

## பிரமலை சீர்திருத்தன்

"நியாயமின்றிப் பிறனுக்கு விரோதமாய்ச் சாட்சியாக ஏற்படாதே; உன் உதடுகளினால் வஞ்சகம் பேசாதே."

Vol. VI.] ஆகஸ்டுமீ, 1926 [இலக்கம் 4

**கள்ளநாட்டின் தலைநகராகிய உசிலம்பட்டிக்கு மாட்சிமை தங்கிய சென்னைராஜதானியின் கவர்னர் துரையவர்களின் விஜயம்:—**

1926 ஜூலைமீ 22உ காலை 8 மணிக்கு வருவதாய் கள்ளநாட்டார் யாவருக்கும் அறிவிக்கப்பட்டிருந்தது. பாதைகள் எல்லாம் செப்பனிடப்பட்டிருந்தது. பாதையின் பக்கங்களிலிருந்த கத்தாழைகள் போனவிடம் தெரியவில்லை. புதுக்கோட்டை, செக்காணூரணி, செல்லம்பட்டி, வாலாந்தூர் என்னுமிடங்களில் சிங்காரக்கொட்டகைகள் போடப்பட்டுப் பச்சையிலைகளால் ஜோடிக்கப்பட்டிருந்தது. உசிலம்பட்டி யூனியன் தாலூகா போர்டார்கள், போலீஸ் உத்தியோகஸ்தர்கள், வியாபாரிகள், குடி ஜனங்கள், முதலானோர் உசிலம்பட்டியைச் சிங்காரிக்க எடுத்துக்கொண்ட சிரத்தை இம்மட்டென்று எழுதுவது பிரயோஜன மற்றதாகும். கடைவீதிகள் எல்லாம் ஜோடிக்கப்பட்ட பந்தலால் மூடப்பட்டிருந்தது. ஐந்து லாந்தலிருந்த இடம் நூதனமாய் அலங்கரிக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு அலங்கரிப்பும் ஜோடிப்பும், செய்யப்பட்ட ஒவ்வொரு ஆயத்தமும் கவர்னர் துரையவர்கள் எவ்வளவு மதிப்புக்குரியவரும் கனம் தங்கியவருமாயிருக்கிறார் என்பதைக் காட்டிற்று.

பல பாகங்களிலுள்ளவர்கள் புதன் இரவே கூட்டமுதோடு ஆண் பெண் பிள்ளைகளோடு மதுரை உசிலம்பட்டி ரஸ்தாவின் இருபுறங்களிலும் தங்கி பொழுதுவிடிய ஆவலாய்க்காத்திருந்தார்கள். குறித்த நேரத்தில் கவர்னர் துரையவர்கள் மதுரையைவிட்டு நமது சூப்பிரண்டெண்டு துரையவர்களோடு புறப்பட்டு வழியிலே காத்திருந்த சகல ஜனங்களுக்கும் காரைவிட்டு முக்கியமான இடங்களில் இறங்கியும் உசிலம்பட்டிக்கு வந்து சேர்ந்தார். ஜனங்களின் கூட்டத்தையும் ஆரவாரத்தையும் இன்னதென்று சொல்லமுடியாது. உசிலம்பட்டி வந்தவுடன் கலெக்டர் ஆபீசில் சில பெரிய துரைமார்களுடன் கவர்னர் துரை விருந்துண்டார். அங்கிருந்து உசிலம்பட்டிக்கு தெற்கே கள்ளர் பொதுநிதியிலிருந்து புதிதாக வாங்கப்பட்ட விவசாயபண்ணைக்கு மோட்டார் புறப்பட்டது. ஏற்கனவே மதுரை ஜில்லாவின் பற்பல பாகங்களிலிருந்து ஜமீன்தார்களும், துரைமார்களும், வக்கீல்களும் அங்கு மிகவும் அழகாக ஜோடிக்கப்பட்டிருந்த கொட்டகையிலே கவர்னர் துரையவர்களின் வரவை எதிர்நோக்கியிருந்தனர். சங்கை தங்கிய கவர்னரவர்களும் சூப்பிரண்டு துரையவர்களும் மோட்டாரைவிட்டிறங்கினர். நமது சூப்பிரண்டு துரையவர்கள் முழு அதிகார உடுப்பில் பட்டய சகிதத்தோடு தோன்றியது எல்லோர் கண்களையும் கவர்ந்தது.

மெய்க்காவலாளன் கவர்னருக்கு முன்னடக்க, உட்கார்ந்திருந்த பெரியோர் அனைவரும் எழுந்திருக்க, கவர்னர் துரை பலத்த கரகோஷத்தினிடையே அவருக்காக அமைக்கப்பட்ட சிங்காசனமமர்ந்தார். கனம் சூப்பிரண்டு துரையவர்களால் பத்திரம் வாசிக்கப்பட்டது. அதில் கள்ள ஜனங்கள் அடைந்த முன்னேற்றத்தையும், இப்போது படும் கஷ்டத்தையும், அவர்களின் முயற்சியால் ஏற்படுத்தப்பட்ட கள்ளர் பொதுநிதியையும், கள்ளநாட்டுக்கு தண்ணீர் அவசியம் வேண்டும் என்பதைப்பற்றியும் கவர்னர் துரையவர்களுக்குத் தெரிவித்தார். அதற்குப்பின் கள்ளர் பொதுநிதி மெம்பர்களில் சிலர் கவர்னர் துரையவர்களுக்குத் தங்கமாலையிட அவர் அவர்கள் ஒவ்வொருவருக்கும் கைகொடுத்தார். பின்பு கவர்னர் துரையவர்கள் எழுந்துநின்று தான் கள்ளநாட்டிற்கு வந்தது பெரியசந்தோஷம் என்றும், பெருந்திரள்கூட்டமான ஜனங்கள் பாராட்டின மரியாதையைப் பார்த்தபோது தன்னைப்போன்ற எந்த கவர்னருக்கும் மனமிரங்காமலிராதென்றும் சொன்னார். பின்பு கள்ளர் கிட்டங்கிக்கு மூலைக்கல் வைத்தார். அந்த ஸ்தலத்திலுள்ள முக்கியமான காரியங்களைப் பார்வையிட்டபின்பு தன்னைப் பார்க்கவந்திருந்த எல்லா ஜனங்களுக்கும் சமீபத்தில்போய் அவர்கள் செலுத்திய மரியாதையை மிக அன்புடன் வாங்கினார். அச்சமயம் பெண்கள் குலவைபோட, ஆண்கள் கைகூப்பி நமஸ்கரிக்க, கவர்னர் துரையவர்கள் கடைசியாக மோட்டாரிலேறி நின்றுகொண்டு மறுபடியும் தம்மை எல்லாருக்கும் காண்பித்துவிட்டு உசிலம்பட்டி போர்ட் பாடசாலையில் நடக்கும் வைபவத்திற்கு வந்தார். அங்கே போர்டிங் பிள்ளைகள் படுக்கையறைக்கு மூலைக்கல் வைத்தார். காம்பௌண்டு கூடியமட்டும் சுத்தமாயிருந்தது. கிராமமாணுக்கர் தங்கள் பள்ளிக்கூடத்தின் பெயரை தங்கள் கொடிகளில் எழுதிப்பிடித்து வெளியே அணிவகுத்து நின்றார்கள். காம்பௌண்டுக்குள் லுத்தரன் மிஷன் பெண்பாடசாலைப்பிள்ளைகள், விதைக்கும் சமுசாரி பாட்டு 12 மாதங்களின் வேலையை வாத்தியங்களுடனும் அப்பியாசங்களுடனும் செய்தார்கள். கனம் ஜியார்ஜ் அதிஷ்டம் போதகர் அவர்களின் முயற்சியால் கவண்டம்பட்டி ஆண் பெண் பாடசாலைப் பிள்ளைகள் அப்பியாசப்படுத்தப்பட்டு பாட்டுக் கூட்டப்பட்டு வரவேற்கும் சின்னம் அணிந்தவர்களாக கவர்னர் துரையவர்களின்முன் ஆடிப்பாடி மலர் தூவினார்கள். அவர்களில் ஒரு சிறுவன் ராஜ கொடி தலையிலணிந்தவ

ளாய் எல்லாருக்கும் வியப்புண்டாகத்தக்கவாறு நடித்து கவர்னர் துரையை சந்தோஷப்படுத்தினான். அவர் மகிழ்ந்து இச்சிறுவனுக்குக் கைகொடுத்தார். போர்டிங் பெண்கள் கும்மியடித்தார்கள். போர்டிங் ஸ்கௌட்டுகள் டூரூப் அலெர்ட்டில் நின்றார்கள். ராஜவாழ்த்துப்பாட்டு யாவரும் ஏகோபித்துப்பாடி சங்கை கவர்னர் துரையவர்களை மும்முறை வாழ்த்த கூட்டம் கலைந்தது.

பிற்பாடு கைத்தொழிற்சாலையையும் அலங்கரித்துக்கொண்டுவரப்பட்ட ஜல்லிகட்டு மாடுகளையும் பார்வையிட்டு மதுரைமா நகர் திரும்பினார்.

உசிலம்பட்டிக்குக் கவர்னர் துரையவர்களின் விஜயம் நம் நாட்டிற்கு பெரும் நன்மை தருமென்று கருதப்படுகிறது. ஜனங்கள் தாங்கள் கவர்னர் துரையைப் பார்க்க எல்லா சிலாக்கியமும் கிடைத்தது என்றும், பாரா நின்ற போலீஸார்களாவது உத்தியோகஸ்தர்களாவது தங்களுக்கு எவ்விதத்திலும், எவ்விஷயத்திலும் கஷ்டம் கொடுக்கவில்லையென்றும் யாவராலும் சொல்லப்பட்டது.

கவர்னர் துரையவர்கள் உசிலம்பட்டிவார நமக்கு இத்தனை பெரிய சிலாக்கியமளித்த கனம் ஜில்லாக்கலெக்டர் துரையவர்களுக்கும் கள்ளர்களுக்காகத் தளரா முயற்சியுள்ள கனம் கள்ளர் ஸ்பெஷல் சூப்ரண்டு துரையவர்களுக்கும், கள்ளநாடு முழுமையும், கை கூப்பி நமஸ்கரிக்கின்றது.

சுபம்! சுபம்!! சுபம்!!!

"பிரமலை நேசன்"

---

## அறம்.

"அழுக்காறவா வெகுளியின்னாச் சொன்
னான்கு
மிழுக்காவியன்ற தறம்"

என்று திருவள்ளுவநாயனார் கூறியபடி பிறர் செல்வத்தில் பொறாமையும் ஐம்புலன்கள் மேல் செல்லும் ஆசையும் அவை காரணமாக பிறர்மேல் உண்டாகிற கோபமும் அதுபற்றி வருகிற கடுஞ்சொல்லும் ஆகிய இவைகளைக் கடிந்து தான்கொண்ட ஒழுக்கத்தினின்று தவறாதிருப்பதே அறமெனத்தகும்.

இவ்வறமானது இல்லறமென்றும் துறவறமென்றும் இருவகைப்படும். நல்ல வம்சத்தில் பிறந்த ஓர் உத்தமியும் அவ்வுத்தமிக்குரிய நாயகனும் சேர்ந்து இல்வாழ்க்கைக்குரிய நெறியில் நின்று நடத்தப்படுவதாகும் இல்லறம். துறவறமென்பது உலகப்பற்றற்று உடல், பொருள், ஆவி இவைகளின் நிலைமையின்மையை உணர்ந்து அவைகளிலுள்ள அவாவை யொழித்து முத்தியென்னும் பேரானந்த வழியைத்தேடுவதாம். இதனாலன்றோ "இல்லறமல்லது நல்லறமன்று" என்றார் மதுரமொழி ஔவைப்பிராட்டியாரும். மேற்கூறியபடி புறங்கூறுமை முதலியவைகளைக் கடிந்துகொள்ளுதலும் தன்னுயிரைப் போல்பிறவுயிரைப் பாவித்து தவுதலும் அறத்துணை நிற்போன் கவனிக்கவேண்டுவனவாகையால் புறங்கூறுமை முதலியவற்றை ஒழிப்பதனால் இகத்தில் எல்லாராலும் நன்குமதிக்கப்பட்டுயோக்கியனென்னும் பெயரையடைவதும் இராஜ தண்டனைக் கிடங்கொடாதிருத்தலும்கூடும். இது அறம் என்கிற மார்க்கத்திற் செல்லும் ஒருவன் இவ்வுலகிலடையத்தக்க பிரத்தியக்ஷ பலனாகும். பிற ஜீவனுக்குற்ற இடுக்கண் தனக்கு நேர்ந்ததாகப் பாவிக்கும் குணம் உலகத்தில் மானிட ஜென்மமெடுத்தவர்கள் கொள்ளத்தக்க குணங்கள் எல்லாவற்றுள்ளும் மகா உத்தமமானது. இதனால் இகத்தில் நன்மை விளையுமென்டதைச் சொல்லவும்வேண்டுமோ?

"சிறப்பீனுஞ் செல்வமுமீனு மறத்தினூஉங்
காக்க மெவனோவுயிர்க்கு"

என்று திருவள்ளுவரும் திருவாய் மலர்ந்தருளியுள்ளார். இதனாலேயே "அறஞ்செய விரும்பு" என ஆத்திச்சூடி என்னும் நூலின் முதலிலமைத்தார் ஔவையாரும்.

எச்சிற் கையாலும் ஈயோட்டாருண்டு, கைம்மாறு கருதி அறம் செய்வாருமுண்டு. ஆனால் பிறருதவியை எதிர்பாராமலுதவி செய்தலே பேருதவி.

"தன்னோடு செல்வது வேண்டின் அறஞ் செய்க" என்றும் "தருமம் தலைகாக்கும்" என்றும் முதியோருரைத்திருக்கின்றனர்.

"இன் சொல்விளை நிலனாவீதலே வித்தாக
வன் சொற்களை கட்டு வாய்மையெருவட்டி
அன்புநீர் பாய்ச்சி யறக்கதிரீனவோர்
பைங்கூழ் சிறு காலைச்செய்" என்றொருவர் கூறுகிறார். மானிட ஜென்ம மெடுத்தவர்கள் இகபர சாதகமான இந்த அறமென்பதை தம்மாலியன்றவரையில் முயன்று செய்ய வேண்டும். நாளைச் செய்வோமென்றிராமல் சமயம் வாய்த்தபொழுது அல்லது தாமே அறஞ்செய்வதற்குரிய வழியை முயன்று தேடி ஒவ்வொரு நாளும் அதைச் சிறிது நடத்திவர வேண்டும். இந்த எண்ணம் எல்லாருக்குமுண்டாகி அதன்படி வாழ எல்லாம் வல்ல இறைவனருள் புரிவாராக.

நன்மையை விரும்பும் நண்பன்,
ஜி. ஸ். செல்லத்துரை,
நார்மல் ஸ்கூல்-பசுமலை.

---

## உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்.

ஆப்பிரிக்காக் கண்டத்துக் காப்பிரி ஒருவன் மேல் இந்திய தீவுகள் ஒன்றில் அடிமையாக விற்கப்பட்டிருந்தான். அவன் அடிமை வேலை செய்துகொண்டிருக்குங்காலத்தில் கிறிஸ்துமார்க்கப் போதனையைக்கேட்டு தேவானுக்கிரகத்தினால் குணப்பட்டு மெய்க்கிறிஸ்தவனானான். அதுமுதல் அவன் மகா உண்மையும் நல்லொழுக்கமுமுள்ளவனாய் நடந்துகொண்டபடியால், எஜமானால் மிகுதியும் நன்குமதிக்கப்பட்டு, மகா அருமையும் பிரியமுமான வேலைக்காரனாயிருந்தான். சிறிது காலத்திற்குப் பிறகு எஜமான் அவனைச் சற்றுக்கணிதப்படுத்தக் கருதி, தன் தோட்டத்துக்கெல்லாம் மேல் விசாரணைக்காரனாக ஏற்படுத்தினான். அப்புறம் ஒரு சமயத்தில் தோட்டவேலைக்கு அதிக ஆட்கள் வேண்டியிருந்தபடியால், எஜமான் இருபது அடிமைகள் கொள்ளத் தீர்மானித்து, நன்றாய் வேலை செய்யத்தக்க சரீர புஷ்டியும் பெலனுமுள்ள ஆட்களைத் தெரிந்து பார்த்து வாங்கும்படி விசாரணைக்காரனுக்குத் திட்டமாய்க் கற்பித்து இருவருமாக அடிமைகள் விற்கும் சந்தைக்குப் போனார்கள். இவன் சந்தையிற்சேர்ந்து அவ்விடத்தில் விலைக்கு நிறுத்தியிருந்த எண்ணிறந்த அடிமைகளைக் கண்ணுற்று ஆராய்வதற்குள்ளாக, விருத்தாப்பியத்தினால் மிகவும் மெலிந்து தளர்ந்து போய் வேலைக்கு எவ்வளவேனும் உதவாமலிருந்த ஒரு கிழவனைக் கூர்மையாய்ப் பார்த்து, எஜமானிடத்தில் அவனை வாங்கும்படி சொன்னான். இப்பேர்ப்பட்ட கவைக்குதவாத கிழவனை அவன் தெரிந்துகொண்டதைக் குறித்து எஜமான் ரொம்பவும் அதிசயித்து அவனை ஒருக்காலும் வாங்கவேபடாதென்று வற்புறுத்தித் தடுத்துச்சொல்லியும் அவன் கேளாமல் மேற்படி அடிமையை எப்படியும் வாங்கத்தான் வேண்டுமென்று எஜமானை வெகுவாய்க் கெஞ்சி மன்றாடினான்.

அதன்பேரில் எஜமான், இருபது அடிமைகள் வாங்குகிறதானால் இந்தக் கிழவனையும் அவர்களோடு சேர்த்துக்கொள்ளலாம் என்றான். அந்தப்படியே அவர்கள் இந்தக் கிழவனோடு இருபத்தொரு அடிமைகள் வாங்கி அவர்களைத் தோட்டத்துக்கு நடத்திக்கொண்டுபோனார்கள். அந்த விசாரணைக்காரன் மற்றெல்லாரையும்பார்க்க வலமாட்டாத அந்தக் கிழவனுக்குத்தான் மட்டுமிஞ்சின தயவும் கரிசனையும் பாராட்டிவந்தான். அவன் அந்தக் கிழவனைத் தன் வீட்டுக்குக் கொண்டுபோய், தன்படுக்கையில் அவனைப் படுக்கவைப்பான், தன் மேசையில் அவனுக்குச் சாப்பாடுகொடுப்பான், தான் பானம்பண்ணும் பாத்திரத்திலே அவனுக்குப் பானங்கொடுப்பான், குளிராயிருக்கும்போது அவனைத் தூக்கிக்கொண்டுபோய் வெயிலிலே வைப்பான். வெயில் உஷ்ணமாகி உறைந்தவுடனே திரும்பவும் தூக்கித் தென்னமா நிழலிலே கொண்டுபோய் வைப்பான். உண்மையுள்ள அந்த வேலைக்காரன் இந்தக் கிழவனுக்குப் பாராட்டிவரும் தயவையும் பட்சத்தையும் எஜமான் சிறிது நாளாய்க் கவனித்து மிகவும் ஆச்சரியப்பட்டு அதைக்குறித்து அவனிடத்தில் வினவினான்,

எஜமான் அவனை நோக்கி, "ஏதோ ஒரு தகுந்த முகாந்தரமில்லாமல், அந்தக் கிழவனைப்பற்றி இவ்வளவு மட்டுமிஞ்சின கவலையும் பிரயாசமும் எடுக்கமாட்டாயே. ஆகையால் அவன் உன் பெந்துக்களில் ஒருவன் போலிருக்கிறது. ஒருவேளை உன் தகப்பனாய் இருந்தாலும் இருக்கலாம்" என்க, வேலைக்காரன், "அப்படியல்ல ஐயா, அவன் என் தகப்பனல்ல" என்றான். "உன் தமையனாக்கும்" என்க, "என் தமையனும் அல்ல ஐயா" என்றான். "அப்படியானால் உன் சிறியதகப்பனாயிருக்கலாம், அல்லவென்றால் உன் இனத்தாரில் ஒருவனாய் இருக்கலாம்" என்று சொல்ல, அவன் "ஐயா இவன் என் இனத்தானுமல்ல, என் சிநேகிதனுமல்ல" என்று பிரதியுத்தரம் சொன்னான். அப்படியானால் "நீ இவ்வளவு தயவுகாண்பிக்க காரணமென்ன" என்று எஜமான் கேட்க, வேலைக்காரன் "ஐயா, இவன் என் சத்துரு, அடிமைவியாபாரிக்கு என்னைப் பிடித்து விற்றுப்போட்டவன். 'உன் சத்துரு பசியாயிருந்தால் அவனுக்குப் போஜனங்கொடு; அவன் தாகமாயிருந்தால் அவனுக்குப் பானங்கொடு' என்று என் வேதாகமம் சொல்லுகிறது" என்றான்.

கிறிஸ்தவர்களே, இந்தக் காப்பிரியினிடத்தில் விளங்கிய கிறிஸ்தவ சற்குணம் உங்களிடத்திலுண்டா? "உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்; உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மைசெய்யுங்கள்; உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும் உங்களைத்துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம்பண்ணுங்கள். இப்படிச்செய்வதினால் நீங்கள் பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவுக்குப் புத்திரராயிருப்பீர்கள்."

---

கள்ளர் ஸ்பெஷலாபீசர் துரையவர்களால் வல்லூகளாகிய இந்திரகுலாதிபர்கள் மேன்பாடான வழிக்கு வந்தது கடவுள் சித்தம். எவ்வளவோ முயற்சித்து சுயநலம் கருதாமல் ஆலோசனையின்பேரில் சீர்திருத்தம் திரும்பியது தெரிந்த விஷயமே. அப்படியிருக்க சோளவந்தான் சரகம் கச்சராயிருப்பு இந்திரகுல வாலிபர்கள் திருவேடகம் கள்ளுக்கடையிலும் சோளவந்தான் கள்ளுக்கடையிலும் இருக்கும் சொத்துக்களை பாதிக்குப்பாதியாகவாவது விற்று கள்ளும் சாராயமும் குடிகொண்டு யானைக்கு மதம்பொழிந்ததுபோல் சண்டையிட்டுக்கொண்டு ஊருக்குள் வந்து குடிகொண்ட வாலிபர்கள் கூட்டமாய் கூடிக்கொண்டு துராகிர்தமாய்ப் பேசிக்கொள்வார்களாம். யாராவது பெரிய மனுஷாள் வந்து நமது துரையவர்களிடம் சொல்லி பரிக்கைபடுக்கும்படியாய் செய்கிறேன் என்றால் உங்களை நான் [illegible]க்கும்படியாய்ச்செய்கிறேனென்று சண்டைக்கு வருவார்களாம். லாகிரியை சேர்த்தவர்களை பின்னுப்பு மோசம் ஆகிறது என்று வண்ணான், அம்பட்டன் முதல் கள்ளுபடிசெய் [illegible] கள்ளுக்குடி இல்லாதபடி நிறுத்த துரையவர்களிடமிருந்து ஆர்டர் வாங்கி நிறுத்தினால்தான் நிற்கும் என்று பேசிக்கொள்ளுகிறார்களே தவிர அவர்கள் எதிரேபேச பயமுண்டாகிறதாம். நல்ல ஏற்கையுடன் இருந்த வீடு, நிலங்களை கைவிட்டும் விடாமலும் கெடுதல் ஆகிறது. குடிகொண்டவெறியால் கூதாட்டம், லாகிரி அதிகமாய் ஏற்பட்டுவருகிறது. அதினால் கொலை களவு நடக்க எத்தனிக்கத் தயார்.

வி. கருப்பத்தேவன்.
ஆவரம்பட்டி.

---

## வசீகரமான உலகம்.

## தேனீ.

நமது வீடுகளில் உள்ள ஈக்களை நினைக்கும் பொழுதே நமக்கு நடுக்கமெடுக்கின்றது. ஆனால் தேனீயைக்குறித்துச் சிந்திக்கும்பொழுதோ நமக்கு மனக்கிளர்ச்சி உண்டாகின்றது. இதற்குக் காரணம் என்னவென்று சிந்திக்குமளவில், வீட்டில் வாழும் ஈ நமக்கு நோயைத் தந்து நம் வாழ்க்கையின் இனிமையைக் கெடுப்பதாயிருக்க, தேனீ நம் நாவிற்கு இனியதும் நோய்க்கு மருந்தானதுமான செழுந்தேனைத் தந்து நம் வாழ்க்கையை இனிமையாக்குகின்றது. அதோடு அது தன் ஜீவியத்தினாலே நமக்குப் பல பாடம் கற்பித்து நம்மைச் சீர்ப்படுத்துகின்றது. இவ்வற்புதமான பிராணியின் ஜீவிய சரித்திரம் வெகு அற்புதமானது. சென்றவருஷம் நமது பொக்கிஷ பரணியில் வெளிவந்த எறும்பின் ஜீவிய சரித்திரத்தைப் படித்தவர்கள் தேனீக்கும் எறும்பிற்கும் உள்ள ஒற்றுமையை நன்குணர்வார்கள்.

தேனீவிஷயமாக ஒரு பெரும் புத்தகமே எழுதக்கூடுமெனினும் இங்கு சில விஷயங்களை மட்டும் விவரிப்போம். சோலைகளில் தேனீக்கள் வெகு சுறுசுறுப்பாய் வேலைசெய்வதை நாம் பலமுறை பார்த்திருப்போம். அத்தருணங்களில் நாம் நம்முடைய நாகரீகத்தை ஒத்தத் தேனீக்களின் ஜீவியத்தைக் குறித்துச் சிந்தித்ததுண்டா? அவைகளுடைய இராஜதானியில் போர்சேவகர்கள், உணவுப்பொருள்கள் சேகரிப்போர், உணவு ஆயத்தம்பண்ணுவோர் முதலிய பல வேலையாட்கள் எப்போதும் ஓயாமல் வேலைசெய்கிறார்கள். தேனீநகரத்தில் ஒரு ராணியார் உண்டு. அவளுடைய ஆளுகையில் 50,000 அல்லது 60,000 குடிகள் வேலைசெய்கிறார்கள். வேனிற்காலத்திலும் மழைகாலத்தை ஒழித்து மற்றெல்லா காலத்திலும் தேனீ நகரத்தின் வாசல் வழியே அநேகம் வேலையாட்கள் தத்தமக்கு உரித்தான வேலையைச் செய்ய உள்ளே போவதும் வெளியே வருவதுமாக இருப்பார்கள்.

ஒரு தேன் கூட்டில் ஒரே இராணிதான் இருப்பாள். தன் குடிகளைப்பார்க்கிலும் அவள் உருவத்தில் பருத்திருப்பாள். நாம் தேனீயின் இராணியாரை எளிதில் பார்க்கமுடியாது. அவள் வெகு அபூர்வமாகவே வெளியேறுவாள். தேனீ இராணியின் ஜீவியம் உல்லாசமானது அன்று. அவளை இராணியென்று அழைப்பதைப்பார்க்கிலும் தேனீயின் தாய் என்றழைப்பதே பொருத்தமுடையதெனத் தோன்றும். அவள் தன் குடிகளை ஆளுவதில்லை, குடிகள் அவள்மீதுள்ள அளவிறந்த அன்பினாலே, அவளை ஒருபோதும் விட்டுப்பிரியாமல் அவளுக்கு ஓயாமல் பணிவிடை செய்கிறார்கள். அவள் தேனீ நகரத்தினுள் உலாவப் புறப்படும்பொழுது, குடிகள் அவளைச் சூழ்ந்து செல்லுகின்றனர். இந்தக்குடிகள் அவளுக்கு அவமரியாதையாக தங்கள் வால் புறத்தைக் காட்டுவதில்லை.

தேன் கூட்டிலுள்ள ஆயிரக்கணக்கான வேலையாட்கள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு குறித்தவேலையுண்டு. அவர்கள் சோம்பல் என்பதை அறியார். சிலர் சமீபத்திலுள்ள நீரோடைக்கும் நீர் நிலைகளுக்கும் சென்று கற்களின்மீதும் செடிகளின்மீதும் உட்கார்ந்து தங்கள் நீண்டநாவுகளை நீரில் தோய்த்துத் தண்ணீர் கொண்டுவருவார்கள். சிலர் மலர்தோறும் சென்று தேனும் மகரந்த தூளும் கொண்டுவருவார்கள். கூட்டிற்குள்ளே மராமத்து வேலையாட்களில் சிலர் கூட்டைப் பழுதுபார்ப்பதும் வேறு சிலர் புதிய அறைகள் நியமிப்பதுமாக இருப்பார்கள். தேனீக்கூட்டில் காணப்படும் அறைகளே தேனீக் குழந்தைகளின் தொட்டில்கள். இத்தொட்டில்களிலேதான் தாய் ஈ இடும் முட்டைகளைச் செவிலித் தாய்மார்கள் அறைக்கொன்றாக வைத்துப் பராமரித்துப் போஷித்து வருவார்கள். போர்ச்சேவகர்களாகிய ஈக்கள் கூட்டின் வாசலை வேறு கூட்டைச்சேர்ந்த தேனீக்கள் வந்து தங்கள் தேனை திருடிக்கொண்டுபோகாதபடி காத்துக்கொள்ளுகிறார்கள். ஒரு இனத்தைச் சேர்ந்த தேனீக்கள் எல்லாம் நம்முடைய பார்வைக்கு ஒரே மாதிரியாகத் தோன்றினபோதிலும் இவர்கள் எப்படி தம்முடைய சொந்த ஜனங்களல்லாதவர்களைத் தெரிந்துகொள்ளுகிறார்கள் என்பது அதிசயமே. ஒருக்கால் ஒவ்வொரு கூட்டிலும் ஏதாவது ஒரு அடையாளவார்த்தை இருக்கலாம். அல்லது தேனீக்கள் மோப்பத்தாலே தம் இனத்தைத் தெரிந்துகொள்ளுகின்றன என்று தோன்றுகின்றது. கூட்டின் வாசலுக்கருகாமையில் காற்றுவீசும் தேனீக்கள் கூட்டின் உஷ்ணத்தை சமமாகக் காக்கும் பொருட்டு கூட்டமாய்ப் பறந்துகொண்டிருக்கும். குளிர்ச்சியான நாட்களில் கூட்டினுள்ளிருக்கும் உஷ்ணம் வெளிப்படாதபடி தங்கள் சிறகுகளினால் வீசிக்கொண்டிருக்கின்றன. உஷ்ணமான நாட்களில் குளிர்ந்த மலைக்காற்றை கூட்டிற்குள் வீசுகின்றன.

தேனீக்களுக்குப் பலவிதமான வேலையிடுவது யார் என்றாவது இன்னன்ன ஈ இன்னன்ன வேலை செய்யவேண்டுமென்று கட்டுத்திட்டம் செய்வது யார் என்றாவது நமக்குத் தெரியவில்லை. எல்லாம் மகாமாயமாய்

ஒழுங்கு தவறாமல் நடைபெறுகின்றன. யார் மகரந்தம் தான் சேகரிக்கவேண்டும்? யார் தேன் சேகரிக்கவேண்டும்? யார் சேவகன் வேலை செய்யவேண்டுமென்ற கேள்வியும் சண்டையும் ஒன்றுமேயில்லாமல் எல்லா வேலைகளும் நடைபெறுகின்றன. ஒவ்வொரு தேனீயும் தான் செய்யவேண்டிய வேலை இன்னதென்று நன்றாய் அறிந்து அதை இடைவிடாமல் செய்துகொண்டிருக்கின்றது.

எல்லாவற்றிலும் வியப்பானது தேன் கூட்டின் வாயிலண்டை உள்ள இரைச்சலே. ஒரு நாளெல்லாம் ஒரு தேன் கூட்டண்டை உட்கார்ந்து ஓயாமல் உழைக்கும் வேலையாட்களைக் கவனித்துக்கொண்டேயிருந்தாலும் சலிப்படையமாட்டோம். திடீரென்று எங்கிருந்தோ சில தேனீக்கள் பறந்து வந்து தேன் கூட்டினுள் பிரவேசிக்கின்றன. வேறு சில, தேன் கூட்டைவிட்டு வெகு விரைவாக வெளியேறி மறைகின்றன. சில, தேன்கூட்டின் வாயிலண்டை வந்து துரிதப்படாமல் அக்கம் பக்கத்திலுள்ள இலைகளிலும் கிளைகளிலும் தங்கித் தங்கள் இறக்கைகளை சுத்தம்பண்ணிக்கொள்கின்றன. இவை சூரிய வெப்பத்தைத் தாங்கமுடியாத புதிய தேனீக்கள். சில தேனீக்கள் தங்கள் கூட்டிற்குத் திரும்பி வரும்பொழுது அவற்றின் பின்கால்களில் [illegible]ான தூள் ஒட்டிக்கொண்டிருக்கின்றது. இவைதான் மகரந்தம் சேகரிக்கும் தேனீக்கள்.

இவை மாவு அரைக்கும் யந்திரசாலையில் வேலைசெய்யும் வேலையாட்களைப்போல இருக்கின்றன. இவற்றின் பின்காலில் ஒட்டிக்கொண்டிருக்கும் தூளே தேனீமாவு, அல்லது மகரந்தம். நாம் ஒரு தேன் கூட்டை வெகு நேரம் கவனித்துக்கொண்டிருப்போமானால் தேன் கூட்டின் வாயில் சில சமயங்களில் இரண்டு ஈக்கள் தம்மில் நடைபெறும் சண்டையைப் பார்க்கலாம். சில சமயங்களில் இந்த சண்டை ½ மணி நேரம் வரைக்கும் நடைபெறுவதுண்டு. அதில் ஒரு தேனீ அக்கூட்டின் போர்ச்சேவகனாக இருக்கும். இன்னொரு தேனீ வேறொரு கூட்டைச் சேர்ந்தது. இந்த அயலானாகிய தேனீ தேன் திருடவருகையில் போர்ச்சேவகர் அதைக் கண்டுபிடித்துக்கொள்ள இருவருக்கும் சண்டை உண்டானதுபோலும் ஒன்றையொன்று தாக்கி வெகுநேரம் போர்செய்து திருடனாக வந்த தேனீயைக்கொன்று தள்ளின பிறகு போர்ச்சேவகனாகிய தேனீ வெகு சந்தோஷத்தோடு தன்னிடத்திற்கு வந்து சேரும். நீங்கள் எப்பொழுதாவது ஒரு தேன் கூட்டைப் பார்க்க நேரிட்டால் அதை வெகுநேரம் பாருங்கள். அப்பொழுது தேன் கூட்டில் நடைபெறும் அநேக அற்புதங்கள் உங்களுக்குத் தெரியவரும்.

மேலே சொன்ன வேலையாட்களைத் தவிர ஒரு தேன் கூட்டில் தோட்டிகள் என்ற ஒரு வகுப்பாரும் உண்டு. இவர்கள் தேனீ தொட்டில்களையெல்லாம் எப்போதும் வெகு சுத்தமாய் வைத்திருக்கவேண்டும். இவர்களுக்கு துணைசெய்ய பிணம் தூக்கிகள் என்ற ஒரு வகுப்பாருமுண்டு. இந்தப் பிணந்தூக்கிகள் தேன் கூட்டினுள் செத்துக்கிடக்கும் பிணங்களையெல்லாம் இழுத்துக்கொண்டுவந்து வெளியே எறிவார்கள். குளிர்காலத்திலும் மழைகாலத்திலும் இந்த பிணந்தூக்கிகளுக்கு நிரம்ப வேலையிருக்கும். அக்காலங்களில் ஏராளமாக தேனீக்கள் இறப்பதுண்டு. நன்றாய் முதிர்ச்சியடையாத தேனீப்புழுக்களும் இறக்கின்றன. இறந்துபோன ஈக்களைக் கூட்டிலிருந்து அப்புறப்படுத்தி வெகு தூரத்திற்கப்பால் கொண்டுபோய் எறிகின்றன.

ஒரு கூட்டம் தேனீக்கள் காலியாயிருக்கிற ஒரு கூட்டினுள் பிரவேசித்தபொழுது அநேகம் ஈக்கள் கூட்டின் கூரையிலே தொங்கிக்கொள்கின்றன. உடனே இன்னும் சில தேனீக்கள் உட்பிரவேசித்து மேலே தொங்கிக்கொள்கிற ஈக்களின் பின்கால்களைப் பற்றிக்கொண்டு, சங்கிலிகள்போல தொங்குகின்றன. அப்பொழுது தோட்டித் தேனீக்கள் கூட்டின் கீழ்ப்பாகத்தையும், பக்கங்களையும் முற்றிலும் சுத்தம்பண்ணி தேவையல்லாத எந்தப் பொருளும் இல்லாமல் செய்கின்றன. பிறகு வெகு மௌனமாக கூரையிலிருந்து மெழுகுசெய்ய ஆரம்பிக்கின்றன.

தேனீக்களுடைய அடிவயிற்றிலே சிறு வளையங்கள் காணப்படுகின்றன. இவைகளின் உள்ளே மெழுகுப் பைகள் இருக்கின்றன. மெழுகுப் பையினுள் இலேசான மெழுகடைகள் உண்டு. தங்கள் பைகளிலிருந்து மெழுகு வெளிப்பட்டதும் பின்கால்களினால் மெழுகை வழித்து முன்கால்களிடம் கொடுக்கும். அந்தமெழுகை தன் வாயிலிருந்து வரும் நீரோடு கலந்து பசுமையாக்கிப் பிறகு தனக்குத் தேவையான பிரகாரம் உருப்படுத்தும். இப்படியெடுக்கப்பட்ட மெழுகை கூட்டினுள் உச்சியிலே கொண்டுபோய்ச் சரியான இடத்தில் பதித்துவைக்கும். இப்படி முதலாவது பதித்து வைக்கிற மெழுகுதான் அஸ்திபார மெழுகு என்று சொல்லப்படும். பிறகு அவை அறைகளை மேலிருந்து கீழ்ப்பக்கமாக கட்டிக்கொண்டேவரும் மெழுகை ஆறுகோண அறைகளாக உருப்படுத்தி ஒன்றோடொன்று சேர்க்கின்றன. ஆறுகோண வடிவாய் அறைகளை அமைத்திருப்பதினாலே அதிக இடம் வீணாய்ப் போகிறதில்லை. இந்த இரகசியத்தை தேனீக்கள் எப்படி அறிந்துகொண்டது என்பதுதான் வெகு ஆச்சரியமாயிருக்கிறது. இந்த ஒரு இரகசியம்தானா? இல்லை. நமக்குத் தேனீக்களைப்பற்றி வெளியாகவேண்டிய இரகசியங்கள் இன்னும் அநேகம் இருக்கின்றன. இப்படி அமைக்கப்படுகிற அறைகள் தேனீ முட்டைகளுக்கும், தேனீ புழுக்களுக்கும் தொட்டில்களாகவும், தேன் பாத்திரங்களாகவும், மகரந்தசாலைகளாகவும் விளங்கும். இந்த அறைகளெல்லாம் உபயோகத்திற்கு ஒத்தபடி பெரிதும் சிறிதுமாக இருக்கும். புதிதாய் அமைக்கப்பட்ட அறைகள் வெகு அழகாகவும், சுத்தமாகவும், வெண்மையாகவும் இருக்கும். ஆனால் நாளடைவில் அவை நிறம் இழந்து கறுப்பாகிவிடும்.

நாம் இந்த விஷயத்தைக் குறித்து இங்கு பெருக்கி எழுதாமற்போனாலும் சிறுவர்கள் தாங்களே தேனீயையும், அதன் நகரத்தையும் குறித்து ஆராய்ச்சிசெய்து பார்ப்பார்களானால் அப்பொழுது தேனீக்களின் வாழ்க்கையைப் பார்க்கிலும் அற்புதமானது வேறொன்றுமில்லை என்று கண்டறிவார்கள்.

(பொக்கிஷபாணி.)

## பூச்சிகளைப்பற்றி.

### (சென்னை பப்ளிஸிடி பீரோவிலிருந்து)

சிலபூச்சிகள் மலேரியா ஜுரம், சீதபேதி, காலரா போன்ற சாதாரணமான வியாதிகளைப் பரவச்செய்கின்றனவையாகையால், அவைகளாலே மனிதனுக்கு அபாயமுண்டு. ஆகையினாலே அப்படி அபாயம் விளைவிக்கும் பூச்சிகளில் முக்கியமானவைகளைப்பற்றிக் கொஞ்சம் தெரிந்துகொள்வது அவசியமானது.

எல்லாப் பூச்சிகளுக்கும் மூன்று ஜதை (ஆறு) கால்களும், சாதாரணமாய் இரண்டு ஜதை றக்கைகளும் உண்டு. இக்கால்களும், றக்கைகளும் பூச்சியின் மார்பிலே காணப்படும். ஒரு முனையில் இந்த மார்பு கழுத்தோடு சேர்ந்தும், மறு முனையில் வயிற்றோடு சேர்ந்தும், ஒரு உடம்பாயிருக்கிறது. பூச்சியின் தலைப்பாகத்தில் கண்களும், வாயும், வாயைச் சேர்ந்த பாகங்களும், உணர்ச்சிக் கருவிகளும் காணப்படுகின்றன. வயிறானது ஒன்பது வளையங்களால் பூட்டப்பட்டு, ஒன்று சேர்ந்திருப்பதாய்க் காணப்படுகிறது.

இந்த தேசத்தில் மனிதனுக்குக் கெடுதியை விளைவிக்கும் முக்கியமான பூச்சிகளாவன:—(1) பேன், (2) மூட்டைப்பூச்சி, (3) தெள்ளு, (4) ஈ, (5) கொசு.

### பேன்.

பேனில் மூன்றுவகை உண்டு. ஒருவகைப்பேன் தலையிலும், மற்றொரு வகை உடுப்புகளிலும், மூன்றாவது வகை சரீரத்தில் மயிர் அடர்ந்துள்ள சில பாகங்களிலும் காணப்படும். முதல் வகைப் பெண் பேன் 50 முதல் 60 வரையிலும், இரண்டாவது வகைப் பெண் பேன் 70 முதல் 80 வரையிலும், மூன்றாவது வகை 10 முதல் 15 வரையிலும், முட்டை இடும். முதல் வகை மூன்றாவது வகைப் பேன்கள் இடும் முட்டை மயிர் அடர்ந்துள்ள பாகங்களைக் கெட்டியாய்ப் பற்றிக்கொண்டு பிசின்போட்டு ஒட்டினாற்போல் மயிரைவிடாமல் இருக்கும். இரண்டாவது வகைப் பேன்கள் இடும் முட்டைகள் துணிகளிலுள்ள தையல் ஓரங்களைப் பற்றிக்கொண்டிருக்கும். மயிரைப்



பற்றிய பேன் முட்டைகள் 3 முதல் 7 நாட்களிலும், துணிகளைப்பற்றிய பேன் முட்டைகள் 3 முதல் 4 நாட்களிலும் குஞ்சுபொரிக்கும். குஞ்சுகள், தாய்ப்பூச்சிகளையே மிகவும் ஒத்திருக்கும். மனிதனுடைய மயிர் அடர்ந்துள்ள எந்த பாகங்களிலாவது, அல்லது அவனுடைய துணிகளிலாவது பொரித்திருக்கும் குஞ்சுகளுக்கு அம்மனிதனுடைய ரத்தமே ஆகாரம். இப்படி ரத்தத்தைக் குடித்து, பேன்கள் 2 முதல் 3 வாரங்களுக்குள் பெரிதாகி, ஆணும் பெண்ணுமாய்க் கலந்து, மறுபடியும் முட்டைகளிட்டு, வம்சவிருத்திசெய்ய ஆரம்பிக்கின்றன. ஜனங்கள் ஒன்றுசேர்ந்து படுத்திருக்கும்போதும், அல்லது தங்கள் துணிகளைப் பிரத்தியேகமாய் வைக்காமல், ஒன்றாய்ச் சேர்த்துப் போட்டிருக்கும்போதும், ஒரு மனிதனிடமிருந்து அடுத்த மனிதனுக்கும், ஒருவன் துணியிலிருந்து அடுத்த மனிதன் துணிக்கும் பேன் தாவிவிடுவதாய்த் தெரியவருகிறது. இப்படி தாவுவதனாலே, ஒரு மனிதனிடம் உள்ள வியாதியை மற்றொருவனுக்குக்கொண்டுபோய்ச்சேர்க்கிறது. எப்படி என்றால், பேன்பிடித்திருக்கும் ஒருவன் ஏதாகிலும் வியாதிகளால் வருத்தப்பட்டுக்கொண்டிருந்தால், அந்த வியாதியஸ்தனுடைய ரத்தத்தைக் குடித்திருக்கும் அவன் தேகத்திலுள்ள பேன்கள் பக்கத்திலுள்ள வேறு மனிதர்களையும் கடித்து, அவர்களுடைய ரத்தத்தில் வியாதிகளைச் செலுத்திவிடுகின்றன. பேன்களினாலே, ஒரு மனிதனிடமிருந்து வேறு மனிதனுக்குக் கொண்டுபோகப்படும் வியாதிகளும் முக்கியமானவை. விட்டுவிட்டு அடிக்கும் ஜுரம், (Relapsing fever), டைபஸ் (Typhus) என்னும் ஒருவகை ஜுரம், டிரெஞ்சு (Trench) என்னும் ஒருவகை ஜுரமுமாம்.

தேகத்தைப்பற்றியுள்ள பேனைத் தொலைப்பதற்கு வெகு நல்ல வழி எதென்றால், பேன் பிடித்திருக்கும் இடத்தில் மண் எண்ணெயைப் போடுவதினாலே, பேன்கள் செத்துப்போவதுமன்றி, ஈரும் பேனும்சாய்ச்சோந்து மயிரில் அடைபோல் கெட்டியாய்ப்பற்றியிருப்பது மாறிப்போய்விடும். ஆகையினாலே மயிரைக்கெட்டியாய்ப் பிசினபோல பற்றியிருக்கும் ஈரும், (பேன் முட்டைகளும்), மயிரை வாரும்போது லகுவாய் வெளிப்படுத்தப்பட்டுபோகும். மயிரைப்பற்றிய பேனை தொலைத்துவிடுவது இம்மாதிரியாயிருக்க, துணிகளைப்பற்றும் சிலைப்பேனைத் தொலைப்பதற்கு நல்லவழி, துணிகளை தண்ணீரில் கொதிக்கவைத்து வேகவைப்பதே. இரண்டாவது வகையான பேன் அக்குளுக்குள்ளிலும், மர்ம ஸ்தானங்களிலும் உள்ள மயிரைப்பற்றியிருக்கும்போது, இதைத் தொலைப்பதற்கு, அவ்விடத்திலுள்ள மயிரை அவசியமானால் க்ஷவரம் செய்துவிடுவதே நல்லது.

ஆகவே, குழந்தைகளுக்குப் பேன் புழுக்கவிடாமல் காப்பாற்றுவது பெற்றோர்கள் கடமையாகும். குழந்தைகளுடைய துணிகளையும், தேகத்தையும் வெகு சுத்தமாய் வைத்துக்கொள்ளவேண்டும்.

### மூட்டைப்பூச்சி.

இச்சிறு பூச்சி ஆயிரக்கணக்கான வருஷங்களாய் மனிதனுக்குத் தெரியப்பட்டுள்ளது. இதை சுவற்றுப்பேன் என்று முதல் முதலில் சொல்லப்பட்டுவந்தது. ஆசியாவிலும் ஐரோப்பாவிலும் இப்பொழுது இந்தப்பூச்சி காணப்பட்டுவருகிறது. சிவப்பும் பழுப்பும் கலந்த நிறமுள்ளது. தலைகுறுகல், ஆனால் அகலம் அதிகம். தலையில் இரண்டு கண்ணும், இரண்டு உணர்ச்சிக்கருவிகளும் உண்டு. சுவர், தரை, தட்டுமுட்டு சாமான் ஆகிய இவைகளில் உள்ள சந்துகளில் வசிக்கும். மனிதர்கள் தேகத்திலுள்ள இரத்தத்தைக் குடிக்க இராக்காலங்களில் வெளியேவரும். அவசியமாயிருக்கும்போது, வீடுவீடாய் ஆகாரத்தை நோக்கிச்செல்லும். அவைகளுக்கு, மனிதரத்தமே ஆகாரம். மூட்டைப்பூச்சி, தனது மிருதுவான உணர்ச்சிக்கருவிகளால் மேல்தோலை பரிசோதித்து, தகுந்த ஒரு இடத்தைத் தேர்ந்தெடுத்து, அவ்விடத்தை, தன் வாயிலுள்ள நீண்டதொரு கூர்மையான உறுப்பில் குத்தி, காயப்படுத்தி, ரத்தத்தை வரவழைத்து, அதில் தன் வாயிலிருந்துவரும் ஒருவித எச்சிலைவிட்டு, ரத்தத்தைப் பெருக்கி, அதை உறிஞ்சிக்குடிக்கும். பெட்டை மூட்டைப்பூச்சி, வருஷத்திற்கு மூன்று, நான்கு தடவை, சுமார் 50 முட்டைகள் இடும். இம்முட்டை [illegible] முட்டைவடிவமாயிருக்கும். 25-ல் 1 பாகம் அங்குலந்தான் (1/25 அங்குலம்) நீளம் இருக்கும். நிறம் வெள்ளை. சுமார் 7 முதல் 10 நாளைக்குள், அம்முட்டைகள் குஞ்சுபொரிக்கும். இக்குஞ்சுகள், தாய்ப் பூச்சியைப்போலவே இருக்கும். அவைகளுக்குப் புழுக்குஞ்சு, என்றே பெயர். இப்பூச்சிகள் மெதுவாக வளர்ந்து, தன் மேல்தோலை 8 நாளைக்குள் ஐந்துதரம் உரித்துவிடும். அதற்குப்பிறகு, தாய்ப்பூச்சியின் உருவம் அதற்கு வந்துவிடும். ஆகவே, முட்டையிலிருந்து, மூட்டைப்பூச்சி ஸ்திதிக்கு வருவதற்கு, சுமார் 7 முதல் 11 வாரங்கள் பிடிக்கும். இதுவரையில் இவைகளுக்கு ஆகாரம் ரத்தத்தைத்தவிர வேறில்லை. பூர்ணவளர்ச்சியடைந்த மூட்டைப்பூச்சிக்கு ஒருவிதமான துர்க்கந்தம் உண்டு என்பதை நீங்கள் பார்த்திருக்கலாம். இவ்வித துர்நாற்றம் இருப்பது, இந்தப்பூச்சி ஆபத்தினின்றும் தப்பித்துக்கொள்ள உதவுகிறது. இதற்கு இயற்கையாய் உள்ள விரோதிகள் கரப்பான் பூச்சியும் எறும்புமாம். இவைகளினின்றும் தப்பித்துக்கொள்ளவேண்டும்போது தன்னிடத்தில் உள்ள துர்க்கந்தத்தை வெளிப்படுத்தி, அதனால் தன் எதிரிகளினின்றும் தனனைக் காப்பாற்றிக்கொள்ளுகிறது.

எப்படி பேன் ஒரு மனிதனிடமிருந்து வேறு மனிதனுக்கு வியாதியைக்கொண்டுபோய்ச் சேர்க்கிறதோ அப்படியே மூட்டைப்பூச்சியும் விட்டுவிட்டு அடிக்கும் ஜுரத்தை (Relapsing fever) ஒரு மனிதனிடமிருந்து வேறு மனிதனுக்குக் கொண்டுபோய்ச் சேர்க்கின்றது. மேலும் இம்மூட்டைப்பூச்சியே 'காலாஅஸார' என்னும் விஷச்சுரத்தைக்கூட பரவச்செய்வதாகத் தெரியவருகிறது. ஆயினும் இதை நிஸ்ஸந்தேகமாய்க் கூறமுடியாது.

இம்மூட்டைப்பூச்சியைப் பரவவிடாமல் தடுத்துக்கொள்வதற்கு நாம் செய்யவேண்டியது யாதெனில், சுவர்கள், தரைகள் முதலிய இடங்களில் சந்துபொந்துகள் இராமல் பார்த்துக்கொள்ளவேண்டும். பேனைத்தொலைப்பதற்கு மண் எண்ணெயை உபயோகப்படுத்தினதுபோலவே, மூட்டைப்பூச்சியைப் போக்கடிக்க மண் எண்ணெய் வெகுவாய் பிரயோஜனப்படுவதில்லை. (Acetic acid) அஸடிக் ஆஸிட் என்று சொல்லப்படும் ஒரு காடியான திராவகத்தையாவது, அல்லது புளிச்சக் காடியையாவது தட்டுமுட்டு சாமான்களிலுள்ள இடுக்குகளிலும் சந்துபொந்துகளிலும் கொட்டினால், அவ்விடுக்குகளில் பதுங்கிக்கொண்டிருக்கும் மூட்டைப்பூச்சிகளைப் போக்கடிக்கவேண்டுமானால், புகை போடவேண்டும். புகை போடும்போது, அறையிலுள்ள கதவுகள், ஜன்னல்களை நன்றாய்ச் சாத்திவிடவேண்டும். வெளியிலிருந்து அறைக்குள் காற்று உட்செல்லாதபடி இடுக்குகளையும் நன்றாய் அடைத்துப்போடவேண்டும். பிறகு, 1,000 கன அடி (cubic feet) இடத்திற்கு 4 அவுன்ஸுகள் வீதம்; அறைக்குவேண்டிய அளவு கந்தகத்தை அறைக்குள் எரிக்க ஏற்பாடு செய்யவேண்டும். அப்படி அறையில் கந்தகப்புகை போடும்பொழுது, அறைக்குள் ஒருவரும் தங்கியிருக்கக்கூடாது. 1 மணி சுமார் அறையைத் திறக்காமல் மூடியே வைத்திருக்கவேண்டும். பிறகு திறந்து பார்த்தால் மூட்டைப்பூச்சிகள் எல்லாம் செத்துக்கிடப்பதாய்த் தெரியவரும். பிறகு, அறையிலுள்ள சந்துபொந்துகள், இடுக்குகள் முதலியவைகளை எல்லாம் நன்றாய் அடைத்துப்போட்டு, அறையைச் செவ்வையாய் வெள்ளையடிக்கவேண்டும்.

### தெள்ளு.

தெள்ளுகளில் பலவகை உண்டு. சில நாய்களின்பேரிலும், சில எலி சுண்டெலிகளின்பேரிலும், சில பூனை முதலிய வேறு பல மிருகங்களின்பேரிலும், வேறொருவகை மனிதன்பேரிலும் பரவுவதாய்க் காணப்படுகிறது. இப்படிப் பலவிதமான தெள்ளு வகைகளில் எலிகளின்பேரிலும், சுண்டெலிகளின்பேரிலும் காணப்படும் தெள்ளுதினுசுதான் இந்தியாவில் விசேஷமாய்க் கவனிக்கத்தக்கவை. ஏனென்றால், இத்தெள்ளு, ஒரு எலியிலிருந்து வேறு ஒரு எலிக்கு 'பிளேக்' என்னும் பெருவாரி நோயைப் பரவச்செய்துவிடுகிறது. வேறு எலிகளுக்கு இந்நோயைப் பரவச்செய்ய எலிகள் கிடைக்காவிட்டால் மனிதனுக்கு அந்நோயை உண்டாக்கிவிடுகிறது. முதல் முதலாய் எலித்தெள்ளு ஈஜிப்டு என்று சொல்லப்படும் தேசத்திலுள்ள நைல் (The Nile) ஆற்றுப் பள்ளத்தாக்கு பூமிகளினின்று வெளிவந்திருப்பதாய் நம்பப்படுகிறது. ஆனால், தற்காலத்தில், பூலோகம் முழுவதிலும் இத்தெள்

ளு பரவியிருக்கிறதாகவே தெரியவருகிறது. இத்தெள்ளில் பெண்தெள்ளு, தடவைக்கு 1 முதற்கொண்டு 5 முட்டைகள்வரையில் இடும். அம்முட்டைகள் உருண்டையாயும் மெழுகுபோல் மங்கல வெள்ளையாயும், அல்லது முத்துப்போல் வெள்ளையாயும் இருக்கும். அவைகள் ஒவ்வொன்றும் சுமார் (1/50 அங்குலம்) தான் நீளமிருக்கும். அம்முட்டைகள் இரண்டு நாளைக்குள் குஞ்சு பொரிக்கும். அப்பொழுது முட்டைகளிலிருந்து சிறுசிறு புழுப்போல உள்ள ஜந்துக்கள் வெளிவரும். இப்புழுக்கள் வெகு சுறுசுறுப்புள்ளவை. சூரிய வெளிச்சத்தைப் பார்க்காமல் ஒளிந்துகொண்டுவிடும். இப்படி ஒருவாரம் ஒளிந்திருந்தபிறகு, அவைகளுக்குள்ள சுறுசுறுப்பு மாறி, மந்தப்பட்டு, ஆகாரம் எடுக்காமல், ஒருவித கூடுகட்டிக்கொள்ள ஆரம்பிக்கும். இக்கூடுகள் வெகு மெல்லியவை. வெண்மை நிறமுள்ள பட்டுப்போன்ற ஒருவித நூலால் அமைக்கப்படும். இப்படிக்கட்டப்படும் இச்சிறு பூச்சிக்கூடு, குப்பைகூளங்களால் மறைந்துபோவதினாலே, அக்கூடுகள் இருப்பதைக்காண்பது அரிது. சுமார் 7 முதல் 14 நாளைக்குள், இப்பூச்சிக்கூட்டிலிருந்து, சிறிய தெள்ளானது வெளிப்படும். இத்தெள்ளு பூர்ணவளர்ச்சியடைய சுமார் மூன்றுவாரம் பிடிக்கிறது. சதசதப்பு அல்லது ஈரம் இத்தெள்ளுப்புழுக்களுக்குக் கெடுதலை உண்டுபண்ணக்கூடியது. குஞ்சு பொரிக்கப்பட்ட தெள்ளு ரத்தத்தைக் குடித்தே ஜீவிக்கிறது. ரத்தத்தைக்குடிக்கத் தகுந்தபடி உயிர்ப்பிராணி அகப்படாவிட்டால், அது பட்டினி கிடந்து சாகவேண்டிவரும். ஆயினும், ஆகாரமின்றி அத்தெள்ளு, ஒருவாரம் அல்லது இரண்டுவாரம்வரையில் ஜீவித்திருக்க முடியும். எலித்தெள்ளே பிளேக் என்னும் பெருவாரி நோயைப் பரவச்செய்யும்.

வீடுகளில் தெள்ளுவாராமல் பார்த்துக்கொள்வதற்கு வெகு சுலபமான உபாயம் என்னவென்றால், வீடுகளை அழுக்குப்படியவைக்காமல் சுத்தமாய் வைத்துக்கொள்ளவேண்டும். வீடுகளில் எலிகளை வரவொட்டாமல் பார்த்துக்கொள்ளவேண்டும். இப்படிச்செய்துவிட்டால், பிளேக்கினால் பயமே இல்லை. எலித்தெள்ளு வீட்டில் வாராமல் பார்த்துக்கொள்ளுவதற்கு, வீட்டில் குறைந்த பக்ஷம் ஆறுமணி நேரம்வரையில் சூரிய வெளிச்சமும் வெய்யிலும் நன்றாய்ப்படும்படிச் செய்யவேண்டும். இப்படி வீட்டில் வெய்யிலும் வெளிச்சமும் நன்றாய்ப் படுவதற்காக, வீட்டின் ஓடுகளைப் பிரித்துவிட்டுக் கொஞ்சகாலம் வைத்திருக்கவேண்டும். வீடு ஓடுவீடாய் இராமல் மாடிக்கட்டடமாயிருந்தால், மண்ணெண்ணெய் கலந்த (Emulsion) ஒருவித மருந்து ஜலத்தை விட்டு, வீட்டை அடித்துக்கழுவலாம். இப்படிச்செய்து ஒன்று அல்லது இரண்டுநாள் கழித்த பின்பு, வீட்டை செம்மையாய் வெள்ளையடித்துவிடுவது நல்லது. வீட்டில் இருக்கும் தெள்ளுப்பூச்சிகள் வீட்டைப்பெருக்கும்போது அகப்பட்டுவிடும். அவைகளை வெளியே எறிந்துபோடலாம். பெருக்கிவந்த தூசி முதலான அசுத்தங்களை தீ வைத்துக் கொளுத்திவிடவேண்டும். இப்படிச்செய்துவிட்ட பிற்பாடு, மறுபடியும் வீட்டில் எலிகள் வராதபடி பார்த்துக்கொள்ளவேண்டும். எலிகளோ, ஆகாரத்திற்காக வீடுகளுக்குள்ளே வரும், வீடுகளில் அசுத்தம் இராமலும், ஆகார பதார்த்தங்கள் அங்கும் இங்கும் சிதறிக்கிடக்காமலிருக்கும்படிக்கும், சாப்பிட்டு மீதியான ஆகாரங்கள் மூலை மூலையாய் இறைந்து கிடக்காமலிருக்கும்படிக்கும் நாம் பார்த்துக்கொள்ளுவோமானால், எலிகளுக்கு வீட்டிற்குத்திரும்பிவர ஹேது ஒன்றும் இராது. மேலும், வீட்டின் தரையும் சுவர்களின் அடிபாகங்களும் உறுதியாய்க்கட்டப்பட்டு, எலிகள் அறுக்கமுடியாமல் பந்தோபஸ்தாயிருக்குமானால் எலிகள் வர இடமிராது. அப்படி பந்தோபஸ்துச் செய்வதற்கு வீடுகளின் தரையும் சுவர்களும், சிமெண்டுச் சுண்ணாம்பினாலாவது, அல்லது கருங்கல்லினாலாவது கட்டியிருக்க வேண்டும்.

## ஈக்கள்.

ஈக்களில் பலவகை உண்டு. சில ரத்தம் உறிஞ்சுவன. ஆகையினாலே அவைகளுக்கு கடிக்கும் ஈக்கள் என்று பெயர். வேறு சில ரத்தம் உறிஞ்சுவதில்லை. ஆகையினாலே அவைகளுக்கு கடியாத ஈக்கள் என்றும் பெயர். ரத்தம் உறிஞ்சும் ஈ வகைகளில், குறைந்த பக்ஷம் 2,000 தினுசுகள் இருப்பதாய்த் தெரியவருகிறது. ஆனால் இவைகளில் கொஞ்சம் தினுசு ஈக்கள் மாத்திரமே, நாம் மிகவும் முக்கியமாய் கவனிக்கத்தக்கவை. உதாரணமாக, ஆப்பிரிக்காவில் ஒருவகை ஈக்கள் இருக்கின்றன. அவைகள் கடித்துவிட்டால், மனிதனுக்குத் தூக்கம் எப்பொழுதும் வந்துவிடுகிறது. அதுவே பெரிய வியாதியாகிறது. இந்த ஈக்களுக்கு (Tse-tse) டிஸிடிஸி ஈ என்று பெயர். சென்னைப்பட்டணத்திலே ஒருவகை ஈ இருக்கிறது. அது கடித்துவிட்டால் ஜுரம் வந்துவிடுகிறது, ஜுரம் மூன்று நாளைக்கு அடிக்கிறது. இந்த ஈக்கு (Sand-fly) மணல் ஈ என்று பெயர். இந்த மணல் ஈக்கடியால் உண்டாகும் ஜுரத்திற்கு மணல் ஈ ஜுரம் என்று பெயர். கடிக்காத ஈக்களிலே வெகு சாதாரணமானது வீட்டு ஈ. ஆகையினாலே, நம்முடைய இந்தியாவிலே இருக்கப்பட்ட மணல் ஈயைப்பற்றியும், வீட்டு ஈயைப்பற்றியும் நாம் கொஞ்சம் தெரிந்துகொள்வது நல்லது.

## (Sand-fly) மணல் ஈ அல்லது Philebotomus-fly.)

இந்த ஈ வெகு நுட்பமானது. எவ்வளவு நுட்பமானது என்றால், சாதாரணமான கொசுவலையிலுள்ள நுட்பமான துவாரத்தின் வழியாய் உட்செல்லக்கூடியது. இந்த ஈயின் வேலை எல்லாம் ராத்திரியில்தான். ஆயினும் வெளிச்சத்தைக் கண்டால் வெளிவந்துவிடும். பகல் வேளைகளில், இந்த ஈ வீடுகளிலுள்ள சீதளமாயும், நிழலாயும் உள்ள இடங்களிலும், கற்களின் அடியிலும் மரங்களிலுள்ள பொந்துகளிலும், ஜன்னல், கதவுகள், புஸ்தகங்கள், படங்கள் முதலானவைகளுக்குப் பின்புறத்திலும், அநேகமாய் கக்கூசுகளிலுமே பதுங்கி இருக்கும். பெண் ஈ, மனிதன் கிட்ட வரும்போது, அவன் தேகத்திலுள்ள ரத்தத்தை உறிஞ்சும். அங்ஙனம் மனித ரத்தம் அகப்படாவிட்டால், ஆடுமாடுகள், நாய்கள், தவளைகள், பல்லி முதலான ஜந்துக்களின் ரத்தத்தை உறிஞ்சித் திருப்திப்பட்டு ஜீவிக்கும். இந்த ஈ பறக்கும்போது சத்தம் கேட்காது. ஒரு தடவை அது ஆகாரத்தை உட்கொண்ட பிற்பாடு, 36 மணிக்கு மேற்பட்ட 40 மணிக்குள்ளாகத்தான் இன்னொரு தடவை அது ஆகாரத்தை அபேக்ஷிக்கும்.

இந்த ஈ இடும் முட்டைகள் நீளமாயும், கோழிமுட்டை வடிவமாயும் இருக்கும். முட்டைகளின்மேல் நெடுக கறுப்புக் கோடுகள் அடர்ந்தும், சில இடங்களில், குறுக்குக்கோடும் அடர்ந்து இருக்கும். முட்டைகள் அதி நுட்பமானவை. 1/150 அங்குலம் முதற்கொண்டு 1/50 அங்குலம் வரையில்தான் நீளமுள்ளன. சுவர்களிலுள்ள சந்து பொந்துகளிலும், கற்களுக்கு இடையிலுள்ள சந்துகளிலுமே முட்டைகள் தனித்தனியாய் வைக்கப்படும். வெய்யில் அடிக்கும்போது, இம்முட்டைகள் 4, 6 நாட்களில் குஞ்சு பொரிக்கும். மழைகாலங்களில் குஞ்சுபொரிக்க 14 நாள் பிடிக்கும். புழுவாய் இருக்கும் குஞ்சுகள் 1/12 முதல் 1/6 அங்குல நீளம்தான் இருப்பதினாலே, அவைகள் வெகுச் சிறியவை. ஆகையினாலே முட்டையிலிருந்து வெளிப்படும் புழுக் குஞ்சுகளைக் கண்டுபிடிப்பது வெகு சிரமசாத்தியமானது. புழுக்குஞ்சுகள் கூடுகட்டிக்கொண்டு கூட்டிற்குள் இருக்கும்போது அவைகளைக் கண்டுபிடிப்பது இன்னும் கடினம், ஏனென்றால் அவைகள் வெகுச் சிறியவையாயிருப்பதுமன்றி, அவைகள் அசைவதேயில்லை. மேலும் எந்தக் கல்லுக்கு இடையில் முட்டை வைக்கப்பட்டு இருக்கிறதோ அந்தக் கல்லின் நிறம்போலவேயும் அநேகமாய் இருக்கின்றன.

ஏற்கனவே சொல்லியிருக்கிறபடி இந்த ஈ, மணல் ஈ ஜுரம் என்பதைப் பரவச்செய்கிறது.

இந்த ஈ கடிக்கவொட்டாமல் பாதுகாத்துத் தப்புவது வெகு கஷ்டம். இந்த ஈக்களைத் தொலைப்பதற்கு வெகு நல்ல உபாயம் யாதெனில், இவைகள் எங்கே பதுங்கிக்கொண்டிருக்கின்றனவோ அவ்விடங்களில் அல்லது இவைகள் எங்கே முட்டையிடுமோ அவ்விடங்களிலும் 100-க்கு 1 வீதம் தயார் செய்யப்பட்ட (Formaline Solution) "பார்மலின் ஸொலூஷன்" என்னும் மருந்து ஜலத்தை பீச்சாங்குழாய் வழியாய் அடிப்பதே வெகு மேலானது.

## வீட்டு ஈ.

இந்தச்சிறு வீட்டு ஈக்களின் உபத்திரவம் யாவருக்கும் தெரியும். வெகு காலமாய் இவைகள் மனிதனுடன் கூடவே, தோழன் போல புழங்கிக்கொண்டிருக்கின்றன.



ஒரு நாளைக்கு 120 முதல் 150 வீதம் பெண் ஈ முட்டை இடும். இந்த ஈ ஜீவித்திருப்பதோ 2 அல்லது 3 வாரந்தான். இந்த சொற்ப காலத்திற்குள்ளாக 4 தடவை முட்டைகளிடும். ஆகவே ஒரே ஒரு ஈ, தடவைக்கு 120 முட்டைகள் வீதம் ஒருவருஷத்திற்குள் முட்டையிட்டு, எவ்வளவு ஈக்கள் உற்பத்தி பண்ணும் என்பதை லகுவாய்க் கணக்கிட்டு விடலாகும். அதாவது ஒரு ஈயானது ஒருவருஷத்திற்குள் 500 கோடி ஈக்களை உற்பத்தி செய்யக்கூடும். ஆனால் அப்படி உற்பத்தியாகும் ஈக்களில், அநேகம் ஈக்களை, அவைகளுக்கு வைரியாக கோழிகள், தூக்கணாங்குருவிகள், தேள், பூரான் முதலியவைகள் தின்றுவிடாமலிருந்தால், ஒரு ஈ அவ்வளவு ஏராளமாய் விர்த்தியாகிவிடும். இந்த ஜந்துக்களுக்கு ஈயும், ஈக்குஞ்சுகளும் உயர்ந்த ஆகாரம். ஈயின் முட்டைகள் சுறுசுறுப்பாயிராமல் மந்தமாயிருக்கும். அவைகள் சிமைச்சுண்ணாம்பு போல் வெள்ளை நிறமாயிருக்கும். நீளமாயும் கோழிமுட்டை வடிவமாயும், ஒரு முனையில் கொஞ்சம் அதிகம் நீண்டும் இருக்கும். அப்படி நீண்டிருப்பது சுமார் 1/25 அங்குலம் முதல் 1/20 அங்குலம் வரையில் இருக்கும். எந்த இடங்களில் முட்டைகள் குஞ்சுகளாகப் பொரித்த உடனே, அக்குஞ்சுகளுக்கு ஆகாரம் தகுதியானபடிக் கிடைக்குமோ, அங்கே, சிறு சிறு கூட்டங்களாய் ஈக்கள் முட்டையிடும். முட்டையிலிருந்து வெளிவரும் புழுக்குஞ்சுகளுக்கு ஆகாரம் புல், பூண்டு முதலிய தாவரமே. ஆகையினாலேதான், அழுகியிருக்கும் மரம், தழை, இலைகளிலும், எல்லாவிதமான எருக்களிலும், குதிரை, ஆடுமாடு, மனிதன், கோழி முதலிய பிராணிகளின் மலங்களிலும், தண்ணீர் தங்கியிருக்கும் சாக்கடையிலுள்ள சகதி கும்பிகளிலும் அழுகிப்போகும் காய்கறி பதார்த்தங்களிலும், அழுகின பழங்களிலும், உருளைக்கிழங்கு தோல்களிலும், வாழைப்பழம், மாம்பழம் முதலான பழங்களின் தோல்களிலுமே ஈக்கள் முட்டைகளை இடுகின்றன. கோடை நாட்களில் இந்த முட்டைகள் ஒரே நாளில் குஞ்சுபொரித்துவிடும். மழை நாட்களிலோ இரண்டு நாள்களில் குஞ்சு பொரிக்கும். முட்டையிலிருந்து புழுவடிவமாய் வெளிவரும் குஞ்சுகள் வெளிவந்து இரண்டு நாள் வரையில் வெகு அதிகமாய் ஆகாரம் தின்னும், அப்படித் தின்னும்போது அவைகளின் தேகம் சில மாறுதல்களை அடையும். அப்படி மூன்று நாலு நாளைக்கு வளர்ந்த பிறகு அவைகளுக்கு சுறுசுறுப்புமாறி மந்தம் உண்டாகி இந்த மந்த ஸ்திதியிலே வேலை ஒன்றும் செய்யாமல் அசைவற்றுக்கிடக்கும். இந்த ஸ்திதியில் இதைப்பார்த்தால் சுத்த வெளுப்பாயிராமல், வெளுப்பு நிறம் மங்கிப்போய் வெளுஞ்ச மஞ்சள் நிறமுடையதாயாவது அல்லது பழுப்பு நிறமாகவாவது இருக்கும் பசுமாட்டின் சாணியின் குப்பையாவது அல்லது குப்பலாயிருக்கப்பட்ட எருவையாவது கிளறினால் புழுக்கள்போன்ற சில ஜந்துக்களைப் பார்க்கலாம். இவைகள்தான் அநேகமாய் ஈ முட்டைகளிலிருந்து வெளிப்படும் புழுக்குஞ்சுகள். இப்புழுக்குஞ்சுகள் கொஞ்சநாள் வெகு சுறுசுறுப்பாயிருந்து பிறகு மந்தகதியையடைந்து ஒரு வேலையும் செய்யாமலிருக்கும் ஸ்திதியிலிருந்து பிறகுதான் ஈக்களாக வெளிப்படுகின்றன. அப்படி வெளிப்படும்போது அவைகள் முதல் முதலில் மண்ணோடு மண்ணாகவாவது எருவோடெருவாகவாவது கலந்து கிடக்கும். ஏனென்றால் இந்த இடங்களிலேதான் ஈக்கள் முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கின்றன. அழுக்கு கூளம் குப்பை ஆகிய இவைகளில் மாத்திரம் ஈ முட்டையிட்டுக்குஞ்சு பொரித்து வளர்வதனால் அப்படி உண்டாகும் ஈக்களினால அபாயமில்லை. ஆனால் ஈக்கள் அப்படியே வளர்வதில்லை. கடைத்தெருவில் உள்ள பக்ஷணக்கடைகளில் வைக்கப்பட்டிருக்கும் பக்ஷணங்களில் ருசிகொண்டு எப்படி ஈக்கள் பக்ஷணங்களில் மொய்க்கின்றனவோ, அப்படியே வெகு சுலபமாய் காலரா என்னும் வாந்திபேதியால் அடிபட்ட வியாதியஸ்தனுடைய மலத்திலும் அதிக ருசிகொண்டு ஈக்கள் மொய்க்கின்றன. ஆகையினால்தான் ஒரு மனுஷனுக்குள்ள வியாதிக்கிருமிகள் மற்றொருவனுக்கு ஈக்களால் கொண்டுபோகப்பட்டு வியாதி அநேகமாய்ப் பரவி, அதினால் ஜனங்களுக்கு அவஸ்தையை உண்டாக்கிவிடுகிறது. ஆகார பதார்த்தங்களில் உட்காரும்போது அது என்ன செய்கிறது என்பதை உற்றுப்பாருங்கள். தன் தலையையும், வாயையும், வாயிலுள்ள உறுப்புகளையும், கால்களையும், றக்கைகளையும் எவ்வளவு தீவிரமாய் ஈ சுத்தம் பண்ணிக்கொள்ளுகிறது என்பதை நீங்கள் பார்த்திருக்கலாம். எந்த பதார்த்தத்தில் ஈ உட்கார்ந்து அந்தப்பதார்த்தத்தை தின்கிறதோ அதில் ஒருவித திரவத்தை ஒரு சொட்டு விடுவதையும் நீங்கள் பார்க்கலாம். இப்படி விடப்படும் திரவம் ஆகாரப்பதார்த்தத்தில் கொஞ்சத்தைக் கரைத்துவிடுவதனாலே அப்படிக்கரைந்துபோன ஆகாரத்தை ஈ உறிஞ்சிக்குடிக்கிறது. இப்படி விடப்படும் திரவத்தின் ஒரு சொட்டு ஈயின் வயிற்றின் முன்பாகத்திலிருந்து வெளிப்படுகிறது. ஆகவே ஈ இதற்கு முன்னேயே தின்று இருக்கப்பட்ட வேறு எதாகிலும் ஆகாரத்தில் உள்ள கெடுதல்களும் இந்த ஒரு சொட்டு திரவத்தில் அநேகமாய் சம்பந்தப்பட்டே இருக்கும். ஆகவே ஈ ஆகாரத்தில் உட்கார்ந்து சாப்பிடுவதினாலே மனிதன் சாப்பிடும் ஆகாரம் கெட்டுப்போகிறது என்று உங்களுக்குத் தெரியலாகும். ஈ உட்காருவதினாலேயும் ஆகாரம் கெட்டுப்போகிறது. அது எப்படியென்றால், ஈக்களின் காலில் மெத்தைபோன்ற ஒரு உறுப்புண்டு. இவ்வுறுப்பே, வியாதிக்கிருமிகளை சாதாரணமாய் இழுத்துக்கொண்டு வருகின்றது. மேலே காட்டிய இந்த இரண்டு மாதிரியாய் வீட்டு ஈக்களாலே பரவக்கூடிய வியாதிகளில் முக்கிய மாதிரியானவை:—டைபாயிடு (Typhoid) என்னும் விஷசுரம்; காலரா, அல்லது வாந்திபேதி, சீதபேதி; அஜீரணம் (Diarrhoea), டயரிய்யா; க்ஷய ரோகம்; பலவகையான புண்கள் நேத்திர ரோகங்கள்.

ஈக்கள் வாராமலும், ஈ மொய்க்காமலும் பாதுகாத்துக்கொள்ளுவதற்கு மேலான உபாயமாவது பரிசுத்தமாயிருத்தலேயாம். மனிதன் உடம்பு பரிசுத்தமாயிருக்கவேண்டும். அவன் வீடு, வாசல், சுற்றுப்பக்கம் பரிசுத்தமாயிருக்கவேண்டும். இப்படி மனிதன் இருக்கும் இடம், குப்பை கூளம், அழுக்கு, ஆபாஸம், அசுசி முதலியவைகள் ஒன்றுமில்லாமல், சுத்தமாயிருக்குமானால், ஈக்களுக்கு அங்கே இருக்க இடமே இராது. அவைகள் அங்கே வளர்ந்து, வர்த்திக்க ஆதாரமே இல்லை. மேலே சொன்ன விதமாய், கொஞ்சங்கூட அசுத்தமில்லாமல மனிதர்கள் யாவராலும் இருக்கக் கூடாததினாலே, ஈக்களைப் பரிபூரணமாய்த் தூரத்திவிட வேறு பலவித உபாயங்கள் செய்யும்படிக்குக் கோரப்படுகிறது. அவைகளில் முக்கியமானவைகள்:—

1. ஈக்கள் அபரிமிதமாய் மொய்க்கும் காலங்களில் ஜன்னல்களுக்கும், கதவுகளுக்கும் திரைபோட்டு, மூடிவைத்திருத்தல். ஜன்னல்களுக்கு நீலவர்ணமுள்ள கண்ணாடிக்கதவுகளைப் போடுவதும், ஈக்களை வரவொட்டாமல் தடுப்பதற்கு நல்ல உபாயம். ஏனென்றால், நீலவர்ணத்தை ஈக்கள் பார்க்க இச்சைப்படுவதில்லையாம்.

2. ஈக்களைப் போக்கடிப்பதற்காகவே உண்டாக்கப்பட்ட (Flypapers) என்னும் ஒருவித காகிதத்தை ஈக்கள் "புழங்கும்படி பிரித்துவைத்தல். இந்தக் காகிதங்களை தயார்செய்வது எப்படி என்றால், ஈக்களைக் கொல்லுவதற்கான ஒருவித பாஷாண மருந்தை தித்திப்போடு கலந்து, "அதைக் காகிதத்தில் நன்றாய்த் தடவிவைத்தலேயாம். தித்திப்பு சத்துள்ள இந்தக் காகிதத்தைக் கண்டு ஈக்கள் அவைகளின் மீது "மொய்க்கின்றன." அவைகள் அப்படி மொய்த்து, தித்திப்புசத்தைச் சாப்பிடும்போது, பாஷாணத்தையும் உட்கொண்டு செத்துப்போய் விடுகின்றன.

3. வீடுகளிலும், வீட்டுப்பக்கங்களிலும் எரு எதாவது சேர்ந்திருந்தால், அதை உடனுக்குடனேயாவது, அல்லது 24 மணி நேரத்திற்குள்ளேயாவது எடுத்து, அப்புறப்படுத்துவதும்;

4. கக்கூசுகளை, சுத்தம்பண்ணுவதற்கு ஏற்பட்டிருக்கும் சில மருந்து திராவகங்களைக்கொண்டு, கக்கூசுகளைச் சுத்தப்படுத்துவதும், மலங்களை அப்போதைக்கப்போது எடுத்து, அப்புறப்படுத்துவதும்.

5. எந்த இடங்களில ஈக்கள் முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கின்றனவோ, அந்த இடங்களை எல்லாம், மூன்று நாளைக்கு ஒருதரம் தீவைத்துப் பொசுக்கிவிடுதல். இப்படிப் பொசுக்குவதினாலே, ஈ முட்டைகள் எல்லாம் கொளுத்தப்பட்டுச்சாகின்றன.

6. வியாபாரத்திற்காக வெளியே வைக்கப்படும் ஆகார பதார்த்தங்களையும், வீடுகளில் உள்ளேவைக்கப்படும் தின்பண்டங்களையும் ரவைகதுணியினாலாவது அல்லது கண்ணாடிப் பெட்டியினாலாவது மூடிவைப்பது.

(இன்னும் வரும்.)

## மகா விருக்ஷங்கள்.

நீங்கள் உங்களுடைய கிராமங்களில் மிகவும் உயரமான மரம் எதாவது பார்த்திருக்கிறீர்களா? அப்படியானால் அந்த மரத்தின் உயரமென்னவென்று கணக்கிட்டுப் பாருங்கள். நம்முடைய சில பனை மரங்கள் மிகவும் உயரமாக வளர்ந்திருப்பதைக் காணலாம். கொடைக்கானலில் யூக்லிப்டஸ் மரங்கள் மிகவும் உயரமாக வளர்கின்றன. ஆனால் இந்த மரங்களெல்லா வற்றைப்பார்க்கிலும் மிகவும் உயரமான மரம் எது என்று அறிவீர்களா?

அமெரிக்காவில் காலிபோர்னியா என்றொரு இடம் உண்டு. இந்தப் பிரதேசத்திலுள்ள மலைகளுக்கருகாமையிலுள்ள மரங்களில மிகவும் உன்னதமான மரங்கள் நிற்கின்றன. இவை உயரத்திலும் பருமனிலும் இராட்சசப் பிரகிருதியாக விருக்கின்றன. இவை ஒருவகையான செம்மரம். இந்த மரங்களோடு மற்றெந்த மரங்களையும் ஒப்பிட முடியாது. எழுபது வருஷங்களுக்கு முன் ஒரு துரை ஒரு பன்றியைத் தொடர்ந்து வேட்டையாடச் சென்று இந்த இராட்சச மரங்களடர்ந்த ஒரு கானகத்தில் பிரவேசித்தான். அவன் அவற்றைக் கண்டு ஸ்தம்பித்துப் போனான். அவன் தன் நண்பர்களிடம் ஓடிவந்து தான் கண்ட அற்புத விருக்ஷங்களைக் குறித்துப் பேசினான். அப்படி அவன் மூலமாக உலகத்தார் அந்த இராட்சச மரங்களைக் குறித்துக் கேள்விப்பட்டார்கள். பிறகு சாஸ்திரிகள் அதற்கு ஸெக்கோயா என்று பெயரிட்டனர்.

இம்மரங்கள் மகா அற்புதமானவை. அவற்றின் உயரத்தைக்கண்டால் மயிர் சிலிர்க்கும். இவற்றின் உயரத்திற்குச் சரியான உயரமுடைய கோபுரங்கள் இந்தியாவிலெங்குமேயில்லை. திருச்சிராப்பள்ளியிலுள்ள மலைப்பாறையின் உயரத்தையும் டெல்லியிலுள்ள குத்ப் மீனாரையும் இம்மரங்களிற் சிலவற்றோடு ஒப்பிடலாம். ஆனால் 340 அடி உயரமுடைய மரங்கள் சில காணப்படுகின்றன. இந்த மரங்களின் உயரத்தை உங்கள் ஊரிலுள்ள மிகவும் உயரமான மரங்களோடு ஒப்பிட்டு இவை எத்தனை மடங்கு அதிகம் உயரமுடையவை என்று ஊகித்துக்கொள்ளுங்கள். இவை உயரத்திற்கேற்ற சுற்றளவுடையன. ஐக்கிய மாகாணத்து அரசாங்கத்தாரால் மிகவும் பெரியதெனக் கருதப்படும் மரம் ஒன்றுண்டு. அதன் பெயர் 'ஜெனரல் ஷர்மான்'. இருபது பெயர்கள் தங்கள் தங்கள் கைகளை விரித்துக் கட்டினாலல்லது மற்றப்படி அதை எவரும் கட்டிக்கொள்ள முடியாது. அப்படியானால் அதன் சுற்றளவென்ன என்று கணக்கிடுங்கள். இம்மரங்களில் 18 அடி முதல் 22 அடி சுற்றளவுள்ளவை மிகச் சர்வ சாதாரணம்.

### மகா விருக்ஷங்கள்

காட்டுத் தகப்பன் என்ற காரணப்பெயர் பெற்ற மரமொன்று இப்போது கீழே விழுந்து கிடக்கின்றது. இதனூடு ஒரு குழாய் வழிசெல்லுகிறது. ஒருவன் குதிரை மீதேறி அவ்வழியாகச் செல்லக்கூடும். வேறொரு மரத்தடியின் கீழ்பாகத்தைக் குடைந்து ஒரு பெரிய அறை அமைத்திருக்கின்றனர். இந்த அறையினுள் பலர் நடனம் செய்யலாம். இன்னொரு மரத்தடியில் ஒரு அழகிய சிறு வீடு அமைத்திருக்கின்றது. ஒவ்வொரு பெரிய செம்மரத்திலுமிருந்து 1,00,000 அடிக்கணக்கான பலகைகள் சேகரிக்கலாம்.

இம்மரங்கள் உயரத்திலும் பருமனிலுமே சிறந்தவையெனக் கருதவேண்டும், வயதிலும் புகழ் பெற்றவை. இவற்றில் 200 அடி உயரமுள்ள மரங்களெல்லாம் பல்லாண்டு வாழ்ந்த சிறு கன்றுகளே. சில மரங்கள் ஏறக்குறைய 5,000 வருடங்களாக வாழ்பவை என்று சாஸ்திரிகள் கணக்கிட்டிருக்கின்றார்கள். அவ்வளவு வயதானவையாகத்தோன்றாத சில மரங்கள் குறைந்தது 2,500 வருடங்களாயிருத்தல் கூடும். அந்த மரங்கள் இன்னும் வளர்ந்துகொண்டேயிருக்கின்றன. இவற்றில் எதுவும் இயல்பாக இருந்ததில்லையென ஒரு பிரயாணி கூறியுள்ளார். இந்த மரங்களுடைய சிரஞ்சீவியத்தை தொலைக்கும் துரோகி மனிதனே. மனிதர் அநேக மரங்களைப் பலகைக்காகத் தறித்து விட்டனர். சில வேறு மூகாந்தரங்களால் தீப்பட்டழிந்தன. பலவற்றைத் தீயினால் அழித்தனர். ஆனால் இப்பொழுது அமெரிக்கர்கள் செம்மரத்தைப் பாதுகாக்கப்பட்டு வருகின்றனர். இம்மரத்தின் காயி விருந்து முந்நூறு விதைகள் மட்டும் வெளிப்படும், ஆனால் அணில் அத்தனை விதைகளையும் முளைக்கவிடாது. அறுபது வருஷங்களுக்கு முன்னர் அதை இங்கிலாந்து முதலிய தேசங்களிற் பரவச்செய்தனர். இவை நம்முடைய நாட்டிலே வளருமா என்று பரீக்ஷித்தால் மிகவும் நலமாயிருக்கும். உங்களில் யாராவது பெரியவர்களாகி அமெரிக்காவிற்குப் போவீராயின் இந்த இராட்சச மரங்களின் விதைகளைக் கொண்டுவரமறவாதீர்கள். (பொக்கிஷ பரணி)

### பஞ்சாங்கம்.

### 1926ஸு—ஆகஸ்டு௴

● அமாவாசை ○ பௌர்ணமி * கிருத்திகை

| வாரம் | தேதி | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஞாயிறு | 1 | ●8 | 15 | 22 | 29 | ... |
| திங்கள் | *2 | 9 | 16 | ○23 | 30 | ... |
| செவ் | 3 | 10 | 17 | 24 | 31 | ... |
| புதன் | 4 | 11 | 18 | 25 | ... | ... |
| வியா | 5 | 12 | 19 | 26 | ... | ... |
| வெள் | 6 | 13 | 20 | 27 | ... | ... |
| சனி | 7 | 14 | 21 | 28 | ... | ... |

| வாரம் | அக்ஷய-ஸு ஆடி 17௳ ஆவணி 15௳ | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஞாயிறு | 17 | ●24 | 31 | 6 | 13 | ... |
| திங்கள் | *18 | 25 | 32 | ○7 | 14 | ... |
| செவ் | 19 | 26 | 1 | 8 | 15 | ... |
| புதன் | 20 | 27 | 2 | 9 | ... | ... |
| வியா | 21 | 28 | 3 | 10 | ... | ... |
| வெள்ளி | 22 | 29 | 4 | 11 | ... | ... |
| சனி | 23 | 30 | 5 | 12 | ... | ... |

*Patron.* M.R.Ry. Rao Sahib,
A. J. Vethanayaga Thevar Avl.,
Usilampatti.

*Editor.*—Rev. George J. Athishtam,
Usilampatti.

*Manager.*—Rev. R. A. Dudley,
Tirumangalam.

Subscription—Single copy 8 annas a year (excluding charges for delivery) payable in advance.

All orders to be sent to the *Manager*.

Articles for insertion should be sent, not later than 15th of each month to the *Editor*.

சம்ரக்ஷகர்.—மகா-ள-ள-ஸ்ரீ ராவ் சாஹெப் வேதநாயகத் தேவரவர்கள், உசிலம்பட்டி.

பத்திராதிபர்.—கனம் ஜார்ஜ் அதிஷ்டம் ஐயரவர்கள், உசிலம்பட்டி.

மானேஜர்.—கனம் ஆர். ஏ. டட்லி துரையவர்கள், திருமங்கலம்.

தனிப்பிரதி:—8-பை. வருஷ சந்தா 8-அணா. தபாற்கூலி பிரத்தியேகம். ஒரு வருஷ கையொப்பம் முன்னதாகவே அனுப்பவேண்டும்.

பத்திரிகை வேண்டுவோர் மானேஜரவர்களுக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

சமாச்சாரக்குறிப்பு முதலியவை அனுப்ப விரும்புவோர் அந்த மாதம் 15-ம் தேதிக்குள் சுருக்கமாக எழுதி பத்திராதிபருக்கு அனுப்பவேண்டும்.



REG. NO. M. 21-

[விலை 8 பைசு

# The Piramalai Reformer.

## பிரமலை சீர்திருத்தன்

"பிள்ளையானவன் நடக்கவேண்டிய வழியிலே அவனை நடத்து; அவன் முதிர்வயதிலும் அதை விடாதிருப்பான்."

17 SEP 1926 MADRAS

Vol. VI.] செப்டெம்பர்௴, 1926 [இலக்கம் 5

## பிரமலை கள்ளர் பொதுநிதி கமிட்டியாரின் தீர்மானங்கள்.—

1926ஸு ஜூலை௴ 4௳ ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு மதுரை கள்ளர் ஸ்பெஷல் ஆபிசில் நடந்த மீட்டிங்கின் தீர்மானங்கள்.

ஆஜர்:—

1. மகா-ள-ள-ஸ்ரீ கெ. பி. ஜனார்த்தனராவ் அவர்கள் பி.ஏ., பிரசிடெண்டு.
2. ,, பி. எஸ். ஜம்பு ராமசாமி அய்யர் அவர்கள், காரியதரிசி.
3. ,, கே. ஆர் சிவராமய்யர் அவர்கள், பொக்கிஷதார்.
4. ,, காராமணி கல்யாணித்தேவர் அவர்கள், கீழஉறப்பனூர்.
5. ,, இராமசாமித்தேவர் அவர்கள், சாவடிப்பட்டி.
6. ,, என். கருப்பத்தேவர் அவர்கள், அயோத்திபட்டி.
7. ,, பெரியசாமித்தேவர் அவர்கள், மங்காபுரம்.
8. ,, நல்லு என்ற நல்ல பெருமாத்தேவர் அவர்கள், கண்ணியம்பட்டி.
9. ,, கருப்பத்தேவர் அவர்கள், சின்னபட்டி.
10. ,, சின்னத்தேவர் அவர்கள், குட்டில்நாயக்கன்பட்டி.

தீர்மானம். (1) 30—4—26௳ நடந்த மீட்டிங்கின் தீர்மானங்கள் படித்து ரிகார்டு செய்யப்பட்டது.

(2) அடமான பங்குகளின் உபவிதிகள் படித்து அங்கீகரிக்கப்பட்டன.

(3) 30—4—26௳முதல் 4—7—26௳வரை கொடுக்கப்பட்டிருக்கும் கடன்கள் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

(4) ஷை நிதியின் கணக்குகளை பரிசோதனை செய்த ரிப்போர்ட்டு ரிகார்டு செய்யப்பட்டது.

(5) 30—6—26௳முடிய வரவு செலவு கணக்குகள் வாசித்து ரிகார்டு செய்யப்பட்டது.

(6) உசிலம்பட்டியில் கள்ளர் கோடவுன் முதலியது கட்டுவதற்காக ரூ. 4,133க்கு பூமிகள் வாங்கியது அங்கீகரிக்கப்பட்டதுடன் ஷை பிலான் வகையறாவும் தற்சமயத்திற்கு ஒப்புக்கொள்ளப்பட்டது.

(7) மாட்சிமை தங்கிய கவர்னரவர்கள் கள்ளநாட்டிற்கு வரும் விஷயமாக ஷை நிதியின் காரியதரிசியிடம் அட்வான்சாக ரூ. 500 கொடுக்கலாமென்று காராமணி கல்யாணித் தேவரால் பிரேரேபித்து இராமசாமித் தேவரால் ஆமோதிக்கப்பட்டு எல்லா மெம்பர்களாலும் ஏகமனதாய் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

(8) உசிலம்பட்டியில் வேதநாயகம் கோவாப்ரேட்டிவ் ஸ்டோருக்கு 6௴ தவணைக்கு 100-க்கு 9 வட்டி வீதம் ரூ. 500 கடனாக தரலாமென்று ஒப்புக்கொண்டு சாங்கிஷன் செய்யப்பட்டது.

(9) மதுரை அமெரிக்கன் காலேஜில் படித்துவரும் கெ. என். துரைசாமித்தேவன் எழுதிய மனுவின்பேரில் 1926ஸு ஜூலை௴ 1௳ முதல் 1927ஸு மார்ச்சு௴ 31௳ முடிய ௴ 1-க்கு ரூபாய் 10 ஷை பொதுநிதியிலிருந்து கொடுக்கலாமென்று ஒப்புக்கொண்டு சாங்கிஷன் செய்யப்பட்டது.

(10) ஷை பொதுநிதியின் சட்டங்கள், குறிப்புகள் முதலியதுகளை தயார்செய்து அதுவிஷயமாக பாடுபட்டதற்காக மகா-ள-ள-ஸ்ரீ மதுரை ஆர். கிருஷ்ணய்யர் அவர்கள் பி.ஏ. பி.எல். அவர்களுக்கு ரூ. 25 தரலாமென்று ஒப்புக்கொண்டு சாங்கிஷன் செய்யப்பட்டது.

(ஒப்பம்) பி. எஸ். ஜம்புராமசாமி,
காரியதரிசி.

(True Copy)

## சிறுவர் சிறுமிகள் தங்களுடைய தேகத்தை சௌக்கியமாய் வைத்திருப்பதற்கு அனுசரிக்கவேண்டிய 10-விதிகள்.—

(1) இரவிலும் பகலிலும் படுக்கை அறையின் ஜன்னல்களைத் திறந்து வைக்கவேண்டும். இதனால் குழந்தைகளுக்கு ஜலதோஷம் பிடிக்காமலிருக்கும்.

(2) குழந்தைகள் வாரத்தில் குறைந்தது ஒரு தடவையாவது ஸ்நானம் செய்யவேண்டும்.

(3) சிறுவர்கள் தங்களுடைய தலை, முகம், கைகள், நகங்கள் ஆகிய இவைகளை எப்போதும் கூடியமட்டும் சுத்தமாய் வைத்திருக்க வேண்டும்.

(4) ஒவ்வொரு நாள் காலையிலும் பல் துலக்கி சுத்தம் செய்யவேண்டும். கனம் பொருந்திய பஞ்சாபகேச சர்மா அவர்களும் (Deputy Inspector of Schools) தந்தம் விளக்கியுண் என்று

Health Maximum என்ற புஸ்தகத்தில் சொல்லியிருக்கிறு.. இரவில் படுக்கப்போகும்போது வாயையும் பல்லிடுக்குகளையும் நன்றாய்ச் சுத்தம் செய்யவேண்டும்.

(5) சாப்பிடுவதற்கு முன்னுல் எப்போதும் கையைச் சுத்தம் செய்துவிட்டுத்தான் ஆகாரத்தைத் தொடவேண்டும்.

(6) எப்போதும் மெதுவாக நிதானமாய்ச் சாப்பிடவேண்டும். அவசர அவசரமாய் சாதத்தை விழுங்கலாகாது. ஆகாரத்தை எப்போதும் நன்றாய் மென்றே சாப்பிடவேண்டும்.

(7) மூச்சுவிடும்போது எப்போதும் மூக்கின் வழியாக ஆகாயத்தை சுவாசிக்கவேண்டும். வாயைத் திறந்து வைத்துக்கொண்டும், வாயால் சுவாசம் வாங்குவதும் விடுவதும் கூடாது.

(8) இருமலாவது தும்மலாவது வந்தால் ஒருபுறமாய் திரும்பிக்கொண்டு இருமவேண்டும் அல்லது தும்மவேண்டும். இல்லாவிட்டால் வாய்க்கெதிரே கைக்குட்டையை வைத்துக்கொண்டு தும்மவேண்டும்.

(9) கண்டபடி தரையிலாவது படுக்கட்டிலாவது எச்சில் துப்பக்கூடாது.

(10) சிறுவர்கள் பெற்றோரிடம் அன்பூண்டு அவர்களுக்குப் பணிந்து நடக்கவேண்டும். ஒவ்வொருநாளும் பிறருக்கு ஒரு நல்ல செய்கையாவது செய்யவும், ஒரு ஹிதமான வார்த்தையாவது சொல்லவும் முயலவேண்டும். வாயில்லா பிராணிகளிடத்தில் எப்போதும் பக்ஷமாயிருக்கவேண்டும்.

ஜி. வி. செல்லத்துரை,
நார்மல் ஸ்கூல்—பசுமலை.

---

## கொக்கிப் பூச்சியால் வரும் சோகை வியாதி.

இவ்வியாதியை, சோகை, காமாலை, ஊது காமாலை, சொரக்காய் அம்மன் என்று பலவாறு சொல்லுவார்கள்.

இந்த வியாதி பெரியவர்கள், சிறியவர்கள், ஆண்கள், பெண்கள், பாலியர் முதல் விருத்தர் ஈறாக உள்ள எல்லாரையும் வயது தாட்சணியமின்றி பிடிக்கிறது.

### நோயாளியின் தோற்றம்.

இவ்வியாதி கண்ட நோயாளி இரத்த சத்தமில்லாமல் வெளிரி, கண்கள் அதைத்துக் காணப்படுகிருன். சில சமயங்களில் கால், வயிறு வீக்கம் காணப்படும். ...வை நீட்டச்சொல்லிப் ப... இரத்தப்பசையில்லாமல் அ...விருக்கும். கண் இரப்பைக...ளும் அதில் இரத்தம் இரா...ந்து எப்போதும் ஒருவகையான குவ...ண்டவன்போல் ஒரு துணியைக்கொண்டு தன்னை மூடப் பிரயாசப்படுவான். சற்றுதூரம் நடந்தாலும் சிறுவேலைசெய்தாலும் சீக்கிரம் களைப்படைந்து சோர்ந்துபோவான். வியாதி அதிகப்பட்டால் அவன் கால், அடிவயிறு வீக்கங்கொண்டு எழுந்து நடக்க அதிக அவஸ்தைப்படுகிருன். நீர் சரியாகப் பிரிகிறதில்லை. வேர்வை காண்பதுமில்லை. இப்படியாக அவன் இருதயம் பலட்சியப்பட்டு, நீர் பிரிக்கும் கருவிகள் பலட்சியப்பட்டும், வரவர அவன் சரீரம் பலவீனப்படுகிறது. முதலில் வியாதியஸ்தன் ஜாஸ்தியாக சாப்பிடுவான். ஆனுல் அவன் வரவர சாப்பாட்டைத் தள்ளிப் பட்டினியப்படுகிருன். அவனுக்கு மண், களிமண், காய்ப, அடுப்புக்கரி, கடலை, அரிசி இன்னும் மற்ற தின்பண்டங்கள் முதலிய இவ்வகையான தீவனங்களில் மென்மேலும் அவாவுண்டாகிறது.

இவ்வியாதிக்கு அடிமையானவர்கள் அநேகரிருக்கிருர்கள். நம் பிரமலை தேசத்தில் இவ்வியாதி அதிகரித்துக்கொண்டே போகிறது. அநேக பெண்கள் இவ்வியாதியோடே கர்ப்பமாகி கால், வயிறு வீக்கி, பேறுகாலசமயத்தில் அதிக கஷ்டப்படுவதோடே கூட மரித்தும் போகிருர்கள். ஐயோ! என்ன பரிதாபம்!

### இவ்வியாதிக்குக் காரணம்.

இவ்வியாதி கொக்கிப்பூச்சி என்னும் ஒரு கிருமியால் உண்டாகிறது. மனிதனுடைய வயிற்றில் அநேகவிதமான கிருமிகள் இருக்கின்றன. அவைகளினுல் மனிதனுக்கு வியாதிகள் ஏற்படுவதுண்டு. அவையாவன:— வயிற்றுவலி, வயிற்றுக்கடுப்பு, இவைபோன்ற இன்னும் குடலை ஒட்டிய எவ்வியாதியும் கிருமிகளினுலேயே உண்டாகிறது. நம் சரீர சத்துருவாகிய இக்கிருமி மனிதனுடைய சரீரத்திற்குள்புகுந்து மனிதனுக்குச் சுகக்கேடு உண்டாக்குகிறது.

கொக்கிப் பூச்சி என்பது கால், அரை, முக்கால் அங்குல நீளமுள்ளது. ஒரு தையல் நூலின் பருமனுள்ளது. பெண் பூச்சியானது ஆண் பூச்சிக்கு சற்று பெரியது. இது மனிதன் குடலில்போய் தன் கூரான பல்லினுல் குடலின் ஒரு பாகத்தைக் கடித்துக் கொண்டு அங்கே ஜீவிக்கிறது. இப்பூச்சிகள் மற்ற பூச்சிகள்போல் மனிதன் உட்கொள்ளும் ஆகாரத்தைப் புசிக்காமல் குடலின் ஒரு பாகத்தை இரத்தம்வரக்கடித்து தன்னிலுள்ள ஒருவிதமான விஷத்தை மனிதனுக்குள் கக்கி இரத்தத்தைத் தான் உட்கொள்ளத் தகுந்த விதமாய் ஆக்கிக்கொள்ளுகிறது. இப்படி விஷத்தைக் கக்குவதால்தான் மனிதன் வியாதியடைகிருன். இப்படி மனிதனுக்குள் இருக்கும் பூச்சியானது ஆணும் பெண்ணும் சேர்ந்து எண்ணி... ...ணைத்தினுல... ...ளும குஞ்சாகிறது. ...மிக்கும் பூமியில சா... பெய்தவுடன் தரையில் ஓடும் தண்ணீர் மூலமாய் குடிக்கும் கிணறு, குளம், தெப்பம் முதலிய ஜல பாகங்களுக்குக் கொண்டுவரப்படுகின்றன. அப்படிப்பட்ட ஜலத்தை மனிதர் உபயோகிப்பதினுல் இவ்வியாதியுண்டாகிறது. இன்னும் சுத்தமில்லாத காய்கறி பதார்த்தங்களின் வழியாயும் மனிதனுள் செலுகிறது. சிறுவர் சிறுமிகள் மண்முதலியவைகளில் விளையாடி அவைகளைத் தினுவதாலும் உண்டாகிறது. நமது நாட்டில் சாதாரண ஜனங்கள் குளங்களுக்கருகிலும், மந்தை, சந்து பொந்துகளிலும் மலஜலபாதைக்கிருப்பது சகஜம். மழை பெய்யுங்காலத்தில் ஆங்காங்கே புல் பூண்டு செடிகள் முளைக்கின்றன. இப் புல்பூண்டு செடிகளில் மழைத்தண்ணீர், பனித்தண்ணீர் முதலியவைகள் காலை நேரங்களில் தொங்குகின்றது. இவைகளில் இக்கொக்கிப்பூச்சிகளின் குஞ்சுகளிருக்கும். அந்த வழியில் நடப்பவர்களும், அதில் புழக்கம் வைப்பவர்களின் பனி, மழைத்தண்ணீரோடுசேர்ந்து இப்பூச்சி மனிதர் காலில் ஒட்டி தோலின் வழியாய் மனிதனுடைய உடலுக்குள் செல்... ...குடலுக்குள் சென்றபின், இப்பூச்சிகள் கெடுதல்செய்ய ஆரம்பிக்கிறது. அவையாவன: தலைவலி, மயக்கம், அஜீரணம், பெலவீனம் காணப்படுகிறது. வரவர மேலே சொன்ன பயங்கரமானவிதமாய் மனிதனை மடக்குகிறது.

### இவ்வியாதியைத் தீர்ப்பதெப்படி?

காமாலைக்காக நம்நாட்டில் கையைச்சுட்டுக்கொள்கிருர்கள். சிலர் அம்மன் என்று சும்மா விட்டுவிடுகிருர்கள். சிலர் பச்சை இலைகளைப்பிடுங்கித் தின்றும், அரைத்து வீக்கத்திற்குத் தடவியும் விடுகிருர்கள், ஆனுல் நாம் செய்ய வேண்டிய தென்னவென்ருல் நம் சத்துருவாகிய பூச்சியைக்கொல்லவேண்டும். நமக்குச் சமீபத்திலுள்ள ஆஸ்பத்திரிக்குப் போய் நம்மைக் காண்பிக்கவேண்டும். நமக்கு இவ்வியாதி இருக்கிறதா இல்லையாவென்று இலவசமாய்ப் பார்த்து இலவசமாய் சிகிச்சையைப் பெற்றுக்கொளளும்படி செய்துகொள்ளவேண்டும்.

ஆயிரமாயிரம் ஜனங்கள் இப்பொழுது சிகிச்சைபெற்று சுகமடைந்திருக்கிருர்கள். உசிலம்பட்டியில் இப்போது இவ்வியாதிக்காக மருந்து கொடுத்து வருகிருர்கள்.

இங்கு வந்த வியாதியஸ்தர்களை மிகவும் அன்புடன் ஆதரித்த டாக்டருக்கு எம் நாட்டின் பேரால் அன்பார்ந்த வந்தனம் அளிக்கிறேன்.

ஆகையால் எனதரிய நண்பர்காள்! மேற்கூறிய விஷயங்களை அறிமின்! அறிமின்! தெரிந்தபின் உய்மின்! உய்மின்!

சுபம்! சுபம்! சுபம்!

பிரமலை தேசன்

---

## ...மரம் ...ாக்கும் விதம்.

...பீடிகை.—இந்தியாவில் தொன்றுதொட்டும் மாஞ்செடிகள் இருந்ததாகவும் பயிராக்கப்பட்டதாகவும் தெரிகிறது. அது பெரிய மரமாயும் எப்போதும் இலைகள் இருப்பதால் பச்சை வர்ணமான தோற்றத்தையுமுடையது. சமுத்திர மட்டமுதல் சமுத்திர மட்டத்துக்கு மேல 3,000 அடி உயரம் வரையில் உஷ்ண தேசங்களில் சாதாரணமாய் வளரும். தேவதைகளால் இம்மரம் பூலோகத்திற்கு கொண்டுவரப்பட்டதாக பழய காலத்து சாஸ்திரங்கள் கூறுகின்றன. இந்தியாவின் பல பழவர்க்கங்களில் மாம்பழத்தை எல்லோரும் விரும்புவதால் அதை "பழங்களின் இராஜா" என்று பலர் சொல்லுகிருர்கள். இவ்விராஜதானியில் வருஷத்திற்கு 40 அங்குலம் மழைக்குக் குறைவாய் பெய்யும் வரண்டபாகங்களிலும் மாமரங்கள் புஷ்பிக்கும் காலத்திற்கு முன்னதாகவே மழைகள் பெய்து ஓய்ந்துபோகும் இடங்களில் மாமரங்கள் பயிர்செய்யலாம். இம்மரமானது எந்த நிலத்திலும் வளரும். ஆனுல், அதிக மண்கண்டமுள்ளதும் ...வடிகால் வசதியுள்ளதுமான மேட்டு நிலங்களில்தான் நன்ருய் வளரும். இதை விதைகளிலிருந்து பயிராக்கலாம். ஆனுல், அப்படி விதைகளிலிருந்து பயிராக்கப்பட்ட மரங்களிலுண்டாகும் பழங்கள் எந்த மரங்களிலிருந்து விதை எடுக்கப்பட்டதோ அந்த மரத்து பழங்களைப் போலவேதானிருக்குமென்று நிச்சயம் சொல்லமுடியாது. வேண்டிய ஜாதி பழ தினுசு நிச்சயமாய் அதே தினுசு செடியிலிருந்து கிடைக்கும்படிக்கும் உபயோகமில்லாததும் லாபமில்லாததுமான ஜாதிகளிலிருந்து உபயோகமில்லாததும் லாபகரமானதுமான ஜாதிகளை உண்டாக்கும் பொருட்டுமே மாமரங்களுக்கு ஒட்டு கட்டுவதினுலுண்டாகும் பிரயோஜனம். இப்படி ஒட்டுக்கட்டுவதின் விசேஷத்தை தெரிவிப்பதற்காகவே இப்பத்திரிகை வெளியிடப்பட்டிருக்கிறது.

இப்பழமானது பூர்வீககாலம் முதல் இந்தியாவில் இருந்திருந்தபோதிலும் இந்துதேச சரித்திரம் ஏற்பட்டது முதல் அதாவது மகம்மதிய அரசர் படையெடுத்து இந்தியாவுக்கு வந்த பின்னும் ஐரோப்பிய தேசத்தார் இந்தியாவோடு வியாபாரம் செய்ய ஆரம்பித்த பின்னும்தான் மாமரங்களை விருத்திசெய்ய சரியானபடி பயிரிட முயன்றதாக தெரிகிறது. இதைச் சரியானபடி விருத்தி செய்தவொரவும் மொகலாய சக்ரவர்த்திகளைச் சேர்ந்ததா அல்லது போர்ச்சுகல் தேசத்தாரைச் சேர்ந்ததாவென்று திட்டமாய் சொல்லமுடியவில்லை. இருந்தாலும், நல்ல ஜாதி மாம்பழங்களுக்கு ஜெகாங்கீர், ஹிமாயுடீன், அமீர் பசந்து, அல்பன்சொ, பெர்னேண்டஸ், கோவா முதலிய மேற்சொன்ன இருஜாதியாரின் ...ன அவ் ...ருந்தியில் சிரத்...ண்டிருக்கவேண்டும். ஆ... ஜாதியாருக்கும் நமது நன்...த்தக் கடமைப்பட்டிருக்கிறோம்.

மண்ணியல்பு.— மேலே சொன்னபடி மாமரமானது போதுமானபடி மண் கண்டமுள்ளதும் வடிகால் வசதியுள்ளதுமான எவ்வகை நிலங்களிலும் வளரும். இருந்தாலும் சுமாரான ஆழம் வரையில் செம்மண் மிஸ்ரமாயும் அதற்குக்கீழ் சாளை நிலமாயிருக்கும் நிலங்கள் இதற்கு சிறந்தவை. இப்படியிருந்தால் மரத்தின் வேர்கள் தட்டுத் தடையில்லாமல் வளர்வதற்கும் மரத்தின் ஆயுளை விருத்திசெய்வதற்கும் நன்ருய்க்காய்ப்பதற்கும் அவசியமான வடிகால் வசதியும் ஏற்படுகிறது. மேலும், இவ்வகை நிலங்களிலுள்ள இரும்பு சத்து, மரத்தின் தீவிர வளர்ச்சிக்கும், பழத்தில் இனிப்பு குணத்தை விருத்திசெய்வதற்கும் காரணமாயிருக்கிறது.

சமுத்திரக்கரைஓரங்களிலுள்ள மணல்சாரியான நிலங்களில் மாமரங்கள் நன்ருய் வளர்ந்தாலும் நெடுநாள் நீடித்து வளராததோடு ருசியற்ற கேவலமான பழங்களையும் காய்க்கிறது. இந்நிலங்களுக்கு வண்டல் அடித்தால் செடிகள் நன்ருய் வளரும். களிமண் பாங்கான படுகை நிலங்களில் மரம் இலையோடி நன்ருய் வளர்ந்தாலும் சரியாய் காய்ப்பதில்லை. ஆகையால் தான் இதுவரையில் பயிரிடப்பட்டுவந்த கொழுமையான நிலங்களில் இப்பயிர்செய்ய சிபார்சு செய்வதில்லை. குறைவான மண் கண்டமுள்ள நிலங்களில் வேர்களின் வளர்ச்சி கடுமையான பாறையை அணுகியவுடன் தடுக்கப்படுகிறது. அப்பேர்ப்பட்ட நிலங்களையொட்டி பள்ளத்தாக்குகளில்லாவிட்டால் மழை காலத்தில் தண்ணீர் கட்டுவதால் வேர்களுக்கு வேண்டிய காற்று உள்புக இடமில்லாமற்போகிறது. ஆனுல் அந்நிலங்களையொட்டி பள்ளங்களிலிருந்தாலோ வெயில் காலத்தில் போதுமான ஈரமில்லாமல் போகிறது. இவ்விருகாரணங்களாலும் வளர்ச்சிகுன்றி தோப்பின் ஆயுளும் குறைவடைகிறது. குன்றுகளின் அடிவாரங்களில் காணப்படும் அபரிமிதமான சிறு கல்லுகளுள்ள நிலங்களில் இம்மரம் பயிரிடப்பட்டால் மற்ற ஹம்சங்களெல்லாம் சரிவர இருப்பின் அம்மரங்களின் வளர்ச்சி இக்கற்களால் தடுக்கப்படுவதில்லை.

கஞ்சம், விசாகபட்டணம், கீழ்கோதாவரி, மேல் கோதாவரி, கிருஷ்ணு, நெல்லூர், சித்தூர், சேலம் ஜில்லாக்களில் இதுவரையில் சிறு முட்காடுகளாயிருந்த பல மேட்டு பாகத் தரிசு நிலங்களிலுள்ள முட்களை வெட்டித் திருத்தி ஒட்டுமாஞ்செடி வைத்துண்டாக்குகிருர்கள். இதுவரையில் ஒன்றுக்கும் உபகாரமில்லாமற் கிடந்த இந்நிலங்களிலெல்லாம் ஒட்டுமாஞ்செடிகள் வைத்துண்டாக்கியது சந்தோஷத்தைக் கொடுத்தபோதிலும் ...மரங்கள் ... வில்லை. இப்பேர்ப்பட்ட நிலங்கள் வைத்திருக்கப்பட்டவர்கள் மாமரங்களை வைத்துண்டாக்கக் கருதினுல் மேல்சொன்ன அனுபவத்தைப்பார்த்து பிரயோஜனமடையக்கூடும்.


செடி நடுதல்,—ஒட்டுக் கட்டுவதைப்பற்றி சுருக்கமாய் தெரிவிக்கவேண்டியது அவசியம். மாமரங்கள் பழுக்கும் காலத்தில் சரியானபடி வெட்டிக் கொத்தி அதிகமான எரு விட்டுத் தயாரித்த நிலத்தில் விதைகளை நெருக்கமாய் நடவேண்டும். மாங்கன்றுகள் ஐந்து அல்லது ஆறுமாத வயதடைந்த உடனே அவைகளை நாற்றுவிட்டயிடத்திலிருந்து பெயர்த்து எடுக்கப்படுகிறது.

அவைகளின் ஆணிவேர்களை கத்தரித்து தயாராய்வைத்திருக்கும் வேறுநாற்றங்காலில் 1 ஜாணுக்கு ஒன்ருக நடுகிருர்கள். இப்படிச் செய்வதால் மேல் வேர்கள் தரையின் மேல் பாகத்தில் பாவி ஓடுவதால் தொட்டிகளில் அப்பால் பேர்த்து வைப்பதற்கு உபகாரமாயிருக்கிறது. 18 மாதங்கள் ஆனவுடனே தொட்டியில் பேர்த்து போடப்படுகிறது. தண்ணீர் சுருக்கத்தை உத்தேசித்து இனிமேல் அடிச்செடிகளென்று சொல்லப்படும் தொட்டியிலுள்ள செடிகள் போதிய அளவுள்ள பாத்திகளில் நெருக்கமாய் தொட்டியிலிருந்தெடுத்த மண்ணுடன் நடப்பட்டு இடையிலுள்ள சந்துகள் மண்ணுல் மூடப்படுகிறது. ஒட்டுக்கட்டுவதற்கு இன்ன வயதுள்ள அடிச் செடிகள் தான் தேவையென்ற ஏற்பாடொன்றுமில்லை. மூன்றுமாத வயதுள்ளது முதல் மூன்று வருஷ வயதுள்ள செடிகள் வரையில் சரியானபடி ஒட்டுக்கட்டி ஒட்டு சம்பந்தப்பட்ட வரையில் அனுகூலமடைந்திருக்கிருர்கள். ஆனுல், நீடித்த நாள்கள் அடிச்செடிகளை தொட்டியில் வைத்திருப்பதால் அவைகளின் வேர்கள் சுற்றிக்கொண்டு வளர்ச்சி குன்றுவதால் தொட்டிகளில் அடிச்செடிகள் இருக்கும் காலத்தை எவ்வளவு குறைக்கக்கூடுமோ அவ்வளவு குறைக்கவேண்டும். அடிச்செடிகள் தொட்டிகளில் சரியானபடி வேரூன்றின உடனே ஒட்டுக்கட்டல் ஆரம்பிக்கப்படுகிறது. அடிச்செடியின் மேல்பாகத்தை முற்றிலும் கூறிய கத்தியால் வெட்டிவிட்டு உச்சியில் ஒரு பக்கத்தின் மேல்தோலும் மரத்தில் பாதி பாகமும் இரண்டு மூன்று அங்குல நீளத்திற்கு ஒரே வெட்டால் சிதையாமல் அறுத்து நாம் எந்த வர்க்கச் செடியை ஒட்டுக்கட்ட உத்தேசித்திருக்கிருேமோ அந்த செடியின் நுனி கிளையைக்கொண்டுவந்து முன் அறுத்த அடிச்செடியில் பொருதும்படியான பாகத்தைமட்டும் தாய் செடியின் (நுனியைத் துண்டித்துவிடாமல்) பாதி பாகத்தின் தோலும் மரத்தின் பாதிபாகமும் கூரிய கத்தியால் சீவி அடிச் செடியில் சீவிய பாகமும் தாய்ச் செடியின் கிளையில் சீவிய பாகமும் ஒன்றுக்கொன்று வித்தியாசப்படாமல் பொருந்தும்படிவைத்து அறுத்த பாகங்களில் தண்ணீரும் காற்றும் புகாதபடி மெழுகுத்

அணியால் அல்லது உலர்ந்த வாழைமட்டையால் மூடி டொயின் கயிறுகொண்டு இருக்கிக்கட்டவேண்டும். இப்படிச் செய்வதால் கத்தியால் சீவிய பாகங்கள் (அடிக் கிளையும் தாய்க் கிளையும்) நாளாவர்த்தியில் ஒன்றுசேர்ந்து விடுகிறது. அடிக் கிளையும் தாய்க் கிளையும் ஒரே கனமாயிருந்தால் ஒட்டு ஜல்தியாய்க் கூடிவிடும. ஒட்டு அநேகமாய் மூன்றுமாதத்தில் கூடிவிடும். அதற்கு பின் தாய்க்கிளையை, அதாவது எந்த வர்க்கத்தை ஒட்டுக் கட்டியிருக்கிறோமோ அந்தச் செடியின் கிளையிலிருந்து வாரத்திற்கொருமுறை கொஞ்சம் கொஞ்சமாய் செடிக்குக்கெடுதி உண்டாகாமல் அறுத்துக்கொண்டே வந்து பின் துண்டித்துவிடவேண்டும். பூராகத்துண்டித்தபின் ஒட்டுச்செடி நடத்தயாராயிருக்கிறது. பிறகு ஒட்டுக் களிருககும்படியான தொட்டிகள் ஒன்றோடொன்றுபொருந்தும்படியாக பூமியில் புதைக்கப்படுகின்றன. ஒருபாத்தியில் ஜலம் பாய்ச்சுவதற்கு சுலபமாயிருக்கும்பொருட்டு வசதியான ஒட்டுகள் வைக்கப்படுகின்றன. இவ்வண்ணம் அவைகள் விற்கப்படும் பரியந்தம் பாத்தியிலிருக்கின்றன. சரியாய்ப் பொருந்தாத ஒட்டுத் தளிர்கள் நாளாவர்த்தியில் உலர்ந்துபோகின்றன.

செடிகள் தொட்டிகளில் போடும்போது முழு தொட்டிகளை உபயோகிப்பது வழக்கம். தொட்டிகளுடன் ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குச் செடிகளைக் கொண்டு போகும்போது தொட்டிகள் உடைந்து நஷ்டமாகிறது. 2 அரைத்தொடிகளாகச்செய்து ஒன்றுக்கொன்று சரியானபடி பொருதும்படிவைத்து கயிறுகொண்டு கட்டி வைத்து விட்டால் ஒரு பக்கத்திலிருந்து மற்றொரு பக்கத்திற்குச் செடிகள் கொண்டுபோக வேண்டி வரும்போது கயிறுகளை அவிழ்த்து தொட்டிகளை உடையாமல் இரண்டு துண்டுகளையும் வெவ்வேருக எடுத்துவிட்டு அதே அளவுள்ள மூங்கில் கூடைகள் செய்து அவைகளில் அனுப்பினுல் செடிகள் நஷ்டமடையாமல் போய்ச் சேருவதோடு அத்தொட்டிகளும் மறுபடியும் உபயோகிக்க உதவும். மூன்று அடி ஆழம், மூன்று அடி உயரம், மூன்று அடி அகலமுள்ள குழிகள் தோண்டி அடிமண் வேருகவும் மேல் மண் வேருகவும் போட்டுவைக்க வேண்டும். குழிகள் சூரிய உஷ்ணத்தால் நன்ருய்க் காயும்படி சில வாரங்களுக்கு விட்டு வைக்கவேண்டும். சிலர் கூளம்குப்பைகளை அக்குழிகளில் போட்டு எரிப்பதால் ஜாஸ்தியாய் காய்க்கிறதென்றும் அத்துடன் கரையான் அரிப்பதின் துன்பம் குறையுமென்றும் சொல்லுகிருர்கள். குழிகள் காய்ந்து தயாரான உடன் வேருகப்போட்டிருக்கும் மேல் மண்ணுல் வேண்டிய அளவுக்கு குழி மூடப்படுகிறது. அகப்பட்டால் வண்டல் மண் சேர்த்துக்கொள்ளலாம் வண்டல் மண்ணும் பொடிசெய்த எலும்புத்தூளும் குழிகளுக்குள் போடுவது நலம். சில காட்களுக்கு குழியில் போட்ட மண் படியும்படி விட்டு செடி வைவைவைவணமட தில் மழை பெய்யாவிட்டால் சரிவர குழியை நனைத்து பின் கிளை நடவேண்டும்.

குழியிலுள்ளமண்ணை நன்ருய் கெட்டித்து தண்ணீர் நிற்கும்படி விடவேண்டும். அது முதல் 10 நாட்களுக்கு நித்தியம் ஒரு தண்ணீரும் பின்னுல் ஒன்றுவிட்டு ஒருநாள் தண்ணீரும் ஊற்றவேண்டும். மூன்றங்குலம் குறுக்களவும் ஒருசாண் உயரமுள்ள மூங்கில் அல்லது மண் குழாய்களை செடியிலிருந்து 9 அங்குல தூரத்தில் புதைத்து அக்குழாய்களில் தண்ணீர் ஊற்றுவதால் குழியின் அடிபாகத்திலுள்ள மண்ணுக்கு தண்ணீர் இறங்கி உபயோகப்படும்படி செய்வதுடன் பாய்ச்சலில் தண்ணீர் சிக்கனமும் செய்யலாம். ஒட்டு சரியாய் கூடின உடனே மேலே கட்டியிருக்கும் மெழுகு துணியை அவிழ்த்து விடவேண்டும். இல்லாவிட்டால் ஒட்டுக்கட்டிய பாகத்தை இறுக்கிப் பிடிப்பதால் மரத்தின் வளர்ச்சி குன்றுவதோடு அப்போது அவிழ்க்காவிட்டால் ஒட்டுக்கட்டிய இடத்தில் முறிந்து தாய்செடி கீழே விழுந்துவிடும். இளம் ஒட்டுச்செடிகள் காற்றினுல் முறிந்து போகாமல் காட்டுக் கம்பாவது மூங்கில் கம்பாவது பக்கத்தில் நட்டு செடியைச்சேர்த்து ஒட்டு மரங்கள் காற்றினுல் முறியாதபடி பெரிதாகும்வரையில் கட்டிவைக்கவேண்டும். ஒரு ஏக்கர் நிலத்தில் நடக்கூடிய மரங்களின் எண்ணிக்கை அந்நிலத்தின் இயல்பைப் பொறுத்திருக்கிறது. வளமான நிலங்களில் செடிகள் நன்ருய் படர்ந்து வளருமாதலால் ஏக்கருக்கு 20 அல்லது 25 செடிகளும் சாரன் நிலங்களில் நன்ருய்ச் செடிகள் வளராததால் ஏக்கருக்கு 50 செடிகளும் நடலாம். சராசரி வரிசை வரிசையாய் 40 அடி அகலத்திலும் 35 அடி நீளத்திலும் முக்கோணமாய் அடியில் காண்பித்திருக்கும் பிரகாரம் நட்டால் ஏக்கருக்கு 32 செடிகள் நடலாம்.



Scale 1" = 60 feet.

ம பாகமு, பூவை அப்போதைக்கப்போது கத்தரித்துவிடவேண்டும். அப்படி எறி தாய் செடி நாளுக்குநாள் ஜீரணித்துபடுபாவதோடு அடியிலிருந்து உண்டாகும் கிளைகள் சாதாரண செடியின் கிளைகளிலிருந்து உண்டாகிறதாகையால் கேவலமான பழங்களைக் கொடுக்கும். 4 அல்லது 5 வருஷங்களுக்கு செடியிலுண்டாகும் புஷ்பங்களை கிள்ளி எறிந்தால்தான் செடிகள் நன்ருய் வளரும். கோடைகாலத்தில் அடிக்கடி நிலத்தை உழுது களைப்பூண்டுகளில்லாமல் வைத்திருக்கவேண்டும். செடிகள் நட்ட 4 அல்லது 5 வருஷங்களுக்கு, அதாவது செடிகள் போதுமான உயரம் வளர்ந்து நிலத்தை மூடிக்கொள்ளும்வரையில் சரியானபடி எருவிட்டு தண்ணீர் கிடைக்கக்கூடிய இடங்களில் தண்ணீர் பாய்ச்சி ஊடு பயிரிட்டுக்கொள்ளலாம். தண்ணீர் இல்லாவிட்டால் கொள்ளு (காணம்) முதலிய கோதுக்காய் பயிர்களை விதைத்து களைப்பூண்டு உண்டாகாமல் செய்துகொள்ள வேண்டும் நட்ட 5 வருஷங்கள்வரையில் பசுந்தாள் பயிருடன் கொளுஞ்சி (கொள்ளு காவளை உடன்) தொழு எரு சேர்த்து உபயோகிக்கலாம். தீவிர வளர்ச்சிக்கு பிண்ணக்கு உபயோகிப்பது நலம். பின்னுல் பழ உற்பத்தியைப்பற்றி கவனம் செலுத்த வேண்டும். புஷ்பிப்பதற்கு போதுமான காலத்திற்கு முன்னுலிருந்து நிலம் காய்ச்சலோடு இருந்தால் நல்லமாகுல் கிடைக்கும். களிமண் நிலங்கள் ஜாஸ்தியாய் இந்த நிலைமைக்கு வருவதில்லை. அந்நிலங்களில் மழைகள் நின்றவுடனேயும் புஷ்பிக்கு முன்னும் மரத்தைச் சுற்றிலுமுள்ள மண்ணைத் தோண்டி சிறு வேர்களைச் சிதைத்து நிலம் காற்றாடவிடவேண்டும். ஜல்லி வேர்களை அறுத்து எறியவேண்டும். அதற்குப்பின் ஒரு மாதம் பொறுத்து முன் தோண்டிப்போட்டிருக்கும் மண்ணுடன் எரு இருந்தால் கலந்து தோண்டிய இடத்தை மூடவேண்டும். செடிகள் இலை மோதியிருந்தால் செடி ஒன்றுக்கு மூன்று அல்லது 4 ராத்தல் உப்புடன் 4 அல்லது 6 ராத்தல் எடையுள்ள எலும்புத் தூளாவது சூப்பிர்பாஸ்பேட் என்னும் எருவை கலந்து போடலாம். பின்னுல் சொன்ன முறைக்கு செடிகளின் வேர்களை அறுக்க வேண்டிதவசியம். செடியைக் காய்க்கவைப்பதற்கு இன்னொரு தந்திரம் என்னவென்

புஷ்பமுடை, டிக்கெ. இப்படிச் செய்வதால் இலைசத்து வேருக்கு இறங்காமல் அத்துவாரங்களால் தடுக்கப்படுவதால் புஷ்பிப்பதற்கு வேண்டிய சத்தைக் கொடுப்பதாக நம்பப்படுகிறது. இதற்கு திருஷ்டாந்தம் என்னவென்ருல், மாமரத்து வண்டுகளால் துளைக்கப்பட்ட மரங்கள் ஜல்தியாயும் அதிகமாயும் காய்ப்பதுதான். கோடைகாலத்தல காய்கள் திரளும்வரையில் தண்ணீர் பாய்ச்சக்கூடாது. அதற்குப் பின் நிலத்தின் இயல்புக்கும் தண்ணீர்விடும் அளவுக்கும் தக்கபடி ஒன்றுமுதல் நான்கு வாரங்களுக்கு ஒரு தண்ணீர் பாய்ச்சவேண்டும். சாதாரணமாய் தோட்டக்காரர் மரங்களுக்குத் தண்ணீர் பாய்ச்சுவதில்லை. இதனுல் மே, ஜூன் மாதங்களில் உண்டாகும் கோடை மழைகளால் காய்கள் முற்றுவதற்குமுன் கொட்டிக் கீழே விழுந்துவிடுகிறது. பபபு மந்தாரமும, மழையும், காற்று மழையும், குளிர்ந்த காற்றும் புஷ்பிக்கும் காலத்திலிருந்தாலும் பூச்சிகளால் உண்டாகும் நோய் கொடிகள் ஏற்பட்டாலும புஷ்பித்தலும் காய்ப்பும் குறையும். கடைசியாகச் சொன்ன பூச்சிகளால் உண்டாகும் நோய் கொடிகளைத் தவிர மற்றவையெல்லாம் சீதோஷ்ண பேதங்களால் உண்டாவதால் அவைகளைத் தடுப்பதற்கு நமக்கு சக்தியில்லை. ஆனுல் பூச்சிகளாலுண்டாகும் நஷ்டத்தை உண்டாக்காமல் தடுப்பதற்கு முறைகள் 1917-ம் வருஷத்து மூன்ருவது, பதினென்ருவது இண்டு பத்திரிகைகளில் எழுதப்பட்டிருக்கிறது.

**தினுசுகள்.**—இந்த இராஜதானியில் பயிராகும் மாம்பழ தினுசுகள் பல உள வெவ்வேறு பிராந்தியங்களில் அந்தந்த இடங்களுக்குத்தக்க தினுசுகள் அநேக விதங்களாய்ப் பிரிக்கப்பட்டிருக்கிறது.

(a) அந்தந்த தினுசுகளின் சுபாவத்தை யொட்டி மலைதினுசுகளென்றும் சமநாட்டு தினுசுகளென்றும் பிரிக்கப்படுகின்றது

(b) பழுக்கும காலத்தைப்பொறுத்து ஜல்தியாய்ப் பழுக்கும் தினுசுகளென்றும் நாள் பொறுத்து பழுக்கும் தினுசுகளென்றும் பிரித்திருக்கிருர்கள்.

(c) மேலும், பழத்தின் குணத்தைப் பொறுத்து பல தினுசுகளாய்ப் பிரிக்கலாம். அதில் (1) பழத்தின் சதையும் ரசமும சாப்பிடக்கூடிய தினுசென்றும், (2) சதை கனமாயிருந்தால் கத்தியால் துண்டு துண்டுகளாய் அறுத்து சாப்பிடக்கூடிய தினுசென்றும், (3) ஊறுகாய்க்குமட்டும் உபயோகபடக்கூடிய தினுசென்றும், (4) கொட்டை பருத்து சதை அதிகமில்லாமலும், புளிப்பாயுமிருக்கும் தினுசுகளென்றும் பிரிக்கலாம். இக்கடைசி தினுச மலைகளுள்ள பிராந்தியங்களில் தான் இருக்கின்றன.

ஒருகு ஒருதப...ம் புஷ்பம் வருஷம் முற்றிலும் அதாவதிலும புஷ்பிக்கும் பரமாவலி என்னும ஜாதியைப்போலொதத வருஷத்தில் ஒருமுறைக்கதிகமாய் புஷ்பிக்கும் ஜாதிகளுமிருக்கின்றன.

(e) பழங்கள் எவ்வளவு நாளைக்குக் கெட்டுபோகாமலிருக்குமோ அதையும் பொறுத்துப் பிரிக்கப்பட்டிருக்கின்றன.

பழத்தின் கனத்தையும் உருவத்தையும் தோலின் கனத்தையோ அல்லது மெல்லியதையோ பொறுத்தும் இலைகளின் உருவம், ஜாஸ்தி கம்மியாயிருத்தல் முதலியவைகளையும் பொறுத்தும் ஜாதிகள் பிரிக்கப்பட்டிருக்கின்றன. எல்லா தினுசுகளைப்பற்றியும் இத்துண்டு பத்திரிகையில் சொல்லச் சாத்தியமாகாது.

வட சர்க்கார் ஜில்லாக்களில் பின்வரும் ஜாதிகள்தான முக்கியமானதாய் எண்ணப்படுகிறது:—

(1) ஜெகாங்கீர், (2) ஹிமாயுடீன், (3) பங்கனபல்லி, (4) ஸ்வர்ணரேகா, (5) நீலம், (6) கோலங்க கோவா, (7) ஆண்டுருஸ், (8) சின்னரசம், (9) ராஜமன்னு, (10) சின்ன கோவா, (11) பெங்களூரா, (12) கண்ணேரு முதலியன.

முதலில் சொல்லிய இருஜாதிகளும் சில காலமாய்தான் கொண்டாடப்படுகின்றன. அவ்விரண்டு ஜாதிகளும் மகமதியர்களால் அநேக நாள்களுக்குமுன் கண்டுபிடிக்கப்பட்டு பயிராக்கப்பட்டு வந்திருந்தாலும் அவர்கள் வெளிக்கு விற்காமல் இதுவரையில் அவ்வளவு பந்தோபஸ்தாய் வைத்திருந்தார்கள். இத்தினுசுகளிலெல்லாம் அவைகள்தான் சிறந்தவை. ஏனெனில் அப்பழங்கள் டஜன் ஒன்றுக்கு ரூபாய் 9 முதல் 12-வரையில் விற்கப்படுகிறது. மசலி பட்டணம் ஆந்திரஜாதிய கலாசாலைக்காரர் வாங்கிய தோட்டத்தில் எப்படியோ இவ்விரு ஜாதிகளும் இருந்துவிட்டதால் அவர்களுடைய தாட்சணியத்தால் இவ்விரு ஜாதிகளின் ஒட்டுகளும் முறையே ஒவ்வொன்று 10 ரூபாயாகவும் 5 ரூபாயாகவும் சில செடிகளே விற்கப்படுகிறது. மற்ற தினுசுகள் ராஜமகேந்திரபுரத்திலிருக்கும் மதராஸ் சதரன்மஹாராட்டா ரெயில்வேயைச் சேர்ந்த கடையம் என்னும் ஊரிலும், விஜயநகரத்திற்கருகிலிருக்கும் பெங்கால் நாக்பூர் ரெயில்வேயைச்சேர்ந்த அலமந்தா என்னும் ஊரிலும் நூறு ஒட்டுகள் 25 ரூபாய்கள் முதல் 40 ரூபாய்கள் வரையில் விற்கப்படுகிறது.

இதுவரையில் ஒட்டுக்கூட்டிய முறைகளை திருத்தி மேலான ஒட்டுக்கூட்ட கூடுமென்று சமீபத்தில் ஏற்பட்ட அனுபோகததில் தெரிகிறது ஒரே தினுசு காய்ச்செடியையே (வர்க்கத்தையே) எல்லாச் செடிகளிலும் ஒட்டுக் கட்டியபோதிலும் அடிச்செடிகளின் குண குணத்திற்குத்தக்கபடி எல்லாவிதக் காய்களையும் காய்ப்பதற்கு விதைகள் தெரிந்தெடுத்துப் போடாமல் அகப்பட்ட விதைகளையெல்லாம் எடுத்துப்போடுவதுதான் காரணமென்று இதைப் பயிரிடுவோர் தெரிந்துகொண்டார்கள்.

இப்படி பல தினுசு செடிகள் உண்டாவதால் ஒரே தோட்டத்தில் ஒரே காலத்தில் பழங்கள் பழுக்காமல் முன்பின்னுய் பழுக்க ஆரம்பிக்கிறது. சில மரங்களில் பழங்கள் பழுக்கும்போது வேறு மரங்கள் புஷ்பிக்கவோ பிஞ்சுகள் பிடிக்கவோ ஆரம்பிக்கிறது. இப்படியாவதால் செலவு அதிகமாவதோடு வெளிதேசங்களுக்கு ஏற்றுமதி செய்வதும் குறைகிறது ஆகையால் இதைப் பயிரிடுவோர் தற்கலத்தில் தாய்ச்செடியைமட்டும் தெரிந்தெடுப்பதில் உபகாரமில்லையென்றும் அத்துடன் அடிச்செடியின் பழத்தின் ருசி, வருஷாவருஷம் காய்க்குந்திறம், அளவு, குணம் முதலியவைகளையும் நாட்பொறுத்து பழுத்தல், வீரியமாய் வளருங்குணம் முதலியவைகளையும் அறிந்து விதை பொறுக்கிப்போடவேண்டியதும் அவசியமெனத் தெரிந்து கொண்டார்கள்.

இரண்டாவதாக, ஆணிவேரைத் துண்டித்துவிடுவதால் ஒட்டுச்செடிகளின் வேர்கள் பூமிமட்டத்திலேயே படர்ந்து பூமியில் பலமாக வேர் ஊன்றிநிற்காமலும் பூமியின்கீழ் வெகுதூரம் சென்று அதற்கு வேண்டிய பயிருணவுப்பொருள்களை அருந்த போதுமில்லாமற் போவதாலும் காய்க்குங்காலம் குறைகிறது. வருஷாவருஷம் கவனம் செலுத்தி செடிகளுக்குக் கனமாக எருவிடாவிட்டால் தோப்பு கேவலஸ்திதியை அடைகிறது. ஒருதரம் தோப்பு க்ஷீணிக்க ஆரம்பித்துவிட்டால் அதை மறுபடியும் நல்ல ஸ்திதிக்குக்கொண்டுவர அமோகமான செலவாவதால் அதைவிட புது செடிகளை வைத்துண்டாக்குவதே லாபகரமாயிருக்கிறது.

இவ்விரு குறைகளையும் நீக்குவதற்காக அநுபோகமுள்ள தோட்டக்காரர்கள் பின்னுல் சொல்லும் புதுமுறையைக் கையாடிவருகிருர்கள். தோட்டம்வைக்க உத்தேசிக்கும் இடத்தில் குழிகள் தோண்டி அக்குழிகளில் விதைதெரிந்து பொறுக்கியெடுத்த விதைகளைக் கொண்டுவந்து நட்டுவிடுகிருர்கள். இப்படி நட்ட அடிச்செடிகளில் எந்த வர்க்கச் செடிகளை நட உத்தேசித்திருக்கிருர்களோ, அந்த வர்க்கச்செடியின் ஒட்டுகளைத் தொட்டிகளில் உண்டாக்கி அந்தத் தாய்ச்செடிகளை பூமியில் நட்டிருக்கும் அடிச்செடியில் கொண்டுவந்து ஒட்டுக்கட்டுகிருர்கள். இப்படிக் கொண்டுவந்து ஒட்டுக்கட்டிய செடிகளின் தாய்ச்செடிகளின்வர்க்கம் மாத்திரம் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கிறதேதவிர தொட்டியில் நட்டிருக்கும் அடிச்செடிகள் தெரிந்தெடுத்த விதைகளிலிருந்து உண்டான செடிகளல்ல. ஏனெனில் தெரிந்தெடுத்த விதைகள் தோட்டத்தில் நடப்பட்டிருப்பதாலும் தொட்டியிலுள்ள ஒட்டுச்செடியின் தாய்ச்செடி (வர்க்கச்செடி) மாத்திரம் ஒட்டுக்கட்டி ஒட்டிய பின் தொட்டியிலுள்ள அடிச்செடிகள் அறுத்

. . . . நய எந்தவது

செடியாயிருந்தாலும் அதில் பாதகமில்லை. இப்படிச் செய்வதில் அடிச்செடியின் ஆணி வேர் அறுக்கப்படாததால் செடியின் தீவிர வளர்ச்சிக்கும் காரணமாயிருப்பதோடு அடிச் செடியும் தாய்ச்செடியும் திட்டமாய் இன்ன இனத்தைச் சேர்ந்ததென்று தெரியும். இப்படிச்செய்வதில் தோட்டத்தின் வயது அதிகமாய் நீடிக்கிறது.

ஒரே காலத்தில் பழுக்கும் நிலுசுகளையெல்லாம் தோட்டம் முழுவதிலும் இங்கொன்று அங்கொன்றாக கூடாமல் ஒரே பக்கத்தில் காவல் காக்கவும், பக்ஷிகளை ஓட்டவும், பழமாசூல் செய்யவும், சுலபமாகிறதென்று அநுபோகத்தால் தெரியவருகிறது. வட இந்தியாவிலுள்ள சிதளபிராந்தியங்களான மால்டா முதலிய இடங்களிலிருந்து கொண்டுவந்த சிறந்த நிலுசுகள் காய்க்காமலிருப்பதை எப்படி காய்க்கவைப்பதென்று கண்டுபிடிக்கவேண்டியிருக்கிறது. இவைகள் அநேகமாய் இலைமோதி வளர்கின்றனவே தவிர, காய்ப்பதில்லை. வேண்டிய அளவுக்கு அதிகமாகவே வேரறுத்துவிட்டுப்பார்த்தும் ஒன்றும் குணமில்லை. ஆகையால் தோட்டம்வைத்து உண்டாக்க விரும்புவோர் எந்த இடத்தில் தோட்டம் வைத்துண்டாக்க நினைக்கிறார்களோ அந்த இடத்தின் சீதோஷ்ண பேதங்களைப் போலொத்த சீதோஷ்ண பேதங்களுடைய இடத்திலிருந்தே செடிகள் வரவழைக்கவேண்டுமென்பதை முக்கியமாய் கவனிக்கவேண்டும்.

மாசூல்:—ஒட்டுச்செடிகள் 6-வது வருஷம் முதல் காய்க்கவிடலாம். அதற்குப்பின் 3 வருஷங்கள் பொறுத்து அதாவது 9-வது வயதில் சரியான காய்ப்பை அடையும். செடிகள் வைத்த 5 வருஷங்கள்வரையில் செடிகளின்கூட செய்யும் ஊடுபயிரிலிருந்து கிடைக்கும் வருமானமும் 6-வது வருஷமுதல் 9-வது வருஷம்வரையில் காய்ப்பதிலிருந்து கிடைக்கும் வருமானமும் அதுவரையில் செய்த செலவுகளுக்கு ஈடுவைத்துக்கொண்டு 9-வது வருஷம் முதல் வரவுசெலவு கணக்குப் பார்க்கலாம். எவ்வளவு ஜாக்கிரதையாய்ப் பாடுபட்டுப் பயிர்செய்தாலும் புஷ்பித்தல், காய்த்தல் முதலியவைகளைப்பற்றி திட்டமாய்ச் சொல்லமுடியாது. அக்டோபர் நவம்பர் மாதங்களில் பெய்யும் ஜாஸ்தி மழையின் காரணத்தாலும் நீடித்த நாட்களுக்கு மழை பெய்து குளிர்ச்சியாயிருந்தாலும், நாட்கள் பொறுத்து மரங்கள் புஷ்பிக்கவோ, அல்லது கொஞ்சமாய் புஷ்பிக்கவோ, அல்லது புஷ்பிக்காமல் துளிர் ஓடிவிடவோகூடும். புஷ்பிக்கும் காலத்தில் மப்புமந்தாரமாயும் பனி ஜாஸ்தியாயுமிருந்தால் புஷ்பங்கள் பிஞ்சு பிடிக்காமல் கொட்டியும்போகும். மாமரப்பூச்சிகள் புஷ்பங்களின் ரசத்தை உறிஞ்சிவிடுவதாலும் புஷ்பக்கிளைகளை உறிஞ்சிவிட்டு கோந்துபோன்ற ஒருவகை கருப்புத்தண்ணீரை மரத்தின் கிளைகளில் வடியவிடுவதாலும் பிஞ்சுகள் பிடிப்பதில்லை. மீன் எண்ணெயிலி லந்து, பீச்சாங்குழாய் . . . மேல் படியும்படி அடித்து தடுக்கலாம். வெயில் . . . கோடைமழையாலும் பிஞ்சு . . . டமுண்டாகும்.

மேற்சொன்ன பல காரணங்களையொட்டி உண்டாகும் கஷ்டங்களை கவனித்தால், சராசரி ஒரு மரத்திற்கு 6 ரூபாய் விலைபெறக்கூடிய 200 அல்லது 300 பழங்கள் பழுக்குமென்று மதிப்பிடலாம். ஆனால் பெரிய தோட்டங்களில் காய்க்கும் செடிகள், காய்க்காத மரங்கள் எல்லாவற்றையும் கணக்கிட்டுப் பார்த்தால் சராசரி மரம் ஒன்றுக்கு இரண்டு ரூபாய்க்குக் குறையாமல் மாசூல் கிடைக்குமென்று மதிப்பிடலாம். சரியானபடி வேரறுத்து, எருவிட்டு, தண்ணீர் பாய்ச்சிய இடங்களில் செடி ஒன்றுக்கு சுமார் ரூபாய் 25 பெறுமான காய்களும் அதற்கு அதிகமாகவும் காய்ப்பதை பல இடங்களில் காணலாம்

பழங்களையும், பழங்களிலிருந்து ரசம்பிழிந்து தயார்செய்யும் மேற்கண்டவைகளைக் கெட்டுப்போகாமல் பாதுகாக்கும் வழிகளையும் இத்துண்டு பத்திரிகையில் விவரிக்கமுடியாதாகையால் அதைச் சொல்லவில்லை.

பயிரிடும் செலவு:—செடிகளை நட்டுப் பின் பரிபாலிக்கும் செலவு பின்வருமாறு:

| முதல் வருஷம். | ரூ. | அ | பை. |
|---|---|---|---|
| 32 குழிகள் தோண்ட குழி ஒன்றுக்கு அணா 1 வீதம் .. | 2 | 0 | 0 |
| எருவிட்ட மண்ணால் குழிகளை மூடி செடிகளை நட குழி 1-க்கு 4 அணா வீதம் .. | 8 | 0 | 0 |
| 32 ஒட்டுச்செடிகளின் விலை செடி 1-க்கு 8 அணா வீதம் | 16 | 0 | 0 |
| தண்ணீர்விட, கிளைவெட்டி காவல்காக்க 100 ஆட்கள், ஆள் 1-க்கு 6 அணா வீதம் | 37 | 8 | 0 |
| தண்ணீர் தோண்டிகள் காவடி முதலியன .. .. | 2 | 0 | 0 |
| 4 உழவுகள், உழவு 1-க்கு ரூபாய் 1 வீதம் .. .. | 4 | 0 | 0 |
| மொத்தம் .. | 69 | 8 | 0 |

குறிப்பு:—மழைகள் பெய்ய ஆரம்பிக்கும்போது உழும் 4 உழவுகள்தான் கணக்குக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. மழைக்குப் பின் உழவுசெய்து கொள்ளு (காணம்) விதைக்கலாம்.

| இரண்டாவது வருஷம். | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| தண்ணீர் ஊற்ற, களைவெட்ட, காவல்காக்க, 100 ஆட்கள் ஆள் 1-க்கு 4 அணா வீதம் | 25 | 0 | 0 |
| எரு .. .. .. | 5 | 0 | 0 |
| உழவு .. .. .. | 5 | 0 | 0 |
| மொத்தம் .. | 35 | 0 | 0 |

| | | | |
|---|---|---|---|
| . . . வெட்ட, காவலகாரக் ஆட்கள் .. | | | |
| உழவு .. .. .. | | | |
| வருஷத்திற்கு மொத்த செலவு | 20 | 0 | 0 |
| ஆக முதல் ஐந்து வருஷங்களில் செடிகள் நடுவது முதல் ஏற்படும் மொத்த செலவு .. .. .. | 161 | 8 | 0 |
| 6-வது வருஷம் முதல் ஏற்படும் செலவு. | | | |
| உழவு .. .. .. | 4 | 0 | 0 |
| காவல்காத்தல், செடிகளைச்சுற்றிக் கொத்தல் 40 ஆட்கள் | 10 | 0 | 0 |
| மொத்தம் .. | 14 | 0 | 0 |

ஆறாவது வருஷம்முதல் செடி ஒன்றுக்கு மாசூலிலிருந்து ரூபாய் 1-8-0 வீதம் ஏக்கருக்கு ரூபாய் 48-0-0-ம் 11-வது வருஷம் முதல் செடி 1-க்கு ரூபாய் 2-8-0 வீதம் ஏக்கருக்கு ரூபாய் 80 கிடைக்குமென்று மதிப்பிடலாம்.

டி. கிருஷ்ணமூர்த்தி,
விவசாய டிப்டி டைரெக்டர்.

---

## கொசு.

(31-ம் பக்கத் தொடர்ச்சி.)

கொசுக்களில் பலவகை உண்டு. சில, மனிதனுக்கு அபாயமுண்டாக்குபவை. வேறு சில, அப்படி அபாயம் உண்டாக்குவதாய் இன்னம் கண்டுபிடிக்கப்படவில்லை. மனிதனுக்கு அபாயம் உண்டாக்கும் கொசுக்களில் முக்கியமானவைகள் (Anopheles) "அனுபிலீஸ்" என்றும், (Culex) "குலெக்ஸ்" என்னும் இரண்டு ஜாதியைச் சேர்ந்தவைகளே. அனுபிலீஸ் ஜாதியைச்சேர்ந்த கொசுக்களில் சில மலேரியா என்னும் விஷஜ்வரத்தை பரவச் செய்கின்றன. குலெக்ஸ் ஜாதியைச்சேர்ந்த சில கொசுக்கள் (Filaria) பிலேரியா, அல்லது யானைக்கால் என்னும் வியாதியை பரவச்செய்கின்றன.

ஈ எப்படிப் பலவித ஸ்திதிகளைத் தன் ஜீவியகாலத்தில் அடைந்து வளருகிறதோ, அப்படியே கொசுவும் பலபல வேறுபாடுகளை தன் ஜீவகாலத்தில் அடைகின்றது. இவ்வித வேறுபாடுகளை விரித்துத் தெரிவிப்பது கடினமானது. ஈயினுடைய வேறுபாடுகளுக்கும் ஒரு வித்தியாசம் உண்டு. அதாவது, ஈ குஞ்சு பொரிப்பதும் அடையும் வேறுபாடுகளெல்லாம் எருக்குவியல்களிலேதான். ஆனால் கொசு முதிர்வதற்குமுன் அடையும் வேறுபாடுகள் தண்ணீரிலேயாகும். பெண் கொசு முட்டையிலிருந்து குஞ்சுபொரித்ததோ இல்லையோ, அதற்கு வம்சவிர்த்திசெய்யச் சக்தி வந்துவிடு . . . ரு முடிகிறது. மனிதரு . . . தையாவது, அல்லது வேறு . . . வின் ரத்தத்தையாவது கொசு உறிஞ்சினால், சாதாரணமாய் காலை நேரங்களிலேயே முட்டை இட ஆரம்பிக்கும். முட்டைகள் தண்ணீரின் மீது இடப்படும். சில முட்டைகள் சிதறிப்போய்விடும்; வேறு சில தண்ணீரிலேயே, நக்ஷத்திர வடிவமாகவாவது, முக்கோணவடிவமாகவாவது, அல்லது வரிசையாகவாவது இருக்கும். கொசுப் பரிசை தேர்ந்த சாஸ்திர நிபுணர்கள், இம்முட்டைகளின் வடிவத்தையும், இடப்பட்டிருக்கும் மாதிரியையும் பார்த்து, கொசு எந்த ஜாதியைச்சேர்ந்தது என்று கண்டுபிடிக்க முயலுகின்றனர். ஆயினும், ஒவ்வொரு கொசுவும், ஒரு தடவையில 100 முட்டைகள் தண்ணீரின்மேல் இடுவதாய் நாம் தெரிந்துகொண்டால் போதுமானது. கொசு முட்டைகள் 1/50 முதல் 1/20 அங்குலம்தான் இருக்கும். முட்டையின் மேல் பாகம் தட்டையாயும், கீழ்பாகம் வளைந்து மேடாகவும் இருக்கும். முட்டையின் ஒரு நுனி கொஞ்சம் அகலமாகவும், மற்றொரு முனை அவ்வளவு அகலமாயிராமலும் இருக்கும். சீதோஷ்ண காலத்திற்குத்தக்கபடி, சுமார் இரண்டு நாளைக்குள் முட்டைகள் பழுத்து . . . , முட்டையிலுள்ள அகல . . . வழியாய், சில்லுப்போல ஒரு தவாரம் பண்ணிக்கொண்டு, முட்டையை உடைத்துக்கொண்டு வெளியே வரும். இப்படி வெளியேவரும் புழுக்குஞ்சுகள் அகோரமாய் ஆகாரம்தேடி உண்ணும். அவைகளுக்கு வெகு இஷ்டமான ஆகார பதார்த்தமே ஆகாரம். சில புழுக்குஞ்சுகள் தண்ணீரின்மேல் தட்டையாய்ப் படுத்துக் கிடப்பதையும், வேறு சில, தண்ணீரில ஒரு மூலையாய்த் தொங்கிக்கொண்டிருப்பதையும் நீங்கள் பார்த்திருப்பீர்கள். தண்ணீரில் படுக்கையாய்ப் படுத்திருப்பவை மலேரியா சுரத்தை உண்டாக்கும் கொசுவகையைச் சேர்ந்தன. மூலையாய்த் தொங்கிக்கொண்டிருப்பவை, யானைக்கால் வியாதியை உண்டாக்குபவை. அப்புழுக்குஞ்சுகள் சுமார் 10 நாள் வரையிலும், வெகு சுறுசுறுப்பாய் வேலைசெய்வன. பிறகு அவைகளுக்கு சுறுசுறுப்பெல்லாம் மாறிப்போய், மந்த ஸ்திதியைப்பெற்று, வேலை ஒன்றும் செய்யாமல், சுமார் 48 மணி நேரம் வரையில் கிடக்கும். மாலை வேளைகளில், இப்படி மந்த ஸ்திதியிலிருக்கும் புழுக்குஞ்சுகள் தண்ணீரின் மேல் கிளம்பிவிடும். அப்பொழுது புழுவின் மேல்புறம் வெடித்துவிடும். அவ்வெடிப்பிலிருந்து பருத்தகொசு ("Imago") வெளிவந்துவிடும். ஒவ்வொரு கொசு முட்டையிலிருந்தும், ஒரு பருத்த கொசு வெளிவந்துவிடும் என்பதில்லை. ஏனென்றால், கொசுமுட்டைகளுக்கும், குஞ்சுகளுக்கும் தண்ணீரில் சத்ருக்கள் பல உண்டு. இந்த விரோதிகளில் முக்கியமானவை பல . . . தண்ணீரில் விரோதிகளை . . . ந்த இடத்தில் தன் . . . ழ முதலிய பக்ஷோ . . . பனது உணவுடா அந்த இடங்களையே பொறுக்கி, முட்டையிடுகிறது. அனுபிலீஸ் ஜாதிக் கொசுவை, சுத்தத் தண்ணீர் சுத்தமாயும், தழை, பூண்டுகள் அடர்ந்திருக்குமோ அந்தத் தண்ணீரிலேயே முட்டை இடும். ஆகையினாலே, இந்த ஜாதிக்கொசுவை, ஆற்றோரங்களில் பூண்டுகள் முளைத்திருக்கும்படியான ஆசுரவான ஜலத்தாவுகளிலாவது, ஏரி ஓரங்களில் எங்கே புல் பூண்டுகள் முளைத்திருக்குமோ அந்த இடங்களிலாவது, எந்த இடத்தில் தண்ணீர் சுத்தமாகத் தேங்கிக் கிடக்குமோ—(அந்த நீர்நிலைகள் பெரிதாகவிருந்தாலும்சரி, சிறிதாகவிருந்தாலும்சரி) அந்த இடங்களிலாவது, நாம கண்டுபிடிக்கக்கூடும். மேல்கண்ட இடங்களில் அனுபிலீஸ் ஜாதிக் கொசுவைக் கண்டுபிடிக்க முடியாமற்போனால், சுமாராய் உப்பு உள்ள தண்ணீரில் எங்கே பச்சைப் புல் அடர்ந்திருக்குமோ அங்கே கண்டு பிடிக்கலாம். இன்னொரு ஜாதியாகிய "குலெக்ஸ்" வகைக் கொசுவிற்கு முட்டையிட எந்தத் தினுசு தண்ணீராயிருந்தாலும் பாதகமில்லை, தண்ணீர் உப்பில்லாமல் இருந்தாலும் சரியே, அல்லது உப்பாயிருந்தாலும் சரியே, தண்ணீர் சுத்தமாயிருந்தாலும் சரியே, தண்ணீர் அசுத்தமாயிருந்தாலும் சரியே, ஒன்றையும் இந்த இரண்டாவது ஜாதிக்கொசு லக்ஷியம் பண்ணுவதில்லை. இப்படி எல்லாவிதமான ஸ்தலங்களிலும் இந்த ஜாதிக் கொசு முட்டையிடும். கணறுகள் பெரிதானாலும் சிறிதானாலும் சரி, குட்டைகளானாலும் சரி, உடைந்து கிடக்கும் குப்பிகளில் தண்ணீர் . . . ஓடைகளானாலும் சரி, . . . ளானாலும் ஓடைகளானாலும் சரி, மரங்களிலுள்ள பொந்துகளானாலும் சரி, மூங்கில், வாழை முதலிய மரம் செடிகளானாலும் சரி, இவையெல்லாம் இரண்டாவது ஜாதி கொசுவுக்கு முட்டை இட்டுக் குஞ்சு பொரிக்க ஆதாரமானவைகளே.

ஆகவே, கொசுக்கள் முட்டையிட்டுக் குஞ்சு பொரித்து வர்த்திக்காமல் நாம் தடுத்துக்கொள்ள வேண்டுமானால், நம்முடைய வீடுகளைச் சுற்றிலும் உடைந்த குப்பிகள், மண்பானைகள் முதலியவைகள் சிதறிகிடவாமல் பார்த்துக்கொள்வதுடன், மழைக் காலங்களில், அவைகளில் தண்ணீர் தேங்கி கொசுவுக்கு முட்டையிட இடம் கொடுக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டியது அவசியம். குளக்கரைகளிலும், ஏரிக்கரைகளிலும் புல் பூண்டுகள் முளைத்து கொசுவுக்கு முட்டை இட்டுக் குஞ்சு பொரிக்க இடம் கொடாமல் இருக்கும்படி, அப்புல் பூண்டுகளைப் பிடுங்கி எறிந்து விடவேண்டும். குளக்கரைகளையும், ஏரிக்கரைகளையும் கொஞ்சம சரிவாய இருக்கும்படி போட்டு, அக்கரைகளில் வெடிப்பு உண்டாகி, அதில் தண்ணீர் தேங்கி கொசு முட்டைவைக்க இடமிராமலிருக்கும்படிக்கும் பார்த்துக்கொள் . . . கொசு முட்டைகளையும், குஞ்சுகளையும் கொன்றுவிடுவதற்கு, தண்ணீரின் மேல மண்ணெண்ணெய் கலந்த ஒரு திராவகத்தைத் தெளித்து அடிப்பது நல்லது என்று நினைத்து, கொசுக்களைப் போக்கடிக்க அத்திராவகத்தைத் தண்ணீரில் தெளித்து வருகிறார்கள். ஆனால் இப்படிச் செய்வதில் வெகு ஜாக்கிரதையாயிருக்க வேண்டும். கொஞ்சம நாளைக்குள், அடிக்கடி விட்டுவிட்டு அம் மருந்தைத் தெளித்துக்கொண்டே வரவேண்டும். இப்படிச் செய்வதில் ஒரு ஆக்ஷேபனை ஏற்படுகிறது. அதாவது, மண்ணெண்ணெய் கலந்த திராவகத்தை தண்ணீரில தெளிப்பதினாலே, தண்ணீரிலுள்ள சிறு மீன்கள் செத்துப்போகின்றன. மேலும் சிறு மீன்கள், கொசு முட்டைகளையும், குஞ்சுகளையும் தின்றுவிட்டு, கொசுவைத் தொலைப்பதற்கு உதவியாயிருக்க அச்சிறு மீன்கள் செத்துப்போவதினாலே இடைஞ்சல்சேரிட இடமுண்டாகும். கொசுக் குஞ்சுகளைத்தின்று ஜீவிக்கக்கூடிய சிறு மீன்களை கிணறுகளிலும, குளம் குட்டைகளிலும் ஏராளமாய்ப் பிடித்து விடுவது, கொசுவைத்தொலைப்பதற்கு நல்ல உபாயம். மீன் இலாகாக்காரர்கள், கொசுக்குஞ்சுகளை விழுங்கக்கூடிய சிறு மீன்களைப் பிடித்து, குளம் குட்டைகளில் ஏராளமாய் விடுகின்றனர். இதற்காக அவ்விலாகாவுக்கு மனு செய்துகொள்ளவேண்டும்.

கொசுக்களினாலே பரவும் வியாதிகளை அணுகவொட்டாமல் தடுத்து நம்மைக்காப்பாற்றிக்கொள்ளுவதற்கு, நாம் கொசுவலைபோட்டுக்கொண்டு, அதற்குள் படுத்துத்தூங்குவதே வெகு சிரேஷ்டமானது.

(குறிப்பு:—இந்த துண்டுப் பிரசுரத்தின் பிரதிகள் இன்னும் தேவையானால், சென்னை பப்ளிஸிடி பீரோவிற்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.)

---

## கினியா புல்

இது தூர்கட்டி பலமாய் வளரக்கூடிய புல். இறவையில் இதன் வளர்ச்சிக்கு வேண்டிய வசதிகள் அமைந்திருக்கும் சந்தர்ப்பங்களில் கரவை பசுக்களுக்கு லாயக்கான நல்ல தீவனத்தை ஜாஸ்தியாய் கொடுக்கக்கூடியது.

மண்ணிபக்கு:-இதற்கு சத்துள்ளதும் மண் கண்டம் ஜாஸ்தியாயுமுள்ள நிலம் தேவை. சத்தில்லா கேவலமான நிலங்களில் ஜாஸ்தியாய் எருச்செய்து சுத்தம் செய்யவேண்டும். ஏனென்றால் இந்த பயிர் நிலசத்தை அதிக ஆவலாய் எடுத்துக்கொள்ளும் சுபாவமுடையது. கக்குஸ் எரு இப்பயிருக்கு ஏற்ற எரு. குதிரைச்சாணி. அல்லது பாட்டுச்சாணி கூட ஏற்ற எருக்கள்தான். மாட்டுகொட்டாயிலிருந்து வெளிப்படும் மூத்திர தண்ணீர் முதல்பலையும் நல்ல எருவே.

புல நடுதல்:—இந்த புல் பயிரிட உத்தேசித்திருக்கும் நிலத்தை சரியானபடி மேடு பள்ளமில்லாமல் ஒரே பக்கம் சரிவிருக்கும்

படியும் மட்டப்படுத்த வேண்டும். அப்பால் இரண்டு முதல் மூன்று அடி தூரத்துக்கு ஒழுங்கான சால்கள் போட்டு மத்தியில் தண்ணீர் போகும்படியான கால்களிருக்கும்படி அமைக்கவேண்டும். இரண்டடி தூரத்திற்கு ஒருகாலும் முகமுமாயிருந்தால் நல்லது. இச்சால்கள் போடும்போது நேரான கயிறுகட்டி போடுகிறது சிலாக்கியம். இப்படி செய்தால சால்கள் நேராயும் ஒழுங்காயுமிருக்கும். இப்படி செய்த முகடுகளின் (மஞ்சிகளின்) உச்சியில் இரண்டு அல்லது மூன்று அடி தூரத்திற்கு ஒரு கினியா புல் தூரிலிருந்து பிரித்தெடுத்த புல்முதலை நடவேண்டும். ஒரு பயிருக்கும் மற்றொரு பயிருக்கும் உள்ள தூரம சரியானபடியும் ஒரு முகட்டிலுள்ள பயிர் மற்றொரு முகட்டிலுள்ள பயிருக்கு நேராயுமிருக்கும்படி சற்று ஜாக்கிரதையாய் இப்பயிர் நடப்பட வேண்டும். ஏனென்றால் இப்பயிர் அதே நிலத்தில் சில வருஷங்களுக்கு வைத்திருக்க வேண்டியதால் பின்செய் நேர்த்தி செய்வதற்கு அனுகூலமாயிருக்கும். 3 அடி தூரத்திற்கு ஒரு சாலும், ஒவ்வொரு மஞ்சியில் 3 அடி தூரத்திற்கு ஒருமுதலாய் நட்டால் ஏகரா ஒன்றுக்கு 4,840 தனிமுதல்கள் வேண்டியதாயிருக்கும். அப்படியில்லாமல் இரண்டடிக்கு ஒரு மஞ்சியும், மஞ்சியில் இரண்டடிக்கு ஒரு செடியுமாய் நட்டால் 10,890 புல்முதல்கள் தேவையாயிருக்கும். இபுல்முதல்களை தண்ணீர் கால்களின் இருபக்கங்களிலும் வாய்க்கால்களின் கரைகளிலும் நடலாம். இப்பயிர் நிழலிலும் நன்றாய் பயிராகும் குணமுடையது.

புல் முதல்கள்:-இவைகள் புல் தூருகட்டியிருக்கும் தூர்களிலிருந்து எடுக்கப்பட்டவை. இவைகளை நட்டால் அவைகள் துளிர்த்து பயிராகிவிடும். இத்தூர்கள் முன் கினியா புல் சாகுபடி செய்திருக்கும் இடங்களிலிருந்து பெயர்த்துக்கொண்டுவரலாம். இப் புல் விதையை விதைத்து பயிர்செய்வதைவிட இத்தூர்களிலிருந்து எடுத்து பயிர் செய்தல் சுலபம். இப்புல் விதையை விதைத்து பயிராக்கும் வழக்கம் அநேகமாய் கிடையாது. இப்புல் தூர்கள் பயிர்செய்ய

வ
புள்ள டிப்டி டைரெக்ட..
மனுச்செய்துகொண்டால்

ளுக்கு இரண்டணா கிரயத்... வறுட... கள். பாக்கிங் ரெயில் சார்ஜு முதலியன பிரத்தியேகம். ஆகையால் ஒரு ஏகராவில் இப்புல் நடவேண்டுமானால் ரூ. 7 முதல் 15 வரை அடங்கக்கூடும். இக்கிரயம் நட்டு முளைக்காத பாகங்களுக்கு பர்த்தி செய்வதையும் சேர்த்து கணக்கிடப்பட்டிருக்கிறது.

பின்செய் நேர்த்தி:—இதை நட்டபின் சாதாரணமாய் ஒரு களைவெட்டு கொடுக்க வேண்டியதிருக்கும. அப்பால் பயிர் நன்றாய் பச்சையிட்டு தேறிபோகும். பயிர் சரியானபடி தேறிப்போகும். பயிர் சரியானபடி தேறி கிளைக்க ஆரம்பித்தவுடன் ஒரு கலப்பை கொண்டாவது அல்லது *ஜூனியர்கலப்பையென்றபயிரிடும் கருவி கொண்டாவது வரிசைகளுக்கு இடையேயுள்ள நிலத்தை கிளரிக்கொடுத்தால் களை அப்புறப்பட்டு மண் பொலுபொலுப்பாவதுடன் இறைக்கும் ஜலமும் சரியானபடி மண்ணிற்குள் ஊறும். அப்போதைக்கப்போது எருவும் போட்டுக்கொண்டிருக்கவேண்டும். எத்தனைதரம் எருச் சிதறுகிறோமோ அவ்வளவு பயிர் வீரியமாய் வளரும். பயிர்வளர்ந்தவுடன் அறுவடை செய்யலாம். ஒருவருஷத்திற்குள் அநேகமாய 8 தரம் இப்பயிரை அறுவடை செய்யலாம். அநேகமாய் இரண்டு வருஷத்திற்கு பின் இப்புல் தூர்கட்டி ஜாஸ்தி கிளைத்துவிட்டால் அப்போது அதை வெட்டி அப்புறப்படுத்தவேண்டிய தவசியம். இதை சுலபமாய் மண்வெட்டி கொண்டு ஒரு தூரின்மேல் கிழக்கு மேற்காய் ஒருவெட்டும தென்வடலாய ஒருவெட்டும் வெட்டினால் நாலு பாகங்களாய் ஒரு தூர் வெட்டப்படும்போம. உடனே அதில் ஒரு பாகத்தை மாத்திரம் கொல்லையில் பயிராகும்படி நிறுத்திவிட்டு மீதி மூன்று பாகங்களையும் வேருடன் அப்புறப்படுத்திவிடலாம். சில சந்தர்ப்பங்களில பூராகொல்லையும் புதிதாய் நடவேண்டியதாயுமிருக்கும்.

...த்த,
...ருர்கள—1915-ம்ஹு 7-ம ...
பத்திரிகையைப் பார்க்க.

பஞ்சாங்கம்.

1926ஹு-செப்டம்பர்மீ

● அமாவாசை ○ பௌர்ணமி *கிருத்திகை

| வாரம் | தேதி | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஞாயிறு | ... | 5 | 12 | 19 | *26 | ... |
| திங்கள் | ... | ●6 | 13 | 20 | 27 | ... |
| செவ் | ... | 7 | 14 | ○21 | 28 | ... |
| புதன் | 1 | 8 | 15 | 22 | 29 | ... |
| வியா | 2 | 9 | 16 | 23 | 30 | ... |
| வெள | 3 | 10 | 17 | 24 | ... | ... |
| சனி | 4 | 11 | 18 | 25 | ... | ... |

| வாரம் | அக்ஷய-ஹு ஆவணி 16உ—புரட்டாசி 14உ | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஞாயிறு | ... | 20 | 27 | 3 | *10 | ... |
| திங்கள் | ... | ●21 | 28 | 4 | 11 | ... |
| செவ் | ... | 22 | 29 | ○5 | 12 | ... |
| புதன் | 16 | 23 | 30 | [illegible] | [illegible] | ... |
| வியா | 17 | 24 | 31 | 7 | 14 | ... |
| வெள்ளி | 18 | 25 | 1 | 8 | ... | ... |
| சனி | 19 | 26 | 2 | 9 | ... | ... |

செப்டம்பர்மீ

6உ அமாவாசை

11உ விநாயக சதுர்த்தி

21உ பௌர்ணமி.

26உ கார்த்திகை.


*Patron.* M.R.Ry. Rao Sahib,
A. J. Vethanayaga Thevar Avl.,
Usilampatti.

*Editor.*—Rev. George J. Athishtam,
Usilampatti.

*Manager.*—Rev. R. A. Dudley,
Tirumangalam.

Subscription—Single copy 14 annas a year (including charges for delivery) payable in advance.

All orders to be sent to the *Manager.*

Articles for insertion should be sent, not later than 15th of each month to the *Editor.*

சம்ரக்ஷகர்.—மகா-ா-ா-ஸ்ரீ ராவ் சாஹெப் வேதநாயகத் தேவரவர்கள், உசிலம்பட்டி.

பத்திராதிபர்.—கனம் ஜார்ஜ் அதிஷ்டம் ஐயரவர்கள், உசிலம்பட்டி.

மானேஜர்.—கனம் ஆர். ஏ. டட்லி துரையவர்கள், திருமங்கலம்.

வருஷ சந்தா தபாற்கூலி உட்பட அணா 14. ஒரு வருஷ கையொப்பம் முன்னதாகவே அனுப்பவேண்டும்.

பத்திரிகை வேண்டுவோர் மானேஜரவர்களுக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

சமாச்சாரக்குறிப்பு முதலியவை அனுப்ப விரும்புவோர் அந்த மாதம் 15-ம் தேதிக்குள் சுருக்கமாக எழுதி பத்திராதிபருக்கு அனுப்பவேண்டும்.

பசுமலை அமெரிக்கன் மிஷன் "லினக்ஸ" அச்சுயந்திரசாலையில் பிரசுரிக்கப்பட்டது



OFFICE ... THE ... 11 NOV 1926 MADRAS



மாதாந்தரப்பத்திப்பு] [வால்

# The Piramalai Reform

## பிரமலை சீர்திருத்தன்.

"தன் புத்திக்குத்தக்கதாக மனுஷன் புகழப்படுவான்; மாறுபாடான இருதயமுள்

Vol. VI.] அக்டோபர்மீ, 1926


### C. T. R. No. 28953

அணைஞ்சித்தேவன், தகப்பன் ராமத்தேவன், சுருளிப்பட்டி. வயது சுமார் 22. கருப்புநிறம். ஒல்லியானதிரேகம். குட்டையானவன். ...வியாதிக்காரன் போல் இருப்பான். பந்துக்கள் சுருளிப்பட்டியில் தன் கூடப்பிறந்த அக்காள் அங்கம்மாள், டியாள் புருஷன் விருமாண்டித்தேவன். நாறணத்தேவன் பட்டியில் தன் தங்கை அங்கம்மாள், டியாள் புருஷன் பெருமாத்தேவன். உப்புக்கோட்டையில் தன் சிறிய தகப்பன் மகன் சின்னச்சாமித்தேவன் டியான் தன் பெரிய அய்யா மகன் ...ரணத்தேவன். சாப்டூர் ஸ்டேஷன் சரகம் மானூத்தில் தன் தாயாரை பெற்ற பாட்டன் கழுவத்தேவன் ...கன் பூச்சித்தேவன். போகக்கூடிய இடங்கள் ரங்கூன், சிலோன், பினங்கு, மானூத்து, உப்புக்கோட்டை வகையரு இடங்களுக்கு போவான். இவன் 2-7-26உ முதல் பரா... இந்த நபரை A. list-ல் பிரசுரம் செய்யவேணுமாய் கோரப்படுகிறது.

### ஓர் அறிவிப்பு.

மதுரை ஜில்லாவிலுள்ள கோம்பப்பட்டி கிராம ஐக்கிய சங்கத்தின் காரியதரிசி கந்தமணியம் என்பவர் டிசங்கத்தின் பணம் ரூ. 150-ஐ கையாடியதற்காகவும், அதை மறைப்பதன் பொருட்டு சில முக்கிய ரிக்கார்டுகளை மாற்றி வேறு சிலவற்றைத் தயாரித்து வைத்ததற்காகவும், மதுரை அசிஸ்டெண்டு ஸெஷன் ஜட்ஜ் அவர்களால் இரண்டு வருடம் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டார்.

இச்செய்தியை கள்ளர் கூட்டுறவு (கோவாப்பிரேடிவ்) சங்கங்களைச்சேர்ந்த பஞ்சாயத்தார்களும், பிரசிடெண்டுகளும், காரியதரிசிகளும், மற்ற அதிகாரிகளும் நன்கு கவனித்து வெகு ஜாக்கிரதையாய் இருக்கவேண்டுமென்று இதனால் எச்சரிக்கப்படுகின்றது.

(Sd.) K. P. Janardhan Rao,
கள்ளர் ஸ்பெஷல் சூப்பிடெண்ட் மதுரை.

N. Dis. 297/C-26.

### செல்வம் சந்தோஷத்தை கொடுக்குமா?

கடந்த 1923ஹு மேமீ 11உ யன்று சென்னை மெயில் பத்திரிகையில் பிரசுரமாக்கப்பட்ட தந்திச்செய்தி மூலமாய் பின்வருமாறு அறியப்படுகிறது. அமெரிக்கா தேசத்தில் ஐக்கிய நாடுகள் என்று சொல்லப்படும் மாகாணத்தில் கடந்த 12 மாசங்களுக்குள் தற்கொலைசெய்துகொண்ட 1,20,000 பேர்களில் 79 லக்ஷாதிபிரபுக்களும், 46 ஐசுவரிய பெண்களும், 88 பாங்கர்களும் உண்டு என்று சொல்லப்படுகிறது எல்லாரிலும் பெரியவர் 100 வயதுள்ள ஓர் பாட்டியும், சிறியது 5 வயதுள்ள ஓர் குழந்தையுமாம். இன்னும் 38 கலாசாலை மாணவரும், 50 கலாசாலைப் புரொபெசர்களும் உபாத்திமார்களும், 19 உபதேசிகளும் பிரசங்கிகளும், 52 வக்கீல்களும் நியாயாதிபதிகளும, 84 வைத்தியர்களும், 100 பிரசிடெண்டுகளும் வியாபாரத்தலைவர்களும், பாங்கு பிரசிடெண்டுகளில் அநேகருமாக இருக்கின்றன. பாங்கு பிரசிடெண்டுகளில் ஒருவர் பத்துமுறை தற்கொலைபுரிய பெத்தனித்தும் சித்திபெறாமல் பதினோராம் முறையில் உயிர்விட்டார். தலைமயிர் உதிர்ந்துபோனதற்காக மனம் பொறாமல் உயிர்விட்டாள். ஓர் இளமாது காலை என்னும் ...தாட்டம் கூடாதென்று நிறுத்தப்பட்டதினால் உயிர்விட்டாள். ஒரு தரை மகன் பிரயாணம் போனதில் இருமுறை ரெயில் தப்பி பிரயாணம் தடைபட்டதற்காக தற்கொலைபுரிந்தான். ஓர் ஸ்திரீ உலகத்தின் முடிவு காலம் சமீபித்துவிட்டதேயென்று பயந்து உயிரிழந்தாளாம். ஒரு மனிதன் மற்றொருவன் ஒரு பூனைக்கு வழக்காடியதால் உயிர் துறந்தான். மொத்தம் தற்கொலை புரிக்

பெண்மணி
விதம் நடக்கை
கென்ன பாக்கியம்
நித்துப்பாருங்கள்.
ாழ்வே குறைவற்ற
அவ்விதம் செல்வ
ல் மானிட பிறவி
நோயற்ற வாழ்வை
முயற்சிசெய்யவே
வொருநாளும் ஆ
த்துவருவ
கருணை
யோடும்
வேண்

தங்கள்
கவனிக்கா
பரிதாபமாயி
தேகாப்பியாசம்
ாது. சதாகால
தை காலத்தைப் போக்
மது நாட்டில் வியாபாரம் நட
ரோப்பிய வர்த்தகர்கள் அநேகர்
காலமானதும் தங்கள் சரீர உழைப்புக்
வேண்டிய அப்பியாசங்களை ஒழுங்காய்
செய்துவருகின்றனர். நமது வர்த்தகர்களோ
இடுக்கமானதும் காற்றோட்டமில்லாததுமான
தங்கள் கடைகளிலேயே பலவித சாமான்
களுக்கிடையில் இரவில் வெகுநேரம் வரை
யிலும் உட்கார்ந்தேயிருக்கிறார்கள். சுத்த ஆகா
யம் அவர்கள்மேல் படுவதற்கே இடங்கிடை
யாது. அவர்களுக்கு இளைப்பாறுதலோ
தாங்கள் வியாதியில் அகப்படும் காலந்தான்.
மற்ற காலங்களில் தெரியவே தெரியாது.
சாப்பாட்டு விஷயத்திலோ ரொம்ப
னம். அகால போஜனமே அவர்க
பிரதானம். அநேகம் வியாபாரிகள் நீ
க்ஷயம் குன்மம் முதலிய பலவகை கொ
வியாதிகளில் கஷ்டப்படுவதைப் பார்க்கி
றோம். அப்படிப்பட்டவர்கள் பின்னால் வ
தோ சாவகாசமாய் வியாதியைக் குணப்படுத்
திக்கொள்ளலாமென்று அசட்டையாய் தங்
கள் வர்த்தகத்திலேயே கண்ணுங்கருத்துமா
யிருந்து வருகிறார்கள். இவர்களுக்கு சாவ
காசம் எப்பொழுதுதான் வருமோ தெரிய
வில்லை. அதுவரை வியாதியானது அவர்க
ளைச் சும்மாவிட்டிருக்குமா? அநேகரை
மண்ணுலகில் நின்றும் விண்ணுலகுக்கு அ
னுப்பிவிடுகிறது. சிலர் எல்லாம் விதியின்
படியே நடக்குமென்று சொல்லி வியாதியைக்
... விடுகின்றனர்.
... இப்

## சிசுக்களின் நற்பாதுகாப்பு விஷயமாய் பெற்றோர் அறியவேண்டியவை.—

1. சிசு உற்பத்திக்கு முன்னரே முதல் தாய் தந்தையரிருவரும் சுகதேகிகளாயிருந்து வரவேண்டும்.

சாதாரணமாக சுகதேகமுள்ள பெற்றோர்க்கே சுகதேகமுள்ள சிசுக்கள் ஜெனிக்கிறதைப் பார்க்கிறோம். திடகாத்திரமும் சுகதேகமும் புஷ்டிகரமுமான குழந்தைகளைப் பார்க்கிலும் பலஹீனமும் மெலிந்த சரீரமுடையதுமான குழந்தைகள் வெகு எளிதில் வியாதிகளுக்குள்ளாகின்றன. தாய் சுகதேகியாயிருந்தால் சிசுவுக்கு நல்ல பால் கிடைக்கும். தந்தை சுகதேகியாயிருந்தால் குடும்பத்தைச் சரியப் பாதுகாத்து வரமுடியும். ஆகவே இவ்விருவரும் சுகதேகிகளாயிருந்து வரவேண்டியது அவசியம்.

2. சிசு பிறந்து ஒருவயசு வரைக்கும் தாய்ப் பாலையே கொடுப்பதற்கு வேண்டிய முயற்சிசெய்யவேண்டும்.

தாயானவள் எப்பொழுதும் தன் குழந்தைக்குப்பால் கொடுப்பதிலும் அதற்குவேண்டிய சௌகரியங்கள் செய்துவருவதிலுமே கவனமாயிருக்கவேண்டும். பூராவும் தாய்ப் பாலைக் கொடுத்துவர இயலாத பக்ஷத்தில் சிலவேளைகளில் தாய்ப்பாலையும் சிலவேளைகளில் நல்ல பசும்பாலை முறை தெரிந்தவர்களை வைத்து தயார்செய்தும் கொடுத்துவரலாம். பருவம் வருமுன் குழந்தைகளை பால்குடி மறக்கச்செய்யக்கூடாது. மற்ற பால்களைச் சாப்பிட்டுவரும் குழந்தைகளைக்காட்டிலும் தாய்ப்பாலைச் சாப்பிட்டுவரும் குழந்தைகள் அதிகமாய் சுகதேகிகளாக இருந்து வருகின்றன. தாய்ப்பாலானது சிசுவுக்கு ஜன்ம சுதந்தரம். சிசுக்கள் தாய்ப்பாலைச் சாப்பிடவேண்டுமென்பதே இயற்கைக் கருத்து. அவ்வியற்கைக்கு விரோதம் செய்பவர்களுக்குத் தண்டனை கிடைக்கும்.

3. தாய்ப் பாலனாலும்சரி வேறெந்தப் பாலாலுஞ்சரி சிசுவை ஒழுங்காய்ப் போஷித்துவரவேண்டும்.

சிசு அழும்போதெல்லாம் எடுத்து பால் கொடுக்கக்கூடாது பசி எடுத்தால் மாத்திரந்தான் சிசு அழுமென்பதில்லை. இலேசான நோவு, அசௌகரியம், சட்டை கனைந்திருத்தல், காலில் ஈரம்படுதல் முதலான காரணங்களைக்கொண்டும் அழ ஆரம்பிக்கும். ஆகையால் தேர்ந்தவைத்தியர் அனுமதியின்படி இரண்டரை மணி நேரத்திற்கொருதடவை அல்லது மூன்று அல்லது நாலுமணி நேரத்திற்கொருதடவை குறிப்பிட்டுக்கொண்டு அதன்படி ஒழுங்காய் பால்கொடுத்துவரவேண்டும். ஒழுங்கீனமாகக் கொடுப்பதினால் சிசுவுக்... பிறருக் ...விகளின் வேலைகள் தாறுமா...டம், வயிற்றுப்பொருமல், ...வித வியாதிகள் ஏற்பட்டு ...ர்பட்...ண்டும். கூட்டி குறைத்து கொடுத்தல் ஆகாது.

பாலின் அளவைக் குறைத்துக் கொடுப்பதைவிட கூட்டிக்கொடுப்பது மிகுந்த கெடுதலை விளைவிக்கும். 'சிற்றாணியும் மீதாண் தீது' சிசுவுக்கு வயது ஆக ஆக அதன் வயிறு கொள்ளக்கூடிய அளவு கூடும். ஒரே வயசுள்ள பல குழந்தைகளுள் ஒவ்வொரு குழந்தைக்கும் ஒவ்வொரு அளவு ஏற்பட்டிருக்கும்.

அதற்குள்ள காரணங்கள் தேர்ந்த வைத்தியர்களுக்கே தெரியவரும். ஆகையால் அப்படிப்பட்டவர்களுடைய உதவியினால் தன் தன் குழந்தைக்கு எவ்வளவு எத்தனை மணிக்கொருதரம் கொடுக்கவேண்டுமென்பதைத் தெரிந்துகொண்டு அதன்படி நடந்துவரவேண்டும். சிசுவுக்கு அளவுக்கு மிஞ்சி ஆகாரம் கொடுப்பதினால் அதற்குத் தேகபலங்குன்றி ஆயுள்ளளவும் கஷ்டத்தையே அனுபவிக்க நேர்வாய்விடும்.

5. தாயும் சிசுவும் இவர்கள் கையாடக்கூடிய சகல சாமான்களும் சர்வ சுத்தமாக இருக்கவேண்டும்.

சுத்தமென்பதைக் கடவுளுக்கு அடுத்ததாக காத்துவரவேண்டும். நல் ஆரோக்கியத்திற்கும் அது சிரேஷ்டமானது. சுத்தம் இல்லாத இடத்தில் அழுக்கு ஏற்படுகிறது. அழுக்கு வியாதிக்கு காரணமாகிறது. வியாதி மரணத்திற்கு காரணமாகிறது. ஆகவே அழுக்கு, வியாதி, மரணம் இம்மூன்றும் ஒன்றுடனொன்று சம்பந்தமுடையது. அசுத்தம் காரணமாகவே ... படுகிறது சுத்தமாயிருந்தாலினால் மனோகரமும் மனத்திருப்தியும் உண்டாகிறது. நமது ஆரோக்கியத்திற்கு நாம் மாத்திரம் சுத்தமாயிருந்து கொள்ளுதல் போதாது நமது வாசஸ்தலத்துக்கு அக்கம்பக்கமும் சுத்தமாயிருக்கவேண்டும். ஆகையால் நம்மைச் சுற்றிவசிப்பவர்களுக்கும் சுத்தத்தின் விஷயத்தைப்போதித்து அவர்களையும் சுத்தமாயிருந்து வரச்செய்யவேண்டும் சிசு சம்பந்தமாக சுத்தமாக வைத்துக்கொள்ளவேண்டிய சாதனங்கள் எவையெனில் முலைக்காம்பு, பால் வைத்துப் புகட்டும் புட்டி, வீடு, உடை, பால் தயார்செய்யும் பாத்திரங்கள், கைகள் முதலியவை இவ்வகை சாதனங்களில் ஈக்கள் மொய்க்காதபடியும் பார்த்துக்கொள்ளவேண்டும்.

6. சிசுவுக்கு சுத்த ஆகாயமும், சூரிய வெளிச்சமும் போதுமானபடி இருக்கவேண்டும்.

குழந்தைகள் சிறு செடிகளுக்கொப்பாம். அவைகளுக்கும் மேற்சொன்ன இரண்டும் அத்தியாவசியம். சிசுவிருக்கும் அறையில் எப்போதும் காற்று ஓடிக்கொண்டிருக்கவேண்டும். கூடுமானவரையில் சூரியவெளிச்சமும், உள்வரவிடவேண்டும் சூரியவெளிச்சமும் காற்றும், விஷப்பூச்சிகளைக் கொல்லும் சக்தியுடையது. ஆனால் சூரியவெளிச்சம் சிசுவின் கண்களில் படக்கூடாது. இரவும் பகலும் ஜன்னல்கள் திறந்திருக்கவேண்டும்.



மழை, பனி இல்லாத சாதாரணகாலங்களில், ராக்காற்றைப்பற்றி பயப்படக்கூடாது. இரவில் ஜன்னல்களைத் திறக்காமல் அறைகள் அடைபட்டிருக்கும் காற்றே, தீங்கு செய்யக்கூடியது. ஜன்னல்களுக்கு வலை போடவேண்டும்.

வீட்டிலுள்ள அறைகளிலெல்லாம் வசதியான அறையில்தான் சிசுவை வைத்திருக்கவேண்டும். குளிராவது காற்றாவது இல்லாத சமயங்களில், சிசுவை கொஞ்சநேரம் வெயிலில் வைத்திருக்கலாம்.

7. சிசுவானது சௌக்கியமாயிருப்பதற்காக ஏதேது செய்யவேண்டுமோ, அதை கூடுமானவரை தவறாமல் செய்யவேண்டும்.

சௌக்கியமுள்ள குழந்தையே ஆனந்தங்கொண்டதாயிருக்கும். சௌக்கியமற்ற குழந்தையோ, இளைப்பாறுதலின்றி மிகுந்த கோபக்குறியுடன் ஓய்ந்து அழும் குழந்தை சௌக்கியமாயிருப்பதற்கு மூன்று முக்கிய சங்கதிகள்: 1 இளைப்பாறுதல், நித்திரை, 2 தண்ணீர், 3 சரியான உடை ஆகின்றன. குழந்தைகளுக்குப் போதுமான நித்திரை அவசியம், சிசு பிறந்தது முதல் சில வாரங்களுக்கெல்லாம், தினம் ஒன்றுக்கு இருபது முதல் இருபத்திரண்டுமணிநேரம் வரையில் உறங்கும் அப்புறம் ஆறுமாசம்வரைக்கும் பதினெட்டுமுதல் 19 மணிநேரம் வரையிலும் ஒரு வருஷத்தில் பதினாலுமுதல் 15 மணிவரையிலும் உறங்கும்.

சிசுவை வேறாக அதின் படுக்கையிலேயே உறங்கவிடவேண்டும். அதை அடிக்கடி தொந்தரவு செய்யக்கூடாது. தண்ணீர் சிசுவுக்கு உள்ளுக்குப்போட்டவும் வெளியில் குளிப்பாட்டவும் உபயோகப்படவேண்டியது. நன்றாய்க் கொதிக்கவைத்து ஆறவைத்த தண்ணீரை சிசுக்களுக்கு அடிக்கடி பகலிலும், கொஞ்சம் இரவிலுமாகக் கொடுத்து வரலாம். சிசுக்கள் தாகத்தினால் அடிக்கடி அழுகிறதுண்டு தினம் ஒரு வேளை சிசுக்களைக் குளிப்பாட்டவேண்டும். மூன்றாவதாக உடையானது வெகு சுத்தமானதாயும், இலேசானதாயும் தொளதொளப்பானதாயும், இலேசாய் போட்டுக்கழற்றக் கூடியதாயுமிருக்கவேண்டும். குளிர்காலத்திற்குத் தக்கபடி உஷ்ணம் தரத்தக்கதாயும், உஷ்ண காலத்திற்குத் தக்கபடி காற்றோட்டத்திற்கிடந்தரத்தக்கதாயுமிருக்கவேண்டும். கனத்ததும் இருக்கமானதுமான உடை தரித்தால் சுவாசிப்பதற்கும் இரத்த ஓட்டத்திற்கும் ஜீரண சக்திக்கும் கெடுதலை உண்டாக்கும். இத்தியாதி விஷயங்களையும் கவனித்து குழந்தைகளை ஆனந்தமயமாய் வளர்த்து வருவது உசிதம்.

8. சரியான வைத்தியருடைய அநுமதியின்றி எந்த மருந்தையும் சிசுவுக்கு கொடுக்கக்கூடாது.

சிசுவின் தாயும் வைத்தியருடைய தகவல் இல்லாமல் மருந்து சாப்பிடலாகாது. பேட்டண்டு மருந்துகளையும், சர்ப்பத்துக்களையும் உபயோகப்படுத்தக் கூடாது. ஏனெனின் அம்மருந்துகளில் கொஞ்சம் கொஞ்சம் அபின் கலந்த சேர்மானங்கள் சேர்ந்திருக்கும். அதைத் தாய்மார் உட்கொண்டுவரும்போது, அவர்களிடம் பால் சாப்பிடும சிசுக்களுக்கு ஓயாத நித்திரையை உண்டாக்கிவிடும்.

9. சிசுவுக்கு வியாதி ஆரம்பித்த உடனே சரியான வைத்திய உதவியை தேடிக்கொள்ளவேண்டும்.

சிசுவானது வியாதியாயிருப்பதாக சந்தேகங்கொண்ட மாத்திரத்திலேயே வைத்தியரை வருவித்தாவது வைத்தியரிடம் கொண்டுபோயாவது அதற்கு வேண்டிய சிகிச்சைசெய்யவேண்டும். வியாதிதான் என்று தீர்மானமாய்த் தெரிந்த பிறகு வைத்தியர் உதவி தேடிக்கொள்ளலாமென்று நினைக்கக்கூடாது. தாமதத்தினால் கேடுநேரிடும். நாளை பார்த்துக் கொள்ளலாமென்று மெத்தனமாயிருந்தால் சிசுவின் வியாதி அளவுக்கு மிஞ்சினதாய் தேர்ந்த வைத்திய உதவியினாலும் குணப்படுத்த முடியாத விதமாய் வந்துவிடும். அவ்வகைத் தாமதத்தினால் மரணம் ஏற்பட்டாலும் ஏற்பட்டுவிடும். ஆகையால் கொஞ்சமும் மெத்தனமாயிருக்கக்கூடாது. எவ்வளவு சீக்கிரம் வைத்திய உதவி தேடுகிறோமோ அவ்வளவுக்கவ்வளவு லேசாய்க் குணம் கிடைக்கும்.

10. நமது சிசுக்களுக்கு சிகிச்சைபார்க்கும் வகைகளில் நமது அயல் வீட்டாரின் போதனைகளை மேற்கொள்ளக்கூடாது. அவர்கள் கெடுதலாய்ச் சொல்லுவார்களென்று சொல்லவில்லை. ஆனால் அவர்களுடைய சிசுக்களுக்கு வியாதியை உண்டாக்கக் கூடியதாயிருக்கும் அவர்களுடைய குழந்தைகளுக்கு ஏற்பட்ட சீக்கு போலவே நமது குழந்தைக்கும் இருப்பதாகத் தோற்றலாம். ஆனால் வாஸ்தவத்தில் வித்தியாசமான காரணத்துடனும் வித்தியாசமான குணத்துடனும் இருக்கும் அவைகளை வைத்தியர்களின்றி மற்றவர்களால் சாதாரணமாய் கண்டுபிடிக்க முடியாது. ஆகையால் அதற்குத் தகுந்தபடி சிகிச்சைசெய்தால்தான் வியாதி குணமாகும் ஆகையால் எவ்வகை வியாதியானாலும் வைத்தியரிடமே கலந்து மருந்து கொடுக்கவேண்டும்.

சி. ஆ. சு. வா

---

## ஒற்றுமை.

பிரியமான இந்திரகுலாதிபர்களே, நாம் இவ்வுலகில் நல்வாழ்வு அடைவதற்கு ஒற்றுமை அவசியம். உலகத்தில் பகுத்தறிவற்ற மிருகங்களும் தங்கள் இனத்துடன் ஒற்றுமையாய் வாழ்கின்றன. நமக்குக் கடவுள் இது நன்மையென்றும் இது தீமையென்றும் அறியும்படியான பகுத்தறிவைக் கொடுத்திருக்கிறார். இவ்வித அறிவு எறும்பு கடை எண்பத்துநான்குலக்ஷம் ஜீவஜெந்துகளில் மனிடர்களன்றி மற்றவைகளுக்கல்ல. ஓர் எறும்பு ஒரு இரையை இழுத்துக்கொண்டுவரும்போது மற்றுமுள்ள எறும்புகளும் அதற்கு உதவிபுரிவதை நன்றாய் உணர்ந்திருப்பீர்கள். அவைகளுக்குள்ளாகவும் எவ்வளவு ஒற்றுமை அமைந்திருக்கின்றன பாருங்கள். அதுபோல் நாமும் ஒற்றுமையாய் இருந்தால் எக்காரியமும் இலேசாய்க் கைகூடும். ஒற்றுமையில்லாக் குடும்பம் ஒருமிக்கக்கெடும் என்னும் பழமொழி கூறப்பட்டிருக்கிறது. எக்குடிப்பிறப்பினும் யாவரேயாயினும் அக்குடியிற்கற்றோரை மேல்வருமென்பர். எந்தக் குலத்தில் பிறந்தபோதிலும் யாராயிருந்தாலும் அந்தக்குலத்தில் நன்றாய கற்றவர்களை மேன்மையாக மதிக்கப்படும். அக்கல்வி நம்மிடத்தில் அதிகமாய் இல்லாததால் மற்ற ஜாதியார் நம்மைத்தாழ்மையாக மதிக்கின்றனர். சாந்தம், தயை, பொறுமை, சற்குணம் மிகுந்திலங்கும் காருண்ய கவர்ன்மெண்டார் நம்மிடத்துக்கருணையுற்று நம் ஜாதியார் முன்னேற்றமடைவதற்காக வேண்டிய சகலவித உதவியும் புரிந்து, ஜலத்திற்கு முக்கிய ஆதாரம் மழை என்பதுபோல் ஜாதி முன்னேற்றத்திற்கு முக்கிய ஆதாரமாயிருக்கக்கூடிய கல்வி யென்னும் மெய்ப்பொருளை நன்குணர்ந்து நம்மக்கள் கல்விபயிலுமாறு நமக்குப் பாடசாலைகளையும் தொழிற்சாலைகளையும் ஏற்படுத்தியிருக்கிறார்கள் நாம் அதிகமாகக் கற்றுக்கொள்ளாவிட்டாலும் நம் புத்திரர்களையாவது கல்வி அபிவிர்த்தியாவதற்கு ஒற்றுமையாக ராஜாங்கத்தாருக்குக் கீழ்ப்படிந்தும் நமது பஞ்சாயத்தார் சொற்படிகேட்டும் பிள்ளைகளை ஒழுங்காய் பாடசாலைக்கு அனுப்பி கல்வி பயிலுமாறு செய்யவேண்டுவதே நமது முக்கியமான கடமை

காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ளவேண்டும். கவர்ன்மெண்டார் நமக்குச்சகலவித நன்மையும் புரியுங்காலத்து நாம் அடையவேண்டிய நற்பாக்கியங்களை அடையாவிட்டால் இனி எக்காலத்தில் இவ்வித அதிர்ஷ்டம்நமக்குக்கிடைக்கும். கல்வி யென்னும் மெய்ப் பொருளை ஊக்கத்துடன் கற்குமாறு செய்வீர்களாகில், மரத்தின் வேர் எப்படி பூசாரஉணவைப்பெற்று மேலேயுள்ள அடிமரம் கிளைகள் இவைகளுக்கு அனுப்பி இலைகளும் பூக்களும் காய்களும் அதிகமாகத்தளிர்த்து ஓங்கி வளரச்செய்கின்றனவோ அவ்வாறே நம் மனுக்குலத்தவர்களாகிய ஆண்களும் பெண்களும் கல்வியறிவில் மிக்கத் தேர்ச்சியடைந்து நம் ஜாதியார்களை கல்வி, அறிவு, ஒழுக்கம், முதலியவைகளை மென்மேலும் விருத்திசெய்து விடுவார்கள் என்பதற்கு ஐயமில்லை. மேலும் நம்முடைய குலத்திலும் தாழ்ந்தவர்கள் கல்வியிலும் ஒற்றுமையிலும், பெரும்பான்மையோர் நாகரீகமடைந்து வருகிறார்கள். நமக்குக் காருண்ய கவர்ன்மெண்டார் செய்து வரும் உதவியிலிருந்து மென்மேலும் விருத்தியடையவேண்டும் அதாவது ... பஞ்சாயத்து முதலாவது ஒற்றுமை ...ருக்கவேண்டும். நம்முடைய ஒவ்வொ

மங்களிலும் அந்தந்த பஞ்சாயத்தார்களோடு குடிகளும் ஒற்றுமைக்க வேண்டும். அவனுக்குத்தான் துன்பம்வந்தது, நமக்கென்ன நாம்பிழைத்துக்கொள்வோம் என்று நினைக்கக்கூடாது. பொது நன்மைக்காக எல்லோரும் ஒற்றுமைக்கவேண்டும். நாம எல்லாரும் ஒற்றுமைத்து பெரியோர்கள் சொற்படி கேட்டு அதன்படி நடப்போமாகில் நமக்கு இன்னும் அதிகமான நாகரீகத்தையும் கல்வி விருத்தியையும்பெறலாம் சாதாரணமாக உங்கள் ஊரில் வசித்தும் ஒற்றுமையில்லாத குடும்பத்தைப் பார்ப்பீராயின் அதிலிருந்து ஒற்றுமை என்பது இன்னதென்று சொல்லாமலே விளங்கும் ஆகையினால் கொஞ்சம் செல்வாக்குடையவனுயிருந்தால் அதிலிருந்து பிறரை மதியாமல் பேசக்கூடாது ஆனால் கடவுள் அவனுக்குக் கொடுத்த யோக்கம் பிறருக்கு உதவிசெய்து தன்னைப்போல பிறரையும் நேசிக்கும்படி கொடுத்திருக்கிறார்.

கீழோரும் மேலோரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். தவிர மேலோரிடமுள்ள மேன்மையெல்லாம் பொதுநலத்திற்காக கடவுளால் அருளப்பட்டதாகும். கீழோரை நீதியோடும் பிரியத்தோடும் நடத்தல் பெரியோரின் கடமையாகும். ஆகையினாலே பிரிய சகோதரர்களே, இந்திரகுலாதிபர்களாகிய நாம் நல்விஷயமான காரியங்களில் ஒற்றுமையாக ஒற்றுமைப்போமாகில் நம்குலத்தவர்கள் கல்வியிலும் அறிவிலும் ஒழுக்கத்திலும் குளிர்ச்சி பொருந்திய மூன்றாம் பிறைச்சந்திரன் எவ்வாறு நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டுவருகிறதோ அவ்வாறு வளர்ந்து கொண்டேவரும். இவ்வித ஒற்றுமை இல்லாவிட்டால் பூரணசந்திரன் எவ்வாறு நாளுக்குநாள் குறைந்துகொண்டே வருகிறதோ அவ்வாறே குறைந்து கொண்டேவரும் ஆனபடியால் நற்காரியங்களாகிய எக்காரியத்திலும் ஒற்றுமை பெலப்பைக் கைக்கொண்டு அக்காரியங்களைச்செய்துமுடிக்கவேணுமென்பதாய் மிக்க அன்புடன் கேட்டுக்கொள்ளுகிறேன்

A. S. மரியசூசைத்தேவர்,
A. K. பெரியநாயகத்தேவர்,
R. C. டிரெய்னிங்ஸ்கூல்,
திருச்சினாப்பள்ளி.

---

## [ஜப்பா]னின் அவஸ்தை: ஜனத்தொகை [வி]ருத்தியால் ஏற்படும் கஷ்டம்

ஜப்பான் தேசத்தில் ஜனத்தொகை ஒரு ...டியாகப் பெருகிவிட்டது. இனி யுத்தம் ...வதா அல்லது பிரஜா உற்பத்திடைக் ...டுத்துவதா வென்ற பெரிய கவலை ...டாயிருக்கிறது. ஜப்பானிலுள் ...ர்கள் இந்த இரண்டையும் விரும்பாமல் ஒரு நடுவழி கண்டுபிடிக்க ஆவலுள்ளவர்களாயிருக்கிறார்கள். ஜப்பானியருக்குவேண்டிய அளவு உணவுப்பொருள்களை ஜப்பானில் விளைவித்துக்கொள்ளமுடியவில்லை. துணிக்குவேண்டிய பருத்தியும் கிடையாது.

ஜப்பான் மிகச்சிறியதேசம். முக்கால் லட்சத்திற்குமேல் மலைப்பிரதேசம். பாக்கிப் பிரதேசத்தில் 6 கோடிப்பேர் வசிக்கவேண்டியிருக்கிறது. ஜனநெருக்கடி சொல்லமுடியாது. மரணங்களைவிட ஜனனவிகிதம் அதிகம். ஒவ்வொரு மணியும் ஜனத்தொகை விருத்தியாகிக்கொண்டே வருகிறது. ஒரு மணிக்கு 36 குழந்தைகள் விகிதம் சராசரியாய் பிறக்கின்றன. அவர்களுடையே சாப்பாட்டிற்கு வழிசெய்தாகவேண்டும்.

ஜப்பானைவிட அமெரிக்க யுனைட்டட் ஸ்டேட்ஸ் எவ்வளவோ மடங்குபெரியது. ஆயினும் அமெரிக்காவைவிட ஜப்பானில் அதிகமான குழந்தைகள் வருஷா வருஷம் பிறக்கின்றன. அமெரிக்காவின் ஜனத்தொகை விருத்தியாவதைவிட இன்னும் துரிதமாக ஜப்பானில் ஜனத்தொகை விருத்தியாகி வருகிறது.

1920–25 இவ்வருஷங்களுக்கு இடையே ஜப்பானில் வருஷாவருஷம் எத்தனைபேர் மாண்டார்களோ அதைவிட சுமார் 7½ லட்சம் பேர் அதிகமாகப் பிறந்திருக்கிறார்கள். சுமார் பதினொருகோடி ஜனத்தொகையையுடைய அமெரிக்காவில் 96-ல் 15 லட்சத்து சொச்சப்பேர் பிறந்தனர். ஜப்பானில் அதே வருஷத்தில் சுமார் 20 லட்சம் குழந்தைகள் பிறந்தனர். அமெரிக்காவில் விளைபொருள்கள் உற்பத்திசெய்வதற்கு எவ்வளவு பூமியிருக்கிறதோ அதில் 40-ல் ஒரு பங்குதான் ஜப்பானுக்கிருக்கிறது. ஆகவே கைத்தொழில்கள் மூலமாகப் பிழைத்தாகவேண்டும். இங்கிலாந்து அப்படித்தான் செய்கிறது. ஆனால் ஜப்பானுக்கு அது சாத்தியப்படாது.

ஜப்பானுக்கு மூலப்பொருள்கள் இல்லை. நிலக்கரியும் இல்லை. போதிய பணமும் பலமும் கிடையாது. ஜனங்களுக்குச் சாப்பாடு போடுவதே கஷ்டமாயிருக்கையில் கைத்தொழில் வளர்ச்சிக்கு சாவகாசமேது. மேலும் மற்றவர்களோடு போட்டிபோட முடியாத இனங்களில் ஜப்பான் போட்டி போடுவதால் என்ன பிரயோஜனம்? போதாக்குறைக்குப் பூகம்பம் வந்து பாழ்படுத்துகின்றது. பணம் கடன் வாங்கவேண்டிய ஸ்திதியில் இருக்கிறது. அமெரிக்காவுக்குப் பட்டும் இந்தியா சீமைக்குப் பருத்திநெசவு சாமான்களும் இப்போதைப்போல் நெடு அனுப்பிவந்தால் சில காலத்துக்குத் தள்ளிக்கொண்டுவரலாம்.' அமெரிக்கா பட்டு வாங்காவிடில் ஜப்பானின் வயிற்றில் அது அடிப்பது போலாகும். அவ்வாறே ஆகும் என்பதற்கு அறிகுறிகள் தென்படுகின்றன. சீனாவிலும் இந்தியாவிலுங்கூட ஜப்பான் சாமான்கள் இனி சுலபமாக விற்கமுடியாது சீனாவில் ஜப்பானுக்கு விரோதமான உணர்ச்சி பலமாக இருக்கிறது. இந்தியாவும் காப்புவரி விதிக்கும்போல் காண்கிறது. வேலையில்லாத்திண்டாட்டம் ஜப்பானில் ஏற்கனவே அதிகரித்து வருகிறது. டோகியா நகரில் மட்டும் 40 ஆயிரம் பேர்க்கு வேலையில்லை. முனிசிபல் வேலைகளில்மட்டும் 50 ஆயிரம்பேர் தற்கால சாக்கியாக அமர்ந்திருக்கிறார்கள்.

ஜப்பானின் ஜனத்தொகை விருத்தியாகாமலிருந்தால் கஷ்டம். ஆனால் வரவர விருத்தியாகிக்கொண்டு வருகிறது. அடுத்த சில வருஷங்கள் எப்படியாவது காலந்தள்ளலாம். அப்புறம் என்ன செய்வது. வருஷத்திற்கு 10 லட்சம் பேராவது வெளி தேசங்களுக்குப் போய் குடியேறினாலன்றி ஜப்பானுக்குக் கதிமோட்சமில்லை. எத்தனை நாள் பட்டினியாயிருக்கமுடியும். ஜப்பானியர் அமெரிக்காவில் இஷ்டப்படி குடியேறமுடியாது. பக்கத்திலுள்ள மஞ்சூரியாவுக்கு போகலாமென்றாலோ ஏற்கனவே ஆட்சேபம் பலமாயிருக்கிறது. சீனா தன்னுடைய உரிமைகளை ஸ்தாபிக்க தனிமையாக எதுவும் செய்யமுடியாதாகையால் பிறநாடுகளைத் துணைக்காக அழைக்கக்கூடும். சைபீரியாவில் குடியேறுவதாயிருந்தாலும் யுத்தந்தான் நடக்கும். யுத்தமோ பிரஜா உற்பத்திக்கட்டுப்பாடோ ஏதாவதொன்று ... வேண்டும.

(திராவிடன்)

---

## சாத்தங்குடி

17—7—26 ல் சாத்தங்குடி இந்திரகுல தேவமார் சங்கம் நடுத்தெருவில மகா-ள-ள-ஸ்ரீ K. G. ஆரோக்கியசுப்பிரமணியர் அவர்களின் அக்கிராசனத்தின்கீழ் நடைபெற்றது. கனம் அக்கிராசனாதிபதியவர்கள் மாலைசூட கோஷத்தினிடையே அமர்ந்தனர்.

மூன்று கள்ளர் ஸ்கூல் மாணவர்களால் கண்ணியமும் கருத்தும் தங்கிய பாடல் ஒன்று அக்கிராசனர் முன் பாடப்பட்டது.

கடந்தமீ ரிப்போர்டு கனம் காரியதரிசி அவர்களால் வாசிக்கப்பட்டு சங்கத்தாரால் ஒப்புக்கொள்ளப்பட்டது.

### நடபடிகள்.

1. பெண்கல்வி என்ற பொருளின்பேரில் கனம் A. K. மரியசூசை உபாத்தியாயர் பேசினதின்சாரம். "தாயே தன் பிள்ளைகளை வளர்ப்பதற்குக் கடமைப்பட்டவளென்றும், பெண்கள் நாகரீகமடையவேண்டுமானால் தாயானவள் படித்தவளாயிருத்தல் அவசியமென்றும், ஆகையினால் தாய்மார் பெண் குழந்தைகளைக் கட்டாயம் படிப்பிக்க வேண்டு"மென்றும் வெகுவாய் வற்புறுத்திப் பேசினார்.

2. உலகம் சதமல்லவென்று ரூபிக்கத்தக்க சம்பாஷணை ஒன்று நாலு கள்ளர் ஸ்கூல் மாணவர்களால் பாட்டாக நடத்தப்பட்டது.



3. மதுவிலக்கு என்ற விஷயத்தைப் பற்றி கனம் நாடார் ஸ்கூல் உபாத்தியாயர் பேசும்படியாகக் குறிக்கப்பட்டிருந்தது. அச்சமயம் அவர் ஆயத்தமாக வந்திருந்தார். ஆனால் அச்சமயம் அவசரமான ஜோலியிருந்தது. அவர் அவசியம் போகவேண்டியிருந்தபடியால் சங்கத்துக்கு அப்போது வந்திருந்த அகமுடையார் பள்ளிக்கூட உபாத்தியாயர் அவர்களை அதே பொருளின்பேரில் பேசும்படியாகக் கேட்டுக்கொள்ளப்பட்டார்.

அவர் பேசினதின் சாரம் —

லாகிரிவஸ்துக்கள் எவை என்றும், குடியினால் வரும் பலகேடுகளையும், விசேஷமாக அவன் குடும்பத்துக்கே மிகக் கேட்டை வருவிப்பானென்றும், வெகு உருக்கமாய் ஜனங்கள் மனதில் பதியும்படி பேசினார்.

4. கனம் அக்கிராசனர் முடிவுரையாக: நான் இந்தச் சங்கத்திற்கு வந்தது இதுதான் முதல் தடவை என்றும், எத்தனையோ சங்கங்களுக்குப் போயிருக்கிறேன. ஆனால் இதைப்போல் அவ்வளவு அமைதியாய் ஒரு சங்கமுமில்லை, என்பதாய் சங்கத்தைச் சிலாகித்துப் பேசினார். தேவமாருக்குள் இருக்கிற பல கேடுகளையும், பையன்கள் படிப்பில் தேறவேண்டுமானால் பெற்றோர் தான் அதைப்பற்றி அதிகம் கவலை எடுக்கவேண்டும். உபாத்திமாருடைய பொறுப்பு அதல்லவென்றும், பெண்பாடசாலை ஒன்று அவசியம் ஏற்படுத்தவேண்டுமென்றும், கவர்ன்மெண்டார் செய்துவருகிற நன்மைகளை உணரவேண்டுமென்றும், மாட்சிமை தங்கிய கவர்னர் துரையவர்களின் வருகையையும், அவர் வருவதின் நோக்கம் இன்னதென்பதையும் வெகு தெளிவாய் எடுத்துக்காட்டி, கடைசியாக தேவமார படிப்பு விஷயத்தில் இருக்கின்ற பரிதாபமான நிலைமைக்காக விசனித்து அதற்குவேண்டிய உதவி தாம் செய்வதாயும் பேசி முடித்தார்.

பையன்கள் இராஜ வாழ்த்துப் பாட கரகோஷத்தினிடையே சங்கம் கலைந்தது.

இப்படிக்கு,
A. K. மரியசூசை உபாத்தியாயர், சேர்மன்.

---

## ஒரு சந்தோஷமுள்ள பையனைப்பற்றிய கதை.

சில வருஷங்களுக்கு முன்னே வடதேசத்திலே சத்தியநகரமென்ற ஓர் ஊரில் சச்சிதானந்தம் என்று அழைக்கப்பட்ட ஓர் சிறுவன் இருந்தான். அவன் தாய் தகப்பன்மார் ஆஸ்திக்காரர் அல்லாதபோதிலும் பக்திமான்கள். பிள்ளையாண்டான் படித்து முன்னுக்குவரவேண்டுமென்ற ஆசையுடன் தேவ பக்தனாகவரவேண்டுமென்னும் கருத்துக்கொண்டவர்கள். இளம்பிராயத்திலிருந்தே ஒழுக்கமுள்ள பிள்ளையாக இருக்க விரும்பி நல்வழியில் நடத்திவந்தார்கள்.

அவன் படித்துவந்த பாடசாலையிலுள்ள எந்தப் பையனைப் பார்க்கிலும், இவன் எப்போதும் முகமலர்ச்சியும் சந்தோஷமுள்ளவனாகக் காணப்பட்டான். சில பிள்ளைகள் சண்டை சச்சரவுசெய்து கூக்குரலிட்டு கோபக்குணம் காட்டிவருவார்கள். ஆனால் சச்சிதானந்தமோ, ஒருபோதும் கோபப்படவாவது, சண்டைசெய்யவாவது ஒருவரும் கண்டதில்லை எல்லாரும் இவனை நேசித்து அன்பு பாராட்டி வந்தார்கள். இது மற்ற எல்லாப் பையன்களுக்கும் ஆச்சரியத்தைக் கொடுத்தது. ஏன் சச்சிதானந்தம் மாத்திரம் இவ்வளவு சந்தோஷமுள்ளவனாக எப்போதும் காணப்படுகிறான் யாவரும் இவனை நேசிப்பதின் இரகசியம் என்னவென்று யோசித்து வந்தார்கள்.

ஒருநாள் சில கூட்டாளிகள் அவனிடம் வந்து இந்த இரகசியத்தை அறியும் ஆசையாய் அவனை வினவினார்கள். சச்சிதானந்தமே, நாங்கள் சில சமயங்களில் அழுது சத்தமிடுகிறோம் துக்கப்படுகிறோம், கலங்குகிறோம். நீயோ இவ்விதம் எப்போதும் சந்தோஷமுள்ளவனாகவும், நேசிக்கப்படத்தக்கவனாகவும் இருப்பதேன். அதை எங்களுக்குச் சொல்லவேண்டுமென்றார்கள்.

அவன் அவர்களைப் பார்த்து: என் ஜீவியத்தின் ரகசியம் கடவுள். இளம்பிராயத்தில் என் தாய் தந்தையர் நான் அவரையே நேசிக்கவும் பின்பற்றவும் கற்றுக்கொடுத்தார்கள். என் நேச ஆண்டவராகிய அவரின் சித்தப்படியே நான் நடக்கிறேன். நான் எனக்கானவைகளை மாத்திரமல்ல, பிறருக்கானவைகளையும் நாடுகிறேன். என் சந்தோஷத்தையல்ல, மற்றவர்களைச் சந்தோஷப்படுத்துவதையே நாடித் தேடுகிறேன்.

என்னால் மற்றவர்கள் சந்தோஷமடைவதைப் பார்க்கும்போது எனக்கிருக்கும் சந்தோஷத்திற்கு அளவில்லை. இதுவே என் சந்தோஷத்திற்கு மூலகாரணம். நான் மற்ற யாவரையும் உள்ளபடி நேசிக்கிறேன் இதுவே யாவரும் என்னை நேசித்து வருவதின் இரகசியம் என்றான்.

---

## உபாத்தியாயர் ஒரு குரு.

உபாத்தியாயர் பிள்ளைகளுக்கு அரிய நீதிகளையும், அருட்பாக்களையும், ராஜத்துவத்தையும், கடவுள்பயத்தையும், உலகவிஷயங்களையும் பிள்ளைகளுக்குப் போதிப்பதினால் உபாத்தியாயர் ஒரு குருவே. உபாத்தியாயர் பாடம் நடத்தும்போது உற்சாகமுடையவராகவும், பிள்ளைகளுக்கு உற்சாகத்தையுண்டுபண்ணக்கூடியவராகவுமிருத்தல் வேண்டும். பிள்ளைகளுக்குத் தெரிந்தவற்றைக் கொண்டு தெரியாதவைகளை விளக்கிக்காட்ட வேண்டும். உபாத்தியாயர் பிள்ளைகளின் பக்குவத்திற்கு இயன்றவாறு பாடம் நடத்தவேண்டும். உபாத்தியாயர் எப்பொழுதும் பிள்ளைகளின் பேரில் கண்ணுங் கருத்துமாயிருக்க வேண்டும். ஒரு நல்ல உபாத்தியாயருக்குக் கோபம் உதிக்காமல் எப்போதும் சாந்தமாகவேயிருக்கவேண்டும். பொறுமை கொள்ளாமல் எல்லாம் சமமாகவே பாராட்டவேண்டும். அசத்தியமில்லாமல் சத்தியத்தையே கொண்டாடவேண்டும். இப்படியே உண்மையும், சாந்தமும், பொறுமையும் இருக்குமாகில் அவர் நடத்திவரும் வேலையும் அவ்வாறேயிருக்கும். அதுவன்றி உபாத்தியாயர் போதகம ஒரு விதமாயும், நடக்கை யொருவிதமாயுமிருந்தால் அதில் பிரயோஜனமில்லை. ஆகையால், உபாத்திமாராகிய நாம் ஒவ்வொருவரும் அவ்விஷயத்தில் அதிக ஜாக்ரதையாயிருத்தல் நலம்.

உபாத்தியாயா பிள்ளைகளுக்குக் களவு செய்யாதே, விபசாரம் பண்ணாதே, சூதாடாதே யென்று போதித்துவிட்டு தானே அதில் புகுவாராகில் பிள்ளைகள் அம்முறையை எப்படிக் கையாடுவார்கள் என்று நீங்களே யோசித்துப்பாருங்கள். ஆகையால் உபாத்தியாயர் தாம் கற்ற படிப்பின் வழியிலே நிற்றல் வேண்டும் அப்படியின்றி அதை விட்டு விட்டால் குருவாக மாட்டார் என்பதற்கு வேறு திருஷ்டாந்தமும் வேண்டுமோ?

எம்மைப்போல் கிராமங்களிலிருக்கும் உபாத்திமார்கள் பிள்ளைகளின் பெற்றோருக்குக் கல்வி விஷயத்தைத் தெளிவாக எடுத்துக்காட்டிப் பிள்ளைகளைப் பாடசாலைக்கனுப்பும்படி ஒழுங்கு செய்யவேண்டும். உபாத்தியாயர்கள் தினந்தோறும் பலநூல்களையும், பேப்பர்களையும் படிக்கப் பிரயாசப்படவேண்டும். அப்படியே முயற்சியுடன் படித்து வந்தோமானால், மூளை விர்த்தியும், அறிவு விர்த்தியும் ஆகுமென்பதற்கையமில்லை. நான் ஒரு நாள் ஒருவரிடம் கல்வியைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்கும்போது, அவர் கண்டதைக் கற்றவன் பண்டிதன் ஆவானென்று சொன்னார். அது உண்மையே. ஆகையால் நாம் ஒவ்வொருவரும் தினந்தோறும் படித்து மற்றவர்களுக்கு நல்ல முன்மாதிரியாகவும் தேசத்திற்கேயொரு ஊழியராகவும் உழைத்து, உபாத்தியாயருக்கு உபாத்தியாயராகவும், வைத்தியனுக்கு வைத்தியராயும், கிராமமுனிசிப்புக்குக் கிராமமுனிசிப்பாகவும், தோட்டிக்குத் தோட்டியாகவும் இருந்து வேலைசெய்து, அதியுன்னத லோகத்திருக்கும் பராபரனுடைய ஈவைப்பெறுவோமாக.

M. தவசி தேவதாஸ் உபாத்தி[யாயர்],
தர்மத்[துப்பட்டி]

---

## வீடும் மனையும்.

நாம் வீடு கட்டும்பொழுது வீட்டைச் சுற்றிலும் காலியிடம் போட்டுக்கட்டவேண்[டும்]. வீடு கட்டப்படும் இடத்தைப் பார்[க்கிலும் கா]லியாய் விடப்படும் இடம் அதிக[]மாக இருக்கவேண்டும். வீட்டில்

தை வைத்துக் கட்டுகிறதினால் காலியாக விடப்படும் இடம் இன்னும் அதிக விஸ்தீரணமாயிருக்கவேண்டும். ஈரமுள்ள இடங்களில் வீடுகட்டக்கூடாது. அப்படிக் கட்டப்பட்ட வீடுகளில் வசிப்பவர்கள் காய்ச்சல் முதலிய ஓயாத வியாதிகளுக்கு ஆளாவார்கள். நாம் ஈரமான தரையில் அடிக்கடி நடப்போமானால் நமக்கு வயிற்றில் பலவிதமான தொந்தரவுகள் உண்டாவதுடன் ஜலதோஷம் சதாகாலமும் நம்மைவிட்டு நீங்காது. அப்படி ஈரமுள்ள இடத்திலேயே ஒருவருக்கு வீடு கட்ட நேரிட்டால் நீரூற்றானது மேலே வாராதபடி தளமட்டத்தை உயர்த்திக் கட்டவேண்டும். தண்ணீரை இழுக்க சக்தியில்லாத சாமான்களைக்கொண்டு கட்டவேண்டும். எப்பொழுதும் மேடான இடங்களில் வீடுகட்டுவது நல்லது. வீட்டின் பக்கத்தில் சதுப்பு நிலங்களும் தண்ணீர் குட்டைகளும் இருக்கவேகூடாது. நல்ல காற்று வீசக்கூடிய இடமாயிருக்கவேண்டும். வீட்டிலுள்ள அறைகளில் படுக்கை அறையானது மற்ற அறைகளை விட விசாலமானதும் உயரமானதாகவும் இருக்கவேண்டும். வீட்டைச்சுற்றி அகலமான விராந்தா போடுவது நல்லது. இது வெளியிலிருக்கும் உஷ்ணத்தை உள்ளுக்கு வரவிடாமல் செய்வதுடன் ஏராளமான சுத்த ஆகாயத்தை உள்ளுக்கு வரச்செய்கிறது. வேலைக்காரர்களுடைய ஜாகைகள் பிரத்தியேகமாயிருக்கவேண்டும். சமையலறையானது பிரதான கட்டிடத்தைவிட்டு கொஞ்சம் விலகியிருக்கவேண்டும். வீட்டின் அஸ்திவாரமானது காங்கிரீட் போட்டு உறுதியாய்க் கட்டப்படவேண்டும். மழை ஏராளமாய் பெய்யக்கூடிய இடங்களில் வீடு கட்டும்பொழுது நீரூற்றைத் தடுத்துக்கொள்வதற்கு போதுமான ஏற்பாடுசெய்து கட்டவேண்டும். ஒரு செங்கலானது 16 அவுன்ஸ் தண்ணீரை இழுப்பதற்கு சக்தியுள்ளதாகக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. நீரூற்று வாராதபடி தடுக்க போதுமான ஏற்பாடு செய்துகொள்ளாவிட்டால் தள மட்டத்திற்குமேல் சுவரில் 3 கெஜம் உயரம் நீர் கசிந்து நிற்பதைக் காணலாம். அப்படி கசிந்து நிற்கும் நீரோடு
யிலுள்ள உப்புச் சத்தானது மேலே வ
விநின்று காய்ந்தவுடன் செங்கல்களை
கெடுத்துவிடுகிறது. இதற்குத்
உவர் அடிக்கிறது என்று
றது. பின் சொல்லுகிறபடி
ரித்து அஸ்திவாரத்தில் அடித்
ரூற்று வாராமல் தடுக்கலாம்
துரிசை 12 காலன் தண்ணீரில்
ந்து 2 பவுண் சேர்ந்து 10 ப
கப்பட்ட சிவப்பு அல்லது மஞ்
மான மண்ணும் 8 பவுண் மைமா
வுன் சீமையெண்ணெய்யும் சேர்த்து
வனீர்க் காலத்தில் சுவரில் அடிக்க
அவசியமானால் அதன்மேல்
அடிக்கலாம். சதுப்பு நிலத்தில்
ண்டியது நேரிட்டால் வீட்டை
ம் சுற்றி பலமான கம்பவுண்டுச் சுவர் கட்டவேண்டும். அப்படிப்பட்ட சுவரில் தார் பூசப்பட்ட செங்கல்களைக் கொண்டு கட்டவேண்டும். செங்கல்களை நன்றாய் சூடுண்டாக்கி லேசான தார் நிறைந்த பாத்திரத்தில் போட்டு எடுத்து [illegible] செங்கல்களை சிறிதுகாலம் பூமிக்குள் மூடி வைத்து அப்புறம் எடுத்து கம்பவுண்டுச் சுவர் கட்ட உபயோகப்படுத்தவேண்டும்.

மழைகாலத்தில் வீட்டின் கூரைத்தண்ணீர் வீட்டைச் சுற்றியிருக்கிற காலிமனையில் விழுந்து, கெட்டி நின்று கொசு, ஈ முதலியவை மெய்க்காதிருப்பதற்காகவேண்டி அந்த மழை ஜலம் கட்டி நிற்காமல் விரைவாய் ஓடிவிடும்படி வீட்டைச்சுற்றி சரியான சிறு வாய்க்கால் கட்டிவிட வேண்டும். வீட்டின் பக்கத்தில் பெரிய மரங்களிருப்பது உசிதமல்ல.

ஏனெனில் அவைகள் வெளிச்சத்தையும், காற்றையும் வீட்டினுள் வரவிடாமல் தடுப்பதோடு மழைகாலத்தில் நீரூற்று உண்டாவதற்கும் ஏதுவாக இருக்கிறது. ஒரு வீட்டில் ஏராளமான காற்றிருக்கவேண்டுமானால் பெரிது பெரிதான அகன்ற ஜன்னல்கள் அநேகம் இருக்கவேண்டும். வீட்டின் அறைக்குள் இருக்கப்பட்ட அசுத்தமான ஆகாயம் வெளிச்செல்வதற்கு சுவரின் உச்சியில் கூரைக்கு அடுத்தாற்போல சிறுசிறு ஜன்னல்கள் இருக்கவேண்டும்.

நமது நாட்டிலுள்ள ஜனங்கள் தாங்கள் கஷ்டப்பட்டு சம்பாதித்த பணத்தில் ஆயிரக்கணக்கான ரூபாய்கள் செலவுசெய்து சுகாதாரக் குறைவுள்ள இடங்களில் காற்றோட்டமில்லாதவிதமாய்ச் சிறுசிறு அறைகள் வைத்து வீடுகள் கட்டி வாசம்செய்து வருகிறார்கள். அப்படி சுகாதாரக் குறைவுள்ளதும், சரியான காற்றோட்டம் இல்லாததுமான வீடுகளில் வசிப்பதினால் அடிக்கடி வியாதிக்குட்பட்டு டாக்டர்களுக்கு ஏராளமாய் பணத்தைச் செலவுசெய்தும், அகால மரணத்துக்குள்ளாகிறார்கள்.

கூரை —வீட்டின்மேல் கூரைவைப்பதானது சூரிய உஷ்ணத்தை வீட்டினுள் வரவொட்டாதபடி, தடுப்பதான நோக்கத்துடன் இருக்கவேண்டும். வாசல்களுக்கும் ஜன்னல்களுக்கும் மேல்மட்டத்தில் பச்சைக் கண்ணாடிகள் பதித்த தட்டிகள் வைப்பது நல்லது. கூரை போதுமானபடி உயரமாயிருக்கவேண்டும். புல்லினாலாவது ஓலையினாலாவது கூரை வேய்ந்தால் சூரிய உஷ்ணத்தைத் தடுக்கும். ஆனால் கரையான், எலி, பாம்பு, தீ இவைகளைப்பற்றி ஜாக்கிரதையாய் இருக்கவேண்டும். ஓடு போடுவதில் சிறு ஓடுகள் போடுவது நல்லது.

நாகத்தகடு போட்ட கூரைகள் ஆரோக்கியத்திற்கு விரோதமானது. வீட்டைச் சுற்றி சிறுசிறு செடிகளை வளர்ப்பதினால், அவைகள் தரையைக் குளிர்ச்சியாய் வைத்துக் கொள்வதுடன் அசுத்த ஆகாயத்தைக் கிரகித்துக்கொள்ளுகிறது.

ஏழை ஜனங்களால் தங்களுக்கு சிறுசிறு குடிசைகள்தான் கட்டிக்கொள்ளக்கூடும். அவைகளையும் சுகாதார விதிகளையனுசரித்துச் செய்யலாம். குடிசையின் தளமட்டத்தை தரைக்குமேல் 2 அடி உயர்த்தவேண்டும். தளம் நல்லதாகவும் உறுதியானதாகவும் செய்யப்படவேண்டும். குடிசையைச்சுற்றி விஸ்தீரணமான விராந்தா ஏற்படுத்தவேண்டும். சரியான காற்றோட்டத்திற்கு வேண்டிய சாதாரண ஜன்னல்களும் வைக்கப்படவேண்டும்.

சி. ஆ. சு. வா.

## கம்பளிப்பூச்சி.

1. இதென்ன பூச்சி?— தென்னிந்தியாவில் முக்கியமாய் மலையடங்கிய சில பூமிகளில் பொடிப் பயிர்களில் வருஷந்தோறும் இப் பூச்சி விழுந்து சேதப்படுத்துகிறது யாவருக்கும் தெரிந்த விஷயமே. இந்தப் பூச்சியை தமிழ்நாட்டில் 'கம்பளிபூச்சி' யென்றும் தெலுங்கில், 'கொக்கிலிட்புருகு' என்றும் கன்னடத்தில 'கொரிகுல' என்றும் சொல்லுகிறார்கள். இந்தப் பூச்சிகள் அநேக மாதிரியாயிருக்கின்றன. பயறுச் செடிகளில் விழுந்து சேதப்படுத்துகிற பூச்சி கருத்தக் கம்பளிப்பூச்சி. கொட்டைமுத்துச் செடி, அவரைக்கொடி, வாழை இலைகளில் விழுகிற பூச்சி கொஞ்சம் கருப்பாய் கபில வர்ணமாயிருக்கிறது. இந்த இரண்டு[illegible]விர இன்னும் அநேகவிதப் பூச்சியிருக்கிறது. ஆனால் அம்ஸாக்டா அல்பிஸ்டிரிகா (Amsacta Albistriga) என்ற சிவப்புக் கம்பளிப்பூச்சி மற்றப் பூச்சிகளினின்றும் எளிதில் தெரிந்துகொள்ளலாம். இந்தப் பூச்சிகளில் சில கருப்புப்புள்ளியோடு இருக்கும், சில முற்றிலும் கருப்பாகவேயிருக்கும். இந்தப் பூச்சியை ஒருதரம் பார்த்திருந்தால் மறுதடவை சந்தேகமில்லாமல் தெரிந்துகொள்ளலாம். மேலும், இதுமாதிரி மற்றவைகளை அவ்வளவு ஏராளமாய் பார்க்க முடியாது.

2. இந்தப் பூச்சி என்னசெய்கிறது?—இதனுடைய உற்பத்தி ஓர் அற்புதம். இப்பூச்சிப்புழு ஒன்றரை அங்குலம் நீளமிருக்கும், பயிர்களைத் தின்றுகொண்டேயிருக்கும். பயிர்கள் அதனால் பூராவாய் காலியாய்விட்டாலும் விடும். அப்படி தின்றுகொண்டிருந்த கொஞ்ச காலத்துக்கெல்லாம் பூச்சிகள் முற்றிலும் காணாமல் போய்விடுகின்றதை எல்லா குடிகளும் அறிந்திருப்பார்கள். மழைத் தண்ணீரோடு இப்பூச்சிகள் போய்விட்டதாக சிலர் ஊகிப்பார்கள். ஆனால், அப்படி ஒரு விதமான அபாயமும் பூச்சிக்கு ஏற்படவில்லை. பூச்சி முற்றிலும் வளர்ந்ததும் செடியிலிருந்து தரைக்கு வந்து, மண்ணைக் குடைந்து நாலு ஐந்து அங்குல ஆழத்துக்குக் கீழ்பட்டு ரோமம் இலைகளைக் கொண்டு ஒரு நீண்டுருண்ட கூடுகட்டி அதற்குள் அசைவின்றி இருந்துகொள்கிறது. இப்படி இருப்பதற்குத்தான் 'புயுப்பா' (Pupa) என்று பெயர். இது பார்ப்பதற்கு



ஒரு கோட்டை மாதிரியாக அசைவின்றி உயிரற்றதுபோல் தெரியும். இந்த மாதிரியிலேயே ஒரு வருஷத்தில் அதிக நாள் காலத்தைக் கழித்துவிடுகிறது. செப்டெம்பர் மாதம் முதல் மே மாதம் வரையோ அல்லது ஜூன், ஜூலை மாதம் வரையோ மழைகாலம் வரும்வரை காலத்தைக் கழித்துவிடுகிறது. குளிர்காலத்தையும் வெயில் காலத்தையும் இம்மாதிரி பூமிக்குள்ளேயே கழித்துவிடுகிறது. மழை சரியாய் பெய்து பூமி குளிர்ந்த பிற்பாடுதான் இது சிறகுகொண்டு பறக்கிற பூச்சியாக 'மாத' (Moth) வெளியே பறந்துவருகிறது. இப்பறவைப் பூச்சி இறக்கைகள் வெளுப்பாயும், உடல் மஞ்சள் அல்லது சிகப்பாயுமிருப்பதை யாவரும் பார்க்கலாம். தரைக்கு வெளியே வந்து பறந்து ஜோடி சேர்ந்து இட்டித்து 800 முதல் 1,000 வரை முட்டைகளை இளஞ்செடிகளில் இட்டுவிடுகிறது. இந்த முட்டையிலிருந்து சிறு புழுவுண்டாகி, செடிகளையும் அதிலுள்ள களை மூலைகளையும் தின்று 3, 4 வாரத்திற்குள் மேலே சொன்ன முழுக் கம்பளிப் பூச்சியாகி பூமிக்குள் குடைந்துபோய் மேலே சொன்னபடி இருந்துகொள்கின்றன.

3. இதற்கு என்ன செய்வது?—மேலே சொன்ன பிரகாரம் பூச்சி உற்பத்தியாகிறதிலிருந்து தெரிந்துகொள்ளுகிற முக்கிய அம்சம் என்னவென்றால், பூச்சி இயற்கை பறக்கிற காலம்தான் அதைத் தொலைக்கலாமென்று படுகிறது.

இந்த மாத[illegible] இல்தான் ஏராளமாய் வெளிக்கிளம்புகின்றன. வெளிக்கிளம்பி, புல்லுகளிலும் தாழ்ந்த புதர்களிலும் அடைகின்றன. வெள்ளைநிறமாயிருப்பதால் லெகுவில் தென்படுகின்றன. ஆந்தோடு மெதுவாய் ஊர்ந்தும் ஊராமலுமிருக்கின்றன. அதனால் அவைகளை சரியான வேளையில் பார்த்தால் இருக்குமிடத்தில் லெகுவாய் பிடித்துவிடலாம். சிறுவர்கள் ரொம்பவும் சீக்கிரமாய் பிடித்துவிடுவார்கள். நூற்றுக்கு இவ்வளவு காசு கொடுக்கிறேனென்று அச்சிறுவர்களை உற்சாகப்படுத்திவிட்டால் பூச்சிகள் பிடிபட்டுவிடும். பிடிபட்ட ஒவ்வொரு பூச்சியினாலும் ஆயிரம் கம்பளிப் பூச்சிகள் உற்பத்தியாகிறதை தடுக்கிறோம். ஆகையாலதான் இறக்கைகொண்டு திரிகிற பூச்சியை பிடித்துக்கொள்வதுதான் சிலாக்கியமான முறை.

இந்த முறை 1923-24 இரண்டு வருஷங்களிலும் தென் ஆற்காடு ஜில்லா பண்ருட்டிப் பக்கமுள்ள கிராமங்களில் ஜூலை, ஆகஸ்ட் மாதங்களில் அனுஷ்டிக்கப்பட்டது. 1923-ம் வருஷம் பணிக்குப்பம் கிராமத்தில் இம்முறை செய்யப்பட்டது. அவ்விடத்தில் இரண்டு நல்ல மழை (ஒரு அங்குலமும் அரை அங்குலமும்) பெய்தவுடன் இப்பூச்சிகள் இரண்டு பிரிவுகளாக வெளிக்கிளம்பின. முதலில் வெளிக்கிளம்பின கூட்டத்தில் 67 பூச்சிகள்தான் பிடிபட்டன. இரண்டாவதில் 984 பூச்சிகள் பிடிபட்டன அவைகளில் 560 பெண் பூச்சிகள். அந்த ஊர் பெரியதனக்காரன் பின்னால் அவ்வருஷம் கம்பளிப்பூச்சி அதிகமாய் பயிரில் விழவில்லை என்று ரிப்போர்ட் செய்தார்.

1924-ம் வருஷத்தில் அதற்கு அடுத்த மலையப்பட்டு என்னும் கிராமத்தில் வேலை நடந்தது. இக்கிராமத்தில் இப்பூச்சியினால் அதிக சேதம் என்று தெரிந்தது. ஆகஸ்ட்மீ 7, 8உகளில் இரண்டு மழை, $1\frac{1}{2}$ அங்குல அளவு. மறுபடி 12உ அரை அங்குல அளவு மழை. 10உயே பூச்சிகள் வெளிக்கிளம்பின. 14உ வரை வெளிக்கிளம்பிக்கொண்டேயிருந்தன. இந்த தினங்களில 33,101 பூச்சிகள் பிடிபட்டன. அவற்றில் 19,365 பூச்சிகள் பெண்பூச்சிகள், ஆனால் அந்த பூமியில் ஒரு பக்கம்தான் இப்பூச்சிகள் பிடிக்கப்பட்டன. ஒரு மாதத்திற்குப் பின்னால் பார்வையிட்டதில் பூச்சி பிடிபட்ட பாகத்தில் புழுக்கள் அற்ப சொற்பமாயிருந்தன. ஆனால் பூச்சி பிடிக்காத இடத்தில் ஆயிரக்கணக்கான புழுக்கள் தோன்றி பயிரைச் சேதப்படுத்தின.

4. இந்தப் பூச்சியைத் தொலைப்பதற்கு எதிலிருக்கிறது உபாயம்?—இந்தப் பூச்சியை கொலைக்கவேணுமென்றால் ஒரு கிராமத்திலுள்ள குடிகள் எல்லாரும் ஒத்து முயற்சி எடுக்கவேண்டும். இரண்டொரு சம்சாரிகள் பூச்சிகளைப்பிடித்து கொன்றுகொண்டிருக்க பக்கத்தில் மற்ற குடிகள் பிடிக்காமல் சும்மாவிருந்தால் பிரயோஜனப்படாது. ஏனென்றால், பிடிக்காத பூமிகளிலிருந்து வெளிக்கிளம்பும் பூச்சி, பிடித்துள்ள பூமிப்பயிர்களில் போய் முட்டையிட்டு அங்கும் சேதப்படுத்தியேவிடும். குடிகள் ஒத்து வேலைசெய்தால் நல்ல அநுகூலமுண்டு என்பதற்கு இது ஒரு அத்தாட்சியுமாகிறது.

ராமச்சந்திர ராவ்,
ஆக்டிங் கவர்ன்மெண்ட் என்டமாலஜிஸ்ட்.

## நெல்பயிருக்குக் கெடுதல்செய்யும் நாவைப்பூச்சி.

நாவைப்பூச்சி.—சென்னை ராஜதானியில் நெல் விளையும் பிரதேசங்களில் சிலவகைகளினின்று முற்றிக்கொண்டிருக்கும் நெற்பயிருக்கு Leptocorisa Varicornis என்ற பூச்சியால் மிகக்கெடுதல் ஏற்பட்டிருக்கின்றதென்று சில வருஷங்களில் அநேக ரிப்போர்ட்டுகள் வருகின்றது. இப்பூச்சியை தென் கனரா ஜில்லாவில் 'பமபூச்சி' என்றும், மலையாளம் ஜில்லாவில் "சழி" என்றும் சொல்லுகிறார்கள். தமிழ் நாட்டில் இதை 'நாவைப்பூச்சி' என்றும், 'கிளி' என்றும் சொல்லுவார்கள். ஆந்திர தேசத்திலோ 'சிலுகாலு' என்பார்கள். இப்பூச்சி நீண்டதாயும், நுண்ணியதாயும், பச்சைப் பழுப்பு நிறத்துடன் கூடியதாயும் நீண்ட கால்களும் உணர்ச்சிக்கொடுக்கும் சிறகுகளுமுடையதாயுமிருக்கிறது. இதுவுமன்றியில் அதற்கு நீண்டதும் கூரானதும் குழல போன்றதுமான மூக்குமுளது. அதினால் அப்பூச்சி கதிர்களையும் பசுந்தானியத்துள்ளும் துளைத்து அவைகளிலுள்ள சாற்றை உறிஞ்சும். நெற்பயிர் கதிர்வாங்கி அன்னம்பிடிக்கும் சமயத்தில் இப்பூச்சிகள் ஆயிரக்கணக்காய் தோன்றி பயிருக்கு மிகக் கெடுதல் செய்கின்றன. சில சமயங்களில் கதிர் முழுவதும் காய்ந்துபோகும். ஆனால் அநேகமாய் தனித்தனி தானியமணிகள் மாத்திரம்தான் கெடுதலடைந்து பதராகின்றன.

பூச்சியின் ஜீவசரித்திரம்.—இப்பூச்சியானது இளம் நெற்பயிரிலும் சோளம் முதலிய பயிர்களிலும் தருசு நிலங்களிலும் காடுகளிலுமுள்ள புல்களில் விசேஷமாய் விருத்தியாகின்றது. பெண்பூச்சி ஒவ்வொன்றும் 300 முட்டைகள்வரைக்குமிடும். 10 முதல் 25 முட்டைகள் வீதம் வரிசைவரிசையாய் நெற்பயிர் அல்லது புல்தாள்களிலிடும். முட்டைகள் சுமார் ஒரு வாரத்தில் நுண்ணிய சிறு பூச்சிகளாக மாறுகின்றன. இச்சிறு பூச்சிகள் தழைகளிலும், கதிர்களிலுமுள்ள சாற்றை உருஞ்சி நாளாவட்டத்தில் பெரியதாகி கடைசியாய் இறகைப்பெற்று பறக்கும் சக்தியை அடைகின்றன. இவ்விதம் பருவமான பூச்சிகள் கதிரில் முற்றிக்கொண்டிருக்கும் தானியத்திலும் காம்புகளிலுமுள்ள சாற்றை உறிஞ்சிக்கொண்டு 3, 4 மாதங்கள் ஜீவிக்கின்றன. அக்காலத்தில் அநேக தடவைகளில் முட்டையிடுகின்றன. இப்பூச்சியானது மாரிகாலத்தில் விசேஷமாய் விருத்தியாகின்றது. ஆகையின் அதிக விஸ்தீரணத்தில் சாகுபடியாகும் முதல் போக நெற்பயிர் அதிக கெடுதலடையவில்லை. ஆனால் அற்ப விஸ்தீரணத்தில் சாகுபடியாகும் இரண்டாம் போக மூன்றாம் போக நெற்பயிர்கள் இப்பூச்சிகளால் தாக்கப்பட்டு மிகக் கெடுதலடைகிறது. ஏனெனில் அச்சமயத்தில் காடுகளில் புல்காய்ந்து இப்பூச்சிகளுக்கு வேண்டிய உணவு கிடைப்பதில்லை.

சிகிச்சை முறைகள்.—இப்பூச்சிகள் பயிரில் விழுந்திருப்பதை குடித்தனக்காரர்கள் தங்கள் பயிருக்கு நாசமேற்பட்டு தானியங்கள் பதரானதற்கப்புறம்தான் காண்கிறார்கள். முதலிலேயே தெரிந்துகொண்டால் ஒரு கைவலையால் பூச்சிகளை பிடித்துக் கொல்லலாம். கைவலை செய்வது சுலபமான காரியம். அது முரட்டுத் துணியால் செய்யப்பட்டுள்ளதும் ஒரு பக்கம் திறந்துள்ளதுமான ஒரு பை. அது வாய்ப்பக்கத்தில் $1\frac{1}{2}$ அடி அகலமுள்ளதும், $1\frac{1}{2}$ முதல் 2 அடி நீளமுமானது. வளைந்த மூங்கில் அல்லது பிரம்பு வளையத்தில்
ர்க்குப்படி பையின் வாய்ப்பக்கம் துணியை
மடித்துத் தைக்கவேண்டும். இவ்வளைய
திற்கு கையுள்ள கிளையாகிய கை
யை கட்டவேண்டியது. மலை
தில் பூச்சிகளால் பிடிக்கப்ப
ளில் இப்பைகளை இரட்ட
துணிகளால் சுலபமாய் செய்கிறார்.
தற்கு அதேசத்தில் 'தவர்த்து'
என்று சொல்லுவார்கள். இவ்விதப
கள் செய்வதால வேலை முடிந்தவுடன்
களின் தையல்களை பிரித்து துணியை
றுவிஷயங்களுக்கு உபயோகிக்கல
ச்சி விழுந்திருக்கும் வயலின் ஒ
னின்று மற்றொரு பக்கத்திற்கு

கதிர்களுக்கு எல்லாப்பக்கமும் நன்றாய் படும்படி இழுத்துக்கொண்டு போவதால் எண்ணிறந்த பூச்சிகளைப் பிடிக்கலாம். பிடிபட்ட பூச்சிகளை மண்ணெண்ணெய் கலந்த ஜலம் நிறைந்துள்ள பானையில் போட்டுக் கொன்று விடலாம். இவ்விதம் அநேக ஆயிரக்கணக்கான பூச்சிகளைப் பிடித்து பயிர்களை கெடுதலடைவதினின்றும் காப்பாற்றக்கூடும்.

## கைவலை.

ஒற்றுமையின் அவசியம்.—மேற்சொன்ன விதம் சிகிச்சை செய்வதில் கவனிக்க வேண்டிய சங்கதியொன்றுளது. அதின் அவசியத்தைப்பற்றி வேண்டியளவு சொல்லமுடியாது. அது யாதெனில், குடித்தனக்காரர்கள் இவ்விஷயத்தில் ஒத்துழைத்தலே. தனது அயலார்கள் ஒன்றையும் கவனிக்காமல் தங்கள் பயிர் நாசமடைவதை பார்த்துக்கொண்டிருக்கும்போது, முயற்சியுள்ள ஒரு குடித்தனக்காரன்மட்டும் இச்சிகிச்சை செய்வதால் யாதொரு பிரயோசனமுமில்லை. ஏனெனில், பூச்சிகள் பிடிபடாத வயல்களினின்றும் பூச்சிகள் பிடிபட்ட வயல்களுக்கு இவைகள் பறந்துபோய் கெடுதல் செய்யும். ஆகையால் இவ்விஷயத்தில் ஊக்கத்துடன் வேலைசெய்த குடித்தனக்காரனுடைய பிரயாசை வீணாய்ப் போகிறது. நெற்பயிரில்லாத காலத்தில் இப்பூச்சியானது சாதாரணமாய் புல்களில் ஜீவிப்பதால் குடித்தனக்காரர்கள் அதைச் சார்ந்த சுற்றுப்பக்கத்திலுள்ள இடங்களையும் கூடியமட்டும் களையில்லாமல் சுத்தமாக வைத்துக்கொண்டால் இக்கெடுதியை மிகவும் தடுக்கலாம்.

ஒப். இராமச்சந்திர ராவ்,
சர்க்கார் பூச்சி சாஸ்திரி.

## ஐக்கிய முறையின் முதன்மையான பத்து கோட்பாடுகள்.

I. ஐக்கிய முயற்சி ஒரு பொதுநன்மையான காரியம். பொதுநன்மையான விஷயங்கள் சம்பந்தப்பட்ட ஒவ்வொருவருக்கும் நன்மைதரும். ஆகவே பொதுநன்மையாகிய ஐக்கிய முயற்சியின்பொருட்டு ஒவ்வொருவரும் பாடுபடுவது அவசியம். இதுவே ஐக்கிய முறையின் முக்கியமான கோட்பாடு.

II. சங்கத்தில் சேர்ந்த ஒவ்வொரு மெம்பரும் மற்றெல்லா மெம்பர்களின் கடன்களுக்கும ஜவாப்தாரியாகிறார். ஆகையால் சங்கத்துக்கு மோசஞ்செய்யமாட்டாரென்று தெரிந்த நன்னடத்தையுள்ளவர்களையே மெம்பர்களாகச் சேர்த்துக்கொள்ளவேண்டியது. நல்ல நடத்தையுள்ள ஒருவனை அவன் ஏழையென்ற காரணத்தினாலேயே மெம்பராய்ச் சேர்க்க மறுத்தல்கூடாது.

III. நன்மையுள்ளதும் பலன்தரக்கூடியதுமான காரியங்களுக்குமட்டுமே கடன் கொடுக்கவேண்டும். திருப்பிச் செலுத்த வேண்டிய தவணைகளை மெம்பர்கள் சுலபமாகச் செலுத்திவரத் தக்கபடி ஏற்படுத்தவேண்டும். தவணை தவறாமல் மெம்பர் பாக்கிகளைச் செலுத்திவரவேண்டும். அப்படியானால் சங்கத்துக்கு நஷ்டம்வர மார்க்கமில்லை.

IV. மெம்பர்களுக்கு நியாயமான காரியங்களுக்குத் தேவையான கடன்கள் பூராவும் கொடுத்துதவவேண்டும். மெம்பர்கள் வெளியிடங்களில் அதிக வட்டிக்குக் கடன் வாங்குவதனால் அவர்கள் சக்தி குறையுமே தவிர அதிகப்படாது.

V. ஏழை மெம்பர் தன் மாசூல்களை அகாலமாகிய அறுவடைகாலங்களில் குறைந்த விலைக்கு விற்றுவிடாமல் சரியான காலத்தில் நல்ல விலைக்கு விற்கும் பொருட்டு கொஞ்சகாலம் நிறுத்திவைக்கும்படி அவனுக்குக் கடன் கொடுத்துதவவேண்டும் என்பதை ஒரு முக்கிய கோட்பாடாகக் கருதி நடத்திவருவதவசியம்.

VI. ஒவ்வொரு மெம்பரும் மற்றொவ்வொரு மெம்பரின் நடத்தைகளைப்பற்றியும் கவனித்து வரவேண்டியதவசியம். பஞ்சாயத்தார் சங்கத்து வேலைகளை நடத்திவர அதிகாரம் பெற்றவர்களானாலும் அவர்கள் மகாசபையாரின் ஆதிக்கத்துக்குட்பட்டவர்களே.

VII. நாம் சங்கத்தில் சேர்வது கடன் வாங்குவதற்காக மட்டுமல்ல, நம்மில் ஒவ்வொருவரும் கொஞ்சங்கொஞ்சமாவது மீதுசெய்து சங்கத்தில் சேர்த்து வைத்துவருவதவசியம். ஆரம்பத்தில் அப்படிச் சேர்ப்பது கடினமாகத் தோன்றும். பிறகு நூற்றுக்கு மேல் ஊற்றுப்பெருக்காகும்

(இன்னும் வரும்)

## பஞ்சாங்கம்.

### 1926 ஸு- அக்டோபர்மீ

● அமாவாசை ○ பௌர்ணமி *கிருத்திகை

| வாரம் | தேதி | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஞாயிறு | ... | 3 | 10 | 17 | 24 | 31 |
| திங்கள் | ... | 4 | 11 | 18 | 25 | ... |
| செவ் | ... | 5 | 12 | 19 | 26 | ... |
| புதன் | ... | ●6 | 13 | 20 | 27 | ... |
| வியா | ... | 7 | 14 | ○21 | 28 | ... |
| வெள் | 1 | 8 | 15 | 22 | 29 | ... |
| சனி | 2 | 9 | 16 | *23 | 30 | ... |

| வாரம் | அக்ஷய-ஸு புரட்டாசி 15உ—ஐப்பசி 14உ | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஞாயிறு | ... | 17 | 24 | 1 | 8 | 15 |
| திங்கள் | ... | 18 | 25 | 2 | 9 | ... |
| செவ் | ... | 19 | 26 | 3 | 10 | ... |
| புதன் | ... | ●20 | 27 | 4 | 11 | ... |
| வியா | .. | 21 | 28 | ○5 | 12 | ... |
| வெள்ளி | 15 | 22 | 29 | 6 | 13 | ... |
| சனி | 16 | 23 | 30 | *7 | 14 | ... |

Patron. M.R.Ry. Rao Bahadur,
A. J. Vethanayaga Thevar Avl.,
Usilampatti.

-Rev. George J. Athishtam,
Usilampatti.

. R. A. Dudley,
Tirumangalam.

n—Single copy 14 annas a year
ng charges for delivery) payable in advance.

. orders to be sent to the *Manager*.

rticles for insertion should be sent, not later
th of each month to the *Editor*.

சம்ரக்ஷகர்.—மகா-ா-ா-ஸ்ரீ ராவ் பகதூர் வேதநாயகத் தேவரவர்கள், உசிலம்பட்டி.

பத்திராதிபர்.—கனம் ஜார்ஜ் அதிஷ்டம் ஐயரவர்கள், உசிலம்பட்டி.

மானேஜர்.—கனம் ஆர். ஏ. டட்லி துரையவர்கள், திருமங்கலம்.

வருஷ சந்தா தபாற்கூலி உட்பட அணா 14. ஒரு வருஷ சந்தா யொப்பம் முன்னதாகவே அனுப்ப வேண்டும்.

பத்திரிகை வேண்டுவோர் மானேஜரவர்களுக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

சமாச்சாரக்குறிப்பு முதலியவை அனுப்ப விரும்புவோர் அந்த மாதம் 15-ம் தேதிக்குள் சுருக்கமாக எழுதி பத்திராதிபருக்கு அனுப்பவேண்டும்.

பசுமலை அமெரிக்கன் மிஷன் "லினக்ஸ்" அச்சயந்திரசாலையில் பிரசுரிக்கப்பட்டது

11 NOV 1926 MADRAS

மாதாந்தரப்பத்திப்பு] REG. NO. M. 2146 [விலை 1 அணா 2 பைசா.

# The Piramalai Reformer.

## பிரமலை சீர்திருத்தன்.

"சஞ்சலத்தோடு கூடிய அதிகப் பொருளிலும், கடவுளைப் பற்றும் பயத்தோடுகூடிய கொஞ்சப்பொருளே உத்தமம்."

Vol. VI.] நவம்பர்மீ, 1926 [இலக்கம் 7

## ஞானியின் வசனங்கள்.

1. தன் நிலத்தைப் பயிரிடுகிறவன் ஆகாரத்தால் திருப்தியாவான்; வீணரைப் பின்பற்றுகிறவனோ வறுமையால் நிறைந்திருப்பான்.

2. உண்மையுள்ள மனுஷன் பரிபூரண ஆசீர்வாதங்களைப் பெறுவான்; ஐசுவரியவானாகிறதற்குத் தீவிரிக்கிறவனோ ஆக்கினைக்குத் தப்பான்.

3. முகதாட்சிணியம் நல்லதல்ல, முகதாட்சிணியமுள்ளவன் ஒரு துண்டு அப்பத்திற்காக அநியாயஞ்செய்வான்.

4. வன்கண்ணன் செல்வனாகிறதற்குப் பதறுகிறான், வறுமை தனக்கு வருமென்று அறியாதிருக்கிறான்.

5. தன் நாவினால் முகஸ்துதி பேசுகிறவன் யார்க்கிலும் கடிந்துகொள்ளுகிறவன் முடிவில் அங்கீகாரம் பெறுவான்.

6. தன் தகப்பனையும் தாயையும் கொள்ளையிட்டு, அது துரோகமல்ல என்பவன் அழிக்கிற மனுஷனுக்குத் தோழன்.

7. தன் இருதயத்தை நம்புகிறவன் மூடன்; ஞானமாய் நடக்கிறவனோ ரட்சிக்கப்படுவான்.

8. தரித்திரனுக்குக் கொடுப்பவன் தாழ்ச்சியடையான்; தன் கண்களை ஏழைக்கு விலகுகிறவனுக்கோ அநேக சாபம் வரும்.

துன்மார்க்கர் எழும்பும்போது மனுஷர் மறைந்துகொள்ளுகிறார்கள்; அவர்கள் அழிந்தோ நீதிமான்கள் பெருகுகிறார்

## தொழிலில் ஆசை.

நாம் செய்து முடிக்கவேண்டிய எத்தொழிலையும் செய்து தீரவேண்டுமே என்ற அதிருப்தியும் சோம்பலுமில்லாமல் சிரத்தையுடன் செய்ய ஆசைவைக்கவேண்டும். எந்தவேலையையும் கருதிச்செய்தால் மனதிற்கு ஒருவிதமான உற்சாகம் ஏற்படும் என்பதற்குச் சந்தேகமில்லை. ஒன்றைச் செய்யத் தொடங்கினால் மனதை அதிலே செலுத்துவதுடன், அதன் நுட்பங்களை நன்றாய்த்தெரிந்து செய்யவேண்டியது அவசியம். அதுமட்டுமல்ல; அதன் விருத்தாந்தங்களையும் காரண காரியங்களையும் சரிவரத்தெரிந்து காலாவிதத்திலும் யோசித்து எக்காரியத்தையும் செய்யத்துணிந்தால் ஒருபோதும் பிரயோசனப்படாமல் போகாது. ஆனால் அப்படிச் செய்வதில் மற்றுமுள்ள பல தொழில்களும் பலன்கொடுக்குமா என்பதையும ஆலோசிக்க வேண்டும். இவ்விதமாக எந்தத்தொழிலையும் நன்கு ஆராய்ந்து செய்தால் மனிதருக்கு ஒருவித குதூகலம் உண்டாகும் என்பதற்குத்தடையுமுண்டோ? ஆனால் ஆரம்பத்தில் சற்று வருத்தமாகத்தான் தோன்றும். சாத்தியப்படாத காரியம, வீண்சிரமப்படுவானேன் என்று அசட்டைசெய்து தள்ளிவிட்டுவிட மனம்பாயும். அவ்விதமாக மனம்போன போக்கில் விட்டுவிடலாகாது. மெய்வருத்தக்கூலிதரும் என்றவாக்கியம் பொய்போகாது என்மையை கொடுக்குமேயல்லாது முயற்சி வீண்போகாது.

ஏதாயினும் ஒரு தொழிலைச் செய்தால் அதைக் குறைவாகவே பலர் எண்ணுகிறார்கள், அதனால் செய்யத்துணிபவர்களும் குறைவாகக் கொள்ளுகிறார்கள். ஒரு தொழிலைச் செய்வதினாலே அந்தஸ்தும் மதிப்பும் கு......ண்

......ம் அநேக......திலே குடிகொண்டிருக்கிறது. இதனாலேயேதான் நம்தேசத்தில் சாதாரண அந்தஸ்துள்ள புருஷனும் தன் மனைவி மக்களை ஒன்றும் செய்ய விடாமல் வீண்காலம் கழிக்கும்படி விட்டுக்கொண்டிருக்கிறான். வீட்டில் தன் மனைவி மக்கள் ஏதாவது ஒரு தொழிலைச்செய்தால் தன் யோக்கியதைக்கும் மதிப்புக்கும் குறைவு உண்டாகும், மற்றவர்கள் பார்த்து பழிப்பார்கள் என்று ஒருவன் எண்ணி, தானும் தன் மனைவி மக்களை மற்றவர்களைப்போல் சரிவர நடத்திவருகிறோம் என்று பெருமை கொள்ளுகிறான். இதனால் பெண்கள் சரியானபடி காலங்கழிக்க வகையில்லாது வீண் சண்டை சச்சரவு முதலியவை பிடித்துக்கொண்டு காலத்தை வியர்த்தமாய்ப் போக்குகிறார்கள். அநாவசியமாகக் காலங்கழிக்கிறதைக்காட்டிலும், ஏதோ ஒரு தொழிலைச் செய்யும்படி ஏற்பாடு செய்து நாளுக்குநாள் அபிவிர்த்திசெய்து வரும் வழியைத் தேடிக்கொண்டு வந்தால் எக்காலத்திலும் பிரயோசனமும் அதனால் மதிப்பும் கண்ணியமும் அதிகமாகும்.

காலஞ்சென்ற நமது எட்வர்டு சக்கரவர்த்திக்கு மேஜோடு பின்னத்தெரியுமாம். அவர் முதற்குமாரனாகிய காலஞ்சென்ற யார்க் கோமனுக்கு வடம்திரித்தல் தெரியுமாம். ருஷியச் சக்கரவர்த்தியாகிய இரண்டாவது நிக்கோலாசுக்கு எருழவும், நடவும், அறுக்கவும் தெரியுமாம். ஜெர்மானிய சக்கரவர்த்திக்கு நன்றாய் அச்சுக் கோர்க்கத் தெரியுமாம். இத்தாலியா தேசத்து அரசனாகிய காலஞ்சென்ற ஹம்பர்ட் நன்றாய் ஜோடு தைப்பாராம். ஸ்வீடன் அரச......
ஆஸ்கார் காலஞ்சென்......
சத்துப்பிரத......
அரை......
காலஞ்......

னியாருக்குப் பின்னுந் தொழிலில் மிக விருப்பமாம். தமது சக்ரவர்த்தியாகிய ஜார்ஜ் மன்னர் கப்பல் ஓட்டுவதில் மிக வல்லவராம். தொழிலின் அருமையை இவர்களன்றோ நன்றாய் அறிந்தவர்கள்.

நம் இந்தியர்களுக்கு எப்போது தொழிலின்மேலே ஆசை தோன்றுமோ? எப்போது கைத்தொழிலைக் கைக்கொள்வாரோ? லோகத்தில் மேலான பதவியை வகிக்கும் ராஜாதி ராஜரெல்லாம் தங்களுடைய அந்தஸ்தைப் பெரிதாகக்கருதாமல் ஏதாவது ஒரு தொழில் செய்யத் தெரியவேண்டும் என்ற அவாவினால் தங்களால கூடியமட்டும் பிரயாசப்பட்டு பக்தி சிரத்தையுடன் செய்து தேர்ச்சியடைகிறார்கள். இதனாலேயே இவர்களுக்குக் குறைவு ஏற்படுமா? தொழில் செய்வது சிலாக்கியமே தவிர கனிஷ்டமல்ல. ஆகையால் எக்குடியிற் பிறப்பினும் யாவரேயாயினும் நற்றொழிலைச் செய்வதே நன்று.

மா. போ.

## பன்றிக்குச் சகோதரன்.

ஒரு காலத்தில் ஒரு அழுக்கினமான பையனிருந்தான். அவனுடைய புஸ்தகங்கள் தரையில் இங்கும் அங்குமாக சிதறிக்கிடந்தன. சேறுபடிந்த அவன் சப்பாத்துக்கள் மேசையின்மேல் வைக்கப்பட்டு இருந்தன. அவன் கைகளை எப்பொழுதும் அழுக்காக வைத்திருந்தான். அவனுடைய உடுப்பு மைகொட்டி மிகவும் கேவலமாக இருந்தது. இப்படி அவன் செய்த அவலக்ஷணமான காரியங்களைச் சொன்னால் விரியும்.

ஒருநாள் சுசிகரம் என்னும் ரூபி அவன் இருக்கும் அறைக்கு வந்தார். அவருடைய வேலை இப்பேர்ப்பட்ட பிள்ளைகளைத் திருத்துவதே.

அந்த ரூபி அவனைப் பார்த்து நீ இப்படி இருப்பது சரியல்ல; உன்னைப் பார்க்க என் உடம்பு சிலிர்க்கிறது; நீ வெளியே போய் நான் உன்னுடைய அறையை ஒழுங்குப்படுத்தும் வரைக்கும் உன் சகோதரனோடு இரு என்று சொன்னார்.

'எனக்குச் சகோதரனில்லை' என்று பையன் சொன்னான். ரூபி அவனைப் பார்த்து, 'உனக்குச் சகோதரன் இருக்கிறான்; ஒருவேளை அவன் உனக்குத் தெரியாது; ஆனால் அவன் உன்னைக் கண்டுகொள்ளுவான்; தோட்டத்திற்குப்போய் அவன் வருகைக்குக் காத்திரு; அவன் சீக்கிரமாய் வருவான்' என்று சொன்னார்.

ரூபி சொல்லுகிறது தனக்கு விளங்கவில்லை என்று முணங்கிக்கொண்டு அவன் தோட்டத்திற்குப்போய் அங்கே காத்திருந்தான்.

[illegible] அட்டிக்கொண்
'நீ என் ச
கேட்டான்,

'நான் இல்லை என்று நம்புகிறேன்; என்னுடைய மயிர் சுத்தமாய் சீவப்பட்டிருக்கிறது. என்னுடைய கூடு அழகாயும் ஒழுங்காயும் கட்டப்பட்டிருக்கிறது. என்னுடைய குட்டிகள் நல்ல வளர்பபில் வளர்க்கப்படுகின்றன. இப்படியிருக்க நீ என்னை உன் சகோதரன் என்று கேட்டு எப்படிக் கேவலப்படுத்தலாம்!' என்று சொல்லி ஓடிப்போனது.

பையன் காத்திருந்தபோது ஒரு பறவை வந்தது. 'நீ என் சகோதரனா?' என்று பையன் கேட்டான். 'உனக்கு என்ன துணிகரம்! இந்தத் தோட்டம் முழுவதிலேயும் என்னைப்போல் சுத்தமான எதுவும் கிடையாது. என்னுடைய ஒரு இறகாவது இடம் பிசகி இருப்பதில்லை. என்னுடைய முட்டைகள் எவ்வளவு அழகாயும் நேர்த்தியாயும் இருக்கின்றன. நானா உன் சகோதரன்!' என்று சொல்லிக்கொண்டு பறந்துபோயிற்று.

பையன் இன்னும் காத்திருந்தான். இந்தத்தடவை ஒரு பெரிய பூனை வந்தது. பூனையைப்பார்த்து, 'நீ என் சகோதரனா?' என்று பையன் கேட்டான்.

பூனை அகம்பாவ பெருமையோடு, 'நீ கண்ணாடியில் போய் உன்னைப்பார். அப்போது நானா உன் சகோதரன, என்று அறிந்துகொள்வாய். இன்று காலை முழுவதும் நான் வெயிலில் உட்கார்ந்து என் தேகத்தைச் சுத்தஞ்செய்துகொண்டிருந்தேன். உன் தேகத்திலோ அதிககாலமாக ஒரு சொட்டுத் தண்ணீர்கூடப்படவில்லை என்பது தெளிவாய்த் தெரிகிறது. எவ்வகையில் உன்னைப்போலொத்த ஒருவருமில்லை என்று நான் தைரியமாய் சொல்லக்கூடும்' என்று சொன்னது.

பிறகு பூனை தன் வழியேபோக, பையன் இன்னமும் காத்துக்கொண்டிருந்தான்.

உடனே ஒரு பன்றி குதித்தோடிவந்தது. பையன் இப்பன்றியைத் தனக்குச் சகோதரனா என்று கேட்க மனதில்லாமல் சும்மா நின்றான்.

பன்றியோ 'ஓ சகோதரனே!' என்று உறுமினது.

'நானா உன் சகோதரன்!' என்று பையன் கேட்டான். 'நீதான்!! நீ எனக்கு மேலானவனல்ல. என் குடும்பத்திலுள்ளவர்களுக்கும் உனக்கும் வித்தியாசமில்லை; என்னோடு வா; தோட்டத்திலுள்ள கறுப்புச் சேற்றில் புரளுவோம்' என்று அழைத்தது.

அவனோ 'எனக்கு மண்ணில் புரள இஷ்டமில்லை' என்றான்.

பன்றி அவனைப்பார்த்து, 'உன்னுடைய கைகளையும் உன்னுடைய சப்பாத்துகளையும் உன்னுடைய உடுப்புகளையும் பார். அவ்வளவு அழுக்காக இருக்கின்றன. என் சாப்பாட்டில மீதமிருந்தால் உனக்குக் கொஞ்சம் தருகிறேன்' என்று சொல்ல, 'எனக்கு வேண்டாம்' என்று சொல்லி பை

உடனே சுசிகரம் என்னும் ரூபி வெ[illegible]ரியே வந்து, 'உன்னுடைய அறையை ஒழுங்குபடுத்தியிருக்கிறேன். அது அப்படியே இருக்கவேண்டும்' என்று சொல்லி, இப்போது உன சகோதரனாகிய பன்றியோடு போக உனக்குப் பிரியமா, அல்லது என்னோடு வந்து சுத்தமான பிள்ளையாயிருக்கப் பிரியமா?' என்று கேட்டார்.

'உம்மோடுதான் வருவேன்; உம்மோடுதான வருவேன்; உம்மோடுதான் வருவேன்' என்று சொல்லிக்கொண்டு உடுப்பைப் பிடித்துக்கொண்டான்.

பன்றி விசனத்தோடு திரும்பிப்போனது.

(சிறுவர் சிங்காரவனம்.)

## கவனிப்பு.

தேகத்தையும், குடும்ப சுகத்தையும் நாடுவோர் யாவரும் பழைய கறி வகைகளை அவை எவ்வாறு உயர்ந்தனவாயிருந்தபோதிலும் ஓர் இரவு தங்கினபின்பு கையினால் தொடாமல் இருக்கவேண்டியதே சுகாதார விதியாகும். இன்னமும் வைத்திய நூல் முறையின்படி கவனித்தால் சுவை ஆறிய எந்தப் பதார்த்தமும புசிக்கக்கூடாது என்பது கட்டாயமான கண்டித விதியாகும்.

## நோய்க்கிடந் தராதிருக்க.

தேகபாதுகாப்பைக் கருதி நோய்க்கிடங்கொடாதிருக்கக் கீழ்கண்ட வழிகள் சுலபமானவையாம். அவையாவன:—

1. தேகத்தையும் ஆடையையும் பிரதினமும் சுத்திசெய்துகொள்ளல்.

2. வசிப்பிடத்தில் குப்பை, கூளம், அழுக்கு ஜலம், தேங்கும் ஜலம இவை சேராமல் அப்போதப்போது சுத்திகரித்தல்.

3. அழுகின வஸ்துக்கள், மாவுப்பண்டங்கள், மச்சமாம்ச வகைகள, பயறுகினுசுகள், பழைய உணவுகள் இவற்றை அறவே நீக்கிவிடுதல்.

4. வேகாத தோசை இட்டலி மூசி[illegible] பண்டங்கள் ஜீரணமாகாத மந்தப[illegible]கள் முதலியவற்றை அருந்தாது ஒழி[illegible]

5. கூழானாலும், அரிசி, நொய்[illegible]னாலும் வேண்டுமளவும் அப்போத[illegible] சிறுகச்சிறுக செய்து சிறு சிறுக[illegible] சாப்பிடுதல்.

6. உடுக்கும் வஸ்திரத்தையும் படுக்கும் பாயையும் ஈரமில்லாமல் உலர்ந்ததாகவே வைத்துக்கொள்ளுதல்.

7. கள், சாராயம், கஞ்சா, அபினி மு[illegible]லிய போதை வஸ்துக்கள் மயக்கத் தி[illegible]கள் இவற்றைக் கையிலும் தொடாதி[illegible]ருதல்.

8. ஓதமண ஈரமுள்ள இடம், [illegible]

9. தலைமுழுகினால் தலைமயிரில் கொஞ்சமும் ஈரமில்லாமல் துவட்டி ஈரம் உலர்த்தி தணலில் சற்றுக்காச்சக்கூடுமானால் சாம்பிராணி தூபமும் போட்டுக்கொள்ளுதல்.

10. அமித போஜனங்கொண்டு அஜீரணப்படாமல் மிதமாக உண்டு வயிறு சற்று காலியாகவே இருக்கும்படி உண்டியை அளவாக உண்ணல்.

11. இரவில் தயிர் மோர் நெய் இவற்றை போஜனத்துடன் சேர்த்து சாப்பிடாமல் நீக்கிவிடல்.

12. சூரிய உதயம் அஸ்தம் இவ்வேளைகளில் நித்திரை செய்தல் அல்லது படுத்திருத்தல். இவற்றை வழக்கத்தில் உள்ளவர்களும் அத்துர்ப்பழக்கத்தைத்தூர விலக்கல்.

இவை முக்கியமானவைகளாகும்.

## குழந்தைகள் விஷயம்.

1. குழந்தைகள், மண், சாம்பல், அடுப்புக்கரி, செங்கல் முதலிடவற்றைத் தின்னாதபடி சர்வ சாக்கிரதையாய்ப் பார்த்தல்.

2. தித்திப்புப் [illegible] வெல்லம், பெப்பரமெண்டுகள, சர்க்கரை, கற்கண்டு, மிட்டாய் தினுசுகள, அதிரசம், அல்வா முதலியவற்றைக் கொடாதிருத்தல்.

3. காப்பி, டீ முதலியவற்றை அறவே நீக்கல்,

4. சிற்றுண்டிகளைத் சதா கொடுக்காதொழித்தல.

5. அடிக்கடி ஆகாரங்கொடாதிருத்தல்.

6. அஜீரண வஸ்துக்களை உண்ணாதிருத்தல்.

7. அடுத்தடுத்தோ பெருங்குரலுடனே, நெடுநேரமோ அழும்படி விடாது தடைசெய்தல்,

8. அதிக குளிர்ந்த ஜலத்தை கொதிக்கக் கொதிக்க தேகத்திற்கோ, தலைக்கோ விடாதிருத்தல்.

9. வெந்நீரோடு சுத்தஜலத்தையும் கலந்து ஸ்நானம் செய்யாதிருத்தல்.

10. எப்போதும் விளாவாத தனி வெ[illegible] [illegible] தனி சுத்தஜலம் இவற்றில் ஏதா[illegible]ன்றைக்கொண்டு ஸ்நானம் செய்தலே [illegible]யிருத்தல். இவை சுருக்கமானவை[illegible]ளாகும்.

ஆ. சி. க.

## ஸ்திரீகளுக்குள் காணப்படும் வாசிக்கப் படிக்கத்தெரியாத கல்வியின்மை நீக்கும்படி கையாடக்கூடிய முறைகள்.

பெண்கல்விச்சிறப்பே ஒரு தேசத்தின் முன்னேற்றத்திற்கு இன்றியமையாததென்பதை, தற்கால தேச நாகரீகத்தின உரைகல் என்றும் அறிவோம் ஆயினும் அடுத்தும் பெண்களுக்குப் படிப்பென்னத்திற் [illegible] நம் தேசத்தில் பெண்கல்வியை [illegible]ப் பேசுவது சகஜம். அதை [illegible]டும் முறைகளாவன:—

I. கல்வியின் ஆவலை உண்டாக்கும் முறைகள்.

கல்வியின் அவசியத்தைக் காட்டவேண்டும். அவசியம் தெரியாதவர்களுக்கு ஆவலுண்டாகாது. சரீரப்பிரகாரமாகவும், ஆத்துமப்பிரகாரமாகவும் பெண்களுக்கிருக்கும் அறிவின்மையை நீக்க எழுத வாசிக்கத்தெரிதல் அவசியமென்று அவர்களைச் சந்திக்கும்போதெல்லாம் சொல்லவேண்டும். (உ-ம்) சரீர சௌக்கியத்திற்கடுத்த சுகாதார விதிகள், தொத்துவியாதிகள், வியாதிகளின் தன்மை இவற்றைக் காட்டக்கூடிய புஸ்தகங்களை நாம் வாசிக்கவும், அவர்களுக்கே ஆவலுண்டாகி தாங்களும் வாசிக்கப் பிரியப்படுவார்கள்.

2. "ஒழுக்கமே உயர்குல" மாதலால் சன்மார்க்கத்தைப் புகட்டக்கூடிய கதைப் புஸ்தகங்களையும், வேதசரித்திரங்களில் தேவ நடத்துதல்களையும், அன்னாள், எஸ்தர், ரூத், கன்னிமரியாள் முதலிய பக்தியுள்ள ஸ்திரீகளின் முன்மாதிரிகளையும் எடுத்துக் காட்டி, இத்தகைய புஸ்தகங்களை வாசித்து அறிந்து நடக்க கல்வி எவ்வளவு அவசியமென்பதைக்கூறி கல்வியின் ஆவலை உண்டாக்கலாம்.

3. கல்வியா[illegible]லுண்டாகும் நன்மைகளையும் கல்வியின்மையா[illegible]ண்டாகும் தீமைகளையும காட்டக்கூடிய ஒரு சரித்திரத்தை சிறுவர்கள் கதாரூபமாய் நடிக்கக்கற்றுக் கொடுத்து, அவர்கள் இரவில் தங்கள் ஊரில் நாடகமாக நடத்த ஏற்பாடுசெய்யலாம்.

4. புறதேசங்களில் பெண்கள் தேசசீர்திருத்த விஷயங்களிலும், கல்வி இலாக்காவிலும், இராஜாங்க விஷயத்திலும், மதவிஷயங்களிலும் எவ்வாறு தலையிட்டு உதவிபுரிந்தார்கள் என்பதை எடுத்துக்கூறி, அம்மாதுசிரோமணிகளின் சரித்திரத்தைக்கொண்டு கல்வியின் ஆவலை விர்த்திசெய்யலாம்.

5. நமது தேசத்து தமிழ் நாட்டில் முற்காலத்தில் ஔவை எனும் கவிதையின் மூலமாய் தனநெறிகளும், தற்காலத்திலும் பண்டித ராமபாய், ஆறடொற், ரேருடட், சரோஜினிதேவி, ஸ்ரீ காந்திதேவி முதலிய நம் தேச கவிதைகளும் பெண்கல்வியின் மேன்மையை நன்கு வெளிப்படுத்துகிறார்கள் என்பதைக்காட்டி கல்வியின்மேல் தாகத்தை விர்த்தியாகச் செய்யலாம்.

6. சிறியோர்கள் மூலமாய் சங்கீதகாட்டத்தையும் அறிவையும ஊரிற்பரவச்செய்து சன்மார்க்கத்துக்கடுத்த விதமாய் நடத்தி அதைப் பார்த்த பெரியோரான பெண்கள் கல்வியின் தன்மையை உணர்ந்து கற்கச் செய்யலாம்.

7. கிராமப்பெண்கள் அறியாத ஒளிச்சித்திரப்படங்கள் முதலிய நூதன காட்சிகளைக்கொண்டு பெண்கள் மனதைக் கவர்ந்து கல்வியின் மேன்மையை ரூபித்துக் காட்டலாம்.

8. கல்வியின் மேன்மை

மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கின்
மன்னனிற் கற்றோன் சிறப்புடையோன்—மன்னனுக்கு
தன்தேசமல்லாற் சிறப்பில்லை கற்றோர்க்குச்
சென்றவிடமெல்லாம் சிறப்பு

என ஔவை எனும் மாது சிரோமணியே பாடியிருப்பதைக்காட்டிக் கல்வியின் ஆவலை உண்டாக்கலாம்.

II. தடையை நீக்கும் முறைகள்.

1. செல்வம் பெண்கள் படிக்கத் தடை. செல்வச்செருக்கினால் பெண்கள் படியாதிருக்கிறார்கள். செல்வத்திற் செல்வம் என்பதைக்காட்டி கல்வியை விர்த்திசெய்ய வேண்டும்.

2. ஜாதி ஒரு தடை. ஜாதிப்பெருமையினால் இந்தியப்பெண்கள் படிப்பை அலக்ஷியஞ்செய்கிறதுண்டு. ஜாதியல்ல, கல்வியே மேன்மையையும், பெருமையையும் கொடுக்கக்கூடியவை என்பதைப் பல திருஷ்டாந்தங்களைக்கொண்டு ரூபிக்கலாம்.

3. அறியாமை ஒரு தடை. இதை நீக்க கல்வியே முக்கிய சாதனம் என்பதை (வற்புறுத்துமாறு)

கண்ணுடையோர்—கற்றோர்—முகத்திரண்டு
புண்ணுடையார் கல்லாதார்

என்ற நாயனார் வாக்கைக்கூறி அசுத்தம் [illegible]டன் நீங்கவ [illegible] [illegible]யதக்காட்டி அறியாமையை நீக்க முயலுவது உசிதம்.

4. தேச பழக்கவழக்கங்களும் சடங்காச்சாரங்களும் கல்விக்குத் தடை. இவைகளினால் நம்தேசத்தைப்போலொத்த பெண்கள் கல்வியற்றிருப்பது பரிதாபமே. எத்தேசம் பெண்கல்வி மிகுந்துளதோ அத்தேசமே சகல விஷயத்திலும் முன்னுக்கு வந்து ஒற்றுமை, வியாபாரம், வல்லமை, மேன்மை முதலியவை காணப்பட கல்விக்கு முக்கிய சாதனம் எனக்காட்டி ஒழுங்கின்மையை நீக்கலாம்.

5. தொழில் ஒரு தடை. சேடர், சாலியர், பட்டுநூல்காரர், கோலியர் முதலிய தொழிலாளிப் பெண்களும், தட்டான், கொல்லன், தச்சன் முதலிய ஆசாரித் தொழிலாளிகளும், கல்வி கற்றுக்கொள்ள அவர்கள் தொழிலே காரணம் என்று அறிவோம். கல்வியின்மையால் தன் தன் தொழில் விர்த்தியில்லை என்று, புறதேச தொழில் விர்த்திக்கு கல்வியே முக்கிய ஆதாரம் என்பதை அவர்கள் மனதிற் பதியச்செய்து கல்வி கற்றுக்கொள்ளத் தூண்டுதல் அவசியம்.

III. கல்வியைக் கற்க முயற்சிக்கும் முறைகள்.

1. இராப்பள்ளிக்கூடங்கள் மூலமாய் கற்பிக்கலாம். பெண்கள் பகலில் வேலை செய்து இரவில் கூட்டங்கூடி வீண்பேச்சுப் பேசுவார்கள். அச்சமயம் இராப்பள்ளிக்கூடங்கள் மூலமாய் கற்பிக்கலாம்.

2. தையல் மூலமாய்ப் பெண்களைக் கவர்ந்து, அவர்களை 2 பாகமாகப் பிரித்து ஒரு பகுதியாருக்குத்தையலும், ஒருபகுதியா

ருக்குக் கல்வியும் கற்பிக்கலாம். கும்மி கோலாட்டங்கள் பெண்களுக்குப் பிரியமானதையால் அவற்றைக்கொண்டு வசப்படுத்தி, அறிவைப் புகட்டலாம்.

3. ஒவ்வொரு வீடுகளிலும் கல்விகற்றிருக்கும் சிறு பெண்களைக்கொண்டு அவர்கள் பெற்றோருக்கும் சகோதரிகளுக்கும் கற்பிக்கச்செய்யலாம்.

4. தண்ணீர் துறைகளிலும் காடுகளிலும் சமயம் வாய்க்கும்போதெல்லாம் அவர்கள் அறியாத புஸ்தகங்களை அவர்கள் வேலை செய்துகொண்டிருக்கும்போதே வாசித்துக் காட்டி அவர்களைக் கற்கச்செய்வது நலம்.

5. சம்பளமில்லாத பொதுஜன ஊழியரை பயிற்றுவித்தல்வேண்டும். அவர்கள் கிறிஸ்தவராகுலும் சரி, புறமதஸ்தராகுலும் சரி, இயேசுவின் அன்பை முயற்சிக்க வேண்டும். அவர்கள் தங்கள் இடைவிட்ட நேரங்களில் பெண்களுக்குக் கல்வி புகட்ட முடியும்.

6. பென்ஷன் எடுத்த சர்க்கார் உத்தியோகஸ்தர்களையும் தேவஊழியரையும் படிப்பறிந்த ஐவேசுள்ள கிறிஸ்தோரையும் புறமதஸ்தரையும் இப்போ உதவிசெய்யத் தூண்டவேண்டும்.

7. "இணைற்றுத் தவளை படமேன்" என்று அந்தப்புரத்தில் அமிழ்ந்து கிடக்கும் ஸ்திரீகளுக்கும் கல்விகற்கப் பிரியமற்ற ஸ்திரீகளுக்கும் பின்வரும் முறைகளைக் கையாடலாம். (a) வேதாகம ஸ்திரீகளைக்கொண்டு வீடுவீடாய்ப்போய் கற்பிக்க ஏற்பாடு செய்யலாம். (b) உபாத்தினிகள் தங்கள் இடவிட்ட காலங்களில் அவர்களை வீட்டில் கூட்டியாகிலும் தனித்தனியாகிலும் அவர்கள் வீட்டிற்குச் சென்றாகிலும் கற்பிக்கலாம். (c) அக்கம்பக்கங்களில் படித்திருக்கும் பெண்களைக்கொண்டும், பள்ளிப் பெண்களைக்கொண்டும் கற்றுக்கொடுக்கலாம்.

8. அநுதாபத்தினாலும் சிநேகத்தினாலும் உதவிசெய்வதினாலும் கற்கச்செய்யலாம். அவர்கள் சுகதுக்கங்களில் ஊடாடி அநுதாபங்காட்டவேண்டும். எந்தச்சிறு காரியத்திலும் நமது உதவி அவசியமெனக் கண்டுகொள்ளச்செய்துவருவதால் கற்றுக்கொடுக்க ஏதுவுண்டு.

9. பெண்கள் சர்க்கார் மூலமாய் வந்த உத்தரவுகளையாவது, மனுவையாவது காட்டும்போது வாசித்து, எழுதி உதவிசெய்து கல்வியின் மேன்மையைக்காட்டிக் கற்கச் செய்யவேண்டும்.

10. நம்மிடம் கற்றவர்களையே இப்போது ஊழியத்திற் சிரத்தை எடுத்துப் பெண்களுக்குக் கல்வி கற்பிப்பது அவர்கள் கடமை என்பதை உணர்த்தவேண்டும்.

11. கிராமத்திலுள்ள தொழிலாளிகளையும், வியாபாரிகளையும் இவ்வருஷத்தில் முயற்சிக்க ஏவிவிடுவது நன்மை.

12. கூடுமானால் மிஷன்கள் செய்வதுபோல பெண்கள் கல்வி விர்த்திக்காக பொதுநிதி ஏற்படுத்தி கைத்தொழிற்சாலையமைத்து சொற்பச்செலவில் தொழிலையும் கல்வியையும் புகட்டலாம். இத்தகைய முறைகளாலேயே பெண்கள் அறிவீனத்தை நீக்கி நாகரீகப்படுத்தலாம்.

ஐ.ச. து.

---

## உசிலம்பட்டி (C.S.M.) கள்ளர் பெண் போர்டிங் வருஷோற்சவம்.

சங். ஹிம்மல்ஸ்டாண்டு ஐயரவர்கள் 1923ஹு த்திலிருந்து மகா-ா-ா-ஸ்ரீ கள்ளர் ஸ்பெஷல் சூப்பிரண்டு துரையவர்களின் கள்ளர் (C.S.M.) பள்ளிக்கூடங்களுக்கு மானேஜராகவும் கரஸ்பாண்டென்டாகவும் விருதுநகரிலிருந்துகொண்டே வேலைசெய்துவந்தார்கள். இவ்வளவு வேலையையும் அவர்கள் விருதுநகரிலிருந்துகொண்டே செய்வது அவர்களுக்கு அசாத்தியமென்று கண்டு இந்நாட்டிலேயே தமது ஜாகையை வைத்துக்கொள்ள வேண்டிய ஏற்பாடுகள் செய்து, தங்களுக்கென்று ஒரு பங்களாவும் ஊழியர்களுக்கென்று விடுதியும் போர்டிங்குக்காக ஒரு கட்டிடமும் கட்டி 1925ஹு ஜூலைமீ 11ந் தேதியிலிருந்து உசிலம்பட்டியில் வந்து குடியேறினார்கள். 1925ஹு த்தில் பெண் போர்டிங்கில் 5 பெண்கள் மாத்திரம் இருந்தார்கள். இவர்களைக்கொண்டு ஒரு பலத்த போர்டிங் உண்டாக்கவேண்டுமென்று அவர்களுடைய முன்னேற்றத்தைக்கருதினவர்களாக வேலையை ஆரம்பித்தார்கள். அந்த போர்டிங்கை மேல்பார்த்து நடத்திவருபவர் கனம் எல்சா ஹிம்மல்ஸ்டாண்டு அம்மாளவர்கள் அவர்கள் அந்த தேவமார் பெண்களை பராமரிக்கும்பொருட்டு அன்னாள் அம்மாள் என்ற ஒரு அநுபவமுள்ள மேற்றன் அம்மாளை நியமித்து வேலைக்கு வேண்டிய மற்ற வேலைக்காரர்களையும் சேர்த்து வெகு கரிசனையோடு வேலைசெய்துவருகிறார்கள். பெண்களின் தேகப்பயிற்சிக்கென்று ஒரு தோட்டமும் உண்டாக்கி அதில் பலவித தானிய தவசங்களும் காய்கறிகளும் பலவித புஷ்பங்களும் உண்டாக்கி அந்தத் தோட்டத்திற்குத் தண்ணீர்பாய்ச்சுவதற்காக ஒரு கிணறும்வெட்டி இரண்டு கமலைகளும் இரண்டு ஜோடிமாடுகளும் வாங்கி, உபயோகப்படுத்த தோட்டக்காரர்களையும் நியமித்து இதுவரை அவர்களே நேரில் மேல்பார்த்து வருகிறார்கள். அப்பிள்ளைகளுக்காக ஒரு பள்ளிக்கூடமும் அவர்களை கல்விபயிற்றுவிக்க 4 உபாத்தினிமார்களும் நியமிக்கப்பட்டு ஒரு வருஷகாலமாய் கிரமமாய் வேலை நடந்துவருகிறது. 5 பெண்களோடு துவக்கின அந்தப் போர்டிங்கில் இப்பொழுது 50 பிள்ளைகள் இருக்கிறார்கள். அந்த போர்டிங் துவக்கி இப்பொழுது சரியாய் ஒருவருஷமாகிறபடியால் "வருஷோற்சவம்" கொண்டாட வேண்டியதற்கான வேண்டிய ஏற்பாடுகளும்செய்து நோட்டீசுகள் அச்சிட்டு பற்பல இடங்களுக்கும் உத்தியோகஸ்தர்களுக்கும் அந்த அம்மாளவர்கள் அனுப்பினார்கள். இவ்விதமாக மேற்படி வருஷோற்சவம் 1926ஹு செப்டெம்பர்மீ 28உயன்று சாயந்திரம் 4½ மணிக்கு அதற்காகத் தயாரிக்கப்பட்ட பந்தலில் ஆரம்பமானது.

அக்கிராசனம் வகிக்கும் மதுரை ஜில்லா கலெக்டரவர்களின் பாரியாரவர்களுக்காக எதிர்பார்த்திருந்தோம். வசதிக்குறைவால் அந்தச் சமயத்தில் வரத்தடைப்பட்டதை யிட்டு தந்திமூலமாய் அறிந்தோம். அந்தச் சமயம் பெண்பாடசாலை பரீக்ஷைக்கென்று அங்கு வந்திருந்த சப் அசிஸ்டாண்டு இன்ஸ்பெக்டர் ஆப் ஸ்கூல்ஸ் மெடுரா கேர்ல்ஸ் ரேஞ்சு மிஸ் கே. கோபாலய்யர் அம்மாளவர்கள் பீ.ஏ., எல்.டி. அந்த உற்சவத்திற்கு வந்திருந்தார்கள். அவர்கள் அக்கிராசனம் வகிக்க கரகோஷத்துடன் "வருஷோற்சவம்" ஆரம்பித்தது.

சில போர்டிங் பெண்கள் தெய்வவாக்கத்தை தேவமார் டோங்கின்படி பாடினார்கள், படிப்பறியா தேவமார் பெண்களுக்கு உள்ள வித்தியாசத்தையும், உடை நடைபாவனைகளின் பேதாபேதங்களையும் பாஷை லட்சணங்களின் பேதத்தையும் கல்வித்திறமையையும் விளக்கத்தக்கதான சம்பாஷணையை இராகங்களாலும் அபிநயங்களாலும் காட்டிப் பரவசப்படுத்தினார்கள். இவர்கள் சம்பாஷணையில் தங்களுக்காக கனம் ஹிம்மல்ஸ்டாண்டு அம்மாளவர்கள் தங்களுக்கென்று ஒரு விடுதிகட்டி அன்னம், உடை வசதியாவும் அளித்து கல்வி கற்பிக்கிறார்கள் என்றும், அதினால் தாங்கள் அறிவுடையவர்களாவதற்கும், நாகரீகமாயிருப்பதற்கும், சுத்தமாயிருப்பதற்கும், கல்வியில் தேறுவதற்கும் ஏற்றவழியாயிருக்கிறதென்றும் விளக்கிக்காட்டினார்கள். வேறு சிலர் கத்தரிக்காய் முதல அத்தோட்டத்தில் விளைகிற சகல தாவரபொருள்களையும் கையில் பிடித்தவர்களாய் அவைகளின் பிரயோஜனத்தையும் விவரித்தார்கள். பார்ப்போர் மனதைக்கவர்ந்தது. இன்னும் சில பெண்கள் சமுசாரியின் தொழிலைப்பற்றி அபிநயத்தோடு இராகங்களால் விவரித்தார்கள். வேறு சில பெண்கள் 12 மாதங்களையும் அம்மாதங்களின் பிரயோஜனத்தையும் சீதோஷ்ண ஸ்திதியையும் பாட்டினால் விவரித்தார்கள். மற்ற பெண்கள் சுகாதாரத்தைப்பற்றி சம்பாஷித்தார்கள். அநேக பெண்கள் விதவிதமான உடுப்பு அலங்காரத்துடன் கோலாட்டக்கும்மி பலவிதமாய் விளையாடினார்கள். அவர்களுடைய அபிநயமும் இராகங்களும், நாகரீகமும், பாஷையும் யாவருடைய மனதையும் கவரச்செய்தது.

பிறகு கனம் ஹிம்மல்ஸ்டாண்டு அம்மையவர்கள் ஒருவருஷத்துக்கான ரிப்போர்டை இங்கிலீஷில் வாசிக்க சங். டி. எம். ஜேந்திரம் ஐயரவர்கள் தமிழில் எடுத்துரைத்தார்கள். அதின்மூலமாய் அந்த போர்டிங் சரித்திர முழுவதும் அறிந்தோம். அதாவது செப்டெம்பர் மாதத்தில் 5 பிள்ளைகளோடு இந்த போர்டிங் துவக்கி இப்பொழுது 50 பிள்ளைகளடங்கிய போர்டிங்காயிருக்கிறது. மேலும் இப்பெண்கள் ஒருவருஷத்திற்கு முந்தி நாகரீகமில்லாத சாதாரண தேவமார் பிள்ளைகளாயிருந்து, இந்த ஒருவருஷம் பயிற்சியில் உடை, நடை, பாவனையிலும், சுறுசுறுப்பிலும், தேற்சியிலும், படிப்பிலும் நாகரீகத்திலும் எவ்வளவு முன்னுக்கு வந்திருக்கிறார்கள் என்று பார்க்கும்பொழுது கனம் ஹிம்மல்ஸ்டாண்டு அம்மையவர்கள் தேவமார் பெண்களுக்காக எவ்வளவாய் உழைக்கிறார்கள் என்பது நன்குவிளங்கும். இந்த போர்டிங்கில் ஒரு முக்கியமான விஷயம் எல்லாராலும் கவனிக்கப்படத்தக்கது. சுகாதாரம் நெருங்கி அநுசரிக்கப்படுகிறது.

போர்டிங் என்று ஏற்பட்டதும், பிள்ளைகள் போர்டிங்கில் சோகப்படும்பொழுது, சிரங்குகளும் மானேஜர் உத்தரவின்றி போர்டிங்கில் சேர்த்துகொண்டு, பிள்ளைகளை உபத்திரவிப்பதை நாம் கண்ணாரக்கண்ட விசேஷம்! ஆனால் இந்த போர்டிங் ஏற்பட்ட காலத்திலிருந்து சிரங்கு என்பதே என்ன என்று தெரியாத பிள்ளைகள்தான் இங்கிருக்கிறார்கள் என்று சொல்லலாம்.

பிறகு அக்கிராசனாதிபதியவர்கள் எழுந்து வகுப்புப் பிரகாரம் மேல்வகுப்பிலிருந்து கீழ்வகுப்புவரையிலும் ஒவ்வொரு பிள்ளைகளுக்கும் இனம் அளித்து, போர்டிங்கின் முன்னேற்றத்தையும், அதற்குக் காரணமாயிருந்த கனம் ஹிம்மல்ஸ்டாண்டு அம்மாளவர்களையும், அவர்களின் சகாயியாகிய அன்னாள் அம்மாளவர்களையும் வெகுவாய் புகழ்ந்தபிறகு பின்வருமாறு தமிழில் பேசினார்கள்:—

"நான் வடஇந்தியாவில் வேலைபார்த்துவருங்காலத்தில் சில பெண்பாடசாலைகளில் பரீக்ஷை நடத்தும்படியாகப்போயிருந்தேன். பிள்ளைகள் நல்லவர்களா என்று போன போன பள்ளிக்கூட அதிகாரிகளிடத்தில் கேட்ட கேள்விகளுக்கெல்லாம திருப்திகரமான பதில் கிடைத்ததில்லை. பிள்ளைகள் மகா கெட்டவர்கள், துஷ்டர், கீழ்படியாதவர்கள்; அவர்களோடு வேலைசெய்வதே மகா உபத்திரவமாயிருக்கிறது என்று சொல்வார்கள். ஆனால் ஹிம்மல்ஸ்டாண்டு அம்மாளவர்களைக் கண்டவுடன் அதே கேள்வியைக் கேட்டதற்கு "அவர்கள் நல்லவர்கள்" என்று சொன்னதே என்னை இன்று இங்கு வரும்படி ஏவினது. ஆகையால் பிள்ளைகளே, நீங்கள் எப்பொழுதும் இந்த நல்ல பெயரைக்காத்துக்கொள்ளவேண்டும். உங்கள் அபிநயங்களினால் நீங்கள் நல்லபிள்ளைகள் என்றே நானும் ஒப்புக்கொள்ளுகிறேன். ஆகையால்தான் உங்கள் அம்மாளவர்கள் உங்களுக்கு இனம் அளித்திருக்கிறார்கள். இதைப் பார்க்கிலும் மேலான இனம் கொடுக்கிற ஒருவர் இருக்கிறார். நீங்கள் எக்காலத்திலும் நல்லவர்களாயிருப்பீர்களானால் உங்களுக்கு என்றும் அழியாத விலையேறப்பெற்ற கிரீடமாகிய இனம் உங்களுக்குக் கிடைக்கும் என்று சொல்லி "தன்"லை அக்கிராசனம் வகிக்கச் செய்தவர்களுக்கு நன்றிகூறி உட்கார்ந்தார்கள். அங்கு வந்திருந்த சப்ரிஜிஸ்டார் மகா-ா-ா-ஸ்ரீ சுந்தரமய்யரவர்கள் எழுந்திருந்து கனம் ஹிம்மல்ஸ்டாண்டு அம்மாளவர்கள் இந்நாட்டில் தேவமார் பெண்களுக்கென்று உழைத்துவருகிற காருண்யத்தைக் குறித்து ஆச்சரியத்தோடும் நன்றியோடும் புகழ்ந்தார். அதன்பிறகு சங். எஸ். ஞானமாணிக்கம் ஐயரவர்கள் எழுந்திருந்து அக்கிராசனாதிபதி அம்மாளவர்களையும் போர்டிங்கை நடத்துகிற கனம் ஹிம்மல்ஸ்டாண்டு அம்மாளவர்களையும் கூடியிருந்த எல்லாரையும் வாழ்த்த எல்லோரும் கரகோஷம் செய்தார்கள், ராஜவாழ்த்துடன் வெற்றிலை பறிமாறப்பட்டு கூட்டமும் கலைந்தது.

C.S.M. Usilampatti. } S. R. Doss.

---

## பெற்றோர் கடமை.

"ஈன்றபொழுதிற் பெரிதுவக்குந்தன் மகனைச்
சான்றோன் எனக்கேட்டதாய்"—

(திருக்குறள்)

தாயானவள் பிள்ளைக்குச் செய்யவேண்டிய கடமையானது மற்ற எல்லாக்கடமைகளிலும் சிறந்ததாகவே இருத்தலின் அதுபற்றிச் சிறிது ஆராய்வோம். மனைவி கணவனுக்குச் செய்யுங்கடமையிலும் மக்கள் பெற்றோருக்குச் செய்யுங்கடமையிலும் உடன்பிறந்தார் உடன்பிறந்தார்க்குச் செய்யுங்கடமையிலும் நண்பர் நண்பருக்குச் செய்யுங்கடமையிலும் குடிகள் அரசருக்குச் செய்யுங்கடமையிலும் அரசர் குடிகளுக்குச் செய்யுங் கடமையிலும் தாயானவள் தன்பிள்ளைக்குச் செய்யுங்கடமையே மேலானதாய் விளங்குகின்றது. ஏனென்றால் மனைவியாயும் கணவனாயும் உடன்பிறந்தாராயும் நண்பராயும் குடிகளாயும் அரசராயும் உள்ள எல்லாரும் முடிவாகத் தாயின் வயிற்றிற் பிறப்பவர்களே. ஆகையால் அவர்களெல்லோரும் தாயின் உதவியினாலேயே மேலான நிலைமைக்கு வரவேண்டியவர்களாயிருக்கின்றார்கள். குழந்தையாயிருந்த காலந்தொட்டே தாயானவள் தன் மகனை எந்த வகையில் வளர்த்து வருகின்றாளோ அதற்கேற்றபடி அவர்கள் நல்லவராகவாவது தீயவராகவாவது நடக்கின்றார்கள். தாயானவள் நல்லறிவும், நல்லியல்பும் நல்ல செய்கையும் உடையவளாயிருத்தலோடு தன் மக்களும தன்னைப்போலவே ஆகவேண்டுமென்னும் அக்கறையோடு அவர்களை வளர்த்துவருவாளாயின் அவர்கள் நல்லவராகவே விளங்குவார். இவ்வாறின்றித் தாயானவள் தீயவளாயிருப்பாளாயின் அவளால் வளர்க்கப்பட்ட பிள்ளைகள் தீயவர்களாய் விடுவார்களென்பதை நாம் சொல்லவும் வேண்டுமோ? கொழுமையான நல்ல நிலத்தில் முளைத்த பயிரையும் சாரமற்ற உவர் நிலத்தில் தோன்றிய பூண்டுகளையும் ஒப்பிட்டுப் பாருங்கள். நல்ல நிலத்தில் முளைத்த பயிர் எவ்வளவு மிகுதியாய்ப் பயன்படுகின்றன. உவர் நிலத்தில் தோன்றிய புற்பூண்டுகளோ வற்றி வறண்டு விலங்கினங்களுக்கும பயன்படாமற்போகிறது. இதுபோல நல்ல தாயினிடத்திலும் தீய தாயினிடத்திலும்தோன்றிய பிள்ளைகளும் இருப்பார்களென்று நாம் அறிந்துகொள்ளல்வேண்டும்.

1. "தொட்டிற் பழக்கம் சுடுகாடுமட்டும்" என்னும் பழமொழிப்படி நாம சிறு பிள்ளைகளாயிருந்தபோது நம்மிடத்திலுண்டான பழக்கம நம்மறிவில் வேரூன்றிவிடுவதால் அது நாம் வளரும்தோறும் கூடவே வளர்ந்து நன்மையையாவது தீமையையாவது தருகின்றது. ஆதலால் பெரியவர்களான பிறகும் எல்லார்க்கும் நல்லவர்களாய் பயன்பட்டு வாழ்வதற்கு நாம் சிறுபொழுதில் கைக்கொண்ட பழக்கமே முதன்மையானதாயிருக்கின்றது. இனிச்சிறுவயதில் நமக்கு வரும்பழக்கம் எங்கேயிருந்து வருகின்றதென்பதைச் சிறிது நினைத்துப்பாருங்கள், நாம் குழந்தையாயிருந்த காலத்தில் நம்மைப்பெற்ற தந்தையோடு நெருங்கிப் பழகினோமா? சிறிதும இல்லையே. ஏனெனில் நம் தந்தையோ நம்மையும் அன்னையையும் நம்மைச்சேர்ந்தவர்களையும் பாதுகாக்கும் பொருட்டுப் பகற்பொழுதெல்லாம் வெளியேசென்று உழைத்துவிட்டிரவு வந்தால் அலுத்து இளைப்பாறப்போகின்றனர். நம்முடன் பிறந்தவரோ சிறியவராயிருந்தால் நமக்கு எதும் தெரிவிக்கமாட்டாதவராயிருத்தலின் அவரால் நாம் அடையும் பயனும் ஒன்றுமில்லை. அவர் பெரியவராயிருந்தாலோ கல்வி கற்கவும், கணவனோடு வாழவும் வெளியே போய்விடுகின்றனர். ஆதலால் அவராலும் நாம் அடைவதொன்றுமில்லை. இனிச்சுற்றத்தாரும் இடைக்கிடையே நம்வீட்டுக்குவந்து போகிறவர்களேயல்லாமல் நிலையாக இருந்து நம்மோடு நெருங்கிப் பழகுகின்றவர்களல்லாமையால் அவர்களாலும் நாம் பெறுவது ஒன்றுமில்லை. இவர்களெல்லாம் இங்ஙனமிருக்க பின்னை யார்தாம் நம் சிறுபொழுதில் நம்மோடு உடன்பழகுவோரென்று ஆராய்ந்து பார்த்தால் அவர் நம் தாய்மாரே ஆவாரென்று உணரப்பெறுகின்றோம்.

நாம் எதும் அறியாச் சிறு குழவியாய் இருந்தபோது நம்மைச் சீராட்டிப்பாராட்டி வளர்த்தவள் நம் அன்னையே அன்றோ? நாம் பசியால் வருந்தி வாய் திறந்து அழுதபோது நம் அருகே ஓடிவந்து நம்மை எடுத்து முத்தம் வைத்து உள்ளங் களித்து பாலூட்டி வளர்த்தது அன்னையேயன்றி வேறு பிறர் உண்டா? நாம சிறிதுசிறிதாய் வளர்ந்து வரும்போது நமக்குவேண்டிய பால், சோறு முதலியவைகளை நமக்குச் சுட்டிக்காட்டி அவற்றின் பெயர்களை நமக்குக் கற்றுக் கொடுத்துவந்த முதல் ஆசிரியரும் நம் அருமைத் தாயேயன்றோ? இடைக்கிடையே நாம் நோயால் வருந்திக்கிடந்த காலமெல்லாம் அதற்குத் தானும் உடன்வருந்தி இரவென்றும் பகலென்றும் பாராமல் கம்மருகிருந்து நம் நோய் தீரும்பொருட்டு வேண்

டும் உதவிகளையெல்லாம் கைமாறு கருதாது செய்துவந்த நம் அருட்களஞ்சியம் போல் வாழும் நம் அன்னையேயன்றோ? இவ்வளவுமெல்லாம் நம் உயிரோடும் நம் உடம்போடும் நம் நினைவோடும் நம் சொல்லோடும் நம் செயலோடும் உடன்கலந்து உடன்பழகி வரும் தெய்வம்போல வாழும் நம் அன்னையர்களே இருத்தலின் அவர்களாலேதாம் நாம் சீர்திருந்தவேண்டியவர்களாக இருக்கின்றோம். இவ்வாறு நம்மை முழுதும் சீர்திருத்தவேண்டிய நிலைமையிலுள்ள நம் அன்னையானவள் தன் மக்களுக்குச் செய்யவேண்டிய கடமைகளை முற்றும் அறிந்தவர்களாக இருக்கவேண்டுமன்றோ? அறிவில்லாத தாய் தன் மக்களை எப்படி அறிவுடையராக்குதல்கூடும்? விளக்கில்லாத இடத்தில் வெளிச்சம் உண்டாகுமா? பூவில்லாத இடத்தில் மணம் உண்டாகுமா? ஆதலால் தாயானவள் மிகுந்த அறிவுடையவளாய் இருக்கவேண்டியது இன்றியமையாததாம். இனித் தாய்மார்கள் எப்படித்தான் அறிவுடையராகக்கூடுமென்று எண்ணிப்பார்ப்போமாயின் கற்றோர் சொல்லும் அரியபொருள்களை அமைந்துகேட்பதனாலும் அவர் எழுதிய நூல்களை இடைவிடாது கற்றனாலுமே அறிவுடையவராகக்கூடுமென்பது தெளிவாக விளங்கும். கல்வியறிவிலும் உயர்ந்த எண்ணங்களிலும் எந்நேரமும் பழகின ஒருதாய்க்கு நல்ல பிள்ளைகளே பிறக்கக்கூடுமல்லாமல் தீயபிள்ளைகள் பிறப்பதற்குச் சிறிதும் இடமேயில்லை. நாம் எவ்வகையான நிலையில் ஓயாமல் பழகிவருகின்றோமோ அதற்குத்தக்கபடி நமமுடைய முகத்திலும் செய்கையிலும் பலவகையான அடையாளங்கள் காணப்படுகின்றன. கெடுவெப்பாகப் பேசும் ஒருவர் முகத்தையும், மிக அமைதியாகப் பேசும் மற்றொருவர் முகத்தையும் பாருங்கள். சீற்றமுள்ளவர் முகம் பார்ப்பவர்க்கு எவ்வளவு அச்சத்தைத் தருகின்றது. அமைதியுள்ளவர் முகமோ எவ்வளவு கிளர்ச்சியைத் தருகின்றது. உயர்ந்த அறிவுடையவர் செய்கை எல்லார்க்கும் இன்பத்தைத்தருதலும், அறிவில்லாதவர் செய்கை துன்பத்தைத்தருதலும் நாம் வழக்கமாக அறிந்திருக்கின்றனமே. தாய்மார்களே இப்படியாக நாம் அறிவிக்கும் நினைவுக்கும் ஏற்றபடி நம உடம்பும் செய்கையும் மாறுபடுவதைக் காணுங்கள். நாம் எவ்வளவு அமைதியும் அறிவும் உடையவர்களாக இருக்கவேண்டுமென்பது உங்களுக்கு விளங்காமற்போகாது. நாம அழகுடையவர்களாய் இருக்கவேண்டுமென்றும் அழகு பிள்ளைகளைப்பெறவேண்டுமென்றும அவாவிற்க ஆசையுடையவர்களாயிருக்கின்றோம். ஆனால் அப்படியே பெறுவதற்கு முன்னதாகச் செய்யவேண்டிய ஏற்பாடுகளைச் செய்துவருகின்றோமா? சிறிதும் இல்லையே. பசியெடுத்தபோது நல்ல உணவுவேண்டுமென்று விரும்புகின்றவர்கள் பசியெடுக்குமுன்னமே அவ்வுணவைச் சமைத்துத் தேடிக்கொள்ளவேண்டுமன்றோ? பழம் வேண்டுமாற் பயிர்செய்து பிழைக்கவேண்டியவர்கள் மழைவருவதற்கு முந்தியே நிலத்திற் திருத்தி பதப்படுத்தவேண்டாமா? அழகான அறிவும் அழகான தன்மையும் இல்லாதவர்க்கு அழகு எங்கிருந்து வந்துவிடும்? நல்லவரல்லாதவரும் அழகுடையோராய்க் காண்கின்றோமோ என்றால் அவர்க்குள்ள வெளியழகு முதலில் பார்ப்போர்க்கு சிறிது கவர்ச்சியை உண்டுபண்ணுமேனும் பிறகு அவரோடு கலந்து பழகுவார்க்கு அவரிடத்திலுள்ள தீயதன்மை அருவருப்பை விளைவிக்குமாதலால் அது சிறிதும் அழகாகமாட்டாது. எட்டிப் பழம் பார்ப்பதற்கு எவ்வளவு அழகாயிருந்தாலும் அதனைச் சிறிது நாவிலிட்டால் அஃது எவ்வளவு அருவருப்பைத் தருகின்றது. இதனைக்கொண்டு பார்ப்பதற்கும் பழகுவதற்கும் இனிய அறிவும இயற்கையுமுடையவர்களே உண்மையான அழகுடையவர்களென்று அறிந்துகொள்ளுங்கள்.

நம் பெண்பாலரில் எத்தனையோ பெயர் அருவருக்கத்தக்க அறியாமையும் தீயதன்மையும் தீய செயலையும் உடையவராயிருந்தும் இவற்றைத் திருத்திக்கொள்ளச் சிறிதேனும் முயற்சிசெய்யாமல் உயர்ந்த ஆடை அணிகலன்கள அணிவதில்மட்டும் மிகுந்த கருத்துடையவராயிருக்கின்றார்கள். இதனால் நமமவர்க்கு ஆடை அணிகலன்கள் முற்றிலும வேண்டாமென்று யான் கூற முன்வரவில்லை. அவரவர் நிலைமைக்கும் தகுதிக்கும் பொருத்தமானபடி ஆடை அணிகலன்கள் வேண்டுமென்பதையான மறக்கவில்லை. என்றாலும் வெளியேயுள்ள உடம்பை அழகு செய்வது இரண்டாந்தரமாகவும் உள்ளேயுள்ள நம் அறிவையும் நினைவையும் அழகு செய்வது முதற்றரமாகவும் நாம் கைக்கொள்ளவேண்டும். ஒரு வீட்டின் முன்வாயிலைக் கூட்டி மெழுகிக்கோலம்போட்டு பூச்சாற்றி விளக்கிட்டு அழகுபடுத்துவதுபோலவே அவ்வீட்டின் உள்ளேயும் அங்ஙனமே துப்புரவுசெய்து வைக்கவேண்டாமா? முன்வாயில்மட்டும் அழகாயிருக்கும்படி ஒப்பனைசெய்து வைத்துவிட்டு உள்ளேசென்று பார்த்தால் குப்பையும் கூளமும் முடைநாற்றமும் இருளுமலிந்து கிடக்கவிட்டிருப்பது எவ்வளவு அருவருப்பை உண்டாக்குவதாகும். இதுபோலவே நாம் நமதுடம்பை எவ்வளவுதான் ஒப்பனைசெய்து அழகுபடுத்தினாலும நமது உளத்தையும அங்ஙனமே அறிவினாலும் நல்நினைவாலும் விளங்கச்செய்யாவிட்டால் அதுசிறிதாயினும் பயன்படமாட்டாது. நாம் பெறும் பிள்ளைகளும் உயர்ந்தவராகமாட்டார்கள்.

ஆ. சி. க.

---

## சுத்தம்

சுகத்துக்கு முக்கிய ஆதாரமானது சுத்தமே. சரீரசுத்தம்:—

நமது சரீரத்திலிருந்து மலம், ஜலம், வியர்வை இவைகள் வெளியாகிக்கொண்டிருக்கிறது. இவ்வழுக்குகளைப் போக்க மனுஷன் சரீரத்தை அனுதினமும் கழுவி சுத்தம் செய்யவேண்டும். இப்படி சுத்தம் செய்வதால் சரீரத்தின் அவயவங்கள் தூர்வை கழிப்பதில அதிக சுறுசுறுப்பாயிருக்கும்.

நமது உடைகள் வியர்வையாலும் வெளியின் அழுக்குகளாலும் அனுதினமும் கறைபட்டுக்கொண்டு வருகிறது. அவ்வுடைகளைச் சதா அணிவதால் சரீர சுகத்துக்குக் கேடு உண்டாகும. ஆகவே அழுக்கு நீங்க வியாலைபோக சலவைசெய்த துணிகளை நாம் அணியவேண்டும். இப்படிச் சுத்த வஸ்திரங்களை அணிவது சரீர ஆரோக்கியத்திற்கு அனுகூலமானது.

நாம் உட்கொள்ளும் ஆகாயம் சுத்தமானதாக இருக்கவேண்டும. சதுப்பு, நாற்றம், புகை, தூசி இவைகள் நிறைந்த ஆகாயத்தை உட்கொள்வதினால் விஷசுரம், காசம், இருமல், ஜலதோஷம் இவைபோன்ற வியாதிகளுக்கு மனுஷன் உட்படுகிறான். சுத்த ஆகாயம வீசத்தக்கதான இடத்தில் ஜன்னல்கள் அமைந்தவீடுகள் தயாரிக்கவேண்டும். அப்படி வசதியான வீடுகள் அமைக்கச் சக்தியில்லாதிருந்தால் அவைபோன்ற ஏதுக்கள் செய்யவேண்டும். பெலமான சுவாசம் பெருகத்தக்கதான அப்பியாசங்கள் செய்யவேண்டும. இப்படிச் செய்வதினால் தரையிரலான அ முன்னிலும் அதிகமான சுத்த ஆகாயத்தை உட்கொண்டு சரீரத்திற்கு பெலனைத்தருகிறது. சுத்த ஆகாயம் இல்லாத இடங்களில் வேலை செய்வோர்களும் குடியிருப்பவர்களும் சரீரபெலங்குன்றி தங்கள் நிறத்தை இழந்து வெளிறிக்காணப்பட்டு நோய்க் கிரையாகிறார்கள்.

தண்ணீர்.—நம்தேசம் உஷ்ணபூமியானதால் கிணறு குளங்களிலுள்ள தண்ணீர் உஷ்ணகாலங்களில சீக்கிரத்தில் வெதும்பிப்போகிறது. இப்படி வெதும்பலான தண்ணீரில விஷக்கிருமிகள் அதாவது விஷபேதி உண்டாகும்கிருமி, காமாலைநோய் உண்டாகும் கிருமி, வயிற்றுக்கடுப்பு உண்டாகும் கிருமி இன்னும் பற்பல வியாதிகளை உண்டாக்கும் கிருமிகள் பலுகுகிறது. இப்படிப்பட்ட குளங்களின் நீரைப்பருகிற மனுஷன் மேற்சொன்ன வியாதிகளுக்கு இரையாகிறான். சதாகாலங்களிலும தண்ணீரை நன்றாய்க் காய்ச்சினாலும போதும். தண்ணீரை நன்றாய் கொதிக்கவைத்து தண்ணீரை ஆறவைத்துப் பருகவேண்டும். தண்ணீரைக் காய்ச்சுவதனால் அதிலுள்ள விஷக்கிருமிகள் மாண்டுபோகிறது. தண்ணீரை எப்போதும் பருகச்சாத்தியப்படாது. அப்படிச் சாத்தியப்படாத காலங்களில் ஆடுமாடுகள் கழுவப்படாததும் துணிகள் தோய்க்காததும் ஜனங்கள் கை கால் அலம்பாததும் நீராடாததும் அனுதினமும் இறைவையுள்ள கிணற்றின தண்ணீரைப் பருகினால் பாதகமல்லவென்றாலும் சுத்தத்திலும சுகத்திலும் மேற்சொன்ன வொருகேடு கிலையாகா.

நாம் உண்ணும் ஆகார சமையல் பாத்திரங்களை அனுதினமும் நிலத்தில் வெயில் காயவைக்கவேண்டும. அல்லாவிட்டால் தன்னில்தானே விஷமுள்ளதாகி சமையல்களை கெடுத்துவிடுகிறது. அதனால்தான காய்கறிகள் சளித்துப்போவதும் சாதம் நீர்விட்டுப்போவது அல்லது வியர்த்துப்போவதுமாகிறது. இன்னும இனிய பதார்த்தம், மலம், அழுகி நாற்றமெடுக்கும் வஸ்துக்களை ஆடிய ஈக்களும கோழிகளும் சமையல் பாண்டங்களில் உட்கார்ந்தும் அவைகளைத் தீட்டுப்படுத்தியும் விடுகிறது. ஆகையால் அவைகளைச் சுத்தம்செய்வது மிகவும் அவசியம்.

நம் தேசத்தவர்களுக்கு அரிசியே ஆகாரமானபடியால் அதுவும் சுத்தமாயிருக்கவேண்டும். புழுங்கல் அரிசி மேலானது. பச்சரிசியை உபயோகப்படுத்தும் ஜனங்களுக்கு பெரிபெரி என்ற ஓர் வகை வியாதிவருவதாயும் புழுங்கல் அரிசி உபயோகிக்கும் ஜனங்களுக்கு இவ்வியாதி வருகிறதில்லை என்றும் வைத்திய நிபுணர் கண்டிருக்கிறார்கள். பச்சரிசியில் மனிதனுக்குப் பெலனைக்கொடுக்கக்கூடிய ஒருவித தவிட்டுச் சத்து நாள்படக் குறைந்துபோகிறதென்றும் அப்படிக்குறைவதால் அரிசியின்ருசி காரிப்போவதுமன்னியில் புழுக்கூடிகட்டி உபயோகமற்றுப்போகிறது. நெல்லைப் புழுங்கல் செய்வதால் நெல்லின் சத்துப்பூராவும் அந்த அரிசியிலே இருந்துவிடுவதாகவும் அந்த அரிசி வெகுநாள்பட எளிதில் புழுக்கூடிப்போகாமலும் இருக்கும். நாம் சமையலுக்குத் தெரிந்தெடுக்கவேண்டிய புழுங்கல் அரிசி மங்கிய பளிங்கு நிறமுள்ளதாகவும் [illegible] காய்ச்சல் ஏறியதாயும துர்மணமில்லாததாயுமிருக்கவேண்டும. செலலரி[illegible]யன்னியில் சரீரத்துக்கு ஒத்துக்கொள்ளக்கூடிய பல காய்கறிகளையும் பயிர் பச்சைகளையும் ஒழுங்குப்படி சமைத்து மிதமாய்ச் சேர்த்து வருவதால் சரீரபெலமடையும். காய், கனி, கீரைமுதலியவையும் நமக்கு ஆகாரமானபடியால் அவைகளும் சுத்தமாயிருக்கவேண்டும். வாடினதும் அழுகினதும் காள்பட்டதும் காய்ந்துபோனதுமான சகல பதார்த்தங்களையும் புதைத்துவிடவேண்டும். நன்றாய் பழுத்தபழம், இளங்கீரைகள், காரில்லாதகாய், கறி, புதிதான கீரை [illegible] சரீரவளர்ச்சிக்கு மிக்க உத்தமமானது. [illegible]மின் சுத்தம் மிக்க அவசியம்.

[illegible]ல் அனுஷ்டிக்கவேண்டியவை [illegible] மாமிசம் கெட்டுப்போகாதது [illegible] வியாதியினாலாவது வயோதிபத்தினாலாவது செத்துப்போன மிருகங்களுடைய [illegible]மாமிசமாயிருக்கக்கூடாது.

ஆடு, கோழி, பறவைகள் கூடியமட்டும் இளம்பிராயத்தில் அடித்துப் புசிக்கவேண்டும். நன்றாய் உலரவைத்த மாமிசமும் சரீரத்திற்கு நல்லது, புதிதாக இட்டமுட்டை சரீரவளர்ச்சிக்கு மேலானது. மீன் [illegible]ஜந்துவுடைய மூளைக்கும், எலும்புக்கும் பெலன்தரக்கூடிய ஒருவித சத்துடையது. இவைகளை வாங்கும்போது அதிக ஜாக்கிரதையாயிருக்கவேண்டும். அதின் தலையிலிருக்கும் செதிலை தூக்கிப்பார்த்தால் அதின் நிறம் இரத்தமாயிருக்கவேண்டும். விரலால் மீனை அமுக்கிப்பார்த்தால் மெதுக்கு மெதுக்கென்றிராமல் கூடியவரையில் ஜதை கெட்டியாயிருக்கவேண்டும். அழுகிக்கெட்டுப்போன நாற்றம் அம்மீனுக்கிருக்கக்கூடாது. கூடியவரையில் உயிருள்ளதாய் வாங்கப்பிரயாசப்படவேண்டும். பெருமீனின் கருவாடுகள் சமையலுக்கும் பொரியலுக்கும் அதிக நேர்த்தியாயிருக்கும். இவைகளும் உணவுப்பொருளானபடியால் இவைகளின் சுத்தத்தை நாம் கவனிக்கவேண்டும்.

பால், தயிர், நெய் இவைகளும் மனிதனின் ஓர் வகை ஆகாரமானதால் இவைகளின் சுத்தத்தையும் நாம் கவனிக்கவேண்டும். கறவைப் பசுவைச் சுத்தமாய்க் கழுவிப் பத்திரமாய் காக்கவேண்டும். பால் கறக்கும் பாத்திரம் அதிகச்சுத்தமாய் துலக்கப்பட்டிருக்கவேண்டும். அல்லாவிட்டால் பால் பாத்திரத்திலேயே முறிந்துபோகும். பால்காய்ச்சும் பானையை நன்றாய்க்கழுவி வெயிலில் உலர்த்தவேண்டும். நெய்யை உபயோகப்படுத்துவதற்குமுன் நன்றாய் காய்ச்சி உபயோகப்படுத்தவேண்டும். அல்லாவிட்டால் அதிலும் சுகத்தைக்கெடுக்கக்கூடிய விஷம் உண்டாகிறது. அதற்குத்தான் நெய் உலைகாறுகிறது அல்லது உலைநெய் என்பார்கள். மேற்சொன்ன சுத்த விஷயங்களை அனுஷ்டித்தால் சரீரத்திற்கு ஆரோக்கியம் தருமென்பதற்கையமில்லை. சரீரத்திற்குமேலான ஆத்துமா அல்லது இருதயம் நம் சரீரத்திலுண்டு. இருதய சுத்தத் [illegible] என்பது கடவுள் வாக்கு. இருதயத்தில் மாசில்லாதவன் கடவுளுடைய பரிசுத்த ஸ்தலத்தில் நிலைத்திருப்பான் என்பது ஓர் சங்கீத ஞானி கூறுகிறார். இருதய சுத்தத்திற்கு ஆதாரம் அன்பும் சத்தியமுமாம். ஆகையால நம் சரீர வளர்ச்சிக்கு அன்பும் சத்தியமும் உள்ளவர்களாய் நடக்க கடவுள் கிருபை செய்வாராக.

I. நாகத்தேவன் உபாத்தியாயர்,
வெள்ளையபட்டி.

(கவண்டம்பட்டி உபாத்தியாயர் சங்கத்தில் வாசித்த ஓர் வியாசம்.)

---



## ஒரு கிராம ஐக்கிய சங்கம் அதன் மெம்பர்களுக்கு செய்யக்கூடியவைகள்.

பொறுப்பு வரையறுக்கப்படாத ஒரு ஐக்கிய விவசாய சங்கத்தைப்பற்றி ஜனங்களின் சாதாரண அபிப்பிராயம் என்னவென்றால், அது அவர்களின் தேவைக்குத் தகுந்தபடி, வேண்டிய பணத்தை சுமாரான வட்டிக்குக் கொடுத்து உதவி செய்கிறது என்பதுதான். ஒரு சங்கத்தின் மெம்பர்கள் அநேகமாய் எல்லோரும் விவசாயிகளே. அவர்களுக்குத் தேவையாயிருக்கும் விஷயங்கள் அநேகம். பருவத்தில் மழை பெய்து புது வருஷ சாகுபடி ஆரம்பிக்கும்பொழுது, நிலங்களை உழும்பொருட்டு தனக்கு வேண்டிய எருதுகளை வாங்கவேண்டியிருக்கிறது. எருதுகள் வாங்கவேண்டுமென்றால் பணம் தேவை. இதன் பிறகு, கிருஷித்தொழில் நடத்தும் பொழுது ஒவ்வொரு காலத்திலும் அதாவது, எருவிடல், விதைப்பு (நடவு) களைபறி முதலிய பல வேலைகளுக்கும் பணம் தேவையாயிருக்கிறது. தான்யம் பூமியினின்று அறுவடையாவதற்கு முன்னேயே ஸர்க்கார் கிஸ்தியும் கட்டவேண்டியிருப்பதால் இதற்காகவும் பணம் தேடவேண்டியிருக்கிறது. இது தவிர வீட்டில் கல்லியாணம் சடங்குகள் செய்யும்படி நேரிடுகிறது. குடியானவன் மிகவும் ஏழையாயிருந்தபோதிலும், பழக்கவழக்கப் பிரகாரமும் தன் அந்தஸ்துக்குத் தகுந்தபடியும் இவைகளை நடத்தவேண்டியிருப்பதால் இதற்கும் பணம் தேவையாயிருக்கிறது. விவசாயி எப்பொழுதும் அநேகமாய் கடன்பட்டவனாகவேயிருப்பதனால் முதலாளிகள் நெருக்கடியாக கேட்கும்பொழுது, அவர்கள் கடனையும் தீர்க்கவேண்டியிருக்கிறது.

ஐக்கிய நாணய சங்கங்கள் ஏற்படுவதற்கு முன் கிருஷித்தொழில் செய்யும் கிராமவாசி, தனக்கு பணம் வேண்டும்போதெல்லாம் கிராம சாவகாரியினிடம் போய், தன் ஆஸ்தி பொறுப்புக்குத் தகுந்தபடிக்கும், நாணயத்துக்குத் தகுந்தபடிக்கும், கடன் பெற்றுக்கொண்டு வந்தான். ஆனால், சாவகாரியின் நிபந்தனைகள் மிகவும் கடுமையாகவும், பணத்தைத் திருப்பிச் செலுத்த ஏற்படுத்திய வசதிகள் அனுகூலமில்லாமலும், வட்டியும் மிகவும் அதிகமாக இருந்தன. ஆகையால் குடியானவன் தன் வருமானத்தைக்கொண்டு கடனைத் தீர்க்கவே முடியவில்லை. இதனால் அவன் நாணயமும் கெட்டு குறைந்துபோய் விவசாயமும் கஷ்டப்படுகிறது.

இத்தீங்குகளையெல்லாம் நிவர்த்தி செய்யக்கூடியது ஒரு விவசாய ஐக்கிய சங்கம்தான். இதன் பஞ்சாயத்து மெம்பர்கள் ஒருவித ஊக்கத்துடனும், கூட்டுறவு உள்நோக்கப்படிக்கும் இதன் நிர்வாகத்தை நடத்துவார்களானால் விவசாயிகளின் பல கஷ்டங்களும் நீங்கி விவசாயமும் முன்னேற்றத்திற்கு வரும். ஒரு சங்கம் என்ன செய்யவேண்டுமென்றால் அதன் மெம்பருக்கு பணம் வேண்டும்போதெல்லாம் வேண்டியகாலத்தில் பணம் கொடுத்து உதவவேண்டும். பஞ்சாயத்து மெம்பர்கள் வருஷ முதலிலேயே, ஒவ்வொரு மெம்பருக்கும் கடன் கொடுக்கக்கூடிய அளவை விதித்து வைத்துக்கொள்ளவேண்டும். இந்த அளவிற்கு மேற்படாமல் சாகுபடியின் பல பருவத்திலும் சிறு சிறு கடன்கள் கொடுக்கவேண்டும். இவ்விதம் செய்வதற்கு பணம் கையிருப்பு இருக்கவேண்டும். ஆனால், கடன் எடுத்துக்கொள்கிறவர்களின் ஆஸ்தியைப்பற்றியும் நாணயத்தைப் பற்றியும் விசாரித்து தெரிந்துகொள்ளுமுன் ஒரு முதலாளியும் கடன் கொடுக்கமாட்டான். இவ்விதம் விசாரித்து தெரிந்துகொள்வதற்கு காலதாமதம் ஆகும். ஆகையால் சங்கம் என்ன செய்ய வேண்டுமென்றால் சாகுபடி காலத்தின் ஒவ்வொரு மாதத்திலும் ஒவ்வொரு மெம்பருக்கும் இவ்வளவு பணம் தேவை என்பதை முன்னமேயே

கேட்டு தெரிந்துகொண்டு, ஒரு மாதத்தில் எல்லா மெம்பர்களுக்கும் வேண்டிய தொகையை சேர்த்துக்கூட்டி, அதை பணம் கொடுக்கும் பாங்கிக்கோ அல்லது வேறு இடத்திற்கோ தக்க காலத்தில் பணம் வந்து சேர்ந்து விவசாயிகளுக்கு உதவும்படியாக, சரியான துவாராவாக மனுசெய்துகொள்ளவேண்டும். சாகுபடி கால ஆரம்பத்திலேயே இம்மாதிரியாக மனுக்கள் போட்டுக்கொள்ள வேண்டும். ஆகையால் பஞ்சாயத்தார்கள் சீக்கிரமாகக்கூடி சரியான காலத்திற்குள் மேற்சொன்ன விசாரணைகளை நடத்தவேண்டும்.

இவ்விதம் மொத்த விவசாய மெம்பர்களின் தேவையெல்லாம் தெரிந்துகொள்ளும் பொழுதும், அதன் நிமித்தம், கடன்கொடுக்கும் பாங்குடன் தக்க காலத்தில் பணம் கைக்குவந்து சேரும்படி ஏற்பாடு செய்யும் பொழுதும், ஒவ்வொரு மெம்பருக்கும் இன்னகாலத்தில் ஒருவித தினுசு விதையோ அல்லது ஒருவித எருவோ வாங்கவேண்டுமென்பது தெரியவரும். ஒவ்வொரு மெம்பருக்கும் வேண்டியதைக் கேட்டு அறியும் பொழுது ஒரே தினுசு விதையோ அல்லது ஒரே மாதிரியான எருவோ மெம்பர்களுக்குத் தேவை என்று ஏற்பட்டால், அவ்வளவையும் விசாரித்துத் தெரிந்துகொண்டு அதை ஒரு மொத்தமாக ஒரு வியாபாரியினிடமிருந்து வாங்கிக்கொள் [illegible] ஓரிடத்திலுள்ள அநேகசங்கங்களுக்கு இவ்விதம் தேவை என்று தெரிந்தால் எல்லா சொசைடிகளுக்கும் வேண்டிய மொத்த சாமான்களின் அளவை தெரிந்துகொண்டு அவைகளை மொத்தமாய் மொத்த வியாபாரியினிடம் வாங்கி, மெம்பர்களுக்கு மிக்க லாபத்துடன் பட்வாடா செய்யலாம். இப்படியில்லாமல் ஒவ்வொரு சம்சாரியும் தனக்கு வேண்டியதை தானே வாங்குவானானால், அவன் அதை மொத்த வியாபாரினியிடம் வாங்க முடியாது. விலையும் அதிகம்கொடுக்கவேண்டியதுமல்லாமல், சரக்கும் சரியானதாய் கிடைப்பதில்லை. ஐக்கிய சங்கத்திலிருந்து, சாமான் வட்டிக்கு கடன் வாங்கியிருந்தபோதிலும், இப்படி செய்வதினால், அவனுக்கு யாதொரு கூடுதலும் இல்லாமல் போய்விடுகிறது. எந்த காரியத்திற்கு முக்கியமாய் ரொக்கம் தேவையோ, அதைத் தவிர, மற்ற எல்லா விஷயங்களுக்கும், சங்கம், தன் மெம்பர்களுக்கெல்லாம, வேண்டியதை சரக்காகக் கொடுப்பதற்கே ஏற்பாடு செய்யவேண்டும். எல்லாவிதமான விவசாயக் கருவிகளையும் மொத்தத்தில் விலை சரசமாக மெமபர்களுக்குக் கொடுக்கவேண்டும். வீட்டுக்கு வேண்டிய சாமான்களையும் தக்க காலத்தில் வாங்கி, பணமாயில்லாமல் சாமானாகவே மெம்பர்களுக்குக் கொடுக்கலாம்.

ஒரு கிராமசங்கம் விவசாயிகளுக்கு பல வேறு காரியங்களில் அநேக விதமாக உதவி செய்யக்கூடும். ஆனால் இவைகளை சரிவர நடத்துவதற்கு தயாளகுணமுள்ளவும், யோக்கியமானவும், சுயநலம் பாராட்டாததுமான ஒரு பஞ்சாயத்து முக்கிய அவசியம்.

எ. ராமானுஜாசாரியார்.

## ஐக்கிய முறையின் முதன்மையான பத்து கோட்பாடுகள்.

(48ம் பக்கத்தொடர்ச்சி)

VIII. விவசாயத்திற்கும் குடும்பத்திற்கும் அவசியமான சாமான்களை ஒவ்வொரு மெம்-ரும் சில்லரையாக வாங்குவதைவிட பத்து மெம்பர்களாகச் [illegible] மொத்தமாகத் தருவித்தால் சாமான்கள் சாசமாகக் கிடைக்கும். ஆகையால் நமக்குத் தேவையானவைகளை எப்பொழுதும் கூட்டாக வாங்கிப்பிரித்துக்கொள்ள முயலவேண்டும். நமது விளை பொருள்களையும் மொத்தமாகச் சேர்த்து விற்பதில் லாபமுண்டு.

IX. ஒவ்வொரு மெம்பரும் மற்ற மெம்பர்களின் நடத்தையைக் கவனித்து வருவது எப்படி உசிதமோ அதுபோலவே யூனியனும் அணைக்கப்பட்ட சங்கங்களின் நடவடிக்கைகளைக் கவனித்துவருவது அவசியம்.

X. நமது சங்கங்களும் ஜில்லா பாங்கியின் பங்கு மூலதிரவிய அபிவிருத்தியின் பொருட்டு பங்குகள் எடுத்துக்கொண்டிருப்பதால் அதன் லாபநஷ்டத்திற்கு நமது சங்கங்களும் பாத்தியப்பட்டதாகின்றன. ஜில்லா பாங்கி வலிவடைந்தால் நமது சங்கங்களும் பலமடைகின்றதாகும். ஆகவே சங்கங்கள் ஜில்லா பாங்கிக்கு நன்மையான விஷயங்களைச் செய்தால் அது நமது சங்கங்களுக்கு பதில் நன்மை தரத்தக்கதாகும்.

### பஞ்சாங்கம்.

1926ளு—நவம்பர்மீ

● அமாவாசை ○ பௌர்ணமி *கிருத்திகை

| வாரம் | தேதி | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஞாயிறு | ... | 7 | 14 | 21 | 28 | ... |
| திங்கள் | 1 | 8 | 15 | 22 | 29 | ... |
| செவ் | 2 | 9 | 16 | 23 | 30 | ... |
| புதன் | 3 | 10 | 17 | 24 | ... | ... |
| வியா | 4 | 11 | 18 | 25 | ... | ... |
| வெள் | ●5 | 12 | ○19 | 26 | ... | ... |
| சனி | 6 | 13 | *20 | 27 | ... | ... |

| வாரம் | அக்ஷய-ளு ஐப்பசி 16உ—கார்த்திகை 15உ | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஞாயிறு | ... | ௨௨ | ௨௯ | ௬ | 13 | ... |
| திங்கள் | 16 | 23 | 30 | 7 | 14 | ... |
| செவ் | 17 | 24 | 1 | 8 | 15 | ... |
| புதன் | 18 | 25 | 2 | 9 | ... | ... |
| வியா | 19 | 26 | 3 | 10 | ... | ... |
| வெள்ளி | ●20 | 27 | ○4 | 11 | ... | ... |
| சனி | 21 | 28 | *5 | 12 | ... | ... |

*Patron.*—M.R.Ry. Rao Bahadur,
A. J. Vethanayaga Thevar Avl.,
Usilampatti.

*Editor.*—Rev George J. Athishtam,
Usilampatti.

*Manager.*—Rev. R. A. Dudley,
Tirumangalam.

Subscription—Single copy 14 annas a year (including charges for delivery) payable in advance.

All orders to be sent to the *Manager*.

Articles for insertion should be sent, not later than 15th of each month to the *Editor*.

சம்ரக்ஷகர்.—மகா-ா-ா-ஸ்ரீ ராவ் பகதூர் வேதநாயகத் தேவரவர்கள், உசிலம்பட்டி.

பத்திராதிபர்.—கனம் ஜார்ஜ் அதிஷ்டம் ஐயரவர்கள், உசிலம்பட்டி.

மானேஜர்.—கனம் ஆர். எ. டட்லி துரையவர்கள், திருமங்கலம்.

வருஷ சந்தா தபாற்கூலி உட்பட அணா 14. ஒரு வருஷ கையொப்பம் முன்னதாகவே அனுப்பவேண்டும்.

பத்திரிகை வேண்டுவோர் மானேஜரவர்களுக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

சமாச்சாரக்குறிப்பு முதலியவை அனுப்ப விரும்புவோர் அந்த மாதம் 15-ம் தேதிக்குள் சுருக்கமாக எழுதி பத்திராதிபருக்கு அனுப்பவேண்டும்.

பசுமலை அமெரிக்கன் மிஷன் "லினுக்ஸ்" அச்சுயந்திரசாலையில் பிரசுரிக்கப்பட்டது

1419

OFFICE OF THE REGISTRAR OF BOOKS 13 DEC 1926

மாதாந்தரப்பத்திப்பு] REG. NO. M. 2146 [விலை 1 அணா 2 பை

# The Piramalai Reformer.

## பிரமலை சீர்திருத்தன்.

"வேலை செய்கிறவன் கொஞ்சமாய்ப் புசித்தாலும் அதிகமாய்ப் புசித்தாலும் அவன் நித்திரை இன்பமாயிருக்கும்; செல்வனுடைய பெருக்கோ அவனைத் தூங்கவொட்டாது."

Vol. VI.] டிசம்பர்மீ, 1926 [இலக்கம் 8

### விளம்பரம்

**கள்ளர் பள்ளிக்கூடங்களுக்கு கிறிஸ்மஸ் விடுமுறை.**

எல்லா கள்ளர் பாடசாலைகளும் கிறிஸ்மஸ் பண்டிகைக்காக 1926ளு டிசெம்பர்மீ 24ம்-உ வெள்ளிக்கிழமை முதல் 1927ளு ஜனவரிமீ 2ம்-உ ஞாயிற்றுக்கிழமை முடிய (இரண்டு தேதிகளும் உட்பட) மூடப்படும்.

1926ளு டிசம்பர்மீ 23ம் தேதி வியாழக்கிழமையும், 1927ளு ஜனவரிமீ 3ம்உ திங்கட்கிழமையும் ஒழுங்காகப் பள்ளிக்கூடங்கள் நடத்தப்படவேண்டும்.

(Sd.) K. P. Janardhan Rao,
கள்ளர் ஸ்பெஷல் சூப்பிரண்டு மதுரை,
N. Dis. C No. 753/Edu. 26,
16—11—26.

### விளம்பரம்

இதுகாறும் மதுரை இராமனாதபுரம் ஜில்லா பிரமலைத் தேவர்மார்களுக்கென்று ஏற்படுத்தி சென்ற ஐந்து வருஷ காலமாய் நடந்துவரும் கள்ளர் ஸ்பெஷல் சூப்பிரண்டு ஆபீஸானது திருமலை நாயக்கர் மாலுக்குத் தென்புறமிருந்து [illegible] ஒன்றரை மாச காலமாய் இராமனாதபுரம் ரஸ்தா 319 நிர். அண்ணாரெங்க அய்யர் பங்களாவில் அமைக்கப்பட்டிருக்கிற தென்பதை அறியவும்.

இப்படிக்கு,
கள்ளர் ஸ்பெஷல் சூப்பிரண்டு,
கள்ளர் ஸ்பெஷல் ஆபீசு, மதுரை.
15—11—1926

**சென்னை விவசாய டிபார்ட்மெண்ட்.**

**நெற்பயிரில் விழும் 'படைப்புழு'.**

இதை நெற்பயிரில் மொய்க்கும் 'புழு' எனவும் சொல்லுவார்கள். தென் இந்தியாவில் நெற்பயிருக்கு வருகிற நோய்களில் இது ஒரு பெரிய நோய். இந்த நோய்திடீரெனவும கூட்டம் கூட்டமாகவும் வயல்களில் தோன்றி, சொற்பகாலத்துக்குள் பூராகப் பயிரை அழித்துவிட்டு மறைந்துவிடுகிறது. பொதுவாக இந்த நோய் எப்பொழுது எவ்விடத்தில் தோன்றுமென்பதைப்பற்றி முன் அறிகுறி சொல்லமுடியாது. ஆனால் எங்கெங்கு இது தோன்றுகிறதோ அங்கங்கே கூட்டமாகத்தான் இவைகள் காணப்படுகின்றன. ஆகவே அப்போதைக்கப்போது வேண்டும் உபாயங்கள் தேடாவிடில் பயிரைக் காப்பாற்றுவது சுலபமான காரியமன்று.

<u>நாட்டுப் பெயர்கள்.</u>—இந்த நோய் தென் இந்தியாவில நெல விளையும் பாகங்களில் அநேக விதமான பெயர்களுடன் பல இடங்களில் வழங்கி வருகிறது. மலையாளத்தில், இது 'காக்கோட்டி' அல்லது காக்கொட்டான் எனவும், 'அந்த புழு' 'கட்டப்புழு' 'ஓலப்புழு' எனவும் கூறப்பட்டுவருகிறது. தமிழ் நாடுகளில் யோதிரப்புழு, பச்சைப்புழு, அல்லது மொட்டைப்புழு என பலவிதமாகவும், தெலுங்கு நாட்டில் 'லத்திபுருகு' எனவும் சொல்லப்பட்டுவருகிறது.

<u>இப்புழுவின் ஜீவிய சரித்திரம்.</u>—இளமையில் இப்புழு பச்சையாயும் செந்நிறம் கலந்த ஓடின வரியுடன் தோன்றி, முதிர்மையில் பூராவும் கருஞ்சிவப்பு நிறமடைகிறது. இந்தப்பிராயத்தில்தான் பெருங்கெடுதலை விளைவிக்கிறது. ஒவ்வொரு புழுவும் ஒரு அங்குலத்திலிருந்து $1\frac{1}{2}$ அங்குலம் நீளமாயும் பார்வைக்கு மெதுவாயும், முதுகிலும் பக்கங்களிலும் கருஞ்சிவப்பு நிறக்கோடுள்ள வரிகளுடனும் காணப்படும். இரவில் தான் அநேகமாய் இரைதேடும். பகலில் கட்டிகளுக்குள்ளும், தரையின் வெடிப்புகளுக்குள்ளும் வட்டமாய் சுழன்று இருந்துகொள்ளும். நன்றாய் இரைதின்றதும வரப்புகளில் அல்லது வயலில் உலர்ந்திருந்த வான தரையில் ஒன்று அல்லது இரண்டு அங்குல மண்பறித்து உள்ளேசென்று கோழிமுட்டை வடிவம்போன்ற அறை ஒன்று கட்டிக்கொண்டு 'பியூபா' என்று சொல்லப்

படும் நிலைமைக்கு மாறிவிடுகிறது. இந்த நிலைமையில் தீனிதின்கிறது கிடையாது, அசைவும் கிடையாது. இப் 'பியூபா' பத்து தினங்களில் சில மாறுபாடுகள் அடைந்து சிறகு முளைத்த பெரிய பூச்சியாக மாறுகிறது. சில தினங்களுக்கு பின்பு இதிலிருந்து வரும் பெண் பூச்சிகள் நெற்பயிரின் தாள்களிலும், புல் பூண்டுகளின்மேலும் ஏராளமான முட்டைகளையிடுகின்றன. மூன்று அல்லது ஐந்து தினங்களில் இம்முட்டைகள் வெடித்து சிறுசிறு புழுக்களாக மாறி, புல்பூண்டுகளைப் புசித்து பெரிய 'கம்பளிப்பூச்சி' ஆக மாறுகிறது. சாதாரணமாய் ஒவ்வொரு பெண்பூச்சியும் 2,000 முதல் 3,000 முட்டை வரையிடும்.

<u>நோய்வரும் காலம்.</u>—இது சென்னை ராஜதானியில் இடத்துக்குத் தக்கபடி வெவ்வேறு காலங்களில் தோன்றுகிறது. அநேகமாய் நெற்பயிர் இளம்பயிராக இருக்கும் போதுதான் இந்நோய் அணுகுகிறது. மலையாளத்தில் 'கோலி' சாகுபடி செய்யப்படுகிற கீழ்பாசானங்களில் பிப்ரவரி-மார்ச்சு மாத ஆரம்பத்தில் பெரும் நோயாகவும், ஏப்ரல் மாதம் மழையில நெற்பயிர் புழுதியில் விதைத்து காலமழையினால் சாகுபடியாகும் மற்றபாகங்களில் 'மே' அல்லது 'ஜூன்' மாதத்தில் இளம்பயிரிலும் இது பிடிக்கிறது. சில வருஷங்களில் அபூர்வமாய் செப்டம்பர், அக்டோபர், நவம்பர் மாதங்களில் நடுகையான பயிரிலும வளர்ந்த பயிரிலும் இப்புழுக்கள் தோன்றுகின்றன. இதே நோய் அக்டோபர், நவம்பர் மாதங்களில் மலைகளிலுள்ள புல், பூண்டு, கோரைகளைத்தாங்கி, மேய்ச்சல் தாழ்களை குறைத்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

<u>நோயின் தன்மை.</u>—இலேசாய வந்திருக்கும் காலத்தில், நாற்றுகளின் தோகைகள் சற்று பிடிக்கப்படும். சில வேளைகளில் மழைக்குத்தானே மாறினாலும் மாறும். மும்முரமாக இருக்குங்காலத்தில் அடித்தாள் வரை தின்றாலும் தின்றுவிடும். இத்தருணத்தில் அழுத்தி விதைக்கப்பட்ட வயல்களிலுள்ள பயிர் தாமதமாக விதைத்தால் இளம் பயிராகத்தான் இருக்கும். அவை இக்கால நோயில் தாங்கமுடியாது.

<u>பரிகாரங்கள்.</u>—முன்கூறிய பிரகாரம் இது கொடூரமான நோயாயிருப்பதுடன் திடீரெனவும் தோன்றக்கூடியது. எவ்விதமான உபாயங்களை சமுசாரிகள் செய்யத் துணிந்தாலும், அப்போதைக்கப்போது காலதாமதமின்றியிலும் செய்யவேண்டும். எவ்வளவுகாலம் தாமதப்படுகின்றதோ, அவ்வளவுக்கவ்வளவு கஷ்டந்தான். இதைப் பின் இலகுவாக சேபண்ணமுடியாது. ஆரம்பத்தில் இந்நோயைத் தடுப்பது இலகுவானதென்றும், முதிர்வையில் தடுப்பது மிகவும் கடினமான காரியமென்றும் நன்கு தெரிந்துகொள்ள வேண்டியது. இந்த நோயை தவிர்க்கும்முறைகளில் பின்கூறப்படுவன சில:—

1. <u>ஜல சௌகரீகமுள்ள இடங்களில்.</u>—பூச்சிதாங்கிய வயல்களில் தண்ணீர்நிரம்ப பாய்ச்சி புழுக்களை மிதக்கவிட்டு அப்புறப்படுத்திவிடலாம். வரப்புக்குமேல் ஓங்கி வளர்ந்திருக்கும் பயிர் உள்ள வயல்களில், ஒரு கயிற்றை ஊடே போட்டு, புழுக்களை இலையினியிலிருந்து கீழேவிழும்படி செய்யலாம். தண்ணீர் நிரம்ப பாய்ச்சின வயலில் மண்ணெண்ணெயை கொஞ்சம் தெளித்தால், அநேகமாய் புழுக்கள் செத்துப்போகும். தண்ணீர் வடியவைக்கும்போது அநேகம் அடித்துக்கொண்டுபோகப்படும்.

2. <u>ஜலசௌகரீகமில்லாத இடங்களில் தடுக்கவேண்டிய விதம்.</u>—மலையாளத்தில் இப்பூச்சிகள் அதிகமாக பிடிக்கப்பட்ட இடம் தண்ணீர் வசதி கிடையாமல் இருக்கலாம். அப்பேர்ப்பட்ட இடங்களில், தவிடு, சர்க்கரைப்பாகு விஷம் ஆகிய இவைகளை கலந்துள்ள விஷக்கணணிகள் உபயோகிக்கலாம். இவ்விஷம் உபயோகமாகயிருக்கலாம். ஆனால், அதிகமாக கையாளப்படாததினால், இதைப்பற்றி ஒன்றும் சொல்லமுடியாது.

சில இடங்களிலுள்ள வயல்களில் புழுக்கள் அதிகமாகக் காணப்பட்டபோதிலும், சிற்சில குறித்த இடங்களிற்தான் அவைகள் அதிகமாகக் காணப்படுகின்றன. அவைகளைப்பற்றி கவனிக்காயலிருந்தால், அவைகள் பயிரிலுள்ள பசுமையாயுள்ள உணவு பூராவும் தின்றபிறகு, மேலும் அதிக உணவின் நிமித்தம் கூட்டம் கூட்டமாக ஒரு புலனிலிருந்து மற்றொரு புலனுக்கு போகின்றன. இம்மாதிரியாக அவைகளால் உண்டாகிய கெடுதல மிகவும் அதிகம். இவ்விதம் கேடு விளைவிக்கப்பட்ட புலன்களை முதலிலேயே கவனித்து ஒ[illegible]லது ஒன்றரை அடி ஆழமுள்ள செங்குத்தான அகழிகள் வயல்களைச் சுற்றி தோண்டப்பெற்றால் இப்புழுக்கள் அதிகமாகப் பிடிக்கப்படாத இடங்களிலுள்ள புழுக்களோடு சலக்காமல் தவிர்க்கலாம். ஏனெனில், அவைகள் செல்லும்போது, இவ்வகழிக்குள் விழுந்து மேலே வரமுடியாமலாகிவிடும். பின்னர் அகழிகளின் கீழ்க்கிடக்கும்போது அவைகளைப்பொறுக்கி கிமை எண்ணெயில் தண்ணீருஞ் சேர்த்து அப்புழுக்களைத்துவைத்து, குழியில் போட்டு புதைத்துவிடலாம். இவ்விதம் குழி தோண்டுவதால், நாற்றங்கால்கள்போலுள்ள சிற்சில குறிப்பிட்ட இடங்களில் இப்புழுக்கள் வாராதபடி தடுக்கலாம்.

சௌகரீகப்பட்ட இடங்களில், அவ்விதம் குழிக்குள்ளகப்பட்டபுழுக்களை வாரிபலால் பெருக்கப்பட்டு துலைக்கப்படவேண்டும்.

3. <u>புழு உள்ளடங்கிய கூட்டை (பியூபா) யழிக்கும் விதம்.</u>—இப்புழுக்கள வயிறுற தின்றபிறகு, சாதாரணமாக புலன்களின் வரப்புகளில் ப்யூபாவாக மாறுகிறது. இவ்வரப்புகளை இரண்டு அல்லது மூன்று ஆழம்வரை தேய்த்துவிட்டால், சூரியகிரணத்தால் அடிபட்டு துலைந்துவிடும். இவ்விதம் கையாடுவதானது அந்தப் புலனை மறுபடியும் இப்புழு பீடிக்காத விதம்.

4. <u>இப்புழுக்களைத் தவிர்க்க இயற்கை சத்துருக்கள்.</u>—பிரகிருதியில் இப்புழுக்கள் அதிகரிகாத வண்ணம் ஏற்பட்டிருக்கிற சத்துருக்கள் அநேகமுள. அவைகள் இருவிதம்:—

(i) புழு, பூச்சி சத்துருக்கள்.
(ii) பக்ஷிகள்.

(i) <u>பூச்சி சத்துருக்கள்.</u>—புழுக்களை தின்னும் பலவித குளவியும், ஈக்களும் உள. சில வேளைகளில, இத்தாஷ்ண மாறுபாட்டின் நிமித்தமே, இக்குளவியும், ஈக்களும் குறைந்துவிட்டால், மேற்குறித்த புழுக்கள் அதிகப்படுகின்றன.

(ii) இத்துடன், காகம், மைனா, புறா போலுள்ள சில பக்ஷிகள் உள. இவைகள் நாற்றுக்கணக்காகக்கூடி, இப்புழுக்களைத் தின்ன வருகின்றன. இப்புழுக்களைத் தின்னும்பொருட்டு மேற்குறித்துள்ள பக்ஷிகளை புலன்களுக்கு வரவழைப்பதற்கு, தரையில் சாதத்தையாவது அல்லது பொரி அரிசியையாவது போட்டு, கண்ணிகளாக வைக்கவேண்டும். மேலும் புலன்களில் சிறிய கொம்புகளை ஊன்றி வைத்தால் பக்ஷிகளெல்லாம் உட்கார சௌகரீயமாயும், பின்னர் பூச்சிகளைத் தின்னவும் உதவும்.

இப்புழுக்களைத் தவிர்ப்பதற்கான முக்கிய கவனிப்பு.

இப்புழுக்கள அதிகரிக்காதபடி தலையாய தறகும கவனிக்கவேண்டிய விஷயங்கள் இரண்டு:—

1. புழுக்கள் வந்தவுடன், அவைகளைத் துலைப்பதற்கான ஏற்பாடு. அதைச்சரிவர முடிப்பதும்.

2. குடித்தனக்காரர் ஒருவரோடொருவர் ஒத்துழைத்தல்.

1. எவ்வித ஏற்பாடுகள் செய்யப்பட்டபோதிலும் சீக்கிரமாயும் காலதாமதமில்லாமலும் செய்யப்படவேண்டும். இப்புழுக்கள் வந்தவுடனுடன், அவைகளுக்கு சம்பந்தப்பட்ட மேல் அதிகாரிகளிடம் ரிபோர்ட்செய்து அவர்கள் உதவியை எதிர்பார்த்துக்கொண்டிருக்கக்கூடாது. ஏனெனில் சில பயிரில் நோயணுகியவுடனே, நடவடிக்கைகள் செய்தாற்தான், அவைகள் பிழைக்கும். அவ்வேலையையும் சரிவரச்செய்யவேண்டும். உதாரணமாக: குழிகள் தோண்டப்படவேண்டுமானால், புலத்தில் எல்லாப்பக்கங்களிலும் தோண்டி ஒரு பக்கத்தில் சும்மா போட்டுவிடக்கூடாது. ஏனெனில் அப்பக்கத்தின்வழியாய் புழுக்கள் வந்து பயிரைத்துலைத்துவிடும். மேலும், குழிகளில் பக்கங்கள் செங்குத்தாக இருக்கவேண்டும். இல்லாதபக்ஷத்தில் புழுக்கள் நகர்ந்து வந்து பயிரை நாசம்பண்ணும்.

2. இவ்விதம ஏற்படக்கூடிய பூச்சிப்புழுக்களைத் தவிர்க்கும்பொருட்டு, குடித்தனக்காரர்கள் ஒருவரோடொருவர் ஒத்து



ழைக்கவேண்டும். ஒவ்வொரு குடித்தனக்காரரும், இப்புழுக்களை துலைக்கக் கவனிக்காத விஷயத்தில, வேலை சரிவர நடத்தப்படமாட்டாது. அவர்கள் தங்கள் தங்கள் புலன்களை காப்பாற்றினால், அவர்கள் உண்மையாகவே தங்கள பயிரைக் காப்பாற்றுவதுடன், அக்கம்பக்கத்தில் உள்ளவர்களுடைய பயிரும் லாபம் அடைகின்றது.

ஆயினும, ஒவ்வொரு சமயங்களிலும் இப்புழுவந்து சாடினால், கோயம்பத்தூர் கவர்ன்மென்ட் பூச்சி சாஸ்திரிக்கும், அந்தந்த சர்க்கிள் விவசாய டிப்டிடி டைரக்டர் துரையவர்களுக்கும், வேண்டிய ஏற்பாடுகள் செய்யும் பொருட்டு, ரிபோர்ட் செய்துகொள்ளவேண்டியது.

---

## பொடியின் கெடுதிகள்.

பொடியென்பது பலவிதக் கலப்புடன் புகையிலையையிடித்தத தூளாக்கியதேயாகும். இதை அநேகமாய் யாவரும் உபயோகிக்கின்றனர். இது முதலாவது இந்தியாவில் கிடைத்ததிலலையென்றும் மேல்தேசத்தில் கண்டுபிடிக்கப்பட்டதென்றும் சொல்லுகின்றனர். இதில் பாதிக்கு மேலாக ஒருவித நஞ்சு கலந்திருப்பதாக கற்றுத்தேர்ந்த ஆங்கிலேய வைத்தியர்கள் கூறுகின்றனர். நம் நாட்டிலிருப்பவர்களில பேகர் இதை உபயோகிப்பதுமல்லாது தற்கால காரீகத்துக்கு ஒத்தவாறு பலவித வாசனைப்பொருள்களையும் கலப்பாகச் சேர்க்கின்றனர்.

இத்தூளை சிறியோர் முதல் பெரியோர்வரை ஆணும் பெண்ணுமாக உபயோகிக்கின்றனர். எப்படி? காசியிலும் வாயிலுமே. முதலாவது தூங்கும்போது இதினதுபோதைக் குறித்தாலாம். அல்லது ஒரு விதப்பெருமைக்கென்றெண்ணலாம். இதற்கும் குடிக்கும் யாதொரு சந்தேகமில்லை. முதலில் பழகியபின் பின்வாங்க முடியாது. இதிலுள்ள கெடுதியை அறியாமல் இவ்வஸ்துவை உபயோகிக்கிறார்களென்பதற்குச் சந்தேகமில்லை. இக்கேடுள்ள வஸ்துவை மூக்குப்போன்று வளர்ந்திருக்கும் தந்தங்களிற்போட்டுப் பாழாகுகின்றனர். பற்களுக்கு உறுதியாயிருக்கும் ஈறல்களை இப்பொடியானது கெடுத்துவிடுகிறது. எப்படியெனில், இப்புகையிலைத்தூளிலிருக்கும் விஷமானது அதற்குரிய காட்டத்தைக் கொண்டு இதழ்களைச்சுட்டுக் கருகி போகின்றது. உதாரணமாகக் கொஞ்சக்காலம் இத்தூளை வாயில் உபயோகித்து வந்த நண்பர்களின் வாயைப் பார்ப்போமானால் பற்களின் கீழிருக்கும் இதழிழந்து பற்களினூடே இடைவிழுந்து அசைவுற்றும கூடிய காலம செல்லாது இளமபிராயத்திலேயே விழுந்தும் இறப்பதைக்காணலாம். இதை வாயில் உபயோகிக்கும்பொழுது மேல் சிவிர்த்தும், வாய் உறைத்தும், நரம்புகள் உணர்ச்சியற்றதுபோலாகிவிடுகின்றது.

மூக்கில் பொடியைப் பிரயோகஞ்செய்யும் நண்பர்களே! இது நல்லதென்று நினைக்கிறீர்களா? இதை உபயோகப்பதின் கேட்டையுணர்ந்தீர்களா? அறியும் காரணத்தில் இவ்விதம் செய்வதற்கு நெஞ்சம்துணியாது. மூன்று விதங்களாகப் பிரிக்கலாம். முதல்தரம, நடுத்தரம், கடைத்தரம், எனவாகவேயாம். முதல்தரமென்பது பட்டணம் பொடி என். ராமபிரதர்ஸ் கமபெனியுடையது. சுகந்தம வாசனைச்சேர்க்கை நாட்டுப்பொடியிலேயே மற்றுமிரண்டுவிதமாம். பொடி நண்பர்களைக்கேட்போமாகில் அவர்களுக்குத் தெரிபடாதது இராது. இதிலும் உபயோகிப்போரை இரண்டுவிதமாகப் பிரிக்கலாம். அதாவது நாணயமென்றும் வெளிப்படையென்றும். நாணயப்பிரயோகக்காரர் யாரென்றால் படித்துத்தேர்ந்த உபாத்திமார, இன்னும் வேறு உத்தியோகஸ்தர்கள். அநேகமாய் ஒரே வார்த்தையில கற்றறிந்தோரெனலாம். இவர்கள் சமயத்துக்குக் கையில் காசு இராவிதனரோ, போய் அலைந்து வாங்குவதற்கு கஷ்டப்பட்டோ, வெளிக்குத் தெரியக்கூடாதென்றோ, மொத்தமாக 2 அல்லது 3 பலங்கள் வாங்கி வைத்துக்கொண்டு வெளிக்குத்தெரியாது பார்ப்பதற்கலங்காரமான கண்ணாடியிலோ அல்லது கொயபிலா செய்த சாமானகளில் வைத்துக்கொண்டு போடுகின்றனர். துடைப்பதற்கொரு கைக்குட்டையும் வைத்துக்கொள்வார்கள். மடைதிறந்தால் தண்ணீர் வருவதுபோல பொடியெனும் சாவியை நாசித்துவாரமாகிய மடைக்குள் செலுத்தினதினபேரில் தண்ணீரைப்போன்று அதிவேகமாய் வெளிவரும். அது மற்றவர்களுக்குத் தெரியக்கூடாதென்று கைக்குட்டையால ரஸக்குணங்கள் படிந்திருக்கும சளியை துடைத்து சட்டைக்குள் வைக்கின்றனர். இப்படியே இரண்டு மூன்று தரம் செய்த பிற்பாடு கைக்குட்டையைப் பார்ப்போமானால வெறுக்கத்தக்கதே. இதைச் சுத்தஞ்செய்யாது ஒரு வாரம வரையிலும் வைத்து உபயோகிப்பார்கள். சுத்தம சுத்தமெனப்பாரின சுத்தத்தைபபாத்திரகள் எப்படிப்பட்டதென்று? இதிலும கைக்குட்டை யெடுக்க மறந்துவிட்டால் அணிந்திருக்கும் வேஷ்டியில் அசுத்தம்பண்ணுவதற்கு ஆரம்பித்துவிடுவார்கள். பின்சொல்லியது முந்தினதிலும் நன்று. வெகுநேர்த்தி.. இப்படியல்லவோ பொடிநாணயப்பிரயோகம செய்யவேண்டும். இதல்லவோ சுத்தத்தின முன்மாதிரி. ஐயோ, இதுவே படித்தும் பேதமை யென்பது.

இனி வெளிப்படைப்பிரயோகம் என்பதென்னவென்று பார்த்தால் இவர்களே படியாதவர்கள். நாட்டுப்பொடியைப் பிரயோகஞ் செய்பவர்கள். இவர்களிடத்தில் அவ்வளவாக நாணயபிரயோகத்தாரிடத்திலிருப்பதுபோன்று இராது.

மொத்தத்தில் பொடியின் கெடுதியைப் பார்ப்போமானால் சிறிதுநேரம் உபயோகித்த நேரத்தில் மாத்திரம் சுறுசுறுப்பையுண்டாக்கும் பின் அசதியையுண்டுபண்ணும். நாசிகம்மும். தெளிவாய்ப் பேசமுடியாது. ஒரு நேரத்தில் போடத்தவறினாலொன்றால் யாதொருவேலையுமோடாது. அசதியுற்றிருப்பார்கள். பெரியோரிடத்தில் மரியாதைக் குறைவு. பெரிய சங்கங்களிலாவது அல்லது பெரியோர் முன் நின்றபோதிலும் சளிச்சிந்தும் கெட்டவழக்கம்வரும், தடைசெய்யமுடியாது. அப்பொழுது அவர்களின் சுத்தங்கள் வெளியாகின்றன. பார்ப்பவர்கள் வெளிக்குக் காட்டாவிட்டாலும் மனதினுள்ளேயாவது வெறுப்பாகளென்பதற்கையமில்லை.

பற்கெடுதி, பெலக்குறைவு, மானக்குறைவு, எப்பேர்ப்பட்ட வாசனையையும் முகரமுடியாது. ஏனெனில் சுரணை தென்படாது, ஈலைாபம், பணகஷ்டம். பக்கத்திலுள்ளோர் தூங்கமுடியாதபடி மாடுகளைப்போன்று பெருமூச்சுவிடுதல், அசுத்தம் முதலிய கெடுதிகள் நேரிடுவதால் பொடி உபயோகிக்கும் வழக்கத்தைப் படிப்படியாகவாவது நிறுத்த முயற்சிப்பீர்களென்று நம்புகிறேன்.

டி. சாமுவேல் கந்தசாமி,
சாத்தன்குடி.

---

## ஸ்திரீகளுக்கு நல்ல ஆபரணம் பதிவிரதா தர்மம்.—

சாதாரணமாய் ஸ்திரீகள் நல்ல வஸ்திரங்களையும் விலையேறப்பெற்ற ஆபரணங்களையும் அணிந்துகொள்வதில் மிக்க வாஞ்சையுடையவர்களாய் இருக்கிறார்கள். பெருமபாலும் ஏழை ஜனங்களின் ஆபரணங்கள் வெள்ளி, பித்தளை, முதலியவைகளினால் செய்யப்பட்டிருக்கின்றன. ஐஸ்வரியமுள்ளவர்கள் பொன், வெள்ளி, நவரத்தினம, முதலியவைகளினால் இயற்றிய ஆபரணங்களால் அலங்கரித்துக் கொண்டிருப்பதைப்பார்க்கலாம். அநேகஸ்திரீகள் படாடோபமாய் வெளியில் பார்ப்பவர்கள் பிரமிக்கத்தக்கபடி அலங்கரித்துக்கொள்ள விரும்புகிறார்கள். நமமையாண்டு வந்த நமது சக்ரவர்த்தினியாராகிய விக்டோரியா பெருமாட்டியவர்கள் சாதாரணமாயுள்ள ஆடையாபரணங்களையே தரித்திருப்பதாக தெரியவருகிறது. அந்தம்மாளுக்கிருந்த ஐஸ்வரியத்தைப்போல் மற்றொருவர்களிடத்திலுமில்லை. அப்படியிருந்தும உபயோகமற்ற ஆடையாபரணங்களையணிந்து சுமந்ததில்லை. முக்கியமாய் அந்த ராணியார் தம் தேசத்தின குடிகள் சுகப்படவேண்டிய முயற்சிகளே தமக்குரிய ஆடையாபரணங்களாக நினைத்து வந்தார்கள். ஆபரணங்களையணிவதால் திருடர், பொறாமைக்காரர்கள், துஷ்டர்கள், முதலானவர்களுடைய பயம அதிகரிக்கிறது. ஆபரணங்களையணிந்திருந்த பல ஸ்திரீகளும், குழந்தைகளும் பிராணச்சேதங்கடைந்ததை யாமகண்டும் கேட்டும் வருகிறோம். ஸ்திரீகள் தங்கள் ஆபரணங்களை இதரர்களிடத்தில் காண்பிக்க ஆவல்படும் வழக்கம். அது பெரிய தப்பிதமான காரியம். இதை உத்தேசித்தே ஔவைப்

டியார் "உடையது விளம்பேல்" என்று கூறினள். பூனவில் ஓர் உயர்குடும்பத்திலிருக்கும் ஒரு ஸ்திரீயை ஒருவர் கண்டு அம்மா! உங்கள் ஆபரணங்களெங்கே? அணிவதில்லையா? என்று கேட்டதற்கு அந்த உத்தமஸ்திரீ தன் சமீபமிருந்த பிள்ளைகளைச் சுட்டிக்காட்டி இதோ என் திரண்ட ஆபரணம் என்றாள். அற்பப்பொருளாகிய நகையின் பேரில் பிரியத்தைச் செலுத்தாமல் தன் பிள்ளைகளை ஒழுக்கமாய் நடத்துகிற காரியத்தில் கருத்தாயிருந்தாள். அவ்வாறு சிலகாலஞ்சென்றபின் அந்தம்மாளால் அப்பிள்ளைகள் கல்வியிலும் ஒழுக்கத்திலும் தேர்ச்சியடைந்து, துரைத்தன சாலையிலும், வைதீகத்திலும், உயர்ந்த பதவியிலிருக்கிறார்கள். பூமியிலுள்ள பல ஆபரணங்களையணிந்து மகிழ்ந்தபோதிலும் அவைகளொரு காலத்தில் யாதொமொரு கெடுதியால் நஷ்டத்தைக்கொடுக்கும். நஷ்டத்தையுண்டுபண்ணாத ஆபரணங்களையே யணியவேண்டும். அது எது எனில், பதிவிரதா தர்மமொன்றுதான்.

இந்திரகுல தேவமாராகிய ஸ்திரீகளும் புருஷர்களும், தங்கள் பிள்ளைகளை ஒழுங்காய் வளர்ப்பதிலும், பாடசாலைக்கனுப்புவதிலும், கண்ணுங்கருத்துமாயிருக்கவேண்டும். இந்திரகுலத்திலுதித்த ஒவ்வொரு பெண்களும் தகப்பன், புருஷர், மாமன், மாமி முதலானவர்களிடத்தில் ஒழுங்காய் நடப்பதுதான் விலையேறப்பெற்ற ஆபரணங்களால் அலங்கரித்ததாகும். இதையெல்லாரும் அறிமின் அறிமின்! தெரிமின் தெரிமின்!

இப்படிக்கு தங்களன்புள்ள
M. தவசி தேவதாஸ் உபாத்தியாயர்,
தர்மத்துப்பட்டி.

## ஓநாயால் வளர்க்கப்பட்ட குழந்தைகள்.

### மிதுனபுரி குகையில்கண்ட ஆச்சரியம்

மேற்கு வங்காளத்தைச்சேர்ந்த மிதுனபுரியில குகையொன்றில் இந்திய குழந்தைகள் இரண்டு ஓநாய்களுடன் வளர்ந்துவந்த ஆச்சரிய சம்பவத்தைக் குறித்து கல்கத்தா பிஷப் எச். பென்கன்ஹாம் வால்ஷ் "ஸ்டேட்ஸ்மன்" பத்திரிகைக்கு எழுதியிருக்கின்றார். அப்போது முறையே எட்டுவயதாயும் இரண்டு வயதாயுமிருந்த அக்குழந்தைகளிரண்டும் ஓநாய்களுடன் வளர்ந்துவந்ததைக் கண்டுபிடிக்கப்பட்டு அப்புறப்படுத்தப்பட்ட சிறிதுகாலத்திற்குப்பின் இளைய குழந்தை மரணமடைந்துவிட்டது. ஆயினும் மூத்தகுழந்தை அதுமுதல் மிதுனபுரி அநாதைப் பிள்ளைகளின் சம்ரக்ஷண சாலையில் ரெவரெண்டு ஜெய்சிங் என்பவரால் பார்க்கப்பட்டு வருகின்றது.

பிஷப் வால்ஷ் இதன் சம்பந்தமாக எழுதியதாவது: அந்த ஜில்லாவில் மிகத்தூரத்திலுள்ள பாகங்களுக்கும் விஜயம்செய்யும்போது ரெவரெண்டு ஜெய்சிங்கிடம் ஒரு கிராமவாசிகள் தாங்கள் ஒருபோதும் உபயோகிக்காத வழியொன்றுமிருப்பதாயும் அவ்வழியில் பேய்கள் நடமாடுகின்றன வென்றும்கூறினார்கள். அதன்மேல் சீமான் சிங் அவ்விடத்தைத் தமக்குக் காட்டும்படி கேட்டபோது அவர்கள் அவரிடம் பெருமலையொன்றைக்காட்டினார்கள். பின்னர் சீமான் சிங் 16 ஆட்களைவிட்டு அவ்வளையைத் தோண்டச் செய்தார். சிறிதுநேரம் கழித்து அவ்வளையிலிருந்து இரண்டு ஓநாய்கள் வெளியே பாய்ந்தோடின, பிறகு தாய் ஓநாய் ஒன்று வளையின் வாயிலண்டை வந்து நின்று உறுமிக்கொண்டே அவ்விடத்தைவிட்டு நகர மறுத்துவிட்டது. ஆதலால் அவர்கள் அதனைச் சுட்டுக்கொல்லவேண்டியதாயிற்று. பின்னும் தோண்டிப்பார்க்கையில் அவ்வளை குகையொன்றுக்கு வழியாகவிருந்தது. அக்குகையில் அவர்கள் இரண்டு ஓநாய் குட்டிகளுடன் இரண்டு வயதுள்ள பெண்பிள்ளையொன்றும் 8 வயதுள்ள பெண்பிள்ளையொன்றும் இருக்கக் கண்டனர். ஓநாய்குட்டிகளும் அப்பெண்பிள்ளைகளும் மிக மூர்க்கமாகவிருந்தனர். அக்குழந்தைகள் நாலுகால்பாய்ச்சலில் மற்றவர்களைவிட மிகவேகமாக குரைப்பதுபோல சத்தமிட்டுக்கொண்டே மிகவேகமாக ஓடி ஒரு புதருக்குள் நுழைந்துவிட்டனர். புதரிலிருந்து அக்குழந்தைகளைமுடிவில் பிடிக்கப்பட்டது. இவர்கள் எப்போதும் பூமியை சுரண்டிக்கொண்டிருக்கும் பழக்கத்தால் கைவிரல்களின் நகங்களிலுள்ள முனையில் வளைவாய் தேய்ந்திருந்தன. இப்பாகங்களில குழந்தைகளை அஜாக்கிரதையாக அதிலும் பெண்குழந்தைகளாயின் வேண்டுமென்றே வெளியே கிடத்துவது சகஜந்தான். இத்தகைய குழந்தைகளில் ஒன்றை தாய்ஓநாய்கண்டு தனியுடன் தன் இருக்கைக்குத் தூக்கிச்சென்றிருப்பதாயும் பின்னும் ஆறுவருடங்களுககப்பால் மற்றொரு குழந்தையையும் கொண்டுவந்து தன் குகையைவிட்டு வெளியே போகாத குழந்தையை வளர்ப்பதற்குச் சந்தோஷங்கொண்டு அக்குழந்தையையும் வளர்க்கத்துவக்கியதாகக் கருதப்படுகின்றது. அவர்களிருவரும் வங்காளிகளென்றும் அவர்கள் சகோதரிகளாக இருக்கக்கூடுமென்றுங்கருதப்படுகின்றது.

சீமான் சிங் அப்பிள்ளைகளை மிதுனபுரியிலுள்ள அநாதைப்பிள்ளைகளின் சம்ரக்ஷணசாலைக்கு எடுத்துச் சென்றார். இளைய பிள்ளைக்குச் சிலநாட்களுக்குப்பின் சீதபேதிகண்டு மரணமடைந்தது. மூத்த பெண் அந்த சந்தர்ப்பத்தில்மட்டும் சிறிது நேரம் கண்ணீர்விடுத்தாள். தற்போது அப்பெண் தன்வயதுக்குத்தக்கவாறு வளர்ச்சியுடையவளாயிருக்கிறாள். அவளைக்குறித்து வியக்கத்தக்கதொன்றுமில்லையாயினும் அவள் மிருகங்களைப்போல் உட்காருவதுடன் பண்க்கணக்கான நேரங்களுக்கு ஒன்றுமே செய்யாமல் வாளாவிருக்கின்றாள். இவளுடைய முகம் ஒன்றுமறியாத தோற்றத்தைக்காட்டுகின்றது. எனினும் தானகற்றுக்கொண்ட முப்பது வார்த்தைகளுள் ஒன்றைச்சொல்லி வங்காளிகள் யாரையாவது வரவேற்று நமஸ்காரம் செய்யும்போதுமட்டும் அவள் புன்னகை புரிவதினால் அவளுடைய முகம் சந்தோஷகரமான மாறுதலடைகின்றது. காலக்கிரமத்தில் அவள் உடையணிந்துகொள்ளவும் உட்பட்டாள். நெடுங்காலம்வரையில் அவள் தன்னைக் குளிப்பாட்டுவதைக் குறித்துக் கோபங்கொண்டுவந்தாள். அவள் தட்டில் வாயை வைத்து ஆகாரத்தைச் சாப்பிட்டு வந்தாள். ஆனால் முடிவில் அவளுக்கு ஆகாரத்தைக் கையினால் எடுத்து உண்பதற்கும் கற்பிக்கப்பட்டது. அவளுக்கு மற்றைக் குழந்தைகளிடமாவது அல்லது விளையாட்டு ஜாமான்களிடமாவது ஊக்கமில்லை. மற்றைக் குழந்தைகளைப்போலல்லாமல் அவளுக்குப் பயமென்பதே கிடையாது.

மேலும் அவள் வெளிச்சத்தில் இருப்பதைவிட இருட்டில் இருப்பதையே பெரிதும் விரும்புகின்றாள். அவளுக்கு இறைச்சியின்மீது, முக்கியமாக பச்சை இறைச்சியின்மீது, அளவற்ற ஆவலுண்டு. அவளுடைய கண்களின் பார்வையும் கேட்கும் சக்தியும் மோப்பம்பிடிக்கும் சக்தியும் இணையற்றதாயிருக்கின்றன. அவளுடைய ஞாபக சக்தி மிகக்குறைவாகவிருக்கின்றது. அவளைச் சிறிது காலத்திற்குமுன்பு கிறிஸ்துசமயத்தில் சேர்க்கப்பட்டதுடன் அவளுக்குக் கமலாவென்றும் பெயரிடப்பட்டது. அப்பெயரை அவள் வெகு அழகாக உச்சரிக்கின்றாள். அக்குழந்தைகளிரண்டும் உயிரோடிருந்தபோது அவர்களிருவரும் நாய்க்குட்டியைப்போல ஒருவர்மீதொருவர் சுருண்டு படுத்துத் தூங்குவது வழக்கம். தற்போது கமலா ஒருபோதும் குரைப்பதில்லை. மேலும் தானகற்றுக்கொண்ட வார்த்தைகளை உச்சரிப்பது தவிர மற்ற மிருகங்களைப்போல வேறு எவ்வித சப்தமிடுவதுமில்லை. அன்றியும் அப்பெண் சிரிப்பதுமில்லை அழுவதுமில்லை. அவள் மிருகங்களுடன் வெகு பட்சமாக இருப்பதுடன் அவற்றுடனே சுற்றித்திரிந்து வருகின்றாள். இவ்விஷயங்களைக் குறித்து எள்ளளவும் சந்தேகமில்லையென்று பிஷப் வால்ஷ் வற்புறுத்திக் கூறுகின்றார். சாஸ்திர ஆராய்ச்சி சங்கத்தாரும் முக்கியமாக ரூட்யார்ட் கிப்ளிங் என்பவரும் கமலாவின் விஷயத்தில் விசேஷ ஊக்கங்காட்டி கவனித்துவருகின்றனர். அவளுடைய வளர்ப்புவிஷயம் மிக்க வியப்புக்கிடமானதாயிருக்கின்றது.

(திராவிடன்)

## பொது வர்த்தமானங்கள்.

### பம்பாய் ஸ்திரீகளின் கூட்டம்

**சம்மத வயதை உயர்த்த வேண்டுகோள்.**

பம்பாய் ஸ்திரீகளின் பெரிய கூட்டம் ஒன்று இன்று மாலை நடந்தது. டாக்டர் மிஸஸ் கில்டர் தலைமை வகித்தார். பால்ய விவாகம் ஸ்திரீகளுக்குத் தீங்குவிளைவிப்பதாயிருப்பதால் பெண்களின் சம்மத வயதை



13-லிருந்து 14 ஆக உயர்த்துவதாக ஸர் ஹரி சிங்கவர் கொண்டுவரும் மசோதாவை ஆதரித்து ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ஸ்திரீகள் அபேட்சகர்களாக நிற்பதிலுள்ள தடையை நீக்கியபின் ஓட்டர்களிடம் ஸ்திரீகள் சென்று வேலைசெய்யப் போதுமான அவகாசமில்லாததால் சில ஸ்திரீகளைப் பம்பாய் சட்ட சபைக்கு மெம்பர்களாக கவர்ன்மெண்டார் நியமிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்வதாகவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. எல்லா வகுப்பு ஸ்திரீகளும் சம்மத வயது மசோதாவை ஆதரித்துப் பேசினார்கள்.

## தேத்தண்ணீரும் காப்பியும்

நமது இந்தியா தேசத்தில் இப்போது எங்கும் யாவராலும் உபயோகப்படுத்தப்பட்டு வரும் தேத்தண்ணீரும், காப்பியும் ஒரு காலத்தில் இந்தியரல்லாத அன்னிய நாட்டாரால் உபயோகப்படுத்தப்பட்டுவந்தன. இந்தியாவானது நவீன நாகரீகமடைந்துவிட்டதென்று கொண்டாடப்படும் இக்காலத்தில் தேத்தண்ணீரும், காப்பியும், நாகரீகச் சின்னங்களாகக்கொள்ளப்படுகின்றன. தேத்தண்ணீரும் காப்பியும் பானம்பண்ணுதவர்கள் நாட்டுப்புறத்தார்களென்று கருதப்படுகிறார்கள். காலையில் தூங்கி விழித்தவுடனே ஒவ்வொரு குடும்பத்திலும் ஆட்வரும் அரியவரும் கவனித்துவருகிற முதல் வேலை காப்பிக்குஏற்பாடு செய்தலும் அதைப் பானம்பண்ணுதலுமேயாம் பிறகுதான் மற்றவேலைகளில் கவனம் செலுத்தப்பட்டுவருகிறது. தங்கள் வீட்டிற்குச் சிநேகிதர்கள் அல்லது விருந்தர்கள் வந்தால் தேத்தண்ணீர் அல்லது காப்பி சாப்பிடுங்கள் என்று இனிய மொழிகளால் கூறி கொடுத்துதவுதல் ஒருவித உபசாரமாகவும் வழங்கிவருகிறது. இருப்புப்பாதைகளில் பிரயாணம்செய்யும் பிரயாணிகளுக்குப் பசியாற்றிக்கொள்ள ஒவ்வொரு ஸ்டேஷனிலும் பால் காப்பி என்றும், சூடான தேத்தண்ணீர் என்றும் கூவும் அரவம் இருசெவிகளிலும் செவிடுபடும்படியாக இருக்கிறது. சுண்ணாம்படிக்கப்பட்ட சுவர்களிலெல்லாம் சூடான தேத்தண்ணீர், சோர்வை நீக்குவது, உற்சாகப்படுத்துவது, காலணாவுக்கு இரண்டு கோப்பை செய்யலாம், பொக்கணம் ஒன்று காலணா என்று வரையப்பட்டிருக்கிறது. பொக்கணம் ஒன்று காலணாவுக்கு விற்றுவருவது ஏழைகள் முதல எல்லோரும் வாங்கி உபயோகப்படுத்தும்படியான ஒரு வியாபார உபாயம். மணச்சடங்குகளிலும், பிணச்சடங்குகளிலும் காப்பி, தேத்தண்ணீர் பானங்கள் நுழைந்துவிட்டன. தேயிலைப் பானம், காப்பிப்பானம் இல்லாத வீடாவது, விசேஷமாவது, ஊராவது, பட்டணமாவது கிடையாது. இவ்வாறு முழு உலகமானது காப்பி என்னும் காலைப்போர்வையாலும் டீ என்னும் மாலைப்போர்வையாலும் மூடப்பட்டிருக்கின்றது. ஆனால் அப்பானத்தினால் மக்களுக்கு ஏதேனும் நன்மையுண்டாவென்று சற்று ஆராய்வோம். நேர்விரோதமான தீமைகளையே செய்து வருகின்றன. அவைகளில் பருகும் அந்தச் சமயங்களில் பசியடங்குகின்றது. உற்சாகம் உண்டாகின்றது. களைப்பு நீங்குகின்றது. சுறுசுறுப்புப் பிறக்கின்றது. என்றாலும் நாட்செல்லச்செல்ல சரீரத்தில் பலவிதக் கெடுதிகளை உண்டாக்கிவிடுகின்றது. சரீரசுகத்திற்கு விரோதமான பானமாவது, அல்லது ஆகாரமாவது, தெய்வாமிர்தமாயிருந்தாலும் அதைக்கனவிலும் நினைத்தல் கூடாது என்பதைச் சொல்லவும் வேண்டுமா? தேத்தண்ணீர், காப்பித் தண்ணீர் இவைகளில் பானம்பண்ணுகிறவர்கள் அதிமூத்திரம், நீரிழிவு, ஆண்தன்மைக் குறைவு பித்தமயக்கம் முதலியவைகளுக் காளாகி துன்பமடைந்து வருவதை யாம் அநுபவத்தில் கண்டிருக்கிறோம். காப்பிக்கிளப்புகளில சென்று பானம்பண்ணுகிறவர்களுக்கு வியாதிகள் வர ஏதுக்கள் நிரம்ப இருக்கின்றன. காப்பி கிளப்புகளில் அநேகமாய் பாத்திரங்களை வாயினால் கௌவி உறிஞ்சிச் சாப்பிடுகிற வழக்கம் எங்கணும் தோன்றிவிட்டது. அந்தப் பாத்திரத்தின் வழியாய் தொத்துவியாதிகள் அநேகம் உண்டாகக்கூடியதாயிருக்கின்றது. எமது பார்வைக்கு வந்த எல்.ஜி மூக்கர்ஜி என்பவரால் எழுதப்பட்ட "சுகவிநோதங்கள்" என்ற புத்தகத்தைப் பார்வையிட்டோம். அதில மகா நிபுணர்களான ஆங்கில டாக்டர்களும் இந்தியாவில் சிரோன்மணிகளாக விளங்கும் இந்திய டாக்டர்களும் நமதுதேச நன்மைக்காக கடுந்தபசு புரியும் மகாத்மா காந்தியவர்களும் தேத்தண்ணீர் காப்பி முதலிய பானங்களைப் பற்றிக்கொண்டிருக்கும் அபிப்பிராயங்கள் எழுதப்பட்டிருக்கின்றன. அவை நமது இந்திய சகோதரர் சகோதரிகளுக்குத் தெரியும் பொருட்டு இங்கெடுத்து எழுதுகிறோம்.

### தேத்தண்ணீர் குடிப்பதால் உண்டாகும் தீமைகள்.

1. தேத்தண்ணீர் தேகத்தில் ஒருவித கிளர்ச்சியை உண்டுபண்ணி மயக்கத்தையும் தருகிறது. காப்பியும், ஜனங்களால் விரும்பப்படும் அநேக இதரபானங்களும் இப்படிப்பட்டவைகளே. தேத்தண்ணீரைப் பானம்பண்ணினவுடனே ஒருவித மகிழ்ச்சியுண்டாகும். ஏனெனில் வயிற்றிலுள்ள நரம்புகளையெல்லாம் மட்டுச்சுமிஞ்சின சுறுசுறுப்பையுண்டாக்கி, மூளையில் ஒருவித அழற்சியையும் உண்டாக்குகிறது. அதினிமித்தமாக இரத்தாசயம் அதிவேகமாகக் கிரியைசெய்யவும் தேகமுழுவதும் ஊக்கமான உணர்ச்சியும் உண்டாக ஏதுவாகின்றது. அவ்விதக் கிளர்ச்சியையுண்டுபண்ணும் சக்தி தேகத்திலிருந்து நீங்கிய பின்னர் இயற்கைக்கு விரோதமான வாலமைகளையெல்லாம் தணிவடைந்தவுடனே சோர்வும் பலவீனமும் அதிகரிக்கிறது. இதுதான் தேத்தண்ணீரால் உண்டான பலன். Ministry of healing. தேத்தண்ணீர் பானம்பண்ணும் வழக்கம் இந்தியாவுக்கு வந்தவிதத்தைப்பற்றி மிஸ்டர் M. K. காந்தியவர்கள் பேசியபோது சொன்னதாவது:—நாசம் விளைவிக்கும் வஸ்துவாகிய தேத்தண்ணீர் இப்பொழுது முழு தேசத்தையும் மேற்கொள்ளப்பார்க்கிறது. அது ஏற்கனவே நூற்றுக்கணக்கான ஸ்திரீ புருஷரின் ஜீரணத்திற்கு ஆதாரமான அவயவங்களைப் பாழ்க்கினதுமில்லாமல் அவர்களுக்குள்ளான சொற்பப்பணத்திற்குச் செலவை அதிகரிக்கும் மற்றொரு பாரமான வழியாகவும் சேர்ந்துவிட்டது. "Lecture on Swedesi," February 14th 1926.

"மெட்டீரியா மெடிக்கா" என்னும் வைத்திய நூலின் ஆசிரியராகிய பாட்டர் என்னும் பெயருடைய புகழ்பெற்ற பண்டிதர் காப்பீன் என்னும் ஒருவித வஸ்துவைப் பற்றி பின்வருமாறு கூறியிருக்கிறார்:—காப்பியை அதிகமாக உபயோகித்தால் ஜீரண சக்தி சீர்கெட்டு நரம்பு தீனங்களின் கிரியைகளுக்குத் தடையுண்டாகி, தலைவலி, மனக்குழப்பம், நெஞ்சுத்துடிப்பு, ஆகிய நோய்கள் உண்டாகின்றன. இவைகளின்றி உமிழ்நீரை அளவுக்கதிகமாய் மறைத்து, உணர்ச்சிகளைக் குறைத்து, மாறிப்போன ஆயாசத்தை மறுபடியும் நினைப்பூட்டி சிந்தனையை அதிகரிக்கச்செய்து நரம்புகளுக்கு அமைதியின்மையையும் புத்திமாறுட்டத்தையும் உண்டாக்கக்கூடும். அதுமுதல இருதயத்தில் கொஞ்சம் சுறுசுறுப்பை உண்டாக்கி இரத்தத்தாரைகளின் இறுகிப்போவதை அதிகப்படுத்தும். ஆனால் அதிசீக்கிரத்தில் அவ்விரண்டையும் சோர்வுறச் செய்துவிடும்.

இவ்வாறு நமக்குக் கெடுதியை நிரம்பச் செய்கின்ற, காப்பி இவைகளை விட்டுவிடவேண்டியது நமது கடமையாம். மகாத்மா காந்தியவர்கள் ஆங்கில டாக்டர்கள் இந்திய டாக்டர்கள் முதலானவர்கள் கட்டளையின்படியும் அபிப்பிராயப்படியும் நீங்கள் டீயையும் காப்பியையும் விட்டுவிட்டால் வேறு பானவஸ்து இல்லையென்று கவலைப்படவேண்டாம் என்கிறார்.

## ஒரு பெண்ணின் கொலை.

திண்டிவனம் ஸ்டேஷனுக்கருகில் ஒரு கிணற்றிலிருந்து அகப்பட்ட ஒரு பெண்ணின் பிரேதத்தைப்பற்றிய விவரம் இப்போது கிடைத்திருக்கிறது. விழுப்புரத்தைச் சேர்ந்த செட்டிகுப்பைச்சேர்ந்த ஒருவர் மனைவி 12 வயதுப்பெண் என்றும், அவளைப் புருஷன் கிணற்றில் தள்ளிவிட்டதாயும் கூறப்படுகின்றனர். சம்பவம் நடப்பதற்கு முதல்நாள் இரவு தம்பதிகள் திண்டிவனம் ஸ்டேஷனுக்கு வந்தனர். இரவு 8 மணி வண்டியில் புறப்படுவதாயிருந்தனராம். ஆனால் அவ்வாறு புறப்படவில்லையாம. இருவரும் கிணற்றங்கரையில் நடு இரவில் உட்கார்ந்தனராம. [illegible] நாள் காலையில் எதிரி ஸ்டேஷனுக்கு வ[illegible] மனைவியைக் காணோமென்று கூறி[illegible]

மறுநாள் கிணற்றில் வெற்றிலை சீவல் மிதந்ததால் சந்தேகித்துச் சோதிக்கவே பெண்ணின் பிரேதம் அகப்பட்டது. எதிரிக்கும் அவர் மனைவிக்கும் ஒரு நகையைப்பற்றி சண்டைநேரிட்டதாயும் பிறகு புருஷன் மனைவியைக் கிணற்றில் தள்ளிவிட்டதாயும் கூறப்படுகிறது. கிணற்றிலிருந்து போலீஸார் பெண்ணின் பெட்டியையும் கைப்பற்றிவிட்டனர். எதிரிக்கு 24 வயதிருக்கும். அவர் காவலிலிருக்கிறார். போலீஸார் விசாரித்துவருகிறார்.

## கொலைகாரன் பிடிக்கப்பட்டான்
### (ஒரு சேவகரின் துணிச்சல்)

உப்ரவ்ரோவில் கொலை செய்து மிகுந்த பரபரப்பை உண்டுபண்ணிவிட்டுத் தப்பியோடிய பெயர்போன கொலைகாரன் பிடிக்கப்பட்டுவிட்டான். அவன் போலீஸ் சேவகரின் காலில் மூன்று தடவை துப்பாக்கியால் சுட்டபோதிலும் சேவகர் தைரியமாகப்பிடித்துக்கொண்டு இன்னொரு சேவகர் உதவிக்கு வரும் வரையில் விடவில்லை.

## அலகபாத்தில் தண்டப் போலீஸ்
### அதிகரிக்கச் சிபார்சு

அலகபாத்தில் ஏற்கனவே வைக்கப்பட்டிருக்கும் தண்டப போலீஸ் படையின் தொகையை அதிகரித்து இன்னும் 50 பேர்களை நியமிக்கவேண்டுமென்றும் அந்தச் செலவை முஸ்லீம்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றும் ஜில்லா மாஜிஸ்டிரேட் சிபார்சு செய்திருக்கிறார்.

## கொள்ளைக்கூட்டத்தினரோடு யுத்தம்
### (5 பேர்கள் கொல்லப்பட்டனர்)

பெரோஸ்ப்பூர் ஜில்லாவில் கொள்ளைக் கூட்டத்திற்கும் போலீஸ் படைக்கும் பலமான போராட்டம் நடந்து முடிவில் எல்லாக் கொள்ளைக்காரர்களும் சுட்டுக்கொல்லப்பட்டுவிட்டனர். ஒரு கொலை வழக்கையொட்டிப்போலீசாரால் நீண்டகாலமாகத் தேடப்பட்டவரான 5 கொள்ளைக்காரர்கள் முக்தஸார்தாலில் ஒளிந்துகொண்டிருப்பதாக போலீஸ் சூபரண்டெண்டு மிஸ்டர் ஹெட்டனுக்கு ரகஸ்யமாகச்செய்தி கிடைத்தது. சூப்ரண்டெண்டு ஒரு போலீஸ் படையை அழைத்துக்கொண்டு சென்று ஒரு மிற்றுக்கிழமை காலை அந்த வயலைச் சூழ்ந்துகொண்டு கொள்ளைக்காரர்களைப் பணியுமாறு கூறினர். ஆனால் இதற்குப் பதிலாக துப்பாக்கிக் குண்டுகளே வந்தன. போலீஸாரும் துப்பாக்கிப்பிரயோகம் செய்தனர். இம்மாதிரி கொஞ்சநேரம் நடந்தபின் ஒரு கொள்ளைக்காரன் புதரிலிருந்து திரும்பி தனது ஸகாக்கள் எல்லாரும் இறந்துவிட்டதாயும் தான் சரணமடைய விரும்புவதாயும் தெரிவித்தான். அவர்களிடம் இரண்டு கைத்துப்பாக்கிகளும் இரண்டுபெரிய துப்பாக்கிகளும், ஒரு ரைபிளும் ஒரு வெடிகுண்டும், பல தோட்டாக்களும் இருப்பதாக போலீஸாருக்குச் செய்தி கிடைத்திருப்பதாயும் அதெல்லாம் முன்னக்கத்தில் எறியப்பட்டாலொழிய அவன் கூறுகிறபடி கேட்க முடியாதென்றும் சூப்ரண்டெண்டு கூறிவிட்டார். பேச்சு நடந்துகொண்டிருக்கையிலேயே போலீஸார் மீது பல குண்டுகள் பாய்ந்தன. ஒரு ஸப் இன்ஸ்பெக்டர் தப்பியதே அரிதாகிவிட்டது. ஆகையால் போலீஸார் மீண்டும் துப்பாக்கிப்பிரயோகம் செய்துவிட்டனர். 5 மணி நேரம் இவ்வாறு சண்டை நடந்ததில் எல்லாக் கொள்ளைக்காரர்களும் கொல்லப்பட்டனர். போலீஸார் ஆயுதங்களைக் கைப்பற்றிக் கொண்டனர்.

## தேவமீன்கள்
### (5 வருஷ உபவாசங்கள்)

பிரிட்டிஷ் மீன்காட்சிசாலையில் வெள்ளை வெளேரென்று சில மீன்கள் இருக்கின்றன. ஆகாரம் போதாமையால் அவை வளுத்திருக்கவில்லை. தண்ணீருக்குள் இருக்கக்கூடிய குகைகளுக்குள் அவை வாசஞ்செய்கின்றன. அம்மீன் ஜாதி அபூர்வமாகத்தான் அகப்படும். வெளிச்சத்தில் அவற்றை வைத்தால் உடம்பு கறுப்பு நிறமாய்விடுகிறது. 5 வருஷத்திற்கொருதரம்தான் ஆகாரம் உட்கொள்ளுகின்றன. அவை ஐந்தாறங்குலம் நீளந்தானிருக்கின்றன. அவை பட்டினி கிடப்பதால் உடம்பு பாதிக்கப்படுவதில்லை. அவைகளுக்குப் பக்கத்தில் தேவமீன்கள் என்று சொல்லப்படும் சில மீன்கள் கொண்டுவந்து வைக்கப்பட்டிருக்கின்றன. அவை தங்கமேனியாய் இருக்கின்றன. தங்கத்தைப்போன்ற சிறகுகளையும் உடைத்தாயிருக்கின்றன.

## லாகூர் வெடிகுண்டு விபத்து விஷயம்

தசராக்கொண்டாட்டம் முடிந்ததும் வெடித்து உயிர்ச்சேதம் உண்டுபண்ணிய வெடிகுண்டை வைத்திருந்தவரை அடையாளம் காட்டுகிறவர்களுக்கு 5000 ரூபாய் இனம் கொடுப்பதாக பஞ்சாப் ரகஸ்ய போலீஸார் அறிவித்திருக்கிறார்கள்.

## உதவி ஜெயிலர் குத்தப்பட்டார்
### (கைதி மீது பிராது)

ஆங்வேன் என்ற கைதி, உதவி ஜெயிலர் மிஸ்டர் ஸிடின் தலையில் கத்தியால குத்திக் காயமுண்டுபண்ணிவிட்டதாக சென்ட்ரல் ஜெயில் சூபரிண்டெண்டு மேஜர் பிளவர்டியூ போலீஸாரிடம் பிராது கொடுத்திருக்கிறார். கைதி ஏதோ தவறு செய்ததற்காக ஜெயிலர், மேலே அறிவித்ததின் பேரில் கைதிக்கு 20 சவுக்கடி கிடைத்ததாம். இதை வியாஜமாக்கொண்டு அவன் பிறகு குத்திவிட்டானாம். ஜெயிலர் இப்போது ஆஸ்பத்திரியிலிருக்கிறார்.

## திண்டுக்கல்
### தாலூகா போர்டு எலக்ஷன்

இவ்வூர் தாலூகா போர்டுக்கு பாக்கி இருந்த 16-வது மெம்பர் ஸ்தானத்திற்கு மிஸ்டர் பழனியாண்டி காவாடி என்ற ஒருவரை நாமினேஷன் செய்தபின் டி போர்டாபீஸ் கட்டடத்தில் நடந்தபோர்டு பிரசிடெண்டு ஸ்தானத்திற்காக நடந்த எலெக்ஷனில் ஸ்ரீமான்களான ராஜப்பா லாலாஸ் அவர்களும் பால்சாமி நாயுடு அவர்களும் அபேக்ஷகராக நின்றதில் ராஜப்பா லாலாஸ் அவர்கள் பிரசிடெண்டாகத்தெரிந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

## புறக்களவு.
### சிறுவர்கள் நால்வருக்குத் தண்டனை.

முருகேசன், லோகநாதன், எத்திராஜலு, ராமலிங்கம் என்னும் நான்கு சிறுவர்களும் திருவல்லிக்கேணியிலுள்ள வெற்றிலைப் பாக்குக் கடைக்காரனை சுசிப் ஜான் என்பவருக்குச் சொந்தமான புறாக்களில் 4 ஜோடிப்புறாக்களைத் திருடிச் சென்றதாக, குற்றம் சாட்டப்பட்டு, எழும்பூர் போலீஸ் கோர்ட்டில் டாக்டர் பண்டலேயின் முன்பாக விசாரணைக்குக் கொண்டுவரப்பட்டனர்.

மாஜிஸ்திரேட் எதிரிகளனைவரும் குற்றம் செய்திருப்பதாகத் தீர்மானித்து, முதலாவது எதிரிக்கு இரண்டுவருடங் கடுங்காவல் தண்டனை விதித்து, தஞ்சாவூர் சீர்திருத்த (போஸ்டால்) பாடசாலைக்கனுப்பப்பட வேண்டுமென்றும், மூன்றாவது எதிரியை நான்கு வருடங்களுக்கு சாதிப்பை செய்யப்பட்ட சீனியர் ஸ்கூலுக்கு அனுப்பப்படவேண்டுமென்றும் சுபார்சு செய்தது டன், இரண்டாவது நான்காவது எதிரிகளை ஒவ்வொருவருக்கும் ரூ. 100 தண்டைக்கை ஜாமீன்மீது அவர்களுடைய பந்துக்களினிடம் ஒப்புவிக்கும்படிக்கும் உத்தரவு பிறப்பித்தார்.

## வருந்தத்தக்க மோட்டார் விபத்து.
### சைக்கிளில் சென்றவரின் பரிதாப மரணம்.

15-11-25 மாலை 5.30 மணிக்கு மயிலாப்பூர் அப்பட்டன் வாராவதிசாலையில் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த ஒருவர் லஸ் ரோட்டில் மூலமாக வந்துகொண்டிருந்த 8501 நம்பருள்ள ஷெல்பெட்ரோல் லாரி மோட்டாரில் அகப்பட்டு மிகப்பரிதாபகரமான மரணத்திற்குட்பட்டனர். சைக்கிளும் அதில் ஏறிச்சென்றவரும் மோட்டாரின் முன்சக்கரங்களின் கீழ் அகப்பட்டு நசுக்குண்டனர்.

அம்மனிதனுக்கு தலையிலும் தேகத்திலும் பல ஆபத்தான காயங்களேற்பட்டன. காயமடைந்தவரை உடனே ராயபேட்டை ஆஸ்பத்திரிக்கெடுத்துச்செல்லப்பட்டது. ஆங்கு சிறிது நேரத்தற்குள் அவர் மரணமடைந்து விட்டதாகத்தெரிகிறது. மரணமடைந்தவருக்கு 28 வயது இருக்கக்கூடுமென்றும் அவர் பெரம்பூர் ஒர்க்ஷாப்பில் வேலைபார்ப்பவர் என்றும் தெரிகிறது.



## மெஸபொடோமியாவில், பெருமழை.
### பாக்தாத்-பாஸ்ரா லைனில் உடைப்பு.

பாஸ்ரா, நவம்பர் 13-பெரும்மழை பெய்ததை முன்னிட்டு பாக்தாத்—பாஸ்ரா லைனில் சுமார் 9 இடங்களில உடைப்பெடுத்துக்கொண்டன. அவற்றுள் சுமார் 8 உடைப்புகள் மராமத்துச் செய்யப்பட்டன. ஒரு உடைப்புமட்டும் 200 அடி நீளமும் 9 அடி ஆழமுமுள்ளதாயிருக்கின்றது. பிரயாணிகளையும் தபால்களையும் உடைப்பின் அப்பாலுக்குக் கொண்டுபோய்விட ரயில் ஏற்படுகின்றது.

## ஜப்பான் சக்கரவர்த்தியின் தேகநிலை.
### கவலைக்கிடமானதாயிருக்கின்றதாம்.
### எங்கும் பிரார்த்தனைகள் நிகழ்த்தப்படுகின்றது.

டோகியோ, நவம்பர் 14-ஆலயங்களிலும் பாடசாலைகளிலும் மற்றும் நாடெங்கும், ஜப்பான் சக்கரவர்த்தி நோயிலிருந்து குணப்பட்டு வெளிவர வேண்டுமென்ற பிரார்த்தனைகள் நடத்தப்படுகின்றன. அவருடைய தேகநிலை மிக்க கவலைக்கிடமானதாயிருக்கின்றது. சக்கரவர்த்தினி எப்போதும் அவருடைய படுக்கையை விட்டு அப்புறம் செல்லவில்லை.

## மனைவியை மாடாக வண்டியிற் பூட்டிய புருஷன்

வதனைக்குச் சமீபமாயுள்ள தனமல்வில்லா என்னும் கிராமத்தில் சைமன் அப்பு என்னும் ஒருவன் தன் மனைவியாகிய ஜொசோனா என்னும் பெண்ணுடன் நித்தியம் கலகமிட்டுவந்தான். அவன் நிரம்பிய குடிகாரன். சில தினங்களுக்கு முன் ஒரு நாள் இரவு அதிகமான வெறியுடன் குடித்த சைமன் தன் வீட்டிற்குச் சென்று தன் மனைவியைப் பன்முறை அடித்து அவளையும் இரண்டு வயசு சிறு குழந்தையையும் வீட்டைவிட்டு வெளியே துரத்தி கதவைப் பூட்டி மோட்டார் வண்டிமார்க்கமாக கேரூர் ஊருக்குப் போய் விட்டான். மறுநாட் காலைவரையும் முற்றத்திலே குழந்தையுடன் குளிரினால் வருந்திக்கொண்டிருந்த அப்பெண் தன்னுடைய பெற்றோர் வீடு அதிகத் தூரமானபடியினால் அப்பெண் இடைவழியிலே ஆராச்சி ஒருவருடைய வீட்டில் அன்றிரவு தங்கினள். தன் மனைவி அங்கு தங்கியிருப்பதை அறிந்த சைமன் என்பவன் நடுச்சாமத்தில் அவ்விடம்சென்று ஆராச்சியின் வீட்டுக்கதவைத்திறந்து அவளைப் பன்முறை அடிகொண்டடித்தான். அதன்பின் அப்பெண்ணை வெளியே இழுத்துக்கொண்டு போய் ஒற்றைமாட்டுவண்டி ஒன்றிற் பூட்டி அப்பெண்ணுக்குத் துணையாகச் சென்ற ஜேனிஸ் என்பவனை வண்டிமேலிருந்து தன் மனைவியாகிய மாட்டைச் செலுத்தப்படி செய்தான். பொல்லாத குடிகாரனாகிய சைமன் என்னும் மிருகத்துக்கு அஞ்சி ஏழை மனைவி வண்டியை இழுத்தனள். ஜேனிஸ் சாரத்திய தொழிலை நடாத்தினன். ஆராச்சியின் வீட்டிலிருந்து குடிகாரன் வீட்டிற்கு ஒருவாறு வண்டிவந்துசேர்ந்தது. அதன்பின் சைமன் வண்டியிற் பூட்டிய மாட்டை அவிழ்ப்பது போன்று மனைவியின் கழுத்திற் கட்டிய கயிற்றை அவிழ்த்துப் பின்னரும் பன்முறை அடித்து அலுத்தபின் அவளை ஓர் மரத்தின்மீது தூக்க முயன்றான். பெண்ணின் அபயக்குரல் கேட்ட அயலவர்கள் அங்குச் சென்று ஒருவாறு தடுத்து பெண்ணை உயிர்பிழைக்கச் செய்தனர். பெண் வதனைப் போலீஸ் கோர்ட்டிலே வழக்குத்தொடர்ந்திருக்கின்றனள். சைமனை என்ற மிருகத்தைப் பிடிப்பதற்கு விருந்துவிடப்பட்டிருக்கின்றது. மிருகமாய்ப் படைக்கவேண்டிய இவனை பிரமன் மறந்துபோய் மனிதனாய்ப் படைத்துவிட்டனன் போலும்.

## இந்தியாவில் எரிமலை

காயாபுரி சமஸ்தானத்திலுள்ள ஒரு மலையிலிருந்து நெருப்பும் புகையும் வந்துகொண்டிருக்கின்றது. அந்த ஸ்தலத்துக்கு நகரிலுள்ள இஞ்சினீயர்களெல்லாம் சென்றிருக்கின்றனர். அந்த மலையில் கெந்தகம் இருக்கிறபடியால் அது எரிந்துகொண்டிருக்கிறதென்றும் உடனே தக்க மார்க்கம் தேடாவிட்டால் அதைச் சுற்றி 20 மைல் விஸ்தீரணம் உள்ள பாகங்களுக்கு நாசஞ் சம்பவிக்குமென்றும் இஞ்சினீர்கள் அபிப்பிராயப்படுகின்றனர்.

## மோட்டார் விபத்தின் பலன்
### 45,000 ரூபாய் நஷ்ட ஈடு.

ஸப் ஜட்ஜ் நாமம் என்றவர் வி. சுக்டரி என்றவர் ஏறிவந்த மோட்டார் வண்டியால் மோதப்பட்டு கீழே விழுந்து உயிர் துறந்தார். அவரது மனைவியும் குழந்தைகளும் நஷ்ட ஈட்டுக்கு ஸ்ரீமான் சுக்ரிட என்றவர் மீது வழக்குத் தொடுத்தார்கள். ஜட்ஜி இவ்வழக்கை விசாரித்து 45,000 ரூபாய் நஷ்ட ஈடுகொடுக்க தீர்ப்பளித்தார். ஜட்ஜ் தீர்ப்பில் கூறியதாவது:—இறந்தவருக்கு 35 வயதுதான். மாதம் 150 ரூபாய் சம்பாதித்துக்கொண்டிருந்தார். அவர் நல்ல திடகாத்ரமுள்ளவர். இன்னும் பத்து வருஷம் வேலை செய்தால் 350 ரூபாய் சம்பளம் உயர்வு கிடைத்திருக்கும். 65 வரை ஜீவித்திருப்பதாக வைத்துக்கொண்டாலும் இன்னும் 27 வருஷம் அவர் சம்பாதித்திருப்பார். ஆகவே 4 ,000 ரூபாய் நஷ்ட ஈடு கொடுப்பது நியாயமே எனக் கூறினார். பிரதிவாதி தரப்பில் மில் தொழில் க்ஷீணித்து வருவதால் அவ்வளவு வருமானம் கிடைத்து வருமென எதிர்பார்ப்பதற்கு இல்லை என்று சொல்லப்பட்டது. ஆனால் ஜட்ஜி அதை அங்கீகரிக்கவில்லை

## பிலிப்பயனில் புயல் காற்று
### பெருஞ்சேதங்கள். 200 பேர்கள் மூழ்கினர்.

பாட்டன் காஸ் மகாணத்தில் ஏற்பட்ட புயற்காற்றினால் சுமார் 200 பேர்கள் மூழ்கிவிட்டதாக கூறப்படுகின்றது.

## குழந்தை வயிற்றில்
### இன்னொரு குழந்தை

கயாவில் ஒரு ஆச்சரியம் :—

நான்கு மாதக் குழந்தை ஒன்றுக்கு வயிற்றில் ஏதோ கோளாறு ஏற்பட்டதால் அது ஆஸ்பத்திரியில் சேர்த்துக்கொள்ளப்பட்டது. வயிறு அதிகமாக வீங்கி இருந்ததால் ஸர்ஜன் ஆப்பரேஷன் நடத்தினர். வயிற்றிற்குள் இன்னொரு சிறிய குழந்தையின் பிரேதம் காணப்பட்டது. அதற்கு இரண்டு கைகளும் ஒருகாலுந்தான் இல்லை. விஷயம் நகரத்தில் காட்டுத்தீ போல் பரவிவிட்டது. ஆயிரக்கணக்கான ஜனங்கள் இந்த அதிசயத்தைப் பார்க்கக் கூடினர்கள். வேடிக்கை பார்க்கவந்தவர்களிடம் ஆஸ்பத்திரி அதிகாரிகள் தலைக்கு ஒரு அணா வீதம் வசூலித்தனர். சிறிய பிரேதம் ஒரு புட்டியில் வைக்கப்பட்டிருக்கிறது. இதை [illegible] குழந்தை உயருடன் இருக்கிறது.

இம்மாதிரி முன்பு ஒரு சம்பவம் நடந்தது. 20 வயதுள்ள புருஷர் ஒருவருக்கு வயிற்றில் ஏதோ கோளாறு ஏற்பட்டு ஆப்பரேஷன் செய்ததில் ஒரு குழந்தை காணப்பட்டது. இதற்குக் காரணம் வயிற்றில் இரட்டைக் குழந்தைகள் இருந்து ஏதோ கோளாறால் ஒன்றிற்குள் மற்றொன்று புகுந்து இருக்கவேண்டுமென்று கூறப்படுகிறது.

## ஒரு சோல்ஜரின் மரணம்.

அலகபாத்திலிருந்து சில மைல் தூரத்தில் ஜி. ஐ. பி. ரயில் பாதையில் ஒரு துக்ககரமான விபத்து நேரிட்டது. டிராப்ஷயர் அரசர் காலாள் படையைச்சேர்ந்த ஏ. எஸ். அலுவல் அதனால் உடனே கொல்லப்பட்டுவிட்டார். அவர் தமது கம்பார்ட்டுமெண்டின் கதவைத் திறந்துகொண்டு வெளியே தலையை நீட்டிக்கொண்டு இருந்தார். வண்டி வேகமாக ஓடுகையில் தலை கைகாட்டி மரத்தில் மோதவே அவர் உடனே இறந்துவிட்டார். இங்கு பிரேத அடக்கம் நடத்தப்பட்டது.

## ஆண்களைவிடப் பெண்கள் அதிகம்.

இங்கிலாந்தில் ஆண்களைவிட 20 லட்சம் பெண்கள் அதிகமாகயிருக்கிறார்கள். 192[illegible]வில் இங்கிலாந்தின் ஜனத்தொகை 3 கோடியே 87 லட்சத்து 65 ஆயிரம். அதில் [illegible] கோடியே 2 லட்சமபேர் ஸ்திரீகள். ஜெர்மனியில் 6 கோடியே 23 லட்சத்து சொச்சம்பேரிருப்பதில் ஆண்களுடைய தொகை 20 லட்சம் அதிகமாயிருக்கிறது. [illegible]னால் ஜனன மரண கணக்குகளைப் பார்த்தால் பெண்களைவிட 100க்கு 7 வீதம் அதிகமாக ஆண்கள் பிறக்கிறார்கள்.

## ஒரு மாட்டுவண்டி ரெயில்வண்டியில் மோதியது

### இருவர் இறந்தனர்.

வங்காளம் நாகபுரி இருப்புப்பாதையில் இருப்புப்பாதையை மாட்டுவண்டி கடந்துசெல்லும்போது, ஒரு பாசஞ்சர் ரெயில் அதை அடித்துக்கொண்டுபோனது. அந்த மாட்டுவண்டியில் இருவர் தூங்கிக்கொண்டிருந்தனர். அந்த வண்டி நொறுங்கிப்போய்விட்டது. அதில் தூங்கிக்கொண்டிருந்தவர்களுக்கு ஏற்பட்ட காயத்திற்கு மருந்துகளபோட்டும் அடுத்த நிமிடத்தில் இறந்துவிட்டனர். இதை இலாகா விசாரணைசெய்து வருகின்றது. தாணுக்காரர்கள் விசாரணையை மேற்கொண்டுவிட்டனர். அந்த விபத்திற்குக் காரணம் கதவு அடைக்கப்படாது திறந்து வைக்கப்பட்டிருந்ததே யெனக் கூறப்படுகின்றது.

---

## டெக்காவில் ஒரு விபத்து

### 10 கப்பல் தொழிலாளரின் கதி

[illegible] ஸாண்டிரா என்ற [illegible] வின் பக்கத்தில் பாரிசங்காவில் பட்டறில் 10 பேர்கள் வேலைசெய்து கொண்டிருக்கையில் கப்பல் கட்டப்பட்டிருந்த ஒரு கம்பிகயிறு அறுபட்டு அந்த மனிதர்கள் மேல் தாக்கியது. 6 பேர்கள் ஆற்றுக்குள் தள்ளப்பட்டு விட்டனர். பாக்கி 4 பேர்களுக்கும் பலமான காயம் ஏற்பட்டுவிட்டது. நீண்ட நேரம் தேடியதில் ஆற்றிலிருந்து நான்கு பிரேதங்கள் அகப்பட்டன. பாக்கி இருவர் கதி தெரியவில்லை. காயமடைந்த நால்வரும் ஆஸ்பத்திரியில் கவலைக்கிடமான நிலைமையிலிருக்கிறார்கள். பாசன இலாகா உத்தியோகஸ்தர்கள் இதைக் கேள்விப்பட்டு டெக்காவிற்கு வந்திருக்கிறார்கள்.

---

## குடும்ப அதிசயம்.

ஸ்காட்லாண்டு தேசத்தில் 18ம் நூற்றாண்டில் 70 வயதுள்ள நெசவுகாரனொருவனுக்கு 62 மக்கள் பிறந்து அவன் சாகும் தருவாயில் 43 குழந்தைகள் உயிரோடிருந்தனவாம். கனடா தேசத்தில் 41 மக்களுக்குத் தகப்பனாயிருந்த ஒருவன் இவனுக்கு விரோதியாம். அவ்விரோதி முதல் மனைவி மூலமாக 6 மக்களையும் இரண்டாவது மனைவி மூலமாக 24 மக்களையும் மூன்றாவது மனைவி மூலமாக 11 மக்களையும் பெற்று தன் 62வது வயதில் 29 விவாகமான மக்களுடையவனாயிருந்தானாம். அவனுடைய சந்ததியார் சற்றேறக்குறைய 200 பேர்களாயினர்.

கிளாக்குவெல் தேசத்தில், அதோனிகிளாரக்கு, என்பவன் பேரி ஜோனஸ் of செஸ்டர் என்பவள் மூலமாக 32 மக்களையும் எம்மாஹோசர் என்பவள் மூலமாய் 27 மக்களையும் ஈன்றதாகத் தெரிகிறது.

சில வருடங்களுக்குமுன் மாடம்கார்லியர் என்பவள் ஜனவரி மாதத்திலும், டிசம்பர் மாதத்திலும் பிரசவித்தாளெனவும், ஒவ்வொரு பிரசவித்திலும் ஒரே தடவையில் மும்மூன்று மக்களாக ஆறுமக்களை ஈன்றதாகக்கூறப்படுகிறது.

[illegible] ஆமி ஷர்மி என்பவள் தான் மணம் புரிந்த 7 வருஷத்தில் முதல் பிரசவத்தில் 3 குழந்தைகளும் மற்ற இரண்டு பிரசவத்தில் இரண்டு குழந்தைகள் வீதம் நான்கு குழந்தைகளும் மற்ற மூன்று பிரசவத்தில் பிரசவம் 1க்கு ஒரு குழந்தையாக 3 குழந்தைகளும் மற்றொரு பிரசவத்தில் 4 குழந்தைகளுமாக 7 வருஷத்தில 14 மக்களை ஈன்றாள். வருடம்1க்கு சராசரி 2 மக்கள்.

யார்க்குஷைரில் "ஊர் சுவானேபூட்" என்பவன் தன் 94ம் வயதில் 9 மக்களையும், 79 பேரன்மார்களும் 73 பேரன் மகனளமாரையும் 2 பேரன்மார்களையும் விட்டு மரணமடைந்தான். அவன் நாலாவது தலைமுறையில் சந்ததியாரின் மொத்தம் 340 ஆம்.

"வைப" என்னும் ஊரில் ஒரு குடும்பத்தில் 6 மக்களிருந்தனர். இவர்களுக்குச் சந்ததியார்கள் [illegible] கண்ட விவரப்படி 1057 [illegible]

ஜேசன்——444 ⎫ மூன்று பெண் மக்களு
மைல்ஸ்——402 ⎬ க்கு முறையே 230, 208
கடைசி——166 ⎭ 201 வீதம்.

ஐரோப்பாவிலுள்ள "கலிஷியா" என்ற கிராமத்தில் பாட்டி, தாயார், மகள் ஆகிய இம்மூவரும் ஏககாலத்தில் பிள்ளைகளைப் பெற்றிருக்கிறார்கள்.

அமெரிக்க ஐக்கிய நாட்டிலுள்ள ஓர் ஸ்திரி 1915ம்-வருடம் மே-மீ 5 குழந்தைகளையும் 1916ம்-வருடம் நவம்பர்-மீ 4 குழந்தைகளையும் பெற்றாளாம். எல்லாம் ஆண்பிள்ளைகளாம்.

---

## பஞ்சாங்கம்.

### 1926வருடம்—டிசம்பர்மீ

● அமாவாசை ○ பௌர்ணமி *கிருத்திகை

| வாரம் | தேதி | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஞாயிறு | ... | 5 | 12 | ○19 | 26 | ... |
| திங்கள் | ... | 6 | 13 | 20 | 27 | ... |
| செவ் | ... | 7 | 14 | 21 | 28 | ... |
| புதன் | 1 | 8 | 15 | 22 | 29 | ... |
| வியா | 2 | 9 | 16 | 23 | 30 | ... |
| வெள் | 3 | 10 | *17 | 24 | 31 | ... |
| சனி | ●4 | 11 | 18 | 25 | ... | ... |

| வாரம் | அக்ஷய-வருடம் கார்த்திகை 16உ—மார்கழி 16உ | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஞாயிறு | ... | 20 | 27 | ○4 | 11 | ... |
| திங்கள் | ... | 21 | 28 | 5 | 12 | ... |
| செவ் | ... | 22 | 29 | 6 | 13 | ... |
| புதன் | 16 | 23 | 30 | 7 | 14 | ... |
| வியா | 17 | 24 | 1 | 8 | 15 | ... |
| வெள்ளி | 18 | 25 | *2 | 9 | 16 | ... |
| சனி | ●19 | 26 | 3 | 10 | ... | ... |

---

*Patron.* M.R.Ry. Rao Bahadur,
A. J. Vethanayaga Thevar Avl.,
Usilampatti.

*Editor.*—Rev George J. Athishtam,
Usilampatti.

*Manager.*—Rev. R. A. Dudley,
Tirumangalam.

Subscription—Single copy 14 annas a year (including charges for delivery) payable in advance.

All orders to be sent to the *Manager*.

Articles for insertion should be sent, not later than 15th of each month to the *Editor*.

சம்ரக்ஷகர்.—மகா-ா-ா-ஸ்ரீ ராவ் பகதூர் வேதநாயகத் தேவரவர்கள், உசிலம்பட்டி.

பத்திராதிபர்.—கனம் ஜார்ஜ் அதிஷ்டம் ஐயரவர்கள், உசிலம்பட்டி.

மானேஜர்.—கனம் ஆர். ஏ. டட்லி துரையவர்கள், திருமங்கலம்.

வருஷ சந்தா தபாற்கூலி உட்பட அணா 14. ஒரு வருஷ கையொப்பம் முன்னதாகவே அனுப்பவேண்டும்.

பத்திரிகை வேண்டுவோர் மானேஜரவர்களுக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

சமாச்சாரக்குறிப்பு முதலியவை அனுப்ப விரும்புவோர் அந்த மாதம் 15-ம் தேதிக்குள் சுருக்கமாக எழுதி பத்திராதிபருக்கு அனுப்பவேண்டும்.

பசுமலை அமெரிக்கன் மிஷன் "லினக்ஸ்" அச்சயந்திரசாலையில் பிரசுரிக்கப்பட்டது